# முற்பிதாக்கள்

-ஏழாம் தூதனின் கட்டுரைகள்

# முற்பிதாக்கள்

[*தமிழாக்கம்*]

**முற்பிதாக்கள் வகுப்பாரைக் குறித்துச் சகோதரர் ரசல் அவர்களினால் எழுதப்பட்டுள்ள கருத்துகளையும், அனுமானங்களையும் பெற்றிருக்கும் கட்டுரைகளின் தொகுப்பு மற்றும் மொழியாக்கம்.**

# பொருளடக்கம்


| வ. எண். | ரீப்பிரிண்ட் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| | | **ரீப்பிரிண்ட் கட்டுரைகள்** | |
| 1. | R4385 | விசுவாச வீரர்கள் | 1 |
| 2. | R4598 | முற்பிதாக்கள் ஜீவனுக்கான பரீட்சையின்கீழ்க் காணப்பட்டார்களா? | 19 |
| 3. | R3245 | சுவாரசியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது | 20 |
| 4. | R4330 | விசுவாச உடன்படிக்கையின்கீழ் முற்பிதாக்கள் | 21 |
| 5. | R5188 | முற்பிதாக்கள் | 27 |
| 6. | R4611 | முற்பிதாக்கள் - எப்படிப் பூரணம் அடைகின்றனர்? | 31 |
| 7. | R4835 | பலிக்கான வெகுமதிகள் | 35 |
| 8. | R5294 | பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள் | 40 |
| 9. | R5073 | முற்பிதாக்களின் ஜீவ-உரிமைகள் | 40 |
| 10. | R5292 | புது உடன்படிக்கை | 48 |
| 11. | R4553 | மகா பிரதான ஆசாரியன் மத்தியஸ்தர் ஊழியம் ஆற்றுவார் | 53 |
| 12. | R5205 | உலகப்பொருட்களினால் நண்பர்களை ஏற்படுத்துதல் | 62 |
| 13. | R2035 | நமக்கென்று விசேஷித்த நன்மையானதொன்றை நியமித்திருந்தார் | 63 |
| 14. | R4574 | விசுவாசத்தினால் . . . மற்றும் நிஜமாக நீதிமானாக்கப்படுதல் | 66 |
| 15. | R4901 | விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் | 75 |
| 16. | R5316 | நீதிமானாக்கப்படுதல் தொடர்பான கேள்வி | 76 |
| 17. | R5774 | நீதிமானாக எண்ணப்படுதல் மற்றும் உண்மையாய் . . . | 80 |
| 18. | R1457 | தேவனுடைய தேர்ந்தெடுக்கும் தன்மைகள் மற்றும் வழிமுறைகள் | 82 |
| 19. | R5859 | தேவனுடைய வீரர்களில் இரு கூட்டத்தினர் | 84 |
| 20. | R3935 | தேவனுடைய ஈவுகள் மற்றும் அழைப்புகள் | 88 |
| 21. | R4606 | விசுவாச சந்ததியினர் மற்றும் நியாயப்பிரமாண சந்ததியினர் | 93 |
| 22. | R1871 | நிழலான சிவப்புக்கிடாரி | 97 |
| 23. | R1896 | நிழலான சிவப்புக்கிடாரி | 102 |
| 24. | R2675 | இழந்ததைத் திரும்பப்பெறுதலின் . . . கொடுக்கப்பட்டுள்ளதா? | 103 |
| 25. | R4989 | நீதிமான்கள் மற்றும் அநீதிமான்களின் உயிர்த்தெழுதல் | 105 |
| 26. | R5290/R5785 | தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் | 106 |
| 27. | R5298 | நியாயப்பிரமாண பலகைகள் புதிதாய் வைக்கப்பட்டன | 108 |
| 28. | R4760 | சுவாரசியமான கேள்விகள் | 108 |
| 29. | R360 | அனாஸ்டாசிஸ் - உயிர்த்தெழுதல் | 110 |
| 30. | R5166 | மரணமும் உயிர்த்தெழுதலும் | 112 |
| 31. | R3445 | வரிசையில் முற்பிதாக்களின் இடம் | 113 |

| வ. எண். | ரீப்பிரிண்ட் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 32. | R4666 | சில சுவாரசியமான கேள்விகள் | 115 |
| 33. | R4867/R4579 | சுவாரசியமான கேள்விகள் | 115 |
| 34. | R1351 | வெற்றியின் பாடல் | 116 |
| 35. | R612 | தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? | 116 |
| 36. | R2279 | யோவான்ஸ்நானனும், அவரைக் கொலைசெய்தவர்களும் | 117 |
| 37. | R5761 | அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள் | 118 |
| 38. | R3461 | தேவதூதரைப் போலிருப்பார்கள் | 119 |
| 39. | R5199 | வானத்தின் வாசல் | 121 |
| 40. | R4018 | எஸ்தர் புஸ்தகத்திலுள்ள நிழல் | 123 |
| 41. | R4436 | ராகேலிலுள்ள இரண்டு அம்சங்கள் | 124 |
| 42. | R4087 | சிம்சோனின் ஜீவியத்திலிருந்து பாடங்கள் | 124 |
| 43. | R1907 | தாவீது மற்றும் யோனத்தான் | 125 |
| 44. | R5030 | இராஜ்யத்தில் சிறியவனாய் இருப்பவன் | 125 |
| 45. | R808 | தாவீதின் குமாரனும், ஆண்டவருமானவர் | 127 |
| 46. | R4757 | சுழல்காற்றிலே எடுத்துக்கொள்ளப்பட்டார் | 128 |
| 47. | R3428 | தீர்க்கத்தரிசியாகிய எலிசா | 128 |
| 48. | R4757 | எலியாவுக்குப் பின் எலிசா | 130 |
| 49. | R2283 | கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள் | 131 |
| 50. | R2856 | ஆபிரகாமுடைய ஊக்கமான மன்றாட்டு | 131 |
| 51. | R1919 | கர்த்தருக்குள் மேன்மைபாராட்டுங்கள் | 132 |
| 52. | R3946 | சோதோமிற்கான ஆபிரகாமின் ஜெபங்கள் | 132 |
| 53. | R4318 | மூன்று மாபெரும் உடன்படிக்கைகள் | 136 |
| 54. | R5162 | நித்திய ஜீவன் பெற, தேவனோடு உடன்படிக்கையின் உறவு அவசியம் | 143 |
| 55. | R1409 | சிங்கங்களின் கெபி | 144 |
| 56. | R5181 | மேசியாவின் இராஜ்யத்தைக்குறித்த. . . கண்ணோட்டம் | 145 |
| 57. | R2372 | மேசியாவின் இராஜ்யம் குறித்து முன்னறிவிக்கப்பட்டுள்ளது | 149 |
| 58. | R4881 | நேர்மையாய் இருத்தல் எனும் மாபெரும் பரீட்சை | 150 |
| 59. | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | | 152 |
| 60. | பாஸ்டர் ரசல் அவர்களின் மற்றக் கட்டுரைகள் | | 173 |

# ரீப்பிரிண்ட் கட்டுரைகள்

R4385 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## விசுவாச வீரர்கள்
### எபிரெயர் 11:1-40

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." (எபிரெயர் 11:1)

நற்சிந்தனைகள், நல்வார்த்தைகள் மற்றும் நற்கிரியைகள் விஷயத்தில் இயக்கும் ஆற்றலாகக் காணப்படும் விசுவாசத்தினுடைய முக்கியத்துவத்தைக்குறித்து அறிந்துகொள்ளத்தக்கதாக, நாம் குறிப்பாக விசுவாசத்தைப் பற்றி இப்பாடத்தில் ஆராயப்போகின்றோம்.

நம்முடைய பாடத்திற்கான ஆதார வசனப்பகுதியானது பரிசுத்த பவுலினுடைய எழுத்துக்களின் சிறந்த படைப்புகளில் ஒன்றாய்க் காணப்படுகின்றது. உண்மையில் எபிரெயர்களுக்கு எழுதப்பட்டுள்ள முழு நிருபமும் வேதாகமத்தில் "கட்டளையிடும் நிருபமாக" இருக்கின்றது. சிலர் இந்த நிருபத்தின் ஆசிரியர் குறித்துக் கேள்வி எழுப்பியுள்ளது உண்மையே; ஆனால் இது பரிசுத்த பவுல் அடிகளார் மூலம் எழுதப்பட்டுள்ளது என்பதில் நமக்கு எந்த ஐயமுமில்லை. இந்த நிருபம் முழுவதிலும் அவரது தலைச்சிறந்த வாதமும், பயபக்தியும் மற்றும் அவரது தனிப்பட்ட தாழ்மையும் வெளிப்படுகின்றது. இந்த நிருபம் யுகங்களுக்கடுத்த தெய்வீகத்திட்டம் குறித்த ஆழ்ந்த அறிவைக்கொடுக்கின்றது; மேலும் பரிசுத்த பவுல் அடிகளாரின் மற்ற நிருபங்களுடன் இசைவாகக் காணப்படுகின்றது; இதனால் வேதாகமத்தின் மற்ற எழுத்துக்களைவிட மேம்பட்டதாகக் காணப்படுகின்றது. இதன் மொழிநடையானது, பரிசுத்த பவுல் அடிகளாரின் மற்ற நிருபங்களைவிட மிகவும் உயர்தரமானதாகக் காணப்படுகின்றது என்று சிலரால் குறிப்பிடப்பட்டுள்ளது; இதற்கு எளிமையாக விளக்கம் கொடுக்கப்படலாம். இவருடைய மற்ற நிருபங்களானது, ஆரோக்கியமான தர்க்கங்களையும், விவாதங்களையும் முழுக்கப் பெற்றதாக இருப்பினும், இவை பொதுவான வாசகனுக்கென்று எளிமையான மற்றும் தகப்பனுக்கே உரிய பாணியிலும் எழுதப்பட்டிருந்தது. இந்த ஒரு நிருபமானது மீதமுள்ள பதினொரு அப்போஸ்தலர்களுக்கும், இன்னுமாக யுக மாற்றத்தினைக்குறித்துப் புரிந்துகொள்வதில் தாமதம் காண்பித்த கல்விமான்களாயிருந்த மற்ற எபிரெயர்களுக்கும் குறிப்பாய் எழுதப்பட்டது. ஆகையால் இது பரிசுத்த பவுல் அடிகளாரின் தலைச்சிறந்த படைப்பேயாகும்; ஏனெனில் இதில் அவர் யூத யுகத்தினுடைய நிழலான அம்சத்தினை விவரிப்பதற்கும், சுவிசேஷ யுகத்தினுடைய நிஜமான அம்சங்களைச் சுட்டிக்காண்பிப்பதற்கும், ஆயிர வருஷ யுகம் பற்றினவைகளைச் சுட்டிக்காண்பிப்பதற்கும் பெரும் பிரயாசம் எடுத்துள்ளார் என்பது நிச்சயமே. இந்த நிருபத்தின் 13-ஆம் அதிகாரத்தில் தீமோத்தேயு குறிப்பிடப்படுவதும், "இத்தாலியா தேசத்தார் யாவரும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" என்ற வார்த்தைகளும், பரிசுத்த பவுல் அடிகளார் உரோமில், சிறையில் காணப்பட்டபோது இந்த நிருபத்தை எழுதினார் என்பதும் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது.

இந்த மாபெரும் மனிதனை, அதேசமயம் தாழ்மையுள்ள மனிதனை, அதாவது பரிசுத்த பவுல் அடிகளாரைத் தெய்வீகத் திட்டத்தின் "ஆழங்கள்" அநேகவற்றை வெளிக்கொணரும் தமது வாய்க்கருவியெனக் கர்த்தர் பயன்படுத்தின காரியம் விநோதமாய்ப் பார்க்கப்பட வேண்டாம். இவரது ஆரம்பகால கல்வி அறிவும், புறஜாதிகளுடன் இவருக்கு இருந்த தொடர்பும், கூடவே இவரது ஆழமான

ஆன்மீக நிலையும் மற்றும் கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பும், முன்னுரைக்கப்பட்டது போலவே இவர் கர்த்தரால் "தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாகிடுவதற்கு" தகுதிப்படுத்தியது. இவரைக்குறித்துச் சொல்லப்பட்ட வார்த்தைகளின் வரிசையினையும் நாம் நினைவில்கொள்வோமாக: இவர்

(1) புறஜாதிகளுக்கும்

(2) இராஜாக்களுக்கும்

(3) இஸ்ரயேல் புத்திரருக்கும் . . . . . என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காகத் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கின்றார்.

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் பரிசுத்த பவுல் அடிகளாரின் ஊழியமானது, முதலாவதாகக் கர்த்தர் மூலமாய்ப் புறஜாதியாருக்கு வழிநடத்தப்பட்டது. இதற்குப் பிற்பாடே இவர் அகிரிப்பா இராஜாவின் முன்னிலையிலும், பாலஸ்தீனியாவின் மற்ற கனம்பொருந்தியவர்களின் முன்னிலையிலும் கொண்டு போகப்பட்டார்; இன்னும் சில காலங்களுக்குப் பிற்பாடு இவர் உரோமிலுள்ள சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டார்; மேலும் சந்தேகத்திற்கிடமின்றி இவர் அங்கு நீதிமன்றத்திற்கு முன்னிலையில் சாட்சியும் பகர்ந்தார் என்று பார்க்கின்றோம். பிற்பாடு எபிரெயர்களுக்கான தேவசெய்தியினைப் பெற்றிருந்த இந்த நிருபத்தின் மூலமாக, அப்போஸ்தலர்களிலேயே பிரதானமானவராய்க் காணப்பட்ட இவர் மூலமாக, நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய காரியங்களினால் சிக்கிக்காணப்பட்டவர்களாகிய "உத்தம இஸ்ரேயலர்களுக்கு" கர்த்தர் பெரிதும் உதவினார்; அதாவது தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவில் நிஜப்படுத்தப்பட்டுள்ளதும், மேலும் "நிஜமான ஆசாரியனாக," "நிஜமான தீர்க்கதரிசியாக," "நிஜமான நியாயாதிபதியாக," புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின் "நிஜமான மத்தியஸ்தராக" கர்த்தர் ஆற்றப்போகும் மாபெரும் வேலையில் நிஜப்படுத்தப்பட்டுள்ளதுமான நித்தியமான உண்மைகளுக்கும், அதன் நிழலான காரியங்களுக்கும் இடையில், சரியாய் வேறுபாட்டை அறிய முடிகிற அளவுக்குத் தங்களைத் தாங்களே விடுவித்துக்கொள்ளக் கூடாதவர்களாகவும் காணப்பட்ட யூதர்கள் இந்த அப்போஸ்தலன் மூலம் உதவப்பட்டனர்.

## நம்பப்படுகிறவைகளுக்கான அஸ்திபாரம்

சரியாகச் சொல்லவேண்டுமெனில் நம்பிக்கை என்பது அஸ்திபாரமற்றது - நிஜமானதல்ல. அதற்கு உண்மையான அஸ்திபாரமில்லை - அது வெறும் நம்பிக்கை மட்டுமே. அதனால் எதையும் தாங்கி நிற்க இயலாது. ஆனால் விசுவாசம் என்பது நம்பிக்கையைவிட மேலானதாகும். விசுவாசம் ஒரு வாக்குத்தத்தத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றது. மாறாதவராகவும், மாறாதவரானபடியினால் எல்லா வல்லமையுள்ளவராகவும் காணப்படும் சர்வ வல்லமையுள்ள தேவனால் ஒரு வாக்குத்தத்தம் பண்ணப்படுமானால், என்ன வந்தாலும் விசுவாசத்தினால் அவரை உறுதியாய் நம்ப முடியும். நம்பிக்கை ஓர் அஸ்திபாரத்தினைக் கண்டடைகின்றது - அதாவது விசுவாசத்தில் அஸ்திபாரத்தினை/உறுதியினைக் கண்டடைகின்றது; ஏனெனில் விசுவாசமானது தெய்வீக வாக்குத்தத்தத்தின் மீது நிலைகொண்டிருக்கின்றது. ஆகையால் இத்தகைய தெய்வீக வாக்குத்தத்தத்தை அடிப்படையாகக்கொண்டிராத எந்த ஒரு நம்பிக்கையினையும் உடைய ஒருவன், அஸ்திபாரமற்ற நம்பிக்கையினை உடையவனாய் இருப்பான். ஆகையாலே அந்நிய ஜனங்களை, நிச்சயமற்ற, உறுதியற்ற நம்பிக்கைகள் மற்றும் பயங்களினால் நிரம்பப்பெற்றவர்களாய் நாம் பார்க்கின்றோம்; சில காரியங்களை நம்பிக்கையோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும் அநேகம் கிறிஸ்தவர்கள் நிச்சயமின்மையினையும், பயங்களையும், சந்தேகங்களையும்

உடையவர்களாகக் காணப்படுகின்றனர், காரணம் இவர்களுக்கு விசுவாசமில்லை. இவர்களுக்கு விசுவாசமில்லாததற்கான காரணம், இவர்கள் தேவனால் வாக்களிக்கப்படாதவைகளுக்காக நம்பிக்கைகொண்டிருக்கின்றனர்; மேலும் தேவன் வாக்களித்துள்ளவைகளை இவர்கள் அறிந்துகொள்ளவு மில்லை, புரிந்துகொள்ளவுமில்லை; ஆகையால் இவர்கள் விசுவாசத்திற்கான அஸ்திபாரத்தினையோ, நம்பிக்கைக்கான அஸ்திபாரத்தினையோ பெற்றிருக்கவில்லை. இவைகளை உணர்ந்துகொள்கையில், நமது நம்பிக்கைகளானது நிச்சயமற்ற கற்பனைகளிடத்திற்குப் பறந்து போய்விடாதபடிக்கு நாம் எவ்வளவு ஜாக்கிரையுள்ளவர்களாக இருந்து, தெய்வீக வாக்குத்தத்தங்கள் எனும் விசுவாச-அஸ்திபாரத்தின் மீது நம்பிக்கையினை உறுதியாய்க் கட்டிட வேண்டும். இத்தகைய சரியான விசுவாசத்தினைக் கொண்டிருப்பவர்கள், நிச்சயமாகவே திவ்விய வார்த்தைகளினுடைய மாணாக்கர்களாய்க் காணப்பட வேண்டும்; மேலும் இவர்கள் எவ்வளவுக்கு அதிகமாய்ப் படிக்கின்றார்களோ, அவ்வளவுக்கு அதிகமாய் இவர்களுடைய விசுவாசம் காணப்படும்; இவர்களுடைய விசுவாசம் அதிகமதிகமாய்க் காணப்படுகையில், வாக்குத்தத்தங்கள் மீதான இவர்களது ஆராய்ச்சியும் அதிகமாகவே காணப்படும்.

அப்போஸ்தலன் நம்முடைய மனங்களுக்கு முன்பு கடந்த காலங்களில் வாழ்ந்துள்ள விசுவாச வீரர்கள் கூட்டத்தாரைக் கொண்டுவருகின்றார். இவர்கள் நம்முடைய வியப்பைத் தூண்டத்தக்கதாகவும், இவர்களிலுள்ள அதே விசுவாச-வீரம் நம்மிலும் உருவாகத்தக்கதாகவும் வேண்டி, இவர்களை அப்போஸ்தலன் நம் முன்பாக உயர்த்திப்பிடித்துக் காட்டுகின்றார். அப்போஸ்தலனால் பட்டியலிடப்பட்டுள்ள இவர்களில் எவருமே தேவனைப் பற்றின விஷயத்தில், அஞ்ஞானிகளைப் போன்று ஊசலாட்டமான எண்ணங்களைப் பெற்றிருந்து, (உண்மை) நம்பிக்கைக்கு மாறுபட்ட நம்பிக்கை கொண்டிருந்து, கற்பனையில் மிதக்கவில்லை. இவர்கள் அனைவரும் உறுதியாய் இருந்தனர், ஆற்றல்மிக்கப் பாத்திரங்களாய் இருந்தனர்; யாரில் தாங்கள் நம்பிக்கைகொண்டிருக்கின்றனர் என்று அறிந்தவர்களாக இருந்து, தேவனுக்குக் கீழ்ப்படிவதன்மூலம் தங்களது விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்தவர்களாய்க் காணப்பட்டனர்.

## விசுவாசத்திற்கு ஜான் கெல்வின் அவர்களின் விளக்கம்

"நித்திய ஜீவன் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது, ஆனால் அது மரணத்திற்குப் பிற்பாடே ஆகும். ஆசீர்வாதமானதொரு உயிர்த்தெழுதல் குறித்து நமக்குச் சொல்லப்பட்டுள்ளது; ஆனால் அதற்கு முன்புள்ள காலங்களில் நாம் அழிவிற்கு இரையாகக் காணப்படுகின்றோம்; நமக்கு நீதிமான் நிலை வாக்களிக்கப்பட்டுள்ளது, எனினும் நம்மில் பாவம் வாசம்செய்கின்றது; ஆசீர்வதிக்கப்பட்டவர்களென நம்மைக்குறித்துக் கூறப்பட்டுள்ளதை நாம் கேட்கின்றோம், ஆனால் நாம் எண்ணமுடியாத துன்பங்களினால் மூழ்க்கடிக்கப்படுகின்றோம்; நமக்கு நன்மையான காரியங்கள் அனைத்தும் ஐசுவரியமாய் வாக்களிக்கப்பட்டுள்ளது, ஆனால் நமது நாட்கள் அனைத்தும் பசியிலும், தாகத்திலுமே ஓடிக்கொண்டிருக்கின்றது; நமக்கு உதவிசெய்யத்தக்கதாகத் தாம் எப்போதும் காணப்படுவதாகத் தேவன் தெரிவித்துள்ளார், ஆனால் நம்முடைய கதறல்களுக்குச் செவிகொடுக்காதவர்போன்று காணப்படுவதாகத் தோன்றுகின்றது. ஒருவேளை இருளான நிழல்களுக்கு ஊடாகவும், இந்தத் தற்கால உலகத்திற்கு மேலாகவும் எழும்பிவருவதற்கு நம்முடைய மனங்களானது, தேவனுடைய வார்த்தையினாலும், ஆவியினாலும் வழிகாட்டப்படாதிருந்தால் - ஒருவேளை நாம் நம்பிக்கையின் மீது சாய்ந்திராமல் காணப்பட்டிருந்தால், நாம் என்னவாகியிருந்திருப்போம்?"

விசுவாசத்தின் விஷயத்தில் கிறிஸ்தவனுக்கான தற்காலத்திற்குரிய பாடங்களை அப்போஸ்தலன்: "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கின்றோம்" என்று சுருக்கமாய்த் தெரிவிக்கின்றார். நாம் எந்தளவுக்குத் தேவனோடு ஜாக்கிரதையாய் நடக்கின்றோமோ, அந்தளவுக்குப் புதிய எருசலேமை நோக்கிய நம்முடைய யாத்ரீகப் பிரயாணமும் மிகவும் சமாதானமாகவும், மிகவும் சந்தோஷமாகவும் காணப்படும். வெளிபுறத்தில் உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவன் நம்மைத் துன்புறுத்திடலாம், ஆனால் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றும், முடிவில்லாதவருடன் தொடர்பில் இருக்கின்றோம் என்றும், நமது மீட்பருடைய பிரியத்திற்குரியவர்கள் என்றுமுள்ள தெய்வீக வாக்குத்தத்தங்களாகிய விசுவாசத்தினுடைய அஸ்திபாரத்தின் மீது நமது உள்ளான சந்தோஷமானது, நன்கு கட்டியெழுப்பப் பட்டதாக இருக்கும் பட்சத்தில், எந்தத் துக்கமும், உபத்திரவமும் நமது உள்ளான சந்தோஷத்தினை அசைத்துப்போட முடியாது; இன்னுமாகப் "பிதா தாமே உங்களை நேசிக்கின்றார்" என்று மீட்பரும், "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்று அப்போஸ்தலனும் நமக்கு உறுதியளிக்கின்றனர். (உரோமர் 8:28)

## விசுவாசம் பற்றின பரிசுத்த பவுல் அடிகளாரின் விளக்கங்கள்

"அதினாலே (விசுவாசத்தினாலே) முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்." அனைத்து முன்னோர்களுமே அல்லது மூதாதையர்களுமே தேவனைப் பிரியப்படுத்தினதாகச் சாட்சியினை - அதாவது இங்குக் குறிப்பிடப்படும் நற்சாட்சியினைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஒப்பிட்டுப் பார்க்கையில் தேவனிடத்திலிருந்து இத்தகையதொரு சாட்சியினைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை சிறிய எண்ணிக்கையாகவே உள்ளது; மேலும் ஒவ்வொரு தருணத்திலும் இவர்கள் பூரணக் கிரியைகளுக்காக என்றில்லாமல், இவர்களது விசுவாசத்திற்காகவே பாராட்டப்பட்டார்கள். இவர்களது "விசுவாசம் இவர்களுக்கு நீதியாய் எண்ணப்பட்டது." தங்கள் சிருஷ்டிகருக்காகக் கொண்டிருக்கும் பயபக்தியும், அவரது வாக்குத்தத்தங்களுக்குக் காட்டும் கீழ்ப்படிதலும், ஒருவருடைய மனித வாழ்க்கையினை தேவனுக்குப் பகையாகிய உலகம் மற்றும் அபூரணம் எனும் தற்கால நிலைமைகளின்கீழ் வனைந்து வடிவமைக்கின்ற விஷயமானது, இவர்களுடைய இருதயங்கள் விசுவாசத்தினாலும், சரியான ஆவியினாலும் முழுக்க நிரம்பப்பெற்றிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுவதாயிருக்க, இதை நீதி என்றும், பூரணம் என்றும் தேவன் கருதிக்கொள்ளலாம் என்பதே தெய்வீக நோக்கமாகக் காணப்பட்டது; ஏனெனில் இவர்கள் உயிர்த்தெழுதலில் பூரணமான சரீரத்தினைப் பெற்றுக்கொள்கையில், பூரணமான சூழ்நிலையின்கீழ் இவர்கள் முற்றிலுமாய்த் தெய்வீகச் சித்தத்தினைச் செய்ய முடிபவர்களாகக் காணப்படுவார்கள். ஆகையால் இவர்கள் நம்பிக்கொண்டிருந்தவைகள் (எதிர்காலத்தில்) நிஜமாகும்போது, இவர்களால் முழுமையாய் அனுபவிக்கப்படப்போகின்ற அந்தத் தெய்வீக ஐக்கியத்தை இவர்களுக்கு உறுதிப்படுத்தியது - அதாவது தேவனிடத்திலும், அவரது வாக்குத்தத்தங்களிலும் உள்ள இவர்களது விசுவாசமும், கூடவே குறைவுள்ள கிரியைகளும், தெய்வீக ஐக்கியத்தை இவர்களுக்கு உறுதிப்படுத்தியது.

இப்படியாகப் பிற்பாடு முற்பிதாக்கள் குறித்துத் தன்னால் விஸ்தரிக்கப்படப்போகின்றவைகளை அப்போஸ்தலன் ஒரு சில வார்த்தைகளில் சுருக்கமாய்த் தெரிவித்துள்ளார். பின்னர் அவர் விசுவாசத்தினுடைய ஒரு விவரக்குறிப்பைத் துவங்குகின்றார். உலகங்கள் தேவ வார்த்தையினால் - தெய்வீகக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து உண்டாயின என்பதை நாம் விசுவாசத்தினால் புரிந்துகொள்கின்றோம். ஆதியாகமம் புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏழு சிருஷ்டிப்பின் நாட்களை

நாம் 24 மணி நேரம்கொண்ட நாட்களாகவோ அல்லது நீண்ட காலப்பகுதியுள்ள நாட்களாகவோ - 7000 வருஷங்களை உடைய நாட்களாகவோ - எப்படிப் புரிந்திருப்பினும், அவை தெய்வீகக் கட்டளையின் பேரில் உண்டானது என்று நாம் நம்புகின்றோம். தெய்வீக வல்லமையானது பல்வேறு வழிகள் மூலமாகவும், காரணிகள் மூலமாகவும் செயல்பட்டது என்றும், உலகங்கள் ஒரு கணப்பொழுதில் உருவாகவில்லை என்றுமுள்ள உண்மைகளானது இப்பொழுது முக்கியமல்ல. நமது கர்த்தர் தமது வார்த்தையினாலே தண்ணீரை, திராட்சரசமாக மாற்றினதுபோலவே, தேவனாலும் ஒரு வார்த்தையினாலேயே உலகங்களைக் கணப்பொழுதில் உண்டாக்க முடியும் என்றபோதிலும், இது அவருடைய வழக்கமான வழிமுறையல்ல; திராட்சப்பழ ரசமும்கூடத் திராட்சக்கொடி நடப்பட்டுள்ள பூமியின் மீது சூரியன் சுடர்விட்டு, மழைப்பொழிவதினாலேயே பொதுவாக உண்டாகுகின்றது. படிப்படியாக உண்டானதாக இருப்பினும், நமக்கு அது அற்புதகரமாய் உண்டானதாகத் தோன்றுகின்றபடியால், இதுவும் நமக்கு விசுவாசம் சம்பந்தப்பட்டதேயாகும்.

சிருஷ்டிப்பைப் பற்றின ஆதியாகமத்தின் பதிவானது, தனிமங்களிலிருந்து நமது உலகம் உண்டான காலத்திலிருந்து துவங்காமல், "பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது" என்ற வாக்கியத்தோடு துவங்குகின்றது. ஏழு நாட்கள் அல்லது காலங்களானது படிப்படியாக பர்வதங்களை மேலே கொண்டு வருவதிலும், சமுத்திரங்களை ஆழத்திற்குக் கொண்டுபோவதிலும், மீன்கள், ஊர்வனங்கள், பறவைகள், மிருகங்கள், புல் பூண்டுகளைக்கொண்டுவருவதிலும் செலவானபடியினால், வெகுகாலத்திற்கு முன்னதாகவே பூமியானது படிப்படியான விதத்தில் உண்டாக்கப்பட்டிருக்கும் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம்; அக்காலத்தில் பூமியினுடைய பல்வேறு அடுக்கு மேல்பரப்புகள் - சுண்ணாம்புக்கல், களிமண்பாறை, நிலக்கரி முதலானவைகள் உண்டாயின. ஒரு தேவ மனுஷன் பின்வருமாறு எழுதியுள்ளார்: "எல்லாக் காலத்திலும் எல்லாக் காரியங்களும் தேவனால் வழிநடத்தப்படுகின்றது. மேலும் இயற்கையில் காணப்படும் சீரான தன்மையில் நாம் தேவனுடைய கிரியையைக் காண்கின்றோம்; அப்படி இல்லையேல் நம்மைச் சுற்றி நாம் காண்பது சாத்தியமற்றதும், நினைத்துக்கூடப் பார்க்க முடியாததுமான - ஒரு வல்லமை, ஞானம், சிந்தனையற்ற திட்டமாக இருந்திருக்கும்; நாஸ்திக மற்றும் நோக்கமற்ற உலகில் ஓர் எல்லையற்ற நுண்ணறிவாக இருந்திருக்கும்."

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது . . . அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை (கேட்கும் செவியுடையவர் களால் கேட்கப்படும்)" என்று சங்கீதக்காரன் சரியாகவே எழுதியிருக்கின்றார். (சங்கீதம் 19:1-2)

## அவர் மரித்தும் இன்னும் பேசுகின்றார்

விசுவாச வீரர்களைக்குறித்துக் குறிப்பாய்ப் பேசும்போது, அப்போஸ்தலன் முதலாம் இரத்த சாட்சியாகிய ஆபேலோடு துவங்குகின்றார்; இவரைக்குறித்துப் புதிய ஏற்பாட்டில் நான்கு முறை குறிப்பிடப்பட்டுள்ளது; அதில் மூன்று முறை இவர் "நீதிமான்" என்று அழைக்கப்பட்டுள்ளார். இவரது மரணத்தில்தான் இவர் பேசுகின்றார் - அதாவது தேவனுக்கான தனது பயபக்தியின் காரணமாக இவர் மரித்த விஷயத்தில், இவர் பேசுகின்றவராய்க் காணப்படுகின்றார். இப்படித்தான் தேவனுடைய பரிசுத்தவான்களில் அநேகருடைய விஷயம் இருந்திருக்கின்றதல்லவா? அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்த காலங்களைக் காட்டிலும் அவர்கள் மரித்த பிற்பாடே, அவர்களது ஜீவியங்களானது, அவர்களுடைய அயலார்களிடத்திலும், நண்பர்களிடத்திலும், பிள்ளைகளிடத்திலும்

அதிகமானவைகளைப் பேசியிருக்கின்றதல்லவா? இதற்கு உதாரணமாய் அநேகம் சம்பவங்கள் இருந்துள்ளதை நாம் அறிவோம். உலகத்தின் சரித்திரத்தில் ஆபேல் நீதிக்கு முதல் இரத்த சாட்சியாய்க் காணப்பட்டார்; எனினும் தேவனுக்கும், கொள்கைகளுக்குமான இவரது பயபக்தியானது இன்னமும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவரது இரத்தம், தேவனிடத்தில் பழிவாங்குதலுக்காய்க் கூக்குரலிட்டுக்கொண்டிருப்பதாக அடையாளமான விதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செய்யப்படுகின்ற ஒவ்வொரு குற்றத்திற்கும், ஒவ்வொரு அநீதிக்கும், தற்கால ஜீவியத்திலோ அல்லது எதிர்கால ஜீவியத்திலோ இறுதியில் எப்படியாவது மற்றும் எங்கேயாவது, கைமாறாகிய தண்டனையை வழங்கத்தக்கதாகத் தெய்வீக நீதியானது பார்த்துக்கொள்ளும். ஆனால் கிறிஸ்துவின் இரத்தமோ முற்றிலும் மாறாக, எதிர்மாறாக பேசிக்கொண்டிருக்கின்றது என்ற உண்மையினிடத்திற்கு அப்போஸ்தலன் நமது கவனத்தைக் கொண்டுவருகின்றார்; இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்கள் மீதும், தம்முடைய சரீரத்தின் அங்கத்தினர்களைத் துன்பப்படுத்தினவர்கள் மீதும் நீதியை, பழிவாங்குதலைக் கேட்பதற்குப் பதிலாக, கிறிஸ்துவின் இரத்தமானது இறுதியில் இரக்கம் பாராட்ட கேட்டுக்கொள்ளும். நமது கர்த்தர் மனுக்குலத்திற்கான மாபெரும் பாவநிவாரண பலியாவார்; மேலும் தெய்வீக மன்னிப்பின் ஆசீர்வாதத்தினைப் பூமியின் குடிகள் பெற்றுக்கொள்ளுகிற வழியாகிய புதிய உடன்படிக்கையானது, பாவிகளின் சார்பாக இஸ்ரயேலுக்காய் முத்திரையிடப்படும் பொருட்டாக, தமது அங்கத்தினர்கள் என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் அனைவரும், பலிசெலுத்துபவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

## ஏனோக்கு விசுவாசத்தினால் தேவனோடு சஞ்சரித்தார்

ஏனோக்கின் ஜீவியம் விசுவாசமுள்ள ஒரு ஜீவியமாகக் காணப்பட்டது என்பதும், இவர் தேவனோடு சஞ்சரித்தார், உலகத்தோடு சஞ்சரிக்கவில்லை என்பதும், இவர் தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாக, நீதியாய் நடக்க நாடினார் என்பதும்தான் ஏனோக்கைக்குறித்த சாட்சியாகும். தேவனை அணுகுபவர்கள் யாவரும் அவர் இருக்கின்றார் என்பதை நம்ப வேண்டும். (இப்படி இல்லையெனில் தேவனை அணுக நாடமாட்டார்கள்) அவரை ஊக்கமாகத் தேடுகிறவர்களுக்கு அவர் பலனளிப்பவர் என்று நம்ப வேண்டும், இல்லையேல் மனுஷரால் உயர்வாய் மதிக்கப்படுபவைகளை இவர்கள் துறந்து, பரம பிதாவைப் பிரியப்படுத்துபவைகளைச் செய்வதற்குத் தியாக விலைக்கொடுத்து நாடியிருந்திருக்கமாட்டார்கள் என்பதே சாட்சி. ஏனோக்கைக்குறித்த பதிவு மிகவும் சொற்பமே; ஆனாலும் இவர் ஒரு தீர்க்கத்தரிசி என்றும், பூமியில் நீதியையும், நியாயத்தீர்ப்பையும் செயல்படுத்த - பாவத்தை வீழ்த்தி, மனுஷர் மத்தியில் தெய்வீக நிலைப்பாடுகளை/தரநிலைகளை நிறுவ - மேசியா இறுதியில் ஆயிரமாயிரமான தம்முடைய பரிசுத்தவான்களோடு வருவார் என்ற செய்தி, ஏனோக்கு மூலமாகவே வந்தது என்றும் நாம் அறிவோம். ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: "இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறதற்கு . . . ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்." (யூதா 14-15)

ஏனோக்கு இதைத் தீர்க்கத்தரிசனமாக மாத்திரம் உரைத்திடாமல், இதை அவர் நம்பினார்; மேலும் இந்த நம்பிக்கையானது இவரது குணங்கள் முழுவதிலும் பிரதிபலித்தது; மேலும் உலகத்தினின்று இவரைப் பிரித்து, தேவனிடம் இவரை நெருங்கிவரப்பண்ணிற்று. இதுபோலவே நம்முடைய இரட்சகர் வருவார் என்பதிலும், அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பதிலும், உண்மையுள்ளவர்களுக்கு அவர் பலனளிப்பார் என்பதிலும், ஆயிர வருஷ யுகத்தின் போது உலகத்தின் நியாயத்தீர்ப்பு நடைபெறும்

என்பதிலும், நன்மையானாலும் சரி, தீமையானாலும் சரி ஒவ்வொரு மனுஷனும் அந்த ஆயிர வருஷ யுகத்தில் நீதியான கைமாறைப் பெற்றுக்கொள்வான் என்பதிலும் வைக்கும் விசுவாசத்திற்கு - ஆம்! இந்த விசுவாசத்திற்குப் பரிசுத்தமாக்குதலின் வல்லமை இன்னமும் காணப்படவே செய்கின்றது. தம்மை அன்புகூருகிறவர்களுக்குத் தேவன் வைத்துள்ளதான பரத்திற்கடுத்தவைகள் மீது, இன்னுமாக நாம் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும் "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்றுள்ள இராஜ்யத்திற்கடுத்தவைகள் மீது, நமது நாட்டத்தினை வைத்துக்கொள்ளதக்கதாகத் தினந்தோறும், ஒவ்வொரு மணிநேரமும் நாடுவோமாக.

## நீதிக்குச் சுதந்தரவாளியானார்

இந்த விசுவாச வீரர்களில் மூன்றாவதாக நோவா நம் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றார். இவர்களில் எவரும் முழுமையான விதத்தில் நீதிமான்கள் அல்ல; ஏனெனில், "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்" என்று நோவாவைக்குறித்து எழுதப்பட்டுள்ளது - இவரும், இவரது குடும்பத்தாரும் இவர்களது நாட்களில், தங்கள் ஆதிமேன்மையினைக் காத்துக்கொள்ளாதத் தூதர்களோடு சம்பந்தம் கலப்பதிலிருந்து, மேலும் இப்படி அசுத்தமாகுவதிலிருந்து விலகிக் காணப்பட்டார்கள். (ஆதியாகமம் 6:4)

பெரும் மழையும், ஜலப்பிரவாகமும் வந்து, சுவாசமுள்ள அனைத்தையும் அழித்துப்போடும்; மேலும் அசுசியடைந்துள்ள இனத்தை ஒழித்துவிடும் என்று கூறப்பட்டுள்ள தெய்வீக வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தவராக, பேழையைக் கட்டின காரியத்தில், நோவா தேவனிடத்தில் கொண்டிருந்த விசுவாசம் வெளிப்பட்டது. இது விசுவாசத்திற்கான எளிமையான பரீட்சையல்ல, ஏனெனில் அக்காலம் வரையிலும், பூமியில் மழை இன்னும் பெய்யாதிருந்தது என்றும், பூமி பனியினாலும், மூடுபனியினாலும் நனைந்திருந்தது என்றும் வேதவாக்கியங்கள் தெரிவித்திருந்ததை நாம் நினைவில்கொள்ள வேண்டும். "தேவனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப் பெய்யப்பண்ணவில்லை; அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது." (ஆதியாகமம் 2:5-6)

மழை வந்து, ஜலப்பிரவாகம் வருவதற்கு முன்பாகப் பேழைக்குள் பிரவேசித்து, கதவுகள் மூடப்படுவது வரையிலும், நோவாவின் விசுவாசமானது நீண்டகாலமாய்ச் சோதிக்கப்பட்டது. இவரைக்குறித்து நல்லறிக்கை கொடுக்கப்பட்டது; ஆகையாலே "விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்கு இவர் சுதந்தரவாளியானார்." தம்மை முற்றும் முழுமையாகவும், உண்மையாகவும் நம்பினவர்களாகிய நோவாவையும், மற்றவர்கள் அனைவரையும் தேவன் நண்பர்கள் என்று அழைப்பதில் மகிழ்ச்சியாய் இருந்தார். இவர்களை அவர் பொதுவான உலகத்தினின்று வேறுபட்டவர்களாக, தனித்துவமானவர்களாக அடையாளம் காண்கின்றார். இவர்களது விசுவாசமே இவர்களைத் தனித்துவமாக்கி காண்பிக்கும் இயல்பாகக் காணப்படுகின்றது. எனினும் விசுவாசம் வெளிப்படுத்தப்படுவதும், அது கீழ்ப்படிதலின் கிரியைகளினால் பரீட்சிக்கப்படுவதும் அவசியமாய்க் காணப்படுகின்றது. எந்த மனுஷன் தேவனிடத்தில் அதிகமான மற்றும் உறுதியான விசுவாசம்கொண்டிருந்து, அவனது அந்த விசுவாசம் பரீட்சையிலும், சோதனையிலும் நிலைநிற்கின்றதாய்க் காணப்படுகின்றதோ, அவன் பாக்கியவானாய் இருப்பான்; ஏனெனில் பிற்பாடு அம்மனுஷனுக்கு, அவனுக்கே உரிய ஆசீர்வாதம் ஒன்று அருளப்படும். இதற்கும் அதிகமாக நமக்கோ அவர்: "நம்முடைய திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுவதில்லை" என்ற நிச்சயத்தினைக் கொடுத்திருக்கின்றார்; நம் உருவம் இன்னதென்றும், நாம் மண்ணானவர்கள் என்பதை நினைவுகூருகின்றார் என்றும் அவர் நமக்குத் தெரிவித்துள்ளார்.

## தேவனுடைய நகரத்திற்காகக் காத்திருந்தார்

முற்பிதாக்களின் பட்டியலில் அடுத்ததாக வரும் ஆபிரகாம், "உண்மையுள்ளவர்களின் தந்தையென" அழைக்கப்படுகின்றார். இப்படி அழைக்கப்படுவதற்குரிய காரணம், நோவா, ஏனோக்கு மற்றும் ஆபேல் உண்மையுள்ளவர்களாய்க் காணப்படவில்லை என்பதினால் இல்லாமல், மாறாக ஆபிரகாமில் தேவன் ஒரு விசுவாசக் குடும்பத்தாரை துவக்கினார் என்பதினாலேயே ஆகும்; மேலும் இந்தக் குடும்பத்தாருக்கு அநேகம் மாபெரும் ஆசீர்வாதங்கள் கொடுக்கப்பட்டன. அந்தக் குடும்பமானது இஸ்ரயேல் ஜனங்கள் என்று அழைக்கப்பட்டனர் மற்றும் பிற்பாடு ஆவிக்குரிய இஸ்ரயேலர்களென அழைக்கப்பட்டனர். ஆபிரகாம் உண்மையுள்ளவர்களின் தகப்பனாய்க் காணப்பட்டார்; ஏனெனில் இவருக்கு முன்பு காணப்பட்ட விசுவாச வீரர்கள் தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருந்தபோதிலும், அது புரியாதவைகளின் மீது வைக்கப்பட்ட விசுவாசமாய்க் காணப்பட்டது; ஆனால் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வீக வெளிப்படுத்துதலோ சுவிசேஷமாக - திட்டவட்டமான நற்செய்தியாகக் காணப்பட்டது - அதாவது இவரிலும், இவரது வித்தின்/சந்ததியின் மூலமும் பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வாதம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதேயாகும். ஆகையாலே தேவன் முன்னமே ஆபிரகாமுக்குச் சுவிசேஷத்தை அறிவித்தார் என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார்; ஆகையாலே, மேசியா மூலமான மீட்பு அவசியமானது என்ற அந்தச் சுவிசேஷத்தை நம்பும் யாவரும் "ஆபிரகாமின் பிள்ளைகள்" என அழைக்கப்படுகின்றனர்; மேலும் இவர்களின் தந்தையாக ஆபிரகாம் பேசப்படுகின்றார்; இவர் வழியாக இந்தச் சுவிசேஷத்தின் நம்பிக்கை கடந்துவந்ததாய் இருக்கின்றது.

ஆனால் இன்னொரு விதத்திலும் ஆபிரகாம் உண்மையுள்ளவர்களுக்குத் தந்தையாக இருக்கின்றார்; அதாவது ஆபிரகாம் பரம பிதாவுக்கும், ஈசாக்கு நமது கர்த்தர் இயேசுவுக்கும், ஈசாக்கின் மணவாட்டியாகிய ரெபேக்காள் தெரிந்தெடுக்கப்பட்ட சுவிசேஷ யுக சபைக்கும் அடையாளமாய்க் காணப்படும் விதத்திலாகும்.

ஆபிரகாம் தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிருந்ததன் காரணமாகவும், தெய்வீக நோக்கங்கள் வெளிப்படுவதற்குரிய ஏற்ற காலங்களில் இவர் வாழ்ந்துகொண்டிருந்தபடியாலும், இவருக்குத் தேவனுடைய அழைப்பு கடந்து வந்தது. இவர் தனது சொந்த நாட்டைவிட்டு, பாலஸ்தீனியாவில் அங்கும் இங்குமாக மேய்ப்பன்போன்று அலைந்து திரிவதற்கும், எந்த நிரந்தரமான வாழ்விடம் இல்லாமலும், தேசத்தைக் கைப்பற்றுவதற்குரிய எந்த முயற்சியினை எடுக்காமலும், கோட்டைப் போன்றவற்றைக் கட்டுவதன் மூலம் தன்னை தேசத்தில் நிலைவரப்படுத்த எந்த முயற்சியினை எடுக்காமலும், கூடாரங்களிலேயே தங்குவதற்கான தெய்வீகக் கட்டளையின் மூலம், இவரது விசுவாசம் பரீட்சிக்கப்பட்டது. பிற்காலங்களில் தேவன் இவரது சந்ததியை இந்தத் தேசத்திற்குக் கொண்டுவந்து, அவர்களுக்குச் சொந்தமாகக் கொடுக்கப்போவதே வாக்குத்தத்தமாயிருந்தது.

இன்னுமாக ஒருவேளை தொடர்ந்து கீழ்ப்படிந்தால், கர்த்தருடைய ஆசீர்வாதமும் தொடரும் என்றும், ஆபிரகாமின் சந்ததி மகத்துவமும், செல்வாக்கும் உள்ளதாக மாறும் என்றும், இதன் வாயிலாக சகல ஜாதியாரும் ஆசீர்வாதம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், இதனால் அதன் கட்டுப்பாட்டின்கீழ்ச் சகல ஜாதியாரும் வந்துவிடுவார்கள் என்றும் வாக்குத்தத்தம் தொடர்ந்து அறிவித்தது. அப்போது நிலவின சூழ்நிலைமையின்கீழ் இவை அனைத்தையும் நம்புவதற்கு, மிகுந்த விசுவாசம் அவசியமாய்க் காணப்பட்டது. வருஷங்கள் செல்லச்செல்ல, ஆபிரகாமின் மனைவி வயதாகிப்போய், தாய்மை அடைவதற்குரிய காலம் கடந்துபோவது வரையிலும், பரீட்சை தொடர்ந்து கொண்டிருந்தது. ஆனாலும் ஆபிரகாமின் விசுவாசம் "அசைவுறாமல்" காணப்பட்டதென நாம் வாசிக்கின்றோம்.

இன்னும் சில காலங்கள் கழிந்து, வாக்குத்தத்தத்தின் குமாரனாகிய ஈசாக்கு பிறந்து, புருஷனாக வளர்ந்த பிற்பாடும், ஆபிரகாம் தனது குமாரனைப் பலிசெலுத்தும்படிக்குக் கர்த்தர் கூறி, இந்த வியத்தகு மனுஷனுடைய விசுவாசத்தினைப் பரீட்சித்தார். இப்படித் தேவன் கூறினபோது, அவர் இதை வெறுமனேதான் கூறினார் என்று நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது; இன்னுமாக இத்தகைய காரியத்தில், தெய்வீகச் சித்தத்தை முழுமையாய் நிறைவேற்றுவதற்குக் குறைவான எதையும் ஆபிரகாம் செய்வது சரியான காரியமாக இருக்கும் என்றும் நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. தகப்பனுக்கே உரிய அன்பு, பல வருஷங்களின் நம்பிக்கை, தெய்வீக வார்த்தைகள் மற்றும் வாக்குத்தத்தம் அனைத்தும் சிதறப்போகின்றது. எனினும் இவரது விசுவாசம் தளரவில்லை; ஏனெனில் தனது குமாரனைத் தேவன் மரணத்தினின்று எழுப்ப வல்லவர் என்றும், தேவன் தம்முடைய வார்த்தைகளினால் மட்டும் அல்லாமல், தம்முடைய வாக்குறுதியினாலும் உறுதிப்படுத்தின தம்முடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் நிச்சயமாய் நிறைவேற்றுவார் என்றும் இவர் எண்ணினார்.

"எத்தகைய வியத்தகு விசுவாசம்!" என்று நாம் ஆச்சரியமடையும் அதேவேளையில், ஆபிரகாமினுடைய இந்தக் குறிப்பிட்ட பண்பே, இவர் சர்வவல்லமையுள்ளவரின் நண்பனாக்கப்படுவதற்கு விசேஷமாய்க் காரணமாயிற்று என்பதையும் நினைவில்கொள்வோமாக. நமக்குக் கர்த்தரிடம் இத்தகைய நட்புறவும், ஆசீர்வாதமும், ஐக்கியமும் வேண்டுமெனில், மேற்கூறிய வழியிலேயே அது நாடப்பட முடியும் - அதாவது விசுவாசத்தின், நம்பிக்கையின், கீழ்ப்படிதலின் வழியாக நாடப்பட முடியும் என்பதை நினைவில்கொள்வோமாக. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்." நாம் அதிகமாய் விசுவாசமுள்ளவர்களாய் இருப்போமானால், நாம் கர்த்தருடைய பார்வையில் அதிகமாகப் பிரியமாய்க் காணப்படுவோம்; மேலும் இதன் காரணமாய் - நாம் மற்ற விஷயங்களில் எவ்வளவு குறைவுடையவர்களாய் இருப்பினும் - மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கான கால்வாய்களென நாம் அதிகமாய்ப் பயன்படுத்தப்படுவோம்.

ஆபிரகாம் எல்லா விஷயத்திலும் குறைவற்றவர் இல்லை என்று இங்கு நாம் கவனிப்பது நலமாயிருக்கும். இரண்டு சந்தர்ப்பங்களில் அவர் புறஜாதி இராஜாக்களினால் கடிந்துகொள்ளப்பட்டிருக்கின்றார்; மேலும் சில விஷயங்களில் பாராட்டப்படுவதற்கு ஏதுவில்லாத மேன்மையற்ற பண்புகளை வெளிப்படுத்தியவராகவும் காணப்பட்டார். எனினும் இந்தக் குறைவுகளின் நிமித்தம் தேவன் ஆபிரகாமைப் புறக்கணித்துவிடவில்லை. உண்மையில் அந்தக் குறைவுகளானது, திவ்விய வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்வதற்குரிய மற்றும் வாக்குத்தத்தங்கள் பலனைக் கொணரத்தக்கதாக தன்னால் முடிந்த யாவற்றையும் செய்ததற்குரிய ஆபிரகாமின் பிரயாசங்களின் விளைவாகக் கொஞ்சம் காணப்பட்டது. தனது குமாரனாகவும், உலகத்திற்குத் தேவனுடைய ஆசீர்வாதத்தின் கால்வாயாகவும் காணப்படப் போவது, சாராளின் குமாரன் என்பதுதான் அந்தத் தெய்வீக வாக்குத்தத்தம் என்று ஆபிரகாம் அறிந்திருந்தார்; ஆகையால் சாராளுடைய ஜீவனை அல்லது தனது ஜீவனை ஆபத்திற்குள்ளாக்கக் கூடாது என்று எண்ணினார். தெய்வீகச் சித்தத்தைக் குறுக்கிடும் எதுவும் நடக்கக்கூடாது எனும் இந்த விருப்பமே, ஆதியாகமம் 20-ஆம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள இவரது பெலவீனத்திற்குக் காரணமாக இருந்தது.

## அஸ்திபாரங்களுள்ள நகரம்

"ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்" (எபிரெயர் 11:10) என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகையில், ஆபிரகாம் பாலஸ்தீனியா

முழுவதும் சுற்றி பிரயாணிக்கையில், என்றோ ஒருநாள் தேவனால் கட்டப்பட்ட புதிய நகரம் ஒன்றினை அவர் பார்க்கப்போவதாக எதிர்ப்பார்த்திருந்தார் என்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் பேசினதாக நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. இன்னும் வேறு சிலர் எண்ணுவதுபோன்று - சொல்லர்த்தமான விலையேறப்பெற்ற கற்களினால் கட்டப்பட்டதும், சொல்லர்த்தமான முத்துக்கள் பதிக்கப்பெற்ற வாயிற்கதவுகளை உடையதுமான நகரம் ஒன்று - அதாவது புதிய எருசலேமானது பரலோகத்திலிருந்து கீழே இறங்கிவருமென ஆபிரகாம் எதிர்நோக்கியிருந்ததாக நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. இல்லை, ஆபிரகாமுக்கு அந்த நகரம் பற்றி எதுவும் தெரியாது, ஏனெனில் அது குறித்து அதுவரையிலும் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை.

முந்தைய காலங்களில் நகரம் என்பது, ஓர் அரணை, ஓர் அரசாங்கத்தை, ஓர் ஆளும் அதிகாரத்தை அடையாளப்படுத்துகின்றதாய்க் காணப்பட்டது. பாவம் மற்றும் வன்செயல்களால் பூமி முழுக்க நிரம்பியிருந்தது என்றும், தேவனுக்கு இசைவற்றுக் காணப்பட்டது என்றும் ஆபிரகாம் உணர்ந்திருந்தார். தனது மூதாதையரும், தேவ மனுஷனுமான ஏனோக்கு, யேகோவா தேவனுடைய பிரதிநிதியாகிய மேசியா வந்து, ஓர் அரசாங்கத்தினை, ஓர் இராஜ்யத்தினை, ஒரு நீதியான நகரத்தை ஸ்தாபிப்பார் என்று தீர்க்கத்தரிசனமாய் ஏற்கெனவே அறிவித்துள்ளதை ஆபிரகாம் அறிந்திருந்தார். அந்த நீதியான அரசாங்கத்திற்காக ஆபிரகாம் எதிர்நோக்கியிருந்தார்; மேலும் அந்த நகரத்தினுடைய நீதியின் அஸ்திபாரங்களானது ஆழமாய்ப் போடப்பட்டிருக்கும் என்றும், அது ஒரு நித்திய இராஜ்யமாகக் காணப்படும் என்றும் ஆபிரகாம் உணர்ந்திருந்தார். நல்நோக்கங்களுடன் அவ்வப்போது பூமிக்குரிய சிங்காசனத்திற்கு ஏதோ ஓர் இராஜா வருகின்றான் என்றும், அந்நோக்கங்களை அவனால் கொஞ்சமே நடைமுறைப்படுத்த முடிகின்றது என்றும், அவனது சிங்காசனமும், இராஜ்யமும் கவிழ்கையில், அது அடுத்தவனுக்குக் கடந்துபோய்விடுகின்றது என்றும் ஆபிரகாம் அறிந்திருந்தார்.

ஆகையால் ஆபிரகாம் அவரது நாட்களில் காணப்பட்ட எந்த இராஜாவின் மீதும் உடன்பாடு கொண்டிருக்கவில்லை; அதுபோல ஒரு பூமிக்குரிய இராஜ்யத்தை எதிர்நோக்கவுமில்லை; மாறாக இவைகளுக்கு அப்பால் தேவனுடைய பிரியமான குமாரனின் இராஜ்யத்திற்காகவே - ஆயிர வருஷ இராஜ்யத்திற்காகவே எதிர்நோக்கியிருந்தார். அவரது விசுவாச கண்களானது மேசியாவையும், ஆயிர வருஷ நாளின் போது இஸ்ரயேல் உயர்த்தப்படுவதையும், பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவதையும் கண்டு தரிசித்தது. இதை "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் (கிறிஸ்துவின் ஆளுகையினுடைய ஆயிர வருஷ நாளைக்) காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான்" என்று இயேசு கூறுகையில் உறுதிப்படுத்தினார். தாம் ஆபிரகாமோடு இருந்ததாகக் கூறுகின்றார் என்ற அர்த்தத்தில் நமது கர்த்தர் பேசினதாக யூதர்கள் தவறாய்ப் புரிந்துகொண்டனர். வேறு சிலர் கர்த்தருடைய பலியின் வேலையினை விசுவாசத்தினால் ஆபிரகாம் பார்த்ததாகக் கர்த்தர் கூறினார் என்று தவறாகப் புரிந்துகொண்டனர். நமது கர்த்தர் ஆபிரகாமுக்கு காட்சியளித்தார் என்பது உண்மைதான். ஒரு குறிப்பிட்ட விதத்தில் நிழலான ஈசாக்கினுடைய பலியில், கிறிஸ்துவின் பலியினை ஆபிரகாம் முன்கண்டதும் உண்மைதான்; எனினும் "கிறிஸ்துவின் நாள்" என்பது உலகம் ஆசீர்வதிக்கப்படப்போகும் ஆயிர வருஷத்தின் நாள் என்பதும் உண்மைதான்; மேலும் இதையே ஆபிரகாம் கண்டார்; மேலும் இதுவே அவரது விசுவாசத்தின் கண்களைக் களிகூரப்பண்ணிற்று.

நாமும் அதையே காண்கின்றோம்; அதே விசுவாசத்தைக்கொண்டிருக்கின்றோம்; நம்பிக்கை மற்றும் எதிர்ப்பார்ப்பின் அதே சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சியைக் கொண்டிருக்கின்றோம். அந்த நகரம் அல்லது இராஜ்யம் யார் என்று ஆபிரகாமைக்காட்டிலும் நாம் இன்னும் அதிகம் தெளிவாய் அறிந்திருக்கின்றோம்;

அதாவது அந்த நகரத்தில் நமது கர்த்தர் மகா இராஜாவாக, தம்முடைய (அங்கத்தினர்களாகிய, தமது மணவாட்டிகளாகிய) சரீரமாகிய சபைக்குத் தலையாக இருப்பார் என்பதையும், இன்னுமாக இந்த மணவாட்டி, அதாவது ஆட்டுக்குட்டியானவரின் மனைவி, "ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களை" அஸ்திபாரக்கற்கள் என மகிமையில் பெற்றிருக்கும் புதிய எருசலேமினால் அடையாளமாய்ச் சித்தரிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அறிந்திருக்கின்றோம் (வெளிப்படுத்தல் 21:2, 11-14). முற்பிதாக்கள் பூமிக்குரிய பிரதிநிதிகளாக அல்லது வாய்க்கால்களாகக் காணப்படுவார்கள் என்றும், இவர்கள் வாயிலாகவே இந்தப் பரம நகரம் அதன் ஆசீர்வாதங்களை இஸ்ரயேலுக்கும், பூமியின் குடிகள் அனைவருக்கும் அனுப்பிடும் என்றும், (வசனத்தின் வாயிலான பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலினால்) நாம் ஆபிரகாமைக்காட்டிலும் மிகத் தெளிவாய்க் காண்கின்றோம். "நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய இராஜ்யத்திலிருக்கிறவர்களாகக் காண்பீர்கள்" என்று எழுதப்பட்டுள்ளது (லூக்கா 13:28). நமது கர்த்தரை இப்பொழுது விசுவாசத்தின் கண்களினால் பார்க்கும் நம்மைத் தவிர, மற்றபடி கிறிஸ்துவும், அவரது தெரிந்தெடுக்கப்பட்ட மணவாட்டியும் மனுஷர்களால் பார்க்கப்படுவதில்லை.

## அவள் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர் என்று எண்ணினாள்

விசுவாச வீரர்களுடைய இந்தப் பட்டியலில் ஆபிரகாமினுடைய மனைவி விசேஷமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதுக்குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இது தெய்வீக வாக்குத்தத்தங்கள் தொடர்புடைய விஷயத்தில் ஆண்களுக்கு அல்லது பெண்களுக்குப் பாதகமாய்ச் செயல்படும் விதத்தில் பாலின வேறுபாடு இருப்பதில்லை எனும் அப்போஸ்தலனுடைய கருத்தை முழுமையாய்க் கிரகித்துக்கொள்வதற்கு உதவுகின்றது. சாராளுடைய விசுவாசம் தடுமாறவேயில்லை என்று சொல்ல முடியாது; அவளின் விசுவாசம் சில காலம் தடுமாறினாலும், அது நிச்சயமாகவே, சுதாரித்துக்கொண்டது. தாய்மை அடைவதற்குரிய வயதை அவள் கடந்திருந்த போதிலும், அவள் தேவனை நம்பினாள். "விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணினாள்." இப்படியாகச் சாராள் அப்போஸ்தலனால் பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேன்மையானவர்களின் பட்டியலில் ஒருவராகக் கருதப்படுகின்றாள்: "இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் (விசுவாசக் கண்களினால்) கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்." (எபிரெயர் 11:13)

ஆ, ஆம்! இங்கு ஒரு முக்கியமான அம்சம் உள்ளது. தெய்வீக நோக்கங்கள் தொடர்புடைய மகிமையான காரியங்களை நாம் பார்ப்பது மாத்திரம் போதுமானதல்ல; அவைகளை நாம் நம்புவது மாத்திரம் போதுமானதல்ல; அவைகளில் களிகூருவது மாத்திரம் போதுமானதல்ல. தற்காலத்தில் அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும் பரீட்சையில் நிற்பதற்கும்கூட நாம் விருப்பமாய்க் காணப்பட வேண்டும். இந்தப் பரீட்சையில் நிற்கமுடியாதவர்கள், அந்த மகிமையான காரியங்களில் பங்கடைவதற்குப் பாத்திரவான்களாகக் கருதப்படுவதில்லை. அந்த முற்பிதாக்கள் பூமிக்குரிய எந்த வாய்ப்புகளிலும் திருப்தியடையாமல், பரலோகத்தின் பரம தேசத்தை நாடினார்கள்; அதாவது நாம் பரத்திற்குரியவைகளை, ஆவிக்குரிய காரியங்களை நாடினது போன்று நாடவில்லை; அதாவது பூமிக்குரியதிலிருந்து ஆவிக்குரிய சுபாவ-மாற்றத்தின் நிறைவை அடையவேண்டும் என்று எதிர்நோக்கின விதத்தில் நாடவில்லை. மாறாக நமது கர்த்தருடைய ஜெபத்தில் வெளிப்படுத்தப்பட்ட விதத்தில் பரத்திற்குரியவைகளை நாடினார்கள். இவர்கள் தேவனுடைய இராஜ்யம் வரவும், அது பூமியில் - பரலோகத்தினுடைய ஒரு நீதியின் ஆளுகையென,

பரலோக நகரமென அல்லது அரசாங்கமென ஸ்தாபிக்கப்படுவதையும் விரும்பினார்கள். "ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே" - அவர்கள் எதிர்ப்பார்த்திருந்தபடியே, ஒரு பரலோக இராஜ்யத்தை அல்லது ஆளுகையைத் தேவன் திட்டமிட்டிருந்தார். அந்த இராஜ்யமானது இறுதியில் "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதாக" இருக்குமென வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றது. (ஆகாய் 2:7)

## ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே

கீர்த்தியுள்ள விசுவாசம் எனும் மண்டபத்தின் அறையில் நாம் நடந்து ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே போன்றவர்கள் மீது அப்போஸ்தலன் நமது கவனத்தை ஈர்க்கும் காட்சிகளைக் கவனிக்கின்றோம். இவர்கள் ஒவ்வொருவரும் வித்தியாசங்களை உடையவர்களாகவும், சிறப்பியல்புகளை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்க பண்புகளை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர்; ஆனாலும் இவர்கள் அனைவருக்குள்ளும் காணப்படும் விசுவாசம் எனும் அஸ்திபாரமே, இவர்களைத் தேவனுடைய ஜனங்களாக்கியது; இவர்களது விசுவாசத்தின் காரணமாக இவர்களை அங்கீகரித்திட அவர் பிரியமுள்ளவராயிருந்தார்; மேலும் இவர்களுக்கு எதிர்காலத்திற்குரிய வாக்குத்தத்தங்களை ஏற்கெனவே வாக்களித்திருந்தார்; விசுவாசம் எனும் கிருபையை வளர்த்திடும் விஷயத்தில், தேவனுடைய ஜனங்களை ஏதேனும் ஒரு காரியம் ஊக்குவிக்குமானால், அது நிச்சயமாகவே முற்காலங்களிலுள்ள விசுவாச வீரர்களின் இந்தக் காட்சியரங்கத்திற்குள் நடந்து பார்க்கும் காரியமாகவே இருக்கும்.

ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் மீது ஈசாக்கு தனது விசுவாசத்தினைக் கொண்டிருந்தார்; மேலும், முழு நம்பிக்கையுடன் ஆபிரகாமின் ஆசீர்வாதத்தினைத் தனது குமாரனாகிய யாக்கோபிற்குப் பகிர்ந்தார்; அதேபோல் ஏசாவிற்கு இவர் ஓர் ஆசீர்வாதத்தினை வழங்குகையிலும், பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிக்கப்போகும் ஆதி வாக்குத்தத்தமானது, ஏசாவின் குடும்பத்தையும்கூட உள்ளடக்கியே ஆசீர்வதித்திடும் என்பதை உணர்ந்தவராகவே, அந்த வாக்குத்தத்தத்தில் உள்ள தன்னுடைய விசுவாசத்தினை வெளிப்படுத்தினார். தனது தாத்தாவாகிய ஆபிரகாமிற்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்தின் மீதான விசுவாசத்தினால் ஏவப்பட்டு வாழ்ந்த யாக்கோபும், தனது ஜீவியத்தின் காரியங்கள் அனைத்தையும் ஒழுங்குப்படுத்தியதில் அந்த விசுவாசத்தினை வெளிப்படுத்தினார். அதிலும் விசேஷமாக அவர் யோசேப்பின் குமாரர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதங்களை அருளின பிற்பாடு, அவர் தேவனைத் தொழுதுகொண்டு, தன் மரணப்படுக்கையில் காணப்பட்டபோதும், அந்த விசுவாசம் வெளிப்பட்டது. தன் குடும்பத்திற்கு வரப்போகிற ஆசீர்வாதங்கள் அனைத்தும் தெய்வீக மேற்பார்வையின்கீழ்க் காணப்படுகின்றது என்பதையும், அனைத்துமே ஆபிரகாமிற்குப் பண்ணப்பட்ட ஆதி வாக்குத்தத்தத்திற்குள் உள்ளடங்குகின்றது என்பதையும் அவர் அடையாளம் கண்டுகொண்டார். தான் எகிப்தில் அடக்கம்பண்ணப்படாமல், விசுவாசத்தின் மூலமாக மாத்திரம் இஸ்ரயேலுக்குச் சொந்தமாயிருந்த வாக்குத்தத்தத்தின் தேசமாகிய கானான் தேசத்திலேயே அடக்கம்பண்ணப்பட வேண்டும் என்று கட்டளையிட்டதின் மூலமும், அவர் தனது விசுவாசத்தினை வெளிப்படுத்தினார்.

தேவனிடத்திலுள்ள தனது விசுவாசத்தினை யோசேப்பு பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தினார். சிறு பிராயத்தின்போது மாத்திரமல்லாமல், எகிப்தில் காணப்பட்டபோதும், இஸ்ரயேலே ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களாக இருக்கப்போகின்றார்கள் என்றும், மேசியாவுடன் இணைந்து இவர்கள் வாயிலாகக் கர்த்தருடைய ஆசீர்வாதமானது உலகத்தின் ஜாதிகள் அனைவருக்கும் கடந்துசெல்லும் என்றும் உள்ள தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தினை இவர் தெளிவாய் நிரூபித்தார். இஸ்ரயேலர் எகிப்து தேசத்தை விட்டு, கானானுக்குப் புறப்படுகையில், அவர்கள் தன் எலும்புகளை

எடுத்துச்செல்வதற்கு மறந்துவிடக்கூடாது என்று விசுவாசத்தினால் யோசேப்பு கட்டளையிட்டார். இது தன் சரீரத்தில் காணப்பட்ட எலும்புகள், தனது உயிர்த்தெழுதலின்போது தேவனுக்கு அவசியமாயிருக்கும் என்று அவர் எண்ணம்கொண்டிருந்ததாகக் குறிப்பதாகாது, மாறாக அவரது இந்த வார்த்தைகளானது, மரித்தோரிலிருந்துள்ள உயிர்த்தெழுதலின் மீதான அவரது விசுவாசத்திற்கும், மேசியா மூலமாய் இஸ்ரயேலுக்கு வரவிருக்கும் ஆசீர்வாதங்களில் தானும் பங்கெடுப்பார் என்பதிலுள்ள அவரது விசுவாசத்திற்கும் சான்று பகர்ந்ததாய் இருந்தது.

## கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தை அதிக பாக்கியமானது

மோசே தேவனிடத்திலுள்ள தனது விசுவாசத்தினைப் பல்வேறு விதங்களில் சான்று பகர்ந்தார்; எனினும் இவைகள் எல்லாவற்றையும்விட, தான் தத்தெடுக்கப்பட்டதன் நிமித்தம் சுதந்தரித்துக்கொண்ட எகிப்தினுடைய சிங்காசனத்தின் சிலாக்கியங்களைத் துறந்ததே, மிகவும் குறிப்பிடத்தக்கக் காரியமாய்க் காணப்பட்டது. மற்றவர்களுடன் சுகபோகமாய் வாழ்வதைவிட, ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்த ஜனங்களுடன் பாடு அனுபவிப்பதையே தெரிந்துகொண்டார். இஸ்ரயேலின் ஜனங்கள், மேசியாவின் ஜனங்களாக, கிறிஸ்துவின் ஜனங்களாகக் காணப்பட்டனர்; ஆகையால் இவர்களோடு தன்னை இணைத்துக்கொண்டதன் மூலம், அபிஷேகிக்கப்பட்டவருடைய நிந்தையின் மீதான தனது மதிப்பினை மோசே வெளிப்படுத்தினவரானார். உண்மையில் தெய்வீகக் கிருபையிலும், ஊழியத்திலும் மோசே முன்னேறின ஒவ்வொரு படிக்கும், விசுவாசமே காரணமாயிருந்தது.

"அவர் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்தார்." இது காரியங்களை எவ்வளவு தத்ரூபமாக விவரித்துள்ளது; அன்றும் சரி, இன்றும் சரி விசுவாசக்கண்களை உடையவர்கள் மாத்திரமே - மற்றவர்களுக்குப் புலப்படாத அதரிசனமானவைகளைப் பார்க்க முடிபவர்கள் மாத்திரமே - அதிலும் விசேஷமாக அதரிசனமான மகிமையின் இராஜாவையும், இதுவரையும் கண்களுக்குப் புலப்படாமல் காணப்படும் அவரது இராஜ்யத்தையும் பார்க்க முடிபவர்கள் மாத்திரமே, சோதனைகளிலும், பரீட்சைகளிலும் நிலைநிற்க முடியும் எனும் காரியம் எவ்வளவு உண்மையாய் இருக்கின்றது! விசுவாசத்தினாலேயே இவர் இஸ்ரயேலரோடுகூடப் பஸ்காவினையும், இரத்தம் தெளிக்கப்படுதலையும் ஏற்படுத்தினார்; இவர் அப்போது பஸ்காவினுடைய உண்மையான அர்த்தத்தினையும், இரத்தம் மற்றும் அது தெளிக்கப்படுவதற்குரிய நிஜத்தினையும் எவ்வளவேனும் புரிந்திருக்க வாய்ப்பிருக்கின்றது என்று நாம் அனுமானித்துக்கொள்வதற்கு ஏதுவான எந்தக் காரணகாரியங்களும் நமக்கு இல்லை. செங்கடல் வழியாக இஸ்ரயேலர்களின் கடந்துபோகுதலிலும்கூட, இவரது விசுவாசம் மறுபடியுமாக வெளிப்பட்டது. இவ்வனைத்துக் காரியங்களிலும் இவரது கீழ்ப்படிதல், இவரது விசுவாசத்திற்கு இசைவாய்க் காணப்பட்டது.

இவ்வளவு பெரிதான விசுவாசத்தினைப் பார்த்து நாம் வியப்படைகையில், இதனால் நாம் ஊக்கமடைகின்றோம்; ஏனெனில் பூரணமான கிரியை என்பது நம்மைப் பொறுத்தமட்டில் சாத்தியமில்லை என்றாலும், பூரணமான விசுவாசம் என்பது நம்மைப் பொறுத்தமட்டில் சாத்தியமுள்ள ஒன்று என்பதை நாம் உணர்ந்துகொள்கின்றோம். ஆகையால் விசுவாசத்தினால் தெய்வீக வாக்குத்தத்தங்களை நாம் இறுகப் பற்றிக்கொண்டு, மறுரூபமடைந்து, இப்பொழுது நாம் வாக்குத்தத்தங்களாய் மாத்திரம் பெற்றிருப்பவைகளை நிஜமாக அனுபவிக்கப்போவது வரையிலும், நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கத் தொடர்வோமாக.

## விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி...

உலகத்தால் புரிந்துகொள்ள முடியாத விதத்திலும், பரிசுத்தவான்களை வியப்பிற்குள்ளாக்கும் விதத்திலும் வேதவாக்கியங்களானது அநேக விதங்களில், தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்பதையும்,

அவர் விசேஷமாய் வல்லவர்களை அல்லது ஞானவான்களை அல்லது நல்லவர்களைத் தெரிவுசெய்யாமல், மாறாக அவர் தாழ்வான பிறப்பையும், இயல்பான குறைகளையும், அபூரணங்களையும் பொருட்படுத்தாமல், உண்மையுள்ளவர்களையும், நேர்மையுள்ளவர்களையும், விசுவாசமுள்ளவர்களையும் தெரிந்து கொள்கின்றார் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. "உங்கள் வழிகள் என் வழிகள் அல்லவென்று" கர்த்தர் உண்மையாகவே சொல்லியுள்ளார். உண்மையற்ற, சுயநீதியினை உடைய பரிசேயர்களுடன் ஒப்பிடுகையில், ஆயக்காரர்களும், பாவிகளும் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்று நமது மீட்பர் சொல்லியிருப்பது உண்மையே. தேவனுடைய ஏற்பாட்டில் ராகாப் மற்றும் அவளது விசுவாசத்தினைக் குறித்தும், அவளது விசுவாசம் எப்படிக் கர்த்தரினால் அங்கீகரிக்கப்பட்டது மற்றும் அதற்கு எப்படிப் பலன் அளித்தார் என்பதுகுறித்தும் அப்போஸ்தலன் குறிப்பிடுவதுக்குறித்து நாம் எவ்வளவாய் மகிழ்கின்றோம்! இங்கு நாம் ஊக்கம் அடைவதற்காக மட்டுமல்லாமல், மற்றவர்கள் விஷயத்தில் நாம் வழிகாட்டப்படத் தக்கதாகவும், நாம் ஒவ்வொருவரும் நன்கு புரிந்துகொள்வதற்கும், உள்வாங்கி ஏற்றுக்கொள்வதற்கும் ஏதுவான பாடம் ஒன்று காணப்படுகின்றது. அப்போஸ்தலன் பேசியுள்ள வார்த்தைகளுக்கு முழு இசைவாகவே, வல்லவர்களையும், பிரபுக்களையும், உண்மையற்ற வர்களையும், கீழ்ப்படிதல் இல்லாதவர்களையும் இறுதியில் வெட்கப்படுத்திப் போடத்தக்கதாக, தேவன் தற்காலத்தில் "உலகத்தில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களில்" சிலரைத் தெரிந்துகொண்டிருக்கின்றார்.

இந்த வியத்தகு காரியங்களைக்குறித்து நம்மிடம் அப்போஸ்தலன் பேசின பிற்பாடு, பெயர்ப்பட்டியலை ஆரம்பிக்க மாத்திரமே செய்திருக்கின்றார் என்பதை அவர் உணர்ந்துகொண்டதாகத் தெரிகின்றது. தேவனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொண்ட மற்ற உண்மையுள்ள பாத்திரங்களாகிய கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுயேல் மற்றும் தீர்க்கத்தரிசிகள் போன்றவர்களின் பெயர்களைப் பட்டியலிட்டால் தனக்கு நேரம் போதாது என்று தெரிவிக்கின்றார்; இவர்கள் அனைவரும் விசுவாசத்தின் வாயிலாக வெற்றிகளைக் கண்டடைந்தனர், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தத்தைப் பெற்றார்கள்; இவர்கள் ஒவ்வொருவரின் விஷயத்திலும் விசுவாசமானது பரீட்சிக்கப்பட்டது; சிலசமயம் கொடுமையான ஏளனங்கள், கசையடிகள் மூலமும், சிலசமயம் கட்டுகளினாலும், சிறையில் அடைக்கப்படுதலின் மூலமும் பரீட்சிக்கப்பட்டது. சிலர் கல்லெறியப்பட்டனர், வாளால் சிலர் அறுப்புண்டார்கள், சிலர் வீடு இன்றி அலைந்து திரிந்து, குறைவையும், உபத்திரவத்தையும், துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை.

## நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு...

இந்த மகிமையான வீரர்களை நமக்குச் சுட்டிக்காட்டின பிற்பாடு, இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய கிறிஸ்துவின் சீஷர்களாகிய நம்மிடமிருந்து வேறுபட்ட ஒரு வகுப்பாராய் இருக்கின்றனர் என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். இவர்கள் தங்களுக்கு வாக்களிக்கப் பட்டுள்ளவைகளைப் பெற்றுக்கொள்ளாமலேயே விசுவாசத்தில் மரித்தார்கள்; ஏனெனில் தேவன் நமக்கு இன்னும் மேன்மையான சிலவற்றை ஏற்பாடுபண்ணியுள்ளார்; மேலும் நாம் நமக்கான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளாதது வரையிலும், அவர்கள் தங்களுக்கான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாது என்ற விதத்தில் தேவன் ஏற்பாடுபண்ணியுள்ளார்.

அவர்களுக்கு அருளப்படப்போகும் ஆசீர்வாதத்திலிருந்து வேறுபட்ட மற்றும் வேறான நமக்குரிய அந்த வியத்தகு ஆசீர்வாதம் என்ன? அவர்களுக்குப்போலவே நம்முடைய ஆசீர்வாதமும் விசுவாசத்திற்கான ஆசீர்வாதமாகவும், பலனாகவும் இருக்கின்றதே ஒழிய, கிரியைகளுக்கான பலனாக

இருப்பதில்லை என்பது நம்முடைய பதிலாக இருக்கின்றது. நமக்கான ஆசீர்வாதம் அவர்களுடையதைவிட உயர்ந்ததாக இருக்கின்றது; ஏனெனில் மேசியாவாகிய இயேசுவந்து, தம்முடைய ஜீவனைக்கொடுத்து, உயர்வாய் உயர்த்தப்பட்டிருக்கின்றார்; ஏனெனில் நாம் இப்பொழுது அவருடைய சரீரத்தில் - கிறிஸ்துவின் சரீரத்தில் - மகா பிரதான ஆசாரியனின் சரீரத்தில் - இராஜாதி இராஜாவின், கர்த்தாதி கர்த்தாவின் சரீரத்தில் - தேவன் மற்றும் மனுக்குலத்திற்கு இடையே உள்ள மத்தியஸ்தரின் சரீரத்தில் - அங்கத்தினர்களாகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். மாபெரும் மேசியாவுடன் வேறொரு தளத்தில் உடன்வேலையாட்களாக இருக்கப்போவதற்கான நமக்குரிய அழைப்பு பற்றின இக்காரியம், முன்பு வெளியாக்கப்படாத "மறைக்கப்பட்ட இரகசியமாக" காணப்படுகின்றது. உண்மையிலேயே "விசேஷித்த நன்மையானதொன்றை நமக்கு" நியமித்திருந்தார் - அதாவது பூமிக்குரிய சுதந்தரத்தைக்காட்டிலும் எப்படிப் பரலோகச் சுதந்தரம் மிக விசேஷித்ததாகக் காணப்படுகின்றதோ அப்படியே ஆகும். நாம் மேலே பார்த்துக்கொண்டிருக்கும் மற்றும் போற்றிப் பாராட்டிக்கொண்டிருக்கும் மகிமையான வாழ்க்கையினை வாழ்ந்துள்ள இந்த முற்பிதாக்கள் என்பவர்கள், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட வகுப்பார் மரணத்திலிருந்து முதலாம் உயிர்த்தெழுதலில் பிறப்பது வரையிலும் காத்திருக்க வேண்டும்; பின்னர் முற்பிதாக்கள் பரலோக இராஜ்யத்தின், பரலோக நகரத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளாகுவதற்கும், தேவனுடைய ஆசீர்வாதத்தினை இஸ்ரயேலுக்கும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் அருளும் வேலையில் பங்கடைவதற்கும் வேண்டி, பூமிக்குரிய தளத்தில் தங்களுக்கான உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள்.

அவர்கள் அனைவரும் விழுகையின் காரணமாக அபூரணர்களாகவும், இதனால் "மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாகவும்" காணப்பட்டார்கள்; மேலும் நாமும் இப்படியாகவே காணப்பட்டோம். அவர்களும் சரி, நாமும் சரி இருதயத்தில் கர்த்தருடனும், அவருடைய நீதியுடனும் விருப்பத்தோடு, வாஞ்சையோடு, இணக்கமாய்க் காணப்படுகின்றோம்; ஆனால் பெரும்பான்மையான மனுக்குலம் இப்படியாக இருப்பதில்லை; ஆகையாலே விரும்பி கீழ்ப்படியும் யாவருக்கும் சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் அறிவிக்கும் தேவனுடைய சத்தத்தை - முற்பிதாக்களும், நாமும் கேட்க முடிபவர்களானோம். முற்பிதாக்கள் அப்போது முன்வைக்கப்பட்ட சிலாக்கியங்களுக்கும், ஆசீர்வாதங்களுக்கும் செவிகொடுத்தார்கள். இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள நாமும், இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய பரம அழைப்பு முன்வைத்த இன்னும் மேன்மையான ஆசீர்வாதங்களுக்கும், சிலாக்கியங்களுக்கும் செவிகொடுத்து, இணங்கிவந்தோம்.

## விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்

முற்பிதாக்கள் எந்த ஓர் உடன்படிக்கையினாலோ அல்லது எந்த ஒரு மத்தியஸ்தரினாலோ நீதிமானாக்கப்படவில்லை. நாமும் இப்படியாக நீதிமானாக்கப்படவில்லை. அவர்களும், நாமும், இருவருமே விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கின்றோம். அவர்களும், நாமும் மத்தியஸ்தர் இல்லாத, மேலும் மத்தியஸ்தரின் அவசியம் இல்லாத ஆபிரகாமினுடைய உடன்படிக்கையின்கீழ் வருகின்றோம்; ஏனெனில் இந்த உடன்படிக்கையானது, தகப்பனாகிய ஆபிரகாமிற்கு இருந்த விசுவாசம் மற்றும் இருதய வாஞ்சைபோன்ற விசுவாசம் மற்றும் வாஞ்சையைப் பெற்றிருப்பவர்களுடன் மட்டுமே பண்ணப்பட்டது. இந்த விசுவாச வீரர்களில் சிலர் யூத யுகத்தில் வாழ்ந்தவர்களாயிருந்த போதிலும், யூதர்களுக்கான நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் நீதிமான்களாக்கப்படாமல், மாறாக அவர்களது விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டார்கள், ஏனெனில் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது அதன் மத்தியஸ்தருடைய இயலாமையின் காரணமாய் எதையும் பூரணப்படுத்தக்கூடாதிருந்தது; அதுமாத்திரமல்லாமல் அவர்களில் யாரும் இஸ்ரயேலுக்கான புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையினாலும் நீதிமானாக்கப்படவில்லை, காரணம் அந்தப் புதிய உடன்படிக்கையானது அப்போது நிறுவப்படவில்லை.

இஸ்ரயேலின் புதிய உடன்படிக்கைக்கான மத்தியஸ்தரின் அங்கத்தினர்களுடைய தெரிந்தெடுத்தலானது இப்பொழுது நடைபெற்றுக்கொண்டுவருகின்றது. அபிஷேகிக்கப்பட்டவர் (கிறிஸ்துவாகிய தலை மற்றும் அங்கத்தினர்கள்) புதிய உடன்படிக்கையினுடைய மத்தியஸ்தராய் இருக்கின்றார். (பழைய) நியாயப்பிரமாண உடன்படிக்கையானது தேவனுக்கும், இஸ்ரயேலாகிய ஒரு தேசத்திற்கும் இடையில் பண்ணப்பட்டதாகும்; இந்த உடன்படிக்கையின்படி, இத்தேசத்தாரே முதலாவது ஆசீர்வதிக்கப்பட்டு, பரிசுத்தம்பண்ணப்பட்டு, நித்திய ஜீவன் அருளப்பட வேண்டும் என்றும், பிற்பாடு இஸ்ரயேலிய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், தேவனுடன் இசைவிற்குள்ளாக வரும் மற்ற அனைத்துத் தேசத்தாருக்கும், ஆசீர்வாதத்தின் கால்வாயாக இஸ்ரயேல் மாறும் என்றும் திட்டமிடப்பட்டது. ஆனால் இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையானது தவறிப்போனது, காரணம் அதன் மத்தியஸ்தராகிய மோசேயினால் நிழலான விதத்தில் தற்காலிகமாகவே தவிர, மற்றபடி அவரால் ஜீவனை யாருக்கேனும் அருளமுடியவில்லை. புது உடன்படிக்கையானது தேவனுக்கும், இஸ்ரயேலுக்கும் மற்றும் உலகத்திற்கும் இடையில் உள்ளதாகும். அதாவது தேவனுக்கும், மனுஷருக்கும் இடையிலாகும். மத்தியஸ்தர் ஆவிக்குரியவராவார்; ஆனால் அவர் தேவனுக்கும், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு வகுப்பாருக்கும் இடையில் மத்தியஸ்த ஊழியம் செய்யப்போகிறதில்லை. அவர் மனுஷருக்காக, தேவனிடத்தில் மத்தியஸ்த ஊழியம் செய்வார். ஆகையால் சபைக்கு மத்தியஸ்தர் யாரும் இல்லை, இதற்கான தேவையும் இல்லை; ஏனெனில் அவர்கள் மனித சுபாவம் உடையவர்கள் இல்லை, மாறாக பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள புதுச்சிருஷ்டியின் அங்கத்தினர்கள் மட்டுமே சபையில் அடங்குவார்கள். இவர்கள் மத்தியஸ்தரின் அவசியமில்லாத மத்தியஸ்தரின் அங்கத்தினர்கள் ஆவார்கள். இவர்களது மாம்சத்தினுடைய அபூரணங்களின் காரணமாக, இன்னுமாக இவர்கள் தாங்கள் விரும்புபவைகளைச் செய்ய முடியாமல் இருப்பதன் காரணமாக, இவர்களுக்குப் பரிந்துபேசுபவர் ஒருவர் அவசியமாய் இருக்கின்றார். இவர்கள் "நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்துவை" பரிந்துபேசுபவராகப் பெற்றிருக்கின்றனர்.

மாபெரும் மத்தியஸ்தராகிய கிறிஸ்துவினுடைய சரீர அங்கத்தினர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டு, உண்மையுள்ளவர்களெனக் கண்டுகொள்ளப்பட்டவுடன், முற்பிதாக்களின் ஆசீர்வாதத்திற்கான காலம் வரும்; இவர்களுக்கே, மாம்சத்தின் பிரகாரமாக ஆபிரகாமினுடைய சந்ததிக்கான சிலாக்கியங்களும், ஆசீர்வாதங்களும் கடந்துவரும். இவர்கள் வாயிலாகவே ஆயிர வருஷ யுகத்தின் போது புதிய உடன்படிக்கையினுடைய தேவ ஆசீர்வாதமானது ஒவ்வொரு சிருஷ்டியினிடத்திற்கும் கடந்துவரும்; இன்னுமாக ஒப்புரவாகுவதற்கும், நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுவதற்குமான முழுமையான வாய்ப்புகள் யாவையும் அருளிடும்.

ஆயிர வருஷ யுகம் முழுவதிலும் பரலோக மத்தியஸ்தரின் பூமிக்குரிய பிரதிநிதிகளாகக் காணப்படப்போகும் இந்த முற்பிதாக்கள், சில பேரின்பங்களை ஒருவிதத்தில் இழந்தவர்களாகவே காணப்படுவார்கள்; அதாவது பரீட்சிக்கப்பட்டு, தகுதியானவர்கள் என்று கண்டுகொள்ளப்பட்ட வர்களுக்கே உரிய பேரின்பங்களை ஒருவிதத்தில் இழந்தவர்களாகவே காணப்படுவார்கள். ஏனெனில் ஆயிரம் வருஷங்கள் இவர்கள் அதிபதிகளென, கற்பிப்பவர்களென, சீர்தூக்கிவிடும் ஆசாரியர்களென, அபூரண மனுஷர்களுடன் தொடர்பில் காணப்பட்டு, அவர்களைத் தேவனுடன் இசைவிற்குள் திருப்புவதற்கும், அவர்கள் இழந்துபோன அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கும் உதவிசெய்து, அபூரண சந்ததியினருக்கு ஊழியம் புரிபவர்களாய் இருப்பார்கள்.

ஆயிர வருஷ யுகத்தின்போது மனுக்குலத்தைச் சீர்த்தூக்கிவிடும் வேலையினை முற்பிதாக்கள் நிறைவேற்றி முடிக்கையில், அவர்களுக்கு என்ன வெகுமதி அளிக்கப்படும் என்ற கேள்வி காணப்படலாம்.

மனுக்குலத்திற்காய் இத்தகைய வேலை புரிய கிடைக்கும் சிலாக்கியமே போதுமான வெகுமதியாய்க் காணப்படும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம்; ஆனாலும் இந்த முற்பிதாக்கள் ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவின்போது, இன்னுமொரு ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள், அதாவது மனித சுபாவத்தினின்று, ஆவிக்குரிய சுபாவத்திற்கு மாற்றப்படுவார்கள் என்று வேதவாக்கியங்களில் சில காரியங்கள் சுட்டிக்காட்டுவதுபோன்று தோன்றுகின்றது.

இது வேதாகமத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை, மாறாக இது அனுமானமேயாகும். சுவிசேஷ யுகத்திற்கு முன்புள்ள காலங்களில் வாழ்ந்துள்ள இந்த விசுவாச வீரர்கள், நிழலில் "சிவப்புக்கிடாரியினால்" அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், இது பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட்டு, இதன் சாம்பல் தீட்டுப்பட்டவர்களைச் சுத்திகரிக்க தெளிக்கப்படுகின்றது என்றும் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம். இந்த வகுப்பார் லேவி கோத்திரத்தின் அங்கத்தினர்களென அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் நாம் பார்த்திருக்கின்றோம். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், லேவி கோத்திரத்தினால் நிழல்படுத்தப்படும் விசுவாச வீட்டார் முற்காலங்களிலும், இப்பொழுதும் காணப்படுகின்றனர். இந்த "விசுவாச வீட்டாரிடத்திலிருந்தே" இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது, நிஜமான ஆசாரியர்கள் அழைக்கப்படுகின்றனர், தெரிந்துகொள்ளப்படுகின்றனர் மற்றும் உண்மையுள்ளவர்களெனக் கண்டுகொள்ளப்படுகின்றனர். "இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாரில்" அங்கம் வகிக்கும் யாவரும், இன்னுமாகத் "திரள் கூட்டத்தாரில்" அங்கம் வகிக்கும் யாவரும், லேவியர்களினால் நிழற்படுத்தப்படும் இந்த "விசுவாச வீட்டாரில்தான்" உண்மையில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர் என்றும் நாம் பார்த்திருக்கின்றோம்.

"சிறு மந்தையினர்" மற்றும் "திரள் கூட்டத்தினர்" இருவருமே பலிசெலுத்தும் ஆசாரியர்களாகும் கண்ணோக்கத்தில் அர்ப்பணம்பண்ணுகின்றவர்களாய் இருக்கின்றனர்; எனினும் சுயத்தைப் பலிசெலுத்தும் நிபந்தனைகளுக்கேற்ப ஜீவிக்கும் சொற்பமானவர்களே பிரதான ஆசாரியனுடைய சரீரத்தில் அங்கத்துவம் - கிறிஸ்துவில் அங்கத்துவம் - புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின் மத்தியஸ்தரில் அங்கத்துவம் எனும் பரிசினை வெல்வார்கள் என்றும் நாம் பார்த்திருக்கின்றோம். மீதமானவர்களில் சிலர் முற்றிலுமாக விலகிப்போய் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்; இன்னுமாக மீதமானவர்களில் மற்றவர்களோ அழிவிற்குள்ளாக விலகி செல்லாமலும் அல்லது மனப்பூர்வமாய்ப் பலிசெலுத்த முன்னேறாமலும் காணப்படுவதால், இவர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளினால் ஆயத்தமாக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, ஆவிக்குரிய தளத்தில் கிரீடங்களை உடைய "முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாய்" இல்லாமல், மாறாக குருத்தோலைகளை உடைய ஜெயங்கொண்டவர்களென ஜீவனைப் பெறுவதற்குப் பாத்திரவான்களாகக் கண்டுகொள்ளப்படுவார்கள். அர்ப்பணம்பண்ணுவதற்கு முன்னேற தவறும் நீதிமானாக்கப்பட்டவர்கள், பின்னுக்குப்போய், உலகத்தில் அங்கமாகிவிடுவார்கள்; ஆனால் தானாய் மனமுவந்து பலிசெலுத்துவதில் முன்னேற தவறிப்போகும் அர்ப்பணம்பண்ணினவர்களோ, புதுச்சிருஷ்டிகளெனத் தங்களது நீதிமானாக்கப்படுதலைத் தக்கவைத்துக்கொள்வார்கள், ஏனெனில் இவர்கள் தங்களது பரீட்சையின்போது, இறுதியில் உண்மையுள்ளவர்களென நிரூபிக்கப்படுவார்கள்.

ஆகையால் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய "திரள் கூட்டத்தாரும்," முற்காலங்களிலுள்ள விசுவாச வீரர்களும், நிஜமான லேவியர்களாகிய "விசுவாச வீட்டாரின்" அங்கத்தினர்களாகவே இன்னமும் காணப்படுகின்றனர்; ஆனால் இதே நிஜமான லேவி வீட்டாரில் காணப்பட்ட கிரீடமுடையவர்களாகிய "சிறு மந்தையினரோ," மகிமையில் "இராஜரிக ஆசாரியக்கூட்டத்தார்" எனும் நிலைமைக்குக்

கடந்துபோய்விடுகின்றனர். ஆயிர வருஷ யுகத்தின்போது அந்த நிஜமான லேவியர்களில் சிலர் (திரள் கூட்டத்தார்) ஆவிக்குரிய தளத்தில் ஊழியம் புரிவார்கள்; ஆனால் மற்றவர்களாகிய முற்பிதாக்களோ - முற்காலத்து விசுவாச வீரர்களோ பூமிக்குரிய தளத்தில் காணப்பட்டு, ஊழியம் புரிவார்கள். பூமிக்குரிய தளத்தில் இவர்களது ஊழியம் நிறைவடையும்போது, இவ்வகுப்பார் பிற்பாடு பரலோக தளத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்று அனுமானிப்பதைவிடச் சிறந்த வேறு ஏதேனும் அனுமானம் இருக்கக்கூடுமோ? இக்கருத்தானது, நிழலான லேவியர்களுக்குத் தேசத்தில் - பூமியில் சுதந்தரவீதம் எதுவும் அருளப்படவில்லை என்ற உண்மையினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. இப்படியாக இவர்கள் பூமிக்குரிய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளப்போவதில்லை, மாறாக ஆவிக்குரிய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்று தேவன் முன்னதாகவே சுட்டிக்காண்பித்துள்ளார்.

ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவின்போது, சாத்தான் கட்டவிழ்க்கப்படுவான் என்றும், சீர்ப்பொருந்தப்பட்டுள்ள உலகத்தின் மீது சோதனையைக் கொண்டுவர அனுமதிக்கப்படுவான் என்றும், அவனது தவறான போதனையின்கீழ் மனுக்குலத்திலுள்ள சிலர் தெய்வீக அதிகாரத்தை எதிர்ப்பவர்களாகி, "பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துக் கொள்வார்கள்" என்றும் வெளிப்படுத்தல் 20:7-9 வரையிலான வசனங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. பரிசுத்தவான்களுடைய பாளயம் எனும் வார்த்தைகளானது, ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவின்போது மனுக்குலம் யாவரும் மனித சுபாவத்தின் பூரணத்தை எட்டியிருக்கையில் (பூரணமடையவில்லையெனில் அவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்), பரிசுத்தவான்களுடைய இந்தப் பாளயத்துக்கும், பொதுவான மனுக்குலத்திற்கும் இடையில் தொடர்ந்து வேறுபாடு காணப்படுமெனச் சுட்டிக்காட்டுவதாகத் தோன்றுகின்றது. அனைவரும் பூரணப்பட்டிருக்க, இன்னும் ஏன் வேறுபாடு? காரணம் மனுக்குலம் பூரணத்தினை எட்டியிருப்பினும், முற்பிதாக்கள் மீதமுள்ள பூரணமான சந்ததியினிடமிருந்து ஏதோ ஒருவிதத்தில் வேறுபட்டவர்களாக, தனிப்பட்டவர்களாகக் காணப்படுவார்கள் என்பதை வெளிப்படுத்துவதே தெய்வீக நோக்கமாகக் காணப்படுகின்றது என்று நாங்கள் நம்புகின்றோம். அப்போதுதான் முற்பிதாக்கள் பூமிக்குரிய சரீரத்தினின்று, ஆவிக்குரிய சரீரத்திற்கு மாற்றப்படுவார்களென நாங்கள் புரிந்திருக்கின்றோம்.

## மேகம்போன்ற திரளான சாட்சிகள்

நம்முடைய இப்பாடத்தின் கருப்பொருளானது, எபிரெயர் 12-ஆம் அதிகாரத்தினுடைய முதலாம் வசனத்தில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது; அவ்வசனத்தில் அப்போஸ்தலன்: "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான (இரத்த) சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்று கூறியுள்ளார்.

எத்துணை பிரம்மாண்டமான புத்திமதி! இதற்குச் செவிகொடுப்போமாக! விசுவாசத்திற்கு, அதற்கே உரிய முக்கியத்துவத்தினைக் கொடுப்போமாக! தேவனுடைய வார்த்தைகளைக்கொண்டும், நமக்கு அன்றாடம் வரும் நமக்கான அனுபவங்களிலுள்ள தெய்வீக வழிநடத்துதல்கள் யாவையும் கொண்டும், நமது விசுவாசத்தினைப் போஷித்திடுவோமாக! இப்படியாக நமது மாபெரும் பிரதான ஆசாரியனின், நமது இரட்சிப்பினுடைய அதிபதியின், நமது தலைவரின், நமது முன்னோடியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிடுவோமாக; இவரது பலி நமது விசுவாசத்திற்கான அஸ்திபாரமாக

இருக்கின்றது; "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே" அவர் நம்மை முதலாம் உயிர்த்தெழுதலில் தம்மிடமாகச் சேர்த்துக்கொள்ளும்போது, மகிமையில் இவரது வல்லமை நமது விசுவாசத்தினை நிறைவடையச் செய்யும்.

---

R4598

## முற்பிதாக்கள் ஜீவனுக்கான பரீட்சையின்கீழ்க் காணப்பட்டார்களா?

முற்பிதாக்கள் ஜீவனுக்கான அல்லது மரணத்திற்கான பரீட்சையில் காணப்படவில்லை; இவர்களுக்கு மரணத்தீர்ப்புக் கொடுக்கப்படத்தக்கதாக, இவர்கள் ஒருபோதும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குரிய அறிவுப்பூர்வமான வாய்ப்புள்ள நிலைமையின்கீழ்க் கொண்டுவரப்பட்டதில்லை. நமது கர்த்தர் வருவதுவரையிலும், அறிவு மற்றும் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்குரிய இம்மாதிரியான நிலைமை காணப்பட்டதில்லை. "கிருபையும், சத்தியமும் இயேசு கிறிஸ்துவினால் உண்டானது;" "அவர் ஜீவனையும், அழியாமையையும் வெளியரங்கமாக்கினார்." இவைகள் நமது கர்த்தருடைய நாட்களுக்கு முன்னதாக வெளியரங்கமாக்கப்படவில்லை; இக்காலங்களில் காணப்படும் இத்தகைய பொறுப்பானது அக்காலங்களில் காணப்படவில்லை.

ஒருவிதத்தில் பார்க்கும்போது, யூத ஜனங்கள் நிழலான விதத்தில் நீதிமானாக்கப்பட்டிருந்தனர்; மேலும் ஜீவனா அல்லது மரணமா எனும் பரீட்சையிலும்கூட நிழலான விதத்தில் காணப்பட்டனர்; ஆனாலும் அது உண்மையாகவே நித்திய ஜீவன் மற்றும் மரணமாக இருக்கவில்லை, ஏனெனில் இவர்களால் நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடியாது; ஆகையால் இதன் கீழ் இவர்கள் ஒருபோதும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதில்லை என்பதைத் தேவன் முன்னமே அறிந்திருந்தார்; ஆகவே நியாயப்பிரமாணத்தினுடைய சாபத்தினின்று தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ளத்தக்கதாக இவர்கள் ஏதேனும் முயன்று பார்ப்பதைப் பொருட்படுத்தாமலேயே, இவர்கள் இதனின்று மீட்கப்படத்தக்கதாகத் தேவன் முன்னமே ஏற்பாடும் பண்ணிவிட்டார். ஆகையால் இவர்கள் ஜீவன் அல்லது மரணத்திற்கான பரீட்சையின்கீழ் நிழலான அல்லது அடையாளமான விதத்தில் மாத்திரமே காணப்பட்டனர்.

முற்பிதாக்கள் "தேவனைப் பிரியப்படுத்தினார்கள்" எனும் சாட்சியினைப் பெற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றனர். தேவன் தம்முடைய திருவுளசித்தத்தினை இவர்களுக்கு நியாயப்பிரமாணமென அல்லது இவர்கள் செய்ய வேண்டிய கடமையெனக் கொடுக்கமுடிகிற நிலை வருவதற்கு முன்னதாகவே, இன்னுமாய்த் தமக்குக் கீழ்ப்படியுங்கள் என்று இவர்களுக்குச் சொல்ல முடிகிற நிலை வருவதற்கு முன்னதாகவே, கீழ்ப்படிந்தால் நித்திய ஜீவனை வாக்களிப்பதாக இவர்களுக்குச் சொல்ல முடிகிற நிலை வருவதற்கு முன்னதாகவே, இவர்கள் அவரது சித்தத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு, அதைச் செய்யவும் தொடங்கின விதத்தில், இவர்கள் தேவனைப் பிரியப்படுத்தினார்கள். உலகில் மீட்பானது அப்போது நிறைவேற்றி முடிக்கப்படாமலிருக்க, ஆபிரகாம் தேவனிடத்திலுள்ள தனது விசுவாசத்தினை வெளிப்படுத்தினார். கிறிஸ்து அப்போது வரவில்லை. ஆபிரகாம் அப்போது ஜீவனா அல்லது மரணமா எனும் பரீட்சையில் இல்லாமல் இருந்தும், தேவன்

அவருக்குத் தமது தயவினை அருளினார் மற்றும் தம்மைப் பிரியப்படுத்தினதாகத் தெரிவித்தார். மேலும் இவரும் சரி, மற்ற அனைத்து முற்பிதாக்களும் சரி, பரிபூரண மனுஷீகத்திற்குரிய இந்த உயிர்த்தெழுதலை, மேன்மையான ஓர் உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்வார்கள் என்று அவரது வார்த்தைகள் தெரிவிக்கின்றன. ஆனால் மனுஷீக பரிபூரணம் என்பது கிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஆளுகையின்கீழ் மாத்திரம் வரும் என்பதால், ஆயிர வருஷ யுகத்தின் முடிவுவரையிலும் முற்பிதாக்கள் முழுமையான விதத்தில் தேவனிடம் அறிமுகப்படுத்தப்பட முடியாது.

ஆகையால் ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் இராஜ்யமானது, பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்படும் காலத்திற்கு முன்புவரையில், இவர்கள் *முழுமையான விதத்தில் ஜீவனை உடையவர்களாய் இருக்கமாட்டார்கள்.* இதற்கிடையில் - அதாவது ஆயிர வருஷ காலத்தில், இவர்கள் "*மனுஷீக சுபாவத்தினுடைய பூரணத்தையும், இன்னுமாக மாபெரும் மத்தியஸ்தர் மூலம் மனுக்குலத்திற்குத் தேவனால் அருளப்படும் அனைத்து ஆசீர்வாதங்களையும் மாத்திரம்*" பெற்றிருப்பார்கள்.

ஆயிர வருஷ யுகம் முடிவதுவரையிலும், நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்களா என்று தீர்மானிக்கப்படுவதற்கு ஏதுவாய், முற்பிதாக்கள் தேவனுடன் உண்மையான மற்றும் தனிப்பட்ட உறவிற்குள் வரமாட்டார்கள்; ஏனெனில் அந்த யுகமானது, தற்காலத்திலுள்ள ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட வகுப்பாரைத் தவிர்த்து, மனுக்குலத்தாரில் யாரெல்லாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளப்போகின்றார்கள் என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகவே ஒதுக்கப்பட்ட காலப்பகுதியாக இருக்கும். ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனுக்குலம் யாவரும் சரீர பரிபூரணத்தினை எட்டியிருக்கும்போது, இவர்கள் நித்திய ஜீவன்பெற தகுதியானவர்களா அல்லது இல்லையா என்பது பிதாவினால் பரீட்சிக்கப்படும், அதாவது ஆதாம் பரிபூரணத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, இவர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரவானா அல்லது இல்லையா என்று பரீட்சிக்கப்பட்டது போன்றாகும்.

புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாடுகளின்கீழ் முற்பிதாக்களும் உலகத்தாரில் ஒரு பாகமாகக் காணப்படப்போவதினால், ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவு வரையிலும், இவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவதற்குரிய தங்களது பாத்திரத்தன்மை தொடர்புடைய தெய்வீக நீதியினை, தெய்வீக நீதிமன்றத்தின் முடிவினைப் பெறுவதில்லை; அதாவது உண்மையுள்ள மனுக்குலத்தாருக்கு நித்திய ஜீவன் எனும் மகா பலனைக் கொண்டுவருவதுபோல, முற்பிதாக்களுக்கும்கூடக் கொண்டுவந்திடும் அந்த யுகத்தினுடைய முடிவின்போதுள்ள பரீட்சையானது முடிவடைவதற்கு முன்புவரையிலும், முற்பிதாக்கள் நித்திய ஜீவனைப் பெறுவதற்குரிய தங்களது பாத்திரத்தன்மை தொடர்புடைய தெய்வீக நீதியினைப் பெறுவதில்லை.

---

R3245 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சுவாரசியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது

கேள்வி:-- முற்பிதாக்கள் பரம பிதாவினால் ஜீவனுக்கு ஜெநிப்பிக்கப்பட்டார்களா அல்லது நமது கர்த்தர் இயேசுவினால் ஜீவனுக்கு ஜெநிப்பிக்கப்பட்டார்களா? ஒருவேளை கர்த்தர் இயேசுவினால் என்றால், அவர்களுடைய நாட்களில் அவர் அப்போது இன்னமும் வராதிருந்தபோதும், பாவங்களுக்காகப்

பலியினை இன்னமும் ஏறெடுக்காதிருந்தபோதும், அவர்களுக்கு "நித்திய பிதாவாகுவதற்கு" அவசியமான எந்த முயற்சிகளும் எடுக்கப்படாதிருந்தபோதும், இது எப்படிச் சாத்தியம்?

பதில்:-- வேதவாக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள "ஜெநிப்பித்தல்" மற்றும் "பிறத்தல்" எனும் வார்த்தைகளானது, விசேஷமாய்ச் சுவிசேஷ யுக சபைக்குப் பொருந்தக்கூடியவையாகும்; இவ்வார்த்தைகள் புதிய ஜீவனின் சிறிய துவக்கத்தினையும், அதன் படிப்படியான வளர்ச்சியினையும் மற்றும் பரம சுபாவத்தின் முழுமையான பூரணத்திற்கு உயிர்த்தெழுவதில் உள்ள அதன் இறுதி பிறப்பினையும் விவரிக்கின்றன. நீங்கள் மேலே தெரிவித்துள்ள காரணங்களுக்காகவும், இன்னும் மற்றக் காரணங்களுக்காகவும் இவ்வுருவகமானது முற்பிதாக்களுக்குப் பொருந்துகிறதில்லை. இவர்கள் எதிர்க்கால ஜீவியம் தொடர்புடைய நம்பிக்கைகளினால் தேவன்பால் ஈர்க்கப்பட்டனர்; ஆனாலும், இது சம்பந்தமான வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்ளாமல் இருந்தனர்; ஆகையால், இவர்கள் உயிர்த்தெழுதலிலோ அல்லது வேறு ஏதேனும் தருணங்களிலோ ஆவிக்குரிய சுபாவத்திற்கு மாற்றம் அடைவது தொடர்புடைய எந்த நம்பிக்கைகளையும் பெற்றிருந்திருக்க முடியாது. ஆகையால் இவர்கள் இப்படியான எந்த ஆவிக்குரிய நம்பிக்கைகளுக்கோ, இம்மாதிரியான நிலைக்கோ ஜெநிப்பிக்கப் பட்டிருப்பார்கள் என்று கூறமுடியாது.

இவர்களுடைய நாட்களில் கிறிஸ்து பாவத்திற்கான தண்டனையினைக் கட்டித்தீர்க்கவில்லை எனும் உண்மையானது, இவர்களுக்கு அவர் ஜீவனளிப்பவராக இருப்பதற்குரிய வாய்ப்பினை மாத்திரம் சாத்தியமற்றதாக்கிடாமல், அக்காலமட்டும் யார் ஒருவரும் இவர்களுக்கு ஜீவனளிப்பவராகுவதற்குரிய வாய்ப்பினையும் சாத்தியமற்ற ஒன்றாக்கினது. ஆகையால் இவர்கள் தங்களுக்குள் புதிய ஜீவனைத் துவங்கப்பெற்றவர்களெனக் கூறப்படமுடியாது. மாறாக தொலைவிலிருந்து, புதிய ஜீவனை உய்த்துணர மாத்திரம் செய்தார்கள்; விசுவாசத்தினால் "தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டனர்;" புதிய ஜீவனை இவர்கள் உண்மையாகவும் பெற்றிருக்கவில்லை; கருதப்பட்ட நிலையிலும் பெற்றிருக்கவில்லை; இவர்கள் மேசியாவிற்காகக் காத்திருக்க வேண்டும், ஏனெனில் அவரில்தான் அனைத்து வாக்குத்தத்தங்களும் மையம்கொண்டிருக்கின்றன. மாம்சத்தின்படி தங்களது வம்சத்தில் அவர் பிறப்பார் என்ற நம்பிக்கைக்கொண்டிருந்தனர்; ஒருவேளை இவர்களால் திவ்விய வார்த்தைகளையும், திட்டத்தையும் புரிந்துகொள்ள முடிந்திருந்தால், மேசியாவின் பிதாக்களாய்த் தாங்கள் இருப்பது ஒருபக்கம் இருக்க, ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நியமிக்கப்பட்ட காலங்களில் தாங்கள் அவரது பிள்ளைகளாகிட வேண்டும் - அதாவது நித்திய பிதாவென அவரிடத்திலிருந்து ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருப்பார்கள். (சங்கீதம் 45:16)

இவர்கள் எதிர்கால ஜீவனுக்கு ஜெநிப்பிக்கப்பட்டுள்ளனர் என்று சொல்லப்படாமல், இதற்குப்பதிலாக தெய்வீக வாக்குத்தத்தங்கள் மீது கொண்டிருந்த விசுவாசத்தின் மூலம், இவர்களுக்கு எதிர்கால ஜீவன் உறுதிப்படுத்தப்பட்டது என்றே இவர்களைக்குறித்துக் கூறப்பட்டுள்ளது.

---

R4330

## விசுவாச உடன்படிக்கையின்கீழ் முற்பிதாக்கள்

முற்பிதாக்கள் எந்த உடன்படிக்கையின்கீழ்த் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள் என்ற கேள்வி எழும்பலாம். ஏனெனில் இவர்கள் கிறிஸ்துவுக்கும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்குரிய வாய்ப்புகள் கிடைப்பதற்கும் முன்புள்ள காலங்களில் மரித்துப்போய்விட்டபடியால், இவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் -

தெரிந்தெடுக்கப்பட்ட சபையில் அங்கத்தினர்களாகிடுவதற்குரிய பரம அழைப்பினைப் பெற்றுக்கொள்ள வில்லை. இதைக்குறித்து அப்போஸ்தலன் எபிரெயர் 11:39-40-ஆம் வசனங்களில் குறிப்பிடுகின்றார். இவர்கள் "தேவனைப் பிரியப்படுத்தியிருந்த போதிலும்," இவர்கள் நம்மையல்லாமல் - கிறிஸ்துவை யல்லாமல் பூரணராகுவதில்லை என்று நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார். திவ்விய ஒழுங்கில் சபை தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாய் இருப்பார்கள். "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" (யாக்கோபு 1:18). அப்போஸ்தலனுடைய பெயர்ப்பட்டியலில் ஜலப்பிரளயத்திற்கு முன்னதாகவும், ஆபிரகாமின் உடன்படிக்கை ஏற்படுத்தப்படுவதற்கு முன்னதாகவும் வாழ்ந்த ஆபேல் மற்றும் ஏனோக்கும் காணப்படுகின்றனர். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் காலங்களில் வாழ்ந்ததினிமித்தம், இவ்வுடன்படிக்கையின கீழ்க் காணப்பட்டவர்களில் சிலரும்கூட அப்பட்டியலில் இடம்பெறுகின்றனர். சாராள், ஆகார் மற்றும் கேத்தூராளால் அடையாளப்படுத்தப்படும் மூன்று மாபெரும் உடன்படிக்கைகள் வாரியாக, இந்த முற்பிதாக்களை நாம் எப்படி வகைப்படுத்திட முடியும்?

ஆபிரகாமின் உடன்படிக்கைக்கும், அதோடுகூட வழங்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கும் இடையிலுள்ள முக்கியமான வித்தியாசத்தினை நாம் அடையாளம் கண்டுகொள்கையில், காரியம் மிகவும் எளிமையானதாகிவிடும். ஆபிரகாமின் உடன்படிக்கையானது விசுவாசம் சம்பந்தப்பட்டது; கிரியைகள் சம்பந்தப்பட்டதில்லை. நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, விசுவாசம் சம்பந்தப்பட்டதாயிராமல், கிரியைகள் சம்பந்தப்பட்டதாய் இருந்தது. அப்போஸ்தலன் கூறுகின்றதுபோன்று, "இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்" என்பதே நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய நிபந்தனையாகக் காணப்பட்டது (உரோமர் 10:5). சாராளின் உடன்படிக்கையானது கிரியைகள் சம்பந்தமானதாய் இராமல், விசுவாசம் சம்பந்தமானது என்றும், ஆனாலும் எங்கு விசுவாசம் சரியானதாகக் காணப்படுகின்றதோ, அங்குக் கிரியைகளானது "விசுவாசத்திற்கு" சான்று பகரும் என்றும் நாம் நினைப்பூட்டப்படுகின்றோம்; அதாவது அது ஒருவேளை பூரணமான கிரியையாக இல்லை யென்றாலும், ஒருவேளை நாம் கிரியைகளினால் நியாயந்தீர்க்கப்படுவோமானால், நாம் குற்றவாளிகளெனத் தீர்க்கப்படுவோம் என்றபோதிலும், அக்கிரியைகளானது "விசுவாசத்திற்கு" சான்று பகரும் என்றும் நாம் நினைப்பூட்டப்படுகின்றோம். முழு யூதத் தேசத்தாரும் "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளாகிய" உடன்படிக்கையில் தவறிப்போனவர்களாகக் காணப்பட்டனர்; எனினும் அந்த ஜனங்களில் சில நபர்கள், நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு அப்பாற்பட்டதாய்க் காணப்பட்ட தங்களது விசுவாசத்தின் மூலம் எழுந்து, நியாயப்பிரமாண உடன்படிக்கையின்மீது நம்பிக்கை வையாமல், ஆரம்பத்திலிருந்த இரக்கத்தின், கிருபையின் உடன்படிக்கைமீது - சாராளின் உடன்படிக்கைமீது நம்பிக்கை வைத்தவர்களாகவே காணப்பட்டனர். இந்த முற்பிதாக்களே அப்போஸ்தலனால் குறிப்பிடப்படுகின்றனர். விசுவாசத்தினாலேயே இவர்கள் இப்படிச் செய்தார்கள் என்றும், சகித்தார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். இவர்களது கிரியைகளின்படி இவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் குற்றவாளிகளெனத் தீர்க்கப்பட்டனர்; ஆனால் இவர்களது விசுவாசத்தின் காரணமாய், இவர்கள் சாராளின் உடன்படிக்கையின்படித் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்; அதுவும் முதலாவதாக வாக்களிக்கப்பட்ட வித்து வந்து, அந்த உடன்படிக்கையினுடைய இரத்தம் சிந்தப்படுவதற்கு முன்பு வரையிலும், இவர்கள் சாராளின் உடன்படிக்கைக்கீழ்த் தங்களுக்கான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ள இயலாது என்றபோதிலும், இவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். இதுபோலவே ஏனோக்கும், ஆபேலும் தங்களது விசுவாசத்தின் காரணமாய்த் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ்

உண்மையுள்ளவர்களாய் இருந்தவர்களின் பெயர்களோடுகூடப் பட்டியலில், தெய்வீகத் தயவினைப் பெற்றவர்களாகவும், சாராளின் உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாகவும் பார்க்கப்படுகின்றனர்; ஏனெனில் இவர்கள் ஆபிரகாமினுடைய நாட்களுக்கு முன்பு வாழ்ந்தவர்களாய் இருந்த போதிலும், ஆபிரகாமின் விசுவாசத்தினை உடையவர்களாய் இருந்தனர்; அதாவது தம்மை அன்புகூருபவர்களுக்கும், தமது தயவைத் தேடுபவர்களுக்கும் தேவன் அருள சித்தமாயிருக்கின்ற கிருபைக்காக வேண்டி, இவர்கள் ஆபிரகாமைப் போலவே தேவனிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

புது உடன்படிக்கையானது, உண்மையாகவே ஒரு புது நியாயப்பிரமாண உடன்படிக்கையாகக் காணப்படும் அல்லது நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கடுத்த ஒரு புது உடன்படிக்கையாகக் காணப்படும். பழைய அல்லது முதலாம் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது திருப்தி தராததாகவும், இஸ்ரயேலுக்குப் போதுமாய் இராததாகவும் காணப்பட்டது; இப்படி இருந்ததற்குக் காரணம் - இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு அடிப்படையாய் உள்ள தெய்வீகப் பிரமாணம் குறையுடையது என்பதினால் அல்ல; இது நியாயமற்ற கோரிக்கை என்பதினாலும் அல்ல, மாறாக மனுஷர்கள் அபூரணர்களாகக் காணப்பட்டனர்; மனுஷர்கள் "பாவத்தில் கர்ப்பந்தரிக்கப்பட்டு, துர்க்குணத்தில் உருவானவர்கள்" ஆவார்கள்; மேலும் ஆதாமினுடைய மீறுதல் காரணமாக ஏற்கெனவே மனுஷர்கள் மரண தண்டனையின்கீழ்க் காணப்படுகின்றனர். நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு, மோசே எனும் உண்மையுள்ள மத்தியஸ்தர் காணப்பட்டார்; இவர் தேவனுக்கும், இஸ்ரயேலர்களுக்கும் உண்மையுள்ள வராய்க் காணப்பட்டார்; ஆனாலும் இவரது சொந்த ஜீவனும் இழந்துபோகப்பட்டிருந்ததினால், இவர் திராணியில்லாதவரானார். ஆகையால் பழைய நியாயப்பிரமாணத்தினுடைய இடத்தினை புது நியாயப்பிரமாண உடன்படிக்கையானது எடுத்துக்கொள்ளத்தக்கதாகத் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார் மற்றும் ஒரு புது மத்தியஸ்தரையும் அருளியுள்ளார்; இவர் ஏற்கெனவே தமது ஜீவனை மீட்கும் விலையெனக் கொடுத்துவிட்டார் - இவர் தலையாகிய இயேசு மற்றும் சரீரமாகிய சபை ஆவார்கள். இந்தப் பலியின் நிறைவு அண்மையில் உள்ளது. தலை மற்றும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்கள் அநேகர், புதுச்சிருஷ்டிகளென ஏற்கெனவே திரைக்கு அப்பக்கம் கடந்துபோயுள்ளனர். சீக்கிரத்தில் சரீரத்தினுடைய கடைசி அங்கத்தினனும் இப்படியாக மறுரூபமடைந்திடுவார்; பின்னர் புது உடன்படிக்கையின் இரத்தமானது, "ஜனங்கள் அனைவரின் பாவத்திற்காக" தெளிக்கப்படும் - அதாவது உடன்படிக்கையின் ஜனங்களாகிய இஸ்ரயேலருக்காகத் தெளிக்கப்படும்; "முந்தி யூதர்களுக்குச் சொந்தமாயிருந்த சாராளின் உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதங்களில் பங்கடைவதற்கு இப்பொழுது (புறஜாதிகளாகிய) நாம் சிலாக்கியமடைந்திருப்பது போன்று, அனைத்து ஜனங்களும் இஸ்ரயேலின் புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களில் பங்காளிகளாகுவதற்கென்று, கதவு திறக்கப்படும். இந்தத் தெளிக்கப்படுதலானது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும்; மேலும் அது முழு உலகத்தினுடைய பாவங்களை நிவிர்த்திச் செய்திடுவதற்குத் திராணியுள்ளதாயிருக்கும். இது வேதவாக்கியங்களிலும், "விசேஷித்த பலிகளுக்கடுத்த" நிழல்களிலும், அதிகமாகவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எபிரெயர் 9:23)

உடனே மாபெரும் தீர்க்கத்தரிசியின் தலை மற்றும் அங்கத்தினர்கள் - மாபெரும் பிரதான ஆசாரியனின் தலை மற்றும் அங்கத்தினர்கள் - மாபெரும் நியாயாதிபதியின் தலை மற்றும் அங்கத்தினர்கள் - மகா இராஜாவின் தலை மற்றும் அங்கத்தினர்கள் இஸ்ரயேலுடன் நடவடிக்கையினைத் தொடங்குவார்கள் மற்றும் இஸ்ரயேல் மூலமாய் உலகத்தைக் கையாளுவார்கள். இவர்கள் விருப்பம் காட்டும் யாவரையும் ஆளுவார்கள், ஆசீர்வதிப்பார்கள், போதிப்பார்கள் மற்றும்

சீர்த்தூக்கிவிடுவார்கள். "அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" (அப்போஸ்தலர் 3:23). புது நியாயப்பிரமாண உடன்படிக்கையானது அப்படியே பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கைபோன்று செயல்படும்; ஒரே வித்தியாசம் என்னவெனில், அதை முத்திரிக்கும் "விசேஷித்த பலிகளானது" முழு ஆற்றலுடையதாகவும், வருஷந்தோறும் திரும்பத்திரும்பச் செலுத்தப்பட வேண்டியதன் அவசியம் இல்லாமலும் காணப்படும்; அதன் மத்தியஸ்தருடைய வல்லமையும், மகிமையும் மேன்மையானதாகவும் காணப்படும்; மேலும் இதன் காரணமாய் அவரது வேலையினுடைய பலன்களும் மகா பெரியதாயும், நிலையானதாகவும் காணப்படும்.

இதற்குக் கூடுதலான சாட்சியாக வெளிப்படுத்தின விசேஷத்தின் வார்த்தைகள் காணப்படுகின்றன; வெளிப்படுத்தின விசேஷமானது ஆயிர வருஷ யுகத்தில், நீதி மற்றும் இரக்கத்தினுடைய மாபெரும் வெள்ளைச் சிங்காசனம் காணப்படுவதையும், அதற்கு முன்பாக மரித்தோராகிய சிறியோர் மற்றும் பெரியோர் யாவரும் நிற்பார்கள் - பரீட்சைக்காக நிற்பார்கள் என்பதையும் காண்பிக்கின்றது; அவர்கள் பாவிகளா அல்லது இல்லையா என்பதைப் பார்க்க அல்ல, ஏனெனில் அது தெரிந்த காரியமேயாகும். அனைவருமே பாவிகளாய் இருக்கின்றனர். அவர்களைத் தேவன் மன்னிப்பாரா அல்லது இல்லையா என்பதைப் பார்க்கவும் அல்ல, ஏனெனில் அதுவும் தெரிந்த காரியமேயாகும் - கிறிஸ்துவின் பலியானது "முழு உலகத்தின் பாவங்களுக்கான முழுமையான நிவிர்த்தியென" அப்போது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும். அவர்களது நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை என்பது நமக்கு இருந்ததுபோன்றே, அவர்கள் தேவனுடன் முழுவதும் இசைவான நிலைக்குள் வருவார்களா இல்லையா என்பதையும், சந்தோஷம் மற்றும் நித்திய ஜீவனுக்கான அவரது ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்களா அல்லது "ஜனங்கள் மத்தியிலிருந்து அறுப்புண்டு போவார்களா" என்பதையும் தீர்மானிப்பதாகக் காணப்படும். அவர்கள் விசுவாசத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் நியாயப்பிரமாணம் மற்றும் கிரியைகளுக்கடுத்த புது உடன்படிக்கையின் கீழ்க்காணப்படுவார்கள். எழுதியிருக்கிறபடி "யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்." (வெளிப்படுத்தல் 20:13)

அவர்கள் படிப்படியாக மனதிலும், சரீரத்திலுமுள்ள அபூரணங்களினின்று பூரணத்திற்கு வரவும், அவர்களுக்கான தரநிலையாக அல்லது பரீட்சையாகக் காணப்படப்போகும் பூரண கிரியைகளுக்கு நேராகக் கடந்துவரவும் உதவப்படுவார்கள். ஆனால் நேர்மாறாக சுவிசேஷ யுக சபையும், முற்பிதாக்களும், அவர்களது கிரியைகளின்படி நியாயந்தீர்க்கப்படாமல், அவர்களது விசுவாசத்தின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள் - எனினும் அவர்களால் காண்பிக்க முடிந்த கிரியைகளும், அவர்களது விசுவாசத்திற்கான சான்றாக எதிர்ப்பார்க்கப்படுகின்றது. நாமோ விழுந்துபோன சுபாவத்தினுடைய பழுதுகளிலிருந்து நீங்கப்பெற உதவப்படுகிறதில்லை, மாறாக அவைகளினின்று தூக்கியெடுக்கப் பட்டவர்களென உடனடியாகக் கருதப்படுகின்றோம் அல்லது கிருபையின் வஸ்திரத்தினால் மூடப்பெற்றவர்களாகக் காணப்படுகின்றோம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள உண்மைகளையும், கருத்துகளையும் மனதில் வைத்துக்கொள்ளும் போது, இது நமது இப்பாடத்தினை, அதாவது உடன்படிக்கைகள் ஒன்றுக்கொன்றும், மனுக்குலத்தோடும் கொண்டிருக்கும் தொடர்பினைப் புரிந்துகொள்வதில் நமக்குப் பெரிதும் உதவிச் செய்திடும். முதலாம் உடன்படிக்கையானது மனுக்குலம் அனைத்தையும் சென்றடையக்கூடிய ஆசீர்வாதம் ஒன்றினை வாக்களித்தது - அதாவது தெய்வீகத் தீர்ப்பினின்றுள்ள ஒரு மீட்பினையும், விசுவாசம் மற்றும்

இருதயத்தினுடைய கீழ்ப்படிதல் மூலமாகத் தேவனுடன் இசைவாய் இருக்கும் நிலைமைக்குத் திரும்பிடுவதற்குரிய வாய்ப்பினையும் வாக்களித்தது. இந்த வாக்குத்தத்தமானது சில விதங்களில், நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி அதன் நிறைவேறுதலை அடைந்துள்ளது. தம்மில் விசுவாசம் வைத்து, தமது சித்தத்திற்கு இசைவாய் வாழ்ந்திட வேண்டும் என்று இருதயப்பூர்வமாய் வாஞ்சிப்பவர்கள் யாவரையும் தேவன் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டுள்ளார்; ஆம்! இத்தகையவர்களை வழிநடத்த அல்லது இழுத்துக்கொள்ள அவர் விருப்பமுள்ளவராகவும் இருக்கின்றார். இந்த விதத்தில் முதலாம் உடன்படிக்கையானது, ஏற்கெனவே ஜலப்பிரளயத்திற்கு முன்புள்ள காலங்களில் செயல்பட்டுள்ளது; மேலும் ஜலப்பிரளயம் முதற்கொண்டும், ஆபிரகாமிடத்திலும், இன்னுமாகக் கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசத்தின் ஆவியினைக் கொண்டிருந்த இஸ்ரயேலர் யாவரிடத்திலும் மற்றும் இந்தச் சுவிசேஷயுகத்திலும், சகல ஜாதிகள் மற்றும் பாஷைக்காரர்கள் மத்தியிலுள்ள மனுக்குலத்தார் மத்தியிலும் செயல்பட்டுள்ளது. ஆனால் மனுஷ சந்ததியில் வெகு சிறிய பகுதியினரே ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொண்டனர், ஏனெனில் வெகு சிலரே "ஆபிரகாமின் விசுவாசத்தினை" செயல்படுத்தும் நிலைமையில் காணப்பட்டனர்.

நியாயப்பிரமாண உடன்படிக்கை கூட்டி வழங்கப்பட்ட காரியமானது, ஆரம்பத்தில் அனுகூலமற்றதுபோன்று தோன்றினது; அதுபோலவே புது உடன்படிக்கையினை வழங்கும்போதும்கூட, இது முதலாம் உடன்படிக்கைக்கு அல்லது சாராளின் உடன்படிக்கைக்கு அல்லது சகல கிருபை பொருந்தின உடன்படிக்கைக்குப் பாதகம்போன்று அல்லது அடக்குவதுபோன்று அல்லது வரையறைக்குட்படுத்தப்படுவதுபோன்று தோன்றலாம்; எனினும் இப்படியாக உண்மையில் காணப்படுவதில்லை. நியாயப்பிரமாண உடன்படிக்கையானது இந்த ஜனங்களைக் குற்றவாளிகளென நியாயந்தீர்த்தது, காரணம் அவர்கள் விசுவாசமற்றுக் காணப்பட்டார்கள்; எனினும் இந்த ஜனங்களில் உள்ள அநேகருக்கே, அதாவது வரையறைகள், சிட்சைகள், எச்சரிக்கைகள் முதலானவைகளை உடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையினைப் பெற்றிராத மற்ற தேசத்தார் மத்தியிலிருந்து உருவானவர்களைவி,ட இந்த ஜனங்களிலுள்ள அதிகமானவர்களுக்கே ஆசீர்வாதம் ஒன்று கடந்துவந்ததாய் இருந்தது. இதைக்காட்டிலும் அதிகமாய்ப் புது உடன்படிக்கையானது வெற்றிகரமாய்க் காணப்படும். இது சாராளின் உடன்படிக்கையினுடைய கிருபையின் ஆளுகையினை, தொடர்ந்து வரும் ஓர் உடன்படிக்கையாக இருந்து, நியாயப்பிராணத்தினுடைய ஓர் ஆளுகையாகக் காணப்படும். "நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்குநூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டுபோகும்." (ஏசாயா 28:17)

அப்போது மீட்பரும், அவரது பின்னடியார்களும் அடிக்கப்படும்படிக்குக் கொண்டுபோகப்படும் ஆடுகள்போன்று இருப்பதில்லை, மனுஷர் மத்தியில் வையைப்படுபவர்களாக இருப்பதில்லை; மாறாக இவர்கள் மகிமையினாலும், கனத்தினாலும், அழியாமையினாலும் தரிப்பிக்கப்பட்டுள்ள இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் காணப்படுவார்கள்; மேலும் இவர்கள் முன்பு "முழங்கால் யாவும் முடங்கும், நாவு யாவும் தேவனுடைய மகிமையினை அறிக்கைப்பண்ணும்" (உரோமர் 14:11). இராஜா நீதியில் ஆளுகை செய்வார் மற்றும் பிரபுக்கள் பூமியிலே நியாயத்தீர்ப்பினை நடப்பிப்பார்கள்.

அக்காலத்தில் விசுவாசமானது, தரிசித்து நடப்பதற்கு இடம்கொடுக்கும்; திராணிக்கேற்ப கிரியைகள் புரிதல் என்பது பரீட்சையாகக் காணப்படும்; செய்ய முடிகிற நிலைக்குக் குறைவாய்ச் செய்யப்படும் அனைத்தும் - அடிகளையும், நீதியில் திருத்தப்படுதலையும் கொண்டுவருகின்றதாய் இருக்கும். அந்த நியாயப்பிரமாணத்தின் ஆளுகையும், நற்கிரியைகளும் இப்படியாக ஒவ்வொரு தனிநபரின் நிலைமைக்கும் உகந்ததாய்க் காணப்படும்; மேலும் இதன் விளைவு என்பது பிரம்மாண்டமாய்க் காணப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம் - அதாவது கோடிக்கணக்கானவர்கள் பரிபூரணத்திற்கு, தேவனுடன் இசைவான நிலைக்குக்கொண்டுவரப்படுவார்கள். புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கையானது, ஆபிரகாமின் (சாராள்) உடன்படிக்கையினைச் சுருக்கிப்போடாமல், அதன் நீட்டிப்பாகக் காணப்பட்டு, அதன் ஆசீர்வாதங்களை மிகப் பரந்த அளவின்படியான செயலாக்கத்திற்கு எடுத்துச்செல்லும். முதலாம் உடன்படிக்கையானது விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலைக் காட்ட முடிபவர்களையும் மற்றும் அதைச் செயல்பாட்டில் காட்டுபவர்களையும் இப்பொழுது கூட்டிச்சேர்த்துக் கொண்டிருக்கின்றது. இதன் பயனானது, ஒருவேளை புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கை கூட்டி வழங்கப்படாமல் இருந்திருந்தால், முடிவடைந்து போயிருக்கும்; விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் இன்மையினைப் பொருட்படுத்தாமல் இந்தப் புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கையானது, உலகத்தைக் கையில் எடுத்துக்கொள்ளும் - சிட்சைகள் மற்றும் அறிவுரைகள் மூலமாய்க் கீழ்ப்படிதலையும், அறிவையும் கட்டாயமாக்கிடும்; மேலும் படிப்படியாக அவர்களில் கூடுமானமட்டும் அதிகமான பேர்களில், ஆபிரகாமினுடைய இருதய-கீழ்ப்படிதலை வளர்த்து, மற்றவர்களை அழித்துவிடும். இப்படியாக, "விசுவாசமுள்ளவர்களின் தகப்பனாகிய" ஆபிரகாம், புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின்கீழ் "அநேகம் ஜாதிகளின் தகப்பனாக" காணப்படுவார் - கடற்கரை மணலத்தனையான திரளான ஜனங்களுக்குத் தகப்பனாக இருப்பார் - இன்னுமாக விசுவாசம் மற்றும் கிருபையினுடைய ஆதி சாராளின் உடன்படிக்கையின்கீழ் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுபவர்களுக்கும் தகப்பனாக இருப்பார்.

மாம்சீக மற்றும் ஆவிக்குரிய விசுவாசத்தின் சந்ததியினரைத் தெரிந்தெடுத்தப் பிற்பாடு, ஆதி உடன்படிக்கையினுடைய செல்வாக்கானது, இவர்கள் வாயிலாக, புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கை மூலம், நம்மால் கற்பனைப்பண்ணி பார்க்கமுடிகின்ற வேறெந்த வழிமுறையினைவிட, மிக அதிகமான எண்ணிக்கையிலுள்ளவர்களை ஆசீர்வதிக்கும் ஒன்றாகக் காணப்படும் என்று நாம் பார்க்கின்றோம். இப்படியாக மனுஷ மனதினால் திட்டம்பண்ண முடிகிற எந்த ஓர் ஏற்பாட்டினைக்காட்டிலும், தமது ஏற்பாடுகள் எவ்வளவு பெரியதாய் இருக்கின்றதெனக் கர்த்தர் மறுபடியுமாகக் காண்பித்துத் தருகின்றார். நிச்சயமாகவே எந்த மாம்சமானவனும், அவருக்கு முன்பு மேன்மைப்பாராட்ட முடியாது. அவரது திட்டங்களையும், அவரது நோக்கங்களையும், அவரது வழிமுறைகளையும்குறித்து நாம் அதிகமதிகமாய்ப் பார்க்கும்போது, நாம் அவரை அதிகமாய் மகிமைப்படுத்துகின்றவர்களாகவும், நம்முடைய ஒன்றுமில்லா, அற்பமான நிலையினை உணர்ந்துகொள்பவர்களாகவும் அதிகம் காணப்பட வேண்டும்!

R5188

# முற்பிதாக்கள்
## எபிரெயர் 11:1-19

"எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள்; நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்."

(சங்கீதம் 22:4)

இப்பாடத்தில் பரிசுத்த பவுல் அடிகளார், முற்காலங்களில் விசுவாசத்தினைக்கொண்டு செய்யப்பட்ட அதிசயங்களைக்குறித்த தெளிவான காட்சிகளை வெளிக்கொணர்ந்துள்ளார்; இன்னுமாக அந்த விசுவாசப் போர்களைத்தொடுத்த கதாநாயகர்கள் கொஞ்சம்பேரின் பெயர்ப்பட்டியலைக் கொடுக்கின்றார்; மேலும் இவர்களது வெற்றியினுடைய அம்சத்தினைக்குறித்தும் சுருக்கமான வார்த்தைகளில் வண்ணம் தீட்டியுள்ளார். இவரது ஆய்வுப்பொருளின் விரிவான அடித்தளம் இவ்வாராய்ச்சியினுடைய முதலாம் வசனத்தில் காணப்படுகின்றது: "விசுவாசமானது நம்பப்படுகிற வைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரெயர் 11:1). தண்ணீரானது பனிக்கட்டியாக உறைந்த நிலைமையில், அதன்மேல் நம்மால் நடந்துபோக முடியும், ஆனால் அது திடப்பொருளாய் இராத நிலைமையில், அதன்மேல் நம்மால் நடந்துபோக முடியாது என்பது போலவே, நம்பிக்கை என்பதும் வலுவான விசுவாசமாக உறைந்துபோய், உறுதியடையாதது வரையிலும், சாதாரணமான நம்பிக்கையானது நம்முடைய விசுவாசத்திற்கும், நாம் முன்னேறிச் செல்வதற்கும் ஓர் அஸ்திபாரமாகிடுவதற்குப் போதுமானதாய் இராது.

இப்படியாக நாம் குருட்டு நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தினைத் தெளிவாய்த் தெரிந்திருக்க வேண்டும் - குருட்டு நம்பிக்கை என்பது கண்டனத்திற்குரியதாகவும், விசுவாசம் என்பது பாராட்டப்படத்தகுந்ததாகவும் காணப்படுகின்றது. அறியாமை, மூடநம்பிக்கை எனும் புதைமணல்களினின்று நம்மைப் பாதுகாப்பாய்ச் சுமந்துசெல்கிறதும், தேவன் நமக்கு நியமித்துள்ள இலக்கிற்கு நம்மைப் பாதுகாப்பாய்க்கொண்டு சேர்க்கிறதுமாய் உள்ள உறுதியான விசுவாசத்திற்கு, மனுஷ வாக்குறுதிகளைவிட, நம்முடைய கற்பனைகளைவிட அல்லது வேறு மனுஷருடைய கற்பனைகளைவிட அதிகமான வேறு காரியங்கள் அவசியமாய் இருக்கின்றது. உண்மையான விசுவாசமானது கர்த்தரிடமிருந்து திட்டவட்டமான செய்தியைப் பெற்றுக்கொள்ள நாடித்தேடுகின்றது. மேலும் அச்செய்தியினைக் கண்டடைவதற்குரிய விசுவாசத்தின் பிரயாசத்தில் விடாமுயற்சி தேவையாய் இருக்கின்றது. பின்னர் அச்செய்தியானது காணக்கூடாதவைகளுக்கு சான்று அல்லது நிரூபணமாகுகின்றது.

தேவனிலும், இன்னுமாக கானான் தேசத்தினை இஸ்ரயேலுக்குக் கொடுப்பதாக அவர் உரைத்த வாக்குத்தத்தத்திலும் உள்ள விசுவாசத்துடன், தேசத்தை வேவுபார்க்கும்படிக்கு அனுப்பப்பட்ட இரண்டு முன்னோர்கள் நல் அறிக்கை ஒன்றினைக் கொண்டுவந்தார்கள். இவர்களோடுகூடச் சென்றவர்கள் விசுவாசமின்மையினால், கானானியர்களின் பலத்தை மாத்திரம் பார்த்தவர்களாகக் காணப்பட்டு, விரும்பத்தகாத அறிக்கை ஒன்றினைக்கொண்டு வந்தார்கள். கிரகங்களைச் சிருஷ்டித்த திவ்விய வல்லமையிலும் மற்றும் மனுஷருடைய காரியங்களில் யுகங்களையும், காலங்களையும் ஏற்படுத்தின திவ்விய வல்லமையிலும் மற்றும் முதலில் வெளியரங்கமாய்க் காணப்படாததும், விசுவாசக்கண்களால் மட்டுமே காணக்கூடியதுமான பலன்களைக் கொண்டுவருகின்றதுமான திவ்விய வல்லமையிலும், நாம் விசுவாசத்தின் காரணமாய் நம்பிக்கை வைக்கின்றோம்.

## ஆபிரகாம், ஏனோக்கு மற்றும் நோவா

விசுவாசத்தினால் காயினைவிட மிகவும் சிறந்ததொரு பலியினை ஆபேல் தேவனுக்கு ஏறெடுத்தார்; மேலும் தேவன் இவரது பலியினை ஏற்றுக்கொண்டதின் நிமித்தம், தேவனுடைய அங்கீகரிப்பிற்கான சான்றினையும் பெற்றுக்கொண்டார். ஆபேல் மரித்துப்போனபோதிலும், இவர் அங்கீகரிக்கப்பட்ட காரியமானது நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கிடமின்றி, தேவனிடத்தில் நெருங்குவதற்குரிய இவரது பிரயாசத்தின் விளைவாகவும் - பாவம் என்ன என்றும், ஏன் மரண தண்டனை வந்தது என்றும் உணர்ந்துகொள்வதற்குரிய இவரது பிரயாசத்தின் விளைவாகவும்தான், இவருடைய விசுவாசம் உண்டானது. விசுவாசத்தினுடைய இந்தக் கண்ணோட்டத்தினால் இவர், தேவன் மற்றும் மனுக்குலத்திற்கும் இடையில் ஒப்புரவாகுதலை இறுதியில் கொண்டுவரும் விசேஷித்த பலிகளை அடையாளப்படுத்தும் மிருகங்களைப் பலிசெலுத்துவதற்கு வழிநடத்தப்பட்டார்.

ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு, விசுவாசத்தின் காரணமாய் எடுத்துக்கொள்ளப்பட்டார். "அவன் தேவனோடு சஞ்சரித்தான் . . . தேவன் அவனை எடுத்துக்கொண்டார்." ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சம்பவமானது ஒருமுறைக்கு மேல் பதிவுசெய்யப்பட்டுள்ளது; மேலும், இதை விசுவாசத்தினால் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இவர் எங்கே எடுத்துக்கொள்ளப்பட்டார் என்று பதிவு செய்யப்படவில்லை; ஆனாலும் இவர் பரலோகத்திற்கு எடுத்துச்செல்லப்படவில்லை என்று பார்க்கின்றோம் (யோவான் 3:13). ஒருவேளை தேவன் மனுஷ சந்ததி மீது மரண சாபத்தினைச் சுமத்தாதிருந்தால், எப்படி மனுஷனுடைய ஜீவனானது தெய்வீக வல்லமையினால் காலங்காலமாய் நீடிக்கப்பட்டிருந்திருக்கும் என்பதற்கு உதாரணமாய்க் காணப்படும்படிக்குத் தேவன் ஏனோக்கினுடைய ஜீவனைப் பாதுகாத்திருந்திருப்பார் என்பதை நாம் அறிவோம். அந்தச் சாபத்திற்கு ஏனோக்கு விதிவிலக்கானவர் அல்ல என்பது உண்மையே. இவரும் மரணத்தீர்ப்பின் கீழே காணப்படுகின்றார்; மேலும் மற்றவர்களைப்போலவே இவரும் மீட்பருடைய புண்ணியத்தின் மூலமாக மாத்திரமே, முழுமையான பூரணத்திற்குக் கொண்டுவரப்படுவார்; ஜீவனுக்கேதுவாய்த் தெய்வீகத் தீர்ப்புப்பெறுவார்.

மனுஷனுடைய சிருஷ்டிப்பு முதல் நோவாவின் காலம் வரையிலும் ஒரு துளி மழைக்கூடப் பூமியில் விழவில்லை என்பதினால், அத்தகைய பேழையைக் கட்டுவதற்குரிய காரணம் இல்லாதிருந்தபோதிலும், பேழையினைக் கட்டினதிலுள்ள இவரது கீழ்ப்படிதல் மூலம், இவரது விசுவாசம் வெளிப்பட்டது (ஆதியாகமம் 2:5). தேவன் இவரது விசுவாசத்தினை ஆசீர்வதித்தார்; மேலும் இவரது குடும்பத்திற்கு ஆசீர்வாதம் கொண்டுவரும் வழிவகையாக இவரை ஏற்படுத்தினார்.

## விசுவாசமற்றவர்கள் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகிறதில்லை

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" என்று பரிசுத்த பவுல் அடிகளார் சவாலான அறிக்கை ஒன்றினை அறிக்கையிடுகின்றார். இந்த அறிக்கையினுடைய அடிப்படையிலேயே, ஒருவன் கொண்டிருக்கும் விசுவாசத்தினுடைய அளவிற்கேற்ப தேவனுக்குப் பிரியமாய் இருப்பான் என்றும், அவனது விசுவாசக்குறைவின் அளவிற்கேற்ப தேவனுக்குப் பிரியமற்றவனாய் இருப்பான் என்றும் நாம் சொல்லலாம். நிச்சயமாகவே இங்கு நாம் விசுவாசத்தில் வளருவதற்குரிய ஊக்கத்தினைப் பெறுகின்றோம், ஏனெனில் தேவனுடைய ஜனங்கள் அனைவருமே அவரது பார்வையில் பிரியமாய் இருப்பதற்கு வாஞ்சிக்கின்றனர்.

ஆனால் விசுவாசமானது, மனுக்குலத்திலுள்ள அனைவருக்குமே ஒன்றுபோல் எளிமையானதொரு காரியமாக இருப்பதில்லை. தாங்கள் பெற்றுக்கொண்ட அறிவானது எடுத்துரைப்பதுபோலவே

தேவனிடத்திலும், அவரது வாக்குத்தத்தங்களிடத்திலுமுள்ள தங்களது விசுவாசத்தினை சிலரால் உறுதியான நிலைக்குக்கொண்டுவந்திட முடியும்; மேலும் இந்த விசுவாசம் மற்றும் அறிவினால் இவர்கள் எதையும் செய்யத் துணிந்தவர்களாகிடவும் முடியும்; மேலும் இப்படியே இன்னும் இன்னுமாக செய்துகொண்டு போவார்கள். ஆனால் அனைவருடைய விஷயத்திலும் காரியங்கள் இப்படியாக இருப்பதில்லை. அநேகருக்குக் குறைவான விசுவாசம் காணப்படுகின்றது; மேலும் இத்தகையவர்கள் இன்னமும் தேவனுடைய பிள்ளைகளாகவே காணப்படுகின்றனர்; மேலும் "கர்த்தாவே எங்களது விசுவாசத்தினை வர்த்திக்கப்பண்ணும்" என்று ஜெபம்பண்ண வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர்; மேலும் மற்றவர்களுடைய விசுவாசத்தினைப் பார்த்து முயற்சிக்க நாட வேண்டியவர்களாய் இருக்கின்றனர்; மேலும் மற்றவர்களுக்கு அருளப்படும் விசுவாசத்தின் பலனைப்பார்த்து ஊக்குவிக்கப்பட வேண்டியவர்களாய்க் காணப்படுகின்றனர். இன்னும் வேறு சிலருக்கு விசுவாசம் என்பது முற்றிலும் சாத்தியமற்ற காரியமாய் இருக்கின்றது. இத்தகையவர்களால் அவர்களது ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டு எதையும் நம்பமுடியாது. கர்த்தரிடத்தில் வைக்கும் நம்பிக்கை மற்றும் விசுவாசம் எனும் ஆறாம் அறிவை இத்தகையவர்கள் ஒருபோதும் வளர்க்கப் பெறாதவர்களாவார்கள்.

இவர்களைக்குறித்து நாம் என்ன சொல்லலாம்? இவர்கள் மரபுவழி வந்த இயல்பான இந்நிலைமையின் காரணமாகவும், "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்" என்பதினால், இவர்கள் தேவனுக்குப் பிரியமாய் இல்லை எனும் காரணமாகவும், இவர்கள் நித்தியத்திற்குத் திவ்விய தயவினின்று தள்ளிவைக்கப்படுவார்களா? இப்படியாக வேதவாக்கியங்களினுடைய போதனைக் காணப்படுகிறதில்லை. ஒரு காலம் சமீபமாய் உள்ளது என்றும், அப்போது மேசியாவினுடைய கிருபையுள்ள இராஜ்யத்தின்கீழ், அனைத்து ஜனங்களையும் சென்றடையத்தக்கதாக, "கர்த்தரை அறிகிற அறிவினால் பூமி நிறைந்திருக்கும்" என்றும் வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. அந்த இராஜ்யம் விசுவாசத்தினைச் சார்ந்திருப்பதில்லை; இன்னுமாக விசுவாசம் வைக்கமுடிகிறவர்களுக்கு மாத்திரமே உரியதுமல்ல. அங்குச் சத்தியத்தினைக் கண்டுபிடிப்பதற்கும், அதை அறிந்துகொள்வதற்கும், அதைப் புரிந்துகொள்வதற்கும் உரிய தனது பிரயாசத்தில் வழிப்போக்கன்கூட, பேதைகூட வழிவிலகிச் செல்வதற்கான நிலைமை ஏற்படாத அளவிற்கு, வழியானது மிகவும் தெளிவாகவும், மிகவும் எளிமையாகவும் காணப்படும்.

ஆனால் இக்காலத்திலோ தெய்வீக ஏற்பாட்டின்படி விசுவாசம் என்பது இன்றியமையாத காரியமாய் இருக்கின்றது, ஏனெனில் தமது குமாரனுடைய மணவாட்டிகளாக, உடன்சுதந்தரர்களாக, கூட்டாளிகளாக இருக்கும்படி ஒரு விசேஷித்த வகுப்பாரைப் பிதா தேடிக்கொண்டிருக்கின்றார். இவர்கள் மகா நம்பிக்கைக்குரிய, மகா கனத்திற்குரிய மற்றும் மாபெரும் ஊழியத்திற்குரிய ஸ்தானங்களில் கொண்டுவரப்படப் போகிறபடியினால், இவர்கள் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட வேண்டும், பரீட்சிக்கப்பட வேண்டும். சர்வ வல்லவரிடத்திலுள்ள இவர்களது விசுவாசமானது முழுமையாய்க் காணப்பட வேண்டும். இதுபோலவே நம்முடைய இந்தப் பாடத்தில் குறிப்பிடப்படும் முற்பிதாக்களுக்காகவும், தேவன் விசேஷித்த வேலை ஒன்றினை வைத்திருக்கின்றார்; ஆகையாலே தம்மிலும், தமது வார்த்தைகளிலும் மாபெரும் விசுவாசத்தினை வெளிப்படுத்த முடிகிறவர்களை மட்டுமே அந்த வேலைக்குப் பாத்திரமானவர்களெனத் தேவன் அங்கீகரித்திருக்கின்றார்.

## ஆபிரகாம் ஒரு நகரத்துக்காகக் காத்திருந்தார்

ஆபிரகாமைக்குறித்துப் பார்க்கும்போது, பரிசுத்த பவுல் அடிகளார் இவரது விசுவாசம் நிரூபிக்கப்பட்ட பல்வேறு கட்டங்களை விவரிக்கின்றார். கானானைப் பற்றின எந்த விவரங்களை அறியாமலே, இவர் அழைப்பிற்குச் செவிகொடுத்து, கானானுக்கு வந்தார். விசுவாசத்தினால் இவர்

வாக்களிக்கப்பட்ட தேசத்தில் பரதேசியைப்போன்று சஞ்சரித்து, கூடாரங்களில் குடியிருந்தார்; இதுபோலவே இவரோடு வாக்குத்தத்தத்தில் பங்காளிகளாகவும், இவர் வாயிலாகச் சுதந்தரர்களாகவும் காணப்பட்ட ஈசாக்கு மற்றும் யாக்கோபும்கூடக் காணப்பட்டனர். சாராளும் விசுவாசம் வைத்தாள். இப்படியாக இவள் ஈசாக்கின் தாயாவதற்கு உதவப்பட்டாள் என்றும், அந்த வாக்குத்தத்தத்துடன் சம்பந்தப்பட்டவள் ஆனாள் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார்; இவள்மூலம் அந்த ஆபிரகாமின் வித்தானது, கடற்கரை மணலத்தனையாக, எண்ணிலடங்கா எண்ணிக்கையில் இருப்பார்களென அவ்வாக்குத்தத்தம் தெரிவிக்கின்றது.

இந்த நற்குணசாலிகள் அனைவரும் தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட எதையும் பெற்றுக்கொள்ளாமலேயே, விசுவாசத்தில் மரித்துப்போனார்கள் என்று பரிசுத்த பவுல் அடிகளார் ஒட்டுமொத்தமாகத் தெரிவிக்கின்றார் (வசனம் - 13). இவர்கள் தொலைவிலிருந்து விசுவாசத்தினால் பார்த்தவைகளில் களிகூர்ந்தார்கள். இவர்களது விசுவாசம் அந்தளவிற்கு வலுவாய்க் காணப்பட்டபடியால், இவர்கள் அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும் - நாடோடியாகவும் இருப்பதில் திருப்தியடைந்தார்கள். இவர்கள் இங்கும் அங்குமாக அலைந்தது என்பது, இவர்கள் அவ்வப்போது கடந்துபோன எந்தப் பட்டணங்களும் அல்லது நாடுகளும் இவர்களுக்கு முழுவதுமாய்த் திருப்திகரமாக இல்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் தங்கள் நாடாகிய ஆரானுக்குத் திரும்பிச்செல்ல விருப்பம்கொள்ளும் அளவிற்கு இவர்கள் அதிருப்தியடையவே இல்லை. இவர்கள் "தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்தையே" - பரம தேசத்தையே நாடினவர்களாக மாத்திரம் காணப்பட்டார்கள்.

அப்போஸ்தலன் கூறிய இவ்வார்த்தைகளின் அர்த்தம் தொடர்புடைய விஷயத்தில், கருத்து வேறுபாடு காணப்பட வாய்ப்புள்ளது போன்று முதலில் தோன்றலாம். ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு பரம தேசத்திற்குச் செல்ல விரும்பினார்கள் என்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் கூறியுள்ளாரா? இவர்கள் மேசியாவின் இராஜ்யமாகிய புதிய எருசலேமில் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியென, மனைவியென ஓர் இடத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பினார்கள் என்ற அர்த்தத்தில் கூறியுள்ளாரா?

இப்படியாக எங்களுடைய புரிந்துகொள்ளுதல் இல்லை. இப்படி இவர்கள் விரும்புவதற்கு ஏதுவான எந்தப் பரலோக வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கவில்லை. மனுஷீக சுபாவத்தினின்று, ஆவிக்குரிய சுபாவத்திற்குச் சுபாவ-மாறுதல் அடைவது தொடர்புடைய எதையும் குறிப்பிடும் எந்த வசனங்களும் இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இவர்களுக்குரிய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் பூமிக்குரியவைகளாக, பூமிக்கடுத்தவைகளாகக் காணப்பட்டன - "நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்" போன்றவைகளே இவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது (ஆதியாகமம் 13:15). எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி இவர்கள், எதிர்நோக்கி காத்திருந்த தேசம் பரதீசாகும் - அதாவது "வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து புஷ்பத்தைப்போலச் செழிக்கக்கூடிய" மற்றும் "வனாந்தரத்தில் தண்ணீர்களும் பாய்ந்தோடக்கூடிய" மற்றும் பாவம், மரணத்தின் சாபத்தினை அகற்றிப்போட்டு, கர்த்தருடைய ஆசீர்வாதம் காணப்படக்கூடிய மற்றும் சீக்கிரத்தில் கடந்துவரப்போகிற பரதீசாகும். இத்தேசத்தையே, மேசியாவின் நீதியின் ஆளுகையில் மனுக்குலம் தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாகக் கொண்டுவரப்படுகையில், பொதுவான மனுக்குலம் சுதந்தரித்துக்கொள்ள தேவன் தீர்மானித்துள்ளார்.

"தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்தை" ஆபிரகாம் தேடினார் என்று நாம் வாசிக்கையில், நமது மனங்களின் கவனமானது இயல்பாகவே, இறுதியில் தேவனிடமிருந்து பூமிக்கு

இறங்கிவரும் புதிய எருசலேமின் மீது திரும்புகின்றது. ஆனால் அது சொல்லர்த்தமான ஒரு நகரமல்ல. அந்த முழு வேதவாக்கிய பகுதியும் அடையாள பாஷையில் காணப்படுகின்றது. புதிய எருசலேம் மேசியாவின் இராஜ்யமாக இருக்கும். அது பூமியின் மறுசீரமைக்கப்பட்ட சமுதாய ஒழுங்கிற்கான அரசாங்க மையமாக அல்லது தலைநகரமாக இருக்கும். அதனிடத்திலிருந்து தேவனுடைய நியாயப்பிரமாணமும், தேவனைப் பற்றின அறிவும், தேவனுடைய ஆசீர்வாதமும் கடந்துவரும். அதனிடத்திலிருந்து வல்லமையும், அதிகாரமும் கடந்துவந்து, ஆயிரம் வருஷமளவும் உலகை நீதியோடு ஆளுகைசெய்து, பாவத்தையும், மரணத்தையும், பாவத்தின் ஆதரவாளிகளையும் அகற்றிப்போட்டு, நீதியையும், சத்தியத்தையும் விரும்புகிற யாவரையும் சீர்த்தூக்கிவிடும்.

ஆவிக்குரிய தளத்தில் காணப்படும் மகிமையின் சபையாக, மேசியாவிடமிருந்து வரும் தேவனுடைய ஆளுகையாக அல்லது இராஜ்யமாக, இந்தப்புதிய எருசலேமானது காணப்படும். ஆனால் அதற்குப் பூலோக பிரதிநிதிகளும் உண்டு. இவர்களைக்குறித்துப் பரிசுத்த பவுல் அடிகளார் இங்குக் குறிப்பிடுகின்றார்; தங்களது நாட்களில் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்ட ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு மற்றும் தீர்க்கத்தரிசிகள் மற்றும் முற்பிதாக்கள் அனைவரும் பூமியில் பிரபுக்களாகவும், கண்களுக்குப் புலப்படாத மேசியா மற்றும் அவரது மணவாட்டியினுடைய முழு வல்லமை மற்றும் அதிகாரத்தினால் முழுக்க ஆதரிக்கப்படும், அவர்களின் பிரதிநிதிகளாகவும் காணப்படுவார்கள். (சங்கீதம் 45:16)

இவர்களைக்குறித்து இயேசு: "நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும், சகல தீர்க்கத்தரிசிகளையும், தேவனுடைய இராஜ்யத்திலிருக்கிறவர்களாகக் காண்பீர்கள்" என்று கூறியுள்ளார். ஆனால் தம்மைக்குறித்துக் குறிப்பிடுகையில்: "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று கூறியுள்ளார். சபையைக்குறித்து அப்போஸ்தலன்: "நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம்" என்று கூறுகின்றார். நாம் அனைவரும் மறுரூபமடைய வேண்டும். மாம்சமும், இரத்தமும் ஆவிக்குரிய தளத்தில் பரலோக இராஜ்யத்தினைச் சுதந்தரித்துக்கொள்வதில்லை.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரம் ரஷ்யாவையும், பாரிஸ் நகரம் பிரான்சையும், லண்டன் நகரம் கிரேட் பிரிட்டனையும், பெர்லின் நகரம் ஜெர்மனியையும், வாஷிங்டன் நகரம் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் குறிப்பதுபோல, நகரம் எனும் வார்த்தையினால் அடையாளப்படுத்தப்படும் மேசியாவினுடைய அரசாங்கத்தின் ஆளுகையின்கீழ் நிகழும் என்று வாக்களிக்கப்பட்ட மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்காய் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் முற்காலங்களிலுள்ள உண்மையுள்ளவர்கள் யாவரும் காத்திருந்தார்கள்.

---

R4611

# முற்பிதாக்கள் - எப்படிப் பூரணம் அடைகின்றனர்?

ஒரு பரிபூரண சரீரம் இருக்குமானால், அதற்குப் பரிபூரண மனம் இருக்கும், ஏனெனில் மனம் என்பது சரீரத்தினுடைய பாகமாக இருக்கின்றது; மேலும், மூளை வேலை செய்யாத ஒரு மனுஷன் அல்லது கொஞ்சமே மூளையினை வேலை செய்யப் பெற்றுள்ள மனுஷன், பரிபூரணமான மனுஷனாக இருப்பதில்லை. அநேகமாக இது விஷயத்தில் மாற்றுக்கருத்துகள் எவருக்கும் இருக்காது, எனினும் பரிபூரண குணம் என்றால் என்ன? எனும் விஷயமே உண்மையில் விவாதத்திற்குரிய காரியமாகும்.

தகப்பனாகிய ஆதாம் தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டபோது, அவர் மனதிலும், சரீரத்திலும் பூரணமானவராய் இருந்தபடியால், அவர் ஒரு விதத்தில் பரிபூரணமான குணத்தையே பெற்றிருந்தார். அவரது மனமானது, தேவனுடைய சாயலில் காணப்பட்டபடியால், அவரது குணலட்சணம் நல்லதாக இருந்தது; குறையொன்றும் இல்லாதிருந்தது; பாவத்தின் மீதான எந்த விருப்பத்தினையும் பெற்றிராமல் இருந்தது; பாவத்திற்கு எதிர்மாறாக - நீதியினை அங்கீகரித்ததாகவும், அதன்பால் ஈர்க்கப்பெற்றதாகவும் இருந்தது. அவர் கடினமான இருதயத்தினைப் பெற்றிருக்கவில்லை, மாறாக சதையான இருதயத்தினை - மென்மையான இருதயத்தினைப் பெற்றிருந்தார். அவர் கொடூரமானவர் அல்ல, மாறாக நீதியுள்ளவராகவும், அன்புள்ளவராகவும் மற்றும் இரக்கமுள்ளவராகவும் காணப்பட்டார் - அதாவது ஒரு நல்ல மனுஷன் பெற்றிருக்க வேண்டிய அனைத்தையும் பெற்றிருந்தார்; ஏனெனில் தேவன் அவரை இப்படியாகத்தான் சிருஷ்டித்திருந்தார்.

ஆனால் குணலட்சணம் எனும் வார்த்தையினை நாம் மற்றுமொரு விதத்தில் பயன்படுத்தும் கோணமும் காணப்படுகின்றது; அக்கோணத்தில் பார்க்கும்போது, ஆதாம் ஒருபோதும் முழுமையான விதத்தில் குணலட்சணத்தினைப் பெற்றிருக்கவில்லை; அதாவது குணலட்சணமானது வளர்ச்சியடைந்து, பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்படும் கோணத்திலாகும். தேவன் அவரைப் பரீட்சித்தார், ஆனாலும் அவரது அனுபவமின்மையின் காரணமாய், அவர் நல்ல குணலட்சணத்தையும், முழுச்சரீரத்தைப் பூரணமாயும் பெற்றிருந்தபோதிலும், தோல்வியினைத் தழுவினார். ஒருவேளை நாம் அறிந்திருக்கும் அளவுக்கு அவர் தேவனை அறிந்திருப்பாரானால், அவர் சந்தேகத்திற்கிடமின்றி பரீட்சையில் நிலைநின்றிருப்பார்; விலக்கப்பட்ட கனியினைப் புசிக்கும் விஷயத்திலுள்ள இந்தப் பரீட்சையில் அவர் வெற்றிப்பெற்றிருப்பாரானால், அதுவே அவரது பரீட்சையின் முடிவாக இருந்திருக்கும் என்ற எண்ணங்கள் நமக்கில்லை. சந்தேகத்திற்கிடமின்றி மற்றப் பரீட்சைகளும் கடந்து வந்திருக்கும்; அவர் படிப்படியாகத் தேவனைப் பற்றின அறிவிலும், கீழ்ப்படிதலிலும், இன்னும் மற்ற விஷயங்களிலும் வளர்ந்து கொண்டு வந்திருப்பார்; ஆனால் அவர் அனுபவமில்லாதவராய் இருந்தபடியால், தனது பரீட்சையின் முதலாம் அம்சத்திலேயே தோல்வியினைத் தழுவினவரானார். ஒரு மனுஷனாக, நமது கர்த்தர் இயேசுவினால் உண்மையுள்ளவராய் நிலைநிற்க முடிந்ததற்கான காரணம், பிதாவைக்குறித்து அவருக்கு ஏற்கெனவே இருந்த அறிவு என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஒருவேளை நமது கர்த்தராம் இயேசுவும், ஆதாமைப்போன்று ஒரு பரிபூரண மனுஷனாகவும், தேவனைப் பற்றின கூடுதல் அறிவு இல்லாதவராகவும், "உலகத்தோற்றத்திற்கு முன்னதாகப் பிதாவுடன் தமக்கு இருந்த மகிமையினைக்குறித்த" எந்த அறிவையும் பெற்றிராதவராகவும், பரிசுத்த ஆவி மற்றும் தேவ வசனத்தின் வாயிலாகத் தெய்வீகத் திட்டம் குறித்து அறிந்துகொள்ளாதவராகவும் இருந்திருப்பாரானால், அவரும் ஆதாமைப்போன்று தோல்வி அடைய வாய்ப்பிருந்திருக்கும் என்று நாம் அனுமானித்திருந்திருப்போம்; கர்த்தர் இந்தப் பல்வேறு ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தார் என்பதை நாம் நினைவுகூருகையில், கர்த்தர் தம்மை மரணத்திற்கு அர்ப்பணிக்கும் தருணத்தினையும், சிலுவையில் அவர் அறையப்படும் தருணத்தினையும் சுட்டிக்காட்டும், "என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" (ஏசாயா 53:11) என்ற வேதவாக்கியத்தின் அழுத்தத்தினை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

ஆதாமினால் காணவும், புரிந்துகொள்ளவும் முடியாததை, நமது கர்த்தர் காணவும், புரிந்துகொள்ளவும் முடிகிறதற்கு உதவின அறிவினைக் கர்த்தர் பெற்றிருந்தார். கர்த்தர் விஷயத்தில்,

அவர் வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் உபவாசம் இருக்கையில், எதிராளியானவனால் சோதிக்கப்பட்ட காரியமானது, அவரது குணலட்சணம் பூரணமடைந்துவிட்டதற்குரிய போதுமான சான்றாகப் பிதாவினால் கருதப்படவில்லை, மாறாக அவர் "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டார்" என்றும், மூன்றரை வருஷங்களாக இந்தச் சோதிக்கும் வேலை தொடர்ந்தது என்றும் காண்கின்றோம். இக்கூற்றினை நமது கர்த்தருடைய அனுபவங்களைப் பற்றின புதிய ஏற்பாட்டின் சுவிசேஷ பதிவிலிருந்து மாத்திரம் நாம் பெற்றுக்கொள்ளாமல், "தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளிலிருந்தும் பெற்றுக்கொள்கின்றோம். நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தைச் சுட்டிக்காண்பிக்கும் விதமாக, பிரதான ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தில் அக்கினியின் மீது தூபவர்க்கங்களைப்போடும் காரியமும்கூட, நமது கர்த்தருடைய குணலட்சணம் ஒவ்வொரு விஷயத்திலும் பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டதை அடையாளப்படுத்திக் காண்பிக்கின்றது.

நமது கர்த்தர் ஒரு புதுச்சிருஷ்டியென ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடு, மரணபரியந்தம் தம் ஜீவனை அர்ப்பணித்தப் பிற்பாடு, சோதிக்கப்படுவது தகுதியான காரியமாய் ஒருவேளை காணப்படுமானால் - நாம் புதுச்சிருஷ்டிகளான பிற்பாடு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடு, நாமும் சோதிக்கப்படுவது தகுதியானக் காரியமாய் ஒருவேளை காணப்படுமானால் - குணலட்சணம் முழுமையாய் நிரூபிக்கப்பட்டாயிற்று என்று சொல்வதற்கு ஏதுவாக எந்த விதத்தில் முற்பிதாக்கள் பரீட்சிக்கப்பட்டார்கள் என்று நாம் யோசிக்கலாம். இந்த மனுஷர்களுடைய, அதாவது ஏனோக்கு, ஆபிரகாம், மோசே, சிம்சோன், தானியேல் இன்னும் மற்றவர்களின் பதிவைக்குறித்து நாம் ஆராய்ந்துப் பார்க்கையில், இவர்கள் மகா விசுவாசத்தினை வெளிப்படுத்தினவர்களாகக் காண்கின்றோம்; இவர்கள் தேவனுக்கான தங்களுடைய நேர்மையின் விஷயத்திலும், அவரிடத்திலுள்ள தங்களுடைய நம்பிக்கையின் விஷயத்திலும் வந்த கடுமையான சோதனைகளிலும், பரீட்சைகளிலும் நிலைநின்றவர்கள் என்று நாம் காண்கின்றோம். "இவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்கள்" என்று இவர்களைப்பற்றி கொடுக்கப்பட்ட சாட்சி நம்மை ஆச்சரியத்திற்குள்ளாக்குகிறதில்லை. இது இவர்கள் போதுமான குணலட்சண வளர்ச்சியினை அடைந்திருக்கின்றனர் என்று நமக்கு உறுதியளிக்கின்றதாய் இருக்கின்றது. தேவன் இவர்களது இருதயங்கள் உத்தமமாய் இருந்ததைக் கண்டிருக்க வேண்டும், இல்லையேல் இவர்களை "மேன்மையான உயிர்த்தெழுதல்" அடைவதற்குப் பாத்திரமானவர்களாக, ஒருபோதும் கருதியிருந்திருக்கமாட்டார். அதேவேளையில் இவர்களுக்கு இன்னும் கூடுதலான அனுபவம் தேவையாய் இருக்கும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

சிம்சோனின் அனுபவங்களில் வளர்க்கப்பட்ட குணலட்சணங்களின் பிரதான அம்சம், விசுவாசம் என்பதாகத் தோன்றுகின்றது. எவ்வளவு பொறுமை, நீடியபொறுமை, சகோதர சிநேகம், தயவு, சாந்தம் முதலானவைகள் இவரது குணலட்சணத்தில் வளர்ச்சியடைந்திருந்தது என்பதை நாம் அறியோம்; இது விஷயமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை, ஆனாலும் சிம்சோனை மிகுந்த பண்புகளுள்ள மனுஷன் என்று எடுத்துக்கொள்வதற்கு நம்மிடத்தில் எந்தக் காரணங்களும் இல்லை. கழுதையினுடைய தாடை எலும்பைக்கொண்டு மூவாயிரம் புருஷர்களைக் கொன்றுபோட்ட சம்பவமும், இன்னும் மற்ற சம்பவங்களும் இவரைப் பண்புள்ளவராகச் சுட்டிக்காட்டுவதுபோன்று தெரியவில்லை. ஆகையால் சிம்சோன் முழுமையான பூரண நிலையிலும், ஆயிர வருஷ யுகத்தினுடைய சாதகமான சூழ்நிலைகளின் கீழும் திரும்பக்கொண்டுவரப்பட்டாலும், அநேகமாக இவர் ஜீவியத்தில் சந்தித்திராத அனுபவங்கள் இவருக்கு ஏற்படும் மற்றும் அவை இவருக்கு மிகவும் புதியவையாக இருக்கும் என்பதினால், இவர் தவறிழைப்பதற்கான அபாயத்திலும் காணப்படலாம். தேவனுடைய ஆவிக்கடுத்த காரியங்கள் தொடர்பாக

இவர் அதிகமாகக் கற்கவேண்டியிருக்கும் என்பது நிச்சயமே. எதிர்காலத்தில் அனைவருமே பரிசுத்த ஆவியினுடைய ஆசீர்வாதத்தின்கீழ்க் கொண்டுவரப்படுவார்கள் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன.

இந்த முற்பிதாக்கள் சபையைப்போன்று ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதில்லை, எனினும் இந்தச் சுவிசேஷ யுகத்தின் ஊழியக்காரர்கள் மற்றும் ஊழியக்காரிகள் பரிசுத்த ஆவியினைப் பெற்றுக் கொள்வார்கள் என்று தெரிவித்திடும் அதே தீர்க்கத்தரிசனம், "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்றும் தெரிவிக்கின்றது. இந்த முற்பிதாக்கள் பரிசுத்த ஆவி ஊற்றப்படும் காலங்களுக்கு முன்னதாக ஜீவித்தப்படியினால், இந்த ஆசீர்வாதத்தில் ஒரு பங்கினை இவர்கள் பெற்றுக்கொள்வதற்குரிய காலம் எதிர்க்காலத்திலாகும்; மேலும் சந்தேகத்திற்கிடமின்றி இவர்களுக்குப் பரிசுத்த ஆவி கொடுக்கப்படும் காரியமானது, ஏற்கெனவே பூரணமாயுள்ள இவர்களது குணலட்சணங்களை நிலையாய் உறுதிப்படுத்தும் விஷயத்தில் பெரும்பங்கு வகித்திடும். இவர்கள் அதிகமான அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்படுவார்கள்; மேலும் இவர்கள் ஏற்கெனவே சோதனைகளில் நிலைநின்று, உண்மையுள்ளவர்களென நிரூபிக்கப்பட்டுள்ளபடியினால், இவர்கள் தெய்வீகச் சித்தத்திற்கு முழு இசைவாக எவ்வாறு தங்களது தாலந்துகளையும், ஆற்றல்களையும் பயன்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக மாத்திரம் காணப்படுவார்கள்.

(உயிர்த்தெழுந்து வரும்போது) இந்த மனுஷர்கள் மரித்துப்போக முடிகிற நிலைமையில், அதாவது அழிக்கப்பட முடிகிறவர்களாக மற்றும் மரித்துபோக முடிகிறவர்களாக இருப்பார்கள் என்று நாங்கள் புரிந்துகொள்கின்றோம்; ஆனாலும், இவர்கள் இரண்டாம் மரணத்தினுடைய ஆக்கினைத்தீர்ப்பின்கீழ் வருவது என்பது பெரிதும் வாய்ப்பற்ற காரியமாகும். தன் நாட்களில் காணப்பட்ட அந்தகார நிலைமையின்கீழும், அறியாமை மற்றும் மூடநம்பிக்கை எனும் நிலைமையின்கீழும் உள்ள பரீட்சையில் நிலைநின்று, உலகம் மற்றும் எதிராளியானவனுடைய சோதனைகளைச் சகித்து, இம்மாதிரியான நிலைமைகளின்கீழ் உண்மையுள்ளவன் என நிரூபிக்கப்பட்டுள்ள எந்த ஒரு மனுஷனும், நீதி செய்கிறதற்கும், தேவனுக்கு முழுமையாய்க் கீழ்ப்படிகிறதற்கும் மிக அதிகமாய்ச் சாதகமாகக் காணப்படும் ஆயிர வருஷ யுகத்தினுடைய நிலைமைகளின்கீழ்ப் பூரணமாய்க் காணப்படுவான் என்று அனுமானிப்பது நியாயமான காரியமேயாகும். ஆகையால் முற்பிதாக்களில் எவரேனும் நித்திய இலக்காகிய, நித்திய ஜீவனை அடைவதற்குரிய நிலைமைக்குக் குறைவுப்பட்டுப் போவார்கள் என்று அனுமானிப்பதற்கு எக்காரணங்களும் இல்லை.

மத்தியஸ்த இராஜ்யத்தின்கீழ், புது உடன்படிக்கையினுடைய ஏற்பாட்டின்கீழ்க் காணப்படப்போகும் முற்பிதாக்கள், ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவுமட்டும் பிதாவுடன் முழுத்தொடர்புக்குள்ளாக இருக்கமாட்டார்கள் எனும் உண்மையானது, தயவற்ற நிலைக்கான சான்றாகவோ, அவர்களது மேலான நன்மைக்கு எதிரான ஒன்றாகவோ இராமல், மாறாக மிகவும் தயவுள்ள ஓர் ஏற்பாடாகும் மற்றும் இதன் வாயிலாக அவர்கள் சார்பிலான எக்குறைவுகளும் கிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஊழியத்தினால் மூடப்படும்; மேலும் இப்படியாக அவர்கள் இரண்டாம் மரணம் எனும் தெய்வீகத் தீர்ப்பின்கீழ்க் கொண்டுவரப்படாமலும் இருப்பார்கள். அவர்கள் தவறுகள் செய்வார்கள் என்று நாங்கள் எதிர்ப்பார்க்கவில்லை, மாறாக அவர்கள் விழித்தெழுகையில், உடனடியாக தேவனிடத்தில் ஒப்படைக்கப்படுவார்களானால், ஆதாமின் விஷயத்தில் செயல்பட்டதுபோலவே தேவனுடைய பிரமாணம் செயல்படுவதினால், சிறு திசைமாறுதல்கூட மரணத்தினைக் கொண்டுவந்துவிடும்; மேலும் அவர்களது நிலைமை மிகவும் சாதகமற்ற நிலைமையாகக் காணப்பட்டுவிடும். ஆகையால் ஆயிர வருஷ யுகமானது,

முழுமையான அறிவிற்குள்ளாக வருவதற்குரிய திரளான வாய்ப்புகளை அருளுகின்றதாயிருக்கும்; மேலும் ஆயிர வருஷ யுகத்தின்போது, மீதமுள்ள ஆபிரகாமின் சந்ததியினரையும், அச்சந்ததிக்குள்ளாகக் கடந்துவந்திடும் புறஜாதியார் அனைவரையும் ஆசீர்வதித்திடும் வேலையில், ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாரென இந்த முற்பிதாக்கள் ஊழியம்புரிவதில், அவர்களது உண்மையானது இன்னமும் பரீட்சிக்கப்படுவதினால், இது சுபாவ-மாற்றத்தினையும், திரள்கூட்டத்தாரோடுகூட ஆவிக்குரிய தளத்தில் ஒரு பங்கினையும் பெற்றுக்கொள்வதற்கு அவர்களைப் பாத்திரமானவர்களாக்கிடும் என்று வேதவாக்கியங்கள் திட்டவட்டமாய்த் தெரிவிக்கவில்லை என்றாலும், இப்படித்தான் சுட்டிக்காட்டுவதாக நாங்கள் நம்புகின்றோம்.

---

R4835

# பலிக்கான வெகுமதிகள்

"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (உரோமர் 12:1)

நமது பூலோக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களைப் பலிசெலுத்தும்படிக்குக் கர்த்தர் கட்டளையிட்டதாக வேதவாக்கியங்களில் நாம் பார்க்க முடியாது. தெய்வீகக் கட்டளைகளானது, நீதியின் விஷயத்தோடு நின்றுவிடுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால் நீதி மற்றும் நியாயம் என்பது ஒரே காரியமாய் இருக்கின்றது; பலிசெலுத்துதல், சுயத்தை வெறுத்தல், இயேசுவைப் பின்தொடர வேண்டி சிலுவைச் சுமந்து செல்லுதல் ஆகியவைகள் அனைத்தும், தெய்வீக நியாயப்பிரமாணத்திற்கு அப்பாற்பட்டு விடுக்கப்பட்ட அழைப்பாகவே இருக்கின்றன. நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, அதன் கோரிக்கைகளை நிறைவேற்றும் யாவருக்கும் ஒரு நித்தியமான மனுஷீக ஜீவனை முன்வைத்தது. இந்த உடன்படிக்கையானது யாரோடு பண்ணப்பட்டதோ, அந்த யூதர்களில் ஒருவரைத்தவிர வேறு எவராலும் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியவில்லை; நிறைவேற்றின அந்த ஒருவர் பரத்திலிருந்து வந்தவராகவும், நித்தியமான பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையினை வழங்கிடும் நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய கோரிக்கைகளை நிறைவேற்றத்தக்கதாக அவருக்கு உதவின பூரணமான மனுஷ சரீரத்தை அருளப்பெற்றவராகவும் காணப்பட்டார்.

நிஜமான மத்தியஸ்தரின் கீழுள்ள புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, அதன் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் யாவருக்கும் நித்தியமான மனுஷீகப் பூரணம் எனும் அதே பலனை முன்வைத்திடும். தமது "விசேஷித்த பலிகளினுடைய" புண்ணியத்தின் காரணமாக மனுக்குலத்தை ஆக்கினைத்தீர்ப்பினின்றும், மரணத்தினின்றும், பெலவீனத்தினின்றும் முற்றிலுமாக வெளிக்கொண்டு வருவதற்கு அதிகாரம் உடையவராகவும், உதவ முடிபவராகவும் உள்ள மேலான மத்தியஸ்தரைப் பெற்றிருக்கும் விஷயத்தில், முதலாம் நியாயப்பிரமாண உடன்படிக்கையினைக்காட்டிலும், புது உடன்படிக்கையானது மேன்மையானதாக இருக்கின்றது.

இயேசு நியாயப்பிரமாணத்தின்கீழ்ப் பிறந்தவராய் இருந்தபடியால், அந்த உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளை நிறைவேற்றிடுவதற்குக் கடமைப்பட்டிருந்தார் மற்றும் நிறைவேற்றினார்; இவை மூலமாக

நித்தியமான ஜீவனுக்குரிய உரிமையினைப் பெற்றுக்கொண்டார்; அவர் அதிகமாகவே செய்தார். அவர் அந்தப் பூமிக்குரிய ஜீவனைப் பலிசெலுத்தினார் - அதைக் கொடுத்து வைத்தார்/laid down - பாதுகாப்பிற்காக லேகியோனின் தூதர்களைக் கூப்பிடுவதற்குரிய வல்லமை அவருக்கு இருந்தபோதிலும், அவர் எதிர்ப்புத் தெரிவிக்காமலேயே அந்த ஜீவனைப் பாவிகள் தம்மிடமிருந்து எடுப்பதற்கு அனுமதித்தார். இது அவருடைய பலியாகும். அவர் பாவமுள்ள பெலவீனத்தைப் பலிசெலுத்தவில்லை; காரணம் அப்படியான எதுவும் அவரிடத்தில் இல்லை. அவர் பூரணமான ஜீவனையும், அவரது நியாயமான உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் அனைத்தையும் பலிசெலுத்தினார். இப்படியாக அவர் செய்ததற்கு வெகுமானமாக, அவர் மனுஷ சுபாவத்திலிருந்து திவ்விய சுபாவத்திற்கு - தேவதூதர்கள், துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டார் (எபேசியர் 1:20). இப்படியாக உயர்த்தப்பட்ட இவர் ஆதாமிற்காகவும், அவர் சந்ததிக்காகவும், அவர்களுடைய மீட்கும் விலையினை - மனுஷீக உரிமைகளைத் தம்மிடத்தில் பெற்றிருந்தார் (இதை அவர் ஒருபோதும் பறிகொடுக்கவில்லை). இவற்றை அவர் இந்த யுகத்தினுடைய முடிவில், புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையினை முத்திரையிட செயல்படுத்தும்போது கொடுப்பார்; இதன் கீழ் இஸ்ரயேலரும், மனுக்குலம் யாவரும் முதலாம் மனுஷனுடைய கீழ்ப்படியாமையினால் இழந்துபோன யாவற்றிற்கும் சீர்ப்பொருந்தப்படுவார்கள். இதற்கு இடைப்பட்ட காலத்தில் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதற்குரிய தெய்வீக அழைப்பினைக் கேட்பவர்களாக (மற்றும் அதை ஏற்றுக்கொள்பவர்களாக) காணப்படும் விசுவாச வீட்டாரிலுள்ள ஜனங்கள் - திரைக்கு அப்பால் ஆவிக்குரிய தளத்தில் மகிமைப்படுத்தப்பட்டு, அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, இப்பொழுது பலிசெலுத்துவதற்கும் மற்றும் மாம்சத்தில் அவரோடுகூடப் பாடுபடுவதற்கும் வேண்டி, இவர்களின் குறைவுகளை (தம் புண்ணியம் தரிப்பித்து மூடும் விதத்தில்) மூடத்தக்கதாக, மகிமையடைந்துள்ள மீட்பர் (உலகத்திற்கு இறுதியில் கொடுக்க அவர் திட்டமிட்டுள்ள) தியாக புண்ணியத்தினை பயன்படுத்துகின்றார்.

## பாவநிவாரண பலிகள் சுவிசேஷ யுகத்தில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும், நியாயப்பிரமாண உடன்படிக்கையானது யூதர்கள் மீது மட்டும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது; மேலும் மீதமுள்ள உலகத்தாரோ தேவனுடனான எந்த உடன்படிக்கையினையும் பெற்றிராமல், எதிர்காலத்திற்குரிய புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழுள்ள "திரும்பக்கொடுத்தலின் காலங்களுக்காய்" காத்திருக்கின்றனர் (அப்போஸ்தலர் 3:19-21; எரேமியா 31:31-34). இக்காலத்தில் (சுவிசேஷ யுகத்தில்) தேவன் ஓர் உண்மையுள்ள வகுப்பாரை ஈர்த்து, அழைத்துக்கொண்டிருக்கின்றார்; அவர்களது மீட்பருடன் தியாக மரணத்தில் பங்கடைவதற்குரிய வாய்ப்பினை அவர்களுக்குக் கொடுக்கின்றார். உண்மையுள்ளவர்கள் அவரது மகிமையின், கனத்தின் மற்றும் அழியாமையின் இராஜ்யத்தில் அவரோடு உடன்சுதந்தரர்களென அல்லது அவரது அங்கத்தினர்களென அல்லது அவரது மணவாட்டிகளெனக் கருதப்படுவார்கள். மனுஷர்கள் யாவரும் தெய்வீகச் சித்தத்தினை அறிந்துகொள்வதற்கு ஏற்ப (அதாவது தெய்வீகக் கண்ணோட்டத்தில் நீதியானது என்ன என்று அறிந்துகொள்வதற்கு ஏற்ப), தங்களால் முடிந்தமட்டும் தேவனுடைய பிரமாணத்தினை அல்லது நீதியான கோரிக்கைகளை நிறைவேற்றிடுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆனால் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்கு விருப்பமாயிருப்பவர்களுக்கு, அவர்கள் நீதிக்கும் அதிகமாய்

என்ன செய்யலாம் என்பது காண்பிக்கப்படுகின்றது; ஆனாலும் அதிகமாய் இப்படிச் செய்வதற்கு அவர்களுக்குக் கட்டளையிடப்படுகிறதில்லை. பலிசெலுத்துதல்கள் யாவும் சிலாக்கியமாய் இருக்கின்றன; இது கடமையல்ல; இது கட்டளையல்ல. இதற்கு இசைவாகவே பரிசுத்த பவுல் அடிகளார் கட்டளையிடும் விதத்தில் இல்லாமல், மாறாக வேண்டிக்கொள்ளும் விதத்தில்: "உங்களது சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்கும்படிக்குச் சகோதரரே உங்களை வேண்டிக்கொள்கின்றேன்" என்று எழுதியுள்ளார். அவர் இதைக் கட்டளையிடவில்லை. இது கட்டளையாகக் கொடுக்கப்பட்டிருக்குமாயின், பலிசெலுத்துவதற்குரிய வாய்ப்பானது உடனடியாக தடைபண்ணப்பட்டிருக்கும். நம்மால் பலிசெலுத்தப்படும் யாதொன்றும், கட்டளையின் பேரிலான பலியல்ல. தேவனால் கட்டளையிடப்படும் ஏதும் கடமையே தவிர, பலி ஆகாது.

முற்பிதாக்கள் தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்தார்கள், தங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுத்தார்கள், பூமிக்குரிய உரிமைகளைத் துறந்தார்கள்; ஆனாலும் இவர்கள் பலி செலுத்தவில்லை. ஏன்? ஏனெனில் ஜீவன் ஒன்றைக் கொன்றுபோடுவது என்பது ஒரு காரியமாகவும், தேவனால் பலியென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஜீவன் ஒன்று கொல்லப்படுவது/அடிக்கப்படுவது என்பது மற்றொரு காரியமாகவும் இருக்கின்றது. இயேசு தம்மையே பலிசெலுத்துவதற்கு முன்னதாக, தேவன் மனுஷர்கள் எவரையும் பலிசெலுத்தும்படியாக அழைக்கவில்லை. தேவன் தமது பலிபீடத்தின்மீது அபூரணமான, குறைபாடுள்ள சிருஷ்டியினை ஏற்றுக்கொள்ள விருப்பமற்றிருந்தார். அவர்கள் ஒருவேளை தங்களது ஜீவியங்களைக் கொடுத்திருந்திருக்கலாம், ஆனால் தேவன் அதைப் பலியாகக் கருதமாட்டார். இயேசு பலியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்; ஏனெனில் அவர் பூரணராய் இருந்தார்; மேலும் அவரது பின்னடியார்கள் பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு பலிகளென ஏற்றுக்கொள்ளப்பட்டனர்; ஏனெனில் இவர்களது குறைவுகளை, தமது புண்ணியத்தில் போதுமான அளவினைக்கொண்டு மீட்பர் தரிப்பித்ததன் காரணமாய், இவர்கள் அவரால் பூரணர்களாக்கப்பட்டனர்.

இப்படியாக இந்தச் சுவிசேஷ யுகமானது கர்த்தருடைய "அநுக்கிரக காலம்" என்று அழைக்கப்படுகின்றது; ஏனெனில் இந்தச் சுவிசேஷ யுகத்தில், முன் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையில் இயேசுவோடுகூட உடன்பலி செலுத்துபவர்களாக இருக்கப்போகிறவர்களை ஏற்றுக்கொள்ள தேவன் சித்தமாயிருக்கின்றார். ஆனால் முன் நிர்ணயிக்கப்பட்ட அந்த எண்ணிக்கை நிறைவடைகையில், அநுக்கிரக காலமும் உடனடியாக முடிவுபெறும். அதற்குமேல் யாரும் பலிசெலுத்துபவர்களென ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள் - நிஜமான பாவநிவாரண நாளும் நிறைவடைந்திடும்.

ஆனால் ஒருவேளை அநுக்கிர காலம் முடிவுபெற்ற பிற்பாடு, சிலர் தங்களையே ஒப்புக்கொடுக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; இவர்களது நிலைமை என்னவாக இருக்கும் மற்றும் இவர்களைத் தேவன் எப்படிக் கையாளுவார்?

தேவன் மாறாதவராய் இருக்கின்றபடியால், எப்படிப் பலியினாலான உடன்படிக்கையானது செயல்பாட்டிற்கு வருவதற்கு முன்னதாகத் தங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுத்த முற்பிதாக்களுடைய உண்மையில் தேவன் பிரியப்பட்டாரோ, அவ்வாறே தமது சித்தத்தினைச் செய்யத்தக்கதாகத் தங்களது ஜீவியங்களை முழுமையாகவும், வரையறை இல்லாமலும் அர்ப்பணிப்பவர்களாக, தம்முடைய சிருஷ்டிகளைப் பெற்றிருப்பதில் அவர் எப்போதுமே பிரியமாக இருப்பார் என்று நாம்

அனுமானித்துக்கொள்ள வேண்டும். முற்காலங்களில் தங்களது ஜீவியங்களை ஒப்புக்கொடுத்த அந்த முற்பிதாக்களுக்குத் தேவன் மனுஷீக பரிபூரணத்தினை வாக்களித்ததுபோலவே - சபை நிறைவடைந்த பிற்பாடும் - பலிசெலுத்துவதற்குரிய அநுக்கிரக வருஷங்கள் நிறைவடைந்த பிற்பாடும், ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பவர்களுக்கு பலனளிக்க விருப்பமாயிருப்பார் என்று நாம் நியாயமாய் அனுமானிக்கலாம்.

ஆகையால் இந்த யுகத்தினுடைய முடிவிலும் சிலர் இருப்பார்கள்; இவர்கள் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டாலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதவர்களாய் இருப்பார்கள் மற்றும் உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய தளத்தில் ஜீவநிலையினை அடையமாட்டார்கள்; மாறாக இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகம் துவங்குவதற்கு முன்னதாகவே ஆயத்தம்பண்ணப்பட்டுள்ள முற்பிதாக்கள் வகுப்பார் போன்ற வகுப்பாரில் அங்கத்தினர்களாய் வருவார்கள்.

## தன்னை ஒப்புக்கொடுப்பது என்பது எப்போதுமே புத்தியுள்ள ஆராதனையாகக் காணப்படும்

இவ்வுண்மைகளினுடைய கண்ணோட்டத்தின்படி நாங்கள், (யுகத்தின் முடிவில் காணப்படும்) கர்த்தரை அன்புகூருகிறவர்களுக்கும் மற்றும் அவரோடு முழுமையான ஐக்கியம் கொள்வதற்காக வாஞ்சிப்பவர்களுக்கும், இந்த யுகம் முழுவதிலும் கடந்துவந்த அதே செய்தியையே அறிவுரையாக வழங்குகின்றோம்; அதாவது, "உங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்கும்படிக்குச் சகோதரரே தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கின்றேன்" என்பதேயாகும். (யுகத்தின் முடிவில் காணப்படும்) இவர்கள் தங்களைப் பலிகளென ஒப்புக்கொடுத்த பிற்பாடு, இவர்களைத் தேவன் ஏற்றுக்கொண்டு, புதிய சுபாவத்திற்கு ஆவியில் ஜெநிப்பித்தலை அருளுவார் என்று இப்பொழுது எங்களால் இவர்களுக்கு உறுதியளித்திட முடியாது; ஆனாலும் இப்படி ஒப்புக்கொடுப்பது இவர்களது புத்தியுள்ள ஆராதனையாக இருக்கும் என்றும், தமக்கும், தமது நோக்கத்திற்கும் தங்களது நேர்மை மற்றும் விசுவாசத்தினை வெளிப்படுத்திடும் யாவருக்கும் தேவன் எப்போதுமே பெரிதான பலன்களைக் கொடுப்பார் என்றும் இவர்களுக்கு எங்களால் உறுதியாகக் கூறமுடியும். இன்னுமாக எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி (இவர்கள் ஒருவேளை புதிய சுபாவத்தில் ஏற்றுக்கொள்ளப் படுவதற்குத் தவறிப்போகும் பட்சத்தில், இவர்கள் அங்கமாகப்போகும்) முற்பிதாக்கள் வகுப்பார், தேவனால் உயர்வாய்க் கனப்படுத்தப்பட்டு, மனுஷ தளத்தில் பூரணப்படுத்தப்பட்டு, "பூமியெங்கும் பிரபுக்களாக" வைக்கப்படுவார்கள் என்று வேதவாக்கியங்கள் போதிப்பதை, இவர்களுக்கு எங்களால் சொல்ல முடியும். இன்னுமாக எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி இந்தப் பிரபுக்கள் ஆயிர வருஷ காலங்கள் கண்களுக்குப் புலப்படாத மேசியா வகுப்பாரின் விசேஷித்த பிரதிநிதிகளென, மீதமுள்ள மனுக்குலத்தாரைவிட மகிமையான ஸ்தானத்தில் காணப்படுவார்கள் என்றும் இவர்களுக்கு எங்களால் உறுதியளித்திட முடியும். இன்னுமாக எங்களது புரிந்துகொள்ளுதலின்படி இப்பிரபுக்கள் இந்த மகிமையான வேலையில் பங்கெடுத்த பிற்பாடு, ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் - ஆவிக்குரிய ஜீவ-தளத்தில் - நிஜமான லேவியர்களில் ஒரு பாகமென உயர்த்தப்படுவார்கள் என்றும் இவர்களுக்கு எங்களால் உறுதியளித்திட முடியும்.

தெரிந்தெடுக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கையானது எப்பொழுது முழுமையாய் நிறைவடையும் என்பதை யாராலும் அறிய முடியாது என்பதினால், அனைவருமே தங்கள் ஜீவியங்களைத் தேவன் மற்றும்

அவரது சத்தியத்தின் ஊழியத்தில் ஒப்புக்கொடுப்பதில் ஆவலாய்க் காணப்பட வேண்டும். ***(தேவனிடமிருந்து) நமக்குக் கிடைக்கப்போகும் பலனுடைய* (reward) *தன்மை தொடர்புடைய விஷயத்தில், நம் மனங்களில் காணப்படும் ஏதேனும் நிச்சயமின்மைகளின் நிமித்தம், நாம் ஊழியம்புரிய மறுக்கின்றோம் என்று கூறுவது என்பது, தேவனிடமிருந்து எந்த ஒரு தயவையும் பெற்றுக்கொள்வதற்குரிய நமது அபாத்திர தன்மையினை வெளிப்படுத்துகின்றதாயிருக்கும்*;** ஏனெனில் நாம் அவரால் அங்கீகரிக்கப்படத்தக்கவர்களாக வேண்டுமெனில், நமது ஊழியமானது பலனை (reward) அடைவதற்காகவேண்டி செய்யப்படாமல், மாறாக நீதிக்கு ஊழியம்புரிவதாகச் செய்யப்பட வேண்டும்; தேவனைப் பிரியப்படுத்துவதற்காகச் செய்யப்பட வேண்டும்! "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" - அதாவது புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ள அனைத்தையும் செய்ய விரும்புகின்றேன் என்பதாகக் காணப்பட வேண்டும். ஆகையால் நினைவுகூருதலின் காலங்களில் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் - மீட்பருடைய மரணத்தினை அடையாளமாய் அநுசரிப்பதன் மூலமும், "பிட்கப்பட்ட அப்பத்தின்" பாகங்களென மற்றும் அவரது பாடுகளின் பாத்திரத்தில் பங்கெடுப்பவர்களெனக் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கடைவதற்கான தங்களது ஆவலையும்கூட அடையாளப்படுத்தி அனுசரிப்பதன் மூலமும், இவர்கள் தங்கள் அன்பையும், நேர்மையினையும், கீழ்ப்படிதலையும், உண்மையினையும் வெளிப்படுத்திட வேண்டும்.

நமது பிள்ளைகளினுடைய விஷயத்தில் நாம் எவ்வளவு எதிர்ப்பார்ப்பு வைக்கலாம் என்பது மற்றுமொரு காரியமாய் இருக்கின்றது. எத்தனை சிறுவயதிலேயே பிள்ளைகள் தேவனுக்குப் பிரியமான விதத்திலும், அவரால் அங்கீகரிக்கப்படும் விதத்திலும், தேவனுக்கும் மற்றும் சத்தியத்திற்குமான நேர்மையினை வெளிப்படுத்துவார்கள் என்று சொல்வது நமக்கடுத்த காரியமல்ல. பெற்றோர்களாய் இருப்பவர்கள் எல்லா விதங்களிலும், மாதிரியான வாழ்க்கையின் மூலம் மற்றும் நடத்தையின் மூலம், மரணபரியந்தம் கர்த்தருக்கு ஊழியம்புரிவதற்குரிய சிலாக்கியத்தினைக்குறித்த தங்களது உணர்ந்துகொள்ளுதலை உதாரணப்படுத்திக்கொண்டும், விளக்கிக்கொண்டும் காணப்பட வேண்டும். இன்னுமாகப் பிள்ளைகள் வாரந்தோறும் போதிக்கப்படுவதற்குப் பார்த்துக்கொள்ள வேண்டும்; பிள்ளைகள் கூடுமானமட்டும் சத்தியத்தை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, சத்தியத்தினுடைய பல்வேறு அம்சங்களைக் கூடுமானால், தினந்தோறும் போதித்துக்கொடுங்கள். மிகவும் சிறிய வயதையும், கொஞ்ச காலத்திற்கே உரிய மன மற்றும் இருதய வளர்ச்சியினையும் உடைய பிள்ளை தன்னைத் தேவனுக்கு ஏற்கும்விதத்தில் ஒப்புக்கொடுப்பானா இல்லையா என்பதைத் தேவன் அறிவார். ஆகையால் தங்களது பிள்ளைகள் விஷயத்தில், பெற்றோர்கள் தங்களால் முடிந்த சிறந்த யாவற்றையும் செய்துவிட்டு, விளைவினைக் கர்த்தரிடத்தில் விட்டுவிடுங்கள்; அதுவும் பிள்ளைகள் விஷயத்தில் கர்த்தருடைய ஞானமுள்ள, நீதியான மற்றும் அன்புள்ள தீர்மானம் என்னவாக இருப்பினும், அது பூமிக்குரிய தளத்திலோ அல்லது பரலோக தளத்திலோ இருப்பினும், எதுவாக இருப்பினும் அதில் முழுத்திருப்திக்கொண்டு கர்த்தரிடத்தில் விட்டுவிடுங்கள். ஒருவன் தற்கால ஜீவியத்தில் வெற்றிகரமாய்த் தனது பரீட்சையினை நிறைவுசெய்து, மரணத்திற்குள்ளாகக் கடந்துபோவதன் மூலமே அல்லாமல், மற்றப்படி யாராலும் உயிர்த்தெழுதலில் உடனடியான பூரணத்தில், இத்தளங்கள் யாதொன்றிலாகிலும் பிரவேசித்திட முடியாது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மீதமுள்ள மனுக்குலத்தாரைப் பொறுத்தமட்டில், முன்னமே காண்பிக்கப்பட்டுள்ளது போன்று, தங்கள் முன் மகிமையான வாய்ப்புகளையும், சந்தர்ப்பங்களையும் அக்காலங்களில் பெற்றிருப்பார்கள்.

R5294 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்

"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்." (எபிரெயர் 12:22-23)

"நீதிமான்களின் ஆவிகள்" பூரணமாக்கப்படும் காலக்கட்டத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்றும் அப்போஸ்தலர் கூறுகின்றார். இவ்வசனத்தில் அப்போஸ்தலர் முதலில் முதற்பேறானவர்களின் சபையின் அங்கங்கள் அனைவரையும் குறிப்பிட்டுவிட்டு, வசனத்தின் இறுதியிலும் சபையின் இன்னொரு பகுதியினரை குறிப்பிட்டிருப்பார் என்று நாம் யூகிப்பது சரியாக இருக்காது; ஆகையால் இந்த சொற்றொடர் இன்னொரு வகுப்பாரைக் குறிப்பிடுகின்றது என்ற முடிவுக்கு நாங்கள் வருகின்றோம். நாம் ஆராய்கையில் இயல்பாகவே நமது மனமானது, சபை மகிமையடையும் வரை காத்துக்கொண்டிருக்கும் முற்பிதாக்கள் வகுப்பார்மேல் செல்கின்றது. இப்படியாக இவர்கள் இங்கே வரிசையில் வருகின்றார்கள்; ஆகையால் முதற்பேறானவர்களாகிய சபையின் கூடிவருதலைக் கூறிய பிறகு, பரிசுத்த பவுல் அடிகளார் மற்றொரு வகுப்பாராகிய "பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவியை" பற்றிக் கூறுகின்றார். இங்குச் சபை குறிப்பிடப்படவில்லை என்றும், முற்பிதாக்கள்தான் குறிப்பிடப்படுகின்றனர் என்றும் கூற இன்னொரு காரணம் உண்டு; அதென்னவெனில் சபையும் சரி, திரள்கூட்டத்தாரும் சரி "பூரணராக்கப்பட்ட *மனுஷர்களாக*" ஆக்கப்படமாட்டார்கள். சபை மனுஷீக சுபாவத்தை விட்டுவிடுவதினாலேயே, ஆவிக்குரிய வகுப்பாராக மாற முடிந்தவர்களாய் இருக்கின்றனர்.

ஆனால் எப்படி இந்தச் சொற்றொடரை முற்பிதாக்களுக்கு நாம் பொறுத்தலாம்? நாம் இந்தச் சொற்றொடரின் வார்த்தைகளைப் பின்வருமாறு இடம் மாற்றுகின்றோம்: "நீதிமான்களின் ஆவிகளை உடைய பூரண மனிதர்கள் விஷயத்திற்கு நாம் வருகின்றோம்" என்பதேயாகும். முற்பிதாக்கள் மாம்சத்தில் அபூரணமாக இருந்தாலும், நீதிமான்களாக இருந்தார்கள். அப்போஸ்தலர் இந்த வகுப்பாரையே குறிப்பிட்டுள்ளார்; இவர்கள் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெறுவார்கள் என்றும் கூறுகின்றார்; ஆனால் சபையைப்போல் உன்னதமான உயிர்த்தெழுதலைப் பெறமாட்டார்கள். முற்பிதாக்கள் கல்லறையிலிருந்து எழுந்துவரும்போது, பூரணப்படுத்தப்பட்ட மாம்சத்தில் வரும் விதத்தில் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெறுவார்கள். இவர்கள் ஆவியில் நீதிமான்களாக இருப்பதினால், திரும்பக்கொடுத்தலின் காலங்களுடைய துவக்கத்தில் பூரண மனுஷராக இருப்பார்கள்.

---

R5073

## முற்பிதாக்களின் ஜீவ-உரிமைகள்

(வாழ்வதற்குரிய) ஜீவிப்பதற்கான உரிமை என்பது ஒரு காரியமாகவும், நித்திய ஜீவனுக்கான உரிமை என்பது மற்றொரு காரியமாகவும் காணப்படுகின்றது. ஆதாம் ஜீவிப்பதற்கான உரிமையினை உடையவராய் இருந்தார்; எனினும் கீழ்ப்படிதலின் மூலம் என்றென்றும் ஜீவிப்பதற்கு, தான் பாத்திரவான்

என்பதை ஆதாம் நிரூபித்திருந்திருப்பாரானால், அந்த உரிமை நித்திய ஜீவனுக்கான உரிமையாகி யிருந்திருக்கும். இப்படியாகவே முற்பிதாக்களின் விஷயத்திலுமாகும்; இவர்கள் மரணத்தினின்று எழுப்பப்படும்போது, இவர்கள் ஜீவிப்பதற்குரிய உரிமையை உடையவர்களாய் இருப்பார்கள், ஆனாலும் மத்தியஸ்தர் மூலமாக மாத்திரமேயாகும். இவர்கள் தங்களுக்குச் சொந்தமாக ஜீவ-உரிமைகளைப் பெற்றிருப்பதில்லை, ஏனெனில் பிதாவினாலும், நீதியினாலும் அங்கீகரிக்கப்பட்டவைகள் தவிர மற்றபடி, வேறு எந்த உரிமைகளும் இருப்பதில்லை. முற்பிதாக்கள் ஏற்கெனவே தெய்வீக அங்கீகரிப்பைப் பெற்றுள்ளதாக அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குத் தெரிவிக்கின்றார். இவர்கள் தேவனைப் பிரியப்படுத்தினவர்களாக இருந்தபோதிலும், அவர் இவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கவில்லை; மேலும் இவர்கள் மத்தியஸ்தரைப் பிரியப்படுத்துபவர்களாக இருந்தாலும், அவர் ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவு மட்டும் இவர்களைப் பிதாவினிடத்திற்கும், நீதியினிடத்திற்கும் ஒப்படைப்பதில்லை.

எல்லாரும் தேவனுக்குப் பிழைத்திருக்கிறார்கள் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன (லூக்கா 20:38), ஏனெனில் அவரது கண்ணோட்டத்தின்படி அவர்கள் நித்திரை மாத்திரம் செய்கின்றார்கள் (உபாகமம் 31:16; யோவான்11:11 முதலான வசனங்களை வாசிக்கவும்). இப்படி முற்பிதாக்கள் மட்டும் அல்ல, மீதமுள்ள மனுக்குலத்தாரும் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகக் கருதப்படாவிட்டாலும், இவர்களும் இதே விதத்தில் தேவனுக்குப் பிழைத்திருக்கின்றார்கள். அவர் அவர்களுக்காய், மத்தியஸ்தர் மூலம் முன்னேற்பாடு ஒன்றைச் செய்திருக்கின்றார்; ஆனாலும் அந்த ஏற்பாடானது, ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவு வரையிலும் நிறைவடைகிறதில்லை. இருதய-நோக்கத்தில் பூரணம் மற்றும் முடிந்தமட்டிலுமான கீழ்ப்படிதல் எனும் தரநிலையினை அடைந்ததாலேயே - தேவனால் அங்கீகரிக்கப்பட்ட முற்பிதாக்கள், "தேவனைப் பிரியப்படுத்தினார்கள்" எனும் இச்சாட்சியினை பெற்றுக்கொண்டார்கள். அவர் இவர்களை அங்கீகரித்திருந்தாலும், இவர்கள் நித்திய ஜீவனை அருளப்பெற்றுக்கொள்ளவுமில்லை; நித்திய ஜீவனுக்கான எந்த உரிமையும் இவர்களுக்கு அங்கீகரிக்கப்படவுமில்லை.

எனினும் ஆதாமின் சந்ததியார் யாவரும் மீட்கப்படத்தக்கதாகவும், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும் தேவன் முன்னேற்பாடு செய்திருக்கின்றார். இந்த ஏற்பாட்டில் முற்பிதாக்கள் மட்டுமல்லாமல், மீதமுள்ள மனுக்குலத்தாரும் உள்ளடங்குவார்கள்.

## மத்தியஸ்தர் மூலமாய் ஜீவன்

தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஏற்பாடானது மத்தியஸ்தருக்குப் புறம்பான ஏற்பாடல்ல, ஏனெனில் மத்தியஸ்தர் மூலமாக மாத்திரமே மனுக்குலமும், முற்பிதாக்களும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். (மத்தியஸ்தரின் இவ்வேற்பாட்டிற்கு ஒரே விதிவிலக்கானவர்கள், சபை வகுப்பார் ஆவார்கள்; இவர்கள் கிறிஸ்துவைத் தங்களுக்குப் பரிந்துபேசுபவராகப் பெற்றுக்கொண்டு, பிதாவினிடத்திற்கு வருகின்றவர்களாய் இருக்கின்றனர்.) ஆகையால், முற்பிதாக்களினால் வேறு எந்த வழியாகவும் வரமுடியாது. இவர்கள் மத்தியஸ்தர் மூலமாகப் பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்; இவர்கள் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரர்கள் இல்லை என்பதனால், இவர்கள் ஒட்டுமொத்த உலகத்தினை மத்தியஸ்தர் கையாளும் காலத்தில், மற்றொரு வகுப்பாரின்கீழ் வர வேண்டும். ஒட்டுமொத்த உலகத்தைக் கையாளும் காரியம் அப்போது நடந்துகொண்டிருக்கும்; மேலும் ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவின்போதே, இவர்களில் யாரையேனும் அவர் பிதாவினிடத்தில் ஒப்படைப்பவராய் இருப்பார்.

யேகோவா தேவன் தம் குமாரன் வாயிலாக மனுக்குலத்தினைக் கையாளுவதற்குரிய திட்டம் ஒன்றினை வகுத்துள்ளார். "பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்பதே அத்திட்டமாகும் (யோவான் 5:22). ஆகையால் தம்முடைய குமாரனைத் தவிர்த்து, தேவன் முற்பிதாக்களை நியாயந்தீர்க்கிறதில்லை. தேவனுடைய நியமிக்கப்பட்ட வேளைகளிலும், காலங்களிலும் - "ஏற்றவேளையில்," அதாவது மேசியா தம் வல்லமையைக் கையில் எடுத்துக்கொண்டு, தம் ஆளுகையினைத் துவங்கியிருக்கும்போதும் மற்றும் குறிப்பாக அந்த ஆளுகையின் முடிவில், குமாரன் இராஜ்யத்தினைப் பிதாவினிடத்தில் கையளிக்கும்போதும், ஆசீர்வாதத்தினை இந்த முற்பிதாக்கள் எதிர்ப்பார்த்திடலாம். (1 கொரிந்தியர் 15:24)

உலகத்தை ஆசீர்வதிப்பதற்குரிய இந்த ஏற்பாட்டினைப் பிதாவானவர் கையில் எடுக்காமல், உலகத்திற்கு மேசியாவாக இருக்கப்போகிற - அவர்களது பிரதான ஆசாரியனாக ஒப்புரவாக்குதலையும், மத்தியஸ்த ஊழியத்தையும் ஏறெடுக்கப்போகிற - மகாபெரும் மேசியாவினிடத்தில் அனைத்தையும் விட்டுவிடுகின்றார். உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே ஏற்பாடு பண்ணப்பட்டிருந்த அந்த மத்தியஸ்த வேலை நிறைவடையும்போது, "பூமியெங்கும் பிரபுக்களாக" காணப்படும் முற்பிதாக்களும், ஒட்டுமொத்த மனுக்குலமும் அப்போது திருப்தியடைந்திருப்பார்கள்.

## மத்தியஸ்தரின்கீழ் முற்பிதாக்கள்

முற்பிதாக்கள் உயிர்த்தெழுந்து வரும்போது, அவர்கள் ஜீவ-உரிமைகளை உடையவர்களாய் இருப்பார்களா எனும் கேள்வியானது, வெவ்வேறு கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கப்படலாம். வேதவாக்கியங்களினுடைய போதனையின்படி, பூரணமாய் இருக்கும் யார் ஒருவரும் நித்திய ஜீவனுக்குப் பாத்திரமாய் இருப்பார்கள். கல்லறையினின்று வெளிவருகையில் முற்பிதாக்கள் பரிபூரணமாய், எதுவும் குறைவுடாமல் வருவார்கள் என்று வேதவாக்கியங்கள் போதிப்பதாக நாங்கள் புரிந்திருக்கின்றோம். இவர்கள் பரிபூரணத்துடன் காணப்படுவதினால், பூரணமாய் இருக்கும் யாரொருவனும் பிழைப்பான் எனும் தெய்வீக ஏற்பாட்டின்கீழ் இவர்கள் வருவார்கள் என்று சொல்லவே நாங்கள் விரும்புவோம். ஆனாலும் தேவனே யாவருக்கும் நியாயாதிபதியாக இருக்கின்றார் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும் (எபிரெயர் 12:23). எனினும் முற்பிதாக்களைப் பொறுத்தமட்டில், இவர்கள் ஆயிர வருஷ யுகத்தின்போது, தேவனுடன் எந்த நேரடியான கையாளுதல்களையும் பெற்றிருக்கமாட்டார்கள். தனிப்பட்ட விதத்தில் பார்க்கப்பட்டால், இவர்கள் இப்படி நேரடியாகக் கையாளப்படுவதற்கு ஆயத்தமாகவே இருப்பார்கள்; ஆனாலும் மீட்பர், தீர்க்கத்தரிசி அல்லது போதகர் அல்லது ஆசாரியன் அல்லது முழு மனுக்குலத்தின் மத்தியஸ்தர் வாயிலாக இவர்களைக் கையாளுவது பொருத்தமான காரியமாக இருக்குமெனத் தேவன் தம்முடைய ஞானத்தில் பார்த்திருக்கின்றார். மேலும் முழு மனுக்குலமும் பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்படுவதற்கு துவக்கத்தில் ஆயத்தமாக இருக்கமாட்டார்கள் என்பதினால், மனுக்குலம் பிதாவாகிய, மகா நியாயாதிபதியின் கைகளில் ஒப்படைக்கப்படுவது வரையிலும் முற்பிதாக்கள் காத்திருக்க வேண்டும்.

ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவின்போது பூரணப்படுத்தப்பட்டுள்ள மனுக்குலத்தின் முழு உலகமும், பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:24). இவர்களை அவர் ஏற்றுக்கொள்ளும்போது, இவர்கள் ஆதாம் பூரணமாய் நின்ற அதே நிலைமையில் நிற்பார்கள். ஆதாம் பரீட்சிக்கப்பட அவசியமாய் இருந்ததுபோலவே, ஆதாம் காணப்பட்ட அதே பரிபூரண நிலைமையில்

காணப்படும் முழு மனுக்குலமும் பரீட்சிக்கப்படுவார்கள். இவர்களுக்கு நித்திய ஜீவன் அருளப்படுவதற்கு முன்னதாக, அந்த ஜீவனுக்கு இவர்கள் பாத்திரவான்கள் என்பதைத் தெய்வீக நீதியானது பரீட்சிக்க வேண்டும்.

## இரட்சிப்பின் வேலையில் இரண்டாம் ஸ்தானம்

முற்பிதாக்களைக்குறித்த பல்வேறு பதிவுகளானது, இவர்கள் தாங்களாகவே முன்வந்து தேவனுக்குப் பிரியமாய் இருக்கும் நிலையினை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றது. இந்த முற்பிதாக்கள் அனைவரும் நித்திய ஜீவனுக்குரிய ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ளாமலேயே விசுவாசத்தில் மரித்தார்கள், காரணம் சபையாகிய நம்மையல்லாமல் இவர்கள் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று நியமித்திருக்கின்றார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெரிவிக்கின்றார் (எபிரெயர் 11:13, 39, 40). வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், தேவனைப் பிரியப்படுத்தினார்கள் என்ற சாட்சியினை இவர்கள் பெற்றிருந்தபோதிலும், இவர்கள் இரட்சிப்பின் வேலையில் முதலாம் ஸ்தானத்தில்/rank இல்லாமல், இரண்டாம் ஸ்தானத்திலேயே காணப்படுவார்கள். தெய்வீகத் திட்டத்தினை நிறைவேற்றிடும் வேலையில் மேசியா தம் இராஜ்யத்தினைக் கையில் எடுப்பது வரையிலும், அவரது மணவாட்டிகள் பூரணப்படுத்தப்படுவது வரையிலும், முற்பிதாக்கள் தங்கள் ஆசீர்வாதத்தினையும், தங்கள் பூரணத்தினையும் அடைய முடியாது. இவைகளுக்குப் பிற்பாடே தங்களுக்கான திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை இவர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

முற்பிதாக்கள் "மேன்மையான உயிர்த்தெழுதலை" வாஞ்சித்தார்கள் என்று அப்போஸ்தலனால் கூறப்படும் உண்மையானது, இவர்களுக்கு அருளப்படும் உயிர்த்தெழுதலானது, மீதமுள்ள மனுக்குலத்திற்கு அருளப்படும் உயிர்த்தெழுதலைக்காட்டிலும் மேன்மையானதாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது; அதாவது கல்லறையினின்று வெளிவந்தது முதலே முற்பிதாக்கள் ஜீவனைப் பூரணமாகப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமானவர்களாய் இருப்பார்கள், ஆனால் மற்றவர்களின் உயிர்த்தெழுதல் விஷயத்தில் அவர்கள் வெளிவந்த பிற்பாடு, படிப்படியாகச் சம்பவிக்கும். "ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு மற்றும் அனைத்துத் தீர்க்கத்தரிசிகளும்" - அனைத்து முற்பிதாக்களும் மரணத்தினின்று விழித்தெழுகையில், மனித பூரணத்திற்கு முழுவதுமாகத் திரும்பக் கொண்டுவரப் படுவார்கள்; மேலும் மீதமுள்ள மனுக்குலத்திற்கு ஆயிர வருஷ காலங்களில் "நியாயத்தீர்ப்பின்படியான உயிர்த்தெழுதல்" அவசியமாய் இருப்பதுபோன்று, முற்பிதாக்களுக்கு அவசியப்படாது.

ஆதாம் விழுந்துபோவதற்கு முன்பிருந்த அதே நிலைமைக்குத் துல்லியமாக இந்த முற்பிதாக்கள் திரும்பிவருவார்கள்; ஆனாலும் ஆதாமைக்காட்டிலும் அதிகமான அனுபவத்தின் அநுகூலத்தினை உடையவர்களாய் இருப்பார்கள். ஆதாம் பூரணமானவராய் இருந்தார்; இவர்களும் பூரணராய் இருப்பார்கள். ஆதாமிற்குப் பாவத்துடனான அனுபவம் இருக்கவில்லை; ஆனால் முற்பிதாக்களோ பாவத்துடன் அதிகமான அனுபவத்தினைப் பெற்றுக்கொண்டவர்களாய் இருப்பார்கள். இந்த அனுபவங்கள் குணலட்சணத்தை வளர்த்தன; அதாவது இவ்வனுபவங்களானது நீதியின் விஷயத்தில் அநுகூலமான தீர்மானத்தை எடுத்துக்கொள்ளும் நிலைமைக்குள் இவர்களைக் கொண்டுவந்தது; இவர்களுக்கு வந்த பரீட்சைகளானது, தேவனுக்கான இவர்களது கீழ்ப்படிதலையும், அவரது சித்தத்திற்கான இவர்களது நேர்மையினையும் நிரூபித்தவைகளாயின. இந்த நேர்மையினைத் தக்கவைத்துக்கொள்ளத்தக்கதாக, இவர்களில் அநேகர் தங்கள் ஜீவன்களை ஒப்புக்கொடுத்தனர்.

இந்த முற்பிதாக்கள் ஆவிக்குரிய இராஜ்யத்தில் பங்குபெறுவதில்லை, காரணம் நமது கர்த்தர் இயேசுவினால் ஈடுபலியானது கொடுத்துவைக்கப்படுவதற்கு/laid down முன்பு வரையிலும், பரம அல்லது "பரலோக அழைப்பு" கொடுக்கப்படுவது என்பது கூடாத காரியமாய் இருந்தது; எனினும் இவர்கள் தீமையினுடைய ஆளுகையின்கீழ், தேவனால் அங்கீகரிக்கப்படும் விதத்தில் தங்கள் விசுவாசம் மற்றும் அன்பிற்குச் சான்று பகர்ந்துள்ளப்படியால், இவர்கள் உலகத்தாரைவிடச் சிறந்த, மேலான நிலையினை அடைவார்கள். இப்படியாக இவர்கள் பூமிக்குரிய பிரபுக்களாகவும், ஆவிக்குரிய இராஜ்யத்தின் பிரதிநிதிகளாகவும் காணப்படுவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டனர் மற்றும் பாத்திரவான்களாக நிரூபிக்கப்பட்டனர். இதற்கு இசைவாகவே தீர்க்கத்தரிசியாகிய தாவீது கிறிஸ்துவை நோக்கி: "(நீண்ட காலமாய்ப் பிதாக்களாகக் கருதப்பட்டுவரும்) உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர் (பிரதானமானவர்களாக, அதிபதிகளாக வைப்பீர்)" என்று கூறியுள்ளார். (சங்கீதம் 45:16)

மீதமுள்ள மனுக்குலத்தாரைக்காட்டிலும், இந்த முற்பிதாக்களின் உயிர்த்தெழுதலானது, "மேன்மையானதாக" இருக்கும், ஏனெனில் இவர்கள் இவர்களது ஜீவிய நாட்களிலேயே மிகவும் கடுமையாய்ச் சோதிக்கப்பட்டு, "விசுவாசத்தின் மூலம் நற்சாட்சிப் பெற்றவர்களானார்கள்" மற்றும் அந்த உண்மைக்கான பலனை அடைவார்கள். இவர்கள் அப்போது பரிபூரண மனுஷர்களாகக் காணப்படுவார்கள்; ஆதாமில் இழந்த அனைத்தையும் முழுமையாய்த் திரும்பப்பெற்றவர்களாய் இருப்பார்கள் - மனதிலும், தேவனுக்கொத்த சாயலிலும், சரீர ஆற்றல்களிலும் பூரணமடைந்திருப்பார்கள்.

## குணலட்சண-வளர்ச்சியினுடைய அம்சங்கள்

பாவத்துடன் பெரிதான அனுபவம் பெற்றுக்கொண்டவர்களாகவும், மரணபரியந்தம் தேவனுக்கான நேர்மையில் நிலைத்திருக்கும் விஷயத்தில் தங்களை உண்மையுள்ளவர்களென நிரூபித்துவிட்டவர் களாகவும் இந்த முற்பிதாக்கள் இருப்பார்களானால், பின்னர் ஏன் இவர்கள் ஜீவ-உரிமைகளையும், ஜீவனை பூரணமாகவும் ஒரே மாத்திரத்தில் பெற்றுக்கொள்ளக்கூடாது? ஆயிர வருஷ யுகத்தினுடைய ஆரம்பத்திலேயே பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, யேகோவாவினால் அங்கீகரிக்கப்படுவதற்கு வேண்டி, இவர்கள் ஏன் யுகம் முடிவுபெறுவது வரையிலும் காத்திருக்கக் கடமைப்பட்டிருக்க வேண்டும்? இதற்குப் பதில் என்னவெனில்: மாபெரும் பரிந்துபேசுபவர், மீட்பர் மூலமாக இராஜரிக ஆசாரியக்கூட்டத்தை ஆயத்தப்படுத்தும் வேலையில் சபை முழுவதையும் தேவன் உள்ளடக்கியுள்ளது போலவே, மேசியாவின் மத்தியஸ்த வேலையிலும் அவர் முழு உலகத்தினையும் உள்ளடக்கியுள்ளார்; மேலும் அந்த மத்தியஸ்த வேலை ஆயிரம் வருஷங்கள் தொடர்ந்து நடக்கும். ஆகையால் அவ்வேலையின் கீழ்வருபவர்கள் அனைவரும், அவர்களில் எவரேனும் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னதாக, யுகத்தின் முடிவுவரைக் காத்திருக்கக் கடமைப்பட்டிருப்பார்கள்.

முற்பிதாக்கள் "தேவனைப் பிரியப்படுத்தினார்கள்" எனும் சாட்சியினைப் பெற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றனர். தேவன் தம்முடைய திருவுளசித்தத்தினை இவர்களுக்கு நியாயப்பிரமாணமென அல்லது செய்ய வேண்டிய கடமையெனக் கொடுக்கமுடிகிற நிலை வருவதற்கு முன்னதாகவே, இன்னுமாய்த் தமக்குக் கீழ்ப்படியுங்கள் என்று இவர்களுக்குச் சொல்ல முடிகிற நிலை வருவதற்கு முன்னதாகவே, கீழ்ப்படிந்தால் நித்திய ஜீவனை வாக்களிப்பதாக இவர்களுக்குச் சொல்ல முடிகிற நிலை வருவதற்கு முன்னதாகவே, இவர்கள் அவரது சித்தத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு, அதைச் செய்யவும் தொடங்கின விதத்தில், இவர்கள் தேவனைப் பிரியப்படுத்தினார்கள். இவர்களில்

ஒருவரான ஆபிரகாம், உலகில் மீட்பானது அப்போது நிறைவேற்றி முடிக்கப்படாமலிருக்க, இவர் தேவனிடத்திலுள்ள தனது விசுவாசத்தினை வெளிப்படுத்தினார். கிறிஸ்து அப்போது இன்னமும் வரவில்லை. ஆபிரகாம் அப்போது ஜீவனா அல்லது மரணமா எனும் பரீட்சையில் இல்லாமல் இருந்தும், தேவன் அவருக்குத் தமது தயவினை அருளினார் மற்றும் இவர்கள் தம்மைப் பிரியப்படுத்தினதாகத் தெரிவித்தார். இவரும் சரி, மற்ற அனைத்து முற்பிதாக்களும் சரி, பரிபூரண மனுஷீகத்திற்குரிய இந்த உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்வார்கள். ஆனால் மனுஷீக பரிபூரணம் என்பது மனுக்குலத்தின் உலகத்திற்குக் கிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஆளுகையின்கீழ் மாத்திரம் வரும் என்பதால், ஆயிர வருஷ யுகத்தின் முடிவுவரையிலும் முற்பிதாக்கள் தேவனிடம் அறிமுகப்படுத்தப்பட முடியாது.

ஆகையால் ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் இராஜ்யமானது பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்படும் காலத்திற்கு முன்புவரையிலும், முழுமையான விதத்தில் இவர்கள் ஜீவனை உடையவர்களாய் இருக்கமாட்டார்கள். இதற்கிடையில் (அதாவது ஒப்படைக்கப்படும் காலத்திற்கு முன்புவரையில்) - அதாவது ஆயிர வருஷ காலத்தில், இவர்கள் மனுஷீக சுபாவத்தினுடைய பூரணத்தையும், இன்னுமாக மாபெரும் மத்தியஸ்தர் மூலம் மனுக்குலத்திற்குத் தேவனால் அருளப்படும் அனைத்து ஆசீர்வாதங்களையும் மாத்திரம் பெற்றிருப்பார்கள்.

## உறுதியடைந்த குணலட்சணம் அவசியம்

ஒரு ஜீவி பரிபூரணமாய்ச் சிருஷ்டிக்கப்பட்ட காரியம் என்பது அவரிடத்தில் நல்ல குணலட்சணத்தினை உருவாக்கும் என்பது உண்மையானால், இவ்விதத்தில் ஆதாம் பரிபூரணராய் இருந்தார் என்று கூறலாம். அவர் மனதிலும், சரீரத்திலும் பரிபூரணமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருந்தார். அவரது மனம் தேவனுடைய சாயலில் இருந்தது; எந்தக் குறைபாடும் இருக்கவில்லை; மேலும் அவரது மனம் பாவத்திற்கான விருப்பமற்று இருந்தது; நேர்மாறாய் இருந்தது; நீதியினை மதித்தவராகவும், அதன்பால் ஈர்ப்பினை உடையவராகவும் காணப்பட்டார்; நல்ல மனுஷன் என்று சொல்லப்படுகிற விதத்தில் இருந்தார்; ஏனெனில், தேவன் அப்படியாகவே அவரைச் சிருஷ்டித்திருந்தார்.

இன்னொரு விதத்தில் பார்க்கையில், ஆதாம் ஒருபோதும் பரிபூரண குணலட்சணத்தை உடையவராய் இருக்கவில்லை; அதாவது அவரது குணலட்சணம் வளர்க்கப்படவில்லை, பரீட்சிக்கப்படவில்லை மற்றும் நிரூபிக்கப்படவில்லை. தேவன் அவரைப் பரீட்சித்தார்; இவரது குணலட்சணம் நல்லதாக இருந்தும், இவருக்குப் பூரண சரீரம் இருந்தும், இவரது அனுபவமின்மையின் காரணமாய்த் தோற்றுப்போனார். தனது பரீட்சையிலுள்ள முதலாம் அம்சத்திலேயே தோற்றுப் போய்விட்டார். ஆகையால், குணலட்சணத்திற்கு முழுச்சான்று பகரும் பரீட்சைகளை, முற்பிதாக்கள் எந்த விதத்தில் பெற்றிருந்திருப்பார்கள் என்று நம்மைச் சிந்திக்கவைக்கலாம். இந்த மனுஷர்களைக்குறித்த பதிவுகளை நாம் ஆராய்ந்துபார்க்கையில், இவர்கள் மகா விசுவாசத்தினை வெளிப்படுத்தினவர்களாக இருப்பதையும், தேவனுக்கான இவர்களது நேர்மையின் விஷயத்திலும், அவரிடத்திலுள்ள இவர்களது நம்பிக்கையின் விஷயத்திலும் இவர்கள் சில கடுமையான சோதனைகளையும், பரீட்சைகளையும் அனுபவித்தவர்களாக இருப்பதையும் காண்கின்றோம். தேவனைப் பிரியப்படுத்தினார்கள் என்று இவர்களைக்குறித்துக் கொடுக்கப்பட்ட சாட்சியமானது நம்மை ஆச்சரியத்திற்குள்ளாக்குவதில்லை. இச்சாட்சியமானது, இவர்கள் போதுமான அளவுக்குக் குணலட்சணத்தினை வளர்த்தியிருக்கின்றார்கள் என்பதை நமக்கு உறுதிப்படுத்துகின்றது. இவர்களது இருதயங்கள் மிகவும் நேர்மையாய்க் காணப்பட்டதைத் தேவன் பார்த்திருந்திருக்க வேண்டும், இல்லையேல் இவர்களை மேன்மையான உயிர்த்தெழுதலுக்குப் பாத்திரவான்களென அவர் ஒருபோதும் கருதியிருந்திருக்கமாட்டார்.

எனினும் இவர்களுக்கு இன்னும் கூடுதலான அனுபவமும், பரீட்சையும் தேவையாய் இருக்குமென நாங்கள் நம்புகின்றோம்.

இந்த முற்பிதாக்கள், சபையைப்போன்று, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை; "அந்நாட்களுக்குப் பிறகு" தேவன் "மாம்சமான யாவர் மேலும், தம் ஆவியியை ஊற்றுவார்" என்பதாக நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது (யோயேல் 2:28; அப்போஸ்தலர் 2:17). பரிசுத்த ஆவி பொழியப்படும் காலங்களுக்கு முன்பாக முற்பிதாக்கள் வாழ்ந்த காலம் காணப்படுகின்றது; ஆகையால், "மாம்சமான யாவர்மேலும்" வரும் இவ்வாசீர்வாதத்தில், ஏதேனும் அளவை முற்பிதாக்கள் பெற்றுக்கொள்வார் களானால், அது எதிர்காலத்தில்தான் இருக்க வேண்டும்; மேலும் இவர்களுக்குப் பரிசுத்த ஆவி கொடுக்கப்படும் காரியம் என்பது, ஏற்கெனவே பூரணமாய்க் காணப்படும் இவர்களது குணலட்சணங்களை உறுதிப்படுத்துவதற்கும், ஸ்திரப்படுத்துவதற்கும், மெருகூட்டுவதற்கும் ஏதுவானதாய் இருக்கும். இவர்கள் பெரிதான அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்படுவார்கள்; மேலும் இவர்கள் ஏற்கெனவே கடுமையான சோதனைகளைச் சகித்துள்ளப்படியினாலும், முழுமையான இருதய நேர்மையினை நிரூபித்துள்ளபடியினாலும், இவர்கள் தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாக எவ்வாறு தங்களது தாலந்துகளையும், ஆற்றல்களையும் பயன்படுத்துவது என்பதை மாத்திரம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருப்பார்கள்.

இந்த வகுப்பார் அழிக்கப்பட முடிகிறவர்களாக இருப்பதனிமித்தம், மரித்துப்போக முடிபவர்களாக இருப்பினும், இவர்களில் எவரேனும் நித்திய ஜீவன் பெற தகுதியற்றுப் போவார்கள் என்பது யோசித்துப் பார்க்கவே முடியாத காரியமாகும். அறியாமையுள்ள மற்றும் மூடநம்பிக்கையுள்ள சூழ்நிலைமைகளின் கீழ்க்கடுமையான பரீட்சைகளில் நின்றவர்களாகவும், உலகம் மாம்சம் மற்றும் எதிராளியிடமிருந்து வரும் சோதனைகளைச் சகித்தவர்களாகவும் மற்றும் இம்மாதிரியான நிலைமைகளின்கீழ் நேர்மையினை நிரூபித்தவர்களாகவும் உள்ள இந்த மனுஷர்கள், ஆயிர வருஷ யுகத்தினுடைய மிகவும் சாதகமான சூழ்நிலைகளின்கீழ்த் தங்கள் பூரணங்களைத் தக்கவைத்துக்கொள்ள முடிகின்றவர்களாய் இருப்பார்கள் என்று அனுமானித்துக்கொள்வது நியாயமானதாக இருக்கும்.

இவர்கள் தவறுகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை; ஆனாலும் இவர்கள் விழித்தெழும்போது, இவர்கள் உடனடியாக யேகோவா தேவனிடத்தில் ஒப்படைக்கப்படுவார்களானால், ஆதாமின் விஷயத்தில் இருந்ததுபோலவே, சிறு திசைமாற்றம்கூட இவர்களுக்கு மரணத்தைக்கொண்டு வந்துவிடுகின்றதாய் இருக்கும்; மேலும் இப்படி உடனடியாக ஒப்படைக்கப்பட்டால், இவர்களது நிலைமை, கிறிஸ்துவினுடைய ஆயிர வருஷ ஆளுகையின்போது புது உடன்படிக்கையின்கீழ்க் காணப்படுவதைக் காட்டிலும் மிகவும் அனுகூலமற்றதாக இருக்கக்கூடும். இது இவர்களது மேலான நன்மைகளுக்கு ஏதுவான மிகுந்த கிருபையான ஏற்பாடாகும்; ஏனெனில் இவர்கள் செய்ய வாய்ப்புள்ள ஏதேனும் தவறானது, கிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஊழியத்தினால் மூடப்படும் மற்றும் இவர்களை மரண தண்டனையின் கீழ்க்கொண்டுவராமலும் இருக்கும்.

இந்த முற்பிதாக்களில் சிலருடைய சரித்திரத்தைப் பார்க்கையில், அவை பூரணமானவையாக இருப்பதில்லை மற்றும் சபை "ஜெயங்கொண்டவர்களாக" இருக்கும் விதத்திலும் இவர்கள் இருப்பதாக எப்போதும் பார்க்கமுடிகிறதில்லை. உதாரணத்திற்கு, இந்த முற்பிதாக்களில் ஒருவராகக் குறிப்பிடப்படும் சிம்சோனின் காரியத்தினை எடுத்துக்கொள்ளலாம். சிம்சோனைக்குறித்த கடைசி பதிவில், இவர் பெலிஸ்தரின் கரங்களில் காணப்பட்டபோதிலும், இவர் அப்போதும் தேவனுக்கு நேர்மையானவராகக் காணப்பட்டதாகவும், தேவனுடைய காரணங்களுக்காய் ஊழியம்புரிவதற்குரிய வாய்ப்பிற்காக ஜெபம்பண்ணினவராகவும் நாம் வாசிக்கின்றோம்; கர்த்தர் இவரது ஜெபத்திற்குச் செவிகொடுத்து, பெலிஸ்தருக்கு இவர் வேடிக்கைகள் காட்டிக்கொண்டிருந்த கட்டடத்தின் தூண்களைத்

தள்ளிப்போடுவதற்கு இவரை அனுமதித்தார்; அங்குப் பெலிஸ்தர்கள், அந்த வீட்டைத் தாங்கி நின்ற தூண்களுக்கிடையே காணப்பட்டனர் மற்றும் அது விழுந்தபோது சிம்சோனோடுகூட, மூவாயிரம் பேருக்கும் அதிகமான சத்துருக்களும் கொல்லப்பட்டனர்.

சிம்சோனுடைய அனுபவங்களில், விசுவாசமே குணலட்சணங்களில் பிரதான அம்சமாய் வளர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இவரது குணலட்சணத்தில் எவ்வளவு பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம், சாந்தம், தயவு முதலானவைகள் வளர்க்கப்பட்டன என்பதை நாம் அறியோம்; இது விஷயமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை; மேலும் சிம்சோன் மிகுந்த பண்புகள் உள்ள மனுஷனாக இருந்தார் என்று அனுமானிப்பதற்கு நமக்கு எந்தக் காரணங்களும் இருப்பதில்லை. தயவும், சாந்தமும் இவரது இயல்புகளில் காணப்படுவதாக உண்மையில் நாம் ஒருபோதும் எண்ணினதில்லை. இவ்வியல்புகள் இவருக்கு காணப்பட்டது என்று, கழுதையின் தாடை எலும்பைக்கொண்டு ஆயிரம் புருஷர்களைக் கொன்றுபோட்ட சம்பவமும், இன்னும் இவரது மற்ற அனுபவங்களும் சுட்டிக்காண்பிக்கிறதில்லை.

சிம்சோன் முற்றிலும் பூரணமான நிலைமையில் திரும்பக்கொண்டுவரப்பட்டு, ஆயிர வருஷ யுகத்தினுடைய மிகவும் சாதகமான சூழ்நிலைகளின்கீழ்க் காணப்பட்டாலும், அங்கு இவர் ஒருபோதும் சந்தித்திராத ஜீவியத்தின் அனுபவங்கள் அநேகமாக இருக்கும் என்றும், அவை இவருக்கு மிகவும் புதியவையாக இருக்கப்போவதினால், இவர் தவறு செய்துவிடுவதற்குரிய அபாயத்தில் காணப்படலாம் என்றும் நாம் நியாயமாய் அனுமானித்துக்கொள்ளலாம். "மாம்சமான யாவரும்" ஆசீர்வதிக்கப்படப்போகும் நாட்களில், இவர் தேவனுடைய ஆவிக்கடுத்த காரியங்களைக்குறித்து அதிகமாய்க் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பது உறுதியே.

சுருக்கமாகக் கூறவேண்டுமெனில், *ஆயிர வருஷ யுகம் முடிவதுவரையிலும், நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்களா என்று தீர்மானிக்கப்படுவதற்கு ஏதுவாய், முற்பிதாக்கள் தேவனுடன் நிஜமான உறவிற்குள் மற்றும் தனிப்பட்ட உறவிற்குள் கொண்டுவரப்படமாட்டார்கள்*; ஏனெனில் அந்த யுகமானது, தற்காலத்திலுள்ள ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட வகுப்பாரைத் தவிர்த்து, மனுக்குலத்தாரில் யாரெல்லாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகவே ஒதுக்கப்பட்ட காலப்பகுதியாக இருக்கின்றது. ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனுக்குலம் யாவரும் சரீர பரிபூரணத்தினை எட்டியிருக்கும்போது, இவர்கள் நித்திய ஜீவன் பெறத் தகுதியானவர்களா அல்லது இல்லையா என்பது *பிதாவினால் பரீட்சிக்கப்படும்*, அதாவது ஆதாம் பரிபூரணத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, இவர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரவானா அல்லது இல்லையா என்று பரீட்சிக்கப்பட்டது போன்றாகும்.

புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாடுகளின்கீழ் முற்பிதாக்களும் உலகத்தாரில் ஒரு பாகமாகக் காணப்படப்போவதினால், ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவு வரையிலும் இவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவதற்குரிய தங்களது பாத்திரத்தன்மை தொடர்புடைய தெய்வீக நீதியினை, தெய்வீக நீதிமன்றத்தின் முடிவினைப் பெறுவதில்லை; அதாவது உண்மையுள்ள மனுக்குலத்தாருக்கு நித்திய ஜீவன் எனும் மகா பலனைக் கொண்டுவருவதுபோல, முற்பிதாக்களுக்கும்கூடக் கொண்டுவந்திடும் அந்த யுகத்தினுடைய முடிவின்போதுள்ள பரீட்சையானது முடிவடைவதற்கு முன்புவரையிலும், முற்பிதாக்கள் நித்திய ஜீவனைப் பெறுவதற்குரிய தங்களது பாத்திரத்தன்மை தொடர்புடைய தெய்வீக நீதியினைப் பெறுவதில்லை.

R5292 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# புது உடன்படிக்கை

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்." (எரேமியா 31:31)

"புது உடன்படிக்கை" என்பது, தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் பண்ணப்படும் புதிய ஓர் ஏற்பாட்டிற்கான வேதவாக்கிய பெயராகும்; இதன் மூலம் மனுக்குலத்தைத் தம்முடன் இணக்கமுள்ள நிலையில் மறுபடியுமாகப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, தேவன் நோக்கம் கொண்டுள்ளார். தேவனுடன் ஐக்கியமுள்ள நிலையே, ஆதாம் ஆதியிலே அனுபவித்ததும், தனது கீழ்ப்படியாமையின் நிமித்தம் இழந்துபோனதுமான உடன்படிக்கையின் உறவாகக் காணப்படுகின்றது; இது இஸ்ரயேலர்களுடன் சீனாய் மலையில் நிழலான விதத்தில் புதுப்பிக்கப்பட்டது, எனினும் அவர்களால் ஜீவ ஆசீர்வாதத்தை அதனிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியவில்லை.

நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மோசே மத்தியஸ்தராய் இருந்தார் (யாத்திராகமம் 19:3-9; 24:3-8). ஒருவேளை இஸ்ரயேலர்கள் தம்முடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வார்களானால், நித்திய ஜீவனை அருளப்பெறுவார்கள் என்று தேவன் ஒப்புக்கொண்டிருந்தார். இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிறுவுதலானது, மத்தியஸ்தராகிய மோசேயினால், அவர் ஏறெடுத்த பலியின் வாயிலாக நடைபெற்றது. பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய நிழலான ஏற்பாட்டில், இந்தப் பாவநிவாரணநாளின் பலிகளானது வருஷந்தோறும் தொடர்ந்து செய்யப்பட்டு வந்தது.

பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய மத்தியஸ்த ஊழியத்தினால், இஸ்ரயேல் தேவனுடன் நிழலான உறவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டதுபோல, புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய மத்தியஸ்த ஊழியமும்கூட, தெய்வீகப் பிரமாணத்தை மனுக்குலம் தொடர்ந்து கைக்கொள்ளும் பட்சத்தில், அவர்களை நிஜமான உடன்படிக்கை உறவிற்குள்ளும், திவ்விய தயவைப் பெறும் நிலைக்குள்ளும் கொண்டுவரும். தேவன் இந்தப் புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையினை, புதிய உடன்படிக்கையினுடைய மத்தியஸ்தர் மூலமாக அறிமுகம்பண்ணுவார்; இந்த மத்தியஸ்தரில் முழு ஏற்பாடும் மையம்கொண்டிருக்கின்றது மற்றும் இவர் மூலமாகவே நடைமுறைப்படுத்தப்படும். ஆயிரம் வருஷங்கள் இந்த மத்தியஸ்தர் மனுக்குலத்திற்காக ஒரு வேலையை ஆற்றுவார். ஒரு பிரதான ஆசாரியனாக அவர் மனுக்குலத்தை சீர்த்தூக்குவார்; ஓர் இராஜாவாக அவர் அவர்களை நீதியில் ஆளுகைசெய்வார். ஜனங்களை அவர்களுடைய சீரழிவினின்று வெளிக்கொணருவதற்கும், ஏதேனில் வைத்து ஆதாமினால் இழந்துபோகப்பட்ட தேவனுடைய சாயல் மற்றும் ரூபத்திற்கு அவர்களை மீண்டும் சீர்ப்பொருத்துவதற்கும், ஆயிர வருஷங்கள் முழுக்கத் தேவைப்படும்.

இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய விசேஷித்த பலிகளே, விசேஷித்த மத்தியஸ்தரால் பண்ணப்படும் மத்தியஸ்த ஊழியத்திற்குரிய அடிப்படையாகக் காணப்படும். நிஜமான ஏற்பாட்டில் இந்தப் பலிகள் ஒருபோதும் திரும்பத் திரும்பச் செலுத்தப்படுவதில்லை. விசேஷித்த பலிகள் மூலமாக, நிஜமான மத்தியஸ்தர் ஜனங்களின் பாவங்களை மன்னிப்பதற்குரிய வல்லமையை உடையவராய் இருப்பார். ஆகையால் "நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" என்றும், "கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" என்றும் எழுதப்பட்டுள்ளது. (எபிரெயர் 8:12; எசேக்கியேல் 36:26)

இப்படியாக மரபுவழியாய் மனுக்குலத்தின்மேல் கடந்துவந்த ஆதாமின் பாவமும், ஆக்கினைத் தீர்ப்பும், இனிமேலும் யார் ஒருவராலும் நினைவுகூரப்படாது. ஆனால் கல்லான இருதயத்தை எடுத்துப்போடும் வேலை, படிப்படியான வேலையாகும். இராஜ்யத்தினுடைய சீர்த்திருத்தும் வேலையானது, படிப்படியாக மனுக்குலத்தை இருதய கடினத்தினின்று விடுவித்து, அவர்களை மென்மையான இருதயமுடையவர்களாகவும், அன்பானவர்களாகவும் மாற்றும் வேலையாக இருக்கும். இந்தப் புதிய நிலைமைகளுக்குள்ளாக கடந்துவரும் அனைவரும், ஆதாமின் பாவத்திற்குப் பொறுப்பாளிகளாக நடத்தப்படுவதில்லை. "பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின" என்று நாம் வாசிக்கின்றோம் (எசேக்கியேல் 18:2-4). புதிய ஒழுங்குமுறையின்கீழ் ஒருவன் மரிப்பானானால், அவன் தன் சொந்த பாவத்திற்காக மரிப்பவனாகவே இருப்பான்.

மனுக்குலம் அனைவரும் அபூரண நிலைமையில் காணப்படுவதினால், அவர்கள் இன்னமும் பாவம்செய்வதற்கு ஏதுவானவர்களாகவே காணப்படுவார்கள். அவர்கள் நித்திய ஜீவனை அடைவதற்குரிய ஒரே ஏற்பாடு, மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் குடும்பத்திற்குள் வருவதேயாகும். அவர் அவர்களது அழிவுக்குரிய சரீரங்களை உயிர்ப்பிப்பார். கடந்த காலத்தினுடைய எந்த ஆக்கினைத்தீர்ப்பும் அவர்களுக்கு எதிராகக் காணப்படாது. இப்படியான உறவுமுறைக்குள் வருபவர்கள் மாத்திரமே தெய்வீக ஆசீர்வாதங்களை அடைவார்கள். புதிய உடன்படிக்கையின்கீழ் உள்ள கர்த்தருடைய விசேஷித்த தயவுகளானது கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கு மாத்திரமே உரியதாய் இருக்கும். சீர்ப்பொருந்துவதற்குரிய வாய்ப்புகளை நிராகரிப்பவர்கள், ஜனங்கள் மத்தியிலிருந்து சங்கரிக்கப்படுவார்கள். (அப்போஸ்தலர் 3:23)

## புதிய உடன்படிக்கையினை முத்திரையிடுதல்

தம்முடைய மரணத்தீர்ப்பின்கீழ்க் காணப்படும் ஜனங்களுடன், தேவன் ஓர் உடன்படிக்கைக்குள் பிரவேசித்திட முடியாது. ஆகையால் நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய நிழலான ஏற்பாட்டின்கீழ், காளைகள் மற்றும் வெள்ளாட்டுக்கடாக்களின் மரணமானது, தேவனுக்குச் செலுத்தப்பட்ட பலிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனாலும் காளைகள் மற்றும் வெள்ளாட்டுக்கடாக்களின் இரத்தமானது, பாவத்தை எடுத்துப்போடுவதற்குப் போதுமானவைகள் என்று அர்த்தமாகாது; மாறாக இவை நிஜமான உடன்படிக்கையின் கீழுள்ள நிஜமான பலிகளின் நிழல்களே ஆகும்.

ஒருவேளை புதிய உடன்படிக்கையானது இப்பொழுதே/இந்த யுகத்திலேயே முத்திரிக்கப்பட வேண்டுமானால், உடன்படிக்கைக்கான இரத்தம் அனைத்தும் முன்பே ஆயத்தப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒருவேளை இந்த இரத்தம் முன்பே சிந்தப்பட்டிருக்குமாயின், கிறிஸ்துவின் மரணத்தில் பங்கடையும் வாய்ப்பினை நாம் இப்பொழுது பெற்றிருந்திருக்க முடியாது. ஆகையால் புதிய உடன்படிக்கையானது இன்னமும் முத்திரிக்கப்படவில்லை என்பது நிச்சயமே. நிஜமான காளை கொல்லப்பட்டார் மற்றும் அவரது இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. நிஜமான வெள்ளாட்டுக்கடாக்கள் அடிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். அதன் பலி முடிவடையும்போது, இரத்தம் முழுவதும் மகா பிரதான ஆசாரியனுடைய கரங்களில் காணப்படும். பிற்பாடு ஆதாமின் பாவத்தைத் தள்ளுபடி செய்யும் வண்ணம் இரத்தம் செயல்முறைப்படுத்தப்படும். இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில், மாபெரும் மத்தியஸ்தர், தமக்கென்று நியமிக்கப்பட்ட வேலையைச் செய்ய ஆயத்தமாக இருப்பார்.

புதிய யுகத்தினுடைய முதலாம் வேலை, ஜனங்கள் அனைவருடைய பாவங்களையும் நிவிர்த்திசெய்யத்தக்கதாக, நிஜமான மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள கிருபாசனத்தின்மீது இரத்தத்தை நிஜமான விதத்தில் தெளிப்பதாகும். இது செய்யப்படுவது வரையிலும் புதிய உடன்படிக்கையானது அமலாக்கப்பட முடியாது. புதிய உடன்படிக்கையினை அமலாக்கும்படிக்கு நமது பிரதான ஆசாரியன் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இரத்தத்தைத் தெளித்தல் என்பது முத்திரிப்பதாக இருக்கும் - அதாவது சட்டப்படி உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

புதிய உடன்படிக்கையானது நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே வாக்களிக்கப்பட்டிருக்கின்றது, ஆனால் இன்னமும் செயலாக்கத்திற்கு வரவில்லை. ஜனங்கள் அனைவருடைய பாவங்களுக்காக இந்தப் பாவநிவாரண இரத்தமானது செயல்முறைப்படுத்தப்பட்ட உடனே, புதிய உடன்படிக்கையானது நிறுவப்படும். ஆதாம் மற்றும் அவரது சந்ததியின் பாவங்களுக்கான நிவிர்த்தியென, ஒட்டுமொத்த உலகத்தின் பாவங்களை இரத்து செய்யத்தக்கதாக இரத்தமானது செயல்முறைப்படுத்தப்படும்.

புதிய யுகத்தினுடைய துவக்கத்தில், உலகத்தார் புதிய ஜீவியத்தைத் துவங்குவார்கள் - தனித்தனியாக அல்ல, மாறாக ஒட்டுமொத்தமாக மேசியாவின் மூலமாகத் துவங்குவார்கள். மத்தியஸ்தருடைய புண்ணியமானது செயல்படுத்தப்படும். மத்தியஸ்தரே உலகத்தின் பாவங்களுக்கான நிவிர்த்தியினைப் பண்ணப்போகின்றார்; மேலும், இதனால் வரும் ஆசீர்வாதங்கள் அனைத்தும் மத்தியஸ்தரின் கரங்கள் மூலமாகக் கடந்துவரும். ஆயிர வருஷ யுகம் முழுவதிலும், ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் யார் ஒருவரும், அதை ஜீவனளிப்பவர் மூலமாகவே பெற்றுக்கொள்ள வேண்டும்; அவரே புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ் ஜீவனைக்கொடுப்பார் (1 யோவான் 5:12). புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அதன்படி ஜீவிக்க முயற்சிப்பது மூலமாக தவிர, மற்றப்படி யார் ஒருவராலும், தங்கள் ஆசீர்வாதத்தின் பங்கினைப் பெற்றுக்கொள்ள முடியாது. இப்படிச் செய்பவர்கள் அனைவரும் மத்தியஸ்தரினால் உதவப்படுவார்கள்; மேலும், தேவையான கிருபையினை மத்தியஸ்தர் மூலமாய் அருளப்பெறுவார்கள்.

திரும்பக்கொடுத்தலின் விஷயங்கள் துவங்குவதற்கு முன்னதாக அல்லது முற்பிதாக்களில் எவருக்கேனும் ஜீவிப்பதற்குரிய உரிமைகொடுக்கப்படுவதற்கு முன்னதாக, ஜனங்கள் அனைவரின் சார்பாக கிருபாசனத்தின்மீது இரத்தம் தெளிக்கப்பட வேண்டியுள்ளது என்றாலும், தேவனுடைய ஆசீர்வாதத்தையும், மேம்படுத்தும் அவரது உதவியினையும் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், இஸ்ரயேலர்களாகிட வேண்டும் - அதாவது தேவனுடைய பிரதிநிதியாகிய மத்தியஸ்தரை விசுவாசிப்பதன் மூலம், தேவனில் விசுவாசிகளாகிட வேண்டும். இந்தப் பிரமாணம் முழு உலகத்திற்கும் பொருந்தும். மனுக்குலம் நித்திய ஜீவனை அடையவேண்டுமானால், அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும்; இன்னுமாக இந்தப் பூமிக்குரிய இராஜ்ய வகுப்பாருடன் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும். பொல்லாதவர்கள் அனைவரும் அழிக்கப்படுவது வரையிலும், கிறிஸ்துவின் இராஜ்யமானது, பூமியினை ஆளுகை செய்திடவேண்டும். (1 கொரிந்தியர் 15:24-26)

## புது உடன்படிக்கையின் நன்மைகள் உலகளாவிய விதத்தில் காணப்படும்

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமலேயே, மனுக்குலம் அனைவரும் புதிய உடன்படிக்கையிலிருந்து சில நன்மைகளைப் பெற்றுக்கொள்வார்கள். அந்த நன்மை, அவர்கள் கல்லறையினின்று விழித்தெழுப்பப்படுகின்ற காரியமாகும். வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றது போன்று, ஒரு மனுஷனுடைய

ஆக்கினைத்தீர்ப்பானது அனைவர்மேலும் கடந்துவந்ததுபோல, ஒரு மனுஷன் மூலமாக, ஜீவனுக்கேதுவான நீதிமானாக்கப்படுதலானது அனைவருக்கும் கடந்துசெல்கின்றது (உரோமர் 5:12, 18). ஆகையால் புதிய உடன்படிக்கையினுடைய நன்மையானது அனைவருக்கும் வரும் என்று நாம் சொல்கின்றோம். ஒருவேளை இந்த ஏற்பாட்டினை ஒருவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று தேவன் முன்னறிவாரானால், சந்தேகத்திற்கிடமின்றி அவர் தம்முடைய திட்டத்தில் மாற்றத்தைப் பண்ணியிருப்பார்.

மனுக்குலத்திற்கு எதிராகக் காணப்படும் கணக்குகள் அனைத்தும் நீதியினால் இரத்து செய்யப்பட்ட பிற்பாடு, மனுக்குலமானது மத்தியஸ்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். ஒருவேளை மனுஷன் மத்தியஸ்தரின்கீழ்க் கொண்டுவரப்படவில்லையெனில், ஒருவேளை மனுஷன் தெய்வீக நீதியின்கீழ் (உடனடியாக) வைக்கப்படுவானானால், அவன் உடனடியாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுப்போவான், ஏனெனில் அவனால் நீதியானவைகளைச் செய்ய இயலாது. பிதா பாவிகளைக் கவனிப்பதில்லை. ஆகையால், அவர்கள் மத்தியஸ்தரிடம் விடப்படுவார்கள். கீழ்ப்படிபவர்கள் அனைவரும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்; அந்த நிபந்தனைகளின்கீழ்க் கீழ்ப்படியாமல் காணப்படுபவர்கள், இரண்டாம் மரணத்திற்குள் கடந்துபோவார்கள்.

……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

## எதிர்கால வெகுமதிகள் மற்றும் தண்டனைகள்

"சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன (ஏசாயா 2:3). முற்பிதாக்கள் பூமியெங்கும் பிரபுக்களாக்கப்படப்போகின்றார்கள் (சங்கீதம் 45:16). முதலாவதாக மற்றும் பிரதானமாக யூதர்களுக்கு இவ்வாசீர்வாதங்கள் கடந்துவரும்; இவர்களே சுபாவத்தின்படி புதிய ஒழுங்குமுறைகளின்கீழ் முதலாவது வருபவர்களாய் இருப்பார்கள். அனைத்து யூதர்களுமே இப்படி வந்துவிடுவார்கள் என்று நாம் சொல்லவில்லை, மாறாக அவர்களில் அதிகமான எண்ணிக்கையினர் வருவார்கள் என்று சொல்கின்றோம். காலப்போக்கில் மற்றவர்களும் வந்துவிடுவார்கள். அர்ப்பணம்பண்ணவில்லை என்றாலும், மற்றவர்களுக்கு இடறலாய் இருப்பதைவிட, உதவ விரும்பின நிலையில் காணப்படும் அநேக நல்ல ஜனங்கள் காணப்படுகின்றனர். இவர்களும் ஏற்றகாலத்தில், "சகல ஜாதிகளாலும் விரும்பப்படும்" இராஜ்யத்துடன் இணைந்துக்கொள்வார்கள்.

முற்பிதாக்கள் அபூரணத்திலிருந்து விடுதலை அடைந்து காணப்படும் காரியமானது, அனைவரின் கவனத்தையும் ஈர்க்கின்றதாய் இருக்கும். இவர்களைக்குறித்து உலகம் அறிய வருகையில்: "இவர்கள் தேவனுடைய ஜனங்கள் அல்லவா?" என்பார்கள். மேன்மையான உயிர்த்தெழுதலை முற்பிதாக்களுக்கு வழங்கினதன் மூலம், தேவன் இவர்களுக்கு வெகுமதி அளித்துள்ளார் என்று மனுக்குலம் உணர்ந்து கொள்வார்கள்; இன்னுமாக கடந்த காலங்களில் இவர்கள் காட்டின உண்மையின் நிமித்தமாகவே, மேன்மையான உயிர்த்தெழுதலை அடைந்திருக்கின்றார்கள் என்று மனுக்குலம் அறிந்துகொள்ளும்.

## தேவனுடன் உடன்படிக்கை உறவு என்பதே நிபந்தனை

கிறிஸ்து, முழு உலகத்தின் பாவங்களுக்குரிய விலையைக் கொடுத்துவைத்திருக்கின்றபடியால், அந்த விலையை இறுதியில் நீதியிடம் கொடுத்துவிடுவார். அந்த விலையானது நீதியினால் ஏற்றுக்கொள்ளப்படுகையில், முழு உலகத்தின் பாவங்களும் இரத்து செய்யப்படும்; மேலும் அனைத்தும்

மாபெரும் மத்தியஸ்தரிடம் கைமாற்றி ஒப்புக்கொடுக்கப்படும். புதிய உடன்படிக்கை நிறுவப்பட்ட பிற்பாடு, அந்த உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்படி செய்வதற்குப் பிரயாசப்படுவது என்பது ஜனங்களின் பங்காக இருக்கின்றது; ஒருவேளை அவர்கள் கவனக்குறைவாகத் தேவனுடைய பிரமாணத்தை மீறினாலும், அவர்கள் மத்தியஸ்தருடைய ஆளுகையின்போது அந்தப் பிரமாணத்திற்கு (நேரடியாக) பதில் கூறவேண்டியதில்லை; ஏனெனில் அக்காலத்தில் அவர்களுக்கும், பிரமாணத்திற்கும் இடையில் மத்தியஸ்தர் செயல்படுபவராய் இருப்பார்.

இந்தத் தற்கால ஜீவியத்தில் செய்யப்பட்ட யாதொரு மீறுதல்களையும், அவர்களுக்கு எதிரான குற்றக்கணக்காக மத்தியஸ்தர் வைத்திருப்பதில்லை. ஆனால் அதற்கென்று மனுக்குலம், எந்தத் தொல்லையினையும் அவர்களுக்குக் கொடுத்திராத சரீரங்களைப் பெற்றிருப்பார்கள் என்று புரிந்துகொள்ளப்படக்கூடாது; மாறாக மனுக்குலத்தினுடைய விழுந்துபோன நிலைமையின் காரணமாக, அவர்களுக்கு உண்டாகும் சிரமங்களில் அவர்களுக்கு உதவ வேண்டும் என்றே, புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாடுகளின்கீழ் உள்ள இந்த மேலான மத்தியஸ்தர் நோக்கம்கொண்டிருப்பார். அவர் புதிய உடன்படிக்கையினுடைய கோரிக்கைகளை ஜனங்கள் புரிந்துகொள்வதற்கு உதவுவார்.

நீதியினை திருப்திபடுத்துகிற காரியமானது, யார் ஒருவரும் திரும்பக்கொடுத்தலை அனுபவிப்பதற்கு முன்பு அவசியமான காரியமாகும். இப்படி நீதி திருப்திப்படுத்தப்படாமல், முற்பிதாக்கள்கூட ஆசீர்வதிக்கப்பட முடியாது. தெய்வீக நீதியினை மத்தியஸ்தர் திருப்திப்படுத்தின பிற்பாடு, புதிய உடன்படிக்கையினை நிறுவின பிற்பாடு, இதன்கீழ் முற்பிதாக்களே முதலாவதாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். இவர்கள் தங்கள் உயிர்த்தெழுதலில், மனுஷீக பரிபூரணத்தினை முழுமையாய்த் திரும்பப்பெறுவார்கள்; ஏனெனில் இவர்கள் தங்களது ஜீவியகாலத்தில், தேவனைப் பிரியப்படுத்தினார்கள் என்ற இந்தச் சாட்சியினைப் பெற்றவர்களாய் இருந்தார்கள். (எபிரெயர் 11:5)

மரண நித்திரையிலிருந்து விழித்தெழுப்பப்படாதது வரையிலும், முற்பிதாக்களினால் புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாட்டிற்குள் பிரவேசித்திட முடியாது; ஆகையால் மேலே தெரிவிக்கப்பட்டபடி, இவர்கள் விழித்தெழுப்பப்படுவதற்கு முன்னதாக, நீதியின் கோரிக்கைகளானது சந்திக்கப்பட வேண்டும். இவர்களுடன் தேவன் புதிய உடன்படிக்கையினை ஏற்படுத்தினவுடன், இந்த முற்பிதாக்கள், இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய பாகத்தின் கருவாகிடுவார்கள். ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியாரிடத்தில், உலகத்தின் பல்வேறு குடும்பங்கள் அல்லது ஜனங்கள் சேர்ந்திடுவார்கள்.

தேவனுடன் உடன்படிக்கை உறவுகொள்ள வேண்டுமென்றால், அதற்குப் பரிபூரணம் இருக்க வேண்டும். கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் ஆயிர வருஷங்களில் மனுக்குலத்தார் இந்தப் பரிபூரணத்தை அடைந்துகொண்டிருப்பார்கள். ஆனாலும் ஆயிர வருஷங்களின் முடிவில், மத்தியஸ்தர் அவர்களைத் தேவனிடத்தில் ஒப்படைப்பதற்கு முன்புவரை, அவர்கள் தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள் பிரவேசிப்பதில்லை. அக்காலம் முடிவடைகையில், யேகோவா தேவனுடன் இந்த உடன்படிக்கையின் உறவிற்குள் பிரவேசிப்பதற்குரிய சிலாக்கியமடைவார்கள். அப்போது அவர்கள் தனித்தனி நபர்களென நிற்க வேண்டும் அல்லது விழ வேண்டும். நாம் வாசித்திருக்கின்ற பிரகாரமாகவே, சாத்தான் கொஞ்சம் காலம் அவிழ்த்துவிடப்படுவார்; மேலும் அப்போது அநீதியை விரும்புபவர்கள் அனைவரும் அவரால் வஞ்சிக்கப்படுவார்கள். வெற்றிகரமாய்த் தங்களுக்கான பரீட்சையில் ஜெயங்கொள்ளும் மீதமுள்ள மனுக்குலத்தார், நித்திய ஜீவனுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அப்போது அவர்கள் மத்தியஸ்தர் ஒருவர் இல்லாமல், தேவனுடன் உடன்படிக்கையின் உறவில்

காணப்படுவார்கள் - அதாவது பாவம் உலகத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக, ஆதாம் தனது சிருஷ்டிகருடன் உடன்படிக்கையின் உறவில் காணப்பட்டது போன்று காணப்படுவார்கள்.

## சபை புது உடன்படிக்கையின்கீழ் இல்லை

சபை புதிய உடன்படிக்கையின்கீழ்க் காணப்படுகிறதில்லை; ஆகையால் புதிய உடன்படிக்கையினால் சபை ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று கூறுவது சரியாய் இராது. ஆனால் புதிய உடன்படிக்கை தொடர்புடைய விஷயத்தில் சபை, ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தையும், சிலாக்கியத்தையும் பெற்றுக்கொள்ப வர்களாய் இருப்பார்கள். புதிய உடன்படிக்கை என்ற ஒன்று இல்லையெனில், மத்தியஸ்தரின் அல்லது விசேஷித்த பலிகளின் அவசியம், அது நிறுவப்படும் விஷயத்தில் அவசியமாய்க் காணப்படாது.

நாம் புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி தேவன் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினார் என்று பரிசுத்த பவுல் அடிகளார் கூறியுள்ளார்; இப்படியாக அது ஆயத்தம்பண்ணப்படும் விஷயத்தில் நமக்கு ஏதோ பங்கு இருக்கின்றது என்று சுட்டிக்காண்பிக்கின்றார் (2 கொரிந்தியர் 3:6). விசேஷித்த பலிகள் இல்லையெனில், புது உடன்படிக்கைக்கு அஸ்திபாரமே இருப்பதில்லை. தற்காலத்தில் சபை அனுபவிக்கும் பாடுகளானது, நமக்குரிய பாக்கியமான சிலாக்கியமாகும்; ஏனெனில் நாம் அந்தப் புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாய் இருக்கின்றோம்; அதாவது அது நிறுவப்பட்ட பிற்பாடு செய்யப்பட வேண்டிய எதிர்கால ஊழியத்திற்கென்று இப்பொழுது பயிற்சி பெறுவதன் மூலம், நாம் அதற்கு ஊழியம்புரிகின்றவர்களாய் இருக்கின்றோம்.

---

R4553 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## மகா பிரதான ஆசாரியன் மத்தியஸ்தர் ஊழியம் ஆற்றுவார்

கேள்வி:- ஓர் ஆசாரியன் என்பவர் உண்மையில், தேவன் மற்றும் விழுந்துபோன சிருஷ்டிகளுக்கிடையே மத்தியஸ்தராயிருந்து, சட்டப்பூர்வமான விதத்தில் இணக்கத்தைத் திரும்பக் கொண்டுவருவார் மற்றும் நிறுவுவார். அப்படியானால் இயேசு சபைக்கு ஆசாரியனல்லவா? அப்படியானால் இது அவர் சபையின் மத்தியஸ்தராய் இருந்து, சட்டப்பூர்வமான விதத்தில் இணக்கத்தைத் திரும்பக்கொண்டுவருவார் மற்றும் நிறுவுவார் என்று அர்த்தமாகுமல்லவா? என்ற கேள்வியை முன்வைக்கின்றேன்.

பதில்:- இல்லை என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். நாம் சபையின் அங்கத்தினர்களான பின்னர், நாம் புதுச்சிருஷ்டிகளாக இருக்கின்றோம்; நமக்குப் பழையவைகள் எல்லாம் மாறிப்போயின, எல்லாம் புதிதாயின மற்றும் நமக்கு எதிராக எந்த ஆக்கினையும் இல்லை. புதுச்சிருஷ்டிகள் என்ற நம்முடைய நிலையானது, திரும்பச் சீர்ப்பொருத்தப்பட வேண்டியதில்லை. நாம் முதலில் புதுச்சிருஷ்டிகளாக இருந்தோம், பின்னர் அந்த நிலையிலிருந்து விழுந்துபோனோம், மீண்டுமாக அந்த நிலைக்குத் திரும்பக்கொண்டுவரப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றோம் என்பது போன்ற கருத்துகள் உண்மையானவைகள் அல்ல. நாம் மனித சிருஷ்டிகளாக விழுந்தோம்; ஆனாலும் நாம் "சட்டப்பூர்வமான விதத்தில், தேவனுடன் இசைவான நிலைக்கு மனித சிருஷ்டிகளாகத் திரும்பக்கொண்டுவரப் படுகிறதில்லை." இத்தகைய திரும்பக்கொடுத்தலைத் தேவன் உலகத்திற்காக, ஆயிர வருஷ யுகத்தின்

போது ஏற்பாடுபண்ணியுள்ளார்; ஆனால் சபைக்காக அல்ல. உலகத்தைச் சீர்ப்பொருத்தப்போகின்ற ஆசாரியனில், புதுச்சிருஷ்டிகளாகிய நாம் அங்கத்தினர்களாக இருக்கின்றோம் - நமது கர்த்தர் தலையாக இருக்கின்றார் மற்றும் நாம் அவரது "அங்கத்தினர்களாக" இருக்கின்றோம். எதிர்கால காட்சி மெல்கிசேதேக்கு ஆவார் - இவர் தமது சிங்காசனத்தில் வீற்றிருக்கும் ஆசாரியன் ஆவார்.

"நாம் அறிக்கைபண்ணுகிற பிரதான ஆசாரியனாகிய இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்" என்று நாம் வாசிக்கையில், ஆசாரியர்களுடைய வரிசையில் பிரதான ஆசாரியன் என்று அர்த்தமாகிறது. நம்முடைய முன்னோடியாகிய அவரைப்போல், நாம் நமது பலிகளை அவருடைய அங்கத்தினர்களென ஒப்புக்கொடுக்கத்தக்கதாக, நாம் அவரை நமக்கான முன்மாதிரியாகக் கவனித்துப் பார்க்கவேண்டும். ஓர் ஆசாரியனாக, அவர் நம்மை அவரது சரீரத்தின், அவரது சபையின் அங்கத்தினர்களென ஏற்றுக்கொள்ளும்போது, நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் உறவுமுறையானது வித்தியாசமானதாக இருப்பதுபோலவே, நம்மிடத்திலுள்ள அவரது நடவடிக்கையும் வித்தியாசமானதாகவே காணப்படும். அப்போஸ்தலர்கள் விஷயத்தில், அவர்களுடைய பாவங்களுக்காக அவர் மரிப்பதற்கு முன்னதாகவும், அவர்களுடையதும், நம்முடையதுமான பாவங்களுக்குப் பாவநிவாரணம் உண்டாகத்தக்கதாக மற்றும் அவர்களுக்கும் நமக்கும் பிதாவின் ஒப்புரவாகுதலுக்கான சாட்சியாகிய பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலைப் பெற்றுத்தரத்தக்கதாக, "நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்ததற்கு" முன்னதாகவும், இயேசு அவர்களுடைய விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பின் காரணமாக, அவர்களை ஏற்றுக்கொண்டார். சபை வகுப்பார் அனைவருக்காகவும் அவர் மத்தியஸ்தராய்ப் பிரத்தியட்சமாகாமல், மாறாக நமது விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் நிமித்தமாய், நம் சார்பில் அவர் பரிந்துபேசுபவராக, தம்முடைய இரத்தத்தைச் செயல்படுத்த/apply தோன்றினார்.

## அவருக்குக் கீழ்ப்படியும் அனைவருக்கும் அவர் பரிந்துபேசுபவர் ஆவார்

கேள்வி:- பாவநிவாரணம் தொடர்புடைய விஷயத்தில், நீங்கள் சபை மற்றும் உலகத்திற்கிடையே தெளிவான கோட்டைப் பிரிக்கின்றீர்கள்; மேலும் இதை வைத்துப்பார்க்கையில், கர்த்தர் அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளுக்காக மாத்திரம் நீதியைத் திருப்திப்படுத்தியிருக்கின்றார் என்று நிரூபிக்கின்றீர்கள் என்று நான் கவனிக்கின்றேன். இந்தச் சுவிசேஷ யுக முடிவில் மகா பிரதான ஆசாரியன் தம்முடைய ஈடுபலியின் புண்ணியத்தினை இப்பொழுது சபைக்குப் பயன்படுத்துவதுபோன்று, அப்போது உலகத்தின் சார்பாகப் பயன்படுத்துவதற்கு முன்பு வரையிலும், உலகத்தின் பாவங்களுக்கான நிவர்த்தி பண்ணப்படாது என்றும் நிரூபிக்கின்றீர்கள் என நான் கவனிக்கின்றேன். சபை மாம்சத்திற்கும், அதன் பூமிக்குரிய உரிமைகள் அனைத்திற்கும் மரிப்பதற்கு ஏதுவான பலியினை ஏறெடுப்பதற்கு, இப்பொழுது அப்புண்ணியமானது அடிப்படையாகக் காணப்படும்படிக்குச் சபைக்கு அருளப்பட்டிருக்கின்றது என்றும், எதிர்காலத்தில் அது உலகத்திற்குப் பயன்படுத்தப்படும்போது, அது ஜீவனை அருளுவதற்கும், நிஜமான திரும்பக்கொடுத்தலை அருளுவதற்கும் ஏதுவானதாகக் காணப்படும் என்றும் நிரூபிக்கின்றீர்கள் என நான் கவனிக்கின்றேன்.

இன்னுமாக உலகம் ஆயிர வருஷ யுகத்தின்போது இழுத்துக்கொள்ளப்படும் என்றும், அவர்கள் மாபெரும் மேசியாவினால், புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாடுகளின்கீழ் இழுத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும், இந்தச் சுவிசேஷ யுகத்தில் விசுவாசிகள் அழைக்கப்படும் காரியமானது, குமாரன் மூலமாய் இல்லாமல், பிதாவின் மூலமேயாகும் என்றும், இவர்கள் புது உடன்படிக்கையின்கீழ் இல்லாமல், ஆபிரகாமின் உடன்படிக்கையின்கீழ் அழைக்கப்படுகின்றார்கள் என்றும் உள்ள உங்களது

கருத்துகளையும் நான் கவனிக்கின்றேன். நீங்கள் மேற்கோள்காட்டும் வேதவாக்கியங்களும், உங்கள் கருத்தை ஆதரிக்கின்றன என்று நான் ஒத்துக்கொள்கின்றேன்.

சுவிசேஷ யுகத்தில் பிதாவினால் இழுக்கப்படுபவர்கள் பொதுவான உலகத்தாரிடமிருந்து வேறுபட்டவர்கள் ஆவார்கள் என்றும், இதனாலேயே அவர்களைத் தேவன் விசேஷமாய்க் கையாளுகின்றார் - அதாவது விசுவாசத்தினால் அவர்களை நீதிமானாக்குகின்றார்- மேசியாவின் பலியில் அவர்களுக்கு ஒரு பங்கையளிக்கின்றார் - அவரது ஆயிர வருஷ இராஜ்யத்தின் மகிமைகளில் ஒரு பங்கையளிக்கின்றார் என்றும் உள்ள உங்கள் கருத்தையும் நான் கவனிக்கின்றேன். ஆனால் இங்கு எனக்குக் கொஞ்சம் குழப்பமாக இருக்கின்றது, அதைப் பின்வருமாறு தெரிவித்துள்ளேன்.

இக்கருத்துகளை எவ்வாறு அப்போஸ்தலனுடைய வார்த்தைகளோடு இசைவுப்படுத்துவது? பொதுவான உலகத்தைக்குறித்து அவர் பேசின பிற்பாடு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள நாம், ஒரு காலத்தில் அதே தேவபக்தியில்லாத நிலைமையில்தான் காணப்பட்டவர்களாய் இருந்தோம் என்று அவர் தெரிவிக்கின்றார். அவரது வார்த்தைகளாவன: "அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" (எபேசியர் 2:2-3). உலகத்திற்கு மத்தியஸ்தர் வேண்டுமானால், ஏன் சபைக்கும்கூடத் தேவைப்படலாமே?

பதில்:- ஆதாமின் பிள்ளைகள் அனைவருமே அவரது விழுகையில் பங்கெடுத்து, "சுபாவத்தின்படி கோபாக்கினையின் பிள்ளைகளாகியுள்ளனர்" என்பது முற்றிலும் உண்மையே; எனினும் இந்தக் "கோபாக்கினையின் பிள்ளைகளுக்கிடையே" வித்தியாசம் ஒன்றுள்ளது. நித்திய ஜீவனையும், தெய்வீகத் தயவையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, நற்கிரியைகளைச் செய்து தேவனுக்கு முன்பு பிரியமானவர்களாகிட முடியாதவர்களாகவும், அபூரணர்களாகவும் அனைவரும் காணப்பட்டாலும், இவர்களில் சிலர் நல்ல இருதயங்களையும், நல்ல நோக்கங்களையும் பெற்றிருந்தனர்; மேலும் வெளிப்படையாக இல்லாவிட்டாலும், இரகசியமாகவாகிலும் நீதியின்மீதும், தேவனோடு உறவுகொள்வதற்கும் ஏக்கம்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். உதாரணத்திற்குப் பரிசுத்த பவுல் அடிகளார் ஒரு யூதனாகத் தன்னுடைய நிலைமையையும், மற்ற யூதர்களுடைய நிலைமையையும் பின்வரும் வார்த்தைகளைக் கூறும்போது விவரிக்கின்றார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன். அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை" (உரோமர் 7:25,18). தெய்வீக கோரிக்கையானது/எதிர்ப்பார்ப்பானது "பரிசுத்தமாயும், நீதியாயும், நன்மையாயும்" இருக்கின்றதெனப் பரிசுத்த பவுலின் மனம் ஒப்புக்கொண்டது; மேலும் அந்த மகிமையான தரநிலைக்கு ஏற்ப ஜீவிப்பதற்கும், நித்திய ஜீவனுக்குப் பாத்திரவானாகிடுவதற்கும், பரிசுத்த பவுல் அடிகளார் விரும்பினார். ஆனால் அவரது மாம்சத்தினால் சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்களானது, அவரது மனதின் விருப்பங்களை அவர் நிறைவேற்றுவதையும், திவ்விய பிரமாணத்தைக் கைக்கொள்வதையும் தடைபண்ணினது. ஆகையாலே அவரது கூக்குரல்:

"நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்பதாகக் காணப்பட்டது (உரோமர் 7:24). தனது மாம்சம் அபூரணமானது என்றும், தெய்வீகப் பிரமாணத்தின்கீழ் மரணத்திற்குத் தீர்க்கப்பட்டிருக்கின்றது என்றும், ஆனால் தனது மனம் பூரணமாயும், தேவனுக்கு நேர்மையாயும் காணப்படுகின்றது என்றும் அடையாளம் கண்டுகொண்டார். ஒருவேளை தன்னுடைய அபூரணமான சரீரத்தை அவரால் அகற்றிவிடவும், புதிய சரீரத்தைப் பெற்றுக்கொள்ளவும் முடியுமானால், நிச்சயமாகவே தெய்வீகத் தரநிலைக்கேற்ப தன்னால் ஜீவிக்க முடியும் என்றும், பிரமாணத்திற்கேற்ப நித்திய ஜீவனை அடையமுடியும் என்றும் பவுல் அடையாளங்கண்டுகொண்டார். ஓ! யார் அவரை விடுதலையாக்குவார்?

பாவ-ஆக்கினைச் சரீரத்தினின்று, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் விடுதலையை ஏற்படுத்தியுள்ளதற்காக தேவனுக்கு நன்றி! இதுவே இந்தச் சுவிசேஷ யுக அழைப்பின்கீழ் நிஜமான ஆசாரியர்களாகவும், லேவியர்களாகவும் கர்த்தரினால் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகிறவர்கள் அனைவருக்குமான உண்மையுள்ள விளக்கமாகும். நாம் "மற்றவர்களைப்போலவே கோபாக்கினையின் பிள்ளைகளாக" வெளிப்புறத்தில் காணப்பட்டோம்; ஆனால் நாம் பாவத்திலிருந்து திரும்பியுள்ளபடியால், கிறிஸ்து நமது விசுவாச கண்களுக்கு, நமது மீட்பரென வெளிப்படுத்தப்பட்டார்; மேலும் விசுவாசத்தின் மூலம் நாம் அவரையும், அவரது சிலுவையையும் ஏற்றுக்கொண்டோம்; நாம் பிதாவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டோம். நாம் முதலாவதாகத் தேவன்மீதும், அவரது நீதியின் மீதுமான வாஞ்சையினாலும், பாவத்தின் மீதான விருப்பமின்மையினாலும் இழுக்கப்பட்டோம் மற்றும் தாக்கத்திற்குள்ளானோம். தேவனுடைய ஏற்பாட்டின்படி அடுத்து நாம் இயேசுவாகிய உலக இரட்சகரிடம் வழிகாட்டப்பட்டோம்; மேலும் பின்வருபவைகள் நமக்குத் தெரிவிக்கப்பட்டன: உலகத்தினுடைய இரட்சிப்பிற்கான காலம் இன்னும் வரவில்லை என்றாலும், தெரிந்துகொள்ளப்பட்ட சபை "அவருடைய அங்கத்தினர்களென," "அவருடைய மணவாட்டியென" சேர்த்துக்கொள்ளப்படும் காலப்பகுதியில் நாம் இருக்கின்றோம் என்றும், பாவங்களிலிருந்து மன்னிப்பையும், தேவனுடன் ஒப்புரவாகுதலையும் ஒருவேளை வாஞ்சிப்போமானால், நாம் அவரது நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்து, அவரது ஆவியின் ஜெநிப்பித்தலைப் பெற்றுக்கொண்டு, கிறிஸ்துவின் பள்ளியில் பாடங்கள் கற்று, நீதிக்கான நமது நேர்மை பரீட்சிக்கப்பட்டு, பின்னர் நாம் மேசியாவினுடைய மாபெரும் இராஜ்யத்தில் மகிமையிலும், உடன் சுதந்தரத்திலும் ஏற்றுக்கொள்ளப்படுவோம் என்றும், இந்த இராஜ்யத்தின் வாயிலாகவே மனுக்குலம் யாவருக்கும் ஆசீர்வாதமும், இரட்சிப்பும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களும் கடந்துவரும் என்றும் நமக்குத் தெரிவிக்கப்பட்டது.

"அழைக்கப்பட்ட" வகுப்பார் அனைவருமே பாவத்திற்குப் பதிலாக நீதியை விரும்புகிற நிலையில் பிறந்தவர்கள் என்றோ, "தேவன் மீது நாட்டம்கொண்டவர்களாக" பிறந்தவர்கள் என்றோ வேதவாக்கியங்கள் போதிக்கிறதில்லை; மாறாக வயதானவர்களாக அல்லது இளைஞர்களாக இருப்பினும், நாம் நீதியை விரும்புகிற மற்றும் தேவன் மீது நாட்டம்கொள்கிற, அந்த ஒரு நிலையை அடைந்தால்தான், தேவ ஈவைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாய்க் காணப்படுகின்றவர்களாய் இருப்போம் - அதாவது பாவங்களுக்கான மன்னிப்பு மற்றும் "தகுதிகாணும் சோதனை காலத்தின் கீழுள்ள அங்கத்தினர்களெனக்" கிறிஸ்துவினுடைய சரீரத்தில் ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகிய தேவ ஈவைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாய்க் காணப்படுகின்றவர்களாய் இருப்போம் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவர்கள் விஷயத்தில், இவர்கள் மத்தியஸ்தருடைய இராஜ்யத்தின் கீழ்க்காணப்படுவதற்கு அவசியம் இருப்பதில்லை; இன்னுமாக இறுதியில் தேவன் முன்பு கொண்டுவரப்படுவதற்கு வேண்டி, இவர்கள் ஆயிர வருஷ யுகத்தில் படிப்படியாக பூரணம் மற்றும்

ஆயத்தமான நிலைமைக்குக் கொண்டுவரப்படுவதற்கு அவசியம் இருப்பதில்லை. நிஜமான - நீதிமானாக்கப்படுதல் அல்லது திரும்பக்கொடுத்தலைக் கொடுப்பதற்குப் பதிலாக, பிதா இவர்களுக்கு விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும் ஒரு விசேஷமான, சிறப்பான ஏற்பாட்டை ஏற்படுத்தியிருக்கின்றார். இவர்கள் தங்கள் மீட்பைப்பற்றின உண்மையினை விசுவாசத்தின்மூலம் ஏற்றுக்கொண்டு, மீட்கப்பட்ட பூமிக்குரிய ஜீவனுக்கான தங்களது உரிமைகளைப் பலிசெலுத்தினது முதற்கொண்டு, இவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர்; அவர் கொடுக்கும் பரிசுத்த ஆவியின் மூலமாக இவர்களைத் தம்முடைய பிள்ளைகளென அங்கீகரிக்கின்றார்.

தங்களுடைய பூமிக்குரிய சுபாவத்தைப் பலிசெலுத்தும் காரியத்தின் அடிப்படையில் உண்டான நீதிமானாக்கப்படுதலுக்கு முன்பு, இவர்கள் நீதியின் மீதும், தேவனுக்குப் பிரியமாய் இருக்க வேண்டும் என்றும் வாஞ்சைகொண்டிருந்தனர்; மேலும் கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் வாயிலாகத் தேவனுடைய ஏற்பாடுகளை இவர்கள் ஏற்றுக்கொண்டபோது, இவர்கள் உடனடியாகப் புத்திரர்களாக ஜெநிப்பிக்கப்பட்டனர்; மேலும் இவர்களுக்கு முன்பும் சரி, பின்னரும் சரி மத்தியஸ்தம் செய்வதின் அவசியம் காணப்படவில்லை, மாறாக இவர்களது மீட்பர், மூத்த சகோதரன், மகிமையிலுள்ள மணவாளன், இவர்களுக்காகப் பரிந்துபேசுபவராக மட்டும் காணப்பட வேண்டியிருந்தது. "நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்" - இவர் நமக்காகப் பிதாவின் முன்பு பிரத்தியட்சமாகி, வேண்டுமென்றில்லாத நமது அபூரணங்கள், குறைபாடுகள் அனைத்திற்காகவும் தம்முடைய சொந்த புண்ணியத்தைக்கொண்டு நிவிர்த்தி செய்கின்றார். (1 யோவான் 2:1)

## ஆபிரகாமினுடைய நீதிமானாக்கப்படுதல் மற்றும் நம்முடைய நீதிமானாக்கப்படுதல்

கேள்வி:- நீங்கள் சுட்டிக்காட்டினது போல, ஆபிரகாம் மத்தியஸ்தர் இல்லாமல், விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்பட்டார். நீங்கள் சுட்டிக்காண்பித்துள்ளதுபோன்று சபையாகிய நாமும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகின்றோம்; உடன்படிக்கையின் மூலமாகவோ, மத்தியஸ்தர் மூலமாகவோ இல்லை. எனினும், நிச்சயமாகவே சில வித்தியாசங்கள் காணப்படும்; ஏனெனில், நாம் அனுபவிக்கும் சிலாக்கியங்களை ஆபிரகாம் பெற்றிருக்கவில்லை. அவருடைய நீதிமானாக்கப்படுதலுக்கும், நம்முடைய நீதிமானாக்கப்படுதலுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைத் தயவாய் விவரிக்கவும்.

பதில்:- ஆபிரகாம் அவருடைய விசுவாசத்தின் காரணமாக தேவனுடன் ஐக்கியங்கொள்வதற்கு ஏதுவாக நீதிமானாக்கப்பட்டார் என்றும், ஒருவேளை அவர் ஆயிர வருஷ இராஜ்யத்தினுடைய சிலாக்கியங்களின்கீழ் வாழ்ந்தவராயிருந்திருப்பாரானால், அவரது விசுவாசம் முழுமையான (நிஜ) திரும்பக்கொடுத்தலின் சிலாக்கியங்களை அனுபவிப்பதற்கு அவரைத் தகுதியானவராக்கியிருக்கும் அல்லது கர்த்தர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, விசுவாசிகளுக்கு ஜீவனுக்கேதுவான நீதிமானாக்கப்படுதலை ஏற்படுத்தினதற்குப் பின்புள்ள காலப்பகுதியில், ஒருவேளை ஆபிரகாம் வாழ்ந்திருப்பாரானால், பலிசெலுத்தும் சிலாக்கியங்களுடன் உள்ள விசுவாச-திரும்பக்கொடுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக, அவரது விசுவாசம் அவரை நீதிமானாக்கியிருக்கும் என்றும் நாங்கள் பதிலளிக்கின்றோம். ஆயிர வருஷ அரசாட்சியின்போது நிஜமான திரும்பக்கொடுத்தலின் மூலம் அல்லது இப்பொழுது பலிசெலுத்துவதற்காக விசுவாச-திரும்பக்கொடுத்தலின் மூலம், தேவனுடன் ஒப்புரவாகுவதற்கு, *கிறிஸ்துவின் மரணமே* அடிப்படையாகக் காணப்படுகின்றது. நிஜமான பாவநிவாரண நாள் நிறைவடைந்து, புதிய உடன்படிக்கையின்கீழ் ஆசீர்வாதமான ஆயிர வருஷ விடியல் வருகையில், இந்த முற்பிதாக்கள் கல்லறையினின்று பூரணர்களாக - நீதிமான்களாக, செம்மையானவர்களாக,

தேவனுடன் இசைவான நிலைக்கு முழுமையாய்ச் சீர்ப்பொருந்தினவர்களாக வருவதற்கு ஏதுவாக, ஆபிரகாம் மற்றும் முற்பிதாக்கள் வகுப்பார் அனைவரையும் விசுவாசமானது தகுதியாக்கியது. "இவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்களாகக் காணப்பட்டார்கள்" என்று நற்சாட்சி பெற்றுக்கொண்டார்கள் - வாக்குத்தத்தங்களின் மீதுள்ள இவர்களது விசுவாசத்தின் காரணமாக, பூரணமான மனித நிலையைப் பெற தகுதியானவர்களெனத் தீர்க்கப்பட்டனர்; ஆனால் அந்த வாக்குத்தத்தங்களுக்கான அடிப்படை கிறிஸ்துவின் (தலை மற்றும் சரீரம்) பலியாகக் காணப்படுகின்றது; ஆகையாலே இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில், இந்த நிஜமான பாவநிவாரணநாளின் முடிவில், கிறிஸ்துவின் பாடுகள் முடிவுபெறுவதற்கு முன்னதாக, தங்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்த ஆசீர்வாதங்களை முற்பிதாக்கள் பெற்றுக்கொள்ள முடியாது. இதுவே அப்போஸ்தலர் சாட்சி பகர்ந்ததுமாய்க் காணப்படுகின்றது: "அவர்கள் (மகா ஆசாரியனின், மத்தியஸ்தரின் மற்றும் இராஜாவின் அங்கத்தினர்களாகிய) நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரெயர் 11:40)

மீட்கும்பொருள் பலியானது கல்வாரியில் கொடுத்துவைக்கப்பட்டு, அதன் புண்ணியம் பெந்தெகொஸ்தே நாளில் விசுவாச வீட்டாரின் சார்பாகச் செயல்படுத்தப்பட்ட பின்னர் உள்ள காலப்பகுதியில், நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் விஷயத்தில் நாம் கிருபை பெற்றவர்களாய் இருக்கின்றோம். விசுவாசத்தின் மூலமான நம்முடைய நீதிமானாக்கப்படுதலானது, தேவகிருபையினால் நம்மைப் பூமிக்குரிய திரும்பக்கொடுத்தலின் உரிமைகளைப் பெற்றவர்களாகக் கருதப்பட உதவினதோடுகூட, அந்தப் பூமிக்குரிய உரிமைகளைப் பலிசெலுத்துவதற்குரிய வாய்ப்பையும் கூடவே நமக்குத் தந்தருளினது; இப்படியாக நாம் கிறிஸ்துவின் பாடுகளிலும், பின்தொடரும் மகிமைகளிலும் பங்கெடுக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. (1 பேதுரு 1:5-11)

## முற்பிதாக்களுக்கு மத்தியஸ்தரின் அவசியம் உண்டா?

கேள்வி:- தேவனுடைய பார்வையில் சபையினுடைய நிலைமைக்கும், உலகத்தினுடைய நிலைமைக்கும் வித்தியாசம் இருக்கின்றது, அதாவது நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாகவே இருந்தோம், ஆனாலும் தேவனுடைய கிருபையினால் நாம் அப்படியாக இனிமேலும் இல்லை; மேலும் உலகத்தார் இன்னமும் கோபாக்கினையின் பிள்ளைகளாகவே இருக்கின்றனர் என்றுள்ள உங்களது நிலைப்பாட்டிலுள்ள நியாயத்தை நான் ஒப்புக்கொள்கின்றேன். முழு உலகமும் பொல்லாங்கனுக்குள் கிடக்கின்றது என்றும், இதுவே அவர்கள் இன்னமும் "தேவனுடன் ஒப்புரவாகவில்லை" மற்றும் அவர்கள் சார்பாக மீட்பர் தம்முடைய புண்ணியத்தைச் செயல்படுத்தவில்லை என்பதற்கான உறுதியான நிரூபணமாய் இருக்கின்றது என்றுமுள்ள கருத்துகளையும் நான் ஒத்துக்கொள்கின்றேன். ஆக்கினைக்குத் தப்பினவர்களாக உலகில் இன்னமும் காணப்படும் நாம் மாத்திரமே, மாபெரும் பிரதான ஆசாரியனால் ஏற்கெனவே பாவநிவர்த்தி செய்யப்பட்டுள்ள அந்த ஒரு வகுப்பாரில் உள்ளடங்குகின்றோம் எனும் கருத்தையும் நான் ஒத்துக்கொள்கின்றேன். பலிசெலுத்துவதற்குரிய இந்த யுகம் முடிந்த பிற்பாடே, உலகத்தின் பாவங்களுக்காக நிவிர்த்தி செய்யப்படும் காரியமும், மத்தியஸ்தரின் - அதாவது அநேகம் அங்கத்தினர்களை உடைய மகிமையடைந்த கிறிஸ்துவின் கரங்களில் தேவனுக்கும், இஸ்ரயேலுக்கும் இடையில் புதிய உடன்படிக்கை நிறுவப்படுகிற காரியமும் நிகழும் என்பதையும் நான் ஒத்துக்கொள்கின்றேன். கிருபையானது விசுவாசிகளுக்குச் செயல்படுவதற்கு முன்னரும்கூட, அந்த விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் இடையில் வித்தியாசம் உண்டு என்றுமுள்ள கருத்தையும்கூட நான் ஒத்துக்கொள்கின்றேன்; அதாவது தேவனை எதிர்க்கும் இருதயமுடைய யார் ஒருவருக்கும் தேவ

கிருபையானது செயல்படுத்தப்படாது, மாறாக பிறப்பின் காரணமாகவோ அல்லது சோதனைகள், பயிற்சிகள் மூலமாகவோ, பாவத்திற்காக மனம் வருந்தும் நிலைக்கும், தேவனுடன் ஒப்புரவாகிடுவதற்கு வாஞ்சிக்கும் நிலைக்கும் வழிநடத்தப்பட்டிருப்பவர்களுக்கு மாத்திரம் கிருபையானது செயல்படுத்தப்படும் என்றும் நான் ஒத்துக்கொள்கின்றேன்.

ஆனால் எனது கேள்வி என்னவெனில்: (இக்காலத்தில்) தங்கள் இருதயங்களில் ஒப்புரவாகுதலையும், உறவையும் வாஞ்சிப்பவர்களுக்கு எப்படி மத்தியஸ்தர் தேவையிராது என்பதை என்னால் பார்க்க முடிகின்றது; இன்னுமாக மனுக்குலத்தின் உலகத்திற்கு ஆயிர வருஷ யுகத்தின்போது, அவர்களைச் சீர்ப்பொருத்துவதில் மத்தியஸ்தரின் தலையிடுதல் - அதாவது சிட்சைகள் மற்றும் வெகுமதிகள் எப்படி அவசியமாய் இருக்கும் என்பதை என்னால் பார்க்க முடிகின்றது. ஆனால் நாம் இப்பொழுது செய்வதுபோலவே, நீதிக்காகவும், தேவனுடன் ஐக்கியங்கொள்ளவும் இருதய வாஞ்சையினை உடையவர்களாக மனுக்குலத்தில் சிலர் அப்போது காணப்படமாட்டார்களா? வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், பாவத்திலிருந்து திரும்புவதற்கும், தேவனுடன் ஐக்கியங்கொள்வதற்கும் வாஞ்சைகொண்டுள்ள ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு நபரையும் தேவன் இந்தச் சுவிசேஷ யுகத்தில், பரிசுத்த ஆவியின் மூலமாகக் கண்டுபிடித்து, இழுத்து ஏற்றுக்கொள்கின்றாரா? இப்படிப்பட்ட வகுப்பாரில் சிலர் இரண்டாம் வருகையின்போது காணப்படமாட்டார்களா? மரணத்திலிருந்து உயிர்த்தெழும் முற்பிதாக்களின் விஷயம் எப்படி இருக்கும்? இப்படிப்பட்ட வகுப்பாரில் சிலர் காணப்படுவார்களானால், இவர்களுக்கும், தேவனை எதிர்ப்பவர்களுக்கும் சேர்த்து, கிறிஸ்து மத்தியஸ்தராகச் (அக்காலத்தில்) செயல்படுவாரா? இல்லையேல் மேசியா சிலருக்கு மத்தியஸ்தராகவும், மற்றவர்களுக்குப் பரிந்துபேசுபவராகவும் காணப்படுவாரா? இல்லையேல் எப்படியாக இருக்கும்?

எங்கள் பதில்:- உங்களது பிரச்சனை என்னவெனில், நீங்கள் தேவனுக்கும், தனித்தனியாக பாவிகளுக்கும் இடையில் மத்தியஸ்தர் செயல்படுவார் என்று எண்ணியுள்ளீர்கள். இது தவறான கருத்தாகும். மத்தியஸ்தருக்கு உடன்படிக்கையோடு மாத்திரம் சம்பந்தம் உள்ளது என்றும், உடன்படிக்கையானது ஜாதிகள்/தேசங்கள் அல்லது ஜனங்களைக் கையாளுகின்றதே ஒழிய, அதன் தனி நபர்களை அல்ல என்றுமுள்ள வேதவாக்கிய கருத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுங்கள். தேவன் ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனோடும் புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதுமில்லை; பல்லாயிரக்கணக்கான உடன்படிக்கைகளுக்கு மேசியாவை மத்தியஸ்தம் பண்ணவைக்கப் போவதுமில்லை. சரியான கருத்து மிகவும் வேறுபட்ட கருத்தாகும். மகா பிரதான ஆசாரியன் தமது பலியை முதலாவதாகத் தமது சொந்த அங்கத்தினர்களுக்காகவும், வீட்டாருக்காகவும், பின்னர் ஜனங்கள் அனைவருக்காகவும் நிறைவேற்றி முடித்த பிற்பாடு, அவர் தமது பலியினுடைய புண்ணியத்தினை உலகத்தின் சார்பாக முன்வைப்பார்; பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாக அவர் சபையை, விசுவாச வீட்டாரை மீட்டது போலவே, வாங்கினது போலவே (ஆதி நோக்கத்தின்படியே) அவர் உலகத்தையும் மீட்டுக்கொள்வார்.

அப்போது அவர் உலகத்தின் சொந்தக்காரராய் இருப்பார்; மேலும் அவர்களைக் கையாளுவதற்கும், தமக்குக் கீழ்ப்படிபவர்கள் யாவருக்கும் இழந்தவைகளைத் திரும்பக்கொடுப்பதற்கும் ஏதுவாக ஆயத்தமாய் இருப்பார் (அப்போஸ்தலர் 3:23). இதற்காகவே அவர் இஸ்ரயேலுக்காய்ப் புதிய உடன்படிக்கைக்கு மத்தியஸ்தம் பண்ணுவார்; இவ்வுடன்படிக்கையானது அவர்களது பழைய உடன்படிக்கைக்குப் பதில் கொண்டுவரப்பட்டதாகும்; இது அந்த ஜாதியாரைத் தயவுபெற்ற ஜாதியாரென, ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாரெனக் கனமுள்ள ஸ்தானத்திற்குத் திரும்பக்கொண்டுவந்துவிடும்;

மேலும், இவர்கள் வாயிலாக மீட்பின் ஆசீர்வாதங்களானது, சகல ஜாதிகளுக்குக் கடந்துசெல்லும். எனினும் அந்தப் புதிய உடன்படிக்கையானது, எதிர்க்கும் பாவிகளுடன் பண்ணப்படுவதில்லை. தேவனுடைய அந்த உடன்படிக்கையானது இஸ்ரயேலுக்கான மத்தியஸ்தரோடு காணப்பட்டு, ஆபிரகாம் வைத்தது போன்ற கீழ்ப்படிதலையும், விசுவாசத்தையும் செயல்படுத்தும் ஆபிரகாமினுடைய மாம்சீக சந்ததியார் அனைவருக்கும் மன்னிப்பையும், ஒப்புரவாகுதலையும் உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கும். ஆயிர வருஷ யுகத்தின்போது இஸ்ரயேலோடு (ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் உண்மையுள்ள இஸ்ரயேலர்களாகிட வேண்டிய மனுக்குலத்தின் உலகத்தாரோடுகூடவும்) உள்ள மத்தியஸ்தரின் வேலையானது, போதிப்பதாகவும், கற்பிப்பதாகவும், பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும், அறியாமையிலிருந்தும், மூடநம்பிக்கையிலிருந்தும், சீர்கேட்டிலிருந்தும், அவநம்பிக்கையிலிருந்தும் மனித பரிபூரணத்திற்குத் தூக்கிவிடுதலாகவும் காணப்படும்; இதனால் ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் ஆபிரகாமின் சந்ததியார் யாவரும், ஆபிரகாமின் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் கொண்டிருக்கும் யாவரும், மனித பரிபூரணத்தினை எட்டியிருப்பார்கள்; மேலும் தேவன் சகலத்திலும் சகலமாய்க் காணப்படும்படிக்கு, யாவரையும் மீட்பர் பிதாவிடம் கையளிக்கத்தக்கதாக, இவர்கள் ஆயத்தமாய் இருப்பார்கள்; போதுமான காலத்திற்குப் பிற்பாடும் விருப்பமில்லாதவர்களாகவும், கலகம் பண்ணுகிறவர்களாகவும் காணப்படுபவர்கள், ஆயிர வருஷ யுகத்தின்போது இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள்.

தேவ ஏற்பாட்டில் "மேன்மையான உயிர்த்தெழுதலில்" வருவதற்கு - மனித பூரணத்திற்குரிய உயிர்த்தெழுதலில் வருவதற்கு ஏதுவான தங்கள் தகுதியினையும், தேவனுக்கான தங்களது நேர்மையினையும் முற்பிதாக்கள் ஏற்கெனவே நிரூபித்துள்ளார்கள். இந்த உயிர்த்தெழுதல் புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாடுகளின்கீழும், அந்தப் புதிய உடன்படிக்கையினுடைய மத்தியஸ்தரின் கீழும் நடைபெறும். இவர்கள் மீதமுள்ள உலகத்தார்போலவே, தங்களுக்கான ஆசீர்வாதத்தினைப் புதிய உடன்படிக்கையின்கீழ்ப் பெற்றுக்கொள்வார்கள். முழு உலகமும் இரண்டாம் ஆதாம் மூலமாக மாத்திரம் மறுஜென்மம் அடைய முடியும். அவர்களால் வேறு வழியாக நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாது. சிலர் விஷயத்தில் இந்த மறுஜென்மமானது படிப்படியான பூரணத்திற்குத் திரும்பவருதலின் விளைவாக நடைபெறும்; ஆனால் முற்பிதாக்களைப் பொறுத்தமட்டில், இவர்கள் முன்னமே விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் வளர்ச்சியடைந்துள்ளபடியால், இவர்களுக்கு உடனடி திரும்பக்கொடுத்தல் இருக்கும். மீதமுள்ள உலகத்தாரைப்போலவே, கிறிஸ்துவினுடைய மரணத்தின் புண்ணியம் வாயிலாக திரும்பக்கொடுத்தலின் ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் முற்பிதாக்களும், வேதவாக்கியங்களில் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகின்றனர்; மேலும் அவர் இவர்களுக்குத் தகப்பனாக அல்லது ஜீவன் அளிப்பவராக அழைக்கப்படுகின்றார். "அவர் நாமம் நித்திய பிதா என்னப்படும்" (ஏசாயா 9:6). ஆகையாலே "உமது பிதாக்களுக்குப் (ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கத்தரிசிகள் யாவருக்கும்) பதிலாக உமது குமாரர்கள் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்." (சங்கீதம் 45:16)

ஆசாரியனும், இராஜாவுமான மத்தியஸ்தர் நிறைவுபெறும் காலத்துடனும், இந்த யுகத்தினுடைய முடிவுடனும் துவங்கும் எதிர்காலத்தின் வரிசை கிரமம் குறித்து நாம் பார்க்கின்றோம். நமது கர்த்தர் மற்றும் அவரது சபை - அதாவது நிஜமான ஈசாக்கு மற்றும் அவரது மணவாட்டி - அதாவது தமது சிங்காசனத்தில் வீற்றிருக்கும் நிஜமான மெல்கிசேதேக்கு, ஆசாரியன் - மகா உபத்திரவ காலத்தின்போது தமது நீதியின்

ஆளுகையைத் துவங்குவார்; மகா உபத்திரவ காலம் உண்டுபண்ணும் அசைவோடு, இந்த யுகம் முற்றுபெறும். முற்பிதாக்களானவர்கள் அவரது பிள்ளைகளில் முதற்பேரானவர்களெனத் திரும்பக்கொடுத்தலின் பூரணத்தையும், அதன் சிலாக்கியங்களையும் பெற்றுக்கொண்டு, "பூமியெங்கும் பிரபுக்களாக வைக்கப்படுவார்கள்." முற்பிதாக்கள் நீண்டகாலமாய்க் காத்திருந்த பூமிக்குரிய இராஜ்யம் துவங்குகையில், இவர்களிடம் மற்றும் இவர்களுடைய கட்டுப்பாட்டின்கீழும் முதலாவதாக இஸ்ரயேல் மற்றும் யூதேயா வீட்டார் வந்து கூடுவார்கள். இவர்களுக்கே படிப்படியாகத் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் - ஆரோக்கியம் மற்றும் செழிப்பு கடந்துவரும். உபத்திரவ காலத்தின் விளைவாக பெலவீனப்பட்டும், அதிர்ச்சியடைந்தும் காணப்படும் உலகமானது, இஸ்ரயேல் மீண்டுமாக ஒரு தேசமாய் ஜீவனுக்கு எழுவதைக் கவனிக்கத் துவங்குவார்கள்; இன்னுமாக அவர்கள் மீது அருளப்படும் ஆசீர்வாதங்களையும் கவனிப்பார்கள். "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் (ஆவிக்குரிய இராஜ்யமாகிய) சீயோனிலிருந்து வேதமும், (பிரபுக்களின் கட்டுப்பாட்டில் காணப்படும் பூமிக்குரிய இராஜ்யமாகிய) எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3)

விருப்பமுள்ளவர்கள் மற்றும் கீழ்ப்படிதல் உள்ளவர்களுக்கு மாத்திரமே ஆயிர வருஷ யுகத்தினுடைய ஆசீர்வாதங்கள் அருளப்படும்; ஆனாலும் நீதி பற்றின, சத்தியம் பற்றின அறிவானது முழுப்பூமியையும் நிரப்பும். யூதர்களும் சரி, புறஜாதிகளும் சரி ஆபிரகாமுடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலை அடையும்படிக்கும், இறுதியில் இவர்கள் "கபடற்ற உத்தம இஸ்ரயேலன்" ஆகும்படிக்கும் எதிர்ப்பார்க்கப்படும்; இப்படியாகக் கீழ்ப்படிபவர்கள் மாத்திரமே அக்காலத்திற்குரிய முழுமையான ஆசீர்வாதத்தினை பெற்றுக்கொள்வார்கள் மற்றும் பூரணத்தையும் அடைவார்கள். மற்றவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுபோவார்கள். புதிய உடன்படிக்கையினுடைய நியாயப்பிரமாணமானது, மோசேயின் உடன்படிக்கைக்கு அடிப்படையாகக் காணப்பட்ட அதே பிரமாணமாகும். வித்தியாசம் என்னவெனில், ஆசாரியன் உயர்வான முறைமையின்படி காணப்படுவார் - மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான இராஜரிக ஆசாரியன் காணப்படுவார். இவர் இந்தச் சுவிசேஷ யுகத்தின் - இந்த நிஜமான பாவநிவாரண நாளின் "*விசேஷித்த பலிகளினுடைய*" புண்ணியத்தினைப் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், திரும்பக்கொடுத்தலின் காரியங்களுக்குமான அடிப்படையாகத் தம்மிடத்தில் பெற்றிருப்பார்.

முற்பிதாக்கள் புதிய உடன்படிக்கையின்கீழ் உடனடியாகப் பூரணத்தினை அடைந்து, இராஜ்யத்தில் ஒரு பங்கினை அடைவதுபோலவே, யாரெல்லாம் இராஜ்யத்தின் நிபந்தனைகளைப் புரிந்துகொண்டு, அதற்கு இசைவாக வருவார்களோ, அவர்கள் தங்களது நேர்மை மற்றும் வைராக்கியத்தின் அளவிற்கேற்ப முன்னேறுபவர்களாக இருந்து, மிக விரைவாக பரிபூரணத்தை அடைவார்கள். பூரணர்களாக்கப்பட்ட இவர்கள் இராஜாக்களாக இருப்பார்கள், அதாவது காட்டு மிருகங்கள், பட்சிகள், மீன்கள் முதலானவைகள் மீது பூரண மனுஷனுக்கே உரிய வல்லமையோடு ஆதாம் இராஜாவாகக் காணப்பட்ட விதத்திலாகும் (சங்கீதம் 8:5-8). மேலும் இந்தப் பூலோக இராஜாக்கள் பூமியை ஆளுகிற விஷயத்தில், "பிரபுக்களோடுகூட" ஏறக்குறைய இணைந்துக் காணப்படுவார்கள் - இவர்கள் தங்கள் கனத்தையும், மகிமையையும் புதிய எருசலேமுக்குள் கொண்டுவருவார்கள். (வெளிப்படுத்தல் 21:24, 26)

---

R5205 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# உலகப்பொருட்களினால் நண்பர்களை ஏற்படுத்துதல்

## மேலானவைகளை நாடுங்கள்

விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் தொடர்புடைய சில பாடங்களை, முற்பிதாக்கள் கற்றுக்கொள்ள வேண்டுமெனத் தேவன் சித்தம் கொண்டிருந்தார். அதை அவர்கள் எவ்வளவு நேர்த்தியாக கற்றிருந்திருக்கிறார்கள்! ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் வாழ்க்கையிலும், பரிசுத்த பவுல் அடிகளாரால் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் பட்டியலிடப்பட்டுள்ளவர்களின் வாழ்க்கையிலும், எவ்வளவு விசுவாசம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் பார்க்கின்றோம்.

அந்த மேன்மையான கதாப்பாத்திரங்கள், மேசியாவினுடைய இராஜ்யத்தின் கீழ் மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் வேலையில் ஒரு நல்ல பங்கைப் பெறுவதில் நாம் ஆச்சரியமடையவில்லை. வாழ்க்கையில் அவர்களுக்கு வந்த அனுபவங்களானது, மேசியாவின் இராஜ்யத்தில் அவர்களுக்கு முன்பாக இருக்கும் பணிக்கான அறிவு புகட்டலாகவும், பயிற்சியாகவும், அவர்களை ஆயத்தப்படுத்தினதாகவும் இருந்தது. அவர்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாகவும், இருளில் அவரில் நம்பிக்கைவைத்தவர்களாகவும், உண்மையாய்ப் பூமிக்குரிய நன்மைகளைத் துறந்தவர்களாகவும், அவரது சித்தத்தைச் செய்தவர்களாகவும் காணப்பட்டிருக்க, மேசியாவின் இராஜ்யத்தினுடைய சாதகமான சூழ்நிலையின்கீழ் மாபெரும் மேசியாவினால் அவர்களிடம் கனத்துக்குரிய ஊழியமும், வல்லமையும் ஒப்படைக்கப்படும் போது, அவர்கள் நேர்மையிலும், உண்மையிலும், கீழ்ப்படிதலிலும் குறைவுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள் என்று நாம் நிச்சயம் கொள்ளலாம்!

பணிவிடை வீட்டாராகிய முற்பிதாக்களுக்குக் கீழ்ப்படிதல், விசுவாசம், நேர்மை ஆகியவைகளில் பரீட்சைத் தேவைப்பட்டால், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட கிறிஸ்தவ சபையின் அங்கங்களுக்கு இதே காரியங்களில் பரீட்சைத் தேவைப்படும் என்பதை யாரால்தான் பார்க்கமுடியாது! அவர்களைக்காட்டிலும் நமக்கான பரீட்சை மிகவும் முழுமையானதாக இருக்க வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. (1) அவர்கள் பணிவிடை வீட்டாரின் அங்கத்தினர்களாக மாத்திரம் காணப்படுகையில், நாம் புத்திரர் வீட்டாரின் அங்கங்களாக இருக்கின்றோம். நாம் தேவனுடைய குமாரர்களாக ஜெநிப்பிக்கப்படும் ஆவியை உடையவர்களாக மாத்திரமல்ல, தேவனுடைய சித்தத்தை அறியும்படிச் செய்கின்றதும், அவருடைய திட்டம் எப்படி நடைபெற்றுவருகின்றது என்பதை நமக்குக் காண்பித்துத் தருகின்றதுமான தெய்வீக வெளிப்பாட்டின்மீது அதிகமான வெளிச்சம் கிடைக்கப்பெற்றவர்களாகவும் இருக்கின்றோம். (2) இதோடுகூட நமக்கான பரீட்சையானது, கனத்திற்குரிய மற்றும் மகிமைக்குரிய இன்னும் உயர்ந்த ஸ்தானத்திற்கு ஏதுவானதாக இருக்கின்றது; அதாவது, "தெய்வீகச் சுபாவத்தில் பங்குபெறுகிறவர்களுக்கு" ஏதுவானதாக இருக்கின்றது; இன்னும் முற்பிதாக்கள் பெறப்போகிற பூமிக்குரிய தளத்தைக்காட்டிலும் முக்கியமானதாயுள்ள ஆவிக்குரிய தளத்தில், நாம் கிறிஸ்துவோடு உடன்சுதந்தரராகப்போகிறதற்கு ஏதுவானதாக இருக்கின்றது. இப்படிப்பட்ட மாபெரும் தயவுகளையும், சிலாக்கியங்களையும், வெளிச்சமூட்டுதல்களையும் பெற்றிருக்கின்ற நாம் பரிசுத்த பேதுரு அடிகளார் கூறுவது போன்று, "எப்படிப்பட்ட நடக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும்!"

R2035 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நமக்கென்று விசேஷித்த நன்மையானதொன்றை நியமித்திருந்தார்

"இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும்; வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரெயர் 11:39-40)

எபிரெயர்களுக்கு எழுதப்பட்டுள்ள பரிசுத்த பவுல் அடிகளாரின் கடிதத்திலுள்ள 11 மற்றும் 12-ஆம் அதிகாரத்தில், தேவனுடைய இராஜ்யத்தின் (மனித மற்றும் ஆவிக்குரிய பாகங்களில்) இரண்டு பாகங்களில் காணப்படப்போகின்ற இரண்டு வகுப்பார், நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளனர். இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ள காலத்தின்போது, பூமிக்குரிய பாகத்தின் சுதந்தரவாளிகள் அனைவரும் தங்களது ஓட்டத்தினை ஓடி முடித்தவர்களாய் இருந்தார்கள்; மேலும் உயிர்த்தெழுதலில் தங்களது பலனை அடையத்தக்கதாகக் காத்துக்கொண்டிருந்தனர்; முற்பிதாக்களின் பட்டியலில் யோவான்ஸ்நானன் கடைசியானவராகவும், அனைவரிலும் மிக உயர்வாகக் கனப்படுத்தப்பட்ட வராகவும் காணப்பட்டார் (மத்தேயு 11:11); ஆனால் பரலோக பாகத்தின் சுதந்தரவாளிகள் அப்போதுதான் தங்களுடைய ஓட்டத்திற்குள் பிரவேசித்தவர்களாய் இருந்தனர்; மேலும் இந்த ஓட்டம் நீண்டதாகவும், வலி நிறைந்ததாகவும் காணப்படும் என்று அறிந்திருந்த அப்போஸ்தலன், இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய பாகத்தினராய்க் காணப்படப்போகும் அந்தப் பாத்திரவான்களின் உண்மையினையும், பொறுமையுடன் கூடிய சகிப்புத்தன்மையினையும் கவனித்து, ஊக்கத்தினையும், வைராக்கியத்தினையும் அதிக அளவில் பரலோக பாகத்தினர் அடையத்தக்கதாக நாடவேண்டும் என்று விரும்பினார்.

அவரது வார்த்தைகள் ஆதிகால சபைக்கு நேரடியாகப் பேசப்பட்டவையாக இருப்பினும், அவ்வார்த்தைகள் யுக முடிவுவரையிலும் உள்ள ஒட்டுமொத்த சபைக்கும் அதே அழுத்தத்துடன் பொருந்துபவைகளாகவே இருக்கின்றன; மேலும் சில விஷயங்களில் அவ்வார்த்தைகள் யுகத்தினுடைய முடிவு காலத்திற்கு அல்லது அறுவடை காலத்திற்கு விசேஷித்த அழுத்தத்துடன் பொருந்துகின்றதாகவும் இருக்கின்றது. இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய பாகத்தைச் சுதந்தரிக்கப்போகிறவர்கள் மத்தியில் பிரபலமான கதாபாத்திரங்களை, ஆபேல் துவங்கி அப்போஸ்தலன் விவரித்து வருகையில், தேவனுடைய வாக்குத்தத்தங்களில் இவர்களுக்கு இருந்த விசுவாசமே, மரணபரியந்தம் உண்மையாய் இருக்கவும், சகிக்கவும் இவர்களைத் துணிச்சல்கொள்ளச் செய்தது என்று வெளிப்படுத்துகின்றார்; ஆகையால் நாம் அவர்களைக் கவனிக்க வேண்டும் என்றும், அதே விசுவாசத்தினால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்றும் நம்மிடம் கூறுகின்றார்; இந்த வாக்குத்தத்தங்களினால் நாம் "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகலாம்" என்று பரிசுத்த பேதுரு அவர்கள் கூறியுள்ளார் (2 பேதுரு 1:4). இன்னுமாக அப்போஸ்தலன்: அவர்கள் எப்படி விசுவாசத்தினால் தேவனோடுகூட நடந்தார்கள்; எப்படி அவரது வாக்குத்தத்தங்களினால் துணிந்தவர்களாகி, அவர் சித்தம் செய்து, பலன்களை அவரிடத்திலேயே விட்டுவிட்டார்கள்; எப்படி அந்த விசுவாசத்தினுடைய பெலத்தினால் மாபெரும் தடைகளை ஜெயங்கொண்டார்கள்; எப்படித் துன்புறுத்தல்களையும், வலிகளையும், இழப்புகளையும் சகித்து, தேவன் வாக்களித்துள்ளவைகளை நிறைவேற்ற வல்லவர் என்றும், அதைத் தம்முடைய காலத்திலும், வழியிலும் நிறைவேற்றுவார் என்றுமுள்ள விசுவாசத்தில் மரித்தார்கள் என விவரித்துக் காண்பிக்கின்றார். அவர்கள் அத்தகைய புருஷர்களாகவும், ஸ்திரீகளாகவும் காணப்பட்டபடியால், உலகம் அவர்களுக்குப் பாத்திரமாய் இருக்கவில்லை என்று அப்போஸ்தலன்

கூறியுள்ளார். அவர்கள் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்தார்கள்; அவர்கள் விசுவாசம் மிகவும் பலமாகவும், திடமாகவும் காணப்பட்டது.

எனினும் அந்த முற்பிதாக்களுக்கான வெகுமதியானது, அவர்களது உண்மைக்குரிய முழுமையான கைமாறாக இருக்கும் என்றபோதிலும், "விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருக்கிறார்" - அதாவது இராஜ்யத்தினுடைய பரம பாகத்தில் ஒரு சுதந்தரத்தை நமக்கு நியமித்திருக்கின்றார் என்பதை நாம் அறிய வேண்டும் என்று அப்போஸ்தலன் விரும்பினார். எனினும் இப்படிச் செய்கையில், தேவன் நம்முடைய தகுதிகளின்படி வெகுமதி அளிக்கிறதில்லை; ஏனெனில் நம்முடைய தகுதியோ, முற்பிதாக்களின் தகுதியோ, இராஜ்யத்தினுடைய எந்த ஒரு பாகத்திலாகிலும், சுதந்தரத்தை உரிமைப்பாராட்டிட முடியாது. இரண்டு அழைப்புகளுமே அவரது அபரிவிதமான கிருபையினால் உண்டானதாகும். இந்த இரண்டு கூட்டத்தாருக்கான தேர்ந்தெடுத்தலுக்குரிய காலங்கள், வேளைகள், இன்னுமாக அவர்களுக்கான தகுதிகளுக்கடுத்த நிபந்தனைகளும்கூட, உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே யேகோவா தேவனால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது; மேலும் அந்த நியமிக்கப்பட்டுள்ள வேளைக்குள்ளாக, யார் நிபந்தனைகளுக்கு உடன்படுகின்றார்களோ, அவர்கள் நியமிக்கப்பட்ட காலத்தில் வாக்குத்தத்தங்களின் சுதந்தரவாளிகளாகிடுவார்கள். தாம் என்ன செய்ய விரும்புகின்றாரோ, அதைச் செய்வதற்குத் தேவன் உரிமையினை உடையவராய் இருக்கின்றார்; மேலும் எந்த விதத்திலும் ஒப்பிட்டுப்பார்க்காமல், அவரது வியத்தகு தயவுகளானது, அவரது நீதியுள்ள சுதந்தரர்கள் அனைவராலும் நன்றியோடு ஏற்றுக்கொள்ளப்படும்; அனைவரும் அவரது சாயலில் விழித்தெழும்போது, அது மனித தளத்தில் அல்லது ஆவிக்குரிய தளத்தில் ஜீவநிலையை அடைவதாக இருப்பினும், அதில் திருப்தியடைந்திருப்பார்கள்.

இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது அழைக்கப்பட்டவர்களாகிய நமக்கு, தேவன் நியமித்து வைத்திருக்கின்ற "விசேஷித்த நன்மையான" காரியம், கிறிஸ்துவோடு - யேகோவா தேவனுடைய ஒரே பேறான குமாரனோடு - சகலத்திற்கும் சுதந்தரவாளியோடுகூட உடன் சுதந்தரத்துவத்தை அடைவதாகும்; தேவனின் அறிவுள்ள சிருஷ்டிகள் அனைவரையும் ஆசீர்வதிக்கும் அவரது எதிர்கால வேலையில், அவருடன் பங்கெடுத்தலாகும். ஆகையால் அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, சமீபத்திலுள்ள ஆயிர வருஷ யுகத்தினுடைய விடியலில், ஜெயங்கொள்ளும் சுவிசேஷ யுக சபை கிறிஸ்துவுடன் சிங்காசனத்தில் உயர்த்தப்படுவதற்கு முன்பு வரை, முற்பிதாக்களுக்குரிய பலன்கள் காத்திருப்பில் இருக்க வேண்டும். இராஜ்யத்தினுடைய ஆவிக்குரிய பாகம் வல்லமையில் ஸ்தாபிக்கப்பட்டவுடன், பூமிக்குரிய பாகத்தின் ஸ்தாபிக்கப்படுதல் உடனடியாக நிறைவேறும். சுவிசேஷ யுக சபையினுடைய மேன்மையான உயர்த்தப்படுதலில் உள்ள தெய்வீக நோக்கத்தையும், ஒழுங்கையும் தாழ்மையோடு அடையாளங் கண்டவர்களாக, நாமும் அப்போஸ்தலனோடு சேர்ந்து "அவர்கள்" - அதாவது அந்த உயர்ப்பண்புள்ள, நேர்மையான, நீதியான, உண்மையுள்ள முற்பிதாக்கள் - "நம்மையல்லாமல் பூரணராகுவதில்லை" என்று கூறுகின்றோம். இந்த முற்பிதாக்கள் மரணத்திலிருந்து விழித்தெழும்போது உடனடியாகப் பூரணராக்கப்படுவார்கள்; ஏனெனில் கர்த்தருடைய வார்த்தைகள் சாட்சி பகர்வது போன்று, அவர்கள் தங்கள் பரீட்சையில் வெற்றிகரமாய்க் கடந்துவிட்டனர்.

ஆனால் "நம்மை" என்பதில் நாமும் ஒருவராக இருப்போமா என்பது, நமக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் நாம் வெற்றிகரமாய் ஓடுவதைச் சார்ந்துள்ளது. நிச்சயமாகவே பூமிக்குரிய பரிசிற்காக ஓடியவர்களைக்காட்டிலும், குறைவான உண்மையும், குணலட்சணமும் நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கப்பட முடியாது. தேவனுடைய திட்டத்தின் நிமித்தமான ஆசீர்வாதங்கள் அனைத்தும்,

அதாவது முற்பிதாக்களின் உயர்த்தப்படுதல், பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து ஒட்டுமொத்த உலகமும் விடுவிக்கப்படுதல் மற்றும் தேவதூர்களுக்கான இறுதி நியாயத்தீர்ப்பு அனைத்தும் தேவனுடைய ஆவிக்குரிய புத்திரரின், சுவிசேஷ யுக சபையின் வெளிப்படுதலுக்காய்க் காத்திருக்கின்ற படியால், அப்போஸ்தலன் ஆற்றல்மிக்க உருவகத்தைக்கொண்டு 12-ஆம் அதிகாரத்தில், அந்த முற்பிதாக்களை விசுவாசம் மற்றும் பக்திவைராக்கியத்திற்கான தூண்டுதலாக நமக்கும் சுட்டிக்காண்பித்திடும் விதத்தில் பின்வருமாறு பேசுகின்றார்:

"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் (Greek *marturon* - தேவனுக்கும், நீதிக்கும் மிகக் கம்பீரமாகச் சாட்சிகளாய்க் காணப்பட்டனர்) நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் (மேற்கொண்டு) தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற (மேலான, பரலோக) ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபிரெயர் 12:1, 2). நமது மீட்கும்பொருளான இயேசு, இந்த ஓட்டத்தில் நமது முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் காணப்படுகின்றார். அவர் வெற்றிகரமாய் ஓடிமுடித்தார்; அதன் காரணமாக இப்பொழுது தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கின்றார்; இங்கு நாமும் அவரிடத்திற்குப் போவோம். கிரீடத்திற்கு வழிநடத்தின அவருடைய பாதையானது, அவமான சிலுவையின் பாதையாகக் காணப்பட்டது; மேலும் ஒருவன் என்னை அன்புகூருவானானால், அவன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்று கூறியுள்ளார்; வேலைக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல என்றும் கூறியுள்ளார். இந்தத் தற்கால உலகத்தில் துன்புறுத்தல்களும், அவமானமும், துயரமும், இழப்பும்தான் நம்முடைய பங்காகக் காணப்படுகின்றது; நாம் சோர்ந்துபோகாதிருந்தால் உயர்த்தப்படுதலும், மகிமையும் ஏற்றவேளையில் கடந்துவரும். ஆகையால் இந்தப் பொல்லாத நாட்களில் விசுவாசம், பொறுமை மற்றும் சகிப்புத்தன்மைக்கான சோதனைகளில், நம்முடைய மனங்களில் நாம் தளர்ந்து, சோர்ந்துபோகாமல் காணப்படத்தக்கதாக, நாம் இயேசுவின் முன்மாதிரியையும், போதனைகளையும் கவனிக்கும்படிக்கு வலியுறுத்தப்படுகின்றோம்.

மீண்டுமாக முற்பிதாக்களையும், அவர்களது உண்மையையும் குறித்து எபிரெயர் 12:18-24 வரையிலான வசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்கையில், காலத்தின் ஓட்டத்தில் நாம் மிக அதிக தயவுள்ள நிலையினைப் பெற்றிருக்கின்றோம் என்று நினைப்பூட்டப்படுகின்றோம்; ஏனெனில் நாம் அவர்களைப்போன்று நிழலான மத்தியஸ்தராகிய மோசேயின்கீழ், நிழலான தேவ இராஜ்யத்தின் ஸ்தாபிக்கப்படுதலை எதிர்நோக்கிக் காணப்படவில்லை; மாறாக காலத்தின்படி மகிமையான நிஜத்திற்கு, அதாவது கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு சமீபித்துக்கொண்டிருக்கின்றோம். இராஜ்யத்தின் அந்த மகிமை அண்மையில் உள்ளது எனும் இக்கருத்து எவ்வளவு உற்சாகத்தைக் கொடுக்கின்றது! ஒருவேளை இது ஆதிசபையாருக்கே உண்மையாக இருக்குமானால், இது யுகத்தின் முடிவில், அறுவடை காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு எவ்வளவுக்கு அதிகம் உண்மையுள்ளதாகக் காணப்படும்!

நிழலான இராஜ்யபாரம் ஸ்தாபிக்கப்படும்போதும், அதன் தெய்வீக நியாயப்பிரமாணங்கள் கொடுக்கப்படும்போதும் வெளிப்பட்ட மகிமையினைக்குறித்து அப்போஸ்தலன் குறிப்பிடுவதன் மூலம், நிஜமான மெய்யான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் வெளிப்படப்போகும் மகிமையை நாம் முழுமையாக உணர்ந்து கொள்ளத்தக்கதாக உதவுகின்றார் (வசனங்கள் 18-21; 2 கொரிந்தியர் 3:7-11; யாத்திராகமம் 19- பார்க்கவும்).

அந்த ஒரு காட்சியின் மகிமையும், மகத்துவமும், இஸ்ரயேலர் அனைவரையும் அஞ்சி, நடுங்கப்பண்ணினது; மோசேயும்கூட: "நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன்" என்று கூறினார். ஆனாலும் இந்த மகிமையான வெளிப்பாடானது, மெய்யான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் வெளிப்படும் அதிகமான மகிமையோடு ஒப்பிடப்படும்போது, ஒன்றுமில்லாததாகவே இருக்கின்றது என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். அப்போது மகிமையான புதிய எருசலேம் இருக்கும்; மெய்யான சீயோன் மலை இருக்கும்; ஜீவனுள்ள தேவனுடைய (அரசாங்கம் அல்லது இராஜ்யம்) நகரமிருக்கும்; ஆபிரகாம் தூரத்தில் எதிர்நோக்கியிருந்த நகரமிருக்கும். ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களாகிய வரவேற்கும் சேனைகளின் நடுவில், முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையாகக் காணப்படும்; பழிவாங்குதலை அல்ல, மாறாக சமாதானம், மன்னிப்பு, ஜீவனைக்குறித்துப் பேசும் - அதாவது ஆபேலின் இரத்தத்தைக்காட்டிலும் நன்மையானவைகளைப் பேசும் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய கிறிஸ்துவினிடத்திற்கும் - யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், சபை கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்; பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் - இவர்களில் முதலாவது இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தினர் காணப்படுவார்கள், பின்னர் இறுதியில் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதத்தைப்பெறும் ஜனங்கள் அனைவரும் காணப்படுவார்கள்.

---

R4574

# விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் மற்றும் நிஜமாக நீதிமானாக்கப்படுதல்

"கற்பனையின்மேல் கற்பனையாகவும், பிரமாணத்தின்மேல் பிரமாணமாகவும்" தம்முடைய செய்தி முன்வைக்கப்படும் என்று தீர்க்கத்தரிசி மூலம் கர்த்தர் தெரிவித்துள்ளார் (ஏசாயா 28:10). எங்களிடத்தில் கடந்துவந்த சில கேள்விகளை வைத்துப்பார்க்கையில், நீதிமானாக்கப்படுதல் எனும் முக்கியமான பாடமானது இன்னமும் அனைவராலும் முழுமையாகவும், தெளிவாகவும் கிரகித்துக்கொள்ளப்படவில்லை என்பது தெரிகின்றது. இருதயத்தைக் காத்துக்கொள்வதுதான் முக்கியமான காரியமாக இருப்பினும், கர்த்தரால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிவு சம்பந்தமான ஒவ்வொரு அம்சத்தையும் பயன்படுத்திக் கொள்வது நமக்குத் தகுதியான காரியமேயாகும்; இப்படியாகத் தெய்வீகக் கண்ணோட்டத்திலிருந்து காரியங்களை நாம் காண முடியத்தக்கதாக, நம்முடைய தலைகளைச் சரியாய் வைத்துக்கொள்ள முடிபவர்களாகக் காணப்படுவோம்.

நீதிமானாக்கப்படுதல் குறித்து, குறுகலான அல்லது விரிவான கண்ணோட்டத்தில் பார்க்கப்படலாம்; இரண்டுமே உண்மையே. உதாரணத்திற்கு "ஆபிரகாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டார்" என்று நாம் சொல்லுகின்றோம்; இது உண்மையும்கூட. எனினும் இதில் மூன்று படிகள் காணப்படுகின்றது; இதில் இரண்டு படிகள் ஆபிரகாமுடையது மற்றும் ஒன்று கர்த்தருடையதாக இருக்கின்றது. இறுதிபடி இன்னமும் முழுமையாய் நிறைவேற்றப்படவில்லை. ஆரானைவிட்டு வெளியேறி, கானான் தேசத்திற்கு வரும்படியாக தேவன் ஆபிரகாமை அழைத்து, அவரோடு ஓர் உடன்படிக்கையினை பண்ணுவார் என்று தேவன் வாக்களித்தார். ஆரானைவிட்டு வெளியேறும்போது ஆபிரகாம் நம்பிக்கைகொண்டிருந்தார்; கானானிற்குள் வந்தப் பிற்பாடும் தொடர்ந்து நம்பிக்கைகொண்டிருந்தார். ஏற்றவேளையில் தேவன்

வாக்களித்திருந்ததுபோன்று, உடன்படிக்கையினை ஏற்படுத்தினார்; "அவருடைய சந்ததிக்குள் பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்றும் உறுதியளித்தார். இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட காரியமானது, தேவனுக்கும் ஆபிரகாமிற்கும் இடையில், இவரது விசுவாசத்தின்படியான நீதிமானாக்கப்படுதலின் அடிப்படையில் உண்டான ஓர் ஐக்கியத்தினைச் சுட்டிக்காண்பிக்கின்றது; ஆனால் அப்போது ஆபிரகாம் மனித பரிபூரணத்திற்கும், நித்திய ஜீவனுக்கும் ஏதுவாக நீதிமானாக்கப் படவில்லை; மாறாக ஐக்கியங்கொள்வதற்கு ஏதுவாக மாத்திரம் நீதிமானாக்கப்பட்டிருந்தார். அவர் இன்னமும் தொடரவேண்டியிருந்தது; அவர் பலமானதொரு விசுவாசத்தினைப் பெற்றிருக்கின்றார் என்பதை நிரூபிக்க வேண்டியிருந்தது. பல வருஷங்களாக விசுவாசம் பரீட்சிக்கப்பட்ட பின்னர், ஈசாக்குப் பிறந்தார். இப்படியாகக் கர்த்தருடைய தயவு தனக்கு இருக்கின்றது என்பதற்கும், வாக்குத்தத்தமும் நிறைவேற்றப்படும் என்பதற்குமான சான்றினை ஆபிரகாம் பெற்றுக்கொண்டார். எனினும் அவர் ஜீவனுக்கும், மனித பரிபூரணத்தை அடைவதற்கும் ஏதுவாக இன்னமும் நீதிமானாக்கப்படவில்லை. ஈசாக்கு பிறந்து பல வருஷங்கள் ஆன பிற்பாடு, தேவன்: "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு" என்று கூறி ஆபிரகாமினுடைய விசுவாசத்தின்மீது, இறுதி பரீட்சையை வரப்பண்ணினார். (ஆதியாகமம் 22:2)

ஆபிரகாம் தனது முழுமையான இருதய-நேர்மையினை வெளிப்படுத்தாதது வரையிலும், அவர் மீதமுள்ள மனுக்குலத்தாரைவிட "மேன்மையானதொரு உயிர்த்தெழுதலை" பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரவானாக, தேவனால் கருதப்பட முடியாது; அதாவது மனித பரிபூரணத்துக்குரிய உயிர்த்தெழுதலுக்கு - நிஜமாய் நீதிமானாக்கப்படுவதற்கு, உண்மையாய் நீதிமானாகிடுவதற்குப் பாத்திரவானாய்த் தேவனால் கருதப்பட முடியாது. ஆபிரகாமுடைய பரீட்சைகள் அனைத்தையும் அவர் திருப்திகரமாய்க் கடந்து முடித்திருந்தாலும், அவர் இன்னமும் உண்மையில் நீதிமானாக்கப்பட முடியாது அல்லது உண்மையில் பூரணப்படுத்தப்பட முடியாது; ஏனெனில் அவர் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட வேண்டும். ஆதாமுடைய குடும்பத்தின் ஓர் அங்கத்தினனாக, ஆபிரகாம் மரண தண்டனையின்கீழ்க் காணப்பட்டார்; ஆபிரகாம் மனித ஜீவனின் பரிபூரணத்திற்கு நிஜமாக நீதிமானாக்கப்பட வேண்டுமானால், இந்த மரண தண்டனையானது நீக்கப்பட வேண்டும். தேவனுக்குத் திருப்தி உண்டாகும் விதத்தில் ஆபிரகாம் தன்னுடைய பங்கை ஆற்றியுள்ளார்; ஆனாலும் மாபெரும் மத்தியஸ்தர், இரண்டாம் ஆதாம், தலை மற்றும் சரீரம் நிறைவடைந்து, மத்தியஸ்தரின் கரங்கள் மூலம் பூமிக்குரிய திரும்பக்கொடுத்தலையும், பரிபூரணத்தையும் அருளும் புதிய உடன்படிக்கையானது ஆபிரகாமோடும், அவரது மாம்சீக சந்ததியாரோடும் முத்திரையிடப்படுவதுவரையிலும், ஆபிரகாம் தன்னுடைய பூரணப்படுதலுக்காய்க் காத்திருக்க வேண்டும். (எபிரெயர் 11:38-40)

நமது கர்த்தர் இயேசு, அவரது முதலாம் வருகையில் வந்து மரித்தபோது, (அப்பொழுதே) ஆபிரகாமும், முற்பிதாக்கள் அனைவரும் நீதிமானாக்கப்பட்டுவிட்டார்கள் என்று சிலர் சொல்லலாம்; ஆனால் நிச்சயமாக இது உண்மையாய் இருக்கமுடியாது. இவர்களது நிலையானது, மயக்கம் அடைந்து, தண்ணீரில் பாதி மூழ்கிப்போன குழந்தை ஒன்று, அதைக் காப்பாற்றுபவரினால் கைப்பற்றப்பட்டது போன்ற விதத்தில் காணப்படும். சுற்றி நின்று பார்ப்பவர்கள், குழந்தை காப்பாற்றப்பட்டுவிட்டது என்று மகிழ்ச்சியில் ஆர்ப்பரிக்கலாம்! எனினும் காப்பாற்றினவர் அக்குழந்தையைப் படகில் ஏற்ற வேண்டும்; மேலும் குழந்தை முழுமையாகக் காப்பாற்றப்படுவதற்கு முன்னதாக, சுவாசம்/உயிரைக்கொடுக்கும் வேலையானது நிறைவேற்றப்பட வேண்டும்.

நிழலான ஆசாரியன் கிருபாசனத்தின்மீது பாவநிவாரண இரத்தத்தைத் தெளித்ததுபோன்று, நமது கர்த்தர் இயேசு "பரமேறி, நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகப் பிரவேசித்து" நம்முடைய பாவங்களுக்குரிய நிவிர்த்தியினைப் பண்ணினபோதும்கூட, ஆபிரகாமும், மற்ற முற்பிதாக்களும் இரட்சிக்கப்படவில்லை - இவர்கள் நிஜமாக நீதிமான்களாக்கப்படவில்லை அல்லது உண்மையாக நீதிமான்களாக்கப்படவில்லை - அதிகாரப்பூர்வமாக நீதிமான்களாக்கப்படவில்லை. ஏன்? ஏனெனில் விலையேறப்பெற்ற இரத்தமானது ஆபிரகாமின் சார்பாகவும், மற்ற முற்பிதாக்களின் சார்பாகவும், பொதுவான உலகத்தின் சார்பாகவும் செயல்படுத்தப்படவில்லை. "அவர் நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்தார்" என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். காரியங்களை ஒட்டுமொத்தமாகச் சேர்த்து, "கிறிஸ்து சர்வலோகத்திற்காகவும் மரித்தார்" என்று பொதுவான விதத்தில் கூறுகின்றவர்களிடத்தில், நாங்கள் குற்றங்கண்டுபிடிக்கிறதில்லை. இக்கருத்தை நாங்கள் இருதயப்பூர்வமாக ஒத்துக்கொள்கின்றோம். தேவன் நியமித்துள்ள ஏற்றவேளையில், சர்வலோகமும் கிறிஸ்துவின் தியாக மரணத்தினுடைய புண்ணியத்தின் முழுமையான பலனை அடைவார்கள் என்ற விதத்தில் அவர் சர்வலோகத்திற்காகவும் மரித்துள்ளார். ஆகையாலே, "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" என்று வாசிக்கின்றோம் (1யோவான் 2:2). அவரது மரணம் சபையின் பாவங்களை இரத்துசெய்வதற்கு மாத்திரமல்லாமல், இறுதியில் சர்வலோகத்தின் பாவங்களையும் இரத்து செய்வதற்காகவும் நோக்கம்கொண்டுள்ளது; ஆனால் அவர் பரமேறினபோது, அவர் "நமக்காக" அதைச் செயல்படுத்தினார்; உலகத்திற்காகச் செயல்படுத்தவில்லை. நாம் ஏற்கெனவே காண்பித்துள்ளதுபோன்று இந்தச் சுவிசேஷயுகத்தின் - இந்தப் பாவநிவாரண நாளின் முடிவில், அவர் சர்வலோகத்தின் பாவத்திற்காகத் தம்முடைய சொந்த இரத்தத்தின் பலனைப் புதிதாகச் செயல்படுத்துவார்.

சபை வகுப்பாரையும் (உடன் ஆசாரியர்களாகிய "சிறுமந்தை" மற்றும் நிஜமான லேவியர்களாகிய திரள்கூட்டத்தார்), மீதமுள்ள மனுக்குலத்தையும் வேதவாக்கியங்களானது எவ்வளவு தெளிவாய் வேறுபடுத்திக் காண்பிக்கின்றது என்பதைக் கவனியுங்கள். ஆவிக்குரிய தளத்திற்குப் பரம அழைப்பில் கிறிஸ்துவோடு உடன்சுதந்தரர்களாக இருக்கும்படிக்கு, இந்தச் சுவிசேஷ யுகத்தில் "அழைக்கப்பட்டவர்களுக்கு," வேதவாக்கியங்களில் "நீங்கள்," "நாம்," "எங்கள்" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் உலகத்தார் அல்லாதவர்களாவார்கள்; இவர்கள் "கிறிஸ்துவின் பிள்ளைகள்" என்று அழைக்கப்படாமல், "அவரது சகோதரர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர்; இவர்களுக்கு அவர் மூத்த சகோதரன் ஆவார்; கிறிஸ்துவின் அங்கத்தினர்களாகிய இவர்களுக்கு அவரே தலையாவார் - மணவாட்டி வகுப்பாராகிய இவர்களுக்கு அவரே தலையாவார் அல்லது மணவாளன் ஆவார்; இஸ்ரயேலும், முழு உலகமும் தங்களுக்கான ஜீவனையும், திரும்பக்கொடுத்தலின் உரிமைகளையும், பரிபூரணத்தையும் மத்தியஸ்தராகிய கிறிஸ்துவிடம் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்படியாக நமது கர்த்தர் உலகத்திற்குப் பிதாவாக அல்லது ஜீவனளிப்பவராகக் காணப்படுவார். அவர் சபைக்கு, தம்முடைய மணவாட்டிகளுக்கு, தம்முடைய அங்கத்தினர்களுக்கு ஜீவன் அளிப்பவரல்ல. "அவரது இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டாலும்," நாம் ஒருபோதும் அவரிடமிருந்து நிஜமாகப் பூமிக்குரிய ஜீவனையும், மனித பரிபூரணத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்துவின், மத்தியஸ்தரின், ஆசாரியனின், மகிமையான இராஜாவின் அங்கத்தினர்களாக ஆகத்தக்கதாக, நாம் நம்மைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க அனுமதிக்கப்படும் நோக்கத்திற்காக, பூமிக்குரிய ஜீவ-உரிமைகளினால் நாம் தரிப்பிக்க மாத்திரம் பட்டிருக்கின்றோம். நமது கர்த்தராம் இயேசு கிறிஸ்துவின்

தேவனும், பிதாவுமானவரே நம்மை ஜெநிப்பித்துள்ளார். நம்முடைய ஜெநிப்பிக்கப்படுதலும், நமது கர்த்தர் இயேசுவின் ஆவிக்குரிய ஜெநிப்பித்தலைப் போன்றதேயாகும்; அவர் யாரால் ஜெநிப்பிக்கப்பட்டாரோ, அவராலேயே நாமும் ஜெநிப்பிக்கப்பட்டோம்; இன்னுமாக ஒரே காரணத்திற்காகவே ஜெநிப்பிக்கப்பட்டும் இருக்கின்றோம்; பலியாகும் பரியந்தமுள்ள நம்முடைய கீழ்ப்படிதலானது, நமது மாபெரும் மீட்பரின் புண்ணியத்தினால் அங்கீகரிக்கப்படத்தக்கதாக ஆக்கப்படுகின்றது.

ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு குறித்து, இவர்கள் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்று எழுதப்பட்டுள்ளது; இவர்கள் பூமிக்குரிய ஜீவனையும், பரிபூரணத்தன்மையை மீண்டும் பெறும் முழுச்சிலாக்கியங்களையும் நேரடியாக மீட்பரிடமிருந்து, "ஏற்றவேளையில்" பெற்றுக்கொள்வார்கள். உலகம் இதுவரையிலும் எந்த விதத்திலும் ஜீவனைப் பெற்றுக்கொள்ளவில்லை; ஆகையாலே "உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று" அப்போஸ்தலன் கூறுகின்றார். தேவனுக்கும், மனுக்குலத்தின் உலகத்திற்கும் இடையில் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தராகிய இயேசு, அவர்களுக்கான தம்முடைய வேலையை இன்னமும் கையில் எடுக்கவில்லை. "நமக்கான" முந்தைய வேலையை அவர் முடிப்பதுவரையிலும், அவர்கள் காத்திருக்க வேண்டும் - அதாவது அவரது "அங்கத்தினர்களென," அவரது "சரீரமென," அவரது "சபையென" தெரிந்தெடுக்கப்படும் சிறுமந்தையை அவர் கூட்டிச்சேர்ப்பது வரையிலும், உலகம் காத்திருக்க வேண்டும்.

விசுவாச வீட்டாராகிய "நம்மை" தவிர்த்துள்ள பொதுவான மனுக்குலத்தின் உலகத்தார் சார்பில், நமது கர்த்தர் தம்முடைய புண்ணியத்தினைச் செயல்படுத்துவதற்குரிய நேரம் வருகையில் - ஆபிரகாமும், முற்பிதாக்கள் அனைவரும் பூமிக்குரிய தளத்தில் முதற்பலன்களாய்க் காணப்படுவார்கள். இவர்களுடைய நீதிமானாக்கப்படுதலானது, மீதமுள்ள மனுக்குலத்தாரால் அனுபவிக்கப்படப்போகின்றதைவிட "மேன்மையானதொரு உயிர்த்தெழுதலின்" மூலம் நிஜமானதாக்கப்படும், உயிர்க்கொடுக்கப்படும். இவர்கள் பூர்வகாலத்தில் தேவனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுள்ளபடியால், பரிபூரணத்தன்மையை மீண்டும் பெறும் விஷயம் இவர்களுக்கு உடனடியாக அருளப்படும்; ஆனால் உலகத்தாரைப் பொறுத்தமட்டில், ஆயிர வருஷ யுகத்தினுடைய படிப்படியான நடைமுறையின் மூலம், மனித பரிபூரணத்தின் அல்லது நிஜமான நீதிமானாக்கப்படுதலின் தளத்திற்கு உலகத்தார் வருவார்கள். மீதமுள்ள மனுக்குலத்தார் போலவே மனித பரிபூரணத்தை (நிஜமான நீதிமானாக்கப்படுதலை) பெறும் முற்பிதாக்களும், மேசியாவின் பிள்ளைகளாக இருப்பார்கள். "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர்கள் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்" (சங்கீதம் 45:16). இவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்குத் (ஜீவனுக்கேதுவாக நிஜமாய் நீதிமான்களாக்கப்படாதபடிக்கு) தேவன் முதன்மையான ஒன்றை முதலாவதாக நமக்கென்று வைத்திருக்கின்றார் என்றுள்ள அப்போஸ்தலனின் வார்த்தைகளைக் கவனியுங்கள். (எபிரெயர் 11:38-40)

## விசுவாசத்தின் மூலமான நம்முடைய நீதிமானாக்கப்படுதல்

ஆபிரகாமுக்குரிய நிஜமான நீதிமானாக்கப்படுதலில் மூன்று படிகள் காணப்பட்டதுபோன்று, (இப்படிகளில் இரண்டு அவர் சார்பிலான படிகளாகவும், ஒன்று கர்த்தருடையதாகவும் காணப்பட்டதுபோன்று) நம்முடைய நீதிமானாக்கப்படுதலிலும் மூன்று படிகளை நாம் காணலாம். தன் தகப்பன் வீட்டைவிட்டு வெளியேறுவதற்குரிய தேவனுடைய அழைப்பை ஆபிரகாம் கேட்டதுபோன்று, இந்தச் சுவிசேஷ யுகத்தில் விசுவாச வீட்டாரும், உலகத்தை விட்டுவிடவும், அவர்களுக்கு நலமானதெனத் தேவன் காணும் சந்தோஷம் மற்றும் துக்கங்களாகிய அனுபவங்களின்கீழ், அவரது ஜனங்களாகிடுவதற்கும்

அவரால் அழைக்கப்படுகின்றனர். ஆபிரகாம் ஆரானைவிட்டு, கானானுக்குப் பிரவேசித்ததுபோன்று, இந்த முதலாம் படியை நாம் எடுத்துவைத்த நேரம் முதற்கொண்டு, (கீழ்ப்படிதல் எனும் படியை அவரது பிள்ளைகளென எடுத்துவைத்தது முதற்கொண்டு), நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்கள் போன்று கருதப்படுகின்றோம். ஆனால் ஆபிரகாம் எப்படி ஜீவனுக்கேதுவாக நீதிமானாக்கப்பட வில்லையோ, அதுபோல நாமும் பரீட்சிக்கப்பட்டு, உண்மையுள்ளவர்களென நிரூபிக்கப்படுவது வரையிலும் ஜீவனுக்கேதுவாக நீதிமானாக்கப்படுகிறதில்லை. ஆபிரகாம் ஈசாக்கை பலிசெலுத்தச் சொல்லப்பட்டபோது, அவரது விசுவாசம் பரீட்சிக்கப்பட்டதுபோன்று, "உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்" என்ற செய்தியை நாம் கேட்டபோது, நம்முடைய விசுவாசமும், நேர்மையும் பரீட்சிக்கப்பட்டது.

இப்படியாக விசுவாசத்தின் மூலமான நீதிமானாக்கப்படுதலானது தொடர்கின்றது; ஆனால் போதிய காலங்கள் கொடுக்கப்பட்டும், ஒருவேளை பலிசெலுத்த முன்வருவதற்கு மறுக்கப்படுமானால், இது விசுவாசம் போதுமானதாய் இல்லை என்பதையும், நேர்மை போதுமானதாய் இல்லை என்பதையும், அழைக்கப்பட்டுள்ளதான மகிமையான காரியங்களை அடைய முடியாது என்பதையும், இப்படிப்பட்டவர்கள் அவற்றிற்குப் பாத்திரவான்கள் இல்லை என்பதையும் நிரூபிக்கின்றதாய் இருக்கும். இத்தகையவர்கள் கிருபையை விருதாவாகப் பெற்றுள்ளனர் என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். நியாயமான/போதிய காலத்திற்குப் பிற்பாடு, தேவனுடன் ஐக்கியம் கொண்டிருப்பதற்குரிய இவர்களது நீதிமானாக்கப்படுதலானது காலாவதியாகுகின்றது; இதற்கேற்றாற்போல் இவர்களது சமாதானமும், சந்தோஷமும்கூட மங்கிப்போய்விடுகின்றன. இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய பரம அழைப்பை அல்லது மகா தயவை அடைவதற்குரிய வாய்ப்பினை இவர்கள் பெற்றிருந்தார்கள்; ஆனால் அதைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளத் தவறிப்போய்விட்டனர். பின்னர் இத்தகையவர்கள் தேவனோடு கொண்டிருக்கும் உறவானது, மீதமுள்ள மனுக்குலத்தார் கொண்டிருப்பது போன்றே காணப்படும். இவர்கள் புதிய உடன்படிக்கையின்கீழ் மீட்பரினால் கையாளப்படத்தக்கதாகவும், மத்தியஸ்தரின் மத்தியஸ்த இராஜ்யத்தின்கீழ் அவரால் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாகவும், மீட்பரிடத்திற்குக் கையளிக்கப்படுவார்கள்.

ஆனால் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அழைப்பின் காலக்கட்டத்தில், உலகத்தைத் துறந்து, விசுவாசத்தின்மூலம் தேவனுடன் உறவிற்குள் வந்துள்ள சிலர், "விசுவாசத்தினால்" நீதிமான்களாக்கப் பட்டிருக்கின்றனர்; மேலும் மீட்பருடைய மாதிரியைப் பின்தொடர்ந்து, தங்கள் சரீரங்களை ஜீவனுள்ள பலிகளாக ஒப்புக்கொடுக்கும் அளவுக்குத் துணிந்துள்ளனர். இவர்கள் "அநுக்கிரக காலத்தில்" ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர்; மேலும் புதுச்சிருஷ்டியில் அங்கத்தினர்களென, ஆவிக்குரிய தளத்தில் தேவனுடைய புத்திரர்களென - மேசியாவின் சரீரத்தில், சபையில் அங்கத்தினர்களென - பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதில் தெய்வீகச் சான்றையும் பெற்றிருக்கின்றனர். இவர்கள் நிஜமான நீதிமானாக்கப்படுதலைப் பெற்றுக்கொள்ளவில்லை - இவர்கள் நிஜமாகப் பூரணமாக்கப்படவில்லை; எனினும் தேவன் இவர்களது பலியை ஏற்றுக்கொண்ட மாத்திரத்தில், மனித பரிபூரணத்திற்கடுத்த இவர்களது உரிமைகள் அனைத்தும் முற்றுப்பெற்றது. இவர்கள் அர்ப்பணம்பண்ணினது முதற்கொண்டு, இவர்கள் "நீதிமான்களாகக் கருதப்படும் நிலையானது" துவக்கம்பெற்றது. அதாவது, ஒருவேளை இவர்கள் இயேசு "பரிசுத்தராகவும், குற்றமற்றவராகவும், மாசில்லாதவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும்" காணப்பட்டதுபோன்று உண்மையில் காணப்பட்டிருந்தால், தேவன் இவர்களை எப்படிக் கையாண்டு இருப்பாரோ, அப்படிப்போலவே அக்கணம் முதல் இவர்களைக் கையாண்டார் என்று நாம் சொல்ல வருகின்றோம்.

இக்காரியத்தை உதாரணத்துடன் பார்க்கலாம். ஜனவரி 1, 1910-ஆம் வருஷத்திற்கு முன்பு, எந்த ஒரு நேரத்திலும் பயன்படுத்துவதற்குரிய ஆயிரம் டாலர் ($1,000) மதிப்புள்ள காசோலைக்கானச் சீட்டு ஒன்றை A-என்ற நபர், B-என்ற நபருக்கு வெகுமதியாகக் கொடுக்கின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தச் சீட்டு, கிறிஸ்துவை விசுவாசிப்பதினாலும், உலகம் மற்றும் பாவத்திலிருந்து திரும்புவதினாலும், நமக்கு வரும் விசுவாசத்தினாலான நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாக எடுத்துக்கொள்ளலாம். காசோலையானது ஆவிக்குரிய புத்திரத்துவத்திற்கான பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலைக் குறிக்கின்றதாக எடுத்துக்கொள்ளலாம். சீட்டைக் கொடுத்தாலே காசோலை கிடைக்கும் காரியமானது, பூமிக்குரிய உரிமைகள் அனைத்தையும் - அதாவது நமக்குச் சொந்தமானதும், கர்த்தரால் நமக்குத் தரிப்பிக்கப்பட்டவைகளும் (ஆனால் நமக்கென்று சொந்தமாகக் கொடுக்கப்படாதவைகளும்) ஆகிய அனைத்தையும் ஒப்புக்கொடுத்துவிடுவதன் மூலம் மாத்திரமே, ஆவிக்குரிய சுபாவமானது நமக்குரியதாகும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும். சீட்டைக் கொடுத்தால் காசோலை மட்டும் கிடைக்கும் என்பதுபோல, நம்முடைய நீதிமானாக்கப்படுதலும்கூட, அதற்கென்றே நியமிக்கப்பட்டுள்ள நோக்கத்திற்காக மட்டுமே பயன்படும் - அதாவது "நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதற்கு" நம்மை ஏதுவானவர்களாக்கும். ஜனவரி 1-ஆம் தேதிக்கு முன்னதாக அச்சீட்டானது பயன்படுத்தப்படவில்லையெனில், அச்சீட்டு அதன் மதிப்பனைத்தையும் இழந்துவிடுவதுபோன்று, நம்முடைய விசுவாசத்தினாலான நீதிமானாக்கப்படுதலும்கூட, ஏற்ற காலப்பகுதிக்குள்ளாகப் பயன்படுத்தப்படவில்லையெனில், அதன் மதிப்பனைத்தையும் இழந்துவிடும். நியமிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள்ளாகச் சீட்டு ஒப்படைக்கப்படும் காரியமானது, அம்மனிதனுக்குக் காசோலையைப் பெற்றுத்தருவதுபோன்று, விசுவாசத்தின் வாக்குறுதி நிறைவுபெறுகிற தருணத்தில், காரியம் நிஜமாகுகின்றது. காசோலை பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கும். பின்னர் வங்கியில், "ஏற்றவேளையில்" காசோலை பணமாகிற காரியமானது, மரண பரியந்தம் உண்மையாய் இருப்பதன் மூலம் நம்முடைய அழைப்பும், தெரிந்துகொள்ளுதலும் (காசோலையின் பணம் நமக்கு முழுவதுமாக வரும்போது) உறுதிப்படுத்தப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

காசோலை பெற்றுக்கொண்ட பிற்பாடு, அதை ஒருவன் தொலைத்தாலோ அல்லது அழித்துப்போட்டாலோ, வங்கிக்குப்போய், சீட்டைக் கேட்கமுடியாது; அதுபோல பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலை அடைந்தவர்கள், ஒருவேளை அதைத் தவறாய்ப் பயன்படுத்துவார்களானால் அல்லது இரண்டாம் மரணத்திற்குள் முற்றிலும் தொலைத்துப்போடுவார்களானால், மனித பூரணத்தன்மையை மீண்டும் பெறுவதற்காக வேண்டி, கர்த்தரிடம் கேட்கமுடியாது. இத்தகையவர்களுக்கு, அவர்களுக்குரிய கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் முழுப்பங்கும் ஏற்கெனவே கொடுக்கப்பட்டாயிற்று; "கிறிஸ்து இனி மரிப்பதில்லை."

விசுவாசத்தினால் உண்டாகும் நீதிமானாக்கப்படுதலின் வெவ்வேறு அம்சங்களைக்குறித்தும், நீதிமானாக்கப்பட்டவர்கள் - ஒன்றில் முற்பிதாக்களுக்குரிய மனித பரிபூரணத்தைத் தரும் "மேன்மையான உயிர்த்தெழுதலுக்காய்" தேவனால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னதாக அல்லது சபைக்குரிய புதிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகத் தேவனால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னதாக, கீழ்ப்படிதலின் முழுமையான பரீட்சைக் கொடுக்கப்படுவதன் அவசியம் குறித்தும் நாங்கள் காண்பித்திருக்கின்றோம். அடுத்ததாக ஒருவேளை நமது கர்த்தர் பரமேறின பிற்பாடு, "நமக்காக" மட்டுமில்லாமல், சர்வலோகத்திற்காகவும் வேண்டி அவர் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாயிருப்பார் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அப்படி இருந்திருந்தால் சீர்த்தூக்கிவிடப்படுவதற்குரிய

காலமாகிய ஆயிர வருஷங்களினுடைய இறுதியில் இல்லாமல், உடனடியாகவே நம்மைப்போலவே சர்வலோகமும் தேவனுடன் உறவிற்குள் கொண்டுவரப்பட்டிருப்பார்கள். ஒருவேளை இப்படிக் கடந்த காலங்களின் உலகத்தினுடைய பாவங்கள் இரத்து செய்யப்படுகின்ற காரியமும், அவர்களை அபூரண ஜீவிகளெனப் பிதாவுக்கு முன் கொண்டு நிறுத்துவதும், அவர்களுக்கு நன்மையாக இருக்குமோ? இல்லை என்றே நாங்கள் பதிலளிக்கின்றோம்; இன்றைய காலங்களில் வெகுசிலரே நன்மை அடைந்திருப்பது போன்றே, அதிக நன்மை இருந்திருக்காது என்றே நாங்கள் பதிலளிக்கின்றோம். இன்னொரு (சிக்கல்) காரியம் என்னவெனில், ஆதாமின் பிள்ளைகள் அனைவரும் பெலவீனர்கள், அபூரணர்கள் ஆவார்கள்; ஆகவே இவர்களில் யாரெல்லாம் தங்கள் முழு இருதயத்தோடு தேவனிடத்திற்குத் திரும்பி, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலைக் காண்பிப்பார்களோ, அவர்கள் மட்டுமே கிறிஸ்துவின்மூலம் தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்கவர்களாகுவதற்கு வாய்ப்பிருக்கக்கூடும்; இதனால் மீதமுள்ள கோடிக்கணக்கான ஜனங்கள் ஏற்றுக்கொள்ளத் தகாதவர்களாகிவிட நேரிடும்; மேலும் கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் மூலம், ஆதி பாவங்களிலிருந்து இவர்கள் அடையும் விடுதலையானது, இவர்கள் மீது நித்திய ஜீவனா அல்லது நித்திய மரணமா எனும் பரீட்சையை மாத்திரம் வைத்துவிடுகின்றதாகிவிடும். இவர்கள் தேவனுக்கும், நீதிக்கும் சத்துருக்களாகத் தீர்க்கப்படக்கூடும் - இவர்கள் தங்களால் கட்டுப்படுத்த முடியாத மாம்சத்தின் பொல்லாத கிரியைகள்மூலம் மாத்திரம் சத்துருக்களாகிடாமல், இருதயத்திலும் சத்துருக்களாகக்கூடும்; அதாவது "தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்பட்டிராத மாம்ச சிந்தை" உடையவர்களாகக் காணப்படக்கூடும். ஆகையால் இன்று தேவனுடைய கிருபையினால் விசுவாச வீட்டாராகிய சபைக்கு அருளப்பட்டவைகளிலிருந்து முற்றிலும் வேறுப்பட்ட வழிமுறை ஒன்றே, உலகத்திற்கு அவசியமாகக் காணப்படும். நம்முடைய கண்கள் காண்கிறதினாலே, அவைகள் பாக்கியமுள்ளவைகள்; நம்முடைய காதுகள் கேட்கிறதினாலே அவைகள் பாக்கியமுள்ளவைகள்; நம்முடைய இருதயங்கள் தேவனுடன் ஐக்கியம்கொள்வதற்கு வாஞ்சையாய் இருக்கின்றபடியால் அவைகள் பாக்கியமுள்ளவைகள்; இல்லையேல் அவர் நம்மை ஜீவனுள்ள பலிகளென அங்கீகரித்திருக்கவு மாட்டார்; விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை நீதிமான்களாக்கியிருக்கவுமாட்டார்; நம்முடைய மரண உடன்படிக்கையின்மூலம் நம்மைப் பரிசுத்தம்பண்ணியிருக்கவுமாட்டார். உலகத்திற்கு என்ன அவசியமோ, அதையே அவர்களுக்கு ஏற்பாடுபண்ணியுள்ளார். அது பின்வருமாறு:

(1) சாத்தானுடைய வல்லமையை நசுக்கிப்போடுவதற்கு, குருடாக்கும் மற்றும் அடிமைப்படுத்தும் அவனது செல்வாக்குகளிலிருந்து மனுக்குலத்தை விடுதலைப்பண்ணும் ஒரு பலமான இராஜ்யம் அவசியம்.

(2) உடனடியாக வெகுமதிகளையும், தண்டனைகளையும் கொடுக்கத்தக்கதாக, நீதியுள்ள ஓர் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

(3) பரிவாய் இருக்கும் ஓர் இரக்கமுள்ள பிரதான ஆசாரியனும்கூட அவசியம்; இதுமாத்திர மல்லாமல் ஜனங்கள் சார்பாகச் செயல்படுத்துவதற்கும், அவர்களை மனதிலும், ஒழுக்கத்திலும், சரீரத்திலும் சீர்ப்படுத்தத்தக்கதாக, இவரது கட்டுப்பாட்டின்கீழ் அவர்களை முழுமையாய்க் கொண்டுவருவதற்கும் ஏதுவான புண்ணியத்தினை உடையவராக இவர் இருக்க வேண்டும்.

(4) மாம்சீக இஸ்ரயேலுக்கான தேவனுடைய வாக்குத்தத்தங்களோடு இணைந்துகொள்ள வேண்டுமானால், இஸ்ரயேலையே மார்க்கமாக/வழியாகப் பெற்றிருந்து, இவர்கள் மூலமாய்ப் புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் அனைத்தும் உலகத்திற்குக் கடந்துவர வேண்டும்.

(5) இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய இறுதியில், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் கண்டடையப்பட்டு, அனைவரும் மகிமையடைகையில், இந்த மத்தியஸ்த இராஜ்யம் துவங்கும். அப்போது புதிய உடன்படிக்கையானது முற்பிதாக்கள் மூலமாய் இஸ்ரயேலுடன் ஸ்தாபிக்கப்படும். இவர்களுடைய பாவங்களானது, நம்முடைய பாவங்களை இப்பொழுது நிவிர்த்திச் செய்கின்ற அதே விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நிவிர்த்திச் செய்யப்படும். இதன் விளைவாக முற்பிதாக்கள் பரிபூரணர்களாக வெளிவருவார்கள்; இவர்களிடத்தில், இவர்களது சொந்த இஸ்ரயேல் இனத்தார் மாத்திரமல்லாமல், சகல ஜாதிகளும் கூடிக்கொள்வார்கள். "நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை" (உரோமர் 11:27; எரேமியா 31:33). அவர்களது பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் பார்த்து அல்ல, மாறாக ஒரு புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் பார்த்து சோதோமும், சமாரியாவும், சகல ஜாதிகளும் குமாரத்திகளாகக் கொடுக்கப்படுவார்கள். (எசேக்கியேல் 16:60-63)

புதிய உடன்படிக்கை மற்றும் (நிஜமான மோசேயாகிய புதிய உடன்படிக்கையினுடைய மத்தியஸ்தரின் கரங்களில்) அதன் ஆயிர வருஷ இராஜ்யத்தின் புதிய அரசாங்கத்தின்கீழ்ச் சீயோனிலிருந்து (ஆவிக்குரிய இஸ்ரயேலிலிருந்து) வேதமும், எருசலேமிலிருந்து (மாம்சீக இஸ்ரயேலிலிருந்து) கர்த்தருடைய வசனமும் புறப்படும். இதன் விளைவு வியத்தகு ஆசீர்வாதங்களாய்க் காணப்படும் - அதாவது மனதிலும், ஒழுக்கத்திலும், சரீரத்திலும் மேம்படுதல், தொல்லைகளிலிருந்து விடுதலை, நோய்கள் அப்புறப்படுத்தப்படுதல் முதலானவைகள் ஆகும். பெரும்பாதையான வழி துவங்கப்படும்; கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் முழுப்பூமியையும் நிரப்பும். அநேகம் ஜாதிகள் இதை (உணர்ந்துகொள்வார்கள்) கவனிப்பார்கள்; மேலும் இஸ்ரயேலுடன் அந்தப் பூமிக்குரிய நன்மைகளைப் பங்கெடுக்க ஆசைப்படுவார்கள்; ஆனால் புதிய உடன்படிக்கையானது இஸ்ரயேலோடு மாத்திரம் பண்ணப்பட்டிருக்கும். திரும்பக்கொடுத்தலின் தயவுகளில் மற்ற ஜாதிகள் பங்கெடுப்பதற்குரிய ஒரே வழி, இஸ்ரயேலர் ஆகுவதுதான் - அதாவது புதிய உடன்படிக்கையின் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குகளின்கீழ் வருவதாகும். திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் மிகவும் கவரும் விதமாய்க் காணப்படும் என்பதாலேயே, நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்: "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் (அவரோடு யூதனும்கூட) தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் (அவர்களைப் போலவே) அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3)

இப்படியாக பெரும்பாதையான வழியானது, இஸ்ரயேல் மூலமாக, முற்பிதாக்கள் மூலமாக, இவர்களோடு பண்ணப்படும் புதிய உடன்படிக்கையின் மூலமாகத் திறக்கப்படும். பெரும்பாதையான வழியானது அபூரணத்திலிருந்து பரிபூரணத்திற்கும், நீதிமானாக்கப்படுதலுக்கும், இன்னுமாக ஆதாமுக்குள் இழந்துபோகப்பட்டு, கல்வாரியில் மீட்கப்பட்டதுமான அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொள்ளுதலுக்கும் நேராய் வழிநடத்திடும். பஞ்சமானது எப்படி எகிப்தியர்களை ஜீவ அப்பத்திற்காக வேண்டி யோசேப்பினிடத்திற்குப் படிப்படியாக வழிநடத்தியதோ, அதுபோலவே ஆயிர வருஷ யுகத்தின் காரியங்களும்கூட, பரிபூரணத்தையும், நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாகச் சகல ஜாதிகளையும் இஸ்ரயேலிடத்தில் வழிநடத்திடும்.

ஆயிர வருஷ யுகத்தினுடைய நீதிமானாக்கப்படுதலானது, விசுவாச-நீதிமானாக்கப்படுதலாய்க் காணப்படாமல், மாறாக நிஜமான நீதிமானாக்கப்படுதலாகவும், "செய்து, பிழைத்துக்கொள்ளுங்கள்" எனும் புது உடன்படிக்கையின் நிபந்தனையின்கீழும், அந்தப் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர் மூலம் ஏற்பாடுபண்ணப்பட்டுள்ள இரக்கமுள்ள ஏற்பாட்டின்கீழும், படிப்படியாக அடையப்படுகின்ற ஒன்றாகவும் காணப்படும். மத்தியஸ்தருடைய ஆளுகையின்போது, இராஜ்யத்தின் ஏற்பாடுகளுக்கு இசைவாய் வர மறுக்கும் அனைவரும், அக்காலத்தில் விருப்பமும் கீழ்ப்படிதலுமுள்ளவர்களுக்கும் கொடுக்கப்படும் விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முதலாவது தவறிப்போகின்றவர்களாய் இருப்பார்கள்; பின்னர் தங்கள் தவறான நடக்கையில் தொடர்வார்களானால், மீட்கப்படும் நம்பிக்கை ஏதுமில்லாமல், இறுதியில் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுபோவார்கள். இஸ்ரயேல் வாயிலான புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரால், கிறிஸ்துவின் புண்ணியமானது பிரயோகிக்கப்பட்டதன் மூலம் பரிபூரணத்தை அல்லது நிஜமான நீதிமானாக்கப்படுதலை, ஆயிர வருஷங்களின் இறுதியில் மனுக்குலம் யாவரும், அடைந்திருப்பார்கள். அப்போது பூரணராக்கப்பட்டுக் காணப்படும் மனுக்குலம் யாவரும், இஸ்ரயேலர்களாய்க் காணப்படுவார்கள்; அதாவது பல்வேறு தேசத்தார் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் வந்து, இங்குக் குடிமக்கள் ஆகுவது போன்றதாகும். இப்படியாக ஆயிர வருஷ யுகத்தின்போது, சகல ஜாதிகளும் படிப்படியாக இஸ்ரயேலிடத்திற்கு வந்து, புது உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்து, இப்படியாகப் பூமிக்குரிய தளத்தில் உத்தம இஸ்ரயேலர்களாகிடுவார்கள்.

நமது கர்த்தர் தம்முடைய மத்தியஸ்த இராஜ்யத்தின் இறுதியில், ஆளுகையைப் பிதாவாகிய தேவனிடத்தில் கையளிக்கையில், அவர் இஸ்ரயேலர்களை மட்டும் - அதாவது ஆபிரகாமின் சந்ததியைக் கையளிப்பார்; "நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்;" "உன்னுடைய சந்ததி எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப்போலிருக்கும்" என்று எழுதப்பட்டிருப்பது போன்றதாகும் (ஓசியா 1:10). பிற்பாடு ஆபிரகாமின் சந்ததியாராகிய இந்த மாபெரும் கூட்டம் - அதாவது பரிபூரணர்களாகவும், (எந்தச் சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாமல்) தெய்வீகப் பிரமாணங்களை முற்றிலும் கைக்கொள்ள முடிகிறவர்களாகவும் காணப்படும் இவர்கள், கொஞ்சக்காலம் சாத்தான் கட்டவிழ்த்துவிடப்படுவதன் மூலம் சோதிக்கப்படுவார்கள். எதிராளியானவர் "கடற்கரை மணலைப் போலிருக்கும்" ஜனங்கள் அனைவரையும் வஞ்சிக்கத்தக்கதாக, பூமியெங்கும் செல்வார். எத்தனைப்பேர் உண்மையில்லாதவர்களென நிரூபிக்கப்பட்டு, இவர்களுக்காகச் சாத்தான் விரிக்க அனுமதிக்கப்பட்டுள்ள வலையில் விழுவார்கள் என்பது தெரிவிக்கப்படவில்லை; ஆனாலும் தேவன் தமக்கும், தம்முடைய நீதியின் கொள்கைகளுக்கும் ஜனங்கள் கொண்டிருக்கும் நேர்மை தொடர்புடைய விஷயத்தில், முதலாவது அவர்களைப் பரீட்சிக்காமல், யார் ஒருவரையும் அவர் நித்திய ஜீவ நிலைக்குள் முற்றும் முழுமையாக ஏற்றுக்கொள்கிறதில்லை. தற்காலத்தில் தேவன் சபைக்கு வைக்கும் பரீட்சைகளில் ஒன்று, மாம்சத்தின் அடிப்படையில் இல்லாமல், மாறாக ஆவியின் அடிப்படையில், இருதயத்தினுடைய நோக்கங்களின் அடிப்படையில் நம்மைப் பரீட்சிப்பதாகும் - அதாவது அவரது வார்த்தைகளுக்கும், ஏற்பாடுகளுக்குமுரிய நம்முடைய கீழ்ப்படிதலைப் பரீட்சிப்பதாகும். கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பவர்கள் மாத்திரமே பரீட்சையில் ஜெயிப்பார்கள். இறுமாப்புள்ளவர்களும், பெருமையுள்ளவர்களும், சுய-சித்தம்கொண்டவர்களும் நிச்சயமாகவே ஏற்க மறுக்கப்படுவார்கள். "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6)

---

R4901

# விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்

உரோமர் 5:1-ஆம் வசனத்தில், "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" என்று அப்போஸ்தலன் கூறுகையில், தேவனுடனான நம்முடைய சமாதானம் அல்லது ஐக்கியமானது, நமது விசுவாசத்துடன் துவங்கி, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும், இராஜ்யத்தின் மகிமை, கனம் மற்றும் அழியாமைகுறித்த நம்பிக்கையில் களிகூருகிறவர்களாகவும், கிருபையினால் தேவனுடைய புத்திரர்களாகவும் நாம் நிற்கும் இந்நிலைக்கு, நம்மை வழிநடத்தியுள்ளது என்பதாக அவரது சிந்தனை காணப்படுகின்றது. விசுவாசத்தின் மூலமான நம்முடைய நீதிமானாக்கப்படுதல் என்பது நமது விசுவாசத்தில், முதலாவதாகத் துவங்கினது; அதாவது கர்த்தரை மங்கலாய் நாம் முதலாவது பார்த்தது முதலே துவங்கினது.

தேவனை நாம் முதலாவதாக அணுகினது முதற்கொண்டு, நாம் ஓரளவிற்குச் சமாதானம் பெற்றுக்கொள்ளத் துவங்கினோம்; இச்சமாதானமானது நாம் சரியான திசையில் தொடர்ந்து நடந்து, அறிவிலும் கீழ்ப்படிதலிலும் வளர்ந்துகொண்டிருப்பதுவரையிலும் தொடர்ந்து காணப்படும். யாருடைய விசுவாசம் அல்லது கீழ்ப்படிதல் நின்றுவிடுகின்றதோ, அவர்கள் தேவனோடு பெற்றிருந்த சமாதானம் குறைந்துபோவதைக் காண்பார்கள். ஒருவேளை முழுமையாய் அர்ப்பணம்பண்ணுவதற்கும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கும் ஏதுவாய் விசுவாசமும், கீழ்ப்படிதலும் வழிநடத்துமானால், அச்சமாதானமானது நம்முடைய இருதயங்களை ஆளும், "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமாக" மாறும் (பிலிப்பியர் 4:7). இவ்வசனம் பரிசுத்த ஆவியினால் பூரணப்படுத்தப்பட்ட சமாதானத்தைக் குறித்துத் தெரிவிக்கின்றது; இது தேவ சித்தத்திற்கு முழுமையாய் அர்ப்பணிப்பதன் விளைவாக வருகின்றதாகும்.

நம்முடைய சரீரங்களை ஜீவபலிகளாகக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க நாம் விரும்பும் கட்டம் வரும் அளவுக்கு விசுவாசமும், கீழ்ப்படிதலும் பெருகின பிற்பாடு, இப்பொழுது நாம் நின்றுகொண்டிருக்கும் இந்த முழு ஆசீர்வாதமான நிலைக்குள் நாம் பிரவேசித்தோம். ஆனால் பிரவேசிப்பதற்கு முதலாவதாக, நம்முடைய விசுவாசமானது மாபெரும் பிரதான ஆசாரியனால் உயிரூட்டப்பட வேண்டும்; இவர் நம்மைப் பூரணமாக்குவதற்கு அவசியமாய் இருக்கும் அளவுக்குள்ள, தம்முடைய பலியின் புண்ணியத்தினை நமக்குத் தரிப்பிக்கின்றார்; இரண்டாவதாக நாம் நம்முடைய பரம பிதாவினால் பலிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்; புதிதான ஜீவனுக்குப் பரிசுத்த ஆவியினால் நம்மை ஜெநிப்பிப்பதன்மூலம், நம்மை ஏற்றுக்கொண்டுள்ளதைத் தேவன் சுட்டிக்காண்பிக்கின்றார்.

உயிரூட்டப்படுதலே நீதிமானாக்கப்படுதலை முழுமையானதாகவும், மாற்றமுடியாததாகவும் ஆக்குகின்றது. யாருடைய நீதிமானாக்கப்படுதலானது உயிரூட்டப்பட்டுள்ளதோ, அந்நபர் கிறிஸ்துவின் புண்ணியத்தில் தனது முழுமையான பங்கினைப் பெற்றுக்கொண்டவர் ஆவார். இத்தகைய ஒரு நபர் பன்றி சேற்றிலே புரள திரும்புவதுபோன்று ஒருவேளை திரும்புவாரானால், அந்நபருக்கு மாபெரும் பாவ-நிவாரணத்தில் எந்த ஒரு பங்கும் மீதியிருப்பதில்லை. ஒருவன் புதிய சிருஷ்டியெனப் பூரணமடையத் தவறிப்போவானானால், அவனுக்கு "நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினை" மட்டுமே மிஞ்சும். (எபிரெயர் 10:27)

காரியத்தை உதாரணத்துடன் விவரித்துப்பார்ப்பதற்கு, தேவனோடு இசைவில் இல்லாத, ஆனால் தேவன்மீது ஆர்வம் அடைந்த ஒரு மனுஷன் காணப்படுகின்றான் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தில் தேவன் அடையாளப்படுத்தப்படுகின்றார் என்பதை அம்மனுஷன் அடையாளங்கண்டுகொள்கின்றான். அவன் தேவனிடத்திற்கு நெருங்குகின்றான். அவன் ஆசரிப்புக்கூடாரத்தை நெருங்குகையில், பாளயத்திலிருந்து பிராகாரத்திற்கு வருவதற்கென வாசல் ஒன்று இருப்பதைக் காண்கின்றான். அந்த வாசலுக்குள் பிரவேசித்தப் பிற்பாடு, மீட்பரின் புண்ணியமான பலியினை அடையாளப்படுத்தும் வெண்கல பலிபீடத்தையும், அதன் பலிகளையும் காண்கின்றான். பலிபீடத்தைக் கடந்துசெல்வது என்பது, மீட்பின் வேலையில் வைக்கப்படும் விசுவாசத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. விசுவாசத்தின் நிலையாகிய "பிராகாரத்தின்" நிலைக்குள் அவன் பிரவேசித்தது முதற்கொண்டு, கீழ்ப்படிதலோடு அவன் ஒவ்வொரு அடியையும் எடுத்துவைக்கையில், அவனது விசுவாசமும் அதிகரித்து வருகின்றது. அடுத்து மரணபரியந்தம் உள்ள அர்ப்பணிப்பை அடையாளப்படுத்தும் முதலாம் திரை வருகின்றது. திரைக்குள்ளே கடந்து செல்லத்தக்கதாக, முழுமையான அர்ப்பணிப்பில் குனிந்து உள்ளே சென்றால், "என்னுடைய சமாதானத்தை உங்களுக்குக் கொடுக்கின்றேன்" என்று நமது கர்த்தர் கூறின முழுமையான அல்லது பரிபூரண சமாதானம் உண்டாகும். (யோவான் 14:27)

அவனது விசுவாசம் இனிமேலும் மீட்பருடைய வேலையின் மீதுள்ள விசுவாசமாக மாத்திரம் காணப்படுவதில்லை; இதைவிட அதிகமாகி, "தேவனுடைய அன்பின் ஈவாகிய சமாதானமாகுகின்றது;" அதாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதும், அவனது இருதயத்தை ஆளும் எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமாக மாறுகின்றது. ஆனால் ஒருவேளை பூமிக்குரிய நலன்கள் அனைத்தும் பலிசெலுத்தப்படுவதை அடையாளப்படுத்தும் முதலாம் திரையை நெருங்கின பிற்பாடு, இந்தப் படியில் அடியெடுத்து வைக்கப்படவில்லையெனில், சமாதானம் குறைவதே விளைவாகக் காணப்படும்; இன்னுமாக வாசலை நோக்கி, உலகத்தை நோக்கிப் பின்செல்லுவதற்கும் வாய்ப்பு இருக்கும்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம்கொண்டிருப்பதன்மூலம் இப்பொழுது நீதிமானாக்கப்படுதலுக்கும், இன்னுமாக ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டார்கள் என்று கூறப்பட்டுள்ள முற்பிதாக்களின் நீதிமானாக்கப்படுதலுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் பின்வருமாறு: முற்பிதாக்கள் தங்களது விசுவாசம் உயிரூட்டப்பட முடியாத காலக்கட்டத்தில் வாழ்ந்தார்கள்; ஆகையால் தெய்வீக அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தையும், அவர்கள் அனுபவித்த அறிவின் அளவிற்கேற்ப எதிர்காலத்திற்கென்று மேன்மையானதொரு நம்பிக்கையையும் அடைவதைக்காட்டிலும், அதிகமான யாதொன்றையும் அவர்களால் பெறமுடியவில்லை. மீட்பர் மூலமாய்த் தவிர மற்றபடி அவர்களால் உண்மையில் நித்திய ஜீவனை ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது; ஆகையால் நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தத்தை மட்டும் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். மீட்பர் தம்முடைய புண்ணியத்தை உலகத்திற்குச் செயல்படுத்தும்போதே, அவர்களது முழுமையான நீதிமானாக்கப்படுதல் கடந்துவரும்.

---

R5316

## நீதிமானாக்கப்படுதல் தொடர்பான கேள்வி

கேள்வி:- சபையினுடைய நீதிமானாக்கப்படுதல் தொடர்புடைய உங்களது கண்ணோட்டத்தினை மாற்றி உள்ளீர்களா? அப்படியானால், இத்தலைப்பு தொடர்புடைய வேதாகமப் பாடங்களினுடைய முதலாம் தொகுதியின் கருத்துகள் இனிமேலும் உங்களுடைய கருத்தல்ல என்று எடுத்துக்கொள்ள வேண்டுமா?

பதில்:- நிச்சயமாக இல்லை! எங்களிடத்தில் மாற்றுக்கருத்துகள் இருக்குமானால், பின்னர் நாங்கள் ஏன் அத்தொகுதியினை வெளியிட்டு பரப்புவோம்? "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்" (நீதிமொழிகள் 4:18). ஆகையால் நீதிமானாக்கப்படுதல் எனும் தலைப்பு தொடர்புடைய காரியங்களானது, கர்த்தருடைய அருமையான ஜனங்களில் அநேகரை நாளுக்கு நாள் தெளிவுப்படுத்திக்கொண்டுவருகின்றது. அவர்களால் முன்பு தெளிவாய்ப் புரிந்துகொள்ளப்படாத நீதிமானாக்கப்படுதலின் அம்சங்களானது, இப்பொழுது மிகவும் தெளிவாகிக்கொண்டிருக்கின்றது. உதாரணத்திற்குப் பார்ப்போமானால், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது படிப்படியான செயல்முறை எனும் காரியத்தினைக் கடந்த காலங்களில் அநேகர் பார்க்கத் தவறியுள்ளனர்; சிலர் இன்றும் காணத் தவறுகிறவர்களாகவே காணப்படுகின்றனர். விசுவாசத்தினுடைய ஒவ்வொரு படியும் climax/உச்சநிலை அடையத்தக்கதாக நம்மை அருகாமைக்குக் கொண்டுவந்தது.

ஆனாலும் கர்த்தருக்கான நமது கீழ்ப்படிதல் மூலமாயும், அர்ப்பணிப்பில் முழுமையாய்ச் சரணடைந்துவிடுவதன் மூலமாயும், நமது விசுவாசமானது அதன் பூரணத்தினை வெளிப்படுத்தாதது வரையிலும், அந்த உச்சநிலையானது/climax முழுமையாய் அடையப்பட முடியாது. பின்னர் நமது மகா பரிந்துபேசுபவர் நமது அர்ப்பணிக்கப்பட்ட சரீரங்களை ஏற்றுக்கொண்டு, அதற்குத் தம்முடைய புண்ணியத்தினைத் தரிப்பித்து, நீதிக்கு முன்னதாக - அதைப் பரம பிதாவின் பார்வையில் முழுமையாய்த் தகுதிப்படுத்துகின்றார். பின்னர் முழுமையாய் நீதிமானாக்கப்பட்டுள்ள ஆத்துமாவை/ஜீவியைப் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிப்பதன் மூலம் பரம பிதா ஏற்றுக்கொள்கின்றார். அதுமுதல் அவன் ஒரு புதுச் சிருஷ்டியாகவும், ஆவிக்குரிய தளத்தில் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு புத்திரனாகவும் காணப்படுகின்றான்.

விசுவாசத்தில் வளரும் காலப்பகுதியின்போது, நீதிமானாக்கப்படுதலானது படிப்படியாக அடையப்படுகின்றது; மேலும் அந்நபர் அதிகமதிகமாய்த் தெய்வீகத் தயவைப் பெறுகிறவனாகுகின்றான். எனினும் இறுதி படியினை அடியெடுத்து வைக்காதது வரையிலும், ஒருவன் மனித சுபாவத்திற்கு முழுமையாய் நீதிமானாக்கப்பட முடியாது - பூமிக்குரிய தளத்தில் ஒரு புத்திரனாக்கப்பட முடியாது. மேலும் ஒரு கணம்தான் அவன் அந்நிலையில் காணப்படுகின்றான். பின்னர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட காரியமானது, தகுதிப்படுத்தப்பட்டுள்ள/பூரணப்படுத்தப்பட்டுள்ள நபரின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது; மேலும் ஒரு புதுச்சிருஷ்டியென அவனது துவக்கத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.

## தற்காலிகமான மற்றும் உண்மையான புத்திரத்துவம்

இவைகள் அனைத்துமே யுகங்களைப்பற்றின வரைபடத்தில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. N - தளம் பல்வேறு படிகளில் நீதிமானாக்கப்பட்டுள்ள நிலைமையினைச் சுட்டிக்காட்டுகின்றது. இப்படியாக ஆபிரகாமும், பழைய ஏற்பாட்டு காலங்களிலுள்ள மற்றவர்களும், அவர்களது விசுவாசத்தின் காரணமாய்த் தேவன் முன்னிலையில் நீதிமானாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஜீவனுக்கேதுவாக நீதிமானாக்கப் படுகிறதுமில்லை, குமாரத்துவத்திற்கேதுவாக நீதிமானாக்கப்படுகிறதுமில்லை. இவர்கள் தேவனுடைய தோழமையை, தயவை, கண்காணிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக நீதிமானாக்கப்பட்டனர். இயேசு மரித்து, உயிர்த்தெழுந்து பரமேறி, தம்முடைய புண்ணியத்தினைச் சபையின் சார்பாகச் செயல்படுத்தின போது, முழுமையான அர்ப்பணத்தின் வாயிலாக அவரது அடிச்சுவட்டில் நடக்க விருப்பமாயிருக்கும் இந்தச் சபை வகுப்பார் யாவருக்கும் அவர் பரிந்துபேசுபவரானார். அவரது புண்ணியம் தரிப்பிக்கப்படும்

காரியமானது, ஒவ்வொருவருக்குமான நீதிமானாக்குதலின் வேலையினை உள்ளடக்குகின்றது; மேலும் இதன் காரணமாகத் தேவன் ஒருவனுடைய பலியை ஏற்றுக்கொள்ள முடிபவராகவும், புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்க முடிபவராகவும் ஆக முடிந்தது.

ஆபிரகாம் தேவனுடைய நண்பன் என்று அழைக்கப்பட்டார்; காரணம் அவரது விசுவாசமும், தேவனுடன் இசைவாய்க் காணப்பட வேண்டும் என்ற வாஞ்சையும் ஆகும். இப்படியாகவே யோவான் ஸ்நானனும் காணப்பட்டார்; இவரைக்குறித்து நாம் வாசிப்பதாவது: "மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்" (யோவான் 3:29). "Servant/வேலைக்காரன்" எனும் வார்த்தையானது, வேதாகமத்தில் விசேஷமாக மோசேயினுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ்க் காணப்படும் யூதர்களைக்குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கையின் வாயிலாக அவர்கள் தேவனுடைய பராமரிப்பையும், ஆசீர்வாதத்தையும் அனுபவித்தார்கள்; அவரது வேலைக்காரர்களாக இருக்கும்படிக்கும் அனுமதிக்கப்பட்டார்கள். ஆபிரகாமும், இன்னும் மற்ற அநேகரும் தேவனுடைய நண்பர்களாக இருந்தபோதிலும், குமாரத்துவம் அடைவதற்கான சிலாக்கியங்களுக்கு முழுக்கத் தகுதியானவர்களாகக் காணப்பட்டிருப்பார்கள் என்ற போதிலும், இவர்கள் புத்திரர்களாக அங்கீகரிக்கப்படுவது என்பது தெய்வீக ஏற்பாட்டின்படி கூடாத காரியமாக இருந்தது; ஏனெனில் அப்போஸ்தலன் விவரித்துள்ளதுபோல, "குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்;" மேலும் கிறிஸ்துவின் பலியானது, பாவம் மற்றும் மரணம் இரத்து செய்யப்படுவதற்குரிய வழியினைத் திறவாததுவரை, யாரும் தெய்வீகப் புத்திரத்துவத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

இதுபோலவே தேவனுடைய புத்திரர்கள் என்ற நம்முடைய நிலையும் தற்காலிகமானதேயாகும். நாம் தேவனுடைய அன்பில் நிலைத்திருந்தால், நாம் அவரது புத்திரர்களென நிலைத்திருந்து, ஏற்றகாலத்தில் பூரணப்படுத்தப்படுவோம். ஆனால் ஒருவேளை ஒருவன் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்வதற்கு என்றும், அந்தப் பாவத்திற்காக ஊழியஞ்செய்வதற்கு என்றும் பின்வாங்கிப் போவானேயானால், அவன் தனது புத்திரத்துவத்தை இழந்துபோவான். அவனது பெயர் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்படும். பிதாவிடம் பரிந்துபேசுகிறவர், அத்தகையவனை அங்கீகரிப்பதை நிறுத்திக் கொள்வார். அத்தகையவன் குமாரனிடத்தில் எந்த உறவு நிலையினையும் கொண்டிருக்கமாட்டான்; மேலும் அத்தகையவனுடைய இடத்தை அபிஷேகிக்கப்பட்ட சரீரத்தின் அங்கத்தினன் என, இன்னொருவன் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவான்.

ஆகையாலே அப்போஸ்தலன்: "பிரியமானவர்களே, இப்பொழுது (கருநிலையில்) தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் (நமது மீட்பர், நமது தலை) வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறியுள்ளார் (1 யோவான் 3:2). அதாவது நமது தற்போதைய புத்திரத்துவம் தற்காலிகமானதாகும்/tentative. நிஜமான புத்திரத்துவமானது, நமது தகுதியை ஆராய்ந்திடும் பரீட்சையில் நாம் வெற்றியடைந்த பிற்பாடே துவங்கும். யாரெல்லாம் தங்களது விசுவாசம் மற்றும் நேர்மையின் காரணமாய் அங்கீகரிக்கப்படத்தக்கவர்களெனத் தங்களை நிரூபிக்கின்றார்களோ, அவர்கள் முழுமையான விதத்தில் மகிமையான உயிர்த்தெழுதலுடைய மாற்றத்தின் மூலம் புத்திரர்களாக்கப்படுவார்கள். இப்படியாக முழுமையான அர்ப்பணம்பண்ணாதது வரையிலும், யார் ஒருவரும் N - தளத்தில் ***முழுமையாய்*** ஏற்றுக்கொள்ளப்படுகிறதில்லை; அதுபோலவே L - (பூரண ஆவிக்குரிய ஜீவிகள் நிலை - தொகுதி:1, பக்கம்: 285) தளத்தை அடையாதது வரையிலும் ஒருவர் குமாரத்துவத்திற்குள் ***முழுமையாய்*** ஏற்றுக்கொள்ளப்படுகிறதில்லை.

## மேன்மையான உயிர்த்தெழுதல்

பூர்வகால பாத்திரவான்கள், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, தீர்க்கத்தரிசிகள் முதலானவர்கள் தேவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப்பட முடியாது மற்றும் அவர்கள் அப்படியாக அழைக்கப்படவுமில்லை; இதற்குக் காரணம் அவர்கள் அந்த ஸ்தானத்திற்கோ, பெயருக்கோ பாத்திரவான்கள் இல்லை என்பதினால் இல்லை (எபிரெயர் 11:38-40). இதை அப்போஸ்தலன் நமது கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்கள் "தேவனுக்குப் பிரியமாயிருந்தார்கள்" என்றும், பூரணமான இருதயத்திற்குக் குறைவான எதுவும் அவரைப் பிரியப்படுத்துவதில்லை என்றும் நமக்கு உறுதிப்படுத்துகின்றார். அவர்கள் குமாரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தடையாக இருந்த ஒரே காரியம், அவர்கள் சார்பாக பாவநிவாரண இரத்தம் முதலாவது முன்வைக்கப்பட வேண்டிய அவசியமேயாகும். முற்பிதாக்கள் பெறப்போகின்ற "மேன்மையான உயிர்த்தெழுதலில்," அவர்கள் பூரண மனுஷர்களாக வருவார்கள் என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதலாக இருக்கின்றது. அவர்கள் ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னதாக இருந்ததுபோல பூரணர்களாகவும், மனங்கள் மற்றும் இருதயங்கள் மற்றும் சித்தங்கள் விஷயத்தில் வளர்ச்சிப்பெற்றவர்களாகவும், பயிற்றுவிக்கப்பட்டவர்களாகவும், பரீட்சிக்கப்பட்டவர்களாகவும், தேவனுக்கு நேர்மையானவர்களென நிரூபிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுவார்கள். அந்தப் பரிபூரணமான நிலைமையில் அவர்கள் மாதிரிகளாகக் காணப்படுவார்கள், அதாவது மேசியாவின் ஆளுகையின்போது கீழ்ப்படிதல் வாயிலாக மனுக்குலம் அடையப்போகும் அனைத்திற்கும், மாதிரிகளாகக் காணப்படுவார்கள்.

அவர்களுடைய உயிர்த்தெழுதல் முதற்கொண்டு, இந்தப் பரிபூரண மனிதர்கள், ஆதாமிற்கு இருந்தது போலவே, தேவனிடம் வருவதற்குரிய அதே உரிமையினைப் பெற்றவர்களாய்க் காணப்படுவார்கள்; மேலும் ஆதாம் போலவே, தேவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப்படுவதற்கு முழு உரிமையினை அளிக்கப்பெற்றவர்களாய்க் காணப்படுவார்கள்; ஆனால் ஒரே ஒரு விதிவிலக்கு காணப்படும். அதென்னவெனில், முற்பிதாக்களும், மீதமுள்ள மனுக்குலமும் மேசியாவின் ஆயிர வருஷ இராஜ்யத்தின்போது புதிய உடன்படிக்கையினுடைய மத்தியஸ்தரின் கரங்களில் காணப்படுவார்கள். வேதவாக்கியங்களின்படி அந்தக் காலப்பகுதியின் முடிவிலேயே, அவர் இராஜ்யத்தைப் பிதாவினிடத்தில் ஒப்படைப்பார்.

ஆகையால் கிறிஸ்துவினுடைய ஆளுகையின் இறுதி காலத்திற்கு முன்புவரை, அதாவது பிதாவே, "சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கும்," அனைத்தும் நேரடியாக அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பதற்கும் வேண்டி, அனைத்தையும் கிறிஸ்து பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கும் இறுதிகாலத்திற்கு முன்புவரை, பிதாவுடன் குமாரர்களென இந்த முற்பிதாக்கள் நேரடியான கையாளுதலைப் பெற்றிருப்பதில்லை. எனினும் ஆயிர வருஷங்களின்போது, கிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஏற்பாடுகளின்கீழ், பூரணராக்கப்பட்ட முற்பிதாக்களும், மற்றவர்களும், தாங்கள் அடைந்துள்ள பூரண அளவிற்கேற்ப சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பார்கள்; ஏனெனில் அவர்கள் அனைவரும் இனிமேலும் பாவம், மரணம் மற்றும் "இவ்வுலகத்தின் அதிபதியாகிய" சாத்தானுடைய ஆளுகையின்கீழ்க் காணப்படாமல், மாறாக ஜீவாதிபதியின்கீழும், ஜீவனுக்கு ஏதுவான நீதியான அவரது ஆளுகையின்கீழும் காணப்படுவார்கள்.

R5774 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நீதிமானாக எண்ணப்படுதல் மற்றும் உண்மையாய் நீதிமானாக்கப்படுதல்

"நீதிமானாக்கப்படுதல்" என்ற வார்த்தைக்குறித்த சரியான பார்வையினை அடைய, மனுஷனுக்கு என்ன பிரச்சனை ஏற்பட்டது என்றும், ஏன் விசுவாசத்தின் மூலமாக அல்லது வேறு வழி மூலமாக மனுஷன் நீதிமானாக்கப்பட வேண்டும் என்றும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மனுஷன் பாவியாகி, சர்வலோகத்தின் மகா நியாயாதிபதியாகிய தேவனால் மரணதண்டனை கொடுக்கப்பட்டான் என்ற உண்மையே, எந்த ஒரு மனுஷனும் தேவனுடன் இசைவிற்குள்ளாக வருவதற்கு முன்னதாக, நீதிமானாக்கப்பட வேண்டியதற்குரிய காரணம் என்பதை நாம் காண்கின்றோம். விழுகைக்கு முன் ஆதாம் தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டார். இயேசு வரும்வரை ஆதாமுக்குப் பிறகு யாரும் அந்தப் பெயரால் அழைக்கப்படவில்லை. இயேசு தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டார், ஏனெனில் அப்படியாக அவர் பிறந்தார்; மேலும் அவர் உலகத்திற்கு மனிதனாக வருவதற்கு முன்பும், குமாரனாகவே இருந்தார்.

"நீ சாகவே சாவாய்" என்கிற தீர்ப்பின்கீழ், ஜீவனுக்கு அபாத்திரராகப் போனபடியாலேயே, ஆதாமுக்கும், அவரது பிள்ளைகளுக்கும் மரண தண்டனை கொடுக்கப்பட்டது. அது மாத்திரமல்ல, வியாதி, ஆபூரண சிந்தை ஆகியவையும் தண்டனையின் நிறைவேறுதலோடு சேர்ந்துகொண்டது. அந்தத் தண்டனையின் மற்றொரு பகுதி, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, தேவனுக்கு அந்நியராகுதல் ஆகும். மனிதன் மறுபடியும் தேவனுடைய கிருபை மற்றும் ஆசீர்வாதத்திற்குள் வருவதற்கு, பாவ நிவர்த்திற்கான ஒரு பலி தேவையாயிருந்தது. அந்தப் பலி ஏறெடுக்கப்படும் வரை, முழுமையான விதத்தில் நீதிமானாக்கப்படுதல் என்பது முடியாது.

இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்ட மோசேயின் பிரமாணத்தை, அவர்கள் கைக்கொள்வார்களானால், தேவனோடு ஐக்கியமும், கடந்தகால பாவங்களுக்கான மன்னிப்பும், நீதிமானாக்கப்படுதலும் அருளப்படும் என்று அவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டது என்று அப்போஸ்தலர் பவுல் சுட்டிக்காட்டுகின்றார். பதினைந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக முயற்சித்தும், அதை அவர்களால் கைக்கொள்ள முடியவில்லை என்பதைக் கண்டார்கள்; "ஏனெனில் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை" (கலாத்தியர் 2:16). ஆனால் இதற்கிடையில் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாததால் யாரும் நீதிமானாக்கப்படாமல் இருக்க, சிலர் தகுதியான ஆவியை, விசுவாசத்தின் ஆவியை மற்றும் கீழ்ப்படிதலை வெளிப்படுத்தினவர்களாகக் காணப்பட்டு, தேவனால் மெச்சிக்கொள்ளத்தக்கவர்கள் ஆனார்கள். இவர்களை முற்பிதாக்கள் வகுப்பார் என்று நாம் அழைக்கின்றோம். ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், யோபு, மோசே, அனைத்து தீர்க்கத்தரிசிகளும் மற்றும் அதிகம் பிரபலம் இல்லாத மற்றவர்களும் இந்த வகுப்பாரில் அடங்குவார்கள். எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தைப் பார்க்கவும்.

ஆனால் இந்த முற்பிதாக்களுக்கு வந்த நீதிமானாக்கப்படுதல், ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதல் அல்ல. கிறிஸ்து மரிக்கும் வரை, அதாவது பாவத்திற்கான மீட்பின் விலைக்கிரயம் மீட்பரினால் கொடுத்துவைக்கப்படும் வரை, "நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராக கிறிஸ்து மரிக்கும் வரை" - ஜீவனுக்கு ஏதுவான நிஜமான நீதிமானாக்கப்படுதல்

வருவதற்கு வாய்ப்பு இல்லாதிருந்தது (1 பேதுரு 3:18). இதற்காகவே கிறிஸ்து மரித்திருந்தபடியால், கிறிஸ்து மரிக்கும் வரை யாரும் தேவனிடத்தில் கொண்டுவரப்படவில்லை; "பதிலுக்குப் பதில்" என்ற தேவனுடைய ஏற்பாட்டின்படி, வேறு ஏதாவது வழியில் மனுக்குலத்தை நீதிமானாக்க முடியுமென்றால், கிறிஸ்து மரித்திருந்திருக்கமாட்டார். வேறு எந்த முறையிலாவது முற்பிதாக்கள் ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதலை அடைய முடியுமென்றால், இவர்களும் மற்ற ஜனங்களும் நீதிமானாக்கப்பட்டிருப்பார்கள்; கிறிஸ்துவின் மரணத்திற்கும் அவசியமிருந்திருக்காது.

## ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதல்

அப்படியானால் ஆபிரகாம் மற்றும் அனைத்து பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரவான்களுக்கும் கொடுக்கப்பட்ட தேவனுடனான உறவிற்கும், இந்த யுகத்தில் விசுவாசத்தினால் நமக்கு வருகிற உறவிற்கும் இடையே உள்ள குறிப்பிடத்தக்க வித்தியாசம் என்ன? ஏனெனில் இரண்டு வகுப்பாருக்கும் "நீதிமானாக்கப்படுதல்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டார், அதேபோல் நாமும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." ஆனாலும் கடந்த யுகத்தில் வாழ்ந்த ஆபிரகாமும், மற்றவர்களும் அதிகாரப்பூர்வமான விதத்தில் தேவனோடு சமாதானம் பெற்றிருந்திருக்க முடியாது; ஏனெனில் அக்காலத்தில் கிறிஸ்து பூமிக்கு வந்து, உலகத்தின் பாவங்களுக்காக மரிக்காதிருந்தார். ஆகையால் ஆபிரகாம் தேவனுடன் நண்பனாயிருக்கும்படி நீதிமானாக்கப்பட்டிருந்தார் என்று பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. ஆதாம் பாவம் செய்தபோது இழந்தவைகளில் ஒன்று சிருஷ்டிகருடனான நட்பு ஆகும். பாவத்திற்குப் பிறகு மனுஷன் தேவனுக்கு அந்நியனாயிருந்தான்; "துர்க்கிரியைகளினாலே அந்நியனாக" இருந்தான். ஆனால் தேவன் ஆபிரகாமை அவரது நண்பனாகக் கருதினார்.

ஆபிரகாமின் விசுவாசம், அவரது கிரியைகளினாலே வெளிப்படுத்தப்பட்டது. அவர் தேவனிடத்தில் கொண்டிருந்த நேர்மையானது, வெறும் வெற்று அறிக்கையாக இருக்கவில்லை. அவர் நடைமுறைப்படுத்திக்காட்டி, அதாவது கீழ்ப்படிதலின் கிரியைகளினால் தனது விசுவாசத்தை மெய்ப்பித்துக்காட்டினார். அவரது விசுவாசம் பரீட்சிக்கப்பட்ட பிறகு, சில வாக்குத்தத்தங்களை அவர் தேவனிடமிருந்து பெற்றார். அதன் பிறகு ஒரு சத்துருவாக அவர் கையாளப்படவில்லை. ஆனாலும் தேவனுடன் நட்புகொள்வதற்கு ஏதுவாக நீதிமானாக்கப்படுவதற்கும், ஜீவனுக்கு ஏதுவாக நீதிமானாக்கப்படுவதற்கும் வேறுபாடு இருக்கின்றது. ஆபிரகாம் கிறிஸ்து இல்லாமல் ஜீவனுக்கு ஏதுவாக நீதிமானாக்கப்பட்டிருந்திருப்பாரானால், இவருக்கும் சரி, உலகிலுள்ள மற்றவர்களுக்கும் சரி ஓர் இரட்சகர் தேவைப்பட்டிருந்திருக்கமாட்டார். அனைவரும் அதே போல நீதிமான்களாக்கப்பட்டிருக்கக் கூடும்.

ஆனால் நாம் இரட்சிக்கப்படும்படியாக வானத்தின் கீழெங்கும் இயேசுவின் நாமமேயல்லாமல் வேறே நாமம் கட்டளையிடப்படவில்லை என்று வேதவாக்கியங்கள் நமக்கு நிச்சயமளிக்கின்றது. ஆகையால் இயேசுவின் நாமத்தின்மீதும், அவரது இரத்தத்தின்மீதும் விசுவாசம் வைத்து, அவர் மூலம் தேவனிடம் உறவுக்குள் வருவதன் மூலமாகவேயன்றி நாம் இரட்சிக்கப்பட முடியாது என்றால், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, தீர்க்கத்தரிசிகள் மற்றும் மற்ற முற்பிதாக்களும் வேறுவழியில் நீதிமான்களாக்கப்பட்டிருக்க முடியாது. அதுவரை இன்னும் வராதிருந்த ஓர் இரட்சகர்மேல், தம்முடைய வேலையினை இன்னுமும் நிறைவேற்றாதிருந்த ஓர் இரட்சகர்மேல், விசுவாசத்தை வைக்க முடியாதிருந்த முற்பிதாக்கள், ஒருபோதும் அதிகாரப்பூர்வமாக நீதிமான்களாக்கப்படவே இல்லை - அதாவது அவர்கள் ஜீவனுக்கு ஏதுவாக நீதிமான்களாக்கப்படவே இல்லை. எனினும் அவர்கள் தேவனுக்குக் காண்பித்த

கீழ்ப்படிதலானது பரீட்சிக்கப்பட்டு, மெய்ப்பிக்கப்பட்டது; மேலும் அவர்கள் தேவனுடைய நண்பர்களாக நடத்தப்பட்டனர்; தெய்வீகத் திட்டத்தின் சில அம்சங்கள் குறித்துக் கொஞ்சம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. ஆபிரகாம் தம்முடைய நண்பன் என்பதினால், இவ்வம்சங்களை ஆபிரகாமுக்கு மறைப்பதில்லை என்று தேவன் கூறியுள்ளார்.

---

R1457 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## தேவனுடைய தேர்ந்தெடுக்கும் தன்மைகள் மற்றும் வழிமுறைகள்

வேதவாக்கியங்களில் போதிக்கப்படும் தேர்ந்தெடுத்தலானது, தெரிந்தெடுக்கப்படும் வகுப்பாருடைய சுயாதீனத்திற்கு எதிராய் இராமல், இசைவாகவே உள்ளது என்று நாங்கள் காண்பித்திருக்கின்றோம். யூத யுகத்தின்போது "பணிவிடை வீட்டாரின்" தேர்ந்தெடுத்தல் அல்லது தெரிந்தெடுத்தல் காணப்பட்டது என்றும், தற்காலத்திலுள்ள கிறிஸ்தவ யுகத்தின்போது "புத்திரர் வீட்டாரின்" தேர்ந்தெடுத்தல் அல்லது தெரிந்தெடுத்தல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்றும் (எபிரெயர் 3:5-6), இந்த இரண்டு தேர்ந்தெடுத்தல்களில் எதுவுமே தனிநபர் தொடர்புடைய விஷயத்தில் இஷ்டப்படி செய்யப்படவில்லை அல்லது செய்யப்பட்டுவரவுமில்லை என்றும் காண்பிப்பதற்கு நாங்கள் பிரயாசம் எடுத்திருக்கின்றோம். இந்த இரண்டு வகுப்பார்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்று தேவன் தம் இஷ்டப்படி முன் நியமித்திருந்தார் மற்றும் தீர்மானித்திருந்தார்; மேலும், இந்த ஒவ்வொரு வகுப்பாருக்குமான தெரிந்தெடுத்தலுக்கென்று கால வரையறையைத் தம் இஷ்டபடியே நியமித்தார்; இன்னுமாக இந்த இரு வகுப்பார்களில், ஒவ்வொரு வகுப்பாரிலும் காணப்பட வேண்டிய எண்ணிக்கையின் அளவை அவரே தம் இஷ்டப்படியும், மாற்றியமைக்க முடியாததாகவும் நியமித்திருக்கின்றார்; இதனால் அவரது திட்டத்தில் முன்நியமிக்கப்பட்டுள்ள இந்தத் தெரிந்தெடுக்கப்படும் இரு வகுப்பாரில், ஒவ்வொரு வகுப்பாரின் எண்ணிக்கையும் ஒன்று கூடவோ, குறையவோ செய்யாது; ஆனாலும் அவரது சொந்த நீதிக்கு இசைவாக அவர் செயல்படுகையில், அவரால் தனிநபரின் விருப்பங்களையும், பிரயாசங்களையும் பொருட்படுத்தாமல், இன்னுமாக இந்தத் தேர்ந்தெடுத்தல்களை இயக்கும் தம்முடைய ஏற்பாடுகள் மற்றும் விதிகளின் செயல்பாடுகளைப் பொருட்படுத்தாமல், குறிப்பிட்ட தனி நபர்களே இந்த வகுப்பாரில் காணப்பட வேண்டும் என்று தம் இஷ்டப்படி அவரால் முன் நியமிக்கவும் முடியாது, தெரிந்தெடுக்கவும் முடியாது; இப்படி அவர் செய்யவும் இல்லை.

..............................................................................................................................................
..............................................................................................................................................

தேவன் நல்லவராகவும், அவரது திட்டங்கள் அனைத்தும் ஞானமானவைகளாகவும், நன்மையானவைகளாகவும் இருக்கின்றபடியால், அவரது திட்டத்திலுள்ள எந்த ஒரு பாகத்தையாகிலும் செய்வதற்கு என்று ஒருவர் அவரால் தெரிந்தெடுக்கப்படுவது என்பது, தேவனுடைய கிருபையாகவும் மற்றும் நமக்குக் கனம் சேர்க்கின்றதாகவும் காணப்படும். இப்படியாகத் தேவன் மனுக்குலத்தைச் சாபத்தினின்று மீட்பதற்கும், பின்னர் இழந்துபோன அனைத்தையும் பெறும் நிலைக்குத் தூக்கிவிடுவதற்கும் தமக்குள் திட்டம்பண்ணினவராக, இதை முன்னறிவித்ததோடு மட்டுமல்லாமல், அந்தத் திரும்பக்கொடுத்தலின் வேலைக்கான ஆயத்தங்களையும் துவங்கினார். இந்தத் திரும்பக்கொடுக்கும் வேலையை, "தேவனுடைய ஓர் இராஜ்யத்தினால்" அல்லது தம்முடைய

பிரமாணங்களுக்கு இசைவாயுள்ள ஓர் ஆளுகையினால் நிறைவேற்றவும் தீர்மானித்தார்; மேலும் இந்த இராஜ்யம் இருபாகங்களை - அதாவது ஒரு மனித பாகத்தை மற்றும் ஓர் ஆவிக்குரிய பாகத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்று முன்தீர்மானித்திருந்த அவர், எதிர்கால இராஜ்யத்திற்குரிய ஒரு மாம்சீக அல்லது மனித பாகத்தை முதலாவது தெரிந்தெடுப்பதன் மூலம் துவங்கினார்.

இவ்வகுப்பாரில் எந்தத் தனிநபர்களும், அங்கங்கள் ஆகுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாகவே, தேவன் இரு வகுப்பாரையும், இவ்வகுப்பாருக்கான பணியினையும் முன்நியமித்துவிட்டார் எனும் விஷயத்தை நன்கு கவனியுங்கள்; ஆனால் முன்தீர்மானிக்கப்பட்டுள்ள கனமுள்ள ஊழியத்திற்காக, முன்தீர்மானிக்கப்பட்டுள்ள வகுப்பாரைத் தெரிந்தெடுக்கும் காரியத்தில், தேவனுடைய இந்த முன்தீர்மானிக்கப்பட்ட சித்தமானது எப்படிச் செயல்பட்டது? எல்லையற்ற ஞானமானது பூமியிலுள்ள குடும்பங்கள் மத்தியில் தேடி, ஆபிரகாம் மற்றும் அவரது குடும்பத்தாரைத் தெரிந்துகொண்டது. இப்படித் தெரிந்துகொண்டதில் (தேவனுடைய) சுய-இஷ்டமும், சுய-காரணமும் செயல்படவில்லையா? அநேகமாக இல்லை; எல்லாச் சாத்தியக்கூறுகளைப் பார்க்கும்போது, ஆபிரகாமின் குடும்பம் தெய்வீக நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமானவர்களாகக் காணப்பட்டனர்; மேலும் தேவன் கொண்டிருந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மிகவும் ஏற்றவர்களாகவும் காணப்பட்டனர்.

தங்களைத் தேவன் தம் இஷ்டப்படி தெரிந்தெடுத்தார் என்று இஸ்ரயேலர் புரிந்துகொள்ளாமையினால் எண்ணிக்கொண்டார்கள்; "ஆபிரகாம் எங்கள் தகப்பன்; நாங்கள் அவர் மூலமாய், அவரது தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களாய் இருக்கின்றோம்" என்று கூற முடிகிற அளவுக்குத் தேவனுடைய விசேஷித்த தயவு தங்களுக்கு இருந்ததாக எண்ணிக்கொண்டார்கள் (லூக்கா 3:8); ஆனால் இது தவறாகும்; ஏனெனில் தேவன் ஆபிரகாமின் குடும்பத்தை விசேஷித்த ஊழியத்திற்கென்று தேர்ந்தெடுத்து, தம்முடைய நியாயப்பிரமாணம் மற்றும் தயவுகள் மூலம் மற்ற தேசங்களினின்று அவர்களைப் பிரித்தெடுத்தப்போதிலும், அவர்கள் இந்த அளவுக்குள்ள தயவுகளையே அனுபவித்தார்கள். "தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது."

ஆனாலும் ஒரு தேசமாக இவர்கள் பெற்றிருந்த இந்தத் தயவின் காரணமாக, அத்தேசத்தில் ஒவ்வொரு தனிநபர்களும், மற்ற தேசத்தாரைவிட விசேஷித்த அறிவையும், வாய்ப்புகளையும் பெற்றிருந்தனர்; மேலும் இந்த அறிவிற்கும், தயவிற்கும் இவர்கள் காட்டும் உண்மை அல்லது உண்மையின்மை, கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமை என்பவைகளே - அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டு, கிருபையளிக்கப்பட்ட அந்தத் தேசத்தில் *எந்தெந்த தனிநபர்கள்,* வானங்களுக்குக் கீழே ஆளும் மற்றும் ஆசீர்வதிக்கும் வல்லமையாக ஸ்தாபிக்கப்படப்போகும் தேவனுடைய இராஜ்யத்தின் மனித அல்லது பூமிக்குரிய பாகத்தின் அங்கத்தினர்களாய், அதாவது எதிர்கால கனமுள்ள ஊழிய ஸ்தானத்திற்குப் பாத்திரவான்களாய் ஆகுவார்கள் என்பதைத் தீர்மானிக்கின்றதாய்க் காணப்படும்.

விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் காரணமாக, எந்தெந்தத் தனிநபர்கள் அந்த எதிர்கால (பூமிக்குரிய) கனத்திற்கும், ஊழியத்திற்குமான தங்களது தெரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்திக் காட்டியுள்ளார்கள் என்பதை நாம் கொஞ்சமே அறிவோம். மிகவும் உயர்ப்பண்புள்ளவர்களில் சிலரின் பெயர்கள் மாத்திரமே அப்போஸ்தலனால் கொடுக்கப்பட்டுள்ளது (எபிரெயர் 11:17-39). இவர்கள் எதிர்கால மற்றும் என்றென்றுமுள்ள கனங்களை அடைவதற்காக வேண்டி, தற்கால கனங்கள் மற்றும் சௌகரியங்களைத் துறந்ததன் மூலம், தங்களுக்கு முன்பு வைக்கப்பட்ட தேவனுடைய தயவுகளுக்குத் தங்களைப் பாத்திரவான்கள் என்று சாட்சி பகர்ந்துள்ளனர்; ஆகையால் இவர்களை எந்த ஊழியத்திற்கென்று

அழைத்துள்ளாரோ, அந்த ஸ்தானத்திற்கு ஏற்றகாலத்தில் தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களென வெளிப்படுத்துவதன் மூலம், தேவன் கனப்படுத்தி, "பரம நகரத்தில்" - அதாவது அவர் ஸ்தாபிக்கப்போகும் பரலோக அரசாங்கத்தில் அல்லது இராஜ்யத்தில் ஒரு பங்கை அருளிடுவார்; அதாவது இவர்களும், இஸ்ரயேலர்கள் அனைவரும் ஒருகாலத்தில் அழைக்கப்பட்ட, ஆனாலும் பெரும்பான்மையானவர்கள் அபாத்திரர்களாகிப்போன, அந்த வாக்களிக்கப்பட்ட பங்கை அக்காலத்தில் இவர்கள் அருளப்பெருவார்கள்; எனினும் நிராகரிக்கப்பட்ட இஸ்ரயேலர்கள் தேவனுடைய தயவுகள் அனைத்தினின்றும் புறந்தள்ளப்பட்டுப்போவதில்லை; மாறாக கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்படப்போகின்ற நீதியுள்ள ஆளுகையினாலும், அதன் கீழும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்; இதில்தான் முற்பிதாக்கள் பூமிக்குரிய பங்கினை அருளப்பெறுவார்கள். "அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே. நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கத்தரிசிகளையும் தேவனுடைய இராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்." (எபிரெயர் 11:16; லூக்கா 13:28)

இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய பாகத்தின் அங்கத்தினர்களுடைய முழு எண்ணிக்கையின் தெரிந்துகொள்ளுதலானது, இயேசுவின் ஞானஸ்நானம் மற்றும் அபிஷேகிக்கப்படுதலோடும், அவர் ஜீவனையும், அழியாமையையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்ததோடும் முடிவுபெற்றது.

---

R5859

## தேவனுடைய வீரர்களில் இரு கூட்டத்தினர்
### எபிரெயர் 11:1; 12:1

"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்." (எபிரெயர் 12:1)

வேதாகமம், விசுவாசத்தினைக் கிரியைக்கு மேலாக வைக்கின்றது, ஏனெனில் விசுவாசத்தினால் ஏவப்படாத எந்தக் கிரியையும் தேவனுக்கு ஏற்புடையதாய் இருப்பதில்லை. ஆகையாலே "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்" என்று எழுதப்பட்டுள்ளது. வேதாகமம் இரண்டு வேறுபட்ட விசுவாச வீரர்கள் வகுப்பாரை நமது கவனத்திற்குக் கொண்டுவருகின்றது; இவ்விரு வகுப்பாருமே தேவனைப் பிரியப்படுத்தினார்கள்; இரு வகுப்பாருமே தேவனிடமிருந்து உயர்வான வெகுமதியினைப் பெற்றுக்கொள்ளப்போகின்றார்கள். இந்த வகுப்பாரில் ஒரு வகுப்பார் இயேசுவின் நாட்களுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் ஆவார்கள்; மற்ற வகுப்பார் அவரது நாட்களிலிருந்தே காணப்பட்டு வருகின்றனர். விசுவாச வீரர்களில் முதல் வகுப்பார் முற்பிதாக்கள் என்று அழைக்கப்படுகின்றனர்; மற்ற வகுப்பார் அவர்களது தலையாகிய இயேசுவோடுகூடத் தேவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். தேவனுடைய ஊழியக்காரர்கள் மத்தியிலுள்ள இப்பிரிவு

குறித்து வேதவாக்கியங்களில் தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இது சமீப காலத்திற்கு முன்புவரையிலும் கர்த்தருடைய ஜனங்களினால் கவனிக்கத் தவறப்பட்டு வந்தது.

ஏனோக்கு, ஆபிரகாம், தாவீது, எரேமியா, இன்னும் மற்றவர்கள் எவ்வளவுதான் உண்மையுள்ள வர்களாக அல்லது நேர்மையுள்ளவர்களாக இருப்பினும், இவர்கள் புத்திரர் வீட்டாரின் அங்கத்தினர்களெனத் தேவனால் அங்கீகரிக்கப்பட முடியாது; ஏனெனில் இவர்கள் இயேசுவின் நாட்களுக்கு முன்னதாக - அதாவது ஒவ்வொரு மனுஷனுக்காகவும் இயேசு மரணத்தினை ருசிபார்ப்பதற்கு முன்னதாக வாழ்ந்தவர்கள் ஆவார்கள். முதல் மனுஷனாகிய ஆதாம், தேவனுடைய புத்திரனாக அங்கீகரிக்கப்பட்டதாக வேதாகமம் சுட்டிக்காட்டுகின்றது (லூக்கா 3:38). ஆதாமினுடைய கீழ்ப்படியாமையின் மூலமாகப் பாவம் உலகத்திற்குள் பிரவேசித்தது முதற்கொண்டு, மனுஷ குடும்பத்திலுள்ள எவரையுமே தேவன் தமது புத்திரர்களென அங்கீகரித்ததில்லை - அதாவது நம்மைத் தேவனிடத்திற்கு மீண்டும் கொண்டுசெல்லவும், குமாரத்துவத்திற்குரிய கதவினைத் திறக்கவும்தக்கதாக இயேசுவந்து, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரிப்பதற்கு முன்புவரையிலும், அனைவருமே பாவிகளாகவே இருந்தனர். இதற்கு இசைவாகவே பரிசுத்த பவுல் அடிகளார்: "மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் (பணிவிடை வீட்டாரில்) எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு (புத்திரர் வீட்டாருக்கு) மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்" என்று கூறியுள்ளார். (எபிரெயர் 3:5-6)

## இரு வீட்டாருக்கு இடையிலுள்ள வித்தியாசம்

ஆகையால் சிலுவை வருவதற்கு முன்பு காணப்பட்டவர்களும், கடைசி அங்கத்தினராக யோவான் ஸ்நானனைப் பெற்றவர்களுமாகிய நற்குணசாலியான சகோதரருக்கும், சிலுவையின் காலங்களுக்குப் பின்னர் கடந்து வருபவர்களும், அப்போஸ்தலர்களை முதல் அங்கத்தினர்களெனப் பெற்றுக்கொண்டவர் களுமாகிய நற்குணசாலியான சகோதரருக்கும் இடையிலுள்ள வித்தியாசம் தெளிவாய்க் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த யோவான் ஸ்நானன் முற்பிதாக்களில் கடைசி ஆவார் என்பதற்கு ஆண்டவரின் பின்வரும் வார்த்தைகள் சாட்சியாய் இருக்கின்றன: "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனுமில்லை; ஆகிலும், தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (லூக்கா 7:28)

முற்பிதாக்கள் மற்றும் கிறிஸ்தவ பாத்திரவான்களுக்கு இடையிலுள்ள இவ்வித்தியாசத்தினை நம்முடைய இன்றைய பாடத்தில் பரிசுத்த பவுல் அடிகளார் தெளிவாய்த் தருகின்றார். முற்காலங்களில் உள்ளவர்களில் முதன்மையானவர்களின் பெயர்களை அவர் முதலாவது பட்டியலிடுகின்றார் - அதாவது ஏனோக்கு, ஆபிரகாம், தாவீது, எரேமியா முதலானவர்களைப் பட்டியலிடுகின்றார். இவர்களது விசுவாசத்தினைக்குறித்துத் தெரிவித்து, இவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்களாகவும், நற்குணசாலிகளாகவும், பாராட்டப்படத்தக்கவர்களாகவும் காணப்பட்டனர் என்று கூறுகின்றார். பின்னர் இவர்களுக்குத் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தினை இவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை எனும் உண்மையினைக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றார்.

இயேசுவின் நாட்களுக்கு முன்னதாகத் தேவன் பரம காரியங்களுக்கு அடுத்தவைகளைக்குறித்து வாக்குத்தத்தம்பண்ணவில்லை என்பது நினைவில்கொள்ளப்பட வேண்டும். முற்பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்டதும், அவர்களது வைராக்கியம் மற்றும் பக்தியினை ஊக்குவித்ததுமான

வாக்குத்தத்தங்கள், அனைத்துமே பூமிக்குரிய வாக்குத்தத்தங்களாய்க் காணப்பட்டன; உதாரணத்திற்கு: "கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன்" என்பதே ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தமாய் இருந்தது. (ஆதியாகமம் 13:14-15; 17:8)

ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட இந்த வாக்குத்தத்தமானது இன்னமும் பாதுகாப்பாகவும், இன்னமும் நிறைவேறாமலும் காணப்படுகின்றது என்ற விஷயத்தின்மீது பரிசுத்த ஸ்தேவான் அவர்கள் நமது கவனத்தைத் திருப்புகின்றார். ஆபிரகாம் கால் பதித்த தேசத்தினை அவர் முழுமையாய்ப் பெற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவிக்கின்றார். இந்த வாக்குத்தத்தத்தினுடைய அடிப்படையில், ஆபிரகாமினுடைய உயிர்த்தெழுதலைக்குறித்தும், தேவனுடைய ஏற்றவேளையில் இவர் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார் என்பதுகுறித்தும், இவரது உண்மையுள்ள வித்து அல்லது சந்ததியினர் இவருக்குப்பின் அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதுகுறித்தும் ஸ்தேவான் உறுதிப்படுத்துகின்றார்.

மேலும் புதிய ஏற்பாட்டிலுள்ள வாக்குத்தத்தங்கள் ஆவிக்குரியவைகளாய் மாத்திரம், அதாவது பரத்திற்குரிய வாக்குத்தத்தங்களாய், பரத்திற்கடுத்தவைகளாய்க் காணப்படுகின்றன. இயேசு தம்முடைய இரண்டாம் வருகையின்போது ஸ்தாபிக்கவிருக்கும் பரலோக இராஜ்யத்தில், இந்தக்கிறிஸ்தவ பாத்திரவான்கள் அவரோடுகூட ஒரு பங்கினைப் பெற்றுக்கொள்வார்களென வாக்களிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அவரோடுகூட உடன்சுதந்தரர்களாய்க் காணப்படப்போகின்றனர்; அவரோடுகூடப் பாடுபட்டார்களானால், அவரோடுகூட மகிமைப்படுத்தவும்படுவார்கள் (உரோமர் 8:17). இவர்களுக்குரிய வாக்குத்தத்தம், இவர்கள் ஆசாரியர்களின் இராஜ்யமாக அல்லது இராஜரிக ஆசாரியத்துவமாக இருப்பார்கள் என்பதேயாகும்; ஆனால் முற்பிதாக்களுக்குரிய வாக்குத்தத்தமோ, அவர்கள் "பூமியெங்கும் பிரபுக்களாக இருப்பார்கள்" என்பதேயாகும். (1 பேதுரு 2:9; வெளிப்படுத்தல் 20:6; சங்கீதம் 45:16)

கிறிஸ்தவ வீரர்கள் மனுஷ சுபாவத்தினின்று, திவ்விய சுபாவத்திற்குச் சுபாவ-மாற்றம் அடைய வேண்டும்; இந்தச் சுபாவ-மாற்றமானது, தற்காலத்தில் பரிசுத்த ஆவியினால் அடையும் ஜெநிப்பித்தலில் துவங்குகின்றது; மேலும் இந்தச் சுபாவ-மாற்றத்தின் நிறைவேறுதலானது உயிர்த்தெழுதலில் - "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாகுதலில் சம்பவிக்கும்;" "கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" (1 கொரிந்தியர் 15:43-44). ஆனால் புதிய சுபாவத்திற்குப் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத முற்பிதாக்கள் வேறொரு உயிர்த்தெழுதலை, அதாவது மனுஷீக பூரணத்திற்குரிய உயிர்த்தெழுதலை அடைவார்கள்.

விசுவாச வீரர்களிலுள்ள இரு வகுப்பாரை வேறுபடுத்திக் காண்பித்த பிற்பாடு, 39 மற்றும் 40-ஆம் வசனங்களில் அப்போஸ்தலன், இந்த முற்பிதாக்கள் "விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், (இவர்களுக்கு) வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்" என்று தெரிவிக்கின்றார். அவர்கள் நம்மையல்லாமல் (கிறிஸ்தவ வீரர்களாகிய, இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கிற நம்மையல்லாமல்) பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று வாக்குத்தத்தம்பண்ணியுள்ளார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், கிறிஸ்து முதலாவதாகக் காணப்பட வேண்டும் - இயேசு தலையாக, பின்னர்ச் சபை அவரது சரீரமாக

இருக்கும்படிக்குத் தேவன் ஆரம்பத்திலேயே ஏற்பாடுபண்ணியுள்ளார்; இவர்களைப் பூரணப்படுத்தின பிற்பாடு, அதாவது முதலாம் உயிர்த்தெழுதல் சம்பவித்த பிற்பாடு, தெய்வீக வாக்குத்தத்தங்கள் முற்பிதாக்களுக்கு நிறைவேற துவங்கும்; பின்னர் அது இறுதியில் "பூமியின் குடிகள் யாவரிடத்திற்கும்" கடந்துசெல்லும். (ஆதியாகமம் 12:3; கலாத்தியர் 3:29)

தெய்வீக நிபந்தனைகளின்படி ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ள விருப்பமாயிருக்கும் மனுஷ குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும், தேவன் மாபெரும் ஆசீர்வாதங்களை வைத்திருக்கின்றார். ஆனால் வேதாகமத்தில் நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள ஆசீர்வாதங்களிலேயே பிரதானமான ஆசீர்வாதமானது, சபை வகுப்பாருக்குக் கொடுக்கப்படப்போகிறவையாகும் - இந்தச் சிறுமந்தையினருக்கே பிதா இராஜ்யத்தையும், மகிமையையும், இயேசுவினுடைய ஆயிர வருஷ ஆளுகையின்போது உலகத்தை ஆசீர்வதித்திடும் வேலையில் அவரோடுகூட இணைந்திடும் கனத்தையும் கொடுக்க சித்தமாயிருக்கின்றார்.

அப்போஸ்தலன் இவர்களிடம் இன்றைய நாளின் ஆராய்ச்சிக்குரிய கடைசி இரண்டு வசனங்களில் பேசுகின்றார்: "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்." (எபிரெயர் 12:1-2)

## கிறிஸ்தவ ஓட்டப்பந்தயம்

அப்போஸ்தலன் ஆற்றல்மிக்க விதத்தில் காரியங்களை நியாயப்படுத்துகிறவர் ஆவார்; ஏனெனில் இந்த வார்த்தைகளில் அவர் முற்பிதாக்களுடைய பட்டியலைத் திரும்பிப்பார்க்கவும், அவர்கள் எப்படிச் சகித்தார்கள், எப்படித் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள் என்பதைச் சிந்தித்துப்பார்க்கவும் கூறுகின்றார். திவ்விய தளத்தில் தேவனுடைய புத்திரர்களாகிடுவதற்கும், "திவ்விய சுபாவத்தினை" அடைவதற்குமான சிலாக்கியத்தினையும், அதிகப்படியான ஆசீர்வாதத்தினையும் அருளப்பெற்றிருப்பவர்களாகிய நம்மை மேகம் போன்ற சாட்சிகளென அந்த முற்பிதாக்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும், அந்த முற்பிதாக்களை நாம் கவனிக்க வேண்டும் என்றும் கூறுகின்றார். (யோவான் 1:12; 2 பேதுரு 1:4)

அவர் நம் மனங்களுக்கு முன்பாக ஒரு மாபெரும் ஓட்டப்பந்தயத்தினைச் சித்தரித்துக் காட்டுகின்றார்; இதில் நாம் ஓட்டப்பந்தய வீரர்களாய்க் காணப்படுகின்றோம். இதில் நம்முடைய விசுவாசத்தினைத் துவக்கினவரும் - இந்தப் பந்தயத்தில் ஓடுவதற்குரிய சிலாக்கியத்தினைத் தந்தவரும் - தேவையான பொழுதெல்லாம் உதவிசெய்யும் கிருபையினைத் தருவதாக நமக்கு வாக்களித்தவருமான இயேசு, தலைவராக முன்னே கடந்துபோயுள்ளதைச் சித்தரித்துக்காட்டுகின்றார். இயேசு எவ்வாறு இந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடினார் என்றும், தமக்கு முன்பு பிதாவினால் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தை விசுவாசத்தினால் எதிர்நோக்கினார் என்றும் நமக்குச் சித்தரித்துக்காட்டுகின்றார். இயேசு எப்படி நேர்மையாய்க் காணப்பட்டார் என்பதையும், எதைச் சகித்தார், அதாவது சிலுவை மற்றும் அதன் அவமானத்தினைச் சகித்தார் என்பதையும் நமக்குச் சித்தரித்துக்காட்டுகின்றார். இயேசுவை

தெய்வீகமானவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கப்பண்ணி, அவருக்கு பெரிய வெகுமதியினை அளித்ததில் உள்ள பிதாவின் உண்மையினைச் சித்தரித்துக்காட்டுகின்றார். பின்னர் இயேசுவினால் பெற்றுக்கொள்ளப்பட்டதும், அவரது பலியினுடைய புண்ணியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நமக்கு முன்வைக்கப்பட்டதுமான இந்த மாபெரும் பரிசிற்குரிய ஓட்டப்பந்தயத்தில் பிரம்மாண்டமாயும், வெற்றிகரமாயும் ஓடிடுவதற்கு நமக்குத் தடையாய் இருக்கும் எல்லாவற்றையும், எல்லா இடையூறுகளையும், "பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு ஓடக்கடவோம்" என்ற அறிவுரை நமக்குக் கடந்துவருகின்றது.

இந்த ஓட்டத்தில் நாம் ஓடுவதற்கு மிகுந்த தடையாகக் காணப்படுபவைகளில் ஒன்று பாவம் எனவும், நம்முடைய அவயவங்களில் நம்மால் சுதந்தரிக்கப்பட்ட பாவத்தினால் நெருக்கப்பட்டவர்களாய் இருக்கின்றோம் எனவும், நாம் விடாமுயற்சியோடு மாத்திரமல்லாமல், பொறுமையாயும் ஓடவேண்டும் எனவும் அப்போஸ்தலன் நமக்கு நினைப்பூட்டுகின்றார்; ஏனெனில் இவ்வளவு பெரியதொரு பரிசினை அடையப்போகின்ற ஒருவனுக்கு பொறுமையானது அவசியமாய் இருக்கின்றது; மேலும் பரம பிதாவிற்கும், சத்தியத்திற்கும், சகோதர சகோதரிகளுக்குமான அவனது உண்மை மற்றும் பக்தி/அன்பு தொடர்புடைய விஷயங்கள் அனைத்திலும், அவன் நிரூபிக்கப்பட வேண்டும் மற்றும் பரீட்சிக்கப்பட வேண்டும். இந்த இடுக்கமான வழியில் தங்களது தலைவருக்கு ஒத்த குணலட்சண சாயலை அடைபவர்கள் மாத்திரமே அவரோடுகூட, அவருக்கு ஒப்பாகக் காணப்படுவதற்கும், அவரது மகிமையில் பங்கடைவதற்கும் நம்பிக்கைக்கொள்ளலாம்; ஏனெனில் இவர்கள் அனைவரும் தம்முடைய குமாரனுடைய சாயலாகிட வேண்டுமெனத் தேவன் முன்தீர்மானித்துள்ளார். (உரோமர் 8:29)

---

R3935 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தேவனுடைய ஈவுகள் மற்றும் அழைப்புகள்
## ஆதியாகமம் 12:1-8

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்." (வசனம் 2)

நம்முடைய இப்பாடம் ஆபிராமுக்கான அழைப்பு பற்றினதாகும்; இவரது பெயரைத் தேவன் ஆபிரகாம் (திரளான ஜனங்களின் தகப்பன்) என்று மாற்றினார்; எனினும் இப்பாடம் மறைமுகமாக ஆபிரகாமின் வித்தாகிய மாம்சீக வித்து மற்றும் ஆவிக்குரிய வித்தின் அழைப்பையும், இவர்களுக்குத் தேவனால் அருளப்படுபவைகளையும், இவர்கள் மனுக்குலத்தின் உலகத்திற்குரிய நம்பிக்கையின் மையமாக்கப்படுவதையும் குறித்தும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். இவர்கள் கர்த்தரால் பெரும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளனர், எனினும் தங்கள் சக சிருஷ்டிகளிடத்திலுள்ள இவர்களது செல்வாக்கும், பயனுக்கேதுவான நிலையும் துவங்க மாத்திரமே செய்திருந்தது; மேலும் ஆயிர வருஷ காலத்தின்போது இவர்கள் தங்கள் மகிமையான உச்சநிலையை அடைவார்கள் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஆபிரகாமின் ஆரம்பகால வாழ்க்கையானது, கல்தேயாவிலுள்ள ஊர் எனும் பட்டணத்தில் செலவழிந்தது; (இப்பொழுது Mugheir என்று அழைக்கப்படும்) இவ்விடத்தின் பாழ்நிலம் தோண்டி, ஆராயப்பட்டுவருகின்றது.

## வழி இதுவே, இதிலே நடவுங்கள்

ஆபிரகாமின் வாழ்க்கையிலிருந்துள்ள ஆவிக்குரிய படிப்பினை என்னவெனில்: தேவன் விசுவாசத்தைக் கனப்படுத்த பிரியமுள்ளவராய் இருக்கின்றார்; மேலும் உண்மையுள்ளவர்களுக்கு வரும்படிக்கு அவர் அனுமதிக்கும் ஜீவியத்தின் அனுபவங்களானது, அவர்கள் விசுவாசத்திலும், பரிசுத்த ஆவியின் கனிகளிலும் வளருவதற்கு நோக்கம் கொண்டிருக்கின்றன; இவைகள் அனைத்தும் எதிர்காலத்திலுள்ள தேவனுடைய இன்னும் மகா பெரிய வேலைக்குரிய ஆயத்தங்களாகக் காணப்படுகின்றது.

ஆரான் அல்லது ஊர் பட்டணத்திற்கு, ஒரு சுவிசேஷகனாக ஆபிரகாம் அனுப்பி வைக்கப்படவில்லை; அவரைச் சுற்றிக் காணப்பட்ட ஜனங்களிடத்திற்கும் அனுப்பிவைக்கப்படவில்லை. "நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு, உத்தமனாயிரு" என்று கர்த்தர் கூறியிருந்தார். ஆபிரகாம் உண்மையில் அபூரணமானவர் என்றும், விழுகையினால் களங்கப்பட்டவர் என்றும் தேவன் அறிந்தே இருந்தார்; ஆகையால் மேலே இடம்பெறும் வசனத்திலுள்ள இந்தக் கட்டளை, அவரது இருதயமானது சித்தத்திலும், நோக்கத்திலும் பூரணமாகவும், அவரது நடத்தை கூடுமானமட்டும் தேவனுடைய பரிபூரண சித்தத்திற்கு இசைவாகவும் காணப்பட வேண்டும் என்ற விதத்தில் அர்த்தம் கொண்டதாய் இருந்தது. அப்போஸ்தலனாகிய பவுல், ஆபிரகாம் தன்னுடைய சொந்த நீதியின் காரணமாக நீதிமானாக்கப்படவில்லை என்று நமக்குக் காண்பிக்கின்றார்; ஏனெனில் நியாயப்பிரமாணத்தினுடைய கிரியைகளின் மூலமாக இல்லாமல், விசுவாசத்தின் மூலமாய் நீதிமானாக்கப்பட்டவர்களாகிய முற்பிதாக்களின் பட்டியலில், ஆபிரகாமை அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார்; இந்த முற்பிதாக்கள் அவர்களுடைய விசுவாசத்தின் காரணமாக, "தேவனுக்குப் பிரியமானவர்களென்று சாட்சி பெற்றவர்கள்" ஆவார்கள். ஆபிரகாமினுடைய விசுவாசமே தன் இனத்தாரை விட்டு, அவரை அந்நிய நாட்டிற்குப் புறப்பட்டுப்போகச் செய்தது; ஏனெனில் அவர் தேவனை விசுவாசித்தார்; அவருக்கு வழியில் வந்த பல்வேறு பரீட்சைகளிலும், இன்னுமாக வாக்குத்தத்தங்கள் அனைத்தும் மையம் கொண்டுள்ள தனது ஒரே குமாரனைப் பலியாகச் செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிடப்பட்ட பரீட்சையிலும்கூட, அவரது விசுவாசமே அவரை நிலைநிற்கச் செய்தது.

தேவனுடைய வாக்குத்தத்தங்களிலுள்ள ஆபிரகாமின் விசுவாசமே, அதாவது தன்னுடைய சந்ததி வாயிலாக எதிர்காலத்தில் ஒரு நீதியின் ஆளுகை பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்ற ஆபிரகாமின் விசுவாசமே, நீதியின் கொள்கைகளாகிய நிலையான அஸ்திபாரமுள்ள அந்த நகரத்தை (அரசாங்கத்தை) எதிர்நோக்கியிருக்க ஆபிரகாமை வழிநடத்தினது; அது பரலோக நகரமாகும், தேவனுடைய அருமையான குமாரனின் அரசாங்கம் அல்லது இராஜ்யமாகும், அதாவது அனைத்தையும் கீழ்ப்படுத்திப்போட்டு, அனைத்தையும் தெய்வீகச் சித்தத்திற்கு அடிப்பணிய செய்யும் இராஜ்யமாகும். ஆபிரகாமின் வித்தானவர்கள், அதாவது இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய தெரிந்துகொள்ளப்பட்ட சபையானவர்கள், பூமியில் தெய்வீக வல்லமையினை செயல்படுத்தப்போகின்றார்கள்; மேலும் முழங்கால்கள் அனைத்தையும் முடங்கப்பண்ணுவார்கள்; நாவுகள் யாவையும் அறிக்கைசெய்யப்பண்ணுவார்கள்; நீதியின் ஆளுகையை ஸ்தாபித்தப்பிற்பாடு, பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதித்தப்பிற்பாடு, பூரணமாகவும், முழுமையாகவும் காணப்படும் இராஜ்யமானது, ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்படும். "உனக்குள்ளும், உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" என்பதே ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தமாகும். எதிர்காலத்திலுள்ள மகிமையான மேசியாவின் இராஜ்யத்தில் சில பங்கை அடையத்தக்கதாக, ஆபிரகாம் தற்கால பாதகமான சூழ்நிலைகளின் கீழுள்ள தற்காலத்தின் வல்லமைகள் மற்றும் அரசாங்க ஸ்தானங்களில் பங்கெடுப்பதற்குரிய தனது உரிமையினை விட்டுக்கொடுக்க விரும்பினார்.

## நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் காணும்போது

கண்களுக்குப் புலப்படாத மேசியாவின் இராஜ்யமானது, பூமியில் நீதியின் ஆளுகையை ஸ்தாபிக்கையில், அது மனுஷர்கள் மத்தியில், கண்களுக்குப் புலப்படும் பிரதிநிதிகளெனப் "பூமியில் பிரபுக்களை" பெற்றிருக்கும் (சங்கீதம் 45:16). மேலும் இவர்களில் ஒருவராக ஆபிரகாம் காணப்படுவார் என்று நமக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; இவர் நீதியின் ஆளுகையினை ஸ்தாபிக்கும் விஷயத்திலும், மனுக்குலத்தின் உலகத்திற்கு - "பூமியின் குடிகள் அனைவருக்கும்" நீதியினையும், இரக்கத்தையும், அன்பையும் விவரித்துக்கொடுக்கும் விஷயத்திலும் முக்கிய பங்கு வகிப்பார். இவர் எபிரெயர் 11:39-40-ஆம் வசனங்களில் இடம்பெறும் வகுப்பாரில் ஒருவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். முன்பு ஒருகாலத்தில் நாங்களும், சிலரும் சேர்ந்து, பரலோக இராஜ்யத்தில், ஆவிக்குரிய வகுப்பாரில் ஆபிரகாம் இடமளிக்கப்படுவார் என்று அனுமானித்திருந்தோம்; ஆனால் இக்காரியத்தை மிகவும் கவனமாய் ஆராய்ந்துபார்க்கையில், நேர்மாறாய் உள்ளது; அதாவது இவர் முற்பிதாக்கள் வகுப்பாரில் இடம்பெறுவார் என்று கண்டுகொள்கின்றோம்; இந்த முற்பிதாக்களின் ஆசீர்வாதம் பெரிதான ஒன்றாக இருப்பினும், இவர்களைவிட நமக்கு விசேஷித்த ஒன்றை தேவன் வைத்துள்ளார் என்று அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார். விசுவாசமுள்ளவர்களுக்குத் தகப்பன் என்று அழைக்கப்படும் ஆபிரகாமைக்குறித்து மீட்பர் பின்வருமாறு: "ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான்" என்று கூறியுள்ளார் (யோவான் 8:56). விசுவாசத்தினால் ஆபிரகாம் கிறிஸ்துவின் நாளை - ஆயிர வருஷ நாளை - இராஜ்யம் நன்கு ஸ்தாபிக்கப்படுவதைக் கண்டார்; அப்போது ஸ்தாபிக்கப்படவிருக்கும் நீதியின் மகிமையான ஆளுகையில், விசுவாசத்தினால் களிகூர்ந்தார்.

இந்த ஆசீர்வாதமானது, ஆபிரகாமின் வித்து மூலம் உலகத்திற்கு வருகின்றதாக இருப்பினும், ஒரு மாபெரும் மாற்றம் நிகழ்வதினால், "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்" (சங்கீதம் 45:16) என்று எழுதப்பட்டுள்ள பிரகாரமாகவே, ஆபிரகாமின் வித்தும், பிள்ளையுமான கிறிஸ்து, ஆபிரகாமைவிட பெரியவராகுவார் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காண்பிக்கின்றது. மேசியாவின் தந்தையாகத் தொடர்ந்து பார்க்கப்படுவதற்குப் பதிலாக, மேசியாவின் பிள்ளைகளில் ஒருவராக ஆபிரகாம் பார்க்கப்படுவார்; இவர் பூமிக்குரிய தளத்தில் பூரணராகவும், மாபெரும் மீட்கும் பலியினால் உண்டான ஆசீர்வாதங்களைப் பகிர்ந்தளிக்கும் மகிமையடைந்த கிறிஸ்துவின் விருவிருப்பான பிரதிநிதிகளாகப் பயன்படுத்தப்படத்தக்கதாக, மனுஷர்கள் மத்தியில் ஒரு பிரபுவாகவும் ஆக்கப்படுவார். இது விஷயத்தைக் குறிப்பிடுகையில், இந்த முற்பிதாக்கள் மனுஷரின் கண்களுக்குப் புலப்படுபவர்களாகக் காணப்படுவார்களென நமது கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார்; அதேசமயம் தாமும், அப்போஸ்தலர்களும் அல்லது மணவாட்டி வகுப்பாரில் எவரேனும் கண்களுக்குப் புலப்படுவார்கள் என்று அவர் ஒரு வார்த்தையையும் சொல்லவில்லை. "நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும், சகல தீர்க்கத்தரிசிகளையும் காணும்போது" என்றே வசனம் காணப்படுகின்றது. இன்னுமாக இராஜ்யத்தில் உயர் ஸ்தானங்களில் காணப்படுபவர்கள் கண்களுக்குப் புலப்படுவார்கள் என்று குறிப்பிடப்படாத உண்மையானது, அத்தகையவர்கள் உலகத்தால் பார்க்கப்படுவதில்லை என்பதற்குச் சான்றாகுகின்றது; மேலும் இது கர்த்தர் தம்முடைய நாட்களில் காணப்பட்ட சிலரிடம்: "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று கூறியிருந்த வார்த்தைகளுக்கு இசைவாகவே உள்ளது. இன்னுமாக இது "அவர் வெளிப்படும் போது, அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்" என்ற வார்த்தைகளுக்கும்கூடப் பொருத்தமானதாகவே இருக்கின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்தில் கர்த்தருடைய ஏற்பாடுகளிலுள்ள நிபந்தனைகளின்கீழ், மனித சுபாவத்திலிருந்து, ஆவிக்குரிய

சுபாவத்திற்கு மாறுபவர்கள் மாத்திரமே, அதாவது இவர்கள் மட்டுமே கர்த்தரையும், மற்ற ஆவிக்குரிய ஜீவிகளையும் பார்க்கவும், உணரவும் முடிகிறவர்களாக இருப்பார்கள்.

## அந்தச் சந்ததி கிறிஸ்துவே

ஆபிரகாமின் வித்து மாம்சத்தின்படி இயேசுவாகிய, நமது கர்த்தர் ஆவார் என்று அப்போஸ்தலன் மிகவும் தெளிவாக நமக்குச் சுட்டிக்காண்பித்துள்ளார்; இயேசு இனிமேலும் மாம்சத்தில் இல்லை, ஏனெனில் அவர் அதைப் பலிசெலுத்தி, புதிய சுபாவத்திற்கு ஆவியினால் ஜெநிப்பித்தலை அடைந்தார். இப்பொழுது அவர் மகிமையடைந்த ஒருவராக - கிறிஸ்துவாக - ஆபிரகாமின் ஆண்டவராக - தாவீதின் ஆண்டவராகக் காணப்படுகின்றார். இந்தச் சுவிசேஷ யுகத்தில் தேவன் மனுக்குலத்தின் மத்தியிலிருந்து சிலரை இராஜ்யத்தில் இயேசுவுக்கு உடன் சுதந்தரர்களாகும்படிக்கு - ஆபிரகாமின் வித்தில் அங்கத்தினர்களாகும்படிக்குத் தெரிந்தெடுத்துக்கொண்டிருக்கின்றார் எனும் உண்மையானது மகா இரகசியமாகக் காணப்படுகின்றது என்று அப்போஸ்தலன் நமக்குச் சுட்டிக்காண்பிக்கின்றார் (எபேசியர் 3:9; அப்போஸ்தலர் 15:17; உரோமர் 8:17). நியாயப்பிரமாண உடன்படிக்கையானது கூட்டி வழங்கப்பட்டுள்ளபடியினாலும், இயேசு மாத்திரமே நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றி, அதன் நம்பிக்கைகள் மற்றும் வாய்ப்புகள் அனைத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளபடியினாலும், மேற்கூறியவை எப்படிச் சாத்தியமாகும் என்று நாம் கேட்கலாம். நிச்சயமாகவே இந்த விஷயத்தில் நமது கர்த்தருக்கு முன்பாக, ஓட்டத்தில் எந்த யூதனும் காணப்பட்டதில்லை; நமது கர்த்தர் தம்முடைய ஓட்டத்தை நிறைவுசெய்துள்ளபடியால், நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய வாய்ப்பானது இனிமேலும் யூதனுக்குக் காணப்படுவதில்லை; புறஜாதிக்கு அவ்வாய்ப்பானது இல்லாததுபோலவே, யூதனுக்கும் அவ்வாய்ப்பு இனிமேலும் இல்லை. அப்படியானால் இந்த ஆபிரகாமின் உடன்படிக்கையில், கிறிஸ்துவோடு உடன்சுதந்தரத்தில் இணைந்துள்ள யூதனுக்குரிய அல்லது புறஜாதிக்குரிய எதிர்கால வாய்ப்பு என்ன?

நாம் கர்த்தரினால், "கிறிஸ்துவினுடைய மணவாட்டியாக," "ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக" ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றோம் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். ஆரம்பத்தில் பிரதானமாக யூதர்களையும், பிற்பாடு மிகவும் பிரதானமாக புறஜாதிகளையும் உள்ளடக்கிக் காணப்படும் சபையானது, ஒட்டுமொத்தமாகக் கர்த்தரால் அவரது மணவாட்டிகளென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர்; ஒன்றுசேர்வதன் மூலமாக அல்லது திருமணத்தின் மூலமாக அவருடன் இணைபவர்கள் யூதர்களாகவோ, புறஜாதிகளாகவோ இருப்பினும் சரி, அவர்கள் அவருடைய உடன்சுதந்தரர்களாக்கப்படுகின்றனர். இதுவே இக்காரியம் குறித்து, அப்போஸ்தலரின் தெளிவான வார்த்தைகளாக இருக்கின்றது; ஏனெனில் கிறிஸ்து ஆபிரகாமின் வித்து (கலாத்தியர் 3:16) என்று குறிப்பிட்ட பிற்பாடு, அவர் சபையைக்குறித்து, கர்த்தருடைய எதிர்கால மணவாட்டியைக்குறித்து: "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:29) என்று குறிப்பிடுகின்றார். ஓர் உருவகத்தில் நாம் கர்த்தருடைய சரீரத்தின் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆகையாலே "சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்" (கலாத்தியர் 4:28) என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்; வேறொரு உருவகத்தில் நாம் அவரது மணவாட்டியின் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரு சந்ததியாருக்கும் நிச்சயமாயிருக்கும்படி

தேவன் ஆசீர்வாதத்தினை ஆபிரகாமின் சந்ததிகள் மூலம், அதாவது அநேகர் என்ற விதத்தில் வாக்களிக்காமல், "உன் சந்ததிக்குள்," அதாவது ஒருவர் என்ற விதத்தில் தேவன் வாக்களித்துள்ளார் என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். இந்த ஒரு சந்ததி கிறிஸ்து என்று நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம்; ஆனாலும் அநேக சந்ததிகள் என்பது இல்லை என்றாலும், இந்த மேசியா வகுப்பாரைத் தவிர்த்து, இன்னொரு சந்ததி உள்ளது என்று - சந்ததியின் சந்ததி உள்ளது என்று நாம் கவனிக்கின்றோம். இதைக்குறித்து அப்போஸ்தலன், நியாயப்பிரமாணம் மற்றும் சுவிசேஷம் தொடர்புடைய தன்னுடைய அறிக்கையில் தெளிவாகத் தெரிவித்துள்ளார்; அதாவது ஆவியின்படியாக உள்ள சந்ததிக்கு மட்டுமல்லாமல், நியாயப்பிரமாணத்தின்படியாக உள்ள சந்ததிக்கும் - "இரு சந்ததியாருக்கும்" அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாய் இருப்பதே (தேவனுடைய) நோக்கம் என்று தெரிவித்துள்ளார்; மேலும் இக்கருத்தானது, வாக்குத்தத்தம் ஈசாக்குக்கும், இஸ்மயேலுக்கும் பண்ணப்பட்டுள்ளது என்ற உண்மையின் மூலமாகவும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இஸ்மயேலுக்குரிய வாக்குத்தத்தமானது, வாக்குத்தத்தத்தின் ஒரே சந்ததியாகிய ஈசாக்கின் மூலம் நிறைவேறும். இதுபோலவே பூமியின் குடிகள் அனைவர் மீதான கர்த்தருடைய ஆசீர்வாதமானது, ஒரே சந்ததியாகிய கிறிஸ்து மூலமே - ஆபிரகாமின் மேசியா சந்ததி மூலமே நிறைவேறும்.

தெய்வீக இரக்கமும், ஏற்பாடுகளும், இரண்டு வகுப்பாருக்கும் அருளப்பட்டுள்ளது என்று பரிசுத்த பவுல் அடிகளார் மிகவும் தெளிவாகத் தெரிவித்துள்ளார் - ஒன்று ஆவிக்குரிய சந்ததிக்கு, மற்றொன்று ஆபிரகாமுடைய மாம்சீக சந்ததிக்கு ஆகும். உரோமர் 11-ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமுடைய மாம்சீக சந்ததியாரை நிராகரித்து, ஆவிக்குரிய சந்ததியார் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதைக்குறித்து விவரித்த பிறகு, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில், ஆவிக்குரிய சந்ததி நிறைவடைவார்கள் என்ற உண்மையினை அப்போஸ்தலன் சுட்டிக்காண்பிக்கின்றார்; பின்னர் அவர் தெய்வீக ஆசீர்வாதங்களானது மறுபடியும் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாரிடத்தில் கடந்துசெல்லும் என்று தெரிவித்துள்ளார் - அதாவது வாக்குத்தத்தத்தினுடைய ஆவிக்குரிய பாகத்தை உணரவும், கிரகிக்கவும் முடியாததினால், ஒருகாலத்தில் வெட்டிவிடப்பட்டவர்களாகவும், புறக்கணிக்கப்பட்டவர்களாகவும், குருடாக்கப்பட்டவர்களாகவும் காணப்பட்டவர்களிடத்தில் (தெய்வீக ஆசீர்வாதங்களானது) கடந்துசெல்லும் என்று தெரிவித்துள்ளார். இவர்களுக்கு ஒரு பூமிக்குரிய பாகம் வைக்கப்பட்டிருக்கின்றது; மேலும் ஆசீர்வாதமானது நிச்சயமாக இவர்களுக்குக் கடந்துவரும்; ஏனெனில் தேவன் ஏற்கெனவே பின்வருமாறு தெரிவித்துள்ளார்: "இந்தப்பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார் என்றும், நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை" என்றும் எழுதியிருக்கிறது. சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளுதலைக்குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே." (உரோமர் 11:26-29)

இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் தெய்வீகக் கிருபையானது, யூதர்களுக்கு மறுபடியும் வரும் காரியத்தையும்கூட, கடந்த காலங்களிலுள்ள தேவனுடைய ஈவுகளும், அழைப்புகளும் உள்ளடக்கியுள்ளது என்பதை இப்படி மிகத் தெளிவாய்த் தெரிவித்த பிற்பாடு, எப்படி இந்த ஆசீர்வாதமானது ஆவிக்குரிய சந்ததி வாயிலாக வரும் என்பதைக் காண்பிக்கும் பொருட்டாக, "உங்களுக்குக் கிடைத்த

இரக்கத்தினாலே" - தங்கள் தலையாகிய கிறிஸ்துவின்கீழ், ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாகிய, சுவிசேஷ யுக சபையின் இரக்கத்தினாலே - "அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" என்று கூறுகின்றார்.

## பூமியின் குடிகள் அனைவரும்

இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் இஸ்ரயேலுக்குத் தேவனுடைய ஆசீர்வாதம் திரும்பும் காரியமானது, கடந்த யுகங்களின் பாத்திரவான்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் சகல தீர்க்கத்தரிசிகளும், "பூமியெங்கும் பிரபுக்களாக" - அதாவது பூரண மனுஷீகத்திற்கான மாதிரிகளாக, ஜனங்களின் தலைவர்களாக, கனமுள்ள ஊழியத்திற்கு உயர்த்தப்படும் காரியத்தையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கும். ஆனால் இதைவிட அதிகமான காரியங்களும் காணப்படும்; ஏனெனில் வாக்குத்தத்தமானது ஆபிரகாமின் சந்ததி மூலம், ஆவிக்குரியவர்கள் மூலம், ஆபிரகாமின் மாம்சீக சந்ததி ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதாக மட்டுமில்லாமல், "உன்னுடைய சந்ததிக்குள் பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்பதாகக் காணப்படுகின்றது. ஆகையால் அப்போஸ்தலன் சுட்டிக்காண்பிப்பதுபோல, சுவிசேஷ யுக சபையானது, ஒருவிதத்தில் "தேவனுடைய சிருஷ்டிகளில் அவருக்கு முதற்பலன்களாக," ஆவிக்குரிய தளத்தில் முதற்பலன்களாகக் காணப்படுகின்றனர்; மேலும் மாம்சீக இஸ்ரயேல் பூமிக்குரிய தளத்திலுள்ள அவருடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாகக் காணப்படுவார்கள்; மேலும் இவர்களுடைய விருப்பத்தின் அளவிற்கேற்ப, முற்பிதாக்களுடைய வழிகாட்டுதலின்கீழ் - பூமியின் குடிகள் அனைவருடைய ஆசீர்வதிக்கப்படுதலுக்காகவும், மேம்படுதலுக்காகவும் வேண்டி, இவர்கள் மாபெரும் மேசியாவைக் குறித்தும், அவரது இராஜ்யத்தின் சட்டத்திட்டங்கள் குறித்துமுள்ள அறிவினை பரப்பும் விஷயத்தில், பூமியின் குடிகள் அனைவருக்கும் உதவிகரமாகக் காணப்பட முடியும்.

---

R4606

## விசுவாச சந்ததியினர் மற்றும் நியாயப்பிரமாண சந்ததியினர்

"ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்குமாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது." (உரோமர் 4:16)

அப்போஸ்தலனாகிய பவுல் வேறொரு இடத்தில் ஆபிரகாமினுடைய ஒரே (கிறிஸ்துவை) சந்ததியாரைக்குறித்துப் பிரதானமான அல்லது விசேஷித்த விதத்தில், உயர்வான விதத்தில் காண்பித்திருக்கின்றார். இன்னுமாகக் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாக இருக்கும்படிக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்றும், இது நமக்கான சிலாக்கியம் என்றும் பவுல் நம்மிடம் கூறுகின்றார். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:29). மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாய் இராத நாம், நமது விசுவாசத்தின் காரணமாகவும், நாம் ஆவிக்குரிய வித்தின் அங்கத்தினர்களாகியிருப்பதன் காரணமாகவும், ஆபிரகாமின் சந்ததியாராக இப்படிக் கருதப்பட்டிருக்கின்றோம்.

இதை வார்த்தை விஷயத்திலுள்ள விளையாட்டு என்றும், கர்த்தர் "ஆபிரகாமின் சந்ததி" என்று கூறிவிட்டு, பிற்பாடு அவரது வித்தாயிராத, அவரது சந்ததியாய் இராத மற்றவர்களை ஆபிரகாமின் சந்ததியார் என்று ஏற்றுக்கொள்வார் என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது. இப்படி எண்ணுவோமேயானால், இது நமது ஆண்டவருடைய வார்த்தைகளை மாய்மாலமானவைகளாகவும், கண்ணியாகவும், வஞ்சனையானவைகளாகவும் ஆக்கிவிடும். ஆகையால் நமது கர்த்தர் இயேசு "ஆபிரகாமின் சந்ததியாவார்;" மாம்சத்தின்படியாக மாத்திரமல்லாமல், ஆபிரகாமோடு தமக்கு இருக்கும் மாம்சீக உறவைக்காட்டிலும் உயர்வான தளத்தில், ஆவியின்படியும் அவர் ஆபிரகாமின் சந்ததியாவார்; மேலும் இந்த உயர்வான தளத்திலேயே, நாம் நமது கர்த்தருடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றோம். நாம் புதுச்சிருஷ்டிகளென அவருடைய அங்கத்தினர்களாக இருக்கின்றோம்; நாம் ஆவிக்குரிய கிறிஸ்துவின் அங்கத்தினர்களாக இருக்கின்றோமே ஒழிய, மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் அங்கத்தினர்களல்ல.

ஆகையால் இயேசு எப்படி ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாக மாறினார் என்பதையும், அவர் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக இருந்தபோது, அவர் ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாக இல்லை என்பதையும், அப்படி இருந்திருந்தால் அவரால் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாகக் காரியங்களை நிறைவேற்றியிருக்க முடியாது என்பதையும் நாம் பார்ப்பது முக்கியமான காரியமாகும். உதாரணமாக: "ஆபிரகாமின் சந்ததியில், பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்று தேவன் வாக்களித்திருந்தார்; ஆனால் தேவன் திட்டமிட்டிருந்தபடி, மனிதனாகிய இயேசுவினால் உலகத்தை ஆசீர்வதிக்க முடியாது. அவர்களுக்கு அவரால் நித்திய ஜீவனைக்கொடுக்கமுடியாது. தம்முடைய சொந்த தேவைக்குரிய நித்திய ஜீவனையே அவர் உடையவராக இருந்தபடியால், அவரால் உலகத்துக்குக் கொடுக்கமுடியாது. நித்திய ஜீவனை அவர் கொடுக்கமுடிபவராகுவதற்குரிய ஒரே வழி, தெய்வீகத் திட்டத்தின்படி செய்வதாகும்; அதாவது தெய்வீக ஏற்பாடுகள் மற்றும் சித்தத்திற்கு இசைவாகத் தம்முடைய பூமிக்குரிய ஜீவனைக் கொடுத்துவைத்துவிடுவதாகும் (lay down); பின்னர் அவரது கீழ்ப்படிதலுக்கு வெகுமதியாக உயர்வான தளத்தில், மேலான சுபாவத்தை, திவ்விய சுபாவத்தை, அதற்கே உரிய மகிமை மற்றும் கனத்துடன் தேவன் வழங்குவார்; மேலும் இதினிமித்தமாக மனிதனாக இருந்தபோது அவர் பெற்றிருந்ததும், கீழ்ப்படியாமையின் காரணமாய்ப் பறிமுதல் செய்யப்படாததுமான பூமிக்குரிய உரிமைகள் அவர் வசத்தில் காணப்படும். இப்படியாக மனுக்குலத்திற்கு வழங்கத்தக்கதாக இந்த உரிமைகள், அவரிடம் ஆசீர்வாதத்தின் சொத்துபோன்று அல்லது வைப்பு தொகைபோன்று காணப்படும்.

## ஆவிக்குரிய வித்து / சந்ததியார்

ஆகையால் பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கான ஆபிரகாமின் சந்ததியாக நமது கர்த்தர் மாறுவதற்குரிய ஒரே வழி, புதுச்சிருஷ்டியாகுவதேயாகும் - புதுச்சிருஷ்டி கிறிஸ்து இயேசுவாகுவதே யாகும். ஆவிக்குரிய தளத்தில் புதுச்சிருஷ்டியாக இருக்கும் அவரிடம், அருளுவதற்கென்று ஆசீர்வாதம் ஒன்று காணப்படுகின்றது; மேலும் பூமிக்குரிய தளத்திலுள்ள மனுக்குலமானது, அவர் அளிக்கவிருக்கும் அந்த ஆசீர்வாதத்திற்கான தேவையில் காணப்படுகின்றனர். இந்த ஆவிக்குரிய கிறிஸ்துவிலேயே - இந்த மாபெரும் மத்தியஸ்தரிலேயே அங்கத்தினர்களாகிடுவதற்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நமக்கும் சரி, எந்த ஒரு யூதனுக்கும் சரி, இந்த ஆவிக்குரிய கிறிஸ்துவில், ஆபிரகாமினுடைய இந்த ஆவிக்குரிய சந்ததியில் அங்கத்தினராகிட வேண்டுமானால், ஒரு காரியம் அவசியமாயிருக்கும்; அதென்னவெனில் கிறிஸ்துவுடன் ஏதோ ஒருவகையில் பூமிக்குரிய உறவுமுறையைக் கொண்டிருப்பதல்ல அல்லது

ஆபிரகாமுடன் ஏதோ ஒருவகையில் பூமிக்குரிய உறவுமுறையைக் கொண்டிருப்பதல்ல; மாறாக கிறிஸ்து பெற்றிருந்த அதே ஆவிக்குரிய சுபாவத்திற்குப் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவது அவசியமாகும். ஆகையால் ஒருவன் கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் வாயிலாக, தனது சரீரத்தைத் தேவன் அங்கீகரிக்கின்ற ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க முடிகிறவனாகவும், மேலும் அப்படியே செய்கிறவனாகவும் இருப்பானானால், அவன் வாக்களிக்கப்பட்டுள்ள வெகுமதியை, அதாவது கிறிஸ்து பெற்றிருந்த அதே சுபாவத்தைப் பெற்றுக்கொள்வான் - அவரது ஆவிக்குரிய சரீரத்தில் அங்கத்தினன் ஆவான். ஆகையால் இந்த ஆவிக்குரிய வித்தில், ஆபிரகாமினுடைய மாம்சீக சந்ததியிலிருந்தும், அவர் சந்ததியாய் இராதவர்கள் மத்தியிலிருந்தும் (நம்மிடமிருந்தும்) வந்த ஜனங்கள் காணப்படுவார்கள். புறஜாதிகளாகிய நாம் இப்பொழுது ஆபிரகாமுடைய ஆவிக்குரிய வித்தின் அங்கத்தினர்களாகி வருகின்றோம்; ஆனால் நம்மால் மாம்சீக வித்தின் அங்கத்தினர்களாக முடியாது; ஏனெனில் நாம் அப்படியானவர்கள் அல்ல.

அப்போஸ்தலன் ஆதார வசனத்தில் குறிப்பிட்டிருப்பதுபோலவே, ஆபிரகாமின் இரண்டு சந்ததிகளைப் பெற்றிருப்பது தெய்வீக நோக்கமாகக் காணப்படுகின்றது; அவர்களில் ஒரு வித்து ஆவிக்குரிய வித்தாகும்; இவர்களைக்குறித்து நாம் சற்று முன்பே தியானித்தோம்; மற்றொரு வித்து ஆபிரகாமினுடைய மாம்சீக வித்தாகும். இவ்விரு சந்ததிகளில் ஒரு சந்ததி ஆவியின்படி, கிருபையின்படி, தயவின்படி உருவாக்கப்பட்டுள்ளனர். நாம் நியாயப்பிரமாண உறவுமுறையின்படி வந்தவர்களல்ல; மாறாக கிறிஸ்துவுடன் பங்கெடுத்து வந்தவர்களாக இருக்கின்றோம். நமது மீட்பருக்குப் பிரியமான ஜீவபலியாக நமது சரீரங்களை ஒப்புக்கொடுப்பதற்கு அனுமதிக்கப்படுவதும், இந்த நமது பலியைத் தேவன் ஏற்றுக்கொண்டு, வெகுமதியில் ஒரு பங்கை அடைய நாம் அனுமதிக்கப்படுவதும் தயவேயாகும். இதுவே ஆவிக்குரிய வித்தென நமக்கு இப்பொழுது வரும் தயவு அல்லது கிருபையாய்க் காணப்படுகின்றது. மேலும் இதில் கர்த்தருக்கு நாம் கொண்டிருக்கும் உண்மையின் அளவுக்குத்தக்கதாக, நாம் பங்கடைபவர்களாய் இருப்போம்.

இந்த வித்தே "வானத்தின் நட்சத்திரங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆபிரகாமினுடைய மற்ற வித்தானது, "கடற்கரை மணலுக்கு" ஒப்பிடப்பட்டுள்ளது. இந்த வித்தானது, அதாவது ஆபிரகாமின் பூமிக்குரிய வித்து, நியாயப்பிரமாணத்தின்கீழ் உருவாக்கப்படும் என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. அதே அப்போஸ்தலனுடைய எழுத்துக்களிலிருந்து, இந்த நியாயப்பிரமாணம் என்பது, மோசேயின் கரங்களில் தேவன் யூதர்களுக்குக் கொடுத்த நியாயப்பிரமாணமாக இருக்கமுடியாது என்று நாம் அறிந்திருக்கின்றோம். மோசேயின் கரங்களில் வழங்கப்பட்ட அந்த நியாயப்பிரமாணமானது, அவர்களில் யாருக்கும் நித்திய ஜீவனை வழங்கவில்லை. அது ஆபிரகாமின் சந்ததியிலுள்ள யார் ஒருவரையும் பூரணத்திற்குக் கொண்டுவரவில்லை.

அப்படியானால், நியாயப்பிரமாணம் எதையும் பூரணப்படுத்தக்கூடாமலிருக்க, வித்தில் சிலர் நியாயப்பிரமாணத்தின் வித்தாக இருக்க வேண்டும் என்றுள்ள அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும்? இங்கு அவர் மோசே மூலமாய் நிறுவப்பட்ட அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையைச் சுட்டிக்காண்பித்துள்ளார் என்றும், மற்ற இடங்களில் அவர் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவின்போது, நிறுவப்படப்போகிற எதிர்காலத்திற்குரிய ஒரு நியாயப்பிரமாண உடன்படிக்கையினை, புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கை என்று அழைக்கப்படுகின்ற உடன்படிக்கையினைச் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் நாங்கள் பதிலளிக்கின்றோம். இந்தப் புது உடன்படிக்கை பழையது போன்றதேயாகும், ஆனாலும் அதற்குச் சிறந்த மத்தியஸ்தர் காணப்படுவார்;

இவர் தேவன் இவர்களுக்குச் சித்தங்கொண்டுள்ள மற்றும் வாக்களித்துள்ள நித்திய ஜீவனையும், ஆசீர்வாதங்கள் அனைத்தையும் கொடுக்க முடிபவராய்க் காணப்படுவார். இப்படியாகவே மற்ற வேதவாக்கியங்களின்படி பார்க்கையிலும், நாம் அங்கத்தினர்களாகும் வாய்ப்புப் பெற்றிருக்கும் கிறிஸ்து எனும் மத்தியஸ்தரை உடைய அந்தப் புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின்கீழ்ச் சகல ஜாதிகளும், வருவதற்குரிய சிலாக்கியம் பெறுவார்கள் என்று பார்க்கின்றோம்; இப்படியாக ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவின்போது, இரட்சிக்கப்பட்டு மனித தளத்தில் காணப்படும் அனைவருமே அவரது வித்திற்குள் அடங்குவார்கள். நிபந்தனைகளுக்கு இணங்குபவர்கள் அனைவருமே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள் - "எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல" இருப்பார்கள்.

ஆகையால் "கிருபையினால் உண்டாகிறதும், நியாயப்பிரமாணத்தினால் உண்டாகிறதும்" (உரோமர் 4:16) எனும் வார்த்தைகள், இப்பொழுது கிருபையின் மூலம் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாராக இருப்பவர்களையும், இன்னுமாக மோசேயைக்காட்டிலும் சிறந்த மத்தியஸ்தரின்கீழ் - மாபெரும் நிஜமான மோசே, அதாவது கிறிஸ்துவாகிய தலை மற்றும் இந்தச் சுவிசேஷ யுகத்தில் தேவன் இப்பொழுது எழுப்பிக்கொண்டுவரும் அவரது சரீரமாகிய சபையின்கீழ் - நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன் வாயிலாக, ஆயிர வருஷ யுகத்தின்போது புது உடன்படிக்கையின்கீழ் - ஆபிரகாமின் சந்ததியாராகப் போகிறவர்களையும் சுட்டிக்காட்டுகின்றது. தேவன் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே தலையை எழுப்பிவிட்டார். சீக்கிரம் சரீரம் முழுமையாய் எழுப்பப்பட்டு, தலையோடு மகிமையில் இணைந்திடுவார்கள்.

## பூமிக்குரிய வித்து / சந்ததியார்

முற்பிதாக்கள் என்பவர்கள் மீதமுள்ள மனுக்குலத்தாரிடமிருந்து வேறுபட்ட மற்றும் வேறே வகுப்பாராய் இருக்கின்றார்கள் - இவர்களது விசுவாசத்திற்கு வெகுமதியாக, இவர்கள் "மேன்மையான உயிர்த்தெழுதலை" பெற்று, கல்லறையினின்று முழுமையான மனித பூரணத்திற்குக் கடந்துவருவார்கள்; எனினும் இவர்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ்த்தான் காணப்படுவார்கள்; ஏனெனில் தேவனோடு இசைவிற்குள்ளாக ஒருவர் கொண்டுவரப்படுவதற்கு இரண்டு வழிகள் மாத்திரமே காணப்படுகின்றன. முதலாவது வழி: தங்களது பூமிக்குரிய நலன்களைத் தற்காலத்தில் பலிசெலுத்தி, ஆவிக்குரிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்டு, இப்படியாக ஆவிக்குரிய வித்தின் அங்கத்தினர்களாகுதல்; இரண்டாவது வழி: ஆவிக்குரிய வித்தை மத்தியஸ்தராகப் பெற்றிருக்கும் புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின்கீழ் வருதலாகும். ஆபிரகாமும், மற்ற முற்பிதாக்களும் ஆவிக்குரிய வித்தில் இடம்பெற முடியாது என்பதினால், நியாயமாக இவர்கள் வைக்கப்பட வேண்டிய ஒரே இடம், மாம்சீக வித்திலாகும்; இவர்கள் ஆவிக்குரிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படவில்லை என்பது, யோவான் ஸ்நானன் குறித்து நமது கர்த்தர் கூறின பின்வரும் வார்த்தைகளினால் தெளிவாய் உறுதிப்படுத்தப்படுகின்றது: "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனுமில்லை; ஆகிலும், தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன், அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 7:28). இப்படியாக அவர் தெளிவாய் இராஜ்ய வகுப்பாரில் இடம்பெறுகிறவர்களுக்கும், எவ்வளவுதான் பெரியவர்களாக இருப்பினும் அந்த வகுப்பாருக்குள் வரமுடியாதவர்களுக்கும் இடையில் வரைக்கோட்டினைக் காண்பிக்கின்றார். ஆகையால் பூரணர்களாய்க் காணப்படப்போகும் முற்பிதாக்கள், ஆயிர வருஷ இராஜ்யத்தின் சட்டத்திட்டங்களுக்குக் கீழ்ப்பட்டிருப்பார்கள் என்றும், ஆயிர வருஷ காலத்தின்போது மீதமுள்ள மனுக்குலத்தார் அடையப்போகிற முழுமையான பூரணத்தினைத் துவக்கத்திலேயே இந்த முற்பிதாக்கள் பெற்றிருப்பார்கள் என்றும் நாம்

புரிந்துகொள்ள வேண்டும். இந்த விசேஷித்த சிலாக்கியமானது, இவர்கள் வெளிப்படுத்தின விசுவாசத்திற்கான வெகுமதியாகக் காணப்படும்; இன்னுமாக இராஜ்யத்தின் வேலைகளில் ஆவிக்குரிய வகுப்பாரின் பிரதிநிதிகளெனப் பங்கெடுக்கும் வாய்ப்பும் இவர்களுக்குரியதாக இருக்கும்; இன்னுமாக மீதமுள்ள மனுக்குலம் படிப்படியாக அபூரணத்திலிருந்து வெளிவருவது போன்றில்லாமல், உடனடியாக மனித சுபாவத்தில் பூரணத்தை அடையும் வாய்ப்பும் இவர்களுக்குரியதாக இருக்கும்.

இறுதியில் தேவன் இவர்களுக்கு ஆவிக்குரிய தளத்தில் இடம்கொடுக்க நோக்கம் கொண்டுள்ளார் என்ற கருத்தைக்கொடுக்கும் விதமான வார்த்தைகள் வேதவாக்கியங்களில் காணப்படுகின்றன என்று நாங்கள் எண்ணுவதைக்குறித்து முன்னமே சொல்லியிருந்தோம்; எனினும் ஆயிர வருஷ யுகத்தின் முடிவுவரையிலும், இவர்களால் அந்தத் தளத்திற்கு வரமுடியாது. இவர்கள் கிறிஸ்துவினுடைய மணவாட்டியின் அங்கத்தினர்களாகுவதில்லை. சிங்காசனத்தில் வீற்றிருக்காமல், சிங்காசனத்திற்கு முன்பு ஊழியம் ஆற்றிடும் திரள்கூட்டத்தாரோடுகூட, இவர்களது இடம் இருக்கும் என்பது எங்களது எண்ணமாகக் காணப்படுகின்றது.

---

R1871

## நிழலான சிவப்புக்கிடாரி

### எண்ணாகமம் 19

சமீப காலங்களில் சத்தியத்திற்குள் கடந்துவந்த சகோதரர் ஒருவர் "பரிசுத்தமாக்குதலுக்கு ஏதுவான, நிழலான சிவப்புக்கிடாரி" எனும் தலைப்பைக்கொண்ட சிறு கைப்பிரதியை நமக்கு அனுப்பிவைத்து, அதைக்குறித்து நாங்கள் என்ன எண்ணுகின்றோம் என்று வினவியுள்ளார்.

எங்கள் பதில்: பொருத்திப்பார்த்த விதம் முழுவதும் சரியற்றதாக இருக்கின்றது; எனினும் அந்தக் கைப்பிரதி யாருக்கும் நன்மை பயக்கப்போவதுமில்லை, பாதகமாயும் இருக்கப்போவதுமில்லை. ஆனாலும் பாதகம் ஏற்படுவதற்கான அபாயம் என்னவெனில், இது இன்னும் கடுமையான தப்பறைகளுக்கு வழிநடத்திடலாம் என்பதேயாகும்; மிகவும் முக்கியத்துவமற்ற தப்பறைகூடச் சில சத்தியங்களை மறைத்துப்போட்டுவிடும்; மேலும் இது - ஒருவேளை கர்த்தருடனும், அவரது திட்டத்துடனும் நம்முடைய இருதயங்களானது இசைவற்றுப்போகும் தருணங்களில், சாத்தான் நம்மைப் பக்கவழியாகப் பின்தொடர்ந்து பிடிக்க, திறந்த வழிவாசலாய் அமைந்துவிடும்.

இச்சிறு கைப்பிரதியினை எழுதினவர், பலிகள் சம்பந்தமான யூத பிரமாணங்களானது, பலிகளைப் பின்வருமாறு பிரித்துள்ளதைக் கவனிக்கத் தவறும் மிகவும் சகஜமான பிழையினைச் செய்துள்ளார்; யூத பிரமாணங்களானது பலிகளை: (1) இரண்டு வெவ்வேறு வகுப்பினருக்காக ஏறெடுக்கப்பட்டுள்ள பலிகளாகப் பிரித்துள்ளது; அதாவது லேவியர்கள் (பிரதான ஆசாரியனின் வீட்டார்) மற்றும் அனைத்து இஸ்ரயேலர்கள் (லேவியர்கள் தவிர்த்துள்ள பொதுவான சபையார்) ஆவார்கள்; (2) வெவ்வேறு காலப்பகுதிகளில் ஏறெடுக்கப்பட்ட பலிகளாகப் பிரித்துள்ளது; அதாவது பாவநிவாரண நாளின் பலிகள் மற்றும் பாவநிவாரணநாளைத் தொடர்ந்துள்ள வருஷத்தில் நிகழும் பலிகள் ஆகும். இதுவே, லேவியர்கள் பற்றின நிழல்களைப் புரிந்துகொள்வதற்குரிய திறவுகோல்கள் ஆகும்; மேலும் இது இல்லாமல், யாராலும் தெளிவான அல்லது முரண்பாடற்ற கண்ணோட்டங்களை அடையப்பெற முடியாது.

(பலியாகுவதற்கென்று அர்ப்பணமாகியுள்ள) பிரதான ஆசாரியனும், உடன் ஆசாரியர்களும், இராஜரிக ஆசாரியக்கூட்டமாகிய கிறிஸ்து மற்றும் சபைக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர். (பலியாகுவதற்கென்று இல்லாமல், ஊழியம் செய்வதற்கென்று அர்ப்பணம்பண்ணியுள்ள) லேவியர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய விசுவாசிகளாகிய - விசுவாச வீட்டாருக்கு அடையாளமாய் இருக்கின்றனர்.

அனைத்துப் பாவங்களுக்கான பலிகள் (அதாவது பாவநிவாரணபலிகளும், அதனோடுள்ள தகன பலிகளுமாகிய காளை மற்றும் வெள்ளாட்டின் பலிகள்) ஏறெடுக்கப்படும் பாவநிவாரணநாளானது, பலிகளிலேயே பெரியதும், முக்கியமுமான கிறிஸ்துவினுடைய பலியுடன் துவங்கி, "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை" இராஜரிக ஆசாரியக்கூட்டத்தார் - அதாவது அவரது சரீரத்தின் அங்கத்தினர்கள் நிறைவேற்றுவதோடு முடிவுபெறும் இந்தச் சுவிசேஷ யுகத்திற்கு அடையாளமாய் இருக்கின்றது (கொலோசெயர் 1:24). இந்த மாபெரிய பாவநிவாரணநாளின் (சுவிசேஷ யுகத்தின்) முடிவில், மகா பிரதான ஆசாரியன் (தலை மற்றும் சரீரம்) வெளியே வந்து, (லேவி கோத்திரத்தினைத் தவிர்த்து, மீதமுள்ள இஸ்ரயேலினால் அடையாளப்படுத்தப்படும்) தேவனுடைய ஜனங்களாகிட விரும்பும் ஜனங்களை ஆசீர்வதிப்பார்; இவர்கள் மண்ணினின்று எழுப்பப்பட்டு, மன்னிப்பையும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதத்தினையும் அருளப்பெற்றுக்கொள்வார்கள்.

பாவநிவாரணநாளைத் தொடர்ந்து ஜனங்களால் செலுத்தப்படும் பலிகளும், காணிக்கைகளும், இதன் செயல்பாட்டைப் பார்க்கும்போது, இது மகா பாவநிவாரணத்தினால் சுத்திகரிக்கப்பட்ட பிற்பாடு செய்யப்படும் தவறுகளுக்கான பிராயச்சித்தத்தை அடையாளப்படுத்துகின்றது; இன்னுமாக இது ஆயிர வருஷ யுகத்தின்போது அல்லது "திரும்பக்கொடுத்தலின் காலங்களில்" உலகம் செலுத்தும் நன்றிபலிகளையும், உறுதிமொழிகளையும், வாக்குறுதிகளையும் அடையாளப்படுத்துகின்றது.

சிவப்புக்கிடாரியானது பாவநிவாரணநாளின் (அல்லது சுவிசேஷ யுகத்தின்) பலிகளில் ஒன்றல்ல; இதுமாத்திரமல்லாமல், இது பலியாகவே கருதப்பட முடியாது; ஏனெனில் எந்த மிருகங்களின் பாகங்களானது, தேவனுடைய பலிபீடத்தில் வைக்கப்படுகின்றதோ, அதுவே பலிகளாகக் கருதப்படுகின்றன. பாவநிவாரணநாளின் பலி மிருகங்கள் அனைத்தும் பிரதான ஆசாரியனாலேயே வெட்டப்பட்டது; ஆனால் சிவப்புக்கிடாரி வெட்டப்பட்ட விஷயத்திலும், அது தகனிக்கப்படும் விஷயத்திலும், அப்போது பிரதான ஆசாரியனாகக் காணப்பட்ட ஆரோன் ஈடுபடவில்லை. அனைத்துப் பலிகளுமே "ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்திலேயே" கொல்லப்பட்டன; ஆனால் சிவப்புக்கிடாரியோ பாளயத்துக்கு வெளியே கொல்லப்பட்டது. ஆசாரியர்கள் பலிக்கான மிருகங்களைக் கொன்றார்கள், ஆனால் சிவப்புக்கிடாரியோ அவர்களால் கொல்லப்படுகிறதில்லை. இப்படியாக சிவப்புக்கிடாரியானது, கிறிஸ்துவையோ, அவரது சபையையோ, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய "விசேஷித்த பலிகளையோ" அடையாளப்படுத்துகிறதில்லை என்று நிரூபிக்கின்றோம். "பாளயத்துக்குப் புறம்பே" நீதிமான்கள் பாடுபடும் காரியமானது, சுவிசேஷ யுகத்தினுடைய நிறைவின்போது முடிவடைவதால், சிவப்புக்கிடாரி கொல்லப்படுவதையும், தகனிக்கப்படுவதையும், ஆயிர வருஷ யுகத்தின்போது நிகழும் ஏதோ ஒரு காரியத்திற்கான நிழலாக நாம் பொருத்த முடியாது. அப்படியானால் சிவப்புக்கிடாரி எதை அடையாளப்படுத்துகின்றது?

அது அவமானப்பட்டு மரித்த ஒரு கூட்டத்தாரை அடையாளப்படுத்துகின்றது; ஏனெனில் "பாளயத்துக்குப் புறம்பே" எனும் வார்த்தையானது, அவமானத்தை, உலகத்தின் நிராகரிப்பை அல்லது வெறுப்பை அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது (எபிரெயர்13:13). எபிரெயர் 11:32-38 ஆகிய

வசனங்களில் பாளயத்துக்கு வெளியே மரணம்வரை உண்மையுள்ளவர்களாய்க் காணப்படும் முற்பிதாக்கள் என்று பதிவுசெய்யப்பட்டுள்ள வகுப்பார், பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும் சிவப்புக்கிடாரியினால் அடையாளப்படுத்தப்படும் வகுப்பார் போலவே காணப்படுகின்றனர்; இவர்களது சாம்பலானது, மரணத்தோடுள்ள தொடர்பினால் அசுசியடைந்தவர்களை அல்லது தீட்டானவர்களைச் சுத்திகரிக்க உதவுகின்றது.

சிவப்புக்கிடாரியானது, சுவிசேஷ யுக சபை அடங்கின வகுப்பாரை அடையாளப்படுத்தாமல், தேவனுடைய பார்வையில் நீதிமான்களாக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்துகின்றது - விசுவாசத்தின் காரணமாய் நீதிமான்களாக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்துகின்றது; இக்காரியமானது, இக்கிடாரி பழுதற்றதாகவும், முழுமையாய்ச் சிவப்பு நிறத்திலும் இருக்கும் விஷயத்தினால் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. கிறிஸ்துவின் இரத்தத்தினை சிவப்பு நிறம் அடையாளப்படுத்துகின்றது. இவை அனைத்தும் எபிரெயர் 11:32-38 வரையிலான வசனங்களில் இடம்பெறும் முற்பிதாக்களுக்கு நன்கு பொருந்துகின்றது. தேவன் வாக்களித்திருந்த பாவநிவாரணத்திற்காக, இவர்கள் விசுவாசத்தினால் எதிர்நோக்கி யிருந்தார்கள்; இவர்கள் கிறிஸ்துவின் நாளைக் கணநேரம் கண்டு, களிகூர்ந்தார்கள்; "அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து," "தேவனுக்குப் பிரியமானவர்களென்று சாட்சிபெற்றார்கள்" (எபிரெயர் 11:5, 27, 39). ஆகையால் (பாவநிவாரணம் அதுவரையிலும் செலுத்தப்படாதபடியினால்) அவர்கள் தேவனுடைய குமாரர்களுக்குரிய சுதந்தரத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாவிட்டாலும், அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டிருக்க வேண்டும். (கலாத்தியர் 4:4-7; எபிரெயர் 3:5-6)

சிவப்புக்கிடாரியானது ஒருபோதும் நுகத்தினைத் தரித்திராததால், அது எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சுதந்தரமாய்க் காணப்படும் மனுஷர் அடங்கின ஒரு வகுப்பாரை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இவர்களில் சிலர் நியாயப்பிரமாணத்தின்கீழ்ப் பிறந்திருந்தாலும், சிலர் நியாயப்பிரமாணம் வருவதற்கு முன்பு பிறந்திருந்தாலும், இவர்கள் அனைவருமே தேவனுடைய பார்வையில் சரிசமமாய் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளபடியாலும், மேலும் "நியாயப்பிமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக ஒருவனும் நீதிமானாக்கப்படுகிற தில்லை" என்பதை நாம் அறிந்திருக்கின்றபடியாலும் - இவர்கள் அனைவரும் நியாயப்பிரமாணத்தினுடைய அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களெனக் கருதப்பட்டவர்கள் ஆவார்கள் என்றுள்ள முடிவிற்கு நாம் வரலாம்; மேலும் இவர்கள் ஆபிரகாமோடு, ஆபிரகாமினுடைய உடன்படிக்கையின்கீழ் விசுவாசத்தின் காரணமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள் என்றுள்ள முடிவிற்கு நாம் வரலாம்; மேலும் நியாயப்பிரமாணத்தின் கீழ் நீதிமான்களாகிட முயற்சிக்கும் யார் ஒருவரையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்திடும் நியாயப்பிரமாணம் எனும் "நுகத்தின்கீழ்" இவர்கள் இல்லை என்றுள்ள முடிவிற்கும் நாம் வரலாம். (கலாத்தியர் 5:1; அப்போஸ்தலர் 15:10)

ஆசாரியன் சிவப்புக்கிடாரியினைக் கொலை செய்யவில்லை; உடன் ஆசாரியர்களில் ஒருவர் அதன் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்கு நேராகத் தெளிக்க மட்டுமே செய்கின்றார்; இப்படியாக இங்குக் குறிப்பிடப்படும் வகுப்பாருடைய ஜீவியங்களும், மரணங்களும் ஆசரிப்புக்கூடாரத்தினை, அதன் வாசலை (கிறிஸ்துவை) மற்றும் வரவிருக்கின்ற பாவநிவாரண பலிகளைச் சுட்டிக்காட்டுவதாக நிழலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "அவர்களோடுகூடச் சென்ற ஞானக்கன்மலையின் (கிறிஸ்து) தண்ணீரைக் குடித்தார்கள்;" மேலும் ஒப்புக்கொடுக்கப்பட்ட இவர்களது ஜீவியங்களானது (இரத்தமானது) கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டினது.

எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்படும் இந்தப் "பாத்திரவான்கள்," சுவிசேஷ யுகத்தினுடைய ஜெயங்கொள்ளும் வகுப்பாருக்குச் சரிசமமாக உண்மையுள்ளவர்களாக இருப்பினும், இவர்கள் கிறிஸ்துவினுடைய பாடுகளில் பங்காளிகளெனவும், அவரது மகிமையில் உடன்சுதந்தரர் களெனவும் கருதப்பட முடியாது. மாபெரும் சிருஷ்டிகர் சில பாத்திரங்களை மிகுந்த கனத்திற்கும், சில பாத்திரங்களைச் சிறிய கனத்திற்கும் என்று ஆயத்தம்பண்ணத் திட்டம் பண்ணியுள்ளார்; மகா குயவனின் வனைந்தெடுக்கும் மற்றும் வடிவமைக்கும் செயல்களை எதிர்த்திடும் சிலர், மேற்கூறப்பட்டுள்ள எந்த விதமான கனத்தையும் அடையாமல், அழிக்கப்படும் பாத்திரங்களாக இருப்பார்கள். மேலும் இவர்கள் எந்த விதத்திலும் அவரது ஊழியத்திற்கு அபாத்திரர்களாய் இருப்பார்கள் (2 தீமோத்தேயு 2:20; உரோமர் 9:21-22). சிறிய கனத்திற்குரிய பாத்திரங்கள் முதலாவது தெரிந்துகொள்ளப்பட்டனர்; ஞானஸ்தானம் கொடுத்தவரும், பூர்வ கால பாத்திரவான்களில், அதாவது பணிவிடை வீட்டாரில் பிரதானமானவர்களில் ஒருவருமான "யோவான்" வரை, இப்பாத்திரங்கள் தெரிந்துகொள்ளப்பட்டனர்; எனினும் இவரைக் காட்டிலும் புத்திரர் வீட்டாரில், அதாவது மிகுந்த கனத்திற்குரிய பாத்திரங்களில் அடங்கும் சிறியவன், பெரியவனாய் இருப்பான். (மத்தேயு 11:11)

நமது கர்த்தராம் கிறிஸ்து இயேசு முதலாவதாவார்; தமது தெரிந்துகொள்ளப்பட்ட சபையாகிய தமது சரீரத்திற்குத் தலையாக, தலைவராகக் காணப்படுகின்றார்; மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதற்கு முன்னதாக அவரது சரீர அங்கத்தினர் பாடுகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி மகிமைக்குள் பிரவேசிக்க வேண்டும். மாபெரும் நிஜமான பாவநிவாரணநாள் நிறைவடைந்த பிற்பாடு, கிறிஸ்துவின் பாடுகள் நிறைவடைந்த பிற்பாடு, மகிமையான ஆளுகை துவங்குகையில், அப்போது பூர்வகாலத்து உண்மையுள்ள பாத்திரவான்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்."அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரெயர் 11:40)

கிறிஸ்துவினுடைய பாவநிவாரண பலியானது, அவரது சபைக்கு மாத்திரமல்லாமல், பூமியின் குடும்பங்கள் அனைவருக்கும் கிருபையினையும், புண்ணியத்தினையும் மகா திரளாய்ச் சேர்த்துவைத்துள்ளது; மேலும் அக்காலத்தில் சத்தியத்தினுடைய தெளிவான அறிவிற்குள் வந்து, கீழ்ப்படிதலோடு மன்னிப்பிற்காகவும், உதவிக்காகவும் நாடும் பூமியின் குடும்பங்களுக்கு அந்தக் கிருபையினை வழங்குவது என்பது இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாரின் வேலையாகக் காணப்படும்.

மரணபரியந்தம் நிரூபிக்கப்பட்ட பூர்வகால பாத்திரவான்களின் உண்மையானது, பாவத்தினை எடுத்துப்போட முடியாது; இன்னுமாக இவர்களைத் தேவனுக்கு முன்பாக பாவநிவாரணமாகவோ அல்லது பலியாகவோ முன்வைத்திட முடியாது; ஏனெனில் பலிபீடம் (கிறிஸ்து) அப்போது இன்னும் ஏற்படுத்தப்படவில்லை (மத்தேயு 23:19). ஆனாலும் பூர்வகால பாத்திரவான்களுடைய உண்மைத்தன்மையானது (சிவப்புக்கிடாரியினுடைய சாம்பலில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது போன்று) சில பலன்களைக் கொடுத்தது; அது விலையேறப்பெற்ற அனுபவங்களை ஏராளமாய்க் கொடுத்து, அருமையான குணலட்சணங்களை அவர்களில் உருவாக்கியது; அதாவது இப்பொழுது புத்திரசுவிகாரத்தின் ஆவியினைப் பெற்றுக்கொள்ளும் "தேவனுடைய புத்திரர்களுக்கும்கூட" அலங்காரமாயிருக்கின்ற குணலட்சணங்களை, அப்பொழுது முற்பிதாக்களில் உருவாக்கியது. இவ்விதமாக அவர்கள் உயர்வான கனத்திற்குரிய பாத்திரங்களாகும்படிக்கு அழைக்கப்படாத காரணத்தினால், "புத்திரர்கள்" என்றோ, திவ்விய சுபாவத்தின் சுதந்தரர்கள் என்றோ, கிறிஸ்துவோடு

உடன்சுதந்தரர்கள் என்றோ அங்கீகரிக்கப்பட முடியாதபோதிலும், கர்த்தர் அவர்களில் பரிசுத்தத்திற்கேதுவான பாக்கியமான கனிகளைக்கொணர்ந்தார். இப்படியாக (சுட்டெரிக்கப்பட்ட சிவப்புக்கிடாரியின் சாம்பலினால் அடையாளப்படுத்தப்படும்) அவர்களுக்கு வந்த பற்றியெரிகிற அனுபவங்களின் விளைவாக, அவர்கள் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாய்க் காணப்படும் குணலட்சணங்களைப் பொக்கிஷமாய்ச் சேர்த்து வைத்துள்ளனர்; இதைப் பாவநிவாரணநாள் நிறைவடைந்த பிற்பாடு, உலகத்தின் ஆசீர்வாதத்திற்காக விரைவில் பயன்படுத்த தேவன் சித்தங்கொண்டுள்ளார். பாவநிவாரணநாளின் "விசேஷித்த பலிகளினுடைய" பாவநிவாரணத்தினால் சுத்திகரிக்கப்பட்ட பிற்பாடு, அசுசி அடையும் ஜனங்களைச் சுத்திகரிக்கும் பயன்பாட்டிற்கென்று, இந்தச் சிவப்புக்கிடாரியின் சாம்பலானது கவனமாய்ச் சுத்தமான ஓர் இடத்தில் சேகரிக்கப்படுவதில், மேற்கூறப்பட்டுள்ள காரியம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

ஆவிக்குரிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் முதலாம் உயிர்த்தெழுதல் சம்பிவித்தப் பிற்பாடு, பூர்வ காலத்தின் அந்தப் பாத்திரவான்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (எபிரெயர் 11:40, 35); மேலும் பொதுவான உலகத்தாரைவிட, மேன்மையான உயிர்த்தெழுதல் ஒன்றை அனுபவிப்பார்கள்; அந்த உயிர்த்தெழுதலில் அவர்கள் உடனடியாக மரணத்திலிருந்து, மனித பரிபூரணத்திற்கும், நித்திய ஜீவனுக்கும் எழுந்திருப்பார்கள்; ஆனால் மீதமுள்ள மனுக்குலத்தாரோ, கீழ்ப்படிதல் காண்பிப்பார்களானால், படிப்படியாக மெதுவாக பரிபூரணத்தை நோக்கிப் போக வேண்டியவர்களாய் இருப்பார்கள். அப்போதும்கூட இந்த முற்பிதாக்கள் பூரண புருஷர்களென உலகத்தில் மேன்மையானவர்களாக, இயல்பாகவே வழிநடத்துபவர்களாகக் காணப்படுவார்கள்; வாக்குத்தத்தத்தின்படி கிறிஸ்து அவர்களைப் "பூமியெங்கும் பிரபுக்களாக" அல்லது பிரதானமானவர்களாக வைப்பார் (சங்கீதம் 45:16). அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரதிநிதிகளாகப் பார்க்கப்படுவார்கள் (லூக்கா 13:28). கிறிஸ்துவும், சபையும் கண்களுக்குப் புலப்படாத உண்மையான ஆவிக்குரிய அதிபதிகளாகக் காணப்படுவார்கள். (1 தீமோத்தேயு 6:16; எபிரெயர் 1:3; 1 யோவான் 3:2)

சிவப்புக்கிடாரியின் சாம்பலானது சுத்தமான இடத்தில் குவித்து வைக்கப்பட்டதுபோல, "பூர்வ கால பாத்திரவான்களின்" வேதனையான அனுபவங்களானது, இராஜ்யத்தில் அந்தப் "பிரபுக்களுக்கு" ஆசீர்வாதமாக, அறிவுரையாக மற்றும் உதவியாகக் காணப்படும். ***முழுமையாய்ச் சுத்திகரிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு மன்னிக்கப்பட்ட மனுஷனும், தண்ணீரினால் (சத்தியத்தினால்) தன்னைச் சுத்தம் பண்ணிக்கொள்வது மாத்திரமல்லாமல், அந்தப் "பிரபுக்களின்" அறிவுரைகளையும்கூட அவன் தன்னில் செயல்படுத்தினவனாகக் காணப்பட வேண்டும்***; இக்காரியம் சிவப்புக்கிடாரியின் சாம்பலானது தண்ணீரில் கலந்து, ஈசோப்பினால் தெளிக்கப்பட்டு, சுத்திகரிப்பை உண்டாக்கும் விஷயத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. (யாத்திராகமம் 12:22; லேவியராகமம் 14:4, 49; சங்கீதம் 51:7; எபிரெயர் 9:19)

மரணத்தினால் உண்டான அனைத்து அசுசியிலிருந்து, அதாவது பிணங்களை, கல்லறைகளை அல்லது மரித்தோரின் எலும்புகளை தொடுவதன் காரணமான அசுசியிலிருந்து, சிவப்புக்கிடாரியின் சாம்பலானது சுத்திகரிப்பு கொடுக்கின்றது; இது மரணம் மற்றும் அதன் சீரழிவுகளிலிருந்து மனுஷர்களைச் சுத்திகரித்து, சீர்ப்பொருந்தப்பண்ணுவது, இந்தப் பிரபுக்களின்/பிரதிநிதிகளின் வேலையாகக் காணப்படும் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றது; இந்தக் காரணத்திற்காகவே கர்த்தர் அவர்களைப் "பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பார்."

---

R1896

# நிழலான சிவப்புக்கிடாரி

அக்டோபர் 1-ஆம் தேதியினுடைய வாட்ச் டவர் பத்திரிக்கையில், இத்தலைப்பைக்குறித்து நாம் ஆராய்ந்திருந்தோம்; எனினும் அதை இரண்டு அல்லது மூன்று முறை கவனமாய் வாசித்தால், அது நமது வாசகர்களில் சிலருக்கு நன்மையாக இருக்கும். அப்படி வாசிக்கையில் பின்வரும் குறிப்புகளைத் தெளிவாய் மனதில் நிறுத்திக்கொள்ளுங்கள்:

(1) பிரதான ஆசாரியனால் பாவநிவாரணநாளின்போது ஏறெடுக்கப்பட்டதும், பிராகாரத்திற்குள் அடிக்கப்பட்டதுமானவைகள் மாத்திரமே, இந்தச் சுவிசேஷ யுகத்தில் நமது மாபெரும் பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவினால் பாவங்களுக்காக ஏறெடுக்கப்பட்ட "*விசேஷித்த பலிகளை*" குறிக்கின்றன - இது காளையினால் நிழல்படுத்தப்படும் அவருடைய பலியில் துவங்கி, அவரது சரீரமாகிய சபையின் பலியுடன் நிறைவுபெறுகின்றது; சபை அவரது கிருபையினால், அவருடைய பாடுகளில் ஐக்கியம் அடைந்துள்ளனர்; இவர்கள் "கர்த்தருடைய ஆட்டினால்" நிழற்படுத்தப்பட்டுள்ளனர். ஆசரிப்புக் கூடாரத்தின் விசேஷித்த பலிகள் என்கிற புஸ்தகத்தைப் பார்க்கவும்.

(2) நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட பாவத்திற்கான மற்ற பலிகள், பாவநிவாரணநாளைத் தொடர்ந்து ஏறெடுக்கப்பட்டன; இது பாவங்களுக்காக மனம்வருந்துவதன் மூலமும், துக்கிப்பதன் மூலமும் ஆயிர வருஷ காலங்களில், மனுக்குலத்தின் உலகமானது, பாவநிவாரணபலியின் புண்ணியங்களை ஏற்றுக்கொண்டு, அதைத் தங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்வதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

(3) சாமுயேல், எலியா, எலிசா, ஆபிரகாம், தாவீது மற்றும் ஆபேலினால் ஏறெடுக்கப்பட்ட "பலிகளானது" வேறுவகையானவைகளாகும்; இவை நியாயப்பிரமாணத்தில் இடம்பெறுவதில்லை, ஆகையால் அவைகள் நிழல்களல்ல. இப்பலிகளை ஏறெடுத்தவர்கள் ஆசாரியர்கள் அல்ல; மேலும் இவர்கள் ஏறெடுத்த பலிகளானது, நியாயப்பிரமாணத்தின்படி "வருஷந்தோறும்" தொடர்ந்து ஏறெடுக்கப்படும் "பாவங்களுக்கான நிழலான பலிகளுடன்" தொடர்புடையவைகள் அல்ல.

(4) பாவநிவாரணநாளின்போது பலியினை ஏறெடுத்த பிரதான ஆசாரியனால், சிவப்புக் கிடாரியானது அடிக்கப்படுகிறதில்லை; உடன் ஆசாரியனாகிய எலெயாசாராலும் அடிக்கப்படவில்லை; ஆசாரியர்கள் அல்லாத வேறொருவனால் அது அடிக்கப்படுகின்றது. ஆகையால் இந்தச் சிவப்புக் கிடாரியானது, பிரதான ஆசாரியனையோ அல்லது உடன் ஆசாரியனையோ அல்லது இந்தப் பாவநிவாரணநாளினுடைய எந்த ஒரு பலிகளையோ அடையாளப்படுத்துவதில்லை அல்லது நிழற்படுத்துவதில்லை. நாம் மேலே குறிப்பிட்டிருந்த கட்டுரையில், அது எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் இடம்பெறும் முற்பிதாக்களின் பாடுகளுடைய நிழலாய்க் கருதப்படுவதற்குரிய நமது தரப்பிலான காரணங்களைக் குறிப்பிட்டிருக்கின்றோம். அந்த முற்பிதாக்களில் வெகு சொற்பமானவர்களே, தங்களது தனிப்பட்ட அனுபவங்களில் எதையேனும் நிழற்படுத்தினவர்களாய் இருந்தனர். எனினும் அவர்களை ஒரு வகுப்பாராகப் பார்க்கும்போது, எதிர்காலத்தில் நிகழும் திரும்பக்கொடுத்தலின் வேலையில்/ சீர்ப்படுத்தும் வேலையில் அவர்களுக்கு ஒரு பங்கு இருக்கின்றது என்றும், தீட்டுக்கழிப்பு சம்பந்தமாக அந்த வேலை நிழற்படுத்தப்பட்டுள்ள காரியமானது, ஆயிர வருஷ காலப்பகுதியின் வேலையினை நிழற்படுத்துகின்றதாய் இருக்கின்றது என்றும் நாம் காண்பது நியாயமாகவே உள்ளது.

(5) ஆசாரியன் முதலாவது சிவப்புக்கிடாரியின் இரத்தத்தை எடுத்து, ஆசாரிப்புக்கூடாரத்துக்கு முன்புறம் தெளித்தார்; இப்படியாக இதன் மரணம், தேவனுடைய பலிபீடத்தில் ஏறெடுக்கப்படும்

பாவங்களுக்கான பலியைச் சுட்டிக்காட்டுவதை மற்றும் இதற்கு இசைவாய் இருப்பதைக் கற்பிக்கின்றதாய் இருக்கின்றது. பின்னர் அவர் கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவில் ஈசோப்பைப் போட வேண்டும்; இது சுத்திகரிப்பை, தீட்டுக்கழிப்பை அடையாளப்படுத்துகின்றது; ஒரு கேதுருக்கட்டையையும் போடவேண்டும் - இது நித்திய ஜீவனை அடையாளப்படுத்துகின்றது; சிவப்பு நூல் போடப்பட வேண்டும் - இது நம்முடைய பாவங்களுக்கான விலையாகிய கிறிஸ்துவின் இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றது (எண்ணாகமம் 19); இப்படியாக உலகம் பாத்திரமாயிராத முற்பிதாக்கள் மீது - அதாவது கல்லெறியுண்ட, வாளால் அறுக்கப்பட்ட, இன்னும் பல பாடுகள் பட்ட முற்பிதாக்கள் மீது குவிக்கப்பட்ட அவமானமானது, விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியமும், சத்தியத்தின் சுத்திகரிப்பும், நித்திய ஜீவனாகிய ஈவும் அவர்களுக்கு உத்தரவாதமாகிட அனுமதித்தது என்று கற்பிக்கப்பட்டுள்ளது.

(6) அநேகமாக எலெயாசாரால் நிழற்படுத்தப்படும் "இராஜரிக ஆசாரியத்துவத்தின்" உடன் ஆசாரியர்களில் ஒருவராக, அப்போஸ்தலன் பவுல் காணப்பட வேண்டும்; ஏனெனில் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் இவர் கொடுக்கும் சாட்சியின் மூலம், அவர்களது விசுவாசம் மற்றும் பாடுகள் (சுட்டெரிக்கப்படுதல்) நமக்கு இசைவாய் இருப்பதைச் சுட்டிக்காண்பித்துவிட்டு, "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக" முடியாது என்றபோதிலும், அவர்கள் சுத்திகரிக்கப்பட்டுள்ளனர் என்றும், கிறிஸ்துவின் இரத்தமானது அவர்களை ஏற்கத்தகுந்தவர்களாக்கியுள்ளது என்றும், அவர்கள் நித்திய ஜீவனாகிய ஈவில் பங்கடைவார்கள் என்றும் நமக்கு இவர் உறுதிப்படுத்தும் விதத்தில், ஈசோப்பையும், சிவப்பு நூலையும், கேதுரு கட்டையையும் நெருப்பில் போட்டார். (எபிரெயர் 11:40)

(7) அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயர் 9:13-ஆம் வசனத்தில் நிழலான சுத்திகரிப்பைக்குறித்துப் பேசுகையில், அவர் (பாவநிவாரணநாளின் பலிகளாகிய) காளைகள் மற்றும் வெள்ளாட்டுக்கடாக்களின் இரத்தம் குறித்தும், சிவப்புக்கிடாரியின் சாம்பல் தண்ணீரோடு தெளிக்கப்படுதல் முதலானவைகள் குறித்தும் குறிப்பிடுகின்றார்; ஆனால் இவைகளின் நிஜத்தைக்குறித்துப் பேசுகையில், அவர் கிறிஸ்துவினுடைய இரத்தத்தோடு மாத்திரம் முடித்துவிடுகின்றார்; சிவப்புக்கிடாரியினுடைய சாம்பலுக்கான நிஜத்தைக்குறித்து எதுவும் குறிப்பிடவில்லை; ஏனெனில் அதற்கு நம்முடைய சுத்திகரிப்போடு எந்தச் சம்பந்தமுமில்லை; மாறாக அது நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளது போன்று, ஆயிர வருஷ காலத்தின் போதான உலகத்தினுடைய தீட்டுக்கழிப்பு தொடர்புடையதாகும். ஒருவேளை சிவப்புக்கிடாரியும், அதன் சாம்பலும், சுவிசேஷ யுகத்தினுடைய சுத்திகரிப்புடன் தொடர்புடையவைகளாய் இருந்திருக்குமானால், அவ்வுண்மையினை அப்போஸ்தலன் நிச்சயமாகவே இங்குக் காண்பித்திருப்பார்; ஏனென்றால் அப்போது "ஏற்றகால சத்தியமாய்" காணப்பட்ட தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றையும் அப்போஸ்தலன் மறைத்துவைக்கவில்லை. தமது வீட்டாரின் பந்தியில், ஏற்றகால ஆகாரத்தைக் கர்த்தர் கொடுத்துக்கொண்டிருப்பதற்காக, அவருக்குத் துதி உண்டாவதாக! (லூக்கா 12:37)

---

R2675 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இழந்ததைத் திரும்பப்பெறுதலின் காலங்களுக்குரிய அழைப்பு இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ளதா?

(2) கேள்வி - சுவிசேஷ யுக அழைப்பிற்கு முன்னதாக, இழந்ததைத் திரும்பப்பெறுதலின் காலங்களுக்குரிய அழைப்பு காணப்பட்டதா? ஏனோக்கு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் இஸ்ரயேலர்கள் அனைவரும் இழந்ததைத் திரும்பப்பெறுவதற்குத்தானே அழைக்கப்பட்டார்கள்? இது ஒருவேளை உண்மையாக இருக்குமானால், சுவிசேஷ யுக அழைப்பானது, இப்போதைக்கு ஒரு துணை

அழைப்பாக மட்டும் காணப்படுகின்றதா? மேலும் இந்தச் சுவிசேஷ யுக அழைப்பு நிறைவடைகையில், இவ்வழைப்பினால் தற்காலிகமாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள ஆதியிலுள்ள அழைப்பு மீண்டும் அமலாக்கத்தில் வருமல்லவா?

பதில் - இல்லை! முற்பிதாக்களில் யாரும் இழந்ததைத் திரும்பப்பெறும்படியாக அழைக்கப்படவில்லை; இதுவுமல்லாமல் மீட்கும்பொருளானது கட்டித்தீர்க்கப்படாதது வரையில், பாவநிவாரணநாளின் பலிகள் அனைத்தும் செலுத்தி முடிப்பது வரையில், இவர்களோ அல்லது மற்றவர்களோ திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை அடைவது என்பது கூடாத காரியமாகும். மீட்கும்பொருள் இல்லாமலேயே இழந்ததைத் திரும்பப்பெறும் காரியம் சாத்தியமாகுமானால், அப்போது கிறிஸ்து மனுக்குலத்தின் உலகத்தைப் பொறுத்தமட்டில் விருதாவாகவே மரித்தார் என்பதாகிவிடும். இப்படியாக இல்லை; யாராவது திரும்பப்பெறுதலின் தயவுகளை அனுபவித்திருப்பார்கள் என்று கூறவேண்டுமானால், அது நாம் இப்பொழுது அனுபவிக்கிற விஷயமேயாகும் - அதாவது அத்தயவுகள் குறித்து நாம் பெற்றிருக்கும் அறிவேயாகும். இழந்ததைத் திரும்பப்பெறும் காரியம் தொடர்புடைய ஒரு சிறு அறிவு அல்லது குறிப்பு தகப்பனாகிய ஆதாமுக்கும், தாயாகிய ஏவாளுக்கும் கொடுக்கப்பட்டது. பிற்பாடு இது தொடர்புடைய ஒரு தெளிவான அறிக்கை ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டு, ஈசாக்கு மற்றும் யாக்கோபிற்கு உறுதிப்படுத்தப்பட்டது. ஒரு விஷயத்தைப் பற்றின வாக்குத்தத்தத்திற்கும் மற்றும் அவ்விஷயத்திற்கும் இடையில் பெரிய வித்தியாசம் உள்ளது. ஒருவேளை இழந்ததைத் திரும்பப்பெறுவதற்குரிய அழைப்பானது உண்மையாகவே கடந்துவந்திருக்குமானால், அதற்குச் சரியாய்ச் செவிகொடுக்கும் யார் ஒருவரும் பரிபூரணத்திற்கும், நித்திய ஜீவனுக்கும் சீர்ப்பொருத்தப்பட்டிருப்பார்கள். உண்மையில் இழந்ததைத் திரும்பப்பெறுவதற்குரிய வாய்ப்பு ஒன்று நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்டது - அதாவது அவர்கள் தங்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையினை மீறாமல், அதைக் காத்துக்கொண்டு நடப்பார்களானால், அவர்கள் பரிபூரண நிலைக்கும் மற்றும் ஜீவனுக்கும் திரும்பலாம் என்ற வாய்ப்புக் கொடுக்கப்பட்டது; ஆனால் நாம் பார்த்திருக்கின்றதுபோல, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வது என்பது கூடாத காரியமாகும்; ஆகையால் இவ்வுடன்படிக்கையின்கீழ் இழந்ததைத் திரும்பப்பெறுவதும் சாத்தியமற்ற காரியமாகவே காணப்பட்டது.

முற்பிதாக்களுடைய விசேஷம் என்னவென்றால், இவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குரிய எந்த அழைப்பும் கொடுக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்திருந்தபோதிலும், இவர்கள் தேவனுடைய கிருபையான நோக்கங்கள் பற்றின குறிப்புகளை மாத்திரமே அறிந்திருந்தபோதிலும், அவ்வாக்குத்தத்தங்கள் விஷயத்தில் மிக பெரிய விசுவாசத்தை வைத்தவர்களாய் இருந்தார்கள் - தேவனைப் பிரியப்படுத்துவதற்குரிய தங்களது பிரயாசங்களில் அதிகம் சகித்தவர்களானார்கள்; அவரது வாக்குத்தத்தங்களிலுள்ள தங்களது நம்பிக்கையின் காரணமாக அதிகம் சகித்தவர்களானார்கள். அப்போஸ்தலனாகிய பவுலின் பதிவை வைத்துப்பார்க்கையில், இவர்களில் சிலர் - ஒருவேளை இந்தச் சுவிசேஷ யுகத்தில் வாழ்ந்திருந்தார்களானால், இவர்களை ஜெயங்கொண்டவர்களாகவும், இராஜ்யத்தில் கிறிஸ்துவோடு உடன்சுதந்தரர்களாகவும் மாற்றும் அத்தகைய அனுபவங்களை, உண்மையாய்ச் சகித்துள்ளார்கள்; ஆனால் இவர்கள் இந்தப் பரம அழைப்பு அல்லது வேறு ஏதேனும் அழைப்பு கொடுக்கப்படுவதற்கு முன்னதாக ஜீவித்துள்ளபடியாலும், இவர்கள் வீரமாயும், உண்மையாயும் பாடு அனுபவித்து, சகித்திருக்கின்றபடியாலும், இவர்களுக்கு ஒரு மேன்மையான உயிர்த்தெழுதல், அதாவது உலகத்தைப்பார்க்கிலும் மிகவும் அநுகூலமான ஓர் உயிர்த்தெழுதல் வாக்களிக்கப்பட்டிருக்கின்றது; எனினும் அது சபைக்குக் காணப்படுவதுபோன்று மிகவும் வியத்தகு உயிர்த்தெழுதலாய் இருப்பதில்லை. அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று

(அவர்களுக்குக் கொடுக்கப்படுவதைக்காட்டிலும்) தேவன் விசேஷித்த சிலவற்றை நமக்கு வாக்களித்துள்ளார். "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரெயர் 11:40)

அர்ப்பணிக்கப்பட்ட சுவிசேஷ யுக சபை தவிர்த்து, மீதமுள்ள மனுக்குலத்தாரைக்காட்டிலும் இவர்களுடைய உயிர்த்தெழுதல் மேன்மையான ஒன்றாகக் காணப்படும்; இவர்கள் உடனடியாகவே பரிபூரணத்திற்கு உயிர்த்தெழுவார்கள்; ஆனால் உலகத்தினுடைய உயிர்த்தெழுதலோ படிப்படியான ஒன்றாகவும், பயிற்சிகள் மற்றும் பரீட்சைகளோடு உள்ள ஒன்றாகவும் காணப்படும்; இது நமது கர்த்தரினால் "நியாயத்தீர்ப்பிற்கு ஏதுவான உயிர்த்தெழுதல்" என்று அழைக்கப்பட்டது; ஏதேனில் பறிமுதல் செய்யப்பட்டு, இழந்துபோகப்பட்ட அனைத்திற்கும், கீழ்ப்படிதல் உள்ளவர்களும், விருப்பமுள்ளவர்களும் ஆயிர வருஷ யுகம் முழுவதும் படிப்படியாக எழுந்துவருவார்கள்.

---

R4989 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நீதிமான்கள் மற்றும் அநீதிமான்களின் உயிர்த்தெழுதல்

## சபைக்கும் பூமியிலிருப்பவர்களுக்குமான உறவு

ஆவிக்குரிய நிலையானது பரலோக நிலை என்பதாகப் பேசப்பட்டுள்ளது; ஆகையால் வேதவாக்கியங்களில் இடம்பெறும் வானம்/ பரலோகம்/ heaven மற்றும் heavenly என்ற வார்த்தைகள் உயர்வான எனும் அர்த்தத்தைக்கொடுக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் சபையானது அழைத்துச்செல்லப்படும் பரலோகம் என்பது, இந்த உயர்வான நிலையைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஆனால் அடுத்த யுகத்தில் சபையுடைய வேலை, மனுக்குலம் சம்பந்தப்பட்டதாகும். ஆகையால் கர்த்தரும், சபையும் சேர்ந்து காணப்படுவார்கள்; மனுஷர் வாயிலாக - பூமிக்குரிய பிரதிநிதிகள் வாயிலாக செயலாற்றுவார்கள், மேற்பார்வையிடுவார்கள், மேலாதிக்கம் பண்ணுவார்கள் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தக் கண்களுக்குப் புலப்படாத வல்லமைக்கான உதாரணத்தை நாம் சாத்தானில் பெற்றிருக்கின்றோம்; இவர் தனது பிரதிநிதிகள் மூலமாய், இங்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆளுகை செய்துகொண்டிருக்கின்றார். இவரது வேலை வஞ்சிக்கிற வேலையாகும். இவர் அறியாமை, மூடநம்பிக்கை முதலானவைகள் மூலம் மனுக்குலத்தினை ஆண்டுவந்திருக்கின்றார். ஆனால் கிறிஸ்துவினுடைய ஆளுகை, (உலகிலுள்ள) பிழைகளையும், மூடநம்பிக்கைகளையும் சிதறடித்துவிடும். உலகம் அப்பொழுது சத்தியத்தை அறிந்துகொள்ளும்; மேலும் சத்தியம் அவர்களை விடுதலையாக்கும். சத்தியத்தை ஏற்றுக்கொள்பவர்கள், விடுதலையைப் பெற்றுக்கொள்வார்கள்; இறுதியில் தேவனுடைய புத்திரர்களுக்கே உரிய சுயாதீனத்தை அடைவார்கள். கிறிஸ்துவின் கண்களுக்கு மனுஷர்கள் புலப்படுபவர்களாகவே இருப்பார்கள், ஆனால் கிறிஸ்துவோ, மனுஷரின் கண்களுக்குப் புலப்படுவதில்லை. பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், பன்னிரண்டு சிங்காசனங்களில் உட்கார்ந்து, இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீர்ப்பார்கள் என்றும், உலகை நியாயந்தீர்க்கும் வேலையிலும், ஆளுகை செய்யும் காரியத்திலும் அப்போஸ்தலர்கள் கர்த்தரோடுகூட உடன்வேலையாட்களாக இருப்பார்கள் என்றும் கர்த்தர் கூறியுள்ளார்.

இன்னொரு வகுப்பாரும் காணப்படுகின்றனர்: "ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும், சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய இராஜ்யத்தில் காணும்போது" என்று வாசிக்கின்றோம். ஆனால் தம்மையோ அல்லது தமது அப்போஸ்தலர்களையோ மனுஷர்கள் காண்பார்கள் என்று நமது கர்த்தர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவரும், அவரது அப்போஸ்தலர்களும், இராஜ்யத்தினுடைய கண்களுக்குப் புலப்படாத பாகத்தில் காணப்படுவார்கள். "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்" என்று எழுதப்பட்டுள்ளது (சங்கீதம் 45:16). முற்பிதாக்கள் பிள்ளைகளாகக் கருதப்படுவார்கள். தகப்பன் என்பவர் ஜீவன் கொடுப்பவராவார். ஒருவிதத்தில் ஆபிரகாம், ஈசாக்கு முதலானவர்கள் பிதாக்களாகக் கருதப்பட்டாலும், கிறிஸ்துவினுடைய மீட்கும் வேலையின் புண்ணியத்தின் மூலம், அவர் அவர்களுக்கு ஜீவன் கொடுப்பதினால், அவர்கள் அவருடைய பிள்ளைகளாவார்கள்; ஏனெனில் ஜீவன் கொடுக்கிறவர் தகப்பனாகவும், ஜீவனைப் பெற்றுக்கொள்பவர் பிள்ளையாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் பூமியெங்கும் பிரபுக்களாக இருப்பார்கள்; பரலோக தளத்தில் இல்லாமல், தங்களது உண்மையின் நிமித்தமாக "மேன்மையான உயிர்த்தெழுதலை" அடைந்தவர்களாக, பூமிக்குரிய தளத்தில் காணப்படுவார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் *பரிபூரண மனுஷத்துவத்திற்கான மாதிரிகளாகக்* காணப்படுவார்கள்; இவர்கள் ஒவ்வொருவரும் பிரபுவாக அல்லது அதிபதியாகக் காணப்படுவார்கள். இவர்களது ஞானமானது, மகிமையிலுள்ள சபையினால் கண்காணிக்கப்படும்/கட்டுப்படுத்தி ஆளப்படும் ஞானமாகக் காணப்படும்.

---

R5290 & R5785 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்

## தேவன் பிரபுக்களில் வெளிப்படுவார்

கிறிஸ்துவின் இராஜ்யம் மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படும்பொழுது, மேசியா ஆயிர வருஷம் பூமியின் பிரதிநிதிகளைக்கொண்டு ஆளுகைசெய்து, மனுக்குலத்தை மேம்படுத்தும்படியான ஓர் ஏற்பாட்டை தேவன் செய்திருக்கின்றார். இந்த வேலைக்காகத் தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பிற முற்பிதாக்களை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கின்றார். இவர்கள் மனித பரிபூரணத்தில் உடனடியாக உயிர்த்தெழுப்பப்படுவதற்குப் பாத்திரராகக் கருதப்பட்டுள்ளனர். இவர்கள் உயிர்த்தெழுதலில் சுபாவ-மாற்றத்தைப் பெறமாட்டார்கள்; ஏனெனில் இவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. யோர்தானில் நமது கர்த்தரைத் தவிர, மற்றப்படி பெந்தெகொஸ்தே நாள் வரை, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை. இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால், பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை. ஆகையால் அந்த முற்பிதாக்கள் தேவனுக்குப் பிரியமாயிருந்தார்கள் என்ற சாட்சியை மட்டுமே பெற்றிருந்தார்கள். அவர்கள் தேவனுக்கும், நீதியின் கொள்கைகளுக்கும் நேர்மையாயிருந்தபடியினால், இந்த முற்பிதாக்களில் சிலர், கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைப் பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத்தோல்களையும், வெள்ளாட்டுத்தோல்களையும், போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. (எபிரேயர் 11:37, 38)

இவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தாலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையவில்லை. உதாரணத்திற்கு, தேவன் ஆபிரகாமிடம்: "நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கு கொடுப்பேன்" என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். தேவனுடைய வார்த்தை உண்மையாவதற்கு ஆபிரகாம் உயிர்த்தெழுந்து வரவேண்டும். அவர் அந்தப் பூமியின் நிலத்தைப் பெற வேண்டும். ஆனால் அவரிடம் கனம், மகிமை மற்றும் சாகாமை பற்றியோ, தெய்வீகச் சுபாவத்தில் பங்குபெறுவது மற்றும் இயேசுவோடு உடன் சுதந்தரராவது பற்றியோ எதுவும் சொல்லப்படவில்லை. (அப்போஸ்தலர் 7:5; எபிரேயர் 11:8, 10, 17, 39, 40)

இது இயேசுவில் ஆரம்பித்தது. கிறிஸ்து நித்திய ஜீவன் மற்றும் அழியாமையைப் பற்றின அறிவை மாத்திரம் மனிதருக்குக் கொண்டுவராமல், இந்த ஜீவனை அவரோடு பெற்றுக்கொள்ளும் சிலாக்கியம் ஒன்று காணப்படுகின்றது என்பது பற்றின அறிவையும் கொண்டு வந்தார். "முதலாவது கர்த்தர் மூலமாய் இந்த இரட்சிப்புக்குறித்து அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதிப்பண்ணப்பட்டிருக்கிறது" (எபிரெயர் 2:3). ஆனால் தேவனை நம்பும் அளவுக்கு, அவருடைய வாக்குத்தத்தத்தின்பேரில் விசுவாசம் வைக்கும் அளவுக்கு, அந்த வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருக்கும் அளவுக்கு முற்பிதாக்கள் விசுவாசம் கொண்டிருந்தார்கள். தேவன் சாபத்தை நீக்கிப் போடுவார் என்ற தகவலை மட்டுமே அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆபிரகாமின் சந்ததிதான் தேவனுடைய ஆசீர்வாதம் கடந்துவருவதற்குரிய மகிமையான வழியாக இருக்க வேண்டியிருந்தது. "உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." ஆகையால் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையவில்லை என்று பரிசுத்த பவுல் அடிகளார் நமக்குக் கூறுகின்றார். "அவர்கள் (சுவிசேஷ யுக சபையாகிய) நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபிரேயர் 11:40)

நாம் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு முன்பு, முற்பிதாக்கள் அவர்களுக்குரிய ஆசீர்வாதத்தைப் பெறமுடியாது. பழைய ஏற்பாட்டுக்காலத்து உண்மையுள்ளவர்கள் வந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு, மணவாட்டி மகிமைப்படுத்தப்பட வேண்டும். பின்னர் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் மற்ற பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் அனைவரும் கிறிஸ்துவின் முதல் பிள்ளைகளாக இருப்பார்கள். அவர்கள் பிதாக்களுக்குப் பதிலாக குமாரர்களாக இருப்பார்கள். பிறகு அவர்களைப் பிரபுக்களாக, பூமியை ஆளுகிறவர்களாக வைப்பார் (சங்கீதம் 45:16). பரிபூரண மனிதர்களாக உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனுடைய பரிபூரண சாயலில் இருப்பார்கள். இந்தப் பழங்கால பாத்திரவான்கள் ஒவ்வொருவரிலும், தேவன் மாம்சத்தில் வெளிப்படுவார். அப்பொழுது அவர்கள் பூமியின் பிரபுக்களாக இருந்து, கிறிஸ்துவின் இராஜ்யத்தின் கீழ்ப் பூமியை ஆளுகைசெய்வார்கள்.

நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கத்தரிசிகளையும் தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கிறவர்களாகக் காண்பீர்கள் என்று இயேசு சொன்னபோது மேற்கூறிய கருத்தையே உறுதிப்படுத்தினார் (லூக்கா 13:28). அவர்: "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று கூறினார் (யோவான் 14:19). ஒருவேளை உயிர்த்தெழுதலின் வல்லமையினால் நாம் ஆவியின் நிலைமைக்கு மாற்றப்படவில்லையென்றால், மனித தளத்தில் இருக்கப்போகிறவர்களைப் போலவே நாமும் அவரைக் காண முடியாதவர்களாய் இருந்திருப்போம். "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும், இன்னும் உயிரோடு இருக்கிறவர்களும் அவர் வெளிப்படுகையில் அவருக்கு ஒப்பாயிருப்பார்கள். ஒரு நிமிஷத்திலே,

ஓர் இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவார்கள்.” நாம் மறுரூபமாகும் அந்த நிமிஷத்திலே, நமது கர்த்தரை மட்டுமல்ல, எல்லா பரிசுத்தத் தூதர்களையும், இப்பொழுது நம்முடைய கண்களுக்குப் புலப்படாதவர்களாக ஆவிக்குரிய தளத்தில் காணப்படும் அனைவரையும் காண்போம். இவர்களால் மனுக்குலத்தைப் பார்க்கமுடியும்; ஆனால் மனுக்குலத்தாரால் இவர்களைப் பார்க்கமுடியாது.

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்; முதலில் ஆதாமின் விஷயத்தில்; இரண்டாவது இயேசுவின் விஷயத்தில்; மூன்றாவது உலகத்தில் உள்ள மற்றவர்களைக்காட்டிலும் மேன்மையான உயிர்த்தெழுதலை அடைபவர்களாகிய முற்பிதாக்களின் மாம்சத்தில் வெளிப்படுவார்.

---

R5298 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## நியாயப்பிரமாண பலகைகள் புதிதாய் வைக்கப்பட்டன

மோசே முக்காடு போட்டிருந்த காரியமானது (யாத்திராகமம் 34:1, 4, 28-35), கிறிஸ்துவினுடைய இரண்டாம் வந்திருத்தலின்போது, அவர் மனிதனுக்கான மத்தியஸ்தரெனத் தம்முடைய மாபெரும் வேலையை நிறைவேற்றுகையிலும், வாக்களிக்கப்பட்ட தேசமாகிய - சீர்ப்பொருந்தப்பட்ட பரதீசுக்குள் மனுக்குலத்தை வழிநடத்தும் தலைவராகுகையிலும், அவர் தம்முடைய மகிமையை மனுக்குலத்திலிருந்து திரையிட்டுக்கொள்வதையும், முக்காட்டின் வாயிலாக அவர்களிடம் பேசுவதையும், ஆவிக்குரிய தளத்திலிருந்து நேரடியாக பேசாததையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. மனுக்குலத்தார் இயேசுவை காண்பதில்லை என்றாலும், இது அவர்களுக்கு நன்மையாகவே காணப்படும். இதற்குப் பதிலாக, அவர்கள் அவரை முற்பிதாக்களில் காண்பார்கள். இதை அவர் “நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும், சகல தீர்க்கத்தரிசிகளையும் காண்பீர்கள்” என்று கூறுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மனுக்குலம் முற்பிதாக்களை வெறும் முற்பிதாக்களாகப் பார்ப்பார்கள் என்றும் அர்த்தமாகாது. மாறாக உலகமானது அவர்களை மனித பரிபூரணத்தில் உயிர்த்தெழுந்தவர்களாகப் பார்ப்பார்கள்; ஆகையால் அவர்களைத் தேவனுடைய சாயலில் பூரணமாய் இருப்பவர்களாகப் பார்ப்பார்கள்; இன்னுமாக நிஜமான மோசேயாகிய மாபெரும் தீர்க்கத்தரிசியின் வார்த்தைகளுக்கு மனுக்குலம் செவிகொடுப்பார்களானால், அவர்கள் அடைய வேண்டிய மாதிரியை, இந்த முற்பிதாக்களில் காண்பார்கள்.

---

R4760 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சுவாரசியமான கேள்விகள்

கேள்வி - உரோமர் 5:18-ஆம் வசனத்தில், “ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று” என்று வாசிக்கின்றோம்; இந்த “இலவசமான ஈவு” எப்பொழுது அனைவருக்கும் செயல்முறைப்படுத்தப்படும்?

பதில் - இந்தச் சுவிசேஷ யுகத்தில் கையாளப்படும் "விசுவாச வீட்டாரை" தவிர்த்து, இந்த இலவசமான ஈவானது அடுத்ததாக மேசியாவின் யுகத்தில் உலகத்திற்கு வரும் என்றும், சபைக்கான கிருபையின் ஈவானது எப்படி அதனோடு சில நிபந்தனைகளை இணைக்கப்பெற்றுள்ளதோ, அதேபோல் உலகத்திற்கான இந்த ஈவோடும்கூடச் சில நிபந்தனைகள் இணைந்து காணப்படும் என்றும் நாங்கள் புரிந்திருக்கின்றோம். நம்முடைய விஷயத்தைப் பொறுத்தமட்டில், பலியின் சிலுவையைச் சுமந்து, நமது தலையைப் பின்பற்றிச் செல்வதே, அந்த நிபந்தனையாக இருக்கின்றது; இந்த நிபந்தனையின்படி நாம் நடவாமலிருந்தால், அந்த ஈவானது நமக்குச் செயல்படுவதில்லை. ஆனால் இந்த யுகம் முடிந்த பிற்பாடு, உலகத்திற்காக மகா பிரதான ஆசாரியன் தேவனுடைய சந்நிதியில் தோன்றி, கிருபாசனத்தின்மீது இரத்தத்தை இரண்டாம் விசை தெளிப்பார்; இயேசு நீதியின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவார்; மேலும் முழு உலகமும் மீட்பரிடத்திற்குக் கைமாற்றப்படுவார்கள்.

கடமையை ஏற்படுத்தி, இந்த மாபெரும் ஈவை அருளுவதே அவரது வழிமுறையாகக் காணப்படுகின்றது. அனைவருக்கும் முழுமையான வாய்ப்பு கிடைக்கும் என்று நமக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; ஆனாலும் அந்த வாய்ப்பானது, பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்குரிய புதிய உடன்படிக்கைக்குரிய நிபந்தனைகளின் கீழாகவே காணப்படும். அது முதலாவதாக முற்பிதாக்களுக்குச் செயல்முறைப்படுத்தப்படும்; இவர்கள் புதிய உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களை உடனடியாகப் பெற்றுக்கொள்வார்கள். இதற்குப் பிறகு "யூதர்களுக்கு முதலாவது" வரும்; ஏனெனில் யூதர்கள் இத்தகைய ஓர் இராஜ்யத்திற்காக நீண்ட காலமாகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்; மேலும் இத்தகைய ஓர் இராஜ்யத்திற்கான யூதனுடைய காத்திருப்பானது, அவன் அக்காலத்தில் அனுபவிக்கவிருக்கும் சந்தோஷம் மற்றும் ஆசீர்வாதத்தினால் பலனளிக்கப்படும்.

எனினும் இது யூதனோடு மாத்திரம் முடியப்போகிறதில்லை; மாறாக மனுக்குலம் அனைவரும் இந்த ஆசீர்வாதங்களுக்குள் வருவதற்குரிய சிலாக்கியமடைவார்கள்; இப்படியாக இவர்கள் ஆபிரகாமின் சந்ததியார் வாயிலாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆபிரகாமின் வித்தானவர்கள் உலகத்தை ஆசீர்வதிப்பார்கள் என்பது உண்மையாக இருப்பினும், ஆவிக்குரிய வித்தானவர்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பார்கள் என்பது மிக குறிப்பாய் உண்மையாக இருப்பினும், வசனம் "உன் சந்ததிக்குள் ஜாதிகள் அல்லது பூமியின் குடிகள் அனைவரும் தங்களை ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக்கிக் கொள்வார்கள்" (In thy seed will all the nations or families of the earth bless themselves) என்றே உள்ளது. அவர்கள் புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாடுகளின்கீழ் வருவதன்மூலமே, தங்களை ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக்கிக் கொள்வார்கள்; அதாவது மோசேயினால் மத்தியஸ்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையினால், "இவை அனைத்தையும் நாங்கள் செய்வோம்" என்று யூதர்கள் கூறின உடனே அவர்கள் ஆசீர்வதிக்கப்படவில்லை; அதாவது அந்த உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ் அவர்களாகவே விரும்பி வராததுவரையிலும் ஆசீர்வதிக்கப்படவில்லை; ஆகையால் புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு, அதன் நிபந்தனைகளுக்கு இணங்கும் யார் ஒருவருக்கும், அந்த உடன்படிக்கையானது நித்திய ஜீவனை உறுதியளித்திடும் - மேலும் இதை அவர்கள் அந்த உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக மாத்திரமே பெற்றுக்கொள்வார்கள்; ஆகையால் முற்பிதாக்களின் விஷயத்தைப்போன்று, மனுக்குலம் பெற்றுக்கொள்ளும் இந்த ஈவானது, உடனடியாகவே அவர்களது ஈவு ஆகிடாது. அது அவர்களுக்கென்றே வைக்கப்பட்டிருக்கும் ஈவாகும்; எனினும் மேசியாவினுடைய ஆயிர வருஷ ஆளுகையின்போது, புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளுக்கு இணங்குவதன் மூலமாகக் கர்த்தருடன் இசைவிற்குள்ளாக வருகையில், அந்த ஈவானது அவர்களால் அடையப்படும்.

---

R360 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# அனாஸ்டாசிஸ் – உயிர்த்தெழுதல்

"மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்."

(1 கொரிந்தியர் 15:21-22)

## உயிர்த்தெழுதல்களின் வரிசை

கிறிஸ்துவினுடைய பிரதான பூரணப்படுதலானது முதலாவது நடைபெறும் என்றும், மனுக்குலத்தினை மனித பூரணத்திற்குக் கொண்டுவரும் காரியமானது ஆயிர வருஷ யுகத்தில் தொடரும் என்றும் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம். எனினும் இது விஷயத்திலுள்ள அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளின்படியே, இக்கருத்து காணப்படுகின்றதாவெனப் பார்த்துக்கொள்ளலாம். நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தின் வார்த்தைகளாகிய, "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்று கூறின பிற்பாடு, அவர் தொடர்ந்து, "அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்று கூறியுள்ளார் (1 கொரிந்தியர் 15:22,23). உயிர்த்தெழுதலில் இரண்டு வரிசைகள் காணப்படுகின்றன, அதில் (அபிஷேகிக்கப்பட்ட தலை மற்றும் சரீரமாகிய) கிறிஸ்து முதலாவதாவார். இவர்களே நாம் பார்க்கிறபடி முதலாம் மற்றும் பிரதான உயிர்த்தெழுதலை அடைவார்கள்; இவர்களே முதலாவதாகப் பூரணத்திற்கு வருவார்கள் - திவ்விய பூரணத்திற்கு வருவார்கள். பிற்பாடு மற்றொரு வகுப்பார் பூரணப்படுத்தப்படுவார்கள். அவர் ஆயிர வருஷ யுகத்தில் காணப்படுவார், ஏனெனில் அவர் ஆளுகை செய்ய வந்துள்ளார்; மேலும் அனைத்து அதிகாரங்களைக் கவிழ்த்துப்போடவும், நீதிக்கு எதிரானவைகள் அனைத்தையும் கவிழ்த்துப்போடவும், அனைத்தையும் தேவனுடனும், அவரது பிரமாணங்களுடனும் இசைவிற்குள் கொண்டுவரவும் வந்துள்ளார். பின்னர் "அவர் ஆளுகை செய்ய வேண்டும்" - இந்த வேலைகள் அனைத்தும் நிறைவேறி முடிவது வரையிலும், அவர் காணப்பட வேண்டும்; அவர் ஆயிர வருஷங்கள் ஆளுகை செய்வார் (வெளிப்படுத்தல் 20:6). ஆகையால் அந்த யுகம் முழுவதும் அவர் காணப்படுவார். அவர் காணப்பட்டு மனுக்குலத்தினை சத்தியம் மற்றும் அறிவினால் ஆசீர்வதிப்பார் மற்றும் அனைத்தையும் சீர்ப்பொருத்துவார். அப்போது அந்த ஆசீர்வாதமான ஆளுகையின்போது விருப்பமுள்ளவர்கள், அவருடன் இசைவிற்குள் வருவார்கள்; மேலும் "அனைவருடைய ஆண்டவராகிய அவரை வாழ்த்துவார்கள்;" இப்படியாக அவருடையவர்கள் ஆவார்கள். இவர்களையே அப்போஸ்தலனாகிய பவுல்: "பின்பு அவர் வருகையில் (பிரசன்னத்தின்போது) அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்று கூறுகையில் குறிப்பிட்டுள்ளார் என்று நாம் புரிந்துகொள்கின்றோம். இவர்கள் தங்கள் (மனித) சுபாவத்தின் பூரணத்திற்கு எழுப்பப்படுவார்கள்.

Anastasis எனும் வார்த்தையினுடைய அர்த்தத்தைப் பொறுத்தமட்டில், இந்த எழுப்பப்படுதல், அதாவது பூரணப்படுத்தப்படுதல் என்பது உடனடியாகவும் நடக்கலாம் அல்லது படிப்படியான வேலையாகவும் நடக்கலாம். பொதுவான மனுக்குலத்தைப் பூரண மனித ஜீவி என்ற நிலைக்குப் பூரணப்படுத்துதல் அல்லது எழுப்புதல் என்பது நீண்டகாலம் எடுத்துக்கொள்ளும் என்று நாம் பார்த்திருக்கின்றோம். அந்தக் காலத்தின்போது அவர்கள் திறமிக்க உதவியாளர்கள் மற்றும்

போதகர்களினுடைய மேற்பார்வையின்கீழ், தீமையை ஜெயங்கொள்ளும் விஷயத்தில் விலையேறப்பெற்ற, நிரந்தரமான பாடங்களைக் கற்றுக்கொள்வார்கள். ஆனால் இந்த விதிக்கு இரண்டு பொதுவான விதிவிலக்குகள் காணப்படுகின்றன; இந்த விதிவிலக்கான இரண்டு வகுப்பார் இந்தப் பாடங்களைத் தற்காலத்திலேயே தீமையினுடைய ஆளுகையின்கீழ்க் கற்றுக்கொண்டுள்ளனர். இவர்கள் இங்கேயே அனுபவித்திட்ட சிட்சைகளின் வாயிலாகப் பூரணராக்கப்பட்டுள்ளனர்; மேலும் இப்படியாக ஆயத்தப்படுத்தப்பட்டு காணப்படுவதால், ஜீவனுக்குத் திரும்பும் காலத்தில் உடனடியாகத் தங்களுக்கே உரிய பூரண நிலையினை அடைய பாத்திரவான்களாகக் கருதப்படுகின்றனர்.

இந்த இரு வகுப்பாரில் முதலாவதும், பிரதானமானவர்களுமானவர்கள் கிறிஸ்துவினுடைய சரீர அங்கத்தினர்கள் ஆவார்கள்; இவர்கள் நல்லதொரு போராட்டம் போராடி, மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவர்களாக இருப்பதன் மூலம் தங்களது பயிற்சியினையும், பலியின் வேலையினையும் நிறைவுசெய்தவர்களாவார்கள்; மேலும் இத்தகையவர்களுக்கு நீதியின் கிரீடமானது - பலனாக ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளது. இந்த வகுப்பாருடைய அனாஸ்டாசிஸ்/anastasis (பூரணத்திற்கு எழுந்துவருதலானது), இவர்கள் அனைவருக்கும் ஒரே மாத்திரத்தில் வருவதில்லை என்றாலும், அது இவர்கள் ஒவ்வொருவருக்கும் உடனடியான பூரணப்படுதலாகவே காணப்படும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், முதலாவது பூரணப்படுத்தப்படுவார்கள்; பின்னர் உயிரோடு காணப்படும் நாமோ, மரணத்தில் ஒரு கணம்கூட நித்திரைசெய்யாமல், அதே அனாஸ்டாசிஸ், அதே பூரணப்படுதலில் பங்கடைவோம்.

நாம் ஒரு கணப்பொழுதில் மறுரூபமாக்கப்படுவோம், கண் இமைக்கும்பொழுதில் மரணத்தில் அழிக்கப்படும் பூமிக்குரிய கூடாரத்திலிருந்து, பரலோகக் கூடாரத்திற்கு - நமது மகிமையான ஆவிக்குரிய சரீரத்திற்கு உடனடியாக எழுப்பப்படுவோம். ஆனால் இயேசுவில் நித்திரையாய் இருந்தவர்களின் எழுந்திருத்தலும், ஜீவனுள்ள அங்கத்தினர்கள் புதிய நிலைமைக்கு மறுரூபமாகுதலும், இயேசுவின் உயிர்த்தெழுதலும் சேர்ந்தே, முதலாம் (பிரதான) அனாஸ்டாசிஸ் ஆகுகின்றது. "(பிரதான) முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்." (வெளிப்படுத்தல் 20:6)

இரண்டாம் வகுப்பார் சற்றே சிறப்புமிக்கவர்களாக இருப்பினும், இவர்கள் தேவனால் உயர்வாய் மதிக்கப்படுபவர்களாவார்கள்; மேலும், இவர்களுடைய வட்டத்திற்குள் ஜெயங்கொண்டவர்கள் காணப்படுகின்றனர்; இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தில் நமக்கு இருக்கும் போராட்டத்திலிருந்து வேறுபட்ட போராட்டத்தினைப் பெற்றிருப்பினும், நல்லதொரு போராட்டம் போராடினவர்கள் ஆவார்கள். நாங்கள் முந்தய யுகங்களிலுள்ள தீர்க்கத்தரிசிகளையும், முற்பிதாக்களையும் பற்றிக் குறிப்பிடுகின்றோம். இவர்கள் நமக்கான "பரலோக" - "பரம அழைப்பை" ஒருபோதும் பெற்றுக்கொள்ளவில்லை என்றபோதிலும், மனித சுபாவத்தினின்று திவ்விய சுபாவத்திற்கு மாறும்படிக்கு அழைக்கப்படவில்லை என்றபோதிலும், இவர்கள் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டு, தங்களுக்கு முன்பு வைக்கப்பட்ட பூமிக்குரிய வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டவர்களாகக் காணப்பட்டனர். "மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்." (எபிரெயர் 3:5-6)

பூர்வ காலத்து பாத்திரவான்களாகிய அந்த உண்மையுள்ளவர்கள் அனைவரும், அவர்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறப் பெற்றுக்கொள்ளவில்லை என்றபோதிலும், இவர்கள் தங்களுக்கு வாக்களிக்கப்பட்டவைகளைத் தேவன் எப்போதேனும் தருவார் என்று விசுவாசித்தவர்களாக, ஜீவியத்தினுடைய முடிவுபரியந்தம் நம்பிக்கைவைத்தவர்களாக இருந்தனர். [கானான் தேசம் முழுவதையும் தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்திருந்தார்; ஆனால் ஓர் அடி நிலத்தையாகிலும் கையாட்சிக்குக் கொடுக்கவில்லை; எனினும் தேவன் வாக்களித்தவைகள் மீது விசுவாசம் வைத்தவராக மரித்துப்போனார் அப்போஸ்தலர் 7:5]. ஆபிரகாமிற்கும், ஈசாக்கிற்கும், யாக்கோபிற்கும் மற்றும் தீர்க்கத்தரிசிகள் அனைவருக்கும் வாக்களிக்கப்பட்ட பூமிக்குரிய இராஜ்யத்தையும், ஆளுகையையும் அவர்களுக்கு உடனடியாகக் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்கள் இளைப்பாறும்படிக்குத் தேவன் விட்டார்; சுவிசேஷ யுக சபையானது தம்முடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாக இருக்கும்படிக்கு, பரலோக, "விசேஷித்த வாக்குத்தத்தங்களின்" வாயிலாகச் சபையைத் தேவன் உருவாக்கிக்கொண்டிருக்கையில், முற்பிதாக்கள் நித்திரைக்குள் கடந்துபோனார்கள் (யாக்கோபு 1:18). ஆகையாலே அப்போஸ்தலனாகிய பவுல் அந்தப் பூர்வகால பாத்திரவான்களைக்குறித்துக் குறிப்பிடுகையில், "அவர்கள் (கிறிஸ்து) நம்மையல்லாமல் (நம் மூலமாய் அல்லாமல்) பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" என்று கூறியுள்ளார். (எபிரெயர் 11:39-40)

மற்ற அனைவருடைய அனாஸ்டாசிஸ்க்கு முன்னதாகக் கிறிஸ்துவினுடைய அனாஸ்டாசிஸ் நடைபெற வேண்டும்; ஏனெனில், கிறிஸ்து மூலமாகவே அனைத்தும் சீர்ப்பொருத்தப்படும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கத்தரிசிகள் மற்றும் பூர்வ காலத்தில் ஜெயங்கொண்டவர்களின் அனாஸ்டாசிஸ் அல்லது பூரணப்படுதல் என்பது, மனித சுபாவத்தினுடைய விரைவான அல்லது உடனடியான பூரணப்படுதலாகத்தான் இருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். பூரணப்படுத்தப்பட்ட மனிதர்களென இவர்கள் அபூரண மனிதர்கள் மீது ஆளுகைசெய்வார்கள் என்றும், மாம்சீக வித்தாகிய இவர்கள், கிறிஸ்துவாகிய அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமானவராகிய ஆவிக்குரிய வித்தின் (பூமிக்குரிய) பிரதிநிதிகளென, பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பார்கள் என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம் (கொலோசெயர் 1:15; எபிரெயர் 1:3). கிறிஸ்து மூலமாய்ப் பிரதானமாகத் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதம் கடந்துவரும்.

---

R5166 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# மரணமும் உயிர்த்தெழுதலும்

## பூமிக்குரிய உயிர்த்தெழுதல்

வேதவாக்கியங்களில் மூன்றாவது வகுப்பாராக, தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகர் எபிரெயருக்கான நிருபத்தில் பட்டியலிடப்பட்டுள்ளனர். நமது இரட்சகரின் வருகைக்கு முன்னரே வாழ்ந்து, உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டவர்களாகிய முற்பிதாக்களையே குறிப்பிடுகின்றோம். இவர்கள் நமது கர்த்தரின் அடிச்சுவட்டில் நடக்கும் வாய்ப்பு பெறவில்லை; ஆகையால் இவர்கள் "பரம அழைப்பையும்" பெறவில்லை. இவர்கள் மீதமுள்ள மனுக்குலத்தாரைவிட, "மேன்மையானதொரு உயிர்த்தெழுதலை" பெறுவார்கள் என்று

சொல்லப்பட்டிருக்கின்றது (எபிரெயர் 11:35). மேலான என்று சொல்லப்படும்போது, ஆவிக்குரிய தளத்திற்கு உரியவர்களாவார்கள் என்றில்லாமல், மாறாக மனுஷீக பரிபூரணத்தில் உடனடியாக உயிர்த்தெழுப்பப்படுபவர்களாக இருப்பார்கள். ஆனால் மனுக்குலத்தின் மற்றவர்களுக்கோ, ஆதாமினால் இழந்துபோகப்பட்ட ஆதி நிலைமைக்கு படிப்படியாக வருவதற்கு, ஆயிரம் வருஷங்கள் தேவைப்படும்.

கிறிஸ்துவின் ஆளுகையினுடைய ஆரம்பத்தில், முற்பிதாக்கள் சரீரத்திலும், மனதிலும் - மனுஷீக பரிபூரணத்தில் வருவார்கள். இதனால் இவர்களது சரீரங்கள் இவர்களது எண்ணங்களுக்கு இசைவானதாகவே இருக்கும். இவர்களுக்குத் தழும்புகள் இருந்திருந்தால், அது இனி இராது. இவர்களுக்கு ஊனம் ஏதாவது இருந்திருந்தால், அதுவும் மறைந்துபோகும். ஒரு பூரண மனிதனை சித்தரிப்பது நமக்குச் சுலபமான காரியமல்ல, ஏனெனில் அப்படிப்பட்ட பூரண மனிதனை நாம் பார்த்ததே கிடையாது. நம்மை சுற்றி இருப்பவர்கள் அனைவரும் பல்வேறு வகைகளில் அபூரணர்களே ஆவார்கள். எப்படி ஒரு பூரண மனிதன் உருவத்திலும், தோற்றத்திலும், குரலிலும், பார்வையிலும், கேட்பதிலும், ருசிபார்ப்பதிலும் இன்னும் மற்ற எல்லா உள்ளுறுப்புகளிலும், இன்னும் மனதிலும் பூரணமாக இருப்பான் என்பதை நாம் அறிவோம்.

---

R3445 (1904-*ஆம் வருஷத்தின் பார்வை)*

## வரிசையில் முற்பிதாக்களின் இடம்

6-ஆம் தொகுதியை வாசிக்கையில், முற்பிதாக்கள் மற்றும் திரள்கூட்டத்தாருடைய உயிர்த்தெழுதலின் வரிசை தொடர்பாகவும், அவர்களுக்குரிய கனம் தொடர்பாகவும் எங்களில் சிலருக்குக் குழப்பங்கள் அல்லது முரண்பாடுகள் ஏற்பட்டது. விவாதத்திற்கான அந்தப் பத்திகள் 139-ஆம் பக்கத்தின் முதலாம் பத்தியிலும், 151-ஆம் பக்கத்தின் முதலாம் பத்தியிலும், 153-ஆம் பக்கத்தின் முதலாம் பத்தியிலும் காணப்படுகின்றன. எங்களது இச்சிரமத்திற்குத் தயவாய் உதவிசெய்யுங்கள்.

பதில்: அவ்வாக்கியங்களினுடைய இணக்கத்தினைக் காட்டுவதற்கு நாங்கள் பிரியப்படுகின்றோம். 139-ஆம் பக்கத்தின் முதலாம் பத்தியில், நாங்கள் சுபாவங்களைக்குறித்து விவரித்திருந்தோம்; மேலும் திவ்விய சுபாவத்தினைப் பெற்றுக்கொள்ளும் சிறுமந்தையினர், மற்றவர்களுக்கு மேலாகக் காணப்படுவார்கள் என்று காண்பித்திருந்தோம்; அடுத்ததாக திவ்விய சுபாவத்தில் இல்லாமல், ஆவிக்குரிய சுபாவத்தில் திரள்கூட்டத்தினர் காணப்படுவார்கள்; சுபாவத்தினுடைய அடுத்த வரிசையில் முற்பிதாக்கள் - "தேவதூதர்களுக்கும் சற்று சிறிய" சுபாவத்தில் காணப்படுவார்கள் என்று காண்பித்திருந்தோம்.

151-ஆம் பக்கத்தினுடைய முதலாம் பத்தியில் மதிப்பிலும், கனத்திலும் இந்தப் பல்வேறு வகுப்பாருக்கான ஸ்தானங்களுடைய வரிசைகளைக் காண்பிப்பதற்கு நாங்கள் முயற்சித்திருக்கின்றோம். இங்கு நாங்கள் முற்பிதாக்களைத் திரள்கூட்டத்தாருக்கு மேலானவர்களாக வைக்கின்றோம். இதுவே பொருத்தமான வரிசையாக நமக்குத் தெரிந்தது; ஏனெனில் முற்பிதாக்கள், மிகவும் குறிப்பாக அவர்களது ஜெயங்கொள்ளும் தன்மையில், சத்தியத்திற்காய்த் தங்கள் ஜீவியங்களை மனமுவந்து ஒப்புக்கொடுத்த

சிறுமந்தைக்கு ஒத்திருந்தார்கள். இந்த வரிசைக்கு வேதவாக்கியங்கள்கூட ஆதரவளிக்கின்றன; 151-ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் லேவியர்களின் வரிசையிலுள்ள நிழல் மாத்திரமல்லாமல், இந்த முற்பிதாக்கள் "பூமியெங்கும் பிரபுக்களாக இருப்பார்கள்" எனும் வேதவாக்கிய அறிக்கையானது, இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய பாகத்தில் இவர்களுக்கான விசேஷித்த மதிப்பினை அல்லது கனமிக்க ஸ்தானத்தினைச் சுட்டிக்காட்டுவதையும் நாம் ஆதரவாகப் பெற்றிருக்கின்றோம். மறுபடியுமாக வெளிப்படுத்தல் 20:9-ஆம் வசனத்தில் இந்த முற்பிதாக்கள் பரிசுத்தவான்களின் (பரிசுத்தமானவர்களின்) பாளயம், பிரியமான நகரம் எனும் வார்த்தைகளினால் அடையாளப்படுத்தப்படுவதன் மூலம், பூமியில் விசேஷித்த, தனிப்பட்ட மற்றும் தனிச்சிறப்புள்ள வகுப்பாரெனச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளனர். அந்தக் காலத்தில், ஆயிர வருஷத்தினுடைய முடிவில் இவர்கள் பூரணத்தில் காணப்படுவார்கள் எனும் உண்மையும், அப்போதும்கூட இந்த முற்பிதாக்கள் குறிப்பிடத்தக்க விதத்தில் தனி வகுப்பாராய் இருப்பார்கள் எனும் உண்மையும், மனுஷ சுபாவத்தின் பூரண நிலைக்கும் அதிகமான மற்றும் மேலான உயர்ந்த கனத்தின் நிலைமையினை முற்பிதாக்கள் விஷயத்தில் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நித்தியமான எதிகாலத்தில், ஆயிர வருஷத்திற்கு அப்பால் இவர்களுக்குக் கர்த்தர் என்ன விசேஷித்தப் பலனை வைத்திருப்பார் என்பது குறித்து நமக்குக் கூறப்படவில்லை; ஆனாலும் வானங்களையும், தேவனுடைய கரத்தின் கிரியைகளையும் மற்றும் குடியிருப்பிற்காக ஆயத்தப்பட்டுவரும் எண்ணற்ற உலகங்களையும் குறித்து நாம் எண்ணிப்பார்க்கையில், தீமையினுடைய ஆளுகையின்கீழ் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்ட இந்த முற்பிதாக்கள், ஆயிர வருஷ யுகத்தில் மட்டுமல்லாமல், அதன் பிற்பாடும் இன்னும் சில கூடுதலான கனமிக்க ஊழிய வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நாம் அனுமானிப்பது நியாயமானதாகவே இருக்கும். ஆகையால் இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களுக்காக, இவர்கள் சுபாவத்தின் விஷயத்தில் கீழ்த்தள/வரிசையில் காணப்பட்டாலும், இவர்களைக் கனத்தின் விஷயத்தில் திரள்கூட்டத்தாரைவிட மேல் வரிசையில் வைக்கின்றோம்.

153-ஆம் பக்கத்தினுடைய முதலாம் பத்தியில், இந்த மூன்று வகுப்பாருடைய உயிர்த்தெழுதலின் கால வரிசையினைக் குறித்து விவரித்திருக்கின்றோம்; மேலும் சிறுமந்தையினருக்கடுத்து முற்பிதாக்கள் உயிர்த்தெழுதலில் பூரணப்படுத்தப்படுவார்கள் எனும் கருத்தினை - அதாவது இவர்கள் பொதுவான உயிர்த்தெழுதலில் முதலாவது பங்கடைவார்கள் எனும் கருத்தினை நாங்கள் முன்வைத்திருக்கின்றோம். சிறுமந்தையினர் மாத்திரமே முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள் என்பதை நினைவில் கொள்வோமாக. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (வெளிப்படுத்தல் 20:6). எந்த உறுதியான வேதவாக்கிய ஆதரவு இல்லாமல், முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் 1914-ஆம் வருஷத்தில் அல்லது விரைவில் சம்பவிக்கும் என்பது எங்களுடைய எதிர்ப்பார்ப்பாய் இருக்கின்றது; திரள்கூட்டத்தார் நிறைவு பெற்றிருக்கமாட்டார்கள் என்று நாங்கள் புரிந்துகொள்கின்றோம் - ஏனெனில் இவர்களில் சிலர் புறஜாதியாருடைய காலங்களின் நிறைவினைத் தொடர்ந்து வரும் மகா உபத்திரவ காலத்தின் மற்றும் ஒழுங்கின்மையினுடைய காலத்தின் ஊடே கடந்துசெல்வார்கள்.

இந்தக் கருத்துகளை வைத்துக்கொண்டு, மேற்கூறப்பட்டுள்ள பத்திகள் கவனமாய் ஆராயப்படுமானால், அனைவருக்கும் காரியம் தெளிவாகும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

---

R4666 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சில சுவாரசியமான கேள்விகள்

## திரள்கூட்டத்தார் அல்லது முற்பிதாக்கள்

கேள்வி:- இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள திரள்கூட்டத்தாருக்கு முன்னதாக முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் இடம்பெறுமா?

பதில்:- சமீபத்தில் நாம் வாட்ச் டவர் பத்திரிக்கையில் கலந்தாய்வுப் பண்ணிக்கொண்டிருப் பவைகளின் வெளிச்சத்தில் பார்க்கையில், கிறிஸ்துவினுடைய புண்ணியமானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் சபையின் சார்பாக - சபையாகுவதற்கு முயலும் அனைவரின் சார்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பது நிச்சயமே; பலிசெலுத்துபவர்களாகிட வேண்டும் என்று வாஞ்சிப்பவர்களுக்கும், மேலும் தேவனுக்குப் பிரியமான பலியைச்செலுத்துவதற்காகத் தங்களை அர்ப்பணம்பண்ணுகிறவர்களுக்கும், இப்படியாக ஆவிக்குரிய வகுப்பாரில் அங்கத்தினர்களாகிடவும், கிறிஸ்துவோடு உடன் சுதந்தரர்களாகிடவும் நாடுபவர்களுக்கும் - அப்புண்ணியமானது தரிப்பிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இது "திரள் கூட்டத்தாருக்கும்," "சிறுமந்தைக்கும்" சேர்ந்தே பொருந்தும். இது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் பொருந்தும்; ஏனெனில் கிறிஸ்துவினுடைய புண்ணியமானது இவர்களது பூமிக்குரிய பலியின் மீது சாற்றப்பட்டால் தவிர, மற்றபடி இவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட முடியாது.

ஆகையால் கிறிஸ்துவினுடைய மரணத்தின் புண்ணியமானது இஸ்ரயேல் மற்றும் உலகத்திற்குரிய புது உடன்படிக்கையின் ஏற்பாடுகளின்கீழ், முற்பிதாக்கள் அல்லது இஸ்ரயேலர்கள் சார்பாகச் செயல்படுத்தப்படுவதற்கு முன்னதாக, ஆவிக்குரிய நிலையினை அடையும் வாய்ப்பினைக் கொடுக்கும் நோக்கத்திற்காக அப்புண்ணியமானது இப்பொழுது யார் மீதெல்லாம் சாற்றப்பட்டுள்ளதோ/ தரிப்பிக்கப்பட்டுள்ளதோ, அவர்கள் தொடர்புடைய விஷயத்தில் அது விடுவிக்கப்பட வேண்டும். இது முற்பிதாக்கள் உயிர்த்தெழுவதற்கு முன்னதாக, "திரள் கூட்டம்" வகுப்பார் உயிர்த்தெழுப்பப்பட வேண்டும் எனும் கருத்தினை நிரூபிக்கின்றது.

---

R4867 & R4579 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சுவாரசியமான கேள்விகள்

## முற்பிதாக்கள் பிராகாரத்தில் அடையாளம் காட்டப்படவில்லை

கேள்வி:- முற்பிதாக்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் பிராகாரத்தில் அடையாளம் காட்டப்பட்டிருக் கின்றார்களா?

பதில்:- இவர்களுடைய நாட்களில் நிஜமான ஆசாரியன் வரவில்லை; நிஜமான ஆசரிப்புக்கூடாரமும், பிராகாரமும் அப்போது ஏற்படுத்தப்படவில்லை. ஆகையால், இதில் முற்பிதாக்களினால் இடம்பெற முடியாது. எனினும் இவர்களது நடக்கையில் வெளியரங்கமாக்கப்பட்ட இவர்களது இருதயங்களின்படி

பார்த்தால், இவர்கள் விசுவாச வீட்டாரின் அங்கத்தினர்களாகிட வேண்டும்தான். எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இறுதியில் நிஜமான பிராகார நிலைமையாகிய, அதாவது நிஜமான லேவியர்களாகிய திரள்கூட்டத்தாரோடுகூட மற்றும் திரள்கூட்டத்தாரில் ஒரு பாகத்தினர் என முற்பிதாக்களுக்கு இடமளிக்கப்படும்.

---

R1351 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## வெற்றியின் பாடல்
### ஏசாயா 26:1-15

"சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்" (ஏசாயா 26:2). வெளிப்படுத்தல் 21:12-ஆம் வசனத்தில் பட்டணத்தின் பன்னிரண்டு வாசல்களில், இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்று நாம் அறிந்துகொள்கின்றோம். இது தேவனுடைய இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகம் தொடர்பாக நாம் கற்றிருக்கின்றவைகளுக்கு இசைவாகவே இருக்கின்றது; யூத யுகத்தின்போது இஸ்ரயேலின் பல்வேறு கோத்திரங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட முற்பிதாக்கள், பூமியில் உள்ள பரலோக இராஜ்யத்தின் கண்ணுக்குப் புலப்படும் பிரதிநிதிகளாகக் காணப்படுவார்கள்; இன்னுமாக இவர்கள் வாயிலாகவே ஜாதிகள் இராஜ்யத்தின் ஆசீர்வாதத்திற்குள் கடந்துவர முடியும்.

---

R612 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்?

ஒருவேளை நன்றியற்ற இருதயமுள்ள மனுஷர், இவ்வளவு அன்பான தயவுகளைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, தேவதூதருடைய ஸ்தானம் குறித்துப் பொறாமைகொள்ள மாட்டார்களா என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? இல்லை! ஒரு கணம்கூட இல்லை. கிறிஸ்துமஸ் பண்டிகையினுடைய காலைவேளையில் தாயினுடைய அன்பிற்கான விசேஷித்த சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டபோது, தாய்க்கு ஒரே பிள்ளையாகக் காணப்பட்ட பிள்ளையின் நன்றியுணர்வின் வார்த்தைகளை நாம் நினைப்பூட்ட விரும்புகின்றோம். அப்பிள்ளையானவன் குழந்தைகளுக்கே உரிய மகிழ்ச்சியுடன் தனது பரிசுகளைப் பார்வையிட்டு, "அம்மா இவைகள் அனைத்தையும், ஒரு சிறு பையனாகிய எனக்காக நீங்கள் ஆயத்தம் பண்ணினீர்களா" என்று கூறுவான். இப்படியே பரிபூரணமான மனுஷருடைய இருதயங்களின் நன்றியுணர்வும் காணப்படும். மனுஷர்கள் இப்பொழுது காணப்படுவதுபோன்று, அப்போது ஆவலைத்தூண்டும் (புதுப்புது) மாற்றத்திற்கு அல்லது அதிக ரகங்கள்/வகைகள் காணப்பட வேண்டுமென அமைதியற்று, பேராவலான, தீய ஆசைகளைப் பெற்றிருப்பதில்லை. இல்லை! "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" என்பதை அவர்கள் கற்றிருப்பார்கள் மற்றும் இது அவர்களுக்கு நிரூபிக்கப்பட்டிருக்கும் (1 தீமோத்தேயு 6:6). புதிதான ஏதோ ஒன்றிற்கான இந்த அமைதியற்ற ஆசையானது இப்பொழுது காணப்படுகின்றது; இது இயல்பான ஒன்றல்ல, மாறாக

நம்முடைய அபூரணம் மற்றும் நம்முடைய தற்போதைய திருப்திகரமற்ற நிலைமையின் காரணமாய் உள்ள, இயல்பிற்கு மாறான ஒரு மனநிலையே ஆகும். புதிதான ஏதோ ஒன்றிற்காக அமைதியற்று ஆசைப்படுவது என்பது தெய்வ இயல்பு அல்ல. பெரும்பான்மையான காரியங்கள் தேவனுக்குப் பழையவைகளாகவே இருக்கின்றன; மேலும் பூரணத்தை அடைந்துள்ள அந்தப் பழையவைகளில் அவர் மகிழ்ச்சி கொள்கின்றார். இப்படியாகவே மனுஷன் தேவனுடைய சாயலிற்குச் சீர்ப்பொருத்தப்படும்போது காணப்படுவான்.

தேவனுக்கு மிகவும் உண்மையுள்ளவர்களாகவும், மனசாட்சியின் நிமித்தமாக அதிகம் பாடுபட்டவர்களாகவும் காணப்படும் ஆபிரகாமும், தீர்க்கத்தரிசிகளும் மற்றும் கடந்த காலங்களிலுள்ள மற்றவர்களும், தாங்கள் பட்ட பாடுகளில் பகுதிகூட அனுபவிக்காத, ஆனாலும் மிக அதிகமாய் உயர்த்தப்பட்டவர்களாகிய சிலரைப் பெற்றுள்ள சுவிசேஷ யுக சபைமீது பொறாமை அடைய உரிமைப் பெற்றிருப்பார்கள் அல்லவா? என்று சிலர் கேட்கலாம். இல்லவே இல்லை! தேவன் தம்முடையவர்களுக்கு என்னசெய்ய விரும்புகின்றாரோ, அதைச் செய்வதற்குரிய உரிமையினை உடையவராக இருக்கின்றார் என்பதை முற்பிதாக்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள்; மேலும், ஆதாம் பெற்றிருந்த தேவ சாயலில் தாங்கள் விழிக்கையில் திருப்தியடைந்திருப்பார்கள் (சங்கீதம் 17:15; 36:8; 63:5; 104:13; எரேமியா 31:12-14). பரிபூரண மனுஷனானவன், அவனிடமிருந்து ஞானமாய் மறைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய மகிமையைக்குறித்து அறிந்திருக்கமாட்டான் அல்லது புரிந்துகொள்ளமாட்டான்; மேலும் மனித தளத்தில் தன்னைச் சுற்றியுள்ள மகிமையிலேயே அவன் மிகவும் மூழ்கிப்போனவனாகவும், அளவுகடந்த ஆனந்தத்தில் இருப்பவனாகவும் காணப்படுவான்; இதனால் கண்களால் பார்க்கப்படாததும், வெளிப்படுத்தப்படாததுமானவைகள்மீது ஆசைகள் ஏதும் இல்லாமல் இருப்பான்.

---

R2279 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## யோவான்ஸ்நானனும், அவரைக் கொலைசெய்தவர்களும்

யோவான்ஸ்நானன், எதிர்காலத்தில் வரும் பரலோக இராஜ்ய வகுப்பாரில், மணவாட்டியின் அங்கத்தினர்களில் காணப்படுவதில்லை; ஆனால் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கத்தரிசிகள் அனைவரின் மத்தியிலும், இவர் பிரதானமானவர்களில் ஒருவராகக் காணப்படுவார்; இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய பாகத்தின் அங்கத்தினனாகப் பங்கெடுக்கும் சிலாக்கியம் அடைவார்; மேலும் பூமியெங்கும் காணப்படும் பிரபுக்களில் ஒருவராகக் காணப்படுவார். மேலும் இராஜ்யத்தின் ஓர் ஊழியக்காரனாக இவர் மிகவும் கனப்படுத்தப்படுவார், ஆசீர்வதிக்கப்படுவார் மற்றும் தேவனுடைய கிருபையினால் இவர் அழைக்கப்பட்ட ஸ்தானத்தில் பயன்படுத்தப்படுவார். மேலும் இப்படி இராஜ்ய வகுப்பாரின் ஊழியக்காரர்களாகக் காணப்படும் முற்பிதாக்கள், சுவிசேஷ யுகத்தில் ஜெயங்கொண்டவர் களைக்காட்டிலும் குறைவாய் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவதின் நிமித்தமாக, சபையைவிட வேறுபட்ட விதத்தில் கனப்படுத்தப்பட்டார்கள் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நாங்கள் இங்குக் குறிப்பிடுகின்றோம்; ஒருவேளை அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கவில்லையெனில், அவர்கள் கனப்படுத்தப்படவே மாட்டார்கள். ஜெயங்கொள்பவர்கள் மாத்திரமே இராஜ்யத்தின் வேலையில் எந்த ஒரு பங்கையாகிலும் அடைய முடியும்; மேலும் அந்த வேலையில் எந்த ஒரு பங்கையாகிலும் அடைவது என்பது கனமுள்ளதாகவும், வாஞ்சிக்கப்பட வேண்டியதாகவும் காணப்படும். தேவன் இரண்டு வகுப்பாரைப்

பெற்றுக்கொள்ள விரும்பினார்; ஆகையால் அவரது திட்டத்தில், இரண்டு வகுப்பாரை அழைத்தார்; இவ்விரு வகுப்பாரும் கனமுள்ளவர்களாகவும், கனமுள்ள ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர் - ஒன்று பூமிக்குரிய தளத்திற்கு, மற்றொன்று ஆவிக்குரிய தளத்திற்கு என்று அழைக்கப்பட்டுள்ளனர். இவ்விரு வகுப்பாரிலும், எந்த ஒரு வகுப்பாரும் அழைக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் காணப்படவில்லை; கர்த்தரால் அழைக்கப்படுவதும், அவரது ஊழியத்தில் எந்த ஒரு பாகத்திலாகிலும் அவரால் பயன்படுத்தப்படுவதும் கனமுள்ள காரியமாகும்; இப்படியாகப் பயன்படுத்தப்படும் அனைவரும் அவர்களுக்கேயுரிய தளத்தில் பூரணர்களாகக் காணப்படுவார்கள்; மேலும் அவரவருக்கான நிலைமையில் முழுமையாய்த் திருப்தி உடையவர்களாகவும் இருப்பார்கள்; அதாவது மீன் தண்ணீருக்குள் காணப்படுவதிலும், பறவைகள் ஆகாயத்தில் காணப்படுவதிலும் திருப்தியாய் இருப்பது போன்றதாகும்.

---

R5761 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள்

## யுகங்களுக்கிடையே அர்ப்பணம் செய்பவர்கள்

இந்தச் சுவிசேஷ யுகத்தின் கதவு மூடப்படும்போது, ஆவிக்குரிய சுபாவத்திற்குப் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் இருக்காது என்பது நமது யோசனையாக இருக்கின்றது. கதவு மூடப்பட்ட பின்னர் மற்றும் திரும்பக்கொடுத்தலின் வேலை துவங்குவதற்கு முன்பு, அர்ப்பணிப்பதன் மூலமாக தேவனிடத்தில் வருகிற யார் ஒருவரும் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்; ஆனால் ஆவிக்குரிய ஜீவியின் தளத்திற்கு அல்ல, மாறாக பூமிக்குரிய தளத்திற்கேயாகும். இப்படிப்பட்டவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முற்பிதாக்கள் கடந்துவரும் அதே நிலைக்கு வருவார்கள். முற்பிதாக்கள் அர்ப்பணம்பண்ணினபொழுது, எந்த ஓர் அழைப்பும் இன்னும் திறக்கப்படாமல் இருந்தது - அதாவது பரம அழைப்பும் திறக்கப்பட்டிருக்கவில்லை; திரும்பப்பெறுதலின் வாய்ப்புகளும் திறக்கப்படவில்லை. ***தங்களது அர்ப்பணம் எந்த ஆசீர்வாதத்தைத் தங்களுக்குக் கொண்டுவரும் என்பதை அறியாமலேயே, தங்களை தேவனிடம் ஒப்புக்கொடுத்தார்கள்***; எதிர்கால வாழ்க்கையில், மீதமுள்ள உலகத்தாரைவிட "மேன்மையானதொரு உயிர்த்தெழுதலை" பெறுவார்கள் என்று மாத்திரம் அவர்களுக்குக் கூறப்பட்டிருந்தது.

மேலும் (கதவு மூடப்பட்ட பின்னர்) கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம் பண்ணுகிறவர்களாகவும், அவர் வழியில் நடப்பதற்கென எல்லாவற்றையும் விட்டுவிடுபவர்களாகவும், செய்த அர்ப்பணிப்பிற்கு உண்மையுடனும், நேர்மையுடனும் ஜீவிக்கின்றவர்களாகவும் காணப்படுபவர்கள் - சுவிசேஷ யுகத்திற்கு முன்பு வாழ்ந்த இவர்களைப்போலவே உள்ள முற்பிதாக்கள் வகுப்பாரென எண்ணப்படும் சிலாக்கியம் பெறக்கூடும் என்பது எங்களது யோசனையாக இருக்கின்றது. சுவிசேஷ யுகம் முடிவடைந்த பிறகும், ஆயிர வருஷ யுகம் முழுமையாய் ஆரம்பிப்பதற்கு முன்பும் அர்ப்பணம் செய்கிறவர்களைத் தேவன் ஏற்க மறுப்பார் என்று சொல்வதற்கு ஏதுவான காரணங்கள் எதுவும் எங்களிடத்தில் இல்லை.

---

R3461 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தேவதூதரைப் போலிருப்பார்கள்

## அங்கு நாம் ஒருவரையொருவர் அறிந்துகொள்வோமா?

எதிர்கால ஜீவியத்தில் ஒருவரையொருவர் நாம் அறிந்தவர்களாய் இருப்போமா? பரலோக வகுப்பாருக்கும், பூமிக்குரிய வகுப்பாருக்கும் இடையில் தொடர்பு பரிமாற்றம் இருக்குமா? என்ற கேள்விகள் அடிக்கடி நம்மிடம் கேட்கப்படுகின்றன.

தற்காலத்திலுள்ள பழக்கம் அடுத்த ஜீவகாலத்திலும் நீடிக்கும், புத்துயிர் பெரும் மற்றும் அதிகரிக்கும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். ஆவிக்குரிய ஜீவத்தளத்தை அடைபவர்களாகிய மணவாட்டி எனும் ஜெயங்கொள்ளும் வகுப்பார் மற்றும் கன்னிகைகளாக, அவளைப் பின்தொடரும் தோழிகள், வேதவாக்கியங்களில் "திரள் கூட்டத்தார்" என்று அழைக்கப்படும் வகுப்பார் அனைவரும் ஆவிக்குரிய தளத்தில் காணப்படுவதினால், அவர்கள் ஒருவரையொருவர் பார்க்க முடிபவர்களாகவும், ஒருவரையொருவர் அறிந்தவர்களாகவும் இருப்பார்கள்; காரணம் அவர்கள் அனைவரும் ஆவிக்குரிய ஜீவிகள் ஆவார்கள். உண்மைதான் மணவாட்டி வகுப்பார், அவளது கர்த்தராகிய இயேசுவோடும், பிதாவோடும் திவ்விய தளத்தில் காணப்படுவார்கள்; மேலும் திரள்கூட்டத்தார் தேவதூதர்களைப்போன்று ஆவியின் ஜீவிகளுக்குரிய கீழ்த்தளத்தில் காணப்படுவார்கள். அனைத்து ஆவிக்குரிய ஜீவிகளினாலும் ஒருவரையொருவர் பார்க்க முடியும், அறிய முடியும் மற்றும் உரையாட முடியும்; திவ்விய தளத்தில் இருப்பவர்கள் வரிசையிலும், ஸ்தானத்திலும் மாத்திரம் மேம்பட்டவர்களாய் இராமல், அவர்கள் தன்னில்தான் ஜீவன் உடையவர்களாக, அழியாமையை உடையவர்களாகக் காணப்படுவார்கள்; ஆனால் மற்றவர்களோ தொடர்ச்சியாக வழங்கப்படும் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வார்கள்.

மனுக்குலத்தின் உலகத்தார் இப்பொழுதுபோல, அப்பொழுதும் ஒருவரையொருவர் அறிந்துகொள்வார்கள் - சிலரை முன்னமே அறிந்திருந்ததன் காரணமாயும், சிலரை அறிமுகம் பண்ணிவைக்கப்பட்டதன் காரணமாயும் அறிந்துகொள்வார்கள். பரிபூரண மனிதர்களாக வந்து காணப்படும் முற்பிதாக்களில் யார் ஒருவரையும், உலகத்திலுள்ள யார் ஒருவரும் அறியமாட்டார்கள்; ஆகையால் முற்பிதாக்களையும், அவர்களது அதிகாரத்தையும் பிரகடனப்படுத்தும் தெய்வீகமான அற்புதங்களின் சாட்சியம் மூலமாக அல்லது வேறு ஏதேனும் வழிவகை மூலமாக, முற்பிதாக்கள் பற்றி ஏதோ ஒருவகையில் அறிமுகம் செய்யப்பட வேண்டும். உலகத்தார் ஒருவருக்கொருவர் எப்படி அறிமுகம் செய்துகொள்வார்கள் என்பதை எளிதில் கற்பனைபண்ணிப் பார்க்கலாம். அதாவது இன்றைய காலங்களில் மனிதர்கள் மத்தியில் அறிமுகம் செய்யப்படுதல் போன்றேயாகும். இதுபோன்ற அறிமுகங்கள் சந்தேகத்திற்கிடமின்றி திரைக்கப்பால் காணப்படும் மகிமையடைந்த பரிசுத்தவான்கள் மத்தியிலும் அவசியப்படும்; ஏனெனில் அவர்களில் பெரும்பாலானோர் கர்த்தரையும், அப்போஸ்தலர்களையும், ஒருவர் இன்னொருவரையும் பார்த்ததே இல்லை.

## ஆவிக்குரிய ஜீவிகள் மற்றும் மனுஷர்களுக்கிடையே தொடர்பு பரிமாற்றங்கள்

இப்பொழுது கடைசி அம்சத்திற்கு வருகின்றோம். ஆயிர வருஷ யுகம் முழுவதிலும் மாத்திரமல்லாமல், அதற்குப் பின்னரும் பரலோக மற்றும் பூலோக ஜீவிகளுக்கிடையே தொடர்பு பரிமாற்றங்கள் சந்தேகத்திற்கிடமின்றி காணப்படும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். எங்களுடைய

புரிந்துகொள்ளுதலின்படி ஆயிர வருஷ காலங்களின்போது, அதாவது தேவனுடைய பிரியமான குமாரன் இராஜ்யத்தைக் கையளிப்பதற்கு முன்புவரை, பிதாவிற்கும், பரலோகத் தூதர்களுக்கும் மனுக்குலத்தோடு எந்தச் சம்பந்தமும் இருக்காது. ஆனால் இராஜ்ய வகுப்பாராகிய சபை மற்றும் அதன் தலையாகிய இயேசுவுக்கும், இவர்களது மேற்பார்வை மற்றும் சீர்ப்பொருத்தும் செல்வாக்குகளின்கீழ்க் காணப்படும் மனுக்குலத்தின் உலகத்திற்கும் இடையில் தொடர்பு பரிமாற்றம் காணப்படும். பூர்வ காலங்களைத் திரும்பிப்பார்க்கையில், ஆவிக்குரிய ஜீவன்கள் தொடர்புகொள்ளும் நோக்கத்திற்காக மனித உருவங்களை எடுப்பதன் மூலம், தேவன் ஆபிரகாமோடும், அவரது பல்வேறு மாம்சீக சந்ததியினரோடும் தொடர்பு கொண்டிருந்திருக்கின்றார். எனினும் இப்படி உருவம் எடுத்து தோன்றுவதை எதிர்காலத்தில் நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது, ஏனெனில் தெய்வீக ஏற்பாட்டில் நாம் வேறொரு ஏற்பாட்டினைப் பார்க்கின்றோம்.

இந்த ஒரு நோக்கத்திற்காகவே முற்பிதாக்கள் என்பவர்கள் ஒரு வகுப்பாராக முன்கூட்டியே ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளார்கள் என்று நாம் காண்கின்றோம்; மனித பரிபூரணம் அருளப்படப்போகிற இவர்கள், ஆவிக்குரிய இராஜ்யத்திற்கும், மனுக்குலத்தின் உலகத்திற்கும் இடையில் மத்தியஸ்தம் பண்ணும் நடுவர்களாகச் செயல்படுவார்கள். எழுதியிருக்கிறபடி: "சீயோனிலிருந்து திருச்சட்டம் வெளிப்படும்; எருசலேமிலிருந்து ஆண்டவரின் வாக்கு புறப்படும்" (மீகா 4:2; திருவிவிலியம்). ஆவிக்குரிய இராஜ்யத்திலிருந்து, அதன் பிரதிநிதிகளாகிய பூமிக்குரிய பிரபுக்களுக்குப் போதனைகள் கடந்துவரும்; மேலும் அந்தப் பிரபுக்கள் மூலம் பூமியின் குடிகள் அனைவருக்கும் காரியங்கள் தெரிவிக்கப்படும்; இவர்கள் ஒவ்வொரு சட்டங்களை நிறுவுவதற்கும், நன்மை செய்கிறவர்களுக்குப் பலன் அளிப்பதற்கும், கீழ்ப்படிய தவறுகிறவர்கள் யாவரையும் தண்டிக்கிறதற்கும், இராஜ்யத்தினுடைய நாமத்தில் முழு வல்லமையும், அதிகாரமும் உடையவர்களாய்க் காணப்படுவார்கள்.

ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனப்பூர்வமாய்ப் பொல்லாங்கு செய்பவர்கள், இரண்டாம் மரணத்தில் சங்கரிக்கப்படுவார்கள்; மனுக்குலத்தின் உலகத்தார் தேவதூதர்களைப்போன்றிருப்பார்கள்; நித்திய ஜீவனை அடைந்தவர்களாகவும், பாலின வேற்றுமை இல்லாமலும் காணப்படுவார்கள். ஆயிர வருஷ காலத்தின்போது முற்பிதாக்கள் காணப்பட்டதுபோலவே, மனுக்குலம் பரிபூரண மனிதர்களாகக் காணப்படுவார்கள். கிறிஸ்துவின் இராஜ்யமானது பிதாவினிடத்தில் கையளிக்கப்படும்போது, முதலாம் கீழ்ப்படியாமை சம்பவித்து, அதற்கான தண்டனை மனுஷர் மீது வருவதற்கு முன்பு இருந்தது போன்ற தொடர்பு பரிமாற்றமானது, பரிபூரண மனுஷர்கள் மற்றும் பரலோக வாசிகளுக்கிடையே ஏற்படும். ஏதேனின் நாட்களில் என்ன வகையான தொடர்பு பரிமாற்றம் காணப்பட்டது என்று நமக்கு மிகத் துல்லியமாகத் தெரியாதுதான், எனினும் அது போதுமானதாகக் காணப்பட்டது; அப்படிப்பட்ட தொடர்பு பரிமாற்றமே எதிர்காலத்தில் பரிபூரணமான தேவனுக்கும், அவரது பூமிக்குரிய சாயலான பரிபூரண மனிதனுக்கும் இடையில் காணப்படும் என்பதில் நாம் நிச்சயம்கொள்ளலாம் - இதுபோன்ற தொடர்பு பரிமாற்றமே, ஆயிர வருஷ காலங்களின்போது மகிமையடைந்த சபைக்கும், அதன் பூமிக்குரிய பிரதிநிதிகளாகிய முற்பிதாக்களுக்கும் இடையே காணப்படும்.

R5199 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# வானத்தின் வாசல்
## ஆதியாகமம் 28:10-22

### யாக்கோபை நான் சிநேகித்தேன்

இது யாக்கோபுடன் தேவன் கொண்டிருந்த தொடர்பைக்குறித்த வேதவாக்கியங்களின் அறிக்கையாக இருக்கிறது. அவர் தனது தைரியத்தை, தனது விசுவாசத்தை, தனது பக்தியைக் காண்பித்திருந்தார். தேவன் அவருக்குப் பலனளிக்கவிருந்தார். இந்தச் சம்பவத்தினுடைய தருணத்தின்போது, அவருக்கு உற்சாகமூட்டுதல் அவசியமாக இருந்ததால், தேவன் அவருக்கு ஒரு அழகான கருத்துடைய சொப்பனத்தைக் கொடுத்தார். "இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதன் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்."

ஏணியின் மறுமுனையில், யாக்கோபு தன் மனதில் மகிமையின் தேவனைக் கண்டு, அவர் பேசக்கேட்டார். அந்த வார்த்தைகள் மிகவும் அக்கறையுடன்கூடியதாகவும், உற்சாகம் ஊட்டுவதாகவும் இருந்தன. தகப்பனாரின் ஆசீர்வாதத்தைத் தேவன் யாக்கோபிற்கு உறுதிசெய்தது மாத்திரமல்ல, ஆபிரகாமிற்குக் கொடுக்கப்பட்ட மாபெரும் வாக்குத்தத்தத்திற்குச் சட்டபூர்வமான வாரிசாகவும் அவரை அங்கீகரித்தார். இந்த வாக்குத்தத்தமானது யூதர், கிறிஸ்தவர் மற்றும் மனுக்குலத்தார் யாவருக்குமுரிய அனைத்து நம்பிக்கைகளுக்கும் அடிப்படையாக இருக்கின்றது.

தேவனுடைய செய்தியாவது: "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும் நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும் தெற்கேயும் பரம்புவாய் உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன் நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை."

யாக்கோபிற்குக் கொடுக்கப்பட்ட இந்த வார்த்தைகள் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டவைகள் போலவே இருந்தன. மேலும், ஈசாக்குக்கும் உறுதிசெய்யப்பட்டன. இப்பொழுது யாக்கோபுக்கும் உறுதிபண்ணப்பட்டது. அதுமுதல் அவர் தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள்ளாக இருந்தார். அவரது மேலான நன்மைக்கேதுவாய் அவரது பிரயாசங்கள் அனைத்தும் பலன்கொடுக்கத்தக்கதாக, அவர் அறிந்திருந்ததைக்காட்டிலும் அவரது காரியங்கள் அனைத்தும் தேவனால் மேற்பார்வையிடப்பட்டது.

### யாக்கோபு ஒரு யூதனுமில்லை, ஒரு கிறிஸ்தவனுமில்லை

யாக்கோபு ஒரு கிறிஸ்தவர் அல்ல. கர்த்தருடைய கிருபை இந்தச் சுவிசேஷ யுகத்தில் சபைக்குக் கொடுக்கப்பட்டதுபோல, யாக்கோபிற்கும் கொடுக்கப்பட்டதாக நாம் ஒருகணம்கூட நினைக்கக்கூடாது. "பரம அழைப்பில்" பங்குகொள்ளும்படிக்கு அவர் அழைக்கப்படவில்லை. அவருக்கு உயிர்த்தெழுதலிலோ அல்லது வேறு எந்த வகையிலோ பரலோக சுபாவ-மாற்றத்திற்கு வாக்குத்தத்தம் பண்ணப்படவில்லை. ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டதுபோலவே, அவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் அனைத்தும் பூமிக்குரியவைகளாகும்.

யாக்கோபு ஒரு யூதனுமல்ல. யூதர்கள் அதுவரை உண்டாகவில்லை. பிற்காலங்களில் இஸ்ரயேல் என்றும், அதன்பிறகு யூதர்கள் என்றும் அழைக்கப்பட்ட ஜனங்கள் யாக்கோபின் பிள்ளைகளே ஆவார்கள். எனினும் அவர்கள் இன்னும் பிறவாதிருந்தார்கள். யாக்கோபின் பிள்ளைகளாகக் காணப்பட்டதினால் மாத்திரம் இல்லாமல், மோசே மூலம் மற்றும் சீனாயில் வைத்துக்கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் மூலம் தேவனுடன் ஓர் உடன்படிக்கையின் உறவுக்குள் கொண்டுவரப்பட்டதன் காரணமாகவும், அவர்கள் விசேஷித்த ஜனங்களானார்கள்.

இப்படியாக முற்பிதாக்கள், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ்க் காணப்படவில்லை என்றும், சுவிசேஷ யுகத்தினுடைய ஏற்பாட்டின்கீழ் உள்ள வகுப்பாராய்க் காணப்படவில்லை என்றும் நாம் பார்க்கின்றோம். விசேஷமாக இவர்களுக்கு (இன்னுமாக யூத யுகத்தில் வாழ்ந்த சில தீர்க்கத்தரிசிகளுக்கும், பாத்திரர்களுக்கும்) கானான் தேசம் தொடர்புடையதும் மற்றும் உலகத்தாரை ஆசீர்வதித்தல் தொடர்புடையதுமான சில மாபெரும் வாக்குத்தத்தங்கள் உரியதாயிருந்தன. இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தின் ஆவியினாலான ஜெநிப்பித்தலைப் பெற்ற சபையின் அங்கத்தினர்களாய் இராததால், மேசியாவின் ஆவிக்குரிய இராஜ்யத்தில் ஒரு பங்கைப்பெற இயலாது. இந்த இராஜ்யம் சீக்கிரத்தில் சாத்தானைக் கட்டி, பாவத்தைத் தூக்கி எறிந்து, இருளையும், மூடநம்பிக்கைகளையும் சிதறடித்து, உலகத்தை தேவனை அறிகிற அறிவினால் நிரப்பும். "பரம அழைப்பில்" பங்குபெற முற்பிதாக்கள் அழைக்கப்படவில்லை.

எனினும் ஒரு விசேஷித்த அழைப்பு இவர்களுக்குக் கொடுக்கப்பட்டது அல்லது மற்ற யாருடனும் பண்ணப்படாத வாக்குத்தத்தம் இவர்களுடன் செய்யப்பட்டது. அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படியாக, இந்த முற்பிதாக்களுக்கு உயிர்த்தெழுதலில் மனித பரிபூரணம் கொடுக்கப்படும். இவர்கள் மனுக்குலத்தாரைவிட மேன்மையானவர்களாகக் காணப்பட்டு, மேசியாவின் ஆவிக்குரிய - பரலோக - கண்களுக்குப் புலப்படாத இராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளாகவும், அதிகாரிகளாகவும் அல்லது பிரபுக்களாகவும் இருக்க தகுதியடைந்தவர்களாக இருப்பார்கள்.

இப்படியாக இதுவரையில் பிதாக்களாக அல்லது மூதாதையர்களாக அடையாளங்கண்டு கொள்ளப்பட்ட இவர்கள், பிற்பாடு மேசியாவின் முதல் பிள்ளைகளாக அடையாளங்கண்டுகொள்ளப்படு வார்கள். இவர்களுக்கே முதலாவதாக பரிபூரண பூமிக்குரிய ஜீவனைக் கொடுப்பார். தீர்க்கத்தரிசனம் இப்படியாகக் கூறுகிறது: "உமது (மேசியாவின்) பிதாக்களுக்குப் பதிலாக உமது (மேசியாவின்) குமாரர் இருப்பார்கள். அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக (அதிகாரிகளாக) வைப்பீர்." (சங்கீதம் 45:16)

வரப்போகிற தமது மகிமையின் இராஜ்யத்தைக் குறித்து இயேசு: "தேவனுடைய இராஜ்யம் பிரத்தியட்சமாக (வெளியரங்கமாக தெரியும்படி) வராது" என்று கூறினார் (லூக்கா 17:20). மேலும் அவர் சீஷர்களிடம்: "இன்னும் கொஞ்சக்காலத்தில் உலகம் என்னைக் காணாது" என்று கூறினார் (யோவான் 14:19). இரண்டாம் வருகையிலும், தமது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையிலும் காணப்படுகிறவைகளைக் குறித்து விவரிக்கும்போது, தம்மை அல்லது அப்போஸ்தலர்களில் யாரையாகிலும் மகிமையின் இராஜ்யத்தில் காண்பார்கள் என்பது பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை. ஆனால் அவர்: "நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கத்தரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களாகக் காண்பீர்கள்" என்று கூறினார். (லூக்கா 13:28, 29)

இயேசுவும், அவரது மணவாட்டி வகுப்பாரும் - ஒவ்வொரு தேசத்திலிருந்தும், சபை பிரிவுகளிலிருந்தும் இந்த யுகத்தில் வந்த பரிசுத்தவான்களும், அப்போஸ்தலர்களும் - இந்த உண்மையான

இராஜ்யமாகவும் இருந்து, உண்மையான மேற்பார்வையையும், அதிகாரத்தையும் பெற்றிருப்பார்கள். வேதவாக்கியங்கள் விவரிப்பதுபோல அவர்கள் காணக்கூடாதவர்களாக இருப்பார்கள். அவர்கள் அனைவரும் முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையால் "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவார்கள்." இனி பூமிக்குரிய ஜீவிகளாக இராமல் ஆவியின் ஜீவிகளாக, தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக, "தெய்வீக சுபாவத்தில் பங்குபெறுகிறவர்களாக" இருப்பார்கள் (2 பேதுரு 1:4). பரிசுத்த பவுல் அடிகளார் கூறுவது போன்று, சபையானது இராஜ்யத்தின் மகிமைக்குள் நுழைவதற்குமுன் உயிர்த்தெழுதலின் மாறுதல் வர வேண்டும். ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்காது." (1 கொரிந்தியர் 15:50)

---

R4018 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

# எஸ்தர் புஸ்தகத்திலுள்ள நிழல்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

எனது யோசனைகளைத் தெரிவிக்க அனுமதியுங்கள்: ***அகாஸ்வேரு*** எனும் பெயரின் அர்த்தம், "இராஜா" ஆகும்; இவர் "சூரியனுக்கு," கிறிஸ்துவுக்கு நிழலாகக் காணப்படுகின்றார்; விருந்துக்கு அழைக்கப்பட்டு, ஆனால் வராமல் காணப்பட்டவர்களுக்கு "***வஸ்தி***" நிழலாகக் காணப்படுகின்றாள்; "சுக்கிரன் கிரகம்" என்று அர்த்தப்படும் ***எஸ்தர்,*** கிறிஸ்துவின் மணவாட்டிக்கு நிழலாகக் காணப்படுகின்றாள் (சுக்கிரன் நமது கிரகங்களிலேயே மிகவும் மகிமையானதாகக் காணப்பட்டு, சூரியனுடைய கதிர்களை அதிகமாய்ப் பிரதிபலிக்கக்கூடிய ஒன்றாகும்); "செவ்வாய் கிரகத்திற்கு அர்ப்பணிப்பு" எனும் அர்த்தங்கொள்ளும் யூதனாகிய ***மொர்தெகாய்,*** முற்பிதாக்களுக்கு நிழலாய் இருக்கின்றார். (செவ்வாய் கிரகம் மற்ற கோள்களைவிட, பூமிக்கு அருகாமையில் உள்ளது என்றும், பூமிக்கும், சூரியனுக்கும் இடையில் காணப்படுகின்றது என்றும் நான் நம்புகின்றேன்). இறுதியாக வேதவாக்கியங்களில் கடைசி அமலேக்கியன் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் ஆகாகியனான ***ஆமான்,*** ஆயிர வருஷ யுகத்தின் முடிவில், முற்பிதாக்களின் கரங்களிலிருந்து வல்லமையை எடுக்க முயற்சிக்கும் வகுப்பாருக்கு நிழலாகக் காணப்படுகின்றார். தயவுகூர்ந்து, எஸ்தர் இராஜாத்தியின் சம்பவத்தைக் கூர்ந்துகவனித்து, இந்த நிழல் எவ்வளவு துல்லியமாய்ப் பொருந்துகின்றது என்று பாருங்கள். ஒருவேளை இந்த நிழலின் அர்த்தத்திற்கான இவ்விளக்கம் சரியாக இருக்குமானால், மொர்தெகாய் எனும் பெயரின் அர்த்தம் உங்களது சமீபகால கருத்திற்கு இசைவான ஒரு காரியமாகக் காணப்படும்; அதாவது ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவிற்குப் பிற்பாடு, முற்பிதாக்கள் பரம கனங்களையும், நிலைகளையும் அடைவார்கள் என்ற உங்களது சமீபகால கருத்திற்கு இசைவாகக் காணப்படும்.

கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதரன்,

Clayton. J. Woodworth.

---

R4436 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## ராகேலிலுள்ள இரண்டு அம்சங்கள்

பென்யமீனை "திரள் கூட்டத்தாருக்கான" நிழலாகக் கருதுவதற்கு இன்னுமொரு காரணம் காணப்படுகின்றது. அது என்னவெனில்: இவரது பெயராகிய பென்யமீன் என்பதின் அர்த்தம் "என் துயரத்தின் மகன்" ஆகும். இவர் துயரத்தின் மற்றும் துக்கத்தின் மத்தியில் பிறந்தார்; இதுபோலவே "திரள் கூட்டத்தாரும்," "மகா உபத்திரவத்தின் வழியாக வருவார்கள்." இவரைப் பிரசவிக்கையில், இவரது தாயார் மரித்துப்போனார்; இதுபோலவே "திரள் கூட்டத்தார்" மறுரூபமடைவதோடு, ஆபிரகாமின் உடன்படிக்கையினுடைய ஆவிக்குரிய அம்சம் கடந்துபோய்விடும். இதே வகுப்பில்தான் முற்பிதாக்களும் அடங்குவார்கள் என்பது எங்களுடைய எண்ணமாக இருக்கின்றது; மேலும் ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி, முற்பிதாக்கள்/இவர்கள் ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவின்போதுள்ள உபத்திரவத்தின்போது ஆவிக்குரிய தளத்தை அடைவார்கள்.

---

R4087 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## சிம்சோனின் ஜீவியத்திலிருந்து பாடங்கள்

சத்தியத்தின் வார்த்தைகளை நிதானமாய்ப் பகுத்துப்பார்க்கக் கற்றுக்கொள்ளாதவர்கள் - அதாவது அந்தந்த யுகங்களுக்கே உரிய வேதவாக்கியங்களைப் பகுத்துப்பார்க்கக் கற்றுக்கொள்ளாதவர்கள், சிம்சோனை தேவனுடைய பரிசுத்தவான்களில் ஒருவராக எண்ணிப்பார்த்து குழப்பமடைகின்றார்கள்; இன்னுமாக சிம்சோனில் இவர்கள் அனுமானித்த பரிசுத்தவான் நிலையை, இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுடைய போதனைகளில் காண முயற்சிப்பார்கள். சுபாவத்தின்படியான எந்த ஒரு மனுஷனும் பெற்றிருப்பதுபோல, சாந்தம், தயவு, பொறுமை, நீடியபொறுமை, சகோதர சிநேகம், அன்பு முதலானவைகளைச் சிம்சோன் சந்தேகத்திற்கிடமின்றி, கொஞ்சம் பெற்றிருக்கவே செய்தார்; ஆனாலும் இவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை - ஆகையால் இவர் வேதவாக்கியங்களில் இயேசுவும், அவரது பின்னடியார்களும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட விதத்தில், தேவனுடைய புத்திரர்களில் ஒருவராக இருப்பதில்லை. இதுவே முற்பிதாக்கள் அனைவருடைய விஷயத்திலும் உண்மையாகக் காணப்படுகின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்தில் நமக்கு முன்பு வைக்கப்பட்டுள்ளது போன்ற எந்த ஒரு நியதிகளும்/அளவுகோல்களும் முற்பிதாக்களுக்கு முன்பாக வைக்கப்படவில்லை. இவர்கள் மனித சுபாவத்திலிருந்து திவ்விய சுபாவத்திற்கு மாறும் பரம அழைப்பிற்கு அழைக்கப்படவில்லை. இவர்கள் கிறிஸ்து இயேசுவில் புதுச்சிருஷ்டிகளென மறுபடியுமாக ஜெநிப்பிக்கப்படவில்லை. ஜெநிப்பிக்கப் படுவதற்குரிய காலம்/வாய்ப்பு முற்பிதாக்களின் காலங்களில் வரவில்லை. பரலோகத்திற்குரிய இடுக்கமான வழியின் முன்னோடியாகிய கிறிஸ்து, இவர்கள் காலத்தில் வரவில்லை. (இவர்களுடைய காலத்தில்) பாவநிவாரணபலி ஏறெடுக்கப்படவில்லை; ஆகையால் (அக்காலத்தில்) யாராலும் பிதாவினிடத்தில் புத்திரர்களாக வரமுடியாது அல்லது அவரது ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவும் முடியாது. அக்காலக்கட்டத்தில் காணப்பட்ட உயர்வான ஸ்தானம், தேவனுடைய பணிவிடைக்காரர்கள் என்று இவர்கள் அழைக்கப்படுவதேயாகும். மோசே அவரது வீட்டில் எங்கும் உண்மையுள்ள பணிவிடைக் காரனாகக் காணப்பட்டார்; சிம்சோனும், மற்றவர்களும் அந்தப் பணிவிடை வீட்டாராவார்கள்.

---

R1907 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## தாவீது மற்றும் யோனத்தான்

தாவீது மற்றும் யோனத்தானுக்கிடையிலுள்ள நட்புறவானது, மகிமையடைந்த சபைக்கும், தேவனுடைய இராஜ்யத்தில் இவர்களுக்கு அடுத்தப்படியாக இருக்கப்போகும் பூமியின் பிரபுக்களுக்கும் இடையில் காணப்படப்போகும் அருமையான பரஸ்பர இணக்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இவர்களுக்கிடையே எந்த ஒரு பூசல்களோ அல்லது போட்டியோ அல்லது பொறாமையோ இருக்கப்போவதில்லை; ஏனெனில் ஒவ்வொருவரும் தேவனுடைய ஆச்சரியமான திட்டத்தில் தங்களுக்குக் கொடுக்கப்படும் கனமுள்ள ஸ்தானத்தில் காணப்படுவதில் மகிழ்ச்சியாய் இருப்பார்கள்; இன்னுமாக ஒருவரையொருவர் தங்களது உயிரைப்போன்று சிநேகிப்பார்கள். ஆபிரகாமின் உடன்படிக்கையில் சுவிசேஷ யுக சபையானது கிருபையின் முதலாம் ஸ்தானத்தைப் பெறுபவர்களாகவும், கனத்தில் அடுத்ததாக முற்பிதாக்கள் இடம்பெறுபவர்களாகவும் இருப்பினும், இப்படி இருப்பதில் இவர்கள் களிகூருவார்கள்; ஏனெனில் தெய்வீக ஞானமும், அன்பும் இப்படியாகத் திட்டமிட்டுள்ளது.

யோனத்தான் வீட்டார் மீது தனது இரக்கத்தை நீக்குவதில்லை என்று யோனத்தானுடன் பண்ணின உடன்படிக்கையினைத் தாவீது நினைவுகூர்ந்து காணப்பட்டதுபோலவே (2 சாமுயேல் 9:1-13), முதலாவது முற்பிதாக்களையும், பிற்பாடு முற்பிதாக்களின் அதிகாரத்திற்குக் கீழே காணப்படப்போகும் பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்குரிய தங்களது உடன்படிக்கையினை, மகிமையடைந்த சபையும் நினைவுகூருவார்கள். சவுல் தாவீதை வேட்டையாட துரத்தினதுபோல, நம்மைத் தீவிரமாய் வேட்டையாட (கெர்சிக்கிற சிங்கம்போல்) சாத்தான் முயற்சித்துக்கொண்டிருக்கையில், நமக்கு மிகவும் உதவிகரமாய் இருந்துள்ள முற்பிதாக்களின் வாழ்க்கையானது என்றென்றும் நினைவில் வைக்கப்படும், அதாவது நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகள் மூலமான முற்பிதாக்களின் அன்பின் ஊழியங்களும், இன்னுமாக தேவபக்தியுள்ள ஜீவியத்திற்கும், குணலட்சணத்திற்கும் அவர்கள் சிறந்த மாதிரிகளாகக் காணப்பட்ட காரியமும், என்றென்றும் நினைவில் வைக்கப்படும். (1 பேதுரு 5:8)

---

R5030 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## இராஜ்யத்தில் சிறியவனாய் இருப்பவன்

"ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனுமில்லை; ஆகிலும், தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (லூக்கா 7:28)

### விசேஷித்த நன்மையானதொன்றை நமக்காக...

இயேசுவினுடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது, ஐந்நூறு சகோதர சகோதரிகள், அவரது அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களானபோது, அவர்கள் பிதாவினால் குமாரர்களென அப்போது ஏற்றுக்கொள்ளப்படவில்லை; பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்புவரையிலும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவுமில்லை. இயேசு தம்முடைய பலியை நிறைவேற்றி, மகா பரிந்துபேசுபவராக, அதாவது

பிதாவிடம் நமக்காகப் பரிந்துபேசத்தக்கதாக, நீதிமானாகிய இயேசு கிறிஸ்து "நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசியாதது வரையிலும்," தேவன் யாரையும் குமாரர்கள் என்று அங்கீகரிக்கவில்லை. இந்தப் புத்திரர் வகுப்பாருக்குள் எப்படி ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கதரிசிகள் யாரும் வருவதில்லையோ, அதுபோலவே இவ்வகுப்பாருக்குள் யோவானும் வருவதில்லை. தேவனுடைய ஏற்பாட்டில், இவர்களது வெகுமதியானது, சபையினின்று வேறுபட்டிருக்கும்; இவர்களுடையது பூமிக்குரிய பலனாய்க் காணப்படும். இவர்கள் மனித பரிபூரணத்திற்கு உயிர்த்தெழுப்பப்படுவார்கள். இவர்கள் இராஜ்யத்தின் மனித தளத்தில் காணப்பட்டு, ஆவிக்குரிய ஜீவிகளாகவும், மனுஷருடைய கண்களுக்குப் புலப்படாதவர்களாகவும் காணப்படப்போகும் மேசியா மற்றும் சபையின் பூமிக்குரிய பிரதிநிதிகளாகக் காணப்படுவார்கள்; இந்த உயர்ப்பண்புள்ளவர்களாகிய முற்பிதாக்கள் வாயிலாக மேசியாவும், சபையும் மனுக்குலத்தினைக் கையாண்டு நடத்துவார்கள்.

கிறிஸ்துவுக்கு முந்தைய காலங்களில் வாழ்ந்தவர்கள் என்று வேதவாக்கியங்களினால் குறிப்பிடப்படும் இந்தப் பிரமாண்டமான பாத்திரங்களை, நாம் சுவிசேஷ யுக சபையைவிட உண்மையில் குறைந்தவர்கள் என்றோ, மட்டமானவர்கள் என்றோ எண்ணிவிடக்கூடாது; மாறாக தேவன் கிறிஸ்துவின் மணவாட்டிகளுக்குப் பரலோகப் பரிபூரணத்தை வாக்களித்தபோது, இந்த முற்காலத்துப் பாத்திரங்களுக்கு அவர் பூமிக்குரிய பரிபூரணத்தை வாக்களித்திருந்தவராய்க் காணப்பட்டார். இவர்கள் மீதமுள்ள மனுக்குலத்தார் போன்று, மேசியாவின் ஆயிர வருஷ ஆளுகையின்போது, படிப்படியாகப் பரிபூரணத்தை அடையத்தக்கதாக, அபூரண நிலையில் எழும்பி வருவதில்லை; மாறாக இவர்கள் பரிபூரண மனித ஜீவிகளென உயிர்த்தெழுந்து வருவார்கள். அதுவே இவர்களது உண்மைக்கான வெகுமதியாய்க் காணப்படும். இந்த முழுக்காரியத்தையும் பரிசுத்த பவுல் அடிகளார் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் விவரித்துள்ளார். அந்த முற்பிதாக்களின் விசுவாசம் மற்றும் வீரம் குறித்து அவர் நமக்குக் கூறுகின்றார்; இன்னுமாக "தேவனுக்குப் பிரியமானவர்களென்ற சாட்சிபெற்றார்கள்" என்றும் கூறுகின்றார். இவர்களை எதிர்காலத்தில் இன்னும் பரீட்சிப்பதற்கான அவசியம் இராது. இவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளனர் எனும் காரியமானது ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டுள்ளது மற்றும் அறிக்கையும் பண்ணப்பட்டுள்ளது.

இதுவுமல்லாமல் தேவனுடைய ஏற்பாட்டில், இராஜ்ய வகுப்பாராகிய கிறிஸ்து மற்றும் சபை முதலாவது நிறைவடையாதது வரையிலும், உலகத்திற்கான பூமிக்குரிய இராஜ்யமும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களும் துவங்கமுடியாது; ஆகையாலே அப்போஸ்தலன்: "இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை (பூமிக்குரியவைகளை) அடையாமல் விசுவாசத்தோடே மரித்தார்கள். அவர்கள் (சபையாகிய) நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" என்று கூறியுள்ளார். சபை மூலமான ஆசீர்வாதங்களானது, ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாருக்கும், பின்னர் இந்த இஸ்ரயேல் வாயிலாகச் சகல ஜாதிகளுக்கும் கடந்துசெல்வதற்கு முன்னதாக, சபை முதலாவது மகிமையடைய வேண்டும்; பூரணமடைவதற்குரிய அவளது உயிர்த்தெழுதலை அடையவேண்டும். (எபிரெயர் 11:38-40)

## மணவாட்டியாக அல்ல, நண்பர்களாக

"மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும்

சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" (யோவான் 3:29) என்று யோவான்ஸ்நானன் கூறினபோது, அவர் சூழ்நிலையினைப் புரிந்தவராக அல்லது தீர்க்கத்தரிசனமாக, இச்சத்தியத்தினைப் பேசியிருந்திருக்க வேண்டும். தேவனுடைய ஏற்பாட்டில் தனக்கு மிகவும் கனமிக்க, ஆசீர்வாதமான ஸ்தானமும், வேலையும் இருக்கின்றது என்று புரிந்துகொண்டார்; தான் மணவாளனும் இல்லை, மணவாட்டி வகுப்பாரில் ஓர் அங்கத்தினனும் இல்லை என்றும் புரிந்துகொண்டார்.

இது அப்போது யோவான் ஏமாற்றமடைந்தார் என்றோ, உயிர்த்தெழுந்து இவரும், மற்ற முற்பிதாக்களும் வருகையில், தங்களைவிட உயர்வான ஒரு தளத்திற்கு, ஒரு மணவாட்டி வகுப்பார் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று அறியும்போது ஏமாற்றம் அடைவார்கள் என்றோ அர்த்தமாகாது. மாறாக இவர்களது ஆசீர்வாதத்தின் பாத்திரம் நிரம்பிக் காணப்படப்போவதினாலும், பரிசுத்த ஆவியினால் ஆவிக்குரிய சுபாவத்திற்கு இவர்கள் ஒருபோதும் ஜெநிப்பிக்கப்படாதபடியாலும், இவர்கள் தங்களைவிட உயர்வானதாய்க் காணப்படும் எந்த ஓர் ஆசீர்வாதத்தையும் புரிந்துகொள்ள இயலாதவர்களாகக் காணப்படுவார்கள். உதாரணத்திற்குத் தண்ணீரில் இருக்கும் மீனானது, காற்றில் பறவை பறப்பதைப் பார்க்கையில், அப்பறவையையும் அதன் பெரிய சுதந்தரத்தையும் கண்டு பொறாமை அடையாது; மாறாக தண்ணீரில், அதாவது அதன் இயல்பான தன்மையில் நன்கு திருப்திகொண்டதாய்க் காணப்படும்; இதுபோலவே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத சுபாவ மனிதர்கள் அனைவரும், அவர்களுக்காகத் தெய்வீக ஏற்பாடு ஒழுங்குப்படுத்தியுள்ள பூமிக்குரிய ஆசீர்வாதங்களின் மதிப்பையே அதிகமாய்ப் புரிந்துகொள்வார்கள்.

---

R808 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## தாவீதின் குமாரனும், ஆண்டவருமானவர்

ஆயிர வருஷ யுகத்தின்போது, கிறிஸ்து மனித இனத்தின் தந்தையாகுவார்; ஏனெனில் ஜீவன் அளிப்பவர் ஒரு தந்தையாவார்; ஆகையால் அவர் சீர்ப்பொருத்தப்படும் மனித சந்ததியாரால் "நித்திய பிதா" என்று அழைக்கப்படுவார்; ஆகையால் மனிதனாகக் காணப்பட்டவர், தாவீதின் குமாரனாக இருந்தவர், தாவீதின் ஆண்டவராக, பிதாவாக, வேராக மாறுகின்றார்; தாவீதுக்குப்போல மற்றவர்களுக்கும் அவர் இப்படியாகவே இருக்கின்றார். இயேசுவும், அவரது உடன்சுதந்தரரும் - அவரது மணவாட்டியும் - அவரது சரீரமும் சேர்ந்து ஆளுகைசெய்கையில், ஆபிரகாம், ஈசாக்கு, தாவீது போன்ற முற்பிதாக்கள் கனம்பொருந்திய ஊழியத்திற்கு நியமிக்கப்படுதல் குறித்த பின்வரும் தீர்க்கத்தரிசனம் இங்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது: "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்" (சங்கீதம் 45:16). முந்தைய காலங்களில் "பிதாக்களாக" இருந்தவர்கள், (அப்போது) கிறிஸ்துவின் பிள்ளைகளாகக் காணப்படப்போகின்றார்கள்; அவரது வேராகக் காணப்படுவதற்குப் பதிலாக, அவரது கிளைகளாகக் காணப்படப்போகின்றார்கள். மனிதனாகிய இயேசுவாகக் காணப்பட்டபோது, தாவீதின் குமாரனாகக் காணப்பட்டவர், தாவீதிற்கு ஜீவன் அளிப்பவராகவும், சீர்ப்பொருந்த பண்ணுபவராகவும் காணப்படுகையில், தாவீதின் பிதாவாகவும், ஆண்டவராகவும் காணப்படுவார்.

---

R4757 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## சுழல்காற்றிலே எடுத்துக்கொள்ளப்பட்டார்

நம்முடைய இனத்தை, அழிக்காமல் ஜீவனோடு தேவனால் தக்கவைத்திடக்கூடும் என்றும், பாவத்தின் காரணமாகவே ஆதாமும், அவரது குடும்பமும் மரிக்க வேண்டியிருந்தது என்றும், மேசியாவினால் அவரது இராஜ்யத்தில் பாவமும், மரணமும் அழிக்கப்பட்டு, மனுக்குலத்தின் மத்தியில் விருப்பமும், கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் மறுபடியுமாக மனித பரிபூரணத்திற்குக் கொண்டுவரப்படுகையில், அவர்கள் மரிக்க வேண்டிய அவசியம் இராது என்றும் போகப்போக வெளிப்படுத்துவதே, ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதற்குரிய நோக்கமாகும். ஏனோக்காகிய ஓர் அபூரணமான மனுஷன் ஐந்தாயிரம் வருஷங்களாகத் தெய்வீக வல்லமையினால் ஜீவனோடு காக்கப்பட்டு வரும் காரியமானது, மனுக்குலத்திற்குச் சான்றாகக் காணப்படும்; இன்னுமாகத் திரும்பக்கொடுத்தலின் வேலைகள் நடைபெற்றுவரும்போது, மனுக்குலம் விசுவாசம் வைப்பதற்கும் உதவியாகக் காணப்படும். ஏனோக்கும் அந்த முற்பிதாக்களில் ஒருவர் ஆவார்; இவர் ஆயிர வருஷ யுகத்தின்போது, பூமியில் காணப்படும் "பிரபுக்களில்" அல்லது அதிகாரிகளில், அதாவது கண்களுக்குப் புலப்படாத (மேசியாவின்) இராஜ்யத்தின் பிரதிநிதிகளில் ஒருவராகக் காணப்படுவார். "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்." (சங்கீதம் 45:16)

---

R3428 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## தீர்க்கதரிசியாகிய எலிசா

### 2 இராஜாக்கள் 2:12-24

எரிகோ செழிப்பான ஒரு பட்டணமாகக் காணப்பட்டது; அதன் இடம் காணப்படும் அமைப்பும் அநுகூலமானதாகவே காணப்பட்டது; ஆனாலும் தண்ணீர் ஆதாரம் மட்டும் மிகவும் குறைவுபட்ட நிலையில் காணப்பட்டது. பட்டணத்திற்குத் தண்ணீர் வழங்கும் நீரூற்றானது உவர் நீராகக் காணப்பட்டது; இதில் காணப்பட்ட சில கனிமங்களானது, இத்தண்ணீர் பாய்ந்த இடங்களில், நிலத்தின் விளைச்சல் முதிர்வதற்கு முன்னதாக உதிர்ந்துபோகப் பண்ணினதால், நிலங்களானது அதன் பலன்களை முதிர்ச்சிக்குள் கொண்டுவர முடியவில்லை. எரிகோ என்ற பெயரின் அர்த்தம் "அவரது சந்திரன்" அல்லது "மாதம்" ஆகும்; இது, சந்திரன் இஸ்ரயேலுக்கு அடையாளமாய் இருப்பதையும், சூரியன் வேதவாக்கியங்களில் சுவிசேஷ யுக சபைக்கு அடையாளமாய் இருப்பதையும் நமக்கு நினைப்பூட்டுகின்றது; இது அநேகமாக, எரிகோவின் ஜனங்கள் மாம்சீக இஸ்ரயேலரை அடையாளப்படுத்துகின்றனர் என்பதையும், இவர்களே பூரணத்திற்குத் திரும்பிகொண்டுவரப்பட்டுள்ள வகுப்பாரை (முற்பிதாக்களை) முதலாவது அடையாளம் கண்டுகொண்டு, பரலோக இராஜ்யமாகிய மகிமையடைந்த சபையின் வழிகாட்டுதல்கீழ் ஆளுகைசெய்யும் அந்தப் பூர்வகாலத்து பாத்திரவான்களை, விடுதலைக்காக நோக்கிப்பார்ப்பார்கள் என்ற உண்மையையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக மாம்சீக இஸ்ரயேலர்கள் கனிக்கொணர முயன்றுகொண்டிருந்தும், அவர்களால் கனிகொணர முடியவில்லை என்று காண்கின்றோம். அந்த ஜனங்கள் உண்மையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப்

பற்றிக்கொண்டுதான் இருந்திருக்கின்றனர்; மேலும் கீழ்ப்படிதல், ஆராதனை, பயபக்தி முதலான கனிகளைக்கொணர முயன்றிருக்கின்றனர்; எனினும் எந்தக் கனிகளையும் அவர்களால் முழுமைக்குக் கொண்டுவர முடியவில்லை, காரணம் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளானது தேவனுடைய பார்வையில் ஒருவனையும் நீதிமானாக்குகிறதில்லை. உவர் நீரினால் அடையாளப்படுத்தப்படும் நியாயப்பிரமாணமானது நீதியானதும், பூரணமானதும், நல்லதுமாகும்; எனினும் அந்த ஜனங்களுக்கு அது ஆசீர்வாதமாகக் காணப்படுவதற்கு அவசியமான ஏதோ ஒன்றில் குறைவுப்பட்டிருந்தது. அந்த ஒன்று என்னவெனில் . . . நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதில் உள்ள கிறிஸ்துவின் வேலையாகும்; இந்த நியாயப்பிரமாணத்தைச் சார்ந்து இருந்தவர்களிடமிருந்துள்ள இதன் சாபத்தை அல்லது ஆக்கினையைக் கிறிஸ்துவின் பணியானது அகற்றிவிடும்.

இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், எரிகோவின் மனுஷர் எலிசாவிடம் வேண்டிக்கொள்ளும் காரியமானது, முற்பிதாக்களிடம் யூதர்கள் வேண்டிக்கொள்ளும் காரியத்தை அடையாளப்படுத்துகின்றது; அதாவது யூத ஜனங்களாகிய தங்கள்மீது ஏன் நீண்டகாலமாகத் தீமை காணப்படுகின்றது என்றும், தாங்கள் கர்த்தருடைய முழுமையான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகத் தங்களது பிரச்சனையை சரிசெய்வதற்கு என்ன செய்யவேண்டும் என்றும் அறியும்படிக்கு யூதர்கள் முற்பிதாக்களிடம் வேண்டிக்கொள்வார்கள். எரிகோ பட்டணத்து ஜனங்களின் வேண்டுதல் கேட்கப்பட்டதுபோன்று, இஸ்ரயேலின் வேண்டுகோளும் கேட்டுக்கொள்ளப்படும்; ஏனெனில் (திரும்பக்கொடுத்தலின் எலிசாவாகிய) முற்பிதாக்கள் உப்புள்ள புதிய மண்பாண்டத்தை எடுத்துக்கொள்வார்கள் - இது (நீங்களே பூமிக்கு உப்பாயிருக்கின்றீர்கள் என்ற) மகிமையடைந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர் மற்றும் கிறிஸ்து தொடர்புடைய புதிய கண்ணோட்டங்களை, புதிய நிபந்தனைகளை, புதிய ஒழுங்கமைப்புகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இஸ்ரயேலுடைய பிரமாணத்தின் மீதான இந்தப் புதிய கட்டமைப்பும், இதன் செயல்பாடும், போதனையும் மற்றும் இதன் உண்மையான முக்கியத்துவம், நிறைவேறுதல் முதலானவைகளின் வெளிப்பாடுகளும், இந்த அறிவையும், சொஸ்தமளிக்கும் ஆசீர்வாதத்தையும் வாஞ்சிப்பவர்களுக்கு விலையேறப்பெற்றதாகக் காணப்படும்; ஆகவே இஸ்ரயேலுக்கு இப்பிரமாணமானது புது அர்த்தத்தை உடையதாகக் காணப்படும்; மேலும், அவர்களுடைய இருதயங்களில் கர்த்தர் அங்கீகரிக்கும் கனிகளைக் கொணரும்; இப்பிரமாணத்துடன் தொடர்புடையவரென மீட்பரை ஏற்றுக்கொண்டு, அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிய நாடுபவர்கள், இந்த நியாயப்பிரமாணத்தின் நீதியை அடைந்தவர்களெனப் பார்க்கப்படுவார்கள்.

இதைத் தொடர்ந்து எலிசா பெத்தேலுக்குப் போகிற வழியில், பிள்ளைகள் வந்து, அவரைப் பார்த்து: "மொட்டைத்தலையா ஏறிப்போ" என்று சொல்லி நிந்தித்தார்கள். "மொட்டைத்தலையா" எனும் வார்த்தையானது அந்தக் காலக்கட்டத்தில் அவதூறான அடைமொழியாகக் காணப்பட்டதெனச் சிலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது; அதுவும் இந்தப் பிள்ளைகள், தண்ணீர்கள் சொஸ்தப்படுத்தப்பட்ட பட்டணத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்; இது நிழலாகக் காணப்படுமானால், இது மாம்சீக இஸ்ரயேல் ஜனங்களின் மத்தியில் சிலர் புதிய சூழ்நிலைகளைப் பாராட்டி போற்றுவார்கள் மற்றும் சிலர் அதை இழிவாய்க் கருதி அசட்டைப்பண்ணுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய்க் காணப்படும். "அப்பொழுது அவன் திரும்பி அவர்களைப் பார்த்து: கர்த்தரின் நாமத்திலே அவர்களைச் சபித்தான்; உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது." (2 இராஜாக்கள் 2:24). சொல்லர்த்தமான சம்பவத்தைப் பொருத்தமட்டில், இது அந்தப் பிள்ளைகளுக்கும், தங்கள் பிள்ளைகளுக்குச் சரியாய்க் கற்பிக்காததன் காரணமாய் அல்லது கற்பிக்கத் தவறினதன்

காரணமாய்த் தங்களது கடமையில் தவறிப்போனவர்களாகிய அப்பிள்ளைகளின் பெற்றோர்களுக்கும், "கர்த்தருடைய பிரதிநிதிகளை மதிப்பதன் மூலம் கர்த்தரை மதிப்பது" தொடர்புடைய பாடத்தைக் கற்பித்துக்கொடுத்ததாய் இருந்தது. ஒருவேளை இச்சம்பவம் தீர்க்கத்தரிசனமான, அடையாளமான விதத்தில் பார்க்கப்பட்டால், இது எதிர்காலத்தில் இராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளின் போதனைகளை அலட்சியம்பண்ணுபவர்கள்மீது அல்லது பரலோக இராஜ்யத்தின் தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதிகளென, இவர்களுடைய ஸ்தானத்திற்கேயுரிய மரியாதையை வழங்கத் தவறுபவர்கள்மீது வரும் நியாயத்தீர்ப்புகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும்.

---

R4757 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# எலியாவுக்குப் பின் எலிசா

### 2 இராஜாக்கள் 4:25-37

## எலிசா நிழலாக இருக்கின்றார்

எலியா எடுத்துக்கொள்ளப்பட்ட சம்பவத்திற்குப் பிற்பாடு, எலியாவைப்போன்று எலிசாவும் ஓர் உறுதியான மற்றும் நிழலான பாத்திரமாய்க் காணப்படுகின்றார் என்று நாம் கருதுகையில், எலிசாவின் அனுபவங்கள் மீதான நமது ஆவல் அதிகரிக்கின்றது. எலியா மற்றும் நிஜமான ஆசாரியர்களுக்கு இடையிலும், எலிசா மற்றும் சுவிசேஷ யுக நிஜமான லேவியர்களுக்கு இடையிலும் உள்ள ஒற்றுமையைக்குறித்து, நாங்கள் ஏற்கெனவே தெரிவித்திருந்தோம். எலிசா முற்பிதாக்களுக்கும்கூட நிழலாய்க் காணப்படலாம்; மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில், உலகத்திற்குப் போதிக்கும் காரியமும், உலகை ஆசீர்வதிக்கும் காரியமும் இந்த முற்பிதாக்களின் கரங்களிலேயே வைக்கப்படும்; இவர்கள் "பூமியெங்கும் பிரபுக்களாகக் காணப்படுவார்கள்." இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில் எலிசா ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இரண்டாம் வகுப்பாருக்கு முதலாவதாக நிழலாய்க் காணப்படுகின்றார் எனவும், இவர் யோர்தானைக் கடந்துசெல்வது என்பது, நிஜமான லேவியர்களாகிய இவ்வகுப்பாரின் மரணத்தினையும் அடையாளப்படுத்துகின்றது எனவும் நாம் கருதலாம். இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில் எலிசாவின் பிந்தைய காரியமும், அவரது நியாயத்தீர்ப்பின் வேலையும், சீர்த்திருத்த வேலையும், "பிரபுக்களின்கீழ்" மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில், சம்பவிக்குமென நாம் எதிர்ப்பார்த்திடும் விஷயங்களுக்கு நன்கு ஒத்திருக்கின்றது. நீரூற்றை ஆரோக்கியமடையப்பண்ணுவது என்பது, சத்தியத்தின் நீரூற்று ஆரோக்கியமடையும் காரியத்தை அடையாளப்படுத்துகின்றது. பல நூற்றாண்டுகள் காலமாக, "நீ சாகவே சாவதில்லை" எனும் சாத்தானுடைய மகா பொய்யோடுகூட, தவறான உபதேசங்களும், மூடநம்பிக்கைகளும் சேர்ந்து, சத்தியம் எனும் தண்ணீரை கடுப்புத்தன்மையுடையதாக, சுவையற்றதாக, ஆரோக்கியமற்றதாக ஆக்கிவிட்டது. நீரூற்றில் உப்பு போடப்படும் காரியமானது, இப்பொழுது "பூமியின் உப்பு" என்று அழைக்கப்படும் சபை மகிமையடையும்போது, இந்த மகிமையடைந்த சபையின் ஒத்துழைப்புடன் அசத்தியமும், தவறான உபதேசங்களும் சுத்திகரிக்கப்படுவதை அடையாளமாய்ச் சித்தரிக்கின்றது. சத்தியம் எனும் நீரூற்று ஆரோக்கியமடைதல் என்பது, முற்பிதாக்கள் மூலமாய்க் கடந்துவரும் புது உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாக இருப்பினும், அது மகிமையடைந்த சபையிடமிருந்தே கடந்துவரும்

ஒன்றாகும்; இது பிற்பாடு யூதர்கள் வாயிலாக மனுக்குலத்தின் உலகத்திற்குப் போகும். இதைத்தான் பரிசுத்த பவுல் அடிகளாா் உரோமர் 11:25-33 வரையிலான வசனங்களில் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றாா்.

………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………

மரித்தோரை ஜீவனுக்குக் கொண்டுவரும் காரியமானது, புதிய யுகத்தினுடைய - அதாவது மேசியாவின் இராஜ்யத்தினுடைய மாபெரும் அம்சங்களில் ஒன்றாய் இருக்கப்போகின்றது. இந்த வல்லமையானது சந்தேகத்திற்கிடமின்றி அக்காலத்தின் "பிரபுக்களின்" வாயிலாகச் செயல்முறை படுத்தப்படும் என்பது எலிசாவினால் நிழலாய்க் காண்பிக்கப்பட்டுள்ளது என்று நாங்கள் நம்புகின்றோம். தீர்க்கத்தரிசியினுடைய சௌகரியத்திற்கென்று அன்பான ஏற்பாடுகளைப் பண்ணினவர்களும், மரணத்தினின்று எலிசாவினால் உயிர்த்தெழுப்பப்பட்ட அந்தப் பிள்ளையுடைய பெற்றோர்களுமானவர்களின் விஷயம்போலவே, எலிசாவினால் அடையாளப்படுத்தப்படும் "பிரபுக்களை" முற்றும் முழுமையாய் மதிக்கின்றவர்களும், அவர்களை ஏற்றுக்கொள்பவர்களுமே, அதிகமாய்க் கிருபை பெறப்போகின்றவர்களாய் இருப்பார்கள்.

---

R2283 [தெரிந்தெடுக்கப்பட்ட வரிகள்]

## கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள்

தெய்வீகச் சுபாவத்தையும், கிறிஸ்துவோடு உடன்சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்வதற்குரிய "பரம அழைப்பு" கொடுக்கப்படுவதற்குரிய காலம் இன்னும் வராத காரணத்தினால், இவ்வழைப்பைப் பெற்றுக்கொள்ளும் கிருபை கிடைக்காதபோதிலும், முற்பிதாக்கள் தேவனிடத்திலும், அவருடைய வாக்குத்தத்தத்திலும் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்கள்; மேலும் தேவனுக்காகக் கொண்டிருந்த அன்பை, தங்களுடைய கிரியையினால் வெளிப்படுத்தினார்கள்; இன்னுமாக அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்த நீதியின் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிந்த நிலையில், நற்பெயரையும், ஆஸ்தியையும், ஜீவனையுமே தியாகம்பண்ணிட தயங்காத நேர்மையினை அவருக்காகக் கொண்டிருந்ததையும் வெளிப்படுத்தினார்கள்.

---

R2856 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## ஆபிரகாமுடைய ஊக்கமான மன்றாட்டு

### ஆதியாகமம் 18:23-32

ஆபிரகாமின் யோசனைக்குக் கர்த்தர் ஒப்புதல் கொடுத்தார்; இதனால் ஆபிரகாமின் விசுவாசம் ஊக்குவிக்கப்பட்ட நிலையில், தனது மன்றாட்டிலுள்ள எண்ணிக்கையை, நாற்பத்தைந்து, நாற்பது, முப்பது, இருபது, பத்து என்று குறைக்க முற்பட்டார்; ஒருவேளை பொல்லாங்கு அவ்வளவுக்கு அதிகமாகிப்போய், பத்துப்பேர் மாத்திரம் நீதியை நேசிக்கிறவர்களாகக் காணப்படுவார்களானால், அப்பட்டணத்தை

அழிவினின்று காப்பாற்ற கர்த்தரிடம் விண்ணப்பிப்பதைத் தவிர, வேறு எதுவும் அவரது மனதில் தோன்றவில்லை; இதுவே அவரது உண்மையான வாஞ்சையாகக் காணப்பட்டது; ஆபிரகாமின் விசுவாசத்திலும், அவரது இரக்கத்திலும் நாம் களிகூருகின்றோம். ஒருவேளை இரக்கமானது அவரது குணத்தின் ஒரு பாகமாக இல்லாதிருந்தால், தம்முடைய இரட்சிப்பின் திட்டத்தின் துவக்கமாக இருக்கும்படிக்கு, அவரைத் தேவன் அழைத்திருந்திருப்பாரா என்று நாம் சந்தேகிக்க வேண்டியிருந்திருக்கும். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்." இத்தகையவர்களே ஆயிர வருஷ யுகத்தின்போது, தாம் மனுக்குலத்திற்கு ஏற்பாடு பண்ணியுள்ள இரக்கங்களை மனுக்குலத்திற்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய தம்முடைய பிரதிநிதிகளாகவும், மார்க்கமாகவும் இருக்கும்படிக்குத் தேவன் தேடுகின்றார். இரக்கமுள்ளவர்களை மட்டுமே இராஜ்யத்தில் இயேசுவோடு உடன்சுதந்தரர்களாக இருக்கும்படிக்குத் தேவன் ஏற்றுக்கொள்வார்; மேலும் முற்பிதாக்களில் ***இரக்கமுள்ளவர்களாய் காணப்பட்டவர்கள் மட்டுமே***, ஆவிக்குரிய இராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளென - "பூமியின் பிரபுக்களெனத் தெய்வீகக் கிருபைகளை மனுக்குலத்திற்குப் பகிர்ந்தளிக்கும் வேலையில், ஆபிரகாமுடன் பங்கடைவார்கள்." (சங்கீதம் 45:16)

---

R1919 [தெரிந்தெடுக்கப்பட்ட வரிகள்]

## கர்த்தருக்குள் மேன்மைபாராட்டுங்கள்

கர்த்தர் தவறிழைக்காத ஞானத்துடன், எப்போதுமே ஒவ்வொரு மாபெரும் வேலைக்கும் சாந்தகுணமுள்ளவர்களையே தெரிந்தெடுத்துள்ளார்; "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" (எண்ணாகமம் 12:3). ***சாந்தகுணம்*** என்பது தீர்க்கத்தரிசிகள் மற்றும் முற்பிதாக்கள் அனைவரிடத்திலும் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குணஇயல்பாகும்.

---

R3946 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சோதோமிற்கான ஆபிரகாமின் ஜெபங்கள்

**ஆதியாகமம் 18:16-33**

### சோதோமின் கூக்குரல்

தனது விருந்தினர்கள் மனித உருவில் வந்துள்ள ஆவிக்குரிய ஜீவிகள் என்று உணர்ந்துகொண்ட ஆபிரகாம், தொடர்ந்து விருந்தோம்பல்பண்ணுகிறவராக, அவர்களோடுகூட நடந்தும் சென்றார். அவர்கள் சோதோமின் திசையை நோக்கி நடந்துசெல்கையில், கர்த்தர் ஆபிரகாமுடன் ஓர் உரையாடலை மேற்கொண்டார்; சோதோமுடைய பொல்லாப்பின் நிமித்தம், அதன்மீதுவரும் நியாயத்தீர்ப்பை ஆபிரகாமிடம் தெரிவித்தார்; இவர்களது பொல்லாப்பைக்குறித்து ஆபிரகாம் அறிந்தவராகவே காணப்பட்டார். ஆபிரகாம் அதுவரையிலும் தன்னை உண்மையுள்ளவராக நிரூபித்திருந்த காரியமும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பது தொடர்புடைய வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கே உரியது எனும் காரியமும்தான், இவருக்குச் சோதோமின் நிலைமை தொடர்பாகத் தகவல் தெரிவிக்கப்பட்டதற்கான காரணமாகும்; "நான் அவனை அறிந்திருக்கின்றேன் (நான் அவனுடன் நெருங்கிய உறவுகொண்டிருக்கின்றேன்; அவனோடு

உடன்படிக்கைப்பண்ணியிருக்கின்றேன்; என்னை அவனுக்கு வெளிப்படுத்தியிருக்கின்றேன்); கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான்" (ஆதியாகமம் 18:19). இப்படியாகக் கர்த்தர் காரியங்களை வெளிப்படுத்தும் வழிமுறை ஒன்று இருக்கின்றது என்று பார்க்கின்றோம். அறிய வேண்டும் என்கிற ஆவலைத் திருப்திப்படுத்துவதற்காகக் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக் காரியங்களை வெளிப்படுத்தாமல், விசேஷமாக அவர்கள் கர்த்தருடன் உறவில் இருப்பதன் காரணமாகவும், அவர்கள் அழைக்கப்பட்டுள்ள எதிர்கால வேலைக்கு அவர்களுக்கு உதவும் ஜீவியத்தின் அனுபவங்கள் தொடர்புடைய சில பாடங்களை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதன் காரணமாகவும்தான், காரியங்கள் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

ஆபிரகாமின் சந்ததியில் பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தத்தை ஆபிரகாம் பெற்றிருந்தார் என்றும், இந்தப் பூமியின் குடிகளில் சோதோமியர்களும் அடங்குவார்கள் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். ஆகையால் ஏதோ ஒரு விதத்தில் அப்போது அல்லது எதிர்காலத்தில் தானும், தன்னுடைய சந்ததியும் சோதோமியர்கள்மீது நீதியான நியாயத்தீர்ப்புச் செலுத்த வேண்டியிருக்கும் என்று எதிர்ப்பார்ப்புகொள்வதற்கு, கர்த்தருடைய வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டவரான ஆபிரகாம் உரிமைபெற்றவராகக் காணப்பட்டார். இதுவுமல்லாமல் தம்முடன் இணக்கத்தில் காணப்படுபவர்கள், தம்முடைய கையாளுதல்கள் அனைத்திலுமுள்ள நீதி, நியாயத்தை அறிந்துகொள்ள கர்த்தர் பிரியமாயிருந்தார். இக்கொள்கையினை "வழக்காடுவோம் வாருங்கள்" எனும் வார்த்தைகளானது நமக்குக் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது (ஏசாயா 1:18). தம்மில் விசுவாசம்கொண்டு, தம்முடைய வாக்குத்தத்தங்களை நம்புகிறவர்களைத் தவிர, வேறு யாரிடமும் கர்த்தர் ஒருபோதும் நியாயவாதம் செய்வதில்லை. இத்தகையவர்களே உண்மையில் ஞானவான்களாகக் காணப்படுகின்றனர்; மேலும் இவர்களைக்குறித்து: "துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்; ஞானவான்களோ (காரியங்கள் வெளிப்படுவதற்குரிய ஏற்றவேளை வருகையில்) உணர்ந்து கொள்ளுவார்கள்" (தானியேல் 12:10); இன்னுமாக "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்" என்று எழுதப்பட்டிருக்கின்றது. (சங்கீதம் 25:14)

சோதோமிலிருந்து மிகுந்த கூக்குரல் பரலோகத்தை எட்டியுள்ளது என்றும், அதைக்குறித்து விசாரிக்கப்போகின்றார் என்றும் கர்த்தர் தம்முடைய பணியைக்குறித்து விவரிக்கும் வண்ணமாகக் கூறினார்; இது இனிமேலும் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதையும், சோதோமைத் தண்டிப்பதற்குரிய நேரம் வந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; ஆபிரகாமும் காரியத்தைப் புரிந்துகொண்டார். வெறும் வதந்திகள்தான் தேவனை எட்டியுள்ளது என்றும், அதனால் விசாரணை நடத்திடுவதற்கு விசேஷ குழு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது; மாறாக தேவன் பூமியின் காரியங்கள் அனைத்தையும் முழுமையாய்த் தெரிந்துவைத்திருக்கின்றார் என்றும், அவர் நம்முடைய நிலைமைகளைக்குறித்துக் கண்டுகொள்ளாமல் இருப்பதில்லை என்றும், அவர் மிகுந்த பொறுமையுள்ளவராகவும், இரக்கமுள்ளவராகவும், நீடியபொறுமையுள்ளவராகவும் இருந்தாலும், "அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளாமலும்; என்றைக்கும் கோபங்கொண்டிராமலும்" இருந்தாலும், உரிய தண்டனை அளிப்பதற்குரிய ஒரு காலமும் வரும் என்றும் ஆபிரகாமும், இப்பதிவை வாசிக்கும் அனைவரும் அறிந்துகொள்ளத்தக்கதாக, இக்காரியமானது எளிமையான மொழிநடையில் தெரிவிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவு மற்றும் அப்போது மனுக்குலத்தின் உலகத்தின்மீது வீசும் உபத்திரவம் தொடர்பாக அப்போஸ்தலனாகிய பேதுருவும், மேற்கூறப்பட்டுள்ள அதே கருத்தினை நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார். இவர் தேவனை மிகுந்த இரக்கம்கொண்டவராகவும், நீடியபொறுமையுள்ளவராகவும், அனைவரையும் ஜீவனுள்ளவர்களாகத் திரும்பப்பெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவராகவும் தெரியப்படுத்துகின்றார். எனினும் யுக மாற்றம் வரும் என்றும், நியாயம் நூலாகவும், நீதி தூக்குநூலாகவும் வைக்கப்படும் என்றும், மகா தீர்க்கதரிசிக்குக் கீழ்ப்படியாத யாவரும் இறுதியில் அழிக்கப்படுவார்கள் என்றும் உள்ள காரியங்களையும் அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார் (அப்போஸ்தலர் 3:23). இது தொடர்பாக (வேதாகமத்தின்) புதிய ஏற்பாடானது, தேவன் எப்பொழுதும் கடிந்துகொள்ளார் என்பதற்கு உதாரணமாகவே சோதோமையும், அதன் சகோதரிகளையும் சுட்டிக்காட்டுகின்றது. அப்பட்டணங்களின்மீது வந்த பெருந்துன்பமானது திருஷ்டாந்தமாகக் காணப்பட்டது; "நித்திய அக்கினியின் ஆக்கினையை (நித்திய சித்திரவதை அல்ல, மாறாக முழுமையான அழிவை) அடைந்தார்கள்" (யூதா 7). இப்படியாகத் தேவன் தீமைசெய்பவர்கள் யாவரையும், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவரது வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் "நீங்கலாக்கி, (சித்திரவதைச்செய்து உயிரோடு வைக்கப்படாமல், மாறாக) நித்திய அழிவாகிய தண்டனையினால்" அழித்துப்போடுவார். (2 தெசலோனிக்கேயர் 1:9)

## ஆபிரகாமின் குணத்திலுள்ள அன்பு

ஆபிரகாமின் ஜீவியத்தில் நடந்த இந்த ஒரு சிறு சம்பவமானது, இவரது இருதயத்தில் காணப்பட்ட அன்புடன்கூடிய கருணையை நமக்கு எடுத்துக்காண்பிக்கின்றது; மேலும் முன்பைக்காட்டிலும் இவரை நாம் அதிகம் அன்புகூரவும், மதிக்கவும் வழிநடத்துகின்றது. சோதோமின்மீது நியாயத்தீர்ப்பு வருகின்றது என்று தெரிவிக்கப்படுமாயின், இது கொடூரமான, அன்பற்ற இருதயம் உடைய ஒருவரால், ஆபிரகாமிலிருந்து முற்றிலும் வேறுபட்ட பார்வையில் பார்க்கப்பட்டிருக்கும். அத்தகையவரோ: "ஆ! ஆம்! அவர்கள் மிகவும் பொல்லாத ஜனங்களாவார்கள்; அவர்களுக்கு இத்தண்டனை வேண்டியதுதான்; இதைவிட குறைவாய்க் கொடுக்கக்கூடாது. இத்தகைய ஜனங்களோடுகூட வாழ்வதிலும், குடும்பத்தாரை இத்தகைய ஜனங்களோடுகூடச் சம்பந்தங்கலக்கப்பண்ணுவதிலும் எனது மருமகனாகிய லோத்து தவறுசெய்கின்றார் என்று நான் எடுத்துச்சொல்லியிருந்தேன்; நீர் என்ன தண்டனையை இந்த ஜனங்களுக்குக் கொடுத்தாலும், அது சரியானதே" என்று சொல்லியிருப்பார்.

ஆனால் ஆபிரகாம், இந்த ஒரு மனப்பான்மையில் காணப்படவில்லை; அவரது இருதயம் உடனடியாக அனுதாபங்கொண்டது; அந்தப் பட்டணத்தார் தீய செயல்களுக்குப் பெயர்ப்பெற்றவர்களாக இருப்பினும், அங்குக் குறைந்தபட்சம் ஐம்பது நீதிமான்களாகிலும் இருப்பார்கள் என்று ஆபிரகாம் கருணையுடன் யூகித்தார்; நீதிமான்கள் என்று சொல்லுகையில், முழுமையான விதத்தில் பூரணர்கள் என்றில்லாமல், மாறாக தங்களால் முடிந்தமட்டும் நீதியானவைகளைச் செய்கிறவர்கள் ஆவார்கள் (உரோமர் 8:4). ஆபிரகாம் மத்தியஸ்தரின் ஆவியினை உடையவராய் இருந்தார்; இவர் தனக்குள்ளாகப் பின்வருமாறு: "தேவன் எல்லா விதத்திலும் என்னிடத்தில் ஆச்சரியப்படத்தக்க வகையில் கிருபைபாராட்டியிருக்கின்றார்; இப்பொழுது இந்தக் காரியத்தைக்குறித்து அவர் எனக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றபடியால், அந்த ஜனங்களுக்காக நான் கொண்டிருக்கும் எனது இருதயப்பூர்வமான அனுதாபத்தைக்குறித்து அவரிடத்தில் கூறுவதற்கும், அவர்கள் விஷயத்தில் அவர் தயாளமாய் நடந்துகொள்வார் என்ற எனது நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்கும் நான் துணியப்போகின்றேன்" என்று கூறிக்கொண்டார். பின்னர் ஆபிரகாம்: "துன்மார்க்கனோடே

நீதிமானையும் அழிப்பீரோ? பட்டணத்துக்குள்ளே ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள்; அதற்குள் இருக்கும் அந்த ஐம்பது நீதிமான்கள் நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீரோ? துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ" என்றார். (ஆதியாகமம் 18:23-25)

ஒருவேளை இவ்வார்த்தைகளின் நிமித்தம் நாம் வியப்பிற்குள்ளாகி, தேவனுடைய நீதியைக் குறித்துக் கேள்வி எழுப்ப ஆபிரகாம் துணிந்துள்ளார் என்று எண்ணுவோமானால் - கர்த்தருடைய ஜனங்கள் பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, தேவனுடைய ஆழங்களைக்குறித்து அறிந்துகொள்ளும்படிக்கு அருளப்பட்டிருக்கின்றபடியால், நமக்கு இக்காலங்களில் காணப்படும் தேவவார்த்தைகளினுடைய வழிகாட்டுதல் மற்றும் பரிசுத்த ஆவியின் வெளிச்சமூட்டப்படுதல் எனும் ஆசீர்வாதமான அனுகூலங்களை, ஆபிரகாம் அன்று பெற்றிருக்கவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். தேவனை விமர்சித்து குறைகூறுவதற்குப் பதிலாக, தேவன் முன் கேள்வி ஒன்றை முன்வைத்ததே, ஆபிரகாமின் வழிமுறையாய் இருந்தது என்று நாம் உண்மையில் எண்ணுகின்றோம் - அதாவது "ஒருவேளை நீர் துன்மார்க்கனோடே நீதிமானை அழிப்பீரானால், அதாவது வித்தியாசம் இல்லாமல் அழிப்பீரானால், அது நீதியாக இருக்குமா? தேவனே அது எப்படி நீதியாக இருக்கும் என்று எனக்குக் காண்பித்துத் தாரும். நிச்சயமாகவே நீர் நீதியையே செய்வீர். நீர் உம்முடைய மனதிலே முடிவெடுத்திருக்கின்றீர் என்று நான் புரிந்துகொள்ளும் உமது நடவடிக்கையோடு, எவ்வாறு நீதி இணக்கமாய்க் காணப்படும் என்பதை நான் காண விரும்புகின்றேன்" என்ற அர்த்தத்திலேயே ஆபிரகாமின் வார்த்தைகள் காணப்பட்டன.

## நம்முடைய அனுபவங்களில் இணைகள்

இதே கேள்விகள் இப்பொழுது நமக்கும் வருகின்றது. பண நெருக்கடிகள் வருகின்றன; இது நீதிமான்களையும், துன்மார்க்கரையும் அடிக்கடி பாதிப்பிற்குள்ளாக்குகின்றன; புயல்களும், சூறாவளிகளும் இவர்களுடைய நலன்களைப் பாதிக்கின்றன; சில சமயங்களில் நீதிமான்களுக்குத் தயவு பாராட்டுவதை மாத்திரம் தேவன் அனுமதியாமல், யோபுவின் சம்பவம் போன்று விநோதமான பெருந்துயரங்களும் அவர்கள்மீது வரவும் அனுமதிக்கின்றார். மாம்சத்தில் வரும் துயரங்களினால் சில சமயங்களில் புதுச்சிருஷ்டிகளாகிய நம்முடைய நலனுக்கடுத்த காரியங்களில் நன்கு உதவப்படுகின்றோம் என்றும், தேவனை அன்புகூருபவர்களுக்கும், அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் உண்மையுள்ளது என்றும், மாபெரும் போதகர் மற்றும் அவரது பலதரப்பட்ட உதவியாளர்களாகிய அப்போஸ்தலர்களுடைய அறிவுரையின்கீழ் நாம் கற்றிருக்கின்றோம். இந்த உபத்திரவங்கள் இலேசான உபத்திரவங்களாகக் காணப்படத்தக்கதாகவும், இவை இனிவரும் ஜீவியத்தில் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையைப் புதுச்சிருஷ்டிகளாகிய நம்மிடத்தில் உருவாக்கத்தக்கதாகவும், கர்த்தர் தம்முடைய உண்மையுள்ளவர்களின் அனுபவங்களை மேற்பார்வையிடுகின்றார்.

ஆபிரகாமினுடைய இந்த மன்றாட்டில், நீதியின்மீதான அவரது அன்பும், சரியானவைகளைச்செய்ய வாஞ்சித்திடும் அனைவருக்குமான அவரது அனுதாபமும் வெளிப்படுகின்றது. இது ஏற்றகாலத்தில் மனுக்குலத்தின் உலகத்திற்கென்று தம்முடைய ஆசீர்வாதங்கள் சில கடந்துவருவதற்குரிய வழியாக இவரைத் தேவன் தெரிந்துகொண்ட விஷயத்தில், தேவன் சரியாகவே தெரிந்தெடுத்துள்ளார் என்பதை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்துவினுடைய ஆயிர வருஷ அரசாட்சியில்,

ஆவிக்குரிய தளத்தில் மணவாட்டி வகுப்பாரின் அங்கத்தினர்களென அல்லது திரள்கூட்டத்தின் அங்கத்தினர்களென அல்லது பிரபுக்கள் வகுப்பாராகிய முற்பிதாக்களின் அங்கத்தினர்களென அவரோடுகூடக் காணப்படுபவர்கள் அனைவருமே **பரந்து விரிந்த கருணையினையும், எல்லா விதத்திலும் நீதிமான்களுக்குத் தயவுபாராட்டவும், நன்மைசெய்ய வாஞ்சையினையும் உடையவர்களாகக் காணப்பட வேண்டும்**; இல்லையேல் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட மாபெரும் வேலைக்கு அவர்கள் தகுதியானவர்களாகக் காணப்படமாட்டார்கள். (சங்கீதம் 45:16)

தேவன் ஆபிரகாமினிடத்தில் தெரிந்துகொண்ட குணத்தினை நாம் கவனிக்கையில், **கருணையுள்ள இருதயங்களைக்** கொண்டுள்ள வகுப்பாரையே பிதாவானவர் பிரதானமாய் அழைக்கின்றவராகவும், இழுக்கின்றவராகவும் காணப்படுகின்றார் என்பதில் நாம் நிச்சயம்கொள்ளலாம்.

---

R4318 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# மூன்று மாபெரும் உடன்படிக்கைகள்

கிறிஸ்தவ மண்டலமானது பொதுவாகவே இரண்டு உடன்படிக்கைகளை மட்டுமே அடையாளம் கண்டுகொள்கின்றது; அதாவது மோசேயை மத்தியஸ்தராகப் பெற்றிருந்த பழைய அல்லது நியாயப்பிரமாண உடன்படிக்கை மற்றும் கிறிஸ்துவை மத்தியஸ்தராகப் பெற்றிருக்கும் புதிய உடன்படிக்கையாகும். கிறிஸ்தவ மண்டலத்திற்கு ஆபிரகாமின் உடன்படிக்கை குறித்து எதுவும் தெரியாது என்று சொல்லலாம். அவர்கள் இந்த ஆபிரகாமின் உடன்படிக்கையினை அடையாளம் கண்டுகொள்வதில்லை அல்லது அதைப் புதிய உடன்படிக்கையுடன் சம்பந்தப்படுத்தி, அடையாளம் காண்கின்றனர். இக்கூற்றினை நாம் அனைவருமே ஞாயிறு பள்ளி சொற்பொழிவுகள், விளக்கவுரைகள் மூலமாய் அறிந்திருக்கின்றோம்; ஆகையால் இப்பாடத்தின் விஷயத்தில் நாம் அனைவருமே இப்படிக் குழப்பமான கருத்துகளைப் பெற்றிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. சபை இந்த யுகத்தினுடைய முடிவில் காணப்படுவதினால் வெளிப்படும் வெளிச்சத்தின் காரணமாக, நாம் இரண்டு என்று யூகித்திருந்ததற்குப் பதிலாக, மூன்று உடன்படிக்கைகள் காணப்படுகின்றது என்று படிப்படியாக காணமுடிபவர்களாக இருக்கின்றோம். ஆபிரகாமின் உடன்படிக்கையாகிய ஆதி உடன்படிக்கையானது, மூன்று உடன்படிக்கைகளிலேயே பிரம்மாண்டமானதும், சிறந்ததுமாய் இருக்கின்றது என்றும், இதினின்றே மற்ற இரண்டு உடன்படிக்கைகளும் தொடர்ந்தது என்றும் காண்கின்றோம். தெய்வீக நோக்கம் மீதான இந்த வெளிச்சத்தினை நாங்கள் 1880-ஆம் வருஷத்தில், வாட்ச் டவர் பத்திரிக்கையில் முன்வைக்கத் துவங்கினோம்; பிற்பாடு அதை ஆசரிப்புக்கூடாரத்தின் விசேஷித்த நிழல்கள் புஸ்தகத்திலும் விரிவாய் விளக்கினோம். இப்புஸ்தகத்தில் இந்த உடன்படிக்கைகள் பிரதான ஆசாரியனின் வஸ்திரங்களில், இன்னுமாகத் தோள்துண்டுகள் மற்றும் கற்கள் பதிக்கப்பட்ட மார்ப்பதக்கத்தோடுள்ள இரு பாகங்களை உடைய ஏபோத்தில் அடையாளப்படுத்தப்படுவதாக நாங்கள் முன்வைத்திருக்கின்றோம்; எனினும் இப்பொழுது அந்த மூன்று உடன்படிக்கைகளுக்கு இடையே இருக்கும் வித்தியாசத்தைத் தெளிவாய்க் காணுவதுபோன்று, அப்போது நாங்கள் மிகவும் தெளிவாய்ப் பார்க்கவில்லை. இது நம்மையும், யுகம் முழுவதிலுமுள்ள ஜனங்கள் அனைவரையும் கர்த்தர் பொதுவாய்க் கையாளும் விஷயத்திற்கு முழு இசைவாகத்தான் இருக்கின்றதல்லவா? "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்" என்பது அவருடைய வார்த்தைகளல்லவா? இதை நாங்கள் நம்புகின்றோம். (நீதிமொழிகள் 4:18.)

## கிருபையிலும், அறிவிலும் வளர்தல்

இப்பொழுது நாங்கள் இன்னும் தெளிவாய்க் காண்கிறதை, விசுவாச வீட்டார் முன்பு வைப்பது எங்களுடைய கடமையாகவும், சிலாக்கியமாகவும் இருக்கின்றது. நம்மில் சிலருக்கு ஆபிரகாமின் உடன்படிக்கைமீது சரியான கவனம் செலுத்துவதற்குக் காலம் எடுத்துக்கொண்டதுபோன்று, இப்பொழுதும் ஆபிரகாமின் உடன்படிக்கைக்கும், புது உடன்படிக்கைக்கும் இடையே வித்தியாசம் காணுவதற்கும் நம்மில் சிலருக்குப் போதிய காலம் எடுத்துக்கொள்ளும் என்பதை நாங்கள் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றோம். தேவனுடைய திட்டம் பற்றின ஒவ்வொரு விவரம் குறித்த தெளிவான புரிந்து கொள்ளுதலானது வாஞ்சிக்கத் தகுதியானதாக இருப்பினும், அதன்கீழ் நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அது கண்டிப்பாய் அவசியம் இல்லை என்பதையும் நினைவில்கொள்ளுங்கள். உதாரணத்திற்கு இப்பொழுது பெரும்பாலான கிறிஸ்தவ ஜனங்கள் புரிந்துகொள்ளாதது போலவே, நாமும் பாவநிவாரணத்தின் தத்துவத்தைப் புரிந்துகொள்ளாமல் காணப்பட்டபோதிலும், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் நாம் நம்பிக்கை வைத்தபோது, அனைத்துக் காரியங்களிலிருந்தும் நாம் இலவசமாய் நீதிக்கேதுவாய் மன்னிக்கப்பட்டோம். பெருகிவரும் அறிவானது, நீதிமானாக்கப்படுதலைப் பெருகப்பண்ணுவதில்லை; எனினும் அது நம்மால் நன்கு புரிந்துகொள்ளப்பட்ட தெய்வீக நோக்கங்களுக்கு நாம் அதிகம் இசைவாய் வரத்தக்கதாக, நமக்கு உணர்ந்துகொள்ளுதலையும், அன்பையும், அர்ப்பணிப்பையும் மற்றும் வாய்ப்பையும் அதிகமாய்க் கொண்டுவருகின்றது.

## 1. கிருபை 2. நியாயப்பிரமாணம் 3. கிரியைகள்

ஆபிரகாமுக்கு ஆணையிட்டு பண்ணப்பட்ட ஆதி/முதலாம் உடன்படிக்கையானது எல்லா விதத்திலும் மேன்மையானது என்றும், அது ஒருவர் சார்ந்த உடன்படிக்கையாகவும், நிபந்தனையற்ற வாக்குத்தத்தமாகவும் இருக்கின்றபடியால், அதற்கு மத்தியஸ்தர் இல்லை என்றும் பரிசுத்த பவுல் அடிகளார் நமக்கு மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இஸ்ரயேல் ஜனங்களுடனான தேவனுடைய கையாளுதலில், ஆபிரகாமின் உடன்படிக்கையோடுகூட, நியாயப்பிரமாண உடன்படிக்கையானது "சேர்க்கப்பட்டது" என்று பரிசுத்த பவுல் அடிகளார் நமக்குத் தெரிவித்துள்ளார். நியாயப்பிரமாணம் முன்வைப்பவைகள் அனைத்தையும் மீறாமல் கைக்கொள்பவர்களுக்கு மட்டுமே நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நன்மைகள் வழங்கப்படும் என்பதாலேயே, அது நியாயப்பிரமாண உடன்படிக்கை என்று அழைக்கப்படுகின்றது. அப்போஸ்தலன் இதை ஆகாரின் உடன்படிக்கை என்று அழைக்கின்றார்; காரணம் இது அடிமைத்தனமாக இருந்தது; மேலும் இவ்வுடன்படிக்கையின் பிள்ளைகளாகிய யூத ஜனங்கள் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களைச் சுதந்தரிக்க முடியாமல் காணப்பட்டனர். இவ்வுடன்படிக்கையானது எதையும் பூரணப்படுத்தவில்லை - எதையும் பூரணத்திற்குக் கொண்டுவரவில்லை என்று நமக்கு அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். விசுவாசத்திற்கு முக்கியத்துவம் இருப்பினும், மேலும் தேவனுடைய கிருபையானது இஸ்ரயேலிடத்தில் சில வகைகளில் வெளிப்பட்டிருப்பினும், விசுவாசமோ அல்லது கிருபையோ, எதுவுமே இவர்களது உடன்படிக்கையின்மேல் தாக்கத்தை உண்டுபண்ணவில்லை; இவர்களது உடன்படிக்கையானது இவர்கள்மேல் கடினமாகவும், இறுக்கமாகவும் காணப்பட்டு, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைக் கீழ்ப்படிந்து காட்டும்படிக்குக் கேட்டது - "இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்." யாருமே அதைப் பூரணமாய்க் கைக்கொள்ள முடியாததால், கிரியைகளின் இந்த உடன்படிக்கையானது, இவர்களது அபூரண கிரியைகளின்மீது ஆக்கினைத்தீர்ப்பையே கொண்டுவந்தது. இவ்வுடன்படிக்கைக்கு மோசே மத்தியஸ்தராகக் காணப்பட்டார்; ஆனாலும் இவரால் ஜனங்களுக்காக எதையும் சாதிக்க முடியவில்லை;

காரணம் இவர்களது சுதந்தரிக்கப்பட்ட அபூரணங்களேயாகும். இதை நாம் நியாயப்பிரமாண உடன்படிக்கை என்று அழைக்கின்றோம்.

கிறிஸ்துவாகிய தலை மற்றும் சரீரத்தை, அதாவது புதுச்சிருஷ்டியை அடையாளப்படுத்தும் ஈசாக்கிற்கு முன்னதாக, ஆகாரின் பிள்ளை பிறந்ததுபோலவே, இஸ்ரயேல் தேசம் - அதாவது மோசே மற்றும் செங்கடலில் இவருக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட ஜனங்கள் அனைவரும் - அதாவது "பணிவிடை வீட்டார்" அனைவரும், ஆவிக்குரிய இஸ்ரயேல் - புதுச்சிருஷ்டிகள் - கிறிஸ்து மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர் வீட்டாரின் அங்கத்தினர்கள் அனைவரும் உருவாகுவதற்கு முன்பாக உருவாக்கப்படுவார்கள் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

கிருபையின் உடன்படிக்கையோடு நியாயப்பிரமாண உடன்படிக்கையானது கூட்டிவழங்கப்படுவதற்கு முன்னதாக, எப்படிக் கிருபையின் (சாராளின்) உடன்படிக்கையானது காணப்பட்டதோ, அதுபோல இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, ஓர் உடன்படிக்கையெனத் தள்ளிவைக்கப்பட்ட பின்னரும், அக்கிருபையின் உடன்படிக்கையானது தொடர்ந்து நிலவிவந்தது; அதாவது "தம்மையே அனைவருக்குமான மீட்கும்பொருளாகக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு" நியாயப்பிரமாண உடன்படிக்கையின் பரிசாகிய நித்திய ஜீவனை வென்றபோது, இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, ஓர் உடன்படிக்கையெனத் தள்ளிவைக்கப்பட்ட பின்னரும், கிருபையின் உடன்படிக்கையானது தொடர்ந்து நிலவிவந்தது; ஆகையால் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு நானூற்று முப்பது வருஷங்கள் முன்பு காணப்பட்ட கிருபையின் (சாராளின்) உடன்படிக்கையானது, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் காலம் முழுவதும் ஜீவனோடு தொடர்ந்து காணப்பட்டது; ஆனால் பிள்ளை இல்லாமல் காணப்பட்டது; பிற்பாடு வித்தின் தலையாகிய இயேசுவைக் கொண்டுவந்தது. முதலாம் வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளியான கிறிஸ்து இப்பொழுது உருவாகியுள்ளதால், நியாயப்பிரமாண உடன்படிக்கையானது தள்ளிவைக்கப்பட்டது - "அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை; ஆகையால் அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு" (கலாத்தியர் 4:30). வேதவாக்கிய கண்ணோட்டத்தின்படி, உயிர்த்தெழுதல் என்பது பிறப்பாகும்; உதாரணத்திற்கு நமது கர்த்தர் "மரித்தோரில் முதற்-பிறந்தவர்" ஆவார்; அநேகம் சகோதரருக்குள் "முதற்-பிறந்தவர்" ஆவார்; மேலும் "அவரது சகோதர சகோதரிகள்," "அவரது அங்கத்தினர்கள்," "அவரது மணவாட்டிகள்" (இது தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கான மூன்று வெவ்வேறு பெயர்கள் ஆகும்) அனைவரும் மரணத்திலிருந்து கொண்டுவரப்பட வேண்டும்; ஆபிரகாமின் சந்ததி நிறைவுபெறுவதற்கு முன்னதாக, அனைவரும் ஆவிக்குரிய நிலைக்கு "மறுரூபமாக்கப்பட வேண்டும்."

## நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். (கலாத்தியர் 3:29)

இது இரகசியமாகும் - அதாவது இந்தத் தற்காலத்தில் தங்கள் மீட்பரோடுகூடப் பாடுகளிலும், பின்வரும் மகிமையிலும் பங்காளிகளாகக் காணப்படத்தக்கதாக, இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது கிறிஸ்துவின் மணவாட்டிகளெனச் சபையைத் தெரிந்தெடுப்பது இரகசியமாகும்; ஆகையாலே "அவரது உயிர்த்தெழுதலில்," "கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில்," "முதலாம் உயிர்த்தெழுதலில்" தனக்குப் பங்குகிடைக்கும் என்று அப்போஸ்தலன் மிகவும் ஆவலாய்க் காணப்பட்டார். இந்த "முதலாம் உயிர்த்தெழுதல்" நிறைவடைகையில்தான், சாராள்-உடன்படிக்கையின் சந்ததி முழுமையாய்ப் பிறந்திருப்பார்கள். இது "(தலையைப்) பெறப்பண்ணுகிறவராகிய நான் (சரீரத்தைப்) பெறச்செய்யாமல்

இருப்பேனோ" எனும் தீர்க்கத்தரிசன வார்த்தைகளுக்கு இசைவாகவே இருக்கின்றது (ஏசாயா 66:9). சரீரத்தின் தலையாகிய இயேசு, உயிர்த்தெழுதலில், மரணத்திலிருந்து பிறந்தவராகக் கொண்டுவரப் படுவதுபோலவே, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களும் அவரோடுகூட அழிவுக்குரியதிலிருந்து அழியாமைக்கும், பூமிக்குரியதிலிருந்து பரலோக சுபாவத்திற்குமான இந்த மகிமையான "மாற்றமடைதலில்" நிச்சயமாகப் பங்கடைவார்கள் என்பதே அவ்வசனத்தின் கருத்தாகும்.

அப்படியானால் நியாயப்பிரமாண (ஆகாரின்) உடன்படிக்கையின்கீழ்க் காணப்பட்ட யூதர்களின் விஷயம் என்ன? இவர்கள் வாக்குத்தத்தத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாகவும், சுதந்தரராகவும் காணப்படுவதற்கு மிகவும் வாஞ்சித்த சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்களினின்று வெட்டப்பட்டு போனார்களா? ஆம்! என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். அடிமையின் பிள்ளை, சுயாதீனமுள்ளவளின் பிள்ளையோடு சுதந்தரவாளியாகக் காணப்பட முடியாது என்று அப்போஸ்தலன் காண்பித்துள்ளார். அப்படியானால் மாம்சத்தின்படி இஸ்ரயேலர்களாகக் காணப்பட்ட அப்போஸ்தலர்களும், மற்றவர்களும் கிறிஸ்துவுடனும், (கிருபையின்) சாராளின் உடன்படிக்கையுடனும் எப்படி உறவிற்குள் வந்தார்கள்? கணவன், மனைவியாகிய இருவரில் ஒருவர் மரித்துப்போகையில், இவர்களின் மனித திருமணமானது இல்லாமல் ஆகிவிடுவது போன்று, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் கிறிஸ்துவின் மரணமானது நிறைவேற்றியுள்ளது என்று, விசுவாசத்தினால் அடையாளம் காணமுடிந்த யூதர்கள், அந்த உடன்படிக்கை மரித்துவிட்டது என்பதை உணரமுடிபவர்களாக இருப்பார்கள்; மேலும் அதினின்று தாங்கள் விடுதலை அடைந்துள்ளனர் மற்றும் இன்னொருவரைத் திருமணம் செய்யலாம் - அதாவது கிறிஸ்துவுடன் இணையலாம் என்றும் உணரமுடிபவர்களானார்கள் என்று அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். இன்னொரு பக்கத்தில், கிறிஸ்து தம்முடைய மரணத்தின் மூலமாக, "சிலுவையின்மேல் ஆணியடித்து நியாயப்பிரமாணத்தை முடிவிற்குக் கொண்டுவந்தார்" என்று அடையாளம் கண்டுகொள்ள முடியாதவனாகவும், தொடர்ந்து நியாயப்பிரமாண உடன்படிக்கையினை நம்பிக்கொண்டிருப்பவனாகவும் காணப்படும் எந்த ஒரு யூதனும், ஏதோ அவ்வுடன்படிக்கை இன்னமும் உயிரோடு இருப்பதுபோன்று, அதனால் உறுதியாய்க் கட்டப்பட்டவனாகக் காணப்படுவான்; அதாவது ஒரு ஸ்திரீயின் கணவன் உண்மையில் மரித்துப்போயிருக்க, அவள் கணவன் உயிரோடு இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தால், அவளால் மனப்பூர்வமாய் இன்னொருவரை திருமணம் செய்யமுடியாமல் இருப்பது போன்றாகும்.

## நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது

கிறிஸ்துவில் சரியான விசுவாசம் கொண்டிராத அந்தத் தேசத்தில் உள்ள அனைவரும் தள்ளிவிடப்பட்டனர், "கடினப்பட்டுப்போய்விட்டனர்;" எனினும் என்றென்றுமாக இப்படி இருப்பதில்லை; மாறாக புத்திரர் வீட்டார் - புதுச்சிருஷ்டிகள் - ஆவிக்குரிய இஸ்ரயேலுடைய ஆவிக்குரிய சரீரத்தின், ஆவிக்குரிய அங்கத்தினர்கள் - கிறிஸ்து நிறைவடைவதுவரை மாத்திரம் இப்படிக் காணப்படும். சிலர் பின்வருமாறு கேட்கலாம்: ஆ! அப்படியா? தெரிந்தெடுக்கப்பட்ட சபை நிறைவடைவது வரையிலும், இவர்கள் புறந்தள்ளப்பட்டவர்களாகவும், மனக்கடினப்பட்டுப்போனவர்களாகவும் காணப்படுவார்களானால் - இதனால் இவர்களுக்கு அதில் எந்தப் பங்கும் இருக்காது என்றால், ஆகாரின் (நியாயப்பிரமாண) உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ்க் காணப்படும் இவர்கள், ஒரு புது உடன்படிக்கையின்கீழ் வரும்போதும், அதில் திருப்தி அடைய மாட்டார்கள் அல்லவா? இந்தச் சான்றை வைத்துப்பார்க்கையில், நியாயப்பிரமாண உடன்படிக்கையினை இஸ்ரயேலர்கள் கைக்கொள்ள முடியாது என்றும், அதன்கீழ் ஜீவனை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் தேவன் அறிந்திருந்தும், அவர்களை அவர்களாகவே அடிமைத்தனத்திற்குள்ளாக்கத்தக்கதாக, அவர்களைத் தேவன் அனுமதித்திருக்கையில்,

சீனாய் மலையில் இஸ்ரயேல் தேசத்தோடு அவ்வுடன்படிக்கைக்குள் தேவன் பிரவேசித்தபோது, தேவன் அத்தேசத்தாரை வஞ்சித்திருக்கின்றார் அல்லவா என்றும், கர்த்தருடைய வழிகள் நீதியும், செவ்வையுமானவை அல்லவா என்றும் கேட்கலாம்.

ஆம்! அவரது வழிகள் நீதியும், செவ்வையுமானவைகள் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். முழுத்தெய்வீக நோக்கமும், அதன் இசைவான அம்சத்தில் மகிமையானதாய்க் காணப்படுகின்றது. கடந்த காலத்தில் நமக்கு இருந்த பிரச்சனை, நாம் அதை மங்கலான கண்ணாடியின் வழியாய்ப் பார்த்ததிலேயே - நேராகப் பார்க்காததிலேயே உள்ளது. இப்பொழுதோ நாம், தேவன் ஆபிரகாமின் இரண்டு சந்ததிகளைக் கொண்டிருக்க நோக்கம் கொண்டிருக்கின்றார் என்று புரிந்துகொள்கின்றோம் - அதாவது ஒரு சந்ததி பரத்திற்குரியவர்கள், வானத்தின் நட்சத்திரம் போன்றவர்கள் ஆவார்கள்; மற்றொரு வகுப்பார் பூமிக்குரியவர்கள், கடற்கரை மணல் போன்றவர்கள் ஆவார்கள். மாம்சீக சந்ததியாரை முதலாவதாகக் கொண்டுவருவதற்குரிய நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய முயற்சியானது பலன்கொடுக்கவில்லை - தோற்றுப்போனது. ஆவிக்குரிய கிறிஸ்து - தலை மற்றும் சரீரம் - திவ்விய சுபாவத்தின் பங்காளிகள் - அனைத்திற்குமான சுதந்தரவாளிகள் முதலாவது வரவேண்டும். பின்னரே தேவனுடைய தயவானது மாம்சீக இஸ்ரயேலரிடத்திற்குத் திரும்பும். நியாயப்பிரமாண உடன்படிக்கையானது அதன் நோக்கத்தினை நிறைவேற்றிவிட்டப்படியாலும், மாம்சத்தினுடைய பெலவீனங்கள் காரணமாக அவ்வுடன்படிக்கையானது அவர்களுக்குச் சாத்தியமாகாத ஒன்றென நிரூபிக்கப்பட்டபடியாலும், தேவன் அந்த ஜனங்களுடன் - ஆம்! அந்த ஜனங்களுடன் மட்டும் ஒரு புது உடன்படிக்கை ஏற்படுத்த நோக்கம் கொண்டிருக்கின்றார். எந்த ஒரு வேதவாக்கியமும் புது உடன்படிக்கை புறஜாதிகளுடன் பண்ணப்படுவதாகத் தெரிவிப்பதில்லை; மாறாக அது இஸ்ரயேலின் புது உடன்படிக்கையாகக் காணப்படும்; பழைய அல்லது நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குப் பதிலாக, இந்தப் புது உடன்படிக்கை கொடுக்கப்படும். ஆதி சபையில் பெரும்பான்மையாகக் காணப்பட்டவர்கள் எபிரெயர்கள் ஆவார்கள்; மேலும், அப்போஸ்தலன் எபிரெயர்களுக்கு எழுதின நிருபத்திலே, புது உடன்படிக்கை பற்றின விவரங்களை மிகவும் குறிப்பாகக் குறிப்பிட்டுள்ளார். ஓர் இடத்தில், அதாவது உரோமர் 11:27-ஆம் வசனத்தில், புறஜாதியாரிலிருந்து வந்த கிறிஸ்தவர்களிடம் அப்போஸ்தலன் பேசுகையில், இவர்கள் நிமித்தமாக மாம்சீக இஸ்ரயேலர்கள் புறந்தள்ளப்பட்டவர்களாக இருப்பினும், மாம்சீக இஸ்ரயேலர்கள் இன்னும் அவர்களது பிதாக்களின் நிமித்தம் பிரியத்திற்குரிய வர்கள்தான் என்றும், ஒரு விசேஷித்த உடன்படிக்கையின்கீழ் மீண்டுமாகத் தெய்வீகத் தயவைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் கூறியுள்ளார். இன்னொரு வசனத்தில் (2 கொரிந்தியர் 3:6) புது உடன்படிக்கையானது முத்திரிக்கப்படத்தக்கதாக, இராஜரிக ஆசாரியக்கூட்டத்தார் கிறிஸ்துவுடன் மரித்து, அந்த உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி தகுதியாக்கப்படுகின்றனர் என்று குறிப்பிடுகின்றார். (மல்கியா 3:1)

நாம் எவ்வளவுக்கு அதிகமாய்ப் புது உடன்படிக்கை குறித்து ஆராய்கின்றோமோ, அவ்வளவுக்கு அதிகமாய்ப் பின்வரும் உண்மையைக்குறித்து நாம் உறுதிப்படுத்தப்படுகின்றோம்; அதாவது அவ்வுடன்படிக்கை இஸ்ரயேலுக்கு மட்டுமே உரியது; இஸ்ரயேல் என்று சொல்லும்போது, அது சாலொமோனுடைய மரணத்திற்குப் பிற்பாடு இரண்டு தேசங்களாகப் பிரிந்துபோன இஸ்ரயேல் மற்றும் யூதாவை உள்ளடக்குகின்றது. "இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல" என்ற தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கவனியுங்கள் (எரேமியா 31:31-32). நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் யூதர்களால் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை

யூதர்களுக்கு நிரூபிக்க அப்போஸ்தலன் முயற்சிக்கையில், இந்தத் தீர்க்கத்தரிசனத்தையே சுட்டிக்காட்டினார்; மேலும் தேவன் புது உடன்படிக்கை என்று குறிப்பிடும் காரியமானது, முந்தின (நியாயப்பிரமாண) உடன்படிக்கையானது பழையதாகவும், பயனற்றதாகவும் ஆகிவிட்டது என்பதையும், இல்லாமல் போகத்தக்கதாக ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றது என்பதையும் சுட்டிக்காண்பிக்கின்றது என்ற உண்மையை அவர்களுக்குக் கூறினார். "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது." (எபிரெயர் 8:13)

## ஆணையினால் உறுதிப்படுத்தப்பட்ட உடன்படிக்கை நிச்சயமானது ... (எபிரெயர் 6:17-20)

பழையதும், திருப்திகரமாய் இராததுமான உடன்படிக்கையினுடைய இடத்தைப் புது உடன்படிக்கை எடுத்துக்கொள்ளப்போகின்றது. இரண்டு பழைய உடன்படிக்கைகள் காணப்பட்டன; அவை கிருபையின் அல்லது சாராளின் உடன்படிக்கை மற்றும் நியாயப்பிரமாண அல்லது ஆகாரின் உடன்படிக்கையாகும். அப்போஸ்தலன் எந்த உடன்படிக்கை பழையதாகவும், பயனற்றதாகும், இல்லாமல் ஆகிப்போய், புது உடன்படிக்கைக்கு இடம் கொடுக்கும் என்று கூறியுள்ளார்? இது விஷயத்தில் எந்தச் சந்தேகமும் அல்லது தவறான புரிந்துகொள்ளுதலும் நிச்சயமாகவே காணப்படாது. அவர் நியாயப்பிரமாண உடன்படிக்கையையே குறிப்பிட்டிருந்தார்; ஏனெனில் அவர் அப்படியாகவே கூறியும் இருக்கின்றார். அவர் ஆதி கிருபையின் அல்லது சாராளின் உடன்படிக்கையினைக் குறிப்பிடவில்லை; ஏனெனில் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களென, கிறிஸ்துவினுடைய மணவாட்டியின் அங்கத்தினர்களென, அவருக்கு உடன்சுதந்தரர்களென, தேவனுடன் உள்ள நம்முடைய உறவிற்கான ஆதாரம்/உரிமை, அந்த ஆதி உடன்படிக்கையின்கீழே காணப்படுகின்றது என்று அவர் சுட்டிக்காண்பித்துள்ளார். நமது கர்த்தர் இயேசு தம்முடைய கீழ்ப்படிதலின் காரணமாக, அனைத்திற்கும் சுதந்தரவாளியானார்; ஆதி உடன்படிக்கையின் சுதந்தரவாளியானார். நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கும் சுதந்தரவாளியானார்; ஜனங்களில் யாரும் - யூதர்களும் சரி, புறஜாதிகளும் சரி - யாரும் அவரோடுகூட இருக்கவில்லை; ஆனாலும் தேவனுடைய கிருபையினால் ஓர் ஏற்பாடு பண்ணப்பட்டது; நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்ற பிரகாரம், நியாயப்பிரமாண உடன்படிக்கை செத்துப்போயுள்ளதை, சிலுவையில் அறையப்பட்டுள்ளதைக் காணும் எந்த ஒரு யூதனும், கிறிஸ்துவுடன் ஒப்பந்தம் பண்ணிக்கொள்ளலாம். இவர்கள் புது உடன்படிக்கைக்காகவும், பூமிக்குரிய தளத்தில் உள்ளோருக்கு மாத்திரம் செயல்படும் அதன் ஏற்பாடுகளுக்காகவும் காத்திருக்க வேண்டியதில்லை. விசுவாசத்தினாலான நீதிமானாக்கப்படுதல் மற்றும் மரணபரியந்தமான அர்ப்பணிப்பு மூலம், இவர்கள் புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட, கிறிஸ்துவுடன் நிச்சயிக்கப்படப் பாத்திரவான்களாகக் கருதப்படுகின்றனர். இதுபோலவே கேட்கும் செவிகள் மூலமும், விசுவாசக் கண்களினால் பார்ப்பதின் மூலமும், தேவனால் தயவுபெற்ற புறஜாதிகளும் பிற்பாடு மேற்கூறப்பட்டுள்ள அதே வழிமுறையின் வாயிலாகக் கடந்துவருவதற்குச் சிலாக்கியம் பெற்றுக்கொண்டனர்; ஆனால் புறஜாதிகள் விஷயத்தில் அவர்கள் தங்களை நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மரித்துப்போனவர்களாக எண்ணிக்கொள்ள வேண்டியதின் அவசியம் இருப்பதில்லை; ஏனெனில் அதன்கீழ் அவர்கள் ஒருபோதும் காணப்பட்டதில்லை. ஆபிரகாம் தனது குமாரனைப் பலியாக ஒப்புக்கொடுத்த காரியத்தில் நிழற்படுத்தப்பட்டுள்ளபடி - கிறிஸ்துவின் மரணத்தை, ஆதி உடன்படிக்கைக்கான இரத்தம் என்று அடையாளம் கண்டுகொள்வதினால், புறஜாதிகளும் நீதிமான்களாக எண்ணப்படுகின்றனர்; நீதிமானாக்கப்பட்ட

தங்கள் சரீரங்களை இவர்கள் கர்த்தருக்குப் பலிகளென ஒப்புக்கொடுக்கையில், இவர்களும் யூதர்களைப்போலவே அதே பரிசுத்த ஆவியினால், அதே சரீரத்தில் - அதாவது கிறிஸ்துவின் சரீரத்தில் உடன் அங்கத்தினர்களாகுவதற்கு ஏதுவாக ஜெநிப்பிக்கப்படுகின்றனர்.

இப்பொழுது நாம் கேள்வியினுடைய மற்றொரு பாகத்திற்குக் கடந்துவருகின்றோம்: மோசேயின் நாட்கள் துவங்கி, முதலாம் வருகை மட்டும் நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ்த் தங்களைக் கட்டப்பட்டுள்ளவர்களாக வைத்துக்கொண்ட யூதர்களுக்கும், இன்னுமாக அக்காலத்திற்குப் பின்னர் நியாயப்பிரமாண உடன்படிக்கை மரித்துப்போயுள்ளதை உணர்ந்துகொள்ளாதவர்களும், ஆவிக்குரிய சந்ததியார் நிறைவடைந்து மகிமையடைவதுவரை, அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கை செத்துப்போன காரியத்தைப் புரிந்துகொள்ளாதவர்களுமான யூதர்களுக்கும் - தேவன் என்ன ஏற்பாடு செய்திருக்கின்றார்? ஒருவேளை இவர்கள் தேவனுடைய விசேஷித்த இரக்கங்கள் தொடர்புடைய விஷயத்தில் அனைத்துப் பங்கையும், சிலாக்கியங்களையும் இழந்துபோய்விட்டார்களானால், இவர்கள் எங்கு இடம்பெறுவார்கள்? எங்கள் பதில் என்னவெனில்: ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, இன்னும் மற்றவர்களும், அதாவது நியாயப்பிரமாண உடன்படிக்கை வருவதற்கு முன்பு வாழ்ந்தவர்கள் அந்த உடன்படிக்கையினால் கட்டப்படவில்லை; எனினும் ஆபிரகாமின் உடன்படிக்கையானது கல்வாரியில் உறுதிப்படுத்தப்படுவது வரையிலும், இவர்கள் முழுமையான விதத்தில் ஜீவனுக்கு ஏதுவாய்த் தீர்க்கப்படவில்லை. கல்வாரிக்குப் பிற்பாடு இவர்களது விசுவாசமானது, அந்தப் பலியின் புண்ணியங்களில் ஒரு பங்கினை இவர்களுக்கு உறுதிப்படுத்தினது. இதுபோலவே நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய காலப்பகுதி முழுவதும், அதாவது அது சிலுவையில் அவமாக்கிப் போடப்படுவதற்கு முன்பு வரையிலும்கூட முற்பிதாக்கள் வாழ்ந்துவந்தார்கள்; இவர்கள் நியாயப்பிரமாணத்தினால் கட்டப்பட்டவர்களாக இருப்பினும், இதற்கும் மேலாக இவர்கள், ஆணையினால் உறுதிப்படுத்தப்பட்ட (சாராளின்) கிருபையின் ஆதி உடன்படிக்கையில், ஜீவனுள்ள விசுவாசத்தை வைத்திருந்தவர்களாய்க் காணப்பட்டார்கள். ***இயேசு பரமேறி நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்து, விசுவாசிகளின் சார்பாகக் கல்வாரி பலியினுடைய புண்ணியத்தினைச் சமர்ப்பித்தவுடனே, இந்தக் கிருபையில் தங்களுக்கான பங்கிற்கு முற்பிதாக்கள் உரிமையுடையவர்களெனத் தெய்வீகப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டார்கள்.*** இவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கை உயிரோடு இருந்த காலக்கட்டத்தில் வாழ்ந்தவர்களாக இருப்பினும், அவ்வுடன்படிக்கையின் மரணத்தை முன்னமே பார்த்தவர்களாகவும், அதன்மேல் நம்பிக்கையை வைக்காதவர்களாகவும், மேலான கிருபையின் உடன்படிக்கையில் நம்பிக்கை வைத்தவர்களாகவும் காணப்பட்டார்கள்; ஆகையால் இவர்கள் ஏற்றவேளையில் உயிர்த்தெழுதலில் வருவார்கள்; அதுவும் இவர்கள் எந்த உடன்படிக்கையின்கீழ்க் காணப்பட்டார்களோ, அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையுடனான தங்களது உறவின் காரணமாக, இந்த உயிர்த்தெழுதலுக்கு வருவதில்லை; இவர்களில் சிலரால் அறியக்கூடப்படாத புது உடன்படிக்கையுடனான தங்களது உறவின் காரணமாகவும் இந்த உயிர்த்தெழுதலுக்கு வருவதில்லை; ***மாறாக (சாராளின்) கிருபையின் ஆதி உடன்படிக்கையுடனான தங்களது உறவு மற்றும் அந்த உடன்படிக்கையிலுள்ள விசுவாசத்தின் காரணமாகவே ஆகும்.***

இப்படியாக வேதவாக்கியங்கள், கடந்த காலங்களிலுள்ள இந்த உண்மையுள்ளவர்களைக் கிருபையின் உடன்படிக்கைக்குக் கீழாகக் கருதுகின்றது. அப்படியானால் விசுவாசத்தினுடைய இந்த உயர்தளத்தில் ஜீவித்திடாத அந்தப் பூமிக்குரிய (மற்ற) இஸ்ரயேலர்கள்குறித்து நாம் இப்பொழுது என்ன சொல்வது? இத்தகையவர்களையே "இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்துவருகிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று

நம்பியிருக்கிறார்கள்” என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (அப்போஸ்தலர் 26:7). இவர்கள் அனைவரும் வஞ்சிக்கப்பட்டுள்ளார்களா? இவர்கள் அந்த விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்களா?

---

R5162 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நித்திய ஜீவன் பெற, தேவனோடு உடன்படிக்கையின் உறவு அவசியம்

## உடன்படிக்கையின் உறவு மனுக்குலத்துடன் மறுபடியும் ஏற்படுத்தப்பட வேண்டும்

எரேமியா 31:31-33 - வரையிலான வசனங்களில், “இஸ்ரயேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்... அந்நாட்களுக்குப் பிற்பாடு” என்று வாசிக்கிறோம். “அந்த நாட்கள்” என்பது, இஸ்ரயேலர் நியாயப்பிரமாண உடன்படிக்கையை மீறினதால் தேவன் கொடுப்பார் என்று கூறியிருந்த “ஏழத்தனையான” தண்டனையைக் குறிக்கிறது என்று நாம் புரிந்துகொள்கின்றோம். இந்தப் புது உடன்படிக்கையானது இஸ்ரயேலோடு மாத்திரம் பண்ணப்படப் போகின்றது; ஏனெனில் புறஜாதியாருடன் தேவன் உடன்படிக்கை எதையும் பண்ண நோக்கம் கொண்டிருக்கவில்லை. இவ்வுடன்படிக்கை புது உடன்படிக்கை என்று அழைக்கப்படுவதற்குக் காரணம், இது தேவன் இஸ்ரயேலர்களுடன் செய்துகொண்டதும், அவர்களால் முறித்துப் போடப்பட்டதுமான பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் இடத்தை எடுத்துக்கொள்ளும் என்பதினாலேயே ஆகும். இஸ்ரயேல் இந்தப் புது உடன்படிக்கையின்கீழ் முழுமையாய் ஸ்திரப்பட்ட பிறகு, மற்ற அனைத்து ஜாதிகளும், நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டுள்ள பிரகாரத்தின்படி இந்த உறவுக்குள் வருவதற்குரிய சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இப்படியாக அகில உலகமும் இறுதியில் ஆசீர்வதிக்கப்படும்.

புது உடன்படிக்கையானது, அதை ஏற்றுக்கொள்பவர்களாகிய ஆபிரகாமின் சந்ததியினரோடு செய்யப்படும். ஜனங்கள் தேவனுடன் உறவுக்குள் நேரடியாக நுழைய அபாத்திரராயிருக்கிறபடியால், அந்த உடன்படிக்கைக்கு ஒரு மத்தியஸ்தர் வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், அவரது சரீரமாகிய சபையுமே, அந்த மத்தியஸ்தர் ஆவார்கள். இந்த மத்தியஸ்தர் கிட்டதட்ட முழுமையடைந்துவிட்டனர்/நிறைவடைந்துவிட்டனர் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

ஓர் உடன்படிக்கைக்கும், அதன் மத்தியஸ்தருக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைத் தேவனுடைய வசனமானது தெரிவிக்கின்றது. முழுமையாக மத்தியஸ்தம் பண்ணப்படாதது வரை, ஓர் உடன்படிக்கையினால் அமலுக்கு/செயல்பாட்டிற்கு வர முடியாது. நியாயப்பிரமாண உடன்படிக்கையை மத்தியஸ்தம் பண்ணும்போது மோசே முதலில் பலிகளைச் செலுத்தினார்; பிறகு அவர் மிருகங்களின் இரத்தத்தை எடுத்து, இரண்டு பாகமாகப் பிரித்து, ஒரு பாகத்தை நியாயப்பிரமாண புஸ்தகத்தின்மீதும், ஒரு பாகத்தை ஜனங்களின்மீதும் தெளித்தார் (யாத்திராகமம் 24:4-8; எபிரெயர் 9:19-24). இதை அவர் செய்து முடித்தப் பிறகு நியாயப்பிரமாண உடன்படிக்கையானது அமலுக்கு வந்தது. மேலும் அதன் நிஜமாகிய புதிய உடன்படிக்கை வந்து, அதை நீக்கிப்போடும் வரைக்கும் அவ்வுடன்படிக்கையானது தொடரும்.

புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகக் கிறிஸ்து இருப்பார். கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக நமது கர்த்தர் அவருடையதும், அவரது சபையினுடையதுமான மாபெரும் நிஜமான பலிகளைச் செலுத்திக்கொண்டிருக்கின்றார். அவர் இரத்தத்தைத் தெளித்து முடித்தவுடனே, உலகின்

பாவங்களுக்கான நிவர்த்திபண்ணப்படும். இது மோசே இரத்தத்தைப் புஸ்தகத்தின்மேல் தெளிப்பதற்கு ஒப்பானதாகும். இந்த ஏற்பாட்டை தெய்வீக நீதி ஏற்றுக்கொண்டு, பின்னர் மத்தியஸ்தர் நிஜமான தெளித்தலை ஜனங்கள்மேல் பண்ணுவார்; அதாவது தேவனுடன் முழுமையான இசைவுக்கு எப்படித் திரும்பவருவது என்பதை அவர்களுக்குக் காண்பிப்பார்.

இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டவுடனே புது உடன்படிக்கை, பழைய உடன்படிக்கையை விழுங்க ஆரம்பிக்கும். முதலாவது இதைப் பெறுபவர்கள் முற்பிதாக்கள் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மனுஷீக பூரணத்திற்கு மரித்தோரிலிருந்து எழுப்பப்படும் இவர்கள், பூமியில் உள்ள புதிய ஏற்பாடுகளின் கருவாகக் காணப்படுவார்கள்.

---

R1409 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சிங்கங்களின் கெபி

## தானியேல் 6:19-28

இஸ்ரயேல் தேசத்தின் விஷயத்திலும் சரி, தனி நபர்களின் விஷயத்திலும் சரி, அவர்கள் தொடர்ந்து நேர்மையுடனும், கீழ்ப்படிதலுடனும் காணப்படுவது வரையிலும், அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் மற்றும் காப்பாற்றப்படுவார்கள் என்றுள்ள வாக்குத்தத்தங்கள் அனைத்தும் காணப்பட்டாலும், இவர்களில் சிலர் விரும்பி மகா துன்புறுத்தல்களை மரணபரியந்தம் சகித்ததன் மூலம், தங்கள் நேர்மையினையும், உண்மையினையும் நிரூபிக்கத்தக்கதாகத் தேவன் அனுமதித்துள்ள உண்மையினை அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு நினைப்பூட்டுகின்றார். இவர்கள் "கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்; (தேவனுக்கு நேர்மையற்று போகச் செய்யும் இழிவான நிபந்தனைகளுக்கு இணங்காமல்) விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். (எபிரெயர் 11:37-38)

ஆனால் ஏன் இவர்கள் இதையெல்லாம் சகித்தார்கள்? அதுவும் இவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்பது தொடர்புடைய தேவனுடைய வாக்குத்தத்தங்களானது *நிறைவேற்றப்படவில்லை* என்பது தெளிவாகத் தெரிகின்றபோதிலும், இவர்கள் இதையெல்லாம் ஏன் சகித்தார்கள்? இவர்கள் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்களானால், இவர்கள் உயிர்த்தெழுதலில் ஒரு விசேஷித்த வெகுமதியினைப் பெற்றுக்கொள்வார்களெனத் தேவன் நேரடியாக வாக்குத்தத்தம் எதையேனும் இவர்களுக்குப் பண்ணியிருந்தாரா? இல்லை! அப்படியான எந்த வாக்குத்தத்தத்தையும் நியாயப்பிரமாணங்களில் அல்லது தீர்க்கதரிசிகள் மூலம் தெரிவிக்கப்பட்டதாக நாம் அறியோம்; எனினும் இவர்கள் "மேன்மையான உயிர்த்தெழுதலை" பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில், இதையெல்லாம் சகித்தார்கள் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். (எபிரெயர் 11:35)

இப்படியொரு நம்பிக்கை எதன் அடிப்படையில் இவர்களிடம் காணப்பட்டது? தேவனுடைய குணலட்சணம் பற்றியும், இஸ்ரயேலுக்கு அவர் பண்ணின வாக்குத்தத்தங்கள் பற்றியும் இவர்கள்

கொண்டிருந்த அறிவின் அடிப்படையிலேயே, இப்படியாக நியாயமாய் உய்த்துணர்ந்துகொண்டார்கள் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். மேன்மையான மற்றும் மகத்துவமான மற்றும் அசைவுறா நோக்கம்கொண்டவர்களாக இவர்கள்: "நாம் எந்த ஓர் ஆபத்திலும், என்ன நேர்ந்தாலும் தேவனுக்கு நேர்மையாயும், உண்மையாயும் காணப்பட வேண்டும்" என்றார்கள்; ஒருவேளை சிறு துன்பங்களின்போது வெளிப்படும் உண்மையினை தேவன் அங்கீகரிப்பாரானால், கடுமையான பரீட்சைகளின்கீழ் உண்மையை வெளிப்படுத்தும்போது, அவர் எவ்வளவுக்கு அதிகமாக அங்கீகரிப்பார். இத்தகைய உண்மையானது உயிர்தெழுதலின்போது, விசேஷித்த அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் இராது. இவர்கள் தேவனுக்காக அவ்வளவு அன்புகொண்டிருந்தபடியால், விசுவாசம் மற்றும் பொறுமைக்கான முழுமையான பரீட்சையானது தங்களுக்குக் கடந்துவந்து, தங்களைப் பாத்திரவான்களென நிரூபிக்கையில், இதற்குப் பலனாகத் தேவனுடைய அன்பு மற்றும் தயவானது கூடுமானமட்டும் முற்றும் முழுமையாகத் தங்களுக்கு வெளிப்பட வேண்டுமென ஏங்கினவர்களாய் இருந்தார்கள்.

சுவிசேஷ யுகம் மற்றும் விசேஷமாக இந்தக் கர்த்தருடைய நாளின் தெளிவான வெளிச்சத்தில், இந்த முற்பிதாக்களுக்குக் காத்திருக்கும் ஆசீர்வாதமான பலனை நாம் காண்கின்றோம்; இவர்கள் கிறிஸ்துவினுடைய ஆயிர வருஷ ஆளுகையின்போது, பூமியெங்கும் பிரபுக்களாக வைக்கப்படுவார்கள் (சங்கீதம் 45:16). இவர்களது காத்திருப்பின் காலம் நிறைவடைகையில், உயிர்த்தெழுதலில் இவர்கள் பரிபூரண மனுஷர்களாகவும், வல்லமையிலும், மகா கனத்திலும், மகிமையிலும் உயர்த்தப்பட்டவர்களாகவும் காணப்படுவார்கள். ***இவர்கள் என்றென்றைக்கும் நட்சத்திரங்களாகப் பிரகாசிப்பார்கள்*** (தானியேல் 12:3). ***சகல கனத்திற்கும் மற்றும் பின்பற்றுவதற்கும் பாத்திரமான சிறந்த மாதிரிகளாக இந்த நீதிமான்கள், சீர்ப்பொருத்தப்பட்ட மனித சந்ததியாருடைய நினைவில், நித்திய காலமும் காணப்படுவார்கள்.*** "எந்நாளும் அவர்கள் அசைவுறார்: நேர்மையுள்ளோர் மக்கள் மனதில் என்றும் வாழ்வர்." (சங்கீதம் 112:6 - திருவிவிலியம்)

---

R5181 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# மேசியாவின் இராஜ்யத்தைக்குறித்த ஒரு பொதுவான கண்ணோட்டம்

கிறிஸ்துவுடன்கூடப் பல்வேறு பிரதிநிதிகள் குழுவினர் இருப்பார்கள். திரள் கூட்டத்தார் சந்தேகத்திற்கிடமில்லாமல் அவர்களோடுகூடக் காணப்படுவார்கள். சாத்தான் தனக்கு உதவியாளர்களைப் பெற்றிருப்பதுபோல, கிறிஸ்துவுக்குப் பூமியிலும், பூமிக்குரிய பிரதிநிதிகள் காணப்படுவார்கள். கிறிஸ்துவின் இந்தப் பூமிக்குரிய பிரதிநிதிகளாக உண்மையுள்ள முற்பிதாக்கள் இருப்பார்கள்; இவர்கள் மேசியாவின் இராஜ்யத்தில் விருப்பத்துடனும், விவேகத்துடனும் ஊழியங்களைச் செய்வார்கள்.

## முற்பிதாக்களின் எதிர்கால பாடுகள்

ஏசாயா 11:9-ஆம் வசனத்தில்: "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தானியேல் 2:35, 44, 45-ஆம் வசனங்களை ஒப்பிடும்போது தீர்க்கத்தரிசனத்தில் இடம்பெறும் பர்வதம் எனும் வார்த்தையானது, இராஜ்யம் ஒன்றிற்கு அடையாளமாய் இருப்பதை உணர்ந்துகொள்ளுகின்றோம். மேசியாவின் இராஜ்யத்தில் தீங்கு செய்பவர்கள் யாவரின்மேல் ஒரு கட்டுப்பாடு அமலில் இருக்கும் என்று ஏசாயாவின் வார்த்தைகள்

சுட்டிக்காட்டுவதாகத் தோன்றுகின்றது. அதே சமயம் இராஜ்யமானது வளரவேண்டும் என்ற தானியேலின் கூற்றையும் நாம் நினைவில் வைக்கவேண்டும். கல்லானது ஒரு பெரிய பர்வதமாகி, பூமியையெல்லாம் நிரப்பிற்று என்பதாகத் தீர்க்கத்தரிசனம் காணப்படுகின்றது. இந்தத் தீர்க்கத்தரிசனம் நிறைவேறுவதற்கு அநேக வருஷங்கள் செல்லும்.

இராஜ்யமானது வல்லமைக்கு வந்தவுடனே, முற்பிதாக்கள் பரிபூரண மனித ஜீவிகளாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்படுவார்கள். பூமியெங்கும் பிரபுக்களாகக் காணப்படப்போகும் தேவனுடைய இந்த உண்மையுள்ள ஊழியர்களையே, சங்கீதம் 45:16-ஆம் வசனம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அநேகமாக இவர்கள் மீதமுள்ள மனுக்குலத்திற்குப் போதிக்கக்கூடிய ஒரு மாபெரும் வேலையை உடையவர்களாக இருப்பார்கள். இந்த ஊழியத்தை இவர்கள் செய்வதில் அதிக கனத்தைப் பெறுவார்கள்; ஏனெனில் கர்த்தருக்கு ஊழியம் செய்வது, எப்பொழுதுமே கனத்திற்கு உரியதாக இருக்கும்.

முற்பிதாக்களுக்குக் கொடுக்கப்படும் ஊழியமானது, தேவன் சாதாரணமாய் ஒரு பரிபூரண மனிதனிடம் ஒப்படைக்கும் காரியங்களைவிட மேலானதாக இருக்கும். அபூரண, விழுந்துபோன மனிதர்களைக் கையாண்டு, அவர்கள் பாவத்திலிருந்தும், அபூரணத்திலிருந்தும் மீட்படைய உதவிபுரிவதே, இந்த ஊழியத்தின் ஒரு பகுதியாக இருக்கும். ஒருவகையில் பார்க்கும்பொழுது இந்த வேலை விரும்பத்தகுந்த வேலையாக இருந்தாலும், அது ஒரு பூரண மனிதன் விரும்பக்கூடிய ஓர் ஊழியமாக இருக்காது. இந்த முற்பிதாக்கள் பரிபூரணமாக, கல்லறையிலிருந்து எழுந்துவருவார்கள். ஆனாலும் ஆயிரம் வருஷம் முழுவதும் அவர்கள் அபூரண சுற்றுச்சூழ்நிலைகளுக்கிடையேதான் இருப்பார்கள். மனுக்குலத்தின் உலகமானது, இப்பொழுது இருப்பதைப்போல அப்பொழுதும் அபூரணர்களாகவே இருப்பார்கள்; படிப்படியாக இந்த அபூரணங்கள் முடிவிற்கு வரும்.

ஆதாம் பரிபூரணராக சிருஷ்டிக்கப்பட்டார். அவர் பாவம் செய்த பிறகு பூமியைப் பண்படுத்தவும், அவர் எடுக்கப்பட்ட மண்ணுக்குத் திரும்பும்வரை முள் மற்றும் குருக்குகளுக்கிடையே போராடவும், ஏதேன் தோட்டத்திருந்து துரத்திவிடப்பட்டார். அவர் தனது சுற்றுப்புற சூழ்நிலையினிமித்தம் நிச்சயமாக கஷ்டப்பட்டிருந்திருப்பார். நமது கர்த்தர் இயேசுவும் பரிபூரணர் ஆவார். அவர் பரலோக மகிமையை துறந்ததோடல்லாமல், முப்பத்தி மூன்றரை (33½) ஆண்டுகள் அபூரண சூழ்நிலைகளுக்கிடையே வாழ்ந்தவராகவும், விழுந்துபோன இனத்தின் வலிகளையும் வருத்தங்களையும் தொடர்ந்து பார்த்து வந்தவராகவும் இருந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் மத்தியில் வாழ்வது என்பது, அவரது பலியில் பெரும் பகுதியாக இருந்திருக்க வேண்டும்; ஏனெனில் அவர் பரிபூரணர் எனும் காரியமே, அவரது பாடுகளை அதிகப்படுத்தியிருந்திருக்கும்.

ஆயிர வருஷ யுகத்தில் அபூரண சுற்றுப்புற சூழ்நிலைகளின் மத்தியில், பரிபூரண மனிதர்களாகக் காணப்படப்போகின்ற முற்பிதாக்கள், அநேகம் பாடுகள் வழியாக கடந்துபோக வேண்டியிருக்கும் என்பதாகத் தெரிகின்றது. நமது பரம பிதாவைக்குறித்து நமக்குத் தெரியும் என்பதினால், இந்த முற்பிதாக்கள் உண்மையுடன் சர்வவல்லவருக்கு ஊழியம்செய்தால், அவர்கள் எதிர்ப்பார்க்கக்கூடியதைக்காட்டிலும் அபரிமிதமாக அவர்களுக்குத் தேவன் வெகுமதியளிப்பார் என்று நம்புவதற்கு ஏதுவாக நாம் வழிநடத்தப்படுகின்றோம். அவர்கள் தொடர்ந்து கீழ்ப்படிந்தார்களானால், பிதாவானவர் என்ன வெகுமதி அருளுவார் என்று யாராவது கேட்கின்றீர்களா? நாம் அறிந்தவரை ஆயிர வருஷ யுகத்தில் எந்தவித விசேஷித்த வெகுமதியையும் பெறமாட்டார்கள் என்று பதிலளிக்கின்றோம். ஆனாலும் தேவனுடைய கண்ணோட்டத்தில் இது ஒரு சிறந்த ஊழியமாக இருக்கும்; இதற்கு வெகுமதியளிக்க சந்தோஷப்படுவார் என்று நாங்கள்

நினைக்கின்றோம். இதுவே தமது உண்மையுள்ள ஊழியர்களிடம் அவர் கையாளும் முறையாகக் காணப்படுகின்றது. பிதாவானவரின் சித்தத்தை நிறைவேற்ற நமது கர்த்தராகிய இயேசு மிகவும் மகிழ்ச்சியடைந்தவராக இருந்ததால், தேவன் அவருக்கு வெகுமதியளித்தார். நமது தேவன் கிருபையுள்ளவர்!

இந்த முற்பிதாக்களுக்கு ஆவிக்குரிய சுபாவம் கொடுக்கப்படுதைக்காட்டிலும், வேறு எந்த ஒரு பெரிய பரிசையும் எங்களால் எண்ண முடியவில்லை. வெகு காலங்களுக்கு முன்பாக, இவர்கள் பாவத்திற்கு இடங்கொடுப்பதைக்காட்டிலும் பாடுகளைத் தெரிந்துகொண்டு, தங்களது நேர்மையினை நிரூபித்தார்கள். எனினும் இவர்கள் ஆவியின் ஜீவிகளாக்கப்படுவார்கள் என்பதற்குத் தெளிவான வேதவாக்கியங்கள் எதுவும் இல்லை. இந்தக் காரியத்தைக் குறித்த எங்களது கருத்தெல்லாம் முற்றிலும் யூகமேயாகும்.

## உண்மையுள்ள பிரபுக்களுக்கான எதிர்கால வெகுமதி

இவர்கள் லேவி கோத்திரத்தாரால் நிழலாய் அடையாளப்படுத்திக் காண்பிக்கப்பட்டுள்ள காரியமே, இவர்கள் ஆவியின் சுபாவத்தில் பங்குபெற்று, திரள்கூட்ட வகுப்பாரில் அங்கங்களாவார்கள் என்று எங்களை யூகிக்க வழிநடத்தினது. இந்தக் கோத்திரத்தாருக்கு நிலங்களில் சுதந்தரம் இல்லாதது, முற்பிதாக்களுக்குப் பூமியில் சுதந்தரம் இல்லாதை சுட்டிக்காட்டுகின்றது. இவர்கள் பூமியெங்கும் பிரபுக்களாக உயர்த்தப்படுவது மிக பெரிய வெகுமதியாக இருக்கும் என்று நாம் நினைக்கலாம் (சங்கீதம் 45:16). முற்பிதாக்களின் அளவுக்குக் கடினமான அனுபவங்களுக்குள் கடந்துசென்ற திரள்கூட்டத்தாருக்குத் தேவன் ஆவிக்குரிய சுபாவத்தைக் கொடுக்கப்போகிற காரணத்தாலும், ஆவிக்குரிய தளத்தின் கீழ்நிலை ஜீவனானது, மாம்சீக தளத்தின் உயர்நிலை ஜீவனைவிட மேலானதாக இருக்கும் காரணத்தாலும், திரள்கூட்டத்தார் தேவனுடைய கரத்திலிருந்து முற்பிதாக்களைக்காட்டிலும் மேலான ஆசீர்வாதங்களைப் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள்.

பரலோக பிதாவானவர், திரள்கூட்டத்தாருக்கு ஆவிக்குரிய தளத்தில் ஓர் இடத்தை ஏற்பாடு செய்ய விருப்பம் உள்ளவராயிருக்கின்றபடியாலும், அவர் நீதியின் சில பொதுவான கொள்கைகளின்படி இயங்கி வருகின்றபடியாலும், மீதமுள்ள மனுக்குலத்தாரைக்காட்டிலும் முற்பிதாக்களுக்கு மேன்மையான ஏதோ ஒன்றை வைத்திருப்பார் என்று எங்களது மனம் நினைக்கின்றது. தாங்கள் நேர்மையாய் அவருக்குக் காணப்படுகின்றனர் என்று திரள்கூட்டத்தார், முற்பிதாக்களைக்காட்டிலும் அதிகமாய் மெய்ப்பித்துக் காட்டவில்லை என்று நாங்கள் புரிந்துகொள்கின்றோம். திரள்கூட்டத்தார் வெளிப்படுத்தியதைக்காட்டிலும், ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை பலியாகக் கொடுக்க அழைக்கப்பட்டபோது, பெரும் அளவில் நேர்மையினை வெளிப்படுத்திக் காண்பித்தார்.

மேலும் ஆதியாகமம் 17:8-ஆம் வசனத்தில் தேவன் ஆபிரகாமை நோக்கி: "நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசம் முழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாய்க் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன்" என்று கூறினார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஓர் அடி நிலத்தையாகிலும் ஆபிரகாமுடைய கையாட்சிக்கு கொடுக்கவில்லை (அப்போஸ்தலர் 7:5) என்றும், பிற்பாடு அவர் அதைப்பெற்று, அதன்பிறகு தனது சந்ததியினருக்குத் தருவார் என்றும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர், பரிசுத்த ஸ்தேவான் கூறியுள்ளார். தேசமானது ஆபிரகாமுக்கும், அவரது சுதந்தரர்களுக்கும் கொடுக்கப்பட்டு, பிறகு பூமி அவரது வித்திற்கும், பொதுவான மனுக்குலத்திற்கும் விட்டுவிடப்படும் என்றால், இது முற்பிதாக்கள் ஆவியின் சுபாவத்திற்குக் கடந்துசெல்வார்கள் என்று குறிப்பதாகத் தோன்றுமல்லவா?

இதே கருத்து, வெளிப்படுத்தின விசேஷத்திலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் விடுதலையாகி, ஜனங்கள் எந்த அளவுக்கு தேவனுக்கும், நீதியின்

கொள்கைகளுக்கும் நேர்மையாயிருக்கின்றார்கள் என்று அவர்களைப் பரீட்சிக்கும்படி செல்வார். இந்தப் பரீட்சையின் முடிவில் சிலர் விழுந்துபோவார்கள். (வெளிப்படுத்தல் 20:7-10)

"அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது" என்று நாம் வாசிக்கின்றோம் (வெளிப்படுத்தல் 20:9). "பிரியமான நகரம்" என்பது புதிய எருசலேமை - மகிமையடைந்த சபையைக் குறிக்கின்றது, மாறாக மாம்சத்தில் உள்ள சபையை அல்ல. சாத்தானால் தூண்டப்படும் கலகமானது, பூமியின் பிரபுக்களுக்கு எதிராக மாத்திரமல்லாமல், கிறிஸ்துவுக்கும் எதிரான கலகமாய்க் காணப்படும்.

அக்காலக்கட்டத்தில் சரீரத்திலும், ஆற்றல்களிலும் பரிபூரணத்தை அடைந்து காணப்படும் ஜனங்கள், பரிசுத்தவான்களுடைய பாளயத்தை வளைந்துகொள்ளச் சேர்ந்துகொள்வார்கள். சபையானது ஆவியின் ஜீவிகளாக இருப்பதால், காணக்கூடாத ஆவியின் ஜீவிகளை மனிதர்கள் தாக்கமுடியாது என்பதால், இங்குக் குறிப்பிடப்படும் பரிசுத்தவான்கள் என்பது சபை அல்ல என்று உறுதியாகுகின்றது. மகா பிரிட்டனில், ஜனங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க பார்லிமெண்ட்டுக்குச் செல்வதுபோல, மனுக்குலத்திலுள்ள கலகக்கார வகுப்பாரும் தங்களது உண்மையுள்ள பிரபுகளுக்கு எதிராகச் செல்வார்கள். அவர்கள் பின்வருமாறு: "இந்த ஆளுகையை எங்களிடம் கைமாற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது. இனிமேலும் தொடர்ந்து நீங்கள் அதிகாரத்தில் இருப்பதைக்குறித்து நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம்" எனச் சொல்லக் கேட்போம் என்று யூகிக்கின்றோம். மேசியாவின் பூமிக்குரிய இராஜ்யத்திற்கு விரோதமாகக் கலகம்செய்வதின் மூலம், இவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகஞ்செய்கிறவர்களாய் இருப்பார்கள். இதன் காரணமாக தெய்வீக நியாயத்தீர்ப்பானது "வானத்திலிருந்து அக்கினியை" அனுப்பி, அவர்களை மேற்கொள்ளும்.

இந்தக் கலகம் ஆயிரம் வருஷ யுக முடிவில் நடக்க இருப்பதாலும், அந்தச் சமயத்தில் மனுக்குலமானது பூரணத்தை அடைந்திருப்பதாலும், உலகத்தின் ஜனங்களிடமிருந்து முற்பிதாக்கள் இப்படிப் பிரித்துக்கூறப்பட்டுள்ள காரியமானது, தேவன் அவர்களுக்கென்று ஒரு விசேஷித்த நோக்கத்தை உடையவராயிருக்கின்றார் என்பதாகத் தெரிவிப்பதாகத் தெரிகின்றது. பாளயம் என்ற வார்த்தை ஒரு தற்காலிக நிலையை அல்லது ஏற்பாட்டைக் குறிக்கின்றது, மேலும் இது தேவன் அவர்களுக்கென்று சில விசேஷித்த காரியத்தை வைத்திருக்கின்றார் என்றும் சுட்டிக்காட்டுகின்றது.

இந்த முற்பிதாக்கள் என்றோ ஒரு நாள் ஆவிக்குரிய சுபாவத்தைப் பெறுவார்கள் என்ற நமது யூகம் உண்மையாயிருந்தால், அந்தச் சுபாவத்தை அடைய அவர்கள் மறுபடியும் மரிக்கவேண்டிய அவசியம் இருக்காது என்பதை நாம் எளிமையாகப் புரிந்துகொள்ளலாம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிருடன் இருக்கும் கிறிஸ்துவின் சரீர அங்கங்கள், "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே" மறுரூபமாக்கப்படுவதுபோல, முற்பிதாக்களும் தங்கள் மாற்றத்தை அடையலாம். இப்படியாக அவர்கள் மாம்சீக தளத்திலிருந்து ஆவிக்குரிய தளத்திற்கு மாற்றப்படுவார்களானால், கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் உண்மையாக இருந்த காரணத்தால், அவர்கள் பரிபூரண மனித சுபாவத்திற்குப் பதிலாக பரிபூரண ஆவியின் சுபாவத்தைப் பரிசாகப் பெற்றுக்கொள்வார்கள்.

R2372 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## மேசியாவின் இராஜ்யம் குறித்து முன்னறிவிக்கப்பட்டுள்ளது

**ஏசாயா 11:1-10**

நம்முடைய பாடத்தின் கடைசி வசனமானது, ஆயிர வருஷ காலங்களைச் சுட்டிக்காட்டுகின்றது; இன்னுமாக அவ்வசனமானது புறஜாதிகள் ஆசீர்வதிக்கப்படுதல் தொடர்புடைய ஈசாயின் மற்றொரு வேரைக்குறித்தும், ஜனங்கள் அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒரு கொடி/சின்னம் அல்லது மாதிரி குறித்தும் தெரிவிப்பதாகத் தெரிகின்றது. இன்னுமாக ஆபிரகாம் மற்றும் தாவீதின் ஆவிக்குரிய சந்ததியார் இராஜ்யத்தின் மகிமையில் உயர்த்தப்பட்ட பிற்பாடு, அதே வேரிலிருந்து ஒரு பூமிக்குரிய சந்ததியார், பரம சந்ததியாரோடு சம்பந்தப்பட்ட நிலையில் உயர்வான நிலைக்குக் கடந்துவருவார்கள் என்றும் சுட்டிக்காட்டப்படுவதாக நாம் புரிந்துகொள்கின்றோம்; மேலும் இவர்கள் மனுக்குலத்தின் உலகை ஆசீர்வதிக்கும் வேலையில் பரலோக இராஜ்யத்தின் பிரதிநிதிகளாகக் காணப்படுவார்கள் என்றும் சுட்டிக்காட்டப்படுவதாக நாம் புரிந்துகொள்கின்றோம். கிறிஸ்துவும், சுவிசேஷ யுகத்திலுள்ள அவரது ஆவிக்குரிய சபையும் வாக்களிக்கப்பட்ட சந்ததியாராக இருப்பினும், இவர்களுக்குக்கீழ் மற்றொரு சந்ததியார் காணப்படுகின்றனர் என்றும், இவர்கள் மனுக்குலம் ஆசீர்வதிக்கப்படுவதற்குக் கர்த்தரால் பயன்படுத்தப்படுவார்கள் என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் உரோமர் 4:16-ஆம் வசனத்தில் சுட்டிக்காண்பித்துள்ளதாகத் தெரிகின்றது. இந்த மற்ற சந்ததியார்குறித்து எபிரெயர் 11:39-40-ஆம் வசனங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது; இங்கு அப்போஸ்தலன் பூர்வ காலத்தில் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட உண்மையுள்ள பாத்திரவான்களைக்குறித்துக் குறிப்பிட்ட பிற்பாடு, இவர்கள் சுவிசேஷயுக சபையார் அல்ல, சபையாகிய இராஜ்ய வகுப்பார் அல்ல என்று திட்டவட்டமாய்த் தெரிவித்துள்ளார்; மேலும் இவர்கள் விசுவாசம் காரணமாய் நற்கீர்த்திப் பெற்றுள்ளபடியினால், ஆதி வாக்குத்தத்தத்தில் ஒரு பங்கினை அடைவார்கள் மற்றும் புறஜாதி-உலகத்தை ஆசீர்வதிக்கும் வேலையில் பங்கெடுப்பார்கள்; எனினும் சபையாகவோ அல்லது சபையில் ஓர் அங்கமாகவோ அல்ல. "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபிரெயர் 11:40). ஆவிக்குரிய இராஜ்யத்தினுடைய ஊழியங்களின்கீழ், மனித பூரணத்திற்குத் திரும்பக்கொண்டுவரப்பட்ட முற்பிதாக்கள் பிரபுக்களாகவும், ஆவிக்குரிய கண்களுக்குப் புலப்படாத இராஜ்யத்தின் பிரதிநிதிகளாகவும் மாத்திரம் காணப்படாமல், இன்னுமாக இராஜ்யத்தின் பிரமாணங்களுக்கு - புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு மனுக்குலத்தார் உண்மையாய்க் கீழ்ப்படிவார்களானால், அவர்கள் என்ன அடைவார்கள் என்பதற்கு இந்த முற்பிதாக்கள் மனுக்குலத்திற்கு முன்பு பிரம்மாண்டமான சின்னங்களாகவும் அல்லது மாதிரிகளாகவும் நிறுத்தப்படுவார்கள்.

R4881

# நேர்மையாய் இருத்தல் எனும் மாபெரும் பரீட்சை

ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனுஷர்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கையில், மனுக்குலத்தின் உலகமானது இறுதி பரீட்சைக்குள்ளாக்கப்படுவார்கள்; அவர்களது மனுஷ சுபாவத்தின் பூரணம் பற்றினதாக இல்லாமல், தேவனுக்காக அவர்கள் கொண்டிருக்கும் நேர்மை பற்றினதாகவே அப்பரீட்சை காணப்படும். இந்த அம்சத்தின் அடிப்படையிலேயே தாயாகிய ஏவாளுக்கான பரீட்சையும் காணப்பட்டது. "தேவனுக்கு நேர்மையாய் இருப்பது" என்பதின் அர்த்தம் தொடர்புடைய விஷயத்தைப் புரிந்துகொள்வதில் அல்லது கீழ்ப்படியாமை என்றால் என்ன என்ற விஷயத்தைப் புரிந்துகொள்வதில் ஏவாள் வஞ்சிக்கப்படவில்லை. தேவன் அவளுக்கு முன்னெச்சரிக்கை கொடுத்திருந்தார். எது சரி என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவள் பின்விளைவுகள் குறித்த விஷயத்திலேயே வஞ்சிக்கப்பட்டிருந்தாள். இப்படியாகவே சாத்தானின் விஷயத்திலும் காணப்பட்டது. இவரும் தனது நடக்கையின் விளைவு குறித்த விஷயத்தில், தன்னை வஞ்சித்துக்கொண்டார்; கர்த்தரைப் பொருட்படுத்தாமல், தன்னுடைய திட்டங்களைத் தன்னால் நிறைவேற்றிவிட முடியும் என்று இவர் சிந்தித்துக்கொண்டதில் வஞ்சிக்கப்பட்டுப்போனார்.

இப்படியாகவே ஆயிர வருஷ யுகத்தின் முடிவிலும் காணப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம். தாங்கள் மேற்கொள்ளும் போக்கினுடைய விளைவு தொடர்புடைய விஷயத்தில் மனுக்குலத்திலுள்ள சிலர் வஞ்சிக்கப்பட்டுப்போவார்கள். தெய்வீகப் பிரமாணத்திற்கு முற்றிலும் நேர்மையாய்க் காணப்படும் அனைவரும், துன்மார்க்கரின் தவறுகளை அடையாளம் கண்டுகொள்வார்கள். ஆயிர வருஷ யுகத்தின்போது, மனுக்குலத்திற்கும், நீதியினுடைய முழுமையான கோரிக்கைகளுக்கும் இடையில் கிறிஸ்து மத்தியஸ்தராகக் காணப்படுவார்; மேலும், மனுக்குலம் பாதுகாக்கப்பட்ட வீட்டாராய்க் காணப்படுவார்கள். தீமையான ஆதிக்கங்கள் அனைத்தும் கட்டுப்படுத்தப்படுகையில், மனுக்குலமானது தேவனுடைய எதிர்ப்பார்ப்புகள் குறித்த முழுமையான அறிவிற்குள் வருவதற்குரிய அனுகூலமான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் திரும்பப்பெறுதலின் ஆசீர்வாதங்களை முழுமையாய் அனுபவித்தப்பிற்பாடு, அவர்கள் நீதியைக் கடைப்பிடித்திருக்கும் விஷயம் வெறும் கொள்கையாக இருக்கின்றதா அல்லது அவர்கள் எந்த ஓர் ஆதிக்கங்களினாலும் நீதியினின்று விலகிவிடாதபடிக்கு தேவனுக்கும், நீதிக்கும் இருதயத்தில் நேர்மையாய் இருக்கும் நிலைமையினை அடைந்திருக்கின்றார்களா என்பதை அறிந்துகொள்ளத்தக்கதாக, அவர்களுக்குப் பரீட்சை வருவது ஏற்புடையதாகும்.

ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனுக்குலமானது பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பிற்பாடு, அவர்கள் முழுமையான கீழ்ப்படிதலைக் கற்றுள்ளார்களா அல்லது இல்லையா என்பதைக் காணத்தக்கதாக, அவர் அவர்களைப் பரீட்சிப்பார். தீமையான ஆதிக்கங்கள் கொஞ்சம் காலம் அவிழ்த்துவிடப்படும். ஒருவேளை மனுக்குலத்தார் கீழ்ப்படிதலுக்கான படிப்பினையை முழுமையாய்க் கற்றுக்கொள்ளவில்லையெனில், அவர்கள் நித்திய ஜீவனுக்கு அபாத்திரர்களாக இருப்பார்கள்; இன்னுமாக அவர்களது காரியம் கொள்கையோடு மட்டும் நின்றுவிட்டது என்பதும் நிரூபிக்கப்படும். தேவனுடன் இருதய-இணக்கத்திற்குள் முழுமையாய் வராத காரணமே, நேர்மை தொடர்புடைய இந்தப் பரீட்சையில், குறிப்பாக விழுந்துபோகச் செய்துவிடும்.

# தேவனுக்கு நேர்மையாய் இருக்கும் விஷயத்தில் அனைவரும் பரீட்சிக்கப்பட வேண்டும்

சாத்தான் தேவனுக்கான அவரது நேர்மையின் விஷயத்தில் பரீட்சிக்கப்பட்டார். ஆதாம் மற்றும் ஏவாள், தேவனுக்கான அவர்களது நேர்மையின் விஷயத்தில் பரீட்சிக்கப்பட்டார்கள். நோவாவின் நாட்களில் தேவதூதர்களும் இதேபோன்று பரீட்சிக்கப்பட்டார்கள் - அவர்கள் தவறானவைகளைவிட சரியானவைகளை விரும்பினார்களா என்றல்ல, மாறாக அவர்களது முழுமையான நேர்மை குறித்தே பரீட்சிக்கப்பட்டார்கள். இயேசுவும்கூடப் பிதாவுக்கு அவர் கொண்டிருந்த நேர்மையின் விஷயத்தில் பரீட்சிக்கப்பட்டார். ஆகையால் ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனுக்குலம் தேவனுடன் உள்ள அவர்களது இருதயத்தின் இணக்கம் தொடர்புடைய விஷயத்தில் பரீட்சிக்கப்படுவார்கள்.

அவர்களது பரீட்சையினுடைய தன்மை எப்படியாக இருக்கும் என்று நமக்குக் குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை. பூமியின் மீதான ஆளுகையானது, முழுமையாக மனுக்குலத்திற்குக் கொடுக்கப்படுவதற்கு முன்னதாக, அதைக் கைப்பற்றுவதற்குரிய ஆசையே, அநேகமாக அக்காலகட்டத்தில் மனுக்குலத்திற்கு வரும் சோதனையாக இருக்கலாம். ஒருவேளை இப்படியாக இருக்குமானால், ஆயிர வருஷ யுகங்களுடைய முடிவின்போது, பூமியை மனுக்குலத்திற்குத் தேவன் கொடுக்கவேண்டும் என்று நோக்கம்கொண்டிருக்கின்றார் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறபடியால், பூமியெங்கும் பிரபுக்களாக ஆளுகை செய்துகொண்டிருக்கும் முற்பிதாக்களிடமிருந்து அனைத்தையும் உடனடியாகப் பெற்றுவிட வேண்டுமென எதிர்ப்பார்ப்பு கொண்டிருப்பார்கள் (சங்கீதம் 45:16). நேரம் வருகையில் அவர்கள் அதிருப்தியடைவார்கள். "அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்." (வெளிப்படுத்தல் 20:9)

இது அக்காலத்தில் மனுக்குலத்திலுள்ள அநேகரின் நிலைமையினை எடுத்துக்காட்டும். அவர்களில் அநேகர் அமைதியற்று சஞ்சலமடைவார்கள். அவர்கள் பின்வருமாறு: "இந்த முற்பிதாக்கள் நமக்கு ஆளுகையைத் தராமல் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். நமக்கும், உலகத்தின் மீதான ஆளுகைக்கும் இடையில் தடையாக எதுவும் காணப்பட வேண்டாம்" என்று கூறுவார்கள். இம்மனப்பான்மையானது தேவனுக்கு நேர்மையற்று இருக்கும் காரியமாகும். அனைத்தும் தெய்வீக ஏற்பாட்டின்படியாகக் காணப்படுகின்றது என்பதை அறிந்தவர்களாக, அவர்கள் பின்வருமாறு கூற வேண்டும்: "ஆயிரம் வருஷங்கள் முடிந்துவிட்டது. இந்த ஆளுகை நமக்குக் கையளிக்கப்படும் என்று நாம் எண்ணியிருந்தோம். ஆனால் இக்காரியத்தை நாம் முழுவதுமாகத் தேவனுடைய கரங்களில் விட்டுவிடுவோம். ஆளுகையை நமக்குத் தருவது நல்லது என்று அவர் எண்ணுவாரானால் சந்தோஷம். ஆனால் காலம் முடிவடைந்தப் பிற்பாடும், ஆளுகையைத் தராமல் வைத்துக்கொள்வது நலம் என்று ஒருவேளை அவர் எண்ணுவாரானால், அதிலும் நாம் திருப்தியாய் இருந்துவிடலாம்." இப்படியாகவே நேர்மையின் மனப்பான்மை காணப்படும்.

இப்படியாகவே இன்றும் காணப்பட வேண்டும். ஒரு தேவன் இருக்கின்றார் என்றும், ஒரு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கின்றார் என்றும், இவர்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்றும் அடையாளம் கண்டுகொள்வதே, நம்முடைய மனப்பான்மையாகக் காணப்பட வேண்டும். ஏற்ற காலத்தில் தேவனுடைய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை முழுமையாக விவரிக்கப்படுவதை நாம் காண்போம்; இவை தேவன் அனுமதித்துள்ள அனைத்துக் காரியங்களுக்கும் இசைவாகவே காணப்படுகின்றது என்பதை நாம் காண்போம். இதை விசுவாசத்தினால் காண்பவர்கள், தேவனுக்குரிய தங்களது இருதயத்தினுடைய நேர்மையினை, இப்பொழுது நிரூபித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

# பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்

**1. (Q11:1) முற்பிதாக்கள் - இரண்டாம் மரணம் தொடர்பாக.**

கேள்வி (1907)-1- முற்பிதாக்களில் யாரேனும் இரண்டாம் மரணத்திற்குள் கடந்துபோயிருக்க வாய்ப்பிருக்கின்றதா?

பதில் - இல்லை என்று நான் எண்ணுகின்றேன். முற்பிதாக்களுடைய காலப்பகுதியில், தேவன் உலகத்திற்கு எந்த ஒரு வாய்ப்பையும் முன்வைக்கவே இல்லை; மேலும் இவர்கள் ஆதாமின் மரணத்தினின்று விடுதலைப்பண்ணப்படாததால், இவர்கள் இரண்டாம் மரணத்திற்குள் கடந்துபோக வாய்ப்பில்லை. ஆகையால் கிறிஸ்து ஆதாமின் பாவத்திற்காக மரிக்காதது வரையிலும், மரணத்திலிருந்து அவர் மரித்தோருக்கும், உயிரோடிருப்பவர்களுக்கும் நியாயாதிபதியாக இருக்கும்படி உயிர்த்தெழாதது வரையிலும், யார் ஒருவராலும் ஆதாமின் நிமித்தமான மரணத்தினின்று வெளிவர இயலாது; ஆதாமின் மரணத்தினின்று வெளிவராதது வரையிலும், ஒருவரால் இரண்டாம் மரணத்திற்குள் கடந்துசெல்ல முடியாது.

**2. (Q11:2) முற்பிதாக்கள் எப்படி ஆவிக்குரிய ஜீவன் பெற்றுக்கொள்வார்கள்?**

கேள்வி (1908)-2- ஒருவேளை ஜெநிப்பிக்கப்படுவதற்கும், பிற்பாடு ஆவிக்குரிய ஜீவியெனப் பிறப்பதற்கும் வேண்டி ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நபர்கள் சுவிசேஷயுகத்தில் வாழ்பவர்களாகவும், இந்த யுகத்தில் தங்களுக்கான பரீட்சைகளைப் பெற்றுக்கொள்பவர்களாகவும் காணப்பட வேண்டும் என்பது உண்மையானால் . . . . ஒருவேளை ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மாத்திரமே ஆவிக்குரிய சரீரங்களையும், ஆவிக்குரிய ஜீவனையும் பெற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பார்த்திடலாம் என்பது உண்மையானால், பின்னர் எப்படிச் சுவிசேஷ யுகத்திற்கு முன்பு வாழ்ந்து, மரித்தவர்களாகிய முற்பிதாக்கள், மனித பூரணத்திற்கு அப்பாற்பட்ட எதையேனும் பெற்றுக்கொள்ள முடியும்? ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் அவர்களுக்கு எப்படி ஆவிக்குரிய சுபாவம் கொடுக்கப்பட முடியும்?

பதில் - ஒரு வருஷத்திற்கு முன்னதாக நான் சகோதரர் உட்வர்த் (Bro. Woodworth) அவர்களுக்கு எழுதின கடிதத்தில், ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் முற்பிதாக்கள் ஆவிக்குரிய சுபாவங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்ற முடிவிற்கு நான் வழிநடத்தப்பட்ட சில காரியங்களைத் தற்செயலாகக் குறிப்பிட்டிருந்தேன்; அது திட்டவட்டமான கருத்தல்ல; ஆனால் அது என் மனதிற்கு நியாயமானதாகவும், திருப்திகரமாகவும் இருப்பதாக எண்ணுகின்றேன்; ஆனால் இப்படியாக எல்லோருக்கும் இருக்காது. நான் அக்காரியத்தினைச் சகோதரர் உட்வர்த் (Bro. Woodworth) அவர்களிடம் திணிக்கவோ அல்லது அது குறித்து வாக்குவாதம்பண்ணவோ முயலவில்லை; ஆனால் அவர் அக்கருத்தினைக் கிரகித்துக் கொண்டுள்ளார்; மேலும் எனக்கு அவர் எழுதின பதில் கடிதத்தில், அவரும் அதைக்குறித்துத் தற்செயலாகவே குறிப்பிட்டிருந்தார்; இன்னுமாக வெளியிடப்பட்டுள்ள அந்தக் கடிதத்தின் அப்பாகத்தை வெட்டிவிட நான் மறந்துவிட்டேன். சீக்கிரத்தில் அந்த ஆய்வுபொருள் தொடர்பாக, காவல் கோபுர வெளியீட்டில் கட்டுரை ஒன்றை எழுதவேண்டும் என்று இருக்கின்றேன். இப்படிச் செய்ய வேண்டுமென்று நான் கொஞ்சம் காலமாகவே யோசித்துக்கொண்டிருக்கின்றேன்; அக்கருத்திற்கான சான்றுகளைக் கேட்டு, அநேகம் கடிதங்கள் எனக்கு வந்துகொண்டிருக்கின்றது. இப்பொழுது இங்கு நான் இக்கேள்விக்குப் பதில் வழங்குவதைவிட, கட்டுரையில் நன்கு என்னால் விளக்கத்தைக்கொடுக்க முடியும். அது உங்களைத் திருப்திப்படுத்தும் என்று நம்புகின்றேன்.

**3. (Q11:3)** முற்பிதாக்களின் பரீட்சை.

கேள்வி (1910)-3- முற்பிதாக்களில் எவரும் இரண்டாம் மரணத்திற்குள் போகமாட்டார்கள் என்ற உறுதி வரும் அளவுக்கு, அவர்கள் போதுமான அளவுக்குப் பரீட்சிக்கப்பட்டுவிட்டார்களா? அவர்கள் மனதிலும், சரீரத்திலும் மட்டும் பூரணர்களாய் இருப்பார்களா?

பதில் - குணலட்சணம் தொடர்புடைய விஷயத்தில் அவர்கள் போதுமான அளவுக்குப் பரீட்சிக்கப்பட்டிருக்கின்றார்களா என்பது குறித்து நாங்கள் அறியோம். பரிசுத்த பவுல் அடிகளார் எபிரெயர்களுக்கு எழுதின கடிதத்தை வைத்துப்பார்க்கையில், கர்த்தர் இந்த முற்பிதாக்கள் குறித்தும், அவர்களது உண்மைத்தன்மைக் குறித்தும் மிக உயர்வான எண்ணங்கொண்டிருந்ததாகவும், தேவன் தமக்கு இவர்கள் ஏற்கத்தகுந்தவர்களாக/பிரியமானவர்களாக இருந்துள்ளதைச் சுட்டிக்காண்பித்துள்ளதாகவும் தெரிகின்றது. இப்பொழுது ஒருவேளை நீங்களும், நானும் நம்முடைய கணிப்பை இவ்விஷயத்தில் பயன்படுத்துவோமானால் - இப்படி நாம் செய்யக்கூடாது - எனினும் ஒருவேளை நமது கணிப்பைப் பயன்படுத்துவோமானால், உதாரணத்திற்குச் சிம்சோனுடைய விஷயத்தை எடுத்துக்கொள்கையில், இனிமேலும் பரீட்சிக்க வேண்டிய அவசியமில்லை எனும் அளவுக்குத் திவ்விய குணலட்சணத்திற்கு ஒப்பாக அவர் போதுமான அளவுக்குக் குணலட்சணத்தை உண்மையில் வளர்த்திருப்பாரா என்று யோசிக்கவே நாம் வழிநடத்தப்படுவோம். அவரது வாழ்க்கைக்குறித்த கொஞ்சமான பதிவுகள், கழுதையின் தாடை எலும்பைக்கொண்டு அவர் பல்லாயிரம்பேரைக் கொன்றுபோட்ட நிகழ்வு, பிற்பாடு அவரது மயிர்க்கத்தரிக்கப்பட்ட நிகழ்வு, இன்னும் இதர நிகழ்வுகள், இவரிடம் சிறப்பியல்புகள் இருந்ததற்கான நிரூபணங்களாக நமக்கு இருக்காது; எனினும் கர்த்தர் சிம்சோனின் குணலட்சணம் பற்றி ஏதோ ஒரு காரியத்தில் பிரியமடைந்திருக்கின்றார் என்று பதிவுகளில் பார்க்கின்றோம்; இது விஷயத்தில் நியாயந்தீர்க்க நீங்களோ, நானோ நிச்சயமாகத் திறம்பட்டவர்களல்ல. ஆனால் எங்களுக்குப் புரிந்தது என்னவெனில்: தேவன் தம்முடைய திட்டத்தில்/ஏற்பாட்டில், முற்பிதாக்கள் அனைவரையும் புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாட்டின்கீழ் வைப்பார்; இதுவே இவர்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாய்க் காணப்படும் என்று நாங்கள் எண்ணுகின்றோம், ஏனெனில் ஒருவேளை இவர்கள் ஏதேனும் சிறு தவறுகளைச்செய்யும் பட்சத்தில், இவர்கள் புதிய உடன்படிக்கையினுடைய மாபெரும் மத்தியஸ்தரின் மறைத்து மூடும் வல்லமையின்கீழே காணப்படுவார்கள்; மேலும் ஒவ்வொரு விஷயத்திலும் சரியான ஆவியினை நேர்த்தியாய் செயல்முறைப்படுத்துவதிலுள்ள இவர்களது அஜாக்கிரதைகள் அல்லது குறைவுகள் அல்லது தோல்விகள் அனைத்துமே, இவர்களையும், மற்றவர்களையும் கையாளுவதற்குரிய முழு வல்லமையைப் பெற்றிருக்கும் மாபெரும் மத்தியஸ்தரின் பார்வையின்கீழ்ப் பார்த்துக்கொள்ளப்படும். ஆகையால் முற்பிதாக்களானவர்கள் புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாட்டின்கீழும், மாபெரும் மத்தியஸ்தரின்கீழும் காணப்படுவார்கள் என்பதை அறிந்துகொள்வது மிகவும் நல்லதொரு காரியமாகவும், மிகவும் மகிழ்ச்சியான காரியமாகவும் இருக்கின்றது என்று நாங்கள் எண்ணுகின்றோம்.

**4. (Q12:1)** முற்பிதாக்கள் ஜீவனுக்கான பரீட்சையின்கீழ்க் காணப்பட்டார்களா?

கேள்வி (1910-Z4598)-1- முற்பிதாக்கள் ஜீவனுக்கான பரீட்சையின்கீழ்க் காணப்பட்டார்களா?

பதில் - முற்பிதாக்கள் ஜீவனுக்கான அல்லது மரணத்திற்கான பரீட்சையில் காணப்படவில்லை; இவர்களுக்கு மரணத்தீர்ப்புக் கொடுக்கப்படத்தக்கதாக, இவர்கள் ஒருபோதும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குரிய அறிவுப்பூர்வமான வாய்ப்புள்ள நிலைமையின்கீழ்க் கொண்டுவரப்பட்டதில்லை. நமது கர்த்தர் வருவதுவரையிலும், அறிவு மற்றும் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்குரிய இம்மாதிரியான

நிலைமை காணப்பட்டதில்லை. "கிருபையும், சத்தியமும் இயேசு கிறிஸ்துவினால் உண்டானது;" "அவர் ஜீவனையும், அழியாமையையும் வெளியரங்கமாக்கினார்." இவைகள் நமது கர்த்தருடைய நாட்களுக்கு முன்னதாக வெளியரங்கமாக்கப்படவில்லை; இக்காலங்களில் காணப்படும் இத்தகைய பொறுப்பானது அப்போது காணப்படவில்லை.

ஒருவிதத்தில் பார்க்கும்போது, யூத ஜனங்கள் நிழலான விதத்தில் நீதிமானாக்கப்பட்டிருந்தனர்; மேலும் ஜீவனா அல்லது மரணமா எனும் பரீட்சையிலும்கூட நிழலான விதத்தில் காணப்பட்டனர்; ஆனாலும் அது உண்மையாகவே நித்திய ஜீவன் மற்றும் மரணமாக இருக்கவில்லை, ஏனெனில் இவர்களால் நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடியாது; ஆகையால் இதன் கீழ் இவர்கள் ஒருபோதும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதில்லை என்பதைத் தேவன் முன்னமே அறிந்திருந்தார்; ஆகவே நியாயப்பிரமாணத்தினுடைய சாபத்தினின்று தங்களைத் தாங்களே விடுவித்துக்கொள்ளத்தக்கதாக இவர்கள் ஏதேனும் முயன்று பார்ப்பதைப் பொருட்படுத்தாமலேயே, இவர்கள் இதனின்று மீட்கப்படத்தக்கதாகத் தேவன் முன்னமே ஏற்பாடும் பண்ணிவிட்டார். ஆகையால் இவர்கள் ஜீவன் அல்லது மரணத்திற்கான பரீட்சையின்கீழ் நிழலான அல்லது அடையாளமான விதத்தில் மாத்திரமே காணப்பட்டனர்.

முற்பிதாக்கள் "தேவனைப் பிரியப்படுத்தினார்கள்" எனும் சாட்சியினைப் பெற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றனர். தேவன் தம்முடைய திருவுளசித்தத்தினை இவர்களுக்கு நியாயப்பிரமாணமென அல்லது இவர்கள் செய்ய வேண்டிய கடமையெனக் கொடுக்கமுடிகிற நிலை வருவதற்கு முன்னதாகவே, இன்னுமாய்த் தமக்குக் கீழ்ப்படியுங்கள் என்று இவர்களுக்குச் சொல்ல முடிகிற நிலை வருவதற்கு முன்னதாகவே, கீழ்ப்படிந்தால் நித்திய ஜீவனை வாக்களிப்பதாக இவர்களுக்குச் சொல்ல முடிகிற நிலை வருவதற்கு முன்னதாகவே, இவர்கள் அவரது சித்தத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு, அதைச் செய்யவும் தொடங்கின விதத்தில், இவர்கள் தேவனைப் பிரியப்படுத்தினார்கள். உலகில் மீட்பானது அப்போது நிறைவேற்றி முடிக்கப்படாமலிருக்க, ஆபிரகாம் தேவனிடத்திலுள்ள தனது விசுவாசத்தினை வெளிப்படுத்தினார். கிறிஸ்து அப்போது இன்னமும் வரவில்லை. ஆபிரகாம் அப்போது ஜீவனா அல்லது மரணமா எனும் பரீட்சையில் இல்லாமல் இருந்தும், தேவன் அவருக்குத் தமது தயவினை அருளினார் மற்றும் தம்மைப் பிரியப்படுத்தினதாகத் தெரிவித்தார். மேலும் இவரும் சரி, மற்ற அனைத்து முற்பிதாக்களும் சரி, பரிபூரண மனுஷீகத்திற்குரிய இந்த உயிர்த்தெழுதலை, மேன்மையான ஓர் உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்வார்கள் என்று அவரது வார்த்தைகள் தெரிவிக்கின்றன. ஆனால் மனுஷீக பரிபூரணம் என்பது கிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஆளுகையின்கீழ் மாத்திரம் வரும் என்பதால், ஆயிர வருஷ யுகத்தின் முடிவுவரையிலும் முற்பிதாக்கள் முழுமையான விதத்தில் தேவனிடம் அறிமுகப்படுத்தப்பட முடியாது.

ஆகையால் ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் இராஜ்யமானது, பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்படும் காலத்திற்கு முன்புவரையில், இவர்கள் முழுமையான விதத்தில் ஜீவனை உடையவர்களாய் இருக்கமாட்டார்கள். இதற்கிடையில் - அதாவது ஆயிர வருஷ காலத்தில், இவர்கள் மனுஷீக சுபாவத்தினுடைய பூரணத்தையும், இன்னுமாக மாபெரும் மத்தியஸ்தர் மூலம் மனுக்குலத்திற்குத் தேவனால் அருளப்படும் அனைத்து ஆசீர்வாதங்களையும் மாத்திரம் பெற்றிருப்பார்கள்.

ஆயிர வருஷ யுகம் முடிவதுவரையிலும், நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்களா என்று தீர்மானிக்கப்படுவதற்கு ஏதுவாய், முற்பிதாக்களானவர்கள் தேவனுடன் உண்மையான மற்றும் தனிப்பட்ட

உறவிற்குள் வரமாட்டார்கள்; ஏனெனில் அந்த யுகமானது, தற்காலத்திலுள்ள ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட வகுப்பாரைத் தவிர்த்து, மனுக்குலத்தாரில் யாரெல்லாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளப்போகின்றார்கள் என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகவே ஒதுக்கப்பட்ட காலப்பகுதியாக இருக்கும். ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனுக்குலம் யாவரும் சரீர பரிபூரணத்தினை எட்டியிருக்கும்போது, இவர்கள் நித்திய ஜீவன் பெறத் தகுதியானவர்களா அல்லது இல்லையா என்பது பிதாவினால் பரீட்சிக்கப்படும், அதாவது ஆதாம் பரிபூரணத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, இவர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரவானா அல்லது இல்லையா என்று பரீட்சிக்கப்பட்டது போன்றாகும்.

புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாடுகளின்கீழ் முற்பிதாக்களும் உலகத்தாரில் ஒரு பாகமாகக் காணப்படப்போவதினால், ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவு வரையிலும், இவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவதற்குரிய தங்களது பாத்திரத்தன்மை தொடர்புடைய தெய்வீக நீதியினை, தெய்வீக நீதிமன்றத்தின் முடிவினைப் பெறுவதில்லை; அதாவது உண்மையுள்ள மனுக்குலத்தாருக்கு நித்திய ஜீவன் எனும் மகா பலனைக் கொண்டுவருவதுபோல, முற்பிதாக்களுக்கும் கொண்டுவந்திடும் அந்த யுகத்தினுடைய முடிவின்போதுள்ள பரீட்சையானது முடிவடைவதற்கு முன்புவரையிலும், முற்பிதாக்கள் நித்திய ஜீவனைப் பெறுவதற்குரிய தங்களது பாத்திரத்தன்மை தொடர்புடைய தெய்வீக நீதியினைப் பெறுவதில்லை.

### 5. (Q13:1) ஆயிர வருஷ யுகத்தின்போது தேவனோடுள்ள முற்பிதாக்களின் உறவு.

கேள்வி (1911)-1- ஆயிர வருஷ யுகத்தின்போது, முற்பிதாக்கள் தேவனோடு உறவில் இருப்பார்களா?

பதில் - ஆம்! ஆயிர வருஷ யுகம் முழுவதிலும் முற்பிதாக்களானவர்கள், இந்தப் புதிய உடன்படிக்கையின் வாயிலாக, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் மூலமாகத் தேவனுடன் உடன்படிக்கையின் உறவில் காணப்படுவார்கள். ஆனாலும் ஆயிர வருஷ யுகத்தின் முடிவுவரை அவர்கள் தனிப்பட்ட விதத்தில், நேரடியான விதத்தில் தேவனுடன் உறவில் இருக்கமாட்டார்கள் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். ஆயிர வருஷ அரசாட்சியின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் அனைவரும், அவைகளை மாபெரும் மத்தியஸ்தர் மூலமாகவும், இன்னுமாக ஜாதிகள், ஜனங்கள், கோத்திரத்தார் மற்றும் பாஷைக்காரர் அனைவரின் சார்பிலும் தம்முடைய இரத்தத்தைக்கொண்டு அவர் முத்திரையிட்ட புதிய உடன்படிக்கையின் மூலமாகவும்தான் பெற்றுக்கொள்ள வேண்டும். தேவனுக்குத் தங்களுடைய நேர்மையினை ஏற்கெனவே நிரூபித்தவர்களாகிய முற்பிதாக்கள் விசேஷித்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்; அதாவது அவர்கள் உயிர்த்தெழுந்து வரும்போது மாம்சத்தில் பரிபூரணர்களாக வருவார்கள்; படிப்படியான முறையில் அவர்கள் பூரணத்தை அடைவதில்லை; அவர்கள் பூரண மனித சரீரங்களுடன் வருவார்கள்; அவர்களது மனங்களானது ஏற்கெனவே தேவனுடைய சித்தத்துடன் முழுமையாய் இசைவுபெற்றுக் காணப்படுவதினால், அவர்களுடைய சரீரங்களும் துவக்கம் முதலே தெய்வீகப் பிரமாணத்திற்கு முழு இசைவுடனே காணப்படும். எனினும் அந்த முற்பிதாக்கள் புதிய உடன்படிக்கையின்கீழ் அப்போது காணப்படுவதும், மத்தியஸ்தரின்கீழ் அப்போது காணப்படுவதும் அவர்களுக்கு மிகவும் நன்மையாக இருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்; ஏனெனில் அவர்களது கடந்த கால அனுபவங்களை வைத்துப்பார்க்கும்போது, அவர்கள் சில தவறுகள் செய்யலாம். ஏன்? எப்படி? ஏனெனில் நம்முடைய கணிப்பின்படி, அவர்கள் அதிகமான அனுபவங்களைப் பெற்றவர்களாக

இருப்பினும், சபைக்குக் கடந்துவந்த *முழு* அனுபவத்தையும் அவர்கள் பெறவில்லை. வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் முற்பிதாக்கள் மத்தியில், நாம் சிம்சோனைக் கவனிக்கின்றோம். சிம்சோன் எந்த விதத்திலாகிலும் தேவனுக்கு உண்மையற்றவர் என்று எண்ணுவதற்கு நம்மிடம் எந்தக் காரணங்களும் இல்லை; இவர் உண்மையுள்ளவராக இருந்தார்; இவர் கீழ்ப்படிதலுள்ளவராக இருந்தார்; தேவனிடத்தில் முழு விசுவாசம் உடையவராய் இருந்தார். இப்பண்புகளினாலேயே இவர் ஜெயங்கொண்டவரெனக் கருதப்பட்டார்; மேலும் எதிர்காலத்தில் (முற்பிதாக்களுக்கு) வரும் விசேஷித்த ஆசீர்வாதங்களில் பங்கடைபவர்களில் ஒருவராகவும் இவர் இருப்பார்; எனினும் பூரண புருஷனிடம் எதிர்ப்பார்க்கப்படும் இப்பண்புகள் பற்றின சகல அறிவையும் சிம்சோன் முழுமையாகவும், விரிவாகவும், பலவகையாகவும் பெற்றிருந்திருப்பார் என்று சொல்லும் காரியம் முற்றிலும் வேறுபட்ட காரியமாகும். ஆகையால் கொஞ்சமான அனுபவங்களின் காரணமாக, முற்பிதாக்களில் சிலர் மேசியாவினுடைய ஆளுகையின் போது எதேச்சையாக/தெரியாத்தனமாகச் சில தவறுகளைச் செய்துவிடலாம் என்று நாங்கள் எண்ணுகின்றோம். இப்படி நிகழுமானால், உடன்படிக்கையினுடைய இரத்தத்தின்கீழ்க் காணப்படுவதும், அவர்களுக்கும் தெய்வீக நீதிக்கும் இடையில் மத்தியஸ்தர் காணப்படுவதும், முற்பிதாக்களுக்கு அவசியமாய் இருக்கும்; மேலும் இதனால் ஆசீர்வாதமும் அடைவார்கள்.

**6. (Q14:1) முற்பிதாக்கள் - ஆவிக்குரிய சுபாவம் தொடர்பாக.**

கேள்வி (1911)-1- முற்பிதாக்கள் ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்பது உங்களது கருத்தாகக் காணப்படுகின்றதா? அப்படியானால் அவர்கள் திரள்கூட்டத்தாரைவிட உயர்வான சுபாவத்தை அடைவார்களா?

பதில் - இது விஷயத்தில் அன்பான நண்பர்களே எனக்கு எந்தத் தனிப்பட்ட கருத்துகளும் இல்லை. இதுகுறித்துக் கர்த்தர் எதுவும் எனக்குத் தெரியப்படுத்தவில்லை. கர்த்தர் தங்களிடம் அநேகம் காரியங்களை வெளிப்படுத்தி பேசிக்கொண்டிருக்கின்றார் என்று எண்ணி, எழுதப்பட்டவைகளைப் புறக்கணிக்கும் ஜனங்கள் எப்போதுமே காணப்படுகின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் அப்படிப்பட்டவர்களில் ஒருவனல்ல. நான் எழுதப்பட்டவைகளை மாத்திரமே அறிந்துள்ள சராசரியான மனுஷன். இத்தலைப்புத் தொடர்பாக நான் அறிந்துள்ளவைகள் அனைத்தையும் உங்களிடம் கூறிவிட்டேன்; அதாவது முற்பிதாக்கள் மேசியாவினுடைய ஆயிர வருஷ ஆளுகையின்போது, பூமி எங்கும் பிரபுக்களாகக் காணப்படத்தக்கதாக, மனித சுபாவத்தில் பூரணமடைந்த மனுஷர்களாக எழுந்துவருவார்கள் என்று தெரிவித்திருந்தேன்; மேலும் அக்காலத்தினுடைய முடிவின்போதுள்ள சில விஷயங்களைக்குறித்து நான் உங்களுக்கு ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருப்பவைகள் மறைமுகமாகச் சொல்லப்பட்டவைகளாய் இருக்கின்றன என்று என் மனதிற்குத் தோன்றுகின்றது. நிச்சயமாக எனக்குத் தெரியவில்லை, ஆனாலும் அப்போது தேவன் அவர்களுக்கு உயர்வான சுபாவம் ஒன்றை வெகுமதியாகக் கொடுப்பார் என்று மறைமுகமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதாக எண்ணுகின்றேன். இவ்வளவுதான் என்னால் சொல்லமுடியும். அது திரள்கூட்டத்தாரைக்காட்டிலும் ஏதேனும் உயர்ந்த சுபாவமா என்பது எனக்குத் தெரியாது; அப்படி இருக்காது என்றுதான் எண்ணுகின்றேன். எனக்குத் தெரியவில்லை. சிலசமயங்கள் "தெரியவில்லை" என்று சொல்ல முடிவது நல்லதுதான். நான் தவறே செய்யாதவன் என்றும், எனக்கு எல்லாமே தெரியும் என்றும் சில ஜனங்கள் என்னைக்குறித்துக் கூறிக்கொள்கின்றனர். ஆனால் இது உண்மையல்ல என்பதற்கு, நீங்கள் அனைவருமே சாட்சிகளாய் இருக்கின்றீர்கள்.

**7. (Q14:2) முற்பிதாக்கள் - ஆவிக்குரிய தளமா அல்லது இரண்டாம் மரணமா?**

கேள்வி (1911)-2- இரண்டாம் மரணத்திற்குள் கடந்துபோகாமல், எப்படி ஆயிர வருஷ யுகத்தின் முடிவில் முற்பிதாக்களினால் ஆவிக்குரிய தளத்தில் காணப்பட முடியும்?

பதில் - கேள்வியை எழுப்பியுள்ள சகோதரன் காரியங்களைப் (தெளிவாய்) புரிந்துகொள்ளவில்லை. பூர்வகாலத்து பாத்திரவான்கள் மாம்சத்தில் பூரண மனுஷர்களாக, பூமியின் பிரபுக்களாக, பரலோக இராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளென ஆயிரம் வருஷங்கள் செயல்பட்ட பின்னர், அவர்கள் ஆவிக்குரிய தளத்தில் ஒரு பங்கினை அருளப்பெறுவார்கள் என்றும், பூமிக்குரிய சுபாவத்திலிருந்து பரலோக சுபாவத்திற்கு மாறுதலை அடையப்பெறுவார்கள் என்றுமுள்ள யோசனையானது பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று நாங்கள் நம்புகின்றோம். இதைவிட எளிமையாக வேறு எப்படிச் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை; இதைச் சொல்லி முடித்துவிடுகின்றேன்.

**8. (Q14:3) முற்பிதாக்கள் - உடன்படிக்கை உறவுமுறை தொடர்பாக.**

கேள்வி (1911)-3- முற்பிதாக்கள் எப்போது தேவனுடன் உடன்படிக்கை உறவில் காணப்படுவார்கள்?

பதில் - புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாட்டின்கீழ் உயிர்த்தெழுந்தது முதல், இவர்கள் புதிய உடன்படிக்கையின் வாயிலாக தேவனுடன் உடன்படிக்கையின் உறவில் காணப்படுவார்கள்; ஆனாலும் ஆயிர வருஷங்களின் முடிவுவரை, அதாவது புதிய உடன்படிக்கையினுடைய மத்தியஸ்தர் அனைத்தையும் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு, புதிய உடன்படிக்கை இனிமேலும் இல்லை எனும் காலத்திற்கு முன்புவரை, இந்த முற்பிதாக்கள் பிதாவுடன் எந்த நேரடியான மற்றும் தனிப்பட்ட விதத்திலுள்ள உறவினையும் கொண்டிருப்பதில்லை. பின்னரே இவர்கள் தேவனுடன் தனிப்பட்ட உடன்படிக்கை உறவுமுறையில் காணப்படுவார்கள் - அதாவது நீங்களும், நானும் இப்பொழுது எப்படி கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவுகொண்டிருக்கின்றோமோ, அப்படியே ஆகும்.

**9. (Q14:4) முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல்.**

கேள்வி (1911)-4- முற்பிதாக்கள் எப்போது தங்களுடைய உயிர்த்தெழுதலை அடைவார்கள்?

பதில் - உலகத்தார் மத்தியில் இவர்களது உயிர்த்தெழுதல் முதலாவது சம்பவிக்கும்; இவர்களே பூமிக்குரிய சுபாவத்தில் உள்ளவர்களில் முதலாவது உயிர்த்தெழுதலை அடைபவர்கள் ஆவார்கள். சபை தனது உயிர்த்தெழுதலை முதலாவது அடைவாள்; அவளது கர்த்தரைப்போன்று ஆவிக்குரிய தளத்தில் அடைவாள்; ஆவிக்குரிய சுபாவத்தை, பரம நிலையை அடைவாள். பின்னர் இரட்சிப்பின் மற்ற பாகம் நடைபெறும், அதாவது உலகத்தின் இரட்சிப்பாகும்; இதில் முற்பிதாக்கள் முதலாவதாகத் தங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் முதலாவதாக அந்தத் தளத்தில் தங்கள் உயிர்த்தெழுதலையும் அடைவார்கள்; இது இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் நடைபெறும், ஏனெனில் இந்த இராஜ்யமே உலகத்தை ஆசீர்வதித்து, அவர்களைச் சீர்த்தூக்கிவிடும்.

**10. (Q15:1) முற்பிதாக்கள் பிராகாரத்தில் அடையாளம் காட்டப்படவில்லை.**

கேள்வி (1911 - Z4867)-1- முற்பிதாக்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் பிராகாரத்தில் அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றார்களா?

பதில் - இவர்களுடைய நாட்களில் நிஜமான ஆசாரியன் வரவில்லை; நிஜமான ஆசரிப்புக்கூடாரமும், பிராகாரமும் அப்போது ஏற்படுத்தப்படவில்லை. ஆகையால், இதில்

முற்பிதாக்களினால் இடம்பெற முடியாது. எனினும் இவர்களது நடக்கையில் வெளியரங்கமாக்கப்பட்ட இவர்களது இருதயங்களின்படி பார்த்தால், இவர்கள் விசுவாச வீட்டாரின் அங்கத்தினர்களாகிட வேண்டும்தான். எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இறுதியில் நிஜமான பிராகார நிலைமையாகிய, அதாவது நிஜமான லேவியர்களாகிய திரள்கூட்டத்தாரோடுகூட மற்றும் திரள்கூட்டத்தாரில் ஒரு பாகத்தினர் என முற்பிதாக்களுக்கு இடமளிக்கப்படும்.

**11. (Q15:2) முற்பிதாக்கள் - நீதிமான்களுடைய ஆவி பூரணராக்கப்படுதல்.**

கேள்வி (1913)-2- எபிரெயர் 12:23 "... பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்." இங்கு பரிசுத்த பவுல் அடிகளார் எந்த வகுப்பாரைக் குறிப்பிடுகின்றார்?

பதில் - இக்காரியத்தினை இரண்டு கண்ணோட்டங்களில் பார்க்க வாய்ப்புள்ளது, ஆனால் நாம் ஒன்றை மாத்திரம் குறிப்பிடப்போகின்றோம்; அதுவே சரியான கண்ணோட்டமும் ஆகும். மாற்று கண்ணோட்டத்தினை எடுப்பவர்களுடன் நாங்கள் சண்டையிடப்போவதில்லை, ஏனெனில் யாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் என்று அப்போஸ்தலன் விவரிக்கவில்லை; ஆனால் அவர் முற்பிதாக்கள் வகுப்பாரையே குறிப்பிட்டுள்ளார் என்று எண்ணுகின்றோம்; இப்படி அவர்களைத்தான் இந்த வசனத்தில் குறிப்பிட்டிருக்கின்றார் என நாங்கள் எண்ணுவதற்கான காரணம் என்னவெனில், அவர் சபை வகுப்பாரைக்குறித்து வேறொரு இடத்தில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகின்றது. அவர் சபையைப் "பரலோகத்தில் பேரெழுதப்பட்டவர்களாகிய முதற்பேரானவர்கள்" என்று குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகின்றது. லேவி கோத்திரம் ஒட்டுமொத்தமாக எப்படி ஆசாரியர்களை மாத்திரமல்லாமல், இஸ்ரயேலின் முதற்பேறானவர்களையும் அடையாளப்படுத்துகின்றதோ, அதுபோல முதற்பேறானவர்களின் சபையும் கருதப்படுகின்றது; ஆகையால் "பரலோகத்தில் பேரெழுதப்பட்ட முதற்பேறானவர்களின் சபை" எனும் வரியானது, சபையையும், திரள்கூட்டத்தாரையும் சேர்த்தே உள்ளடக்கியுள்ளது. ஆகையால் இப்படி இருவகுப்பாருமே உள்ளடங்குவார்களானால், மற்ற எந்த வகுப்பாரைக்குறித்து அவர் அவ்வசனத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும்? அவர் முற்பிதாக்களையும், அவர்களின் உயிர்த்தெழுதலின்போது அவர்கள் முன்புபோல் அபூரண ஜீவிகளாக இல்லாமல், பரிபூரண ஜீவிகளாக வருகையில், அவர்களது ஜீவன்கள், அவர்களது ஜீவனுக்கான ஆவி பூரணப்படுத்தப்பட்டிருக்கும் என்பதையும் குறிப்பிட்டுள்ளார் என்பது எங்களது கருத்தாக இருக்கின்றது. பெரும்பாலான மனுக்குலத்தார் படிப்படியாகவே பூரணமாக்கப்படுவார்கள்; மேலும் அப்போது பூரணராக்கப்பட்டிருக்கும் நீதிமான்கள் பொருத்தமட்டில், முந்தைய காலத்திலேயே, அவர்களுடைய இருதயங்கள் ஏற்கெனவே பரீட்சிக்கப்பட்டுள்ளபடியால், அவர்களுக்கே உரிய பிரம்மாண்டமான பங்கினைப் பெற்றுக்கொள்வார்கள்.

**12. (Q15:3) முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல்.**

கேள்வி (1914)-3- திரள்கூட்டத்தாருடைய கடைசி அங்கத்தினன் திரைக்கப்பால் கடந்துபோவதற்கு முன்னதாக, சகோதரர் ரசல் அவர்களே, முற்பிதாக்கள் உயிர்த்தெழுப்பப்படுவார்களா?

பதில் - அப்படி நான் எண்ணுகிறதில்லை. ஆனால் எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. திரள்கூட்டத்தார் திரைக்கப்பால் கடந்துபோவதற்கு முன்னதாக முற்பிதாக்கள் உயிர்த்தெழுவார்களென நான் எதிர்ப்பார்க்காததற்கான காரணம் பின்வருமாறு: சிறுமந்தையாகிய ஆசாரிய வகுப்பாரையும், திரள்கூட்டத்தாரையும் உள்ளடக்கியுள்ள முதற்பேறானவர்களின் முழுச்சபையும் - அதாவது இவர்கள் அனைவரும் முதற்பலன்களாகவும், கிறிஸ்துவினுடைய புண்ணியத்தினைத் தரிப்பிக்கப் பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்; மேலும் என்னுடைய கணிப்பின்படி, முழுச்சபையாருக்கும்

புண்ணியமானது விசேஷமாய்த் தரிப்பிக்கப்படும் விஷயம் அதன் பலனைக்கொடுத்து, அனைவரும் திரைக்கப்பால் கூட்டிச்சேர்க்கப்பட்டுப் போவதற்கு முன்புவரை, உலகத்தின் பாவங்களுக்காகக் கிறிஸ்துவின் புண்ணியம் செயல்படுத்தப்படும் காரியமானது நிகழாது. இதுவே எனது கருத்தாகும்.

**13. (Q16:1) முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல்.**

கேள்வி (1915)-1- பாவநிவிர்த்திக்கான ஏற்பாடானது, சபையினுடைய உயிர்த்தெழுதல் நிகழ்வதற்கு முன்பாக, முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் நிகழும்படி அனுமதிக்குமா?

பதில் - சபை நிறைவடைவதுவரையிலும் முற்பிதாக்கள் பூரணராக முடியாது என்று நான் எண்ணுகின்றேன். கிறிஸ்துவின் சரீரமானது, முற்பிதாக்களில் யாரேனும் விழித்தெழுப்பப்படுவதற்கு முன்னதாகத் திரைக்கப்பால் நிச்சயமாய்ப் போயாக வேண்டும். இது தொடர்பான அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் மிகவும் அழுத்தம் திருத்தமாக உள்ளது: "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபிரெயர் 11:40); இது சபை பூரணப்படுவது முதலாவது நிகழும் என்று சுட்டிக்காண்பிக்கின்றது. இதே கருத்தானது வேறு இடங்களிலும் காணப்படுகின்றது. கிறிஸ்துவின் சரீரமானது முதலாம் அல்லது பிரதான உயிர்த்தெழுதலை அடையப்போவதாகப் பேசப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 15:23; வெளிப்படுத்தல் 20:4-6); ஸ்தானத்தில் மாத்திரம் முதலாவதாக இராமல், கால வரிசையிலும் இவர்கள் முதலாவது வருபவர்கள் ஆவார்கள் - "கிறிஸ்து முதற்பலன்கள்" ஆவார்கள். இப்பொழுது இந்தக் கிறிஸ்துவின் புண்ணியத்தினைத் தரிப்பிக்கப்பெற்றவர்கள் அனைவரும் (சபையின் இரு வகுப்பாரும்), தங்களது ஓட்டத்தை நிறைவுசெய்வதற்கு முன்னாக, மற்ற யாருக்கேனும் செயல்படுத்தப்படத்தக்கதாக அப்புண்ணியமானது விடுவிக்கப்படமாட்டாது என்று நாங்கள் புரிந்திருக்கின்றோம்.

**14. (Q43:3) ஆயிர வருஷ காலத்தில் வேதாகமம் யாரால் பயன்படுத்தப்படும்?**

கேள்வி (1908)-3- உலகத்தாரைத் தவிர வேறு யாராவது வேதாகமத்தைப் பயன்படுத்துவார்களா?

பதில் - அக்காலத்தில் முற்பிதாக்களைத் தவிர்த்து காணப்படும் உலக மனுக்குலம் அதைப் பயன்படுத்துபவர்களாய் இருப்பார்கள்; வேறு யாரும் அதைப் பயன்படுத்தமாட்டார்கள். முற்பிதாக்கள் அவ்வப்போது வேதாகமத்தையும், டாண் வெளியீடுகளையும் தகவல் புஸ்தகங்களாகப் பயன்படுத்தலாம்; ஆனால் அவைகள் அவர்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பதில்லை, ஏனெனில் முற்பிதாக்கள் ஆவிக்குரிய சபையின் நேரடி மேற்பார்வையின்கீழ்க் காணப்படுவார்கள்; அனைத்துப் போதனைகளும் நேரடியாகச் சபையிடமிருந்து முற்பிதாக்களுக்குக் கடந்துவரும்; மேலும் முற்பிதாக்களிடமிருந்து ஜனங்கள் அனைவருக்கும் கடந்துசெல்லும்; மேலும் அவர்கள் வேதாகமத்தைச் சார்ந்து காணப்படுவதில்லை. ஆனால் பின்வருமாறு அனுமானிக்கலாம்: உதாரணத்திற்கு ஆபிரகாம் ஆதியாகமத்தின் பதிவுகளையும், தீர்க்கத்தரிசனங்களையும் வாசிப்பதில் மிகவும் சந்தோஷம் அடைவார்; தாம் ஆபிரகாமிற்கு முன்பே காணப்பட்டார் என்று இயேசு கூறியுள்ள வார்த்தைகளின் பதிவை புதிய ஏற்பாட்டில் வாசித்தறிவதில், ஆபிரகாம் மிகவும் சந்தோஷம் அடைவார். ஆபிரகாம் அதைப் பார்த்து: இயேசு இப்படிச் சொல்லியிருக்கின்றாரே, இது எத்தனை உண்மை! இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லையே! என்று கூறுவார். அவர் டாண் வெளியீடுகளையும், மற்ற அநேக புஸ்தகங்களையும் வாசிக்க விருப்பப்படுவார் - அநேகமாக பிரான்சின் வரலாற்றையும், ஒருவரையொருவர் வெட்டிப்போடுவதை அவர்கள் எப்படி மகிமையானதொரு செயலாகப் பார்த்தார்கள் என்பதையும் வாசித்தறிய விருப்பப்படுவார்; அவர் சில இடங்களுக்குச் சென்று சிலைகளையும், போர் சின்னங்களையும் பார்வையிட்டு . . .

ஏன் அந்தச் சிலையைச் செய்தார்கள்? என்று வினவுவார்.

இவர் மாமனிதர் என்று பதிலளிக்கப்படும்.

இவர் என்ன செய்தார்? என்று ஆபிரகாம் வினவுவார்.

இந்த மனுஷன் ஒருகூட்ட ஜனங்களை வழிநடத்தினான்; அவர்கள் துப்பாக்கிகளையும், வெடிமருந்துகளையும், குண்டுகளையும் பெற்றிருந்து, அநேகம் ஜனங்களைக் கொன்றுபோட்டார்கள் என்று அவருக்குப் பதிலளிக்கப்படும்.

இந்தக் காரணத்திற்காகவா இவரை மாமனிதர் என்கிறீர்கள் என்று ஆபிரகாம் வினவுவார்.

ஆம்! என்று பதிலளிக்கப்படும்.

ஆகையால் மனித குடும்பத்திற்குள் எத்தகைய ஒரு வெறித்தனம் வந்துள்ளது என்றும், ஒருவரையொருவர் கொல்லும் அளவுக்கு, அதுவும் சில அற்பமான காரணங்களுக்காக - அதாவது அவர்கள் மக்களாட்சிக் கோட்பாட்டாளர்களா அல்லது குடியரசுவாதிகளா அல்லது மெத்தடிஸ்ட் (Methodist) குழுவினரா அல்லது பிரெஸ்பைட்டேரியன் (Presbyterian) குழுவினரா என்பது போன்ற அற்பமான விஷயங்களுக்கெல்லாம் ஒருவரையொருவர் கொல்லும் அளவுக்கு ஜனங்கள் எவ்வளவுக்குப் பைத்தியக்காரர்களாகி போனார்கள் என்றும் காண்பதற்காக, எதிர்காலத்தில் முற்பிதாக்கள் யுத்தங்களின் சரித்திரங்களை மிகவும் ஆர்வத்துடன் பார்க்க விருப்பம் காட்டுவார்கள். நாம் தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியைப் பெற்றுக்கொள்ள மாத்திரமே துவங்கியுள்ளோம்; நமக்கு இன்னமும் தெளிந்த புத்தியுள்ள மனம் இல்லை; நாம் தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியை, அதன் பண்பைப் பெற்றுக் கொண்டிருக்கின்றோம்; இது நமக்கு ஒவ்வொரு நாளும் அதிகமதிகமாய் வந்துக்கொண்டிருக்கின்றது. அதற்காகத் தேவனுக்கு நன்றி!

**15. (Q58:1) பிள்ளைகளுக்கான உயிர்த்தெழுதலின் தளம்.**

கேள்வி (1911)-1- பொறுப்புணர்வு வரும் வயதை அடைவதற்கு முன்னதாக, மரித்துப்போகும் அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோரின் பிள்ளைகளானவர்கள், முற்பிதாக்கள் வரும் அதே தளத்திற்கு வருவார்களா . . . அதாவது உடனே பரிபூரணத்திற்கு வருவார்களா?

பதில் - இல்லவே இல்லை. முற்பிதாக்கள் (எதிர்காலத்தில்) இருக்கப்போகிற தளத்திற்கு, முற்பிதாக்கள் வருவதற்கு அநேகம் அனுபவங்கள் வாயிலாகவே கடந்துவந்தார்கள். ஆபிரகாமின் விஷயத்தில், அது அவரது விசுவாசத்திற்கான பரீட்சையாக, அவரது நேர்மையினை நிரூபிப்பதற்கான அனுபவமாய் இருந்தது! தீர்க்கத்தரிசிகளுக்கு அவ்வனுபவங்கள் என்னவாக இருந்தது என்றும், இதற்காய் எத்தனை பாடுபட்டார்கள் என்றும் சிந்தித்துப்பாருங்கள்! ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் அனைத்துத் தீர்க்கத்தரிசிகள் மற்றும் இராஜ்யத்தின் பூலோக பிரதிநிதிகளுடன், மனித பூரணத்தில் பங்கடைவதற்குப் பாத்திரவான்களாய்க் கருதப்படத்தக்கதாக, உங்கள் பிள்ளைகள் எந்த அனுபவங்களுக்குள்ளும் கடந்து செல்லவில்லை. குழந்தைக் குற்றமற்று (innocent) இருக்கும் காரியம் மிகவும் நலமே, ஆனால் இது பிள்ளைகளுக்கு எந்த ஒரு ஸ்தானத்தையும் பலனாகக் கொடுத்திடாது. பிள்ளை ஏதேனும் பலன் அடைய வேண்டுமெனில், அது குணலட்சணத்தினை வளர்த்திடுவது அவசியமாகும். சிறுமந்தைக்குள் வருபவர்கள் குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் விளைவாகவே அங்கு வருவார்கள். முற்பிதாக்கள் வகுப்பாரில் இடம்பெறுபவர்கள், குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் காரணமாகவே அந்த வகுப்பில் காணப்படுவார்கள். அப்படியானால் விசுவாசிகளினுடைய பிள்ளைகளின் நிலைமை என்ன? விசுவாசிகளினுடைய பிள்ளைகள் விசேஷித்த தெய்வீகப்

பராமரிப்பின்கீழ்க் காணப்படுகின்றனர் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன என்று நான் பதிலளிக்கின்றேன். அது எப்படியிருக்கும் என்று என்னால் உங்களுக்குச் சொல்லமுடியாது. நான் அதை நம்புகின்றேன், காரணம் தேவ வசனமானது அப்படியாகச் சொல்கின்றது. இதோ அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை உங்களுக்கு மேற்கோளிடுகின்றேன்: "அவிசுவாசியான மனைவி தன் விசுவாசியான புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகின்றாள்" - அதாவது பிள்ளைத் திவ்விய மேற்பார்வையின்கீழ்க் காணப்படுவதற்கென்று பிள்ளையின் பெற்றோர் இருவரும் கர்த்தருக்குள் காணப்படவேண்டும் என்கிற அவசியமில்லை. பெற்றோரில் ஒருவர் கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணியிருந்தால், பிள்ளையானது அந்த அர்ப்பணம்பண்ணின பெற்றோருடையதாகக் கருதப்படுகின்றது மற்றும் தேவ ஆசீர்வாதமும் கடந்துவரும். இதுபோலவே அவிசுவாசியான கணவனும், விசுவாசியான மனைவியினால் பரிசுத்தமாக்கப்படுகின்றான்; இல்லையேல் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாய் இருப்பார்கள். ஆனால் அதற்கென்று பிள்ளைகளைக் கர்த்தர் பரலோகத்திற்கு எடுத்துச்செல்வார் என்பதாகாது. பிள்ளைகள் வளர்கையில், அவர்கள் சிறுமந்தைக்குள் வரத்தக்கதாகக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்றாகாது. பிள்ளைகளுடைய ஜீவியத்தின் காரியங்களானது, அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக நடத்தப்படும் எனும் விதத்தில் தயவு பாராட்டப்படுவார்கள், ஆனாலும் பிள்ளையினுடைய சித்தமானது குறுக்கிடப்படுகிறதில்லை. தேவன் தம்முடைய எந்த ஒரு சிருஷ்டிகளினுடைய சித்தங்களையும் ஒருபோதும் அத்துமீறுதல்பண்ணுகிறதில்லை. அந்தப் பிள்ளையிடம் சித்தம் இல்லாமல் இருப்பதுவரையிலும், பிள்ளைப் பகுத்தறிவில் முதிர்ச்சியடையாமல் இருப்பதுவரையிலும் திவ்விய மேற்பார்வையின்கீழ்ப் பிள்ளைக் காணப்படும். இதையே நான் - யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் உண்டாயிராத உபத்திரவ காலம் வருவதை வேதாகமம் கூறுவதைக்குறித்துக் கொஞ்சம் பயத்துடன் காணப்படும் பெற்றோர்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். நீங்கள் ஒருவேளை உங்கள் பிள்ளைகளோடு காணப்பட்டால் உங்களால் அவர்களைப் பராமரித்துக் கொள்ள முடிகிறதைக்காட்டிலும், கர்த்தர் அவர்களைப் பராமரிக்க முடிகிறவராக இருக்கின்றார் என்ற முழு நம்பிக்கையுடன், அந்தப் பிள்ளைகளைக் கர்த்தரிடத்தில் ஒப்படைத்துவிடுங்கள்.

**16. (Q59:2) பிள்ளைகள் - முற்பிதாக்கள் மற்றும் உருவெடுத்துவரும் பிசாசுகள்.**

கேள்வி (1911)-2- முற்பிதாக்கள் உயிர்த்தெழுந்துவிட்டார்கள் என்றும், அவர்கள் உருவெடுத்துவரும் பிசாசுகள் அல்ல என்றும் நம் பிள்ளைகள் எப்போது நிச்சயம் அடைவார்கள்?

பதில் - இக்கேள்விக்கு என்னால் பதிலளிக்கமுடியாது என்று நான் எண்ணுகின்றேன். இது சம்பந்தமாக நான் சிலவற்றைச் சொல்லுவேன், ஆனாலும் அது இக்கேள்விக்கான துல்லியமான பதிலாய் இராது. என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் வகுப்பாராகிய - பூரண மனுஷர்களென உயிர்த்தெழுப்பப்படும் முற்பிதாக்கள் வாயிலான திவ்விய வல்லமையின் வெளிப்பாடானது, மிகவும் முழுமையானதாக இருக்கும் என்பதினால் . . . திவ்விய வல்லமையின் மிகவும் அற்புதகரமான வெளிப்படுத்துதலாக இருக்கும் என்பதினால், இது கர்த்தருடன் இசைவிற்குள் காணப்படும் அனைவருக்கும் போதுமான நிரூபணத்தினைக் கொடுத்திடும்; அதிலும் குறிப்பாக யூதர்கள் அவர்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். இப்படியே இக்கேள்விக்கு நான் பதிலளிக்கின்றேன்.

**17. (Q152:1) பரம அழைப்பின் முடிவிற்குப் பின் அர்ப்பணித்தல்.**

கேள்வி (1911)-1- பரம அழைப்பிற்கான கதவு மூடின பிற்பாடு அர்ப்பணம்பண்ணுபவர்கள், ஆவிக்குரிய தளத்தில் உயிர்த்தெழுதலை அடைவார்கள் என்பது உங்களது கருத்தாக இருக்கின்றதா?

பதில் - இல்லை! பரம அழைப்பிற்குரிய முடிவு வந்த பின்னர், ஆவியில் ஜெனிப்பித்தல் நிகழ்வதில்லை; ஆவியில் ஜெனிப்பித்தல் இல்லையெனில், ஆவியில் பிறத்தலும் இருப்பதில்லை. இது தொடர்புடையதாக

நாம் பெற்றிருக்கும் ஒரே ஒரு கருத்தினை நாங்கள் சற்று முன்பு பகிர்ந்துகொண்டோம்; அதென்னவெனில்: உபத்திரவ காலத்தின்போது கர்த்தருக்காக தாங்கள் பாராட்டும் உண்மையினால், தங்களது ஜீவியங்களை ஒப்புக்கொடுக்கும் சிலர், முற்பிதாக்கள் வகுப்பாருக்குள் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றும், ஆயிர வருஷங்களின் முடிவில் முற்பிதாக்கள் வகுப்பாருக்கு ஆவிக்குரிய சுபாவம் ஒருவேளை அளிக்கப்படுகையில், இவர்களும் இவ்வகுப்பாரில் உள்ளவர்களாய் இருப்பதினால், ஆவிக்குரிய சுபாவத்தை அடையும் வாய்ப்பினைப் பெறலாம் என்றுமுள்ள கருத்துகளேயாகும்.

**18. (Q152:2)** அர்ப்பணம் - பிற்பாடு ஆவிக்குரிய சுபாவம் பெறுவதற்குரிய வாய்ப்பு.

கேள்வி (1911)-2- அர்ப்பணம்பண்ணியுள்ளவர்கள், ஆனால் ஜெநிப்பிக்கப்படாமல் காணப்படுபவர்கள், ஆவிக்குரிய சுபாவம் அடைவதற்குரிய வாய்ப்பினைப் பெறுவார்களா?

பதில் - முற்பிதாக்களுடைய உண்மைக்கும், ஆயிர வருஷங்களின் போதுள்ள இவர்களது ஊழியங்களுக்கும் உரிய வெகுமதியாக, ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் இவர்களுக்குச் சுபாவ மாற்றத்தை அருள வேண்டும் என்பது தெய்வீகத் திட்டத்தின் ஒரு பாகமாய் இருக்கின்றது என்றும், ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில் இவர்கள் ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் எங்களது யோசனை காணப்படுகின்றது. இந்த யோசனையானது பாதி அனுமானமாகவும், வாட்ச் டவர் கட்டுரைகளில் நம்மால் ஏற்கெனவே பார்க்கப்பட்டுள்ள குறிப்பிட்ட சில வேதவாக்கியங்களின்படி உண்டான பாதி யோசனையாகவும் காணப்படுகின்றது; அவ்வசனங்களை நாம் முன்னமே பார்த்துள்ளபடியால், அவைகளுக்குள் நாம் இங்குக் கடந்துசெல்கிறதில்லை.

**19. (Q152:3)** அர்ப்பணம் - ஜெநிப்பிக்கப்படாதவர்களுக்குரிய வெகுமதி.

கேள்வி (1911)-3- ஒருவேளை இப்பொழுது அர்ப்பணம்பண்ணி, ஆனால் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படத் தவறுவார்களானால், இவர்களைக் கர்த்தர் எவ்விடத்தில் வைப்பார்?

பதில் - ஒருவேளை இவர்கள், முற்காலத்தில் காணப்பட்டவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தது போன்று உண்மையுள்ளவர்களாக இருந்து, நீதிக்கும், சத்தியத்திற்கும் உள்ள ஊழியத்தில் தங்கள் ஜீவன்களையே ஒப்புக்கொடுத்துவிடுவார்களானால், தேவன் ஏதோ ஒரு விதத்தில் இவர்களுக்கு முற்பிதாக்களோடு ஒரு பங்கைக் கொடுப்பார் என்று நாங்கள் யூகிக்கின்றோம். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், இவர்கள் உபத்திரவ காலத்திற்குள் ஓரளவு கடந்துசென்று, அதில் கர்த்தருக்குக் கொண்டிருக்கும் உண்மையின் நிமித்தம், தங்கள் ஜீவன்களை இழப்பார்களானால், முற்பிதாக்களுக்குச் செய்வதையே தேவன் இவர்களுக்கும் செய்வார் - இவர்கள் முற்பிதாக்கள் வகுப்பாரில் உள்ளவர்களாகக் கருதப்படுவார்கள்.

**20. (Q209:1)** மரணம் - ஆதாமின் நிமித்தமான மரணம் எப்போது நின்றுபோகும்?

கேள்வி (1912)-1- மகா உபத்திரவ காலத்திற்குப் பிற்பாடு, எவ்வளவு காலம் ஜனங்கள் ஆதாமின் நிமித்தமான மரணத்தில் மரிப்பார்கள்?

பதில் - கொஞ்சக்காலத்திற்குச் சிலர் தொடர்ந்து மரித்துக்கொண்டிருப்பார்கள். துல்லியமாக எவ்வளவு காலம் என்பதை நான் அறியேன். இக்காரியம் பின்வருமாறு நடைபெறும்: இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில், அந்த இராஜ்யத்தை முதலாவதாக உணர்ந்துகொள்பவர்கள் முற்பிதாக்கள் ஆவார்கள். இவர்கள் தேவனுடன் முழு இசைவில் காணப்படுவார்கள் மற்றும் கல்லறையினின்று

பூரணமான நிலைமையில் கொண்டுவரப்படுவார்கள். இவர்கள் இராஜ்யம் தொடர்புடைய அனைத்து விஷயங்களிலும் முழுமையாய்ப் போதிக்கப்பட்டு, அறிவுரை வழங்கப்பட்டிருப்பார்கள். இவர்கள் எவ்வளவு காலம் மனுஷர்கள் மத்தியில் காணப்படுவார்கள் என்பதையும் நான் அறியேன். காரியங்களைப் புரிந்துகொள்வதற்கும், உணர்ந்துகொள்வதற்கும் முற்பிதாக்களுக்குச் சிறிது காலம் தேவைப்படும் என்று நாம் எண்ண வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நாம் (இக்காலங்களில்) பெற்றிருக்கும் அபூரணங்களாகிய தடைகளை, முற்பிதாக்கள் அப்போது பெற்றிருப்பதில்லை. ஆகையால் அவர்கள் காரியங்களைப் புரிந்துகொள்ளத்தக்கதாக எல்லோரையும்விட சொற்ப காலமே எடுத்துக்கொள்வார்கள். உபத்திரவ காலத்தில், "யாக்கோபின் இக்கட்டுகாலத்தில், அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்." அக்காலத்தில் பெருமளவில் துக்கப்படுதல் காணப்படும்; மேலும் முழு உலகமும் மென்மையடைந்த இருதய நிலைமையில் காணப்படுவார்கள்; மேலும் யூதர்கள் விசேஷமாகக் கர்த்தரை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகக் காணப்படுவார்கள். இவர்கள் சூழ்நிலையினை மிகவும் துரிதமாகக் கிரகித்துக் கொள்வார்கள்; மேலும் இவர்கள் தேவனுடைய இராஜ்யத்தின் கருவாகக் காணப்படுவார்கள். சிலகாலம் இராஜ்யம் இஸ்ரயேல் மயமானதாகக் காணப்படும்; மேலும் இசைவிற்குள் முதலாவது வரும் ஜாதி (யூதர்கள்), மற்ற ஜாதிகளைக்காட்டிலும் பெருமளவில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மற்றும் தயவையும் அனுபவிப்பவர்களாக இருப்பார்கள்; மேலும் இவர்களே தேவனுடைய இராஜ்யம் என்பது என்ன என்று விரைவாய்க் காணத் துவங்குகின்றவர்களாய் இருப்பார்கள். மற்ற ஜாதிகள், யூத ஜனங்கள் மீதுள்ள ஆசீர்வாதங்களைக் காணும்போது, அவர்கள்: "நாம் கர்த்தரின் பர்வதத்துக்குப் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்" என்று கூறுவார்கள். அப்போது செயல்பாட்டில் காணப்படும் புதிய உடன்படிக்கையின் மூலம் தேவனுடன் முழுமையான இசைவிற்குள்ளாகக் கடந்துவரும் அனைவரின் விஷயத்திலும், ஆதாமின் நிலைமை கடந்துபோகத் துவங்கும். அவர்கள் வியாதியினின்று குணமடையத் துவங்குவார்கள் மற்றும் ஆரோக்கியத்திலும், பெலத்திலும் பூரணத்தினை அடைவார்கள். அனுகூலமான சூழ்நிலைகளில் நித்திய ஜீவனானது அவர்களுக்கு வரத் துவங்கும். அவர்கள் இந்த அனுகூலமான நிலைமைகளுக்குள் வருவதற்கு ஒரே ஒரு வழி மாத்திரம் உண்டு; அது அவர்கள் "இஸ்ரயேலர்களாகிடுவதன்" மூலமேயாகும். புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் அனைத்தும், ஆபிரகாமின் பிள்ளைகளுக்கானதாகும். ஆபிரகாம் விசுவாசமுள்ளவர்கள் அனைவருக்கும் தகப்பனாவார்; ஆகையால் ஜனங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாகும்போது, அவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் ஆவார்கள். ஆபிரகாமின் குடும்பம் இப்படியாக ஆயிர வருஷங்களின் முடிவுபரியந்தம் தொடர்ந்து வளர்ந்துகொண்டுவரும்; இப்படியாக எண்ணிக்கையில் "கடற்கரை மணலத்தனையாய்" ஆவார்கள். இந்தக் குடும்பத்திற்குள், இதற்கு இசைவாய் வர மறுப்பவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். அனைவரும் "ஆபிரகாமின் பிள்ளைகளாகிட" வேண்டும்; அதாவது அனைவரும் "தேவனுடைய பிள்ளைகளாகிட" வேண்டும். இராஜ்யத்தின் இந்தக் கருவிற்குள் வராதவர்களிடத்தில், மரணமானது தொடர்ந்து செயலாக்கத்தில் காணப்படும்; இந்தப் பூமியில் மனுஷர் மத்தியில் அக்காலத்தில் காணப்படும் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்கீழ், ஆசீர்வாதங்களானது இறுதியில் இந்தக் கருவிடமிருந்து கடந்து வரும்.

**21. (Q213:1) இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பின் ஆதாமின் நிமித்தமான மரணம்.**

கேள்வி (1913)-1- மேசியாவின் இராஜ்யமானது பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு, யாரேனும் ஆதாமின் நிமித்தமான மரணத்தை அடைவார்களா?

பதில் - "பூமியில் ஸ்தாபிக்கப்படுதல்" எனும் வார்த்தைகளுக்கு நாம் கொடுக்கும் அர்த்தத்தினுடைய அழுத்தத்தின்மீது, சில விஷயங்கள் சார்ந்துள்ளது என்று நான் எண்ணுகின்றேன்.

என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படும் விஷயத்தில், கொஞ்சம் கொஞ்சமாகவே ஸ்தாபிக்கப்படும். அது ஸ்தாபிக்கப்படுவதற்கு காலம் எடுக்கும்; ஏனெனில் நான் புரிந்திருக்கிறபடி பார்த்தால், ஜனங்கள் இராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கையில், இராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கர்த்தர் நோக்கம்கொண்டிருக்கின்றார். மேசியா உலகத்தின்மீது அதிகாரம் செலுத்தி, தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் தருணம் வருகையில், அநேகம் ஜனங்கள் காணப்படுவார்கள்; இவ்வுண்மையைப் பற்றி எதுவுமே தெரியாத நிலையில் ஆயிரம் ஆயிரமான ஜனங்கள் இருப்பார்கள்; அநேகமாக இவைகளைப் பற்றின அறிவு இவர்களுக்குக் கடந்துவர கொஞ்சம் காலம் எடுத்துக்கொள்ளும் - வாரங்கள், மாதங்கள், ஒருவேளை வருஷங்கள் எடுத்துக்கொள்ளலாம் - வருஷங்கள் என்று சொல்லலாமா என்பது எனக்குத் தெரியவில்லை, ஆனால் நீண்டகாலம் எடுத்துக்கொள்ளும் - மேலும் வேதவாக்கியங்களை நான் வாசிக்கையில், இது முறையான விதத்தில் நடைபெறும் என்று பார்க்கின்றேன். போதகரையும், இராஜ்யத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக ஒரு குறிப்பிட்ட வகுப்பார் காணப்படுவார்கள்; முற்பிதாக்கள் காணப்படுவார்கள்; மேலும் இராஜ்யத்தின் மீது ஆர்வம்கொண்டவர்களாகவும், கர்த்தரைப் பற்றின அறிவிற்குள்ளாகக் கடந்துவந்தவர்களாகவும் உள்ள மற்ற சில ஜனங்களும் காணப்படுவார்கள்; இவர்களோடு யூதர்கள், விருப்பமுள்ள யூதர்கள் காணப்படுவார்கள்; இவர்களில் அநேகர் ஆயத்தமான நிலைமையில் காணப்பட்டு: "இதோ ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் சகல தீர்க்கத்தரிசிகள்! அவர்கள் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்று நம்மிடம் கூறுகின்றார்கள்; நாங்களும் அதை ஒத்துக்கொள்கின்றோம்; மேசியாவின் இராஜ்யம் வந்திருக்குமானால், அதோடு இசைந்திருக்க நாங்கள் நாடுவோம்" என்று கூறுவார்கள். இவர்கள் மீது ஆசீர்வாதம் வருகையில், இன்னுமாக கட்டுப்பாடுகளும் இவர்களைச் சிறப்பாக்கி, மேம்படுத்தி வருகையில், இன்னுமாக இவர்களுடைய அறுவடைகள் மீது ஆசீர்வாதம் காணப்படுகையில், இன்னுமாக நன்மையான அனைத்தும் இவர்கள் மீது காணப்படுகையில், மற்றவர்கள்: "யூதர்கள் அனைத்தையும் பெற்றிருக்கின்றார்களே" என்றும், "கர்த்தரின் பர்வதத்துக்குப் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்," யூதர்களும் போதிப்பார்கள், காரணம் "சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்," இது பூமியின் கடையாந்தரங்களுக்குக் கடந்துசெல்லும் என்றும் சொல்வார்கள். ஆனால் அறுவடையிலுள்ள ஆசீர்வாதங்களும், மற்ற விஷயங்களும், வேதவாக்கியங்கள் சுட்டிக்காண்பிப்பதுபோன்று, ஜனங்களை நம்பவைப்பதற்குச் சிலகாலம் எடுத்துக்கொள்ளலாம்; ஒரே ஒரு மோசமான அறுவடை அவர்களை நம்பவைக்கப் போவதில்லை. அநேகமாக அவர்கள் இரண்டு அல்லது மூன்று மோசமான அறுவடைகளைப் பெற்றுக்கொள்ளும்போது பின்வருமாறு: "மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து வந்துள்ள தங்களது தீர்க்கத்தரிசிகளில் சிலரைத் தங்களது ஆதரவாகப் பெற்றிருப்பதே, தங்களது வளமைக்கான காரணம் என்று இந்த யூதர்கள் கூறுகின்றார்கள், ஆனால் இது எவ்வளவு முட்டாள்தனமாக இருக்கின்றது" என்று சொல்வார்கள். ஆனால் காலங்கள் போகப்போக, ஆசீர்வாதங்கள் தொடர்ந்து (யூதர்கள் மீது) காணப்படுகையில், ஜனங்கள்: "அவர்கள் சொல்லும் காரணம் முட்டாள்தனமானதோ, இல்லையோ, அவர்கள் முதல்தரமானவைகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்களே" என்பார்கள். பிற்பாடு சூழ்நிலைகள் தங்கள் ஜீவியங்களைப் பாதிக்கும்போது, காரியங்களை மிகத் தெளிவாக யோசித்துப் பார்ப்பவர்களாகக் காணப்பட்டு, இணக்கத்திற்குள் வருவார்கள்; அவர்கள் அனைவரும் இஸ்ரயேலர்களாகுவார்கள், ஆபிரகாமின் சந்ததியாகுவார்கள்; ஏனெனில் ஆபிரகாமின் சந்ததி பூமியை முழுவதுமாக நிரப்புவார்கள்; ஆபிரகாமின் சந்ததியாகாத அனைவரும் இரண்டாம் மரணம் அடைவார்கள். ஆகையால் அது படிப்படியாக நடக்கும் வேலையாக இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்; பத்து வருஷங்கள் எடுக்குமா அல்லது அதற்கு மேலாக எடுத்துக்கொள்ளுமா என்பது எனக்குத் தெரியாது;

ஆனால் ஐந்து வருஷமே நீண்டகாலமாக இருக்குமென நான் எண்ணுவேன். அக்காலப்பகுதியில் மரணம் உலகத்தில் செயலாற்றிக்கொண்டிருக்கும் என்றும், இப்போதுபோலவே ஜனங்கள் பெலவீனங்களினாலும், வியாதியினாலும் அக்காலப்பகுதியில் மரித்துக்கொண்டிருப்பார்கள் என்றும், இணக்கத்திற்குள் கடந்துவருபவர்கள் விஷயத்தில் மாத்திரம் மரிக்கும் செயல்பாடும், பெலவீனங்களும் கடந்துபோகத் துவங்கும் என்றும், மற்றவர்கள் தொடர்ந்து ஆதாமின் நிமித்தமான மரணம் மரிப்பார்கள்/அடைவார்கள் என்றும், அவர்களின் மரணத்திற்கும், அவர்களது மூதாதையர்களின் மரணத்திற்கும் எந்த வித்தியாசமும் இராது என்றும் நாங்கள் நம்புகின்றோம். பாவத்தின் விளைவாக வரும் மரணம் அனைத்துமே, அது எப்போது வந்தாலும், அது ஆதாமின் நிமித்தமான மரணமேயாகும்; அது பல நூற்றாண்டுகள் தாண்டிவந்தாலும், அது இன்னமும் ஆதாமின் நிமித்தமான மரணமேயாகும். பாவத்திலிருந்து விலகும் யார் ஒருவரும் ஜீவன் அடையலாம் என்பதாகவும், ஒருவேளை அவர்கள் பாவத்தையே விரும்புவார்களானால், அவர்கள் இராஜ்யத்துடன் இசைவிற்குள் வராதவர்களாய் இருப்பதினால், அவர்களின் மரணம் இரண்டாம் மரணமாக இருக்கும் என்பதாகவும் கர்த்தருடைய வாக்குத்தத்தம் காணப்படுகின்றது; எனினும் அவர்களுக்கும்கூட நூறு வருஷங்கள் கொடுக்கப்படும்; இக்காலப்பகுதியில் அவர்கள் அக்கிரமக்காரர்களாய்க் காணப்படலாம்; எனினும் இரண்டாம் மரணத்திற்குப் பாத்திரவான்கள் என்று உடனே தீர்க்கப்படுவதில்லை.

**22. (Q260:1) எலிசா வகுப்பாரில் யார் காணப்படுவார்கள்?**

கேள்வி (1909)-1- எலிசா வகுப்பாரில் யார் காணப்படுவார்கள்?

பதில் - முதலாவது காரியம், எலிசா வகுப்பார் என்கிற ஒரு வகுப்பார் இருப்பார்களா என்பதை நாம் அறியோம்; ஏனெனில் அப்படி இருப்பார்கள் என்று வேதாகமம் உறுதியாகச் சொல்வதில்லை. இவ்வகுப்பார் இருப்பார்கள் என்று நாம் அனுமானிக்கின்றோமா? ஆம்! எதன் அடிப்படையில் இப்படி அனுமானிக்கின்றோம்? காரணம் என்னவெனில், எலியா வகுப்பார் என்று ஒரு வகுப்பார் இருக்கின்றார்கள்; மேலும் நமது கர்த்தராலும், வெளிப்படுத்தின விசேஷத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் எலிசா வகுப்பார் காணப்படுகின்றனர் என்று வேதவாக்கியங்களானது மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகின்றன. எலியாவினுடைய ஊழியத்தின் நிறைவு காலத்தில், இவரோடு எலிசா தன்னை இணைத்துக்கொண்டார் - எலிசா ஓர் ஊழியக்காரனாக இணைந்துகொண்டார், மேலும் இறுதியில் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டார். ஒருவேளை எலிசாவை ஒரு வகுப்பாருக்கான நிழலாக கருதுவோமானால், அவர் இரண்டு வகுப்பாருக்கு நிழலாகக் காணப்பட வேண்டும். முதலாவதாக அவர் திரள்கூட்டத்தாருக்கு நிழலாவார், ஏனெனில் எலியாவின் சால்வை இவர்மேல் விழுந்தது; இது எலியா வகுப்பார் எடுத்துக் கொள்ளப்பட்ட பிற்பாடு, எலியாவின் வல்லமை அல்லது வேலை எலிசா வகுப்பார் மீது விழுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. எலிசா யோர்தான் நதியினிடத்திற்குச் சென்று, சால்வையைக் கொண்டு தண்ணீரை அடித்து, நதியைக் கடந்துபோனதே, அச்சால்வையைக்கொண்டு எலிசா செய்த ஒரே ஒரு காரியமாய் இருக்கின்றது. இது எலியா வகுப்பார் போலவே எலிசா வகுப்பாரும் மரணத்திற்குள் கடந்துசெல்வதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; யோர்தான், மரணத்தை அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது. யோர்தானைக் கடந்துபோன பிற்பாடு, அவர் சில சீர்திருத்த வேலைகளைச் செய்யத் துவங்கினார். இது திரள்கூட்டத்தாரைக் குறிப்பதில்லை, மாறாக வேறொரு வகுப்பாரைக்குறிப்பதாகத் தோன்றுகின்றது - அதாவது ஆயிர வருஷ யுகத்தில் தொடங்கி, தொடர்ந்து நடைபெறும் முற்பிதாக்களின் வேலையை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இறுதியில் திரள்கூட்டத்தார் போன்று முற்பிதாக்களும் ஒரே தளத்தில் காணப்படுவார்கள் என்றும், அதேபோன்ற மகிமையையும் பெற்றுக்கொள்வார்கள் என்றும் வேதவாக்கியங்கள் காண்பிப்பதாக நாங்கள் நம்புகின்றோம்.

**23. (Q379:2) யூதர்களைத் தேவன் எவ்வாறு கையாளுவார்.**

கேள்வி (1909)-2- எந்த வழிமுறையினால் தேவன் யூதர்களைக் கையாளுவார்?

பதில் - என்னுடைய யூகத்தை மாத்திரம் உங்களுக்குப் பதிலாகத் தெரிவிக்க முடியும், அதென்னவெனில்: மகா உபத்திரவ காலத்தினுடைய முடிவில், யூதர்களும் சரி, மீதமுள்ள மனுக்குலத்தாரும் சரி மகா துன்பத்திலும், பொதுவான பெருந்துயரத்திலும் காணப்படுவார்கள்; மேலும் உபத்திரவத்தின் முடிவு காலத்தில், முற்பிதாக்கள் யூதர்கள் மத்தியில் தோன்றுவார்கள்; நம்பிக்கையற்ற யூதர்கள் மத்தியில் அல்ல; ஏனெனில் உண்மையிலேயே வாஞ்சையுள்ள சில யூதர்கள் காணப்படுகின்றனர்; இவர்கள் மேசியாவிற்காக ஏங்கி, காத்திருப்பவர்கள் ஆவார்கள். இம்மாதிரியானவர்களிடத்திலேயே அவர் தம்மை வெளிப்படுத்துவார் என்று நான் யூகிக்கின்றேன்; இவர்களிடத்தில் அவர் தம்மை வெளிப்படுத்துகையில், இவர்கள் விசுவாசிப்பார்கள்; அடுத்து ஓர் அயலான் வருவான்; பின்னர் மற்ற யூதர்கள் இவர்களிடத்தில் சேருவார்கள். அநேகம் அவிசுவாசியான யூதர்கள், புறஜாதிகளுடன் காணப்படுகின்றார்கள்; இவர்கள் இஸ்ரயேல் மீது ஆசீர்வாதம் வருவதைக் காண்கையில், அந்த ஆசீர்வாதத்தைத் தாங்களும் பெற வேண்டுமென விரும்புவார்கள். தேவனுடன் இணக்கத்தில் காணப்படுபவர்கள் மீது, அவரது ஆசீர்வாதங்கள் யாவும் காணப்படும்.

**24. (Q398:1) நீதிமானாக்கப்படுதல் - முற்பிதாக்கள் மற்றும் சுவிசேஷ யுகத்தில் நீதிமானாக்கப்பட்டவர்கள்.**

கேள்வி (1910)-1- முற்பிதாக்களுடைய நாட்களில் அவர்களின் நீதிமானாக்கப்பட்ட நிலைமைக்கும், இந்தச் சுவிசேஷ யுகத்தில் அர்ப்பணத்திற்குள் கடந்துசெல்லாதவர்களின் நீதிமானாக்கப்பட்ட நிலைமைக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன?

பதில் - ஒருவர் அர்ப்பணம்பண்ணியுள்ளார் என்றும், இன்னொருவர் அர்ப்பணம்பண்ணவில்லை என்றும் நாங்கள் பதிலளிக்கின்றோம். நாம் பாவத்திலிருந்து திரும்பின நேரம் முதற்கொண்டு, நாம் நீதிமானாக்கப்பட்ட நிலைமையில் காணப்படுகின்றோம், எனினும் அந்த நீதிமானாக்கப்படுதலானது பகுதி நிலையிலேயே காணப்படும், அதாவது நாம் கடந்துபோயிருக்கும் அளவுக்குத்தக்கதாக மாத்திரமே காணப்படும். அதாவது ஒருவேளை நீங்கள் (City Hall) சிற்றி ஹாலுக்குப் போய்க்கொண்டிருக்கின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள் . . . நாங்கள் வந்து: "எங்கே போய்க்கொண்டிருக்கின்றீர்கள்?" என்று கேட்போமானால், நீங்கள் சிற்றி ஹாலுக்கு என்று சொல்வீர்கள். ஏன் இன்னும் நடந்துக்கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்போமானால், "ஆம், நான் இன்னும் அவ்விடத்தை அடையவில்லை" என்பீர்கள். இப்படியாகவே நீதிமானாக்கப்படுதலின் விஷயத்திலும் காணப்படுகின்றது; நீதிமானாக்கப்படுதலை நீங்கள் துவங்குகின்றீர்கள் மற்றும் நீதிமானாக்கப்படுதல் நிறைவு அடைவது வரையிலும், நீங்கள் தொடர்ந்து போய்க்கொண்டே இருப்பீர்கள். தேவன் ஏற்றுக்கொள்கின்ற ஒரே ஒரு காரியம், முழுமையான அர்ப்பணிப்பாகும். முற்பிதாக்கள் அர்ப்பணித்தார்கள் மற்றும் தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டார். தேவன் தமக்குள் பின்வருமாறு: "ஒருவேளை இந்த மனிதர்களுக்குப் பரிபூரணமான சரீரம் இருந்திருக்குமானால், இவர்கள் எந்தத் தவறும் செய்திருக்கமாட்டார்கள். இவர்கள் பரிபூரணமான சரீரங்களைப் பெற்றிருந்தார்கள் என்பதுபோல் நான் கருதிக்கொள்வேன்" என்று கூறினார். ஜீவன் விஷயத்தில் இவர்கள் நீதிமான்களாக்கப்பட்டிருக்கும் காரியமானது, வருங்காலத்தில் பெற்றுக்கொள்வார்கள் என்ற பார்வையில்தான் பண்ணப்பட்டது, அதாவது "ஏற்றகாலத்தில்" இவர்கள் பெறப்போகும் ஜீவனுக்கு ஏதுவாக ஆகும். இவர்கள் ஏற்றகாலம் வரை, காத்திருக்க வேண்டும்; இவர்கள்

தங்கள் நீதிமானாக்கப்படுதலின் பலனை அடைந்து, உயிர்த்தெழுதலில் முழுமையான பரிபூரணத்தை அடைவதற்கு முன்னதாக, "அக்கிரமத்திற்கான நிவிர்த்தியினை" இயேசு பண்ண வேண்டும்.

**25. (Q404:1) நீதிமானாக்கப்படுதல் மீதான இன்றைய பார்வை.**

கேள்வி (1913 - Z5316)-1- சபையினுடைய நீதிமானாக்கப்படுதல் தொடர்புடைய உங்களது கண்ணோட்டத்தினை மாற்றி உள்ளீர்களா? அப்படியானால், இத்தலைப்பு தொடர்புடைய வேதாகமப் பாடங்களினுடைய முதலாம் தொகுதியின் கருத்துகள் இனிமேலும் உங்களுடைய கருத்தல்ல என்று எடுத்துக்கொள்ள வேண்டுமா?

பதில் - நிச்சயமாக இல்லை! எங்களிடத்தில் மாற்றுக்கருத்துகள் இருக்குமானால், பின்னர் நாங்கள் ஏன் அத்தொகுதியினை வெளியிட்டு பரப்புவோம்? "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்" (நீதிமொழிகள் 4:18). ஆகையால் நீதிமானாக்கப்படுதல் எனும் தலைப்பு தொடர்புடைய காரியங்களானது, கர்த்தருடைய அருமையான ஜனங்களில் அநேகரை நாளுக்கு நாள் தெளிவுப்படுத்திக்கொண்டுவருகின்றது. அவர்களால் முன்பு தெளிவாய்ப் புரிந்துகொள்ளப்படாத நீதிமானாக்கப்படுதலின் அம்சங்களானது, இப்பொழுது மிகவும் தெளிவாகிக்கொண்டிருக்கின்றது. உதாரணத்திற்குப் பார்ப்போமானால், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பது படிப்படியான செயல்முறை எனும் காரியத்தினைக் கடந்த காலங்களில் அநேகர் பார்க்கத் தவறியுள்ளனர்; சிலர் இன்றும் காணத் தவறுகிறவர்களாகவே காணப்படுகின்றனர். விசுவாசத்தினுடைய ஒவ்வொரு படியும் climax/உச்சநிலை அடையத்தக்கதாக நம்மை அருகாமைக்குக் கொண்டுவந்தது.

ஆனாலும் கர்த்தருக்கான நமது கீழ்ப்படிதல் மூலமாயும், அர்ப்பணிப்பில் முழுமையாய்ச் சரணடைந்துவிடுவதன் மூலமாயும், நமது விசுவாசமானது அதன் பூரணத்தினை வெளிப்படுத்தாதது வரையிலும், அந்த உச்சநிலையானது/climax முழுமையாய் அடையப்பட முடியாது. பின்னர் நமது மகா பரிந்துபேசுபவர் நமது அர்ப்பணிக்கப்பட்ட சரீரங்களை ஏற்றுக்கொண்டு, அதற்குத் தம்முடைய புண்ணியத்தினைத் தரிப்பித்து, நீதிக்கு முன்னதாக - அதைப் பரம பிதாவின் பார்வையில் முழுமையாய்த் தகுதிப்படுத்துகின்றார். பின்னர் முழுமையாய் நீதிமானாக்கப்பட்டுள்ள ஆத்துமாவை/ஜீவியைப் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிப்பதன் மூலம் பரம பிதா ஏற்றுக்கொள்கின்றார். அதுமுதல் அவன் ஒரு புதுச் சிருஷ்டியாகவும், ஆவிக்குரிய தளத்தில் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு புத்திரனாகவும் காணப்படுகின்றான்.

விசுவாசத்தில் வளரும் காலப்பகுதியின்போது, நீதிமானாக்கப்படுதலானது படிப்படியாக அடையப்படுகின்றது; மேலும் அந்நபர் அதிகமதிகமாய்த் தெய்வீகத் தயவைப் பெறுகிறவனாகுகின்றான். எனினும் இறுதி படியினை அடியெடுத்து வைக்காதது வரையிலும், ஒருவன் மனித சுபாவத்திற்கு முழுமையாய் நீதிமானாக்கப்பட முடியாது - பூமிக்குரிய தளத்தில் ஒரு புத்திரனாக்கப்பட முடியாது. மேலும் ஒரு கணம்தான் அவன் அந்நிலையில் காணப்படுகின்றான். பின்னர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட காரியமானது, தகுதிப்படுத்தப்பட்டுள்ள/பூரணப்படுத்தப்பட்டுள்ள நபரின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது; மேலும் ஒரு புதுச்சிருஷ்டியென அவனது துவக்கத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.

## தற்காலிகமான மற்றும் உண்மையான புத்திரத்துவம்

இவைகள் அனைத்துமே யுகங்களைப்பற்றின வரைபடத்தில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. N - தளம் பல்வேறு படிகளில் நீதிமானாக்கப்பட்டுள்ள நிலைமையினைச் சுட்டிக்காட்டுகின்றது. இப்படியாக ஆபிரகாமும், பழைய ஏற்பாட்டு காலங்களிலுள்ள மற்றவர்களும், அவர்களது விசுவாசத்தின் காரணமாய்த் தேவன் முன்னிலையில் நீதிமானாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஜீவனுக்கேதுவாக நீதிமானாக்கப்படுகிறது மில்லை, குமாரத்துவத்திற்கேதுவாக நீதிமானாக்கப்படுகிறதுமில்லை. இவர்கள் தேவனுடைய தோழமையை, தயவை, கண்காணிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக நீதிமானாக்கப்பட்டனர். இயேசு மரித்து, உயிர்த்தெழுந்து பரமேறி, தம்முடைய புண்ணியத்தினைச் சபையின் சார்பாகச் செயல்படுத்தினபோது, முழுமையான அர்ப்பணத்தின் வாயிலாக அவரது அடிச்சுவட்டில் நடக்க விருப்பமாயிருக்கும் இந்தச் சபை வகுப்பார் யாவருக்கும் அவர் பரிந்துபேசுபவரானார். அவரது புண்ணியம் தரிப்பிக்கப்படும் காரியமானது, ஒவ்வொருவருக்குமான நீதிமானாக்குதலின் வேலையினை உள்ளடக்குகின்றது; மேலும் இதன் காரணமாகத் தேவன் ஒருவனுடைய பலியை ஏற்றுக்கொள்ள முடிபவராகவும், புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்க முடிபவராகவும் ஆக முடிந்தது.

ஆபிரகாம் தேவனுடைய நண்பன் என்று அழைக்கப்பட்டார்; காரணம் அவரது விசுவாசமும், தேவனுடன் இசைவாய்க் காணப்பட வேண்டும் என்ற வாஞ்சையும் ஆகும். இப்படியாகவே யோவான் ஸ்நானனும் காணப்பட்டார்; இவரைக்குறித்து நாம் வாசிப்பதாவது: "மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்" (யோவான் 3:29). "Servant/வேலைக்காரன்" எனும் வார்த்தையானது, வேதாகமத்தில் விசேஷமாக மோசேயினுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ்க் காணப்படும் யூதர்களைக்குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கையின் வாயிலாக அவர்கள் தேவனுடைய பராமரிப்பையும், ஆசீர்வாதத்தையும் அனுபவித்தார்கள்; அவரது வேலைக்காரர்களாக இருக்கும்படிக்கும் அனுமதிக்கப்பட்டார்கள். ஆபிரகாமும், இன்னும் மற்ற அநேகரும் தேவனுடைய நண்பர்களாக இருந்தபோதிலும், குமாரத்துவம் அடைவதற்கான சிலாக்கியங்களுக்கு முழுக்கத் தகுதியானவர்களாகக் காணப்பட்டிருப்பார்கள் என்ற போதிலும், இவர்கள் புத்திரர்களாக அங்கீகரிக்கப்படுவது என்பது தெய்வீக ஏற்பாட்டின்படி கூடாத காரியமாக இருந்தது; ஏனெனில் அப்போஸ்தலன் விவரித்துள்ளதுபோல, "குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்;" மேலும் கிறிஸ்துவின் பலியானது, பாவம் மற்றும் மரணம் இரத்து செய்யப்படுவதற்குரிய வழியினைத் திறவாததுவரை, யாரும் தெய்வீகப் புத்திரத்துவத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

இதுபோலவே தேவனுடைய புத்திரர்கள் என்ற நம்முடைய நிலையும் தற்காலிகமானதேயாகும். நாம் தேவனுடைய அன்பில் நிலைத்திருந்தால், நாம் அவரது புத்திரர்களென நிலைத்திருந்து, ஏற்றகாலத்தில் பூரணப்படுத்தப்படுவோம். ஆனால் ஒருவேளை ஒருவன் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்வதற்கு என்றும், அந்தப் பாவத்திற்காக ஊழியஞ்செய்வதற்கு என்றும் பின்வாங்கிப் போவானேயானால், அவன் தனது புத்திரத்துவத்தை இழந்துபோவான். அவனது பெயர் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்படும். பிதாவிடம் பரிந்துபேசுகிறவர், அத்தகையவனை அங்கீகரிப்பதை நிறுத்திக் கொள்வார். அத்தகையவன் குமாரனிடத்தில் எந்த உறவு நிலையினையும் கொண்டிருக்கமாட்டான்; மேலும் அத்தகையவனுடைய இடத்தை அபிஷேகிக்கப்பட்ட சரீரத்தின் அங்கத்தினன் என, இன்னொருவன் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவான்.

ஆகையாலே அப்போஸ்தலன்: "பிரியமானவர்களே இப்பொழுது (கருநிலையில்) தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் (நமது மீட்பர், நமது தலை) வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறியுள்ளார் (1 யோவான் 3:2). அதாவது நமது தற்போதைய புத்திரத்துவம் தற்காலிகமானதாகும்/tentative. நிஜமான புத்திரத்துவமானது, நமது தகுதியை ஆராய்ந்திடும் பரீட்சையில் நாம் வெற்றியடைந்த பிற்பாடே துவங்கும். யாரெல்லாம் தங்களது விசுவாசம் மற்றும் நேர்மையின் காரணமாய் அங்கீகரிக்கப்படத்தக்கவர்களெனத் தங்களை நிரூபிக்கின்றார்களோ, அவர்கள் முழுமையான விதத்தில் மகிமையான உயிர்த்தெழுதலுடைய மாற்றத்தின் மூலம் புத்திரர்களாக்கப்படுவார்கள். இப்படியாக முழுமையான அர்ப்பணம்பண்ணாதது வரையிலும், யார் ஒருவரும் N - தளத்தில் ***முழுமையாய்*** ஏற்றுக்கொள்ளப்படுகிறதில்லை; அதுபோலவே L - (பூரண ஆவிக்குரிய ஜீவிகள் நிலை - தொகுதி: 1, பக்கம்: 285) தளத்தை அடையாதது வரையிலும் ஒருவர் குமாரத்துவத்திற்குள் ***முழுமையாய்*** ஏற்றுக்கொள்ளப்படுகிறதில்லை.

## மேன்மையான உயிர்த்தெழுதல்

பூர்வகால பாத்திரவான்கள், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, தீர்க்கத்தரிசிகள் முதலானவர்கள் தேவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப்பட முடியாது மற்றும் அவர்கள் அப்படியாக அழைக்கப்படவுமில்லை; இதற்குக் காரணம் அவர்கள் அந்த ஸ்தானத்திற்கோ, பெயருக்கோ பாத்திரவான்கள் இல்லை என்பதினால் இல்லை (எபிரெயர் 11:38-40). இதை அப்போஸ்தலன் நமது கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்கள் "தேவனுக்குப் பிரியமாயிருந்தார்கள்" என்றும், பூரணமான இருதயத்திற்குக் குறைவான எதுவும் அவரைப் பிரியப்படுத்துவதில்லை என்றும் நமக்கு உறுதிப்படுத்துகின்றார். அவர்கள் குமாரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தடையாக இருந்த ஒரே காரியம், அவர்கள் சார்பாக பாவநிவாரண இரத்தம் முதலாவது முன்வைக்கப்பட வேண்டிய அவசியமேயாகும். முற்பிதாக்கள் பெறப்போகின்ற "மேன்மையான உயிர்த்தெழுதலில்," அவர்கள் பூரண மனுஷர்களாக வருவார்கள் என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதலாக இருக்கின்றது. அவர்கள் ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னதாக இருந்ததுபோல பூரணர்களாகவும், மனங்கள் மற்றும் இருதயங்கள் மற்றும் சித்தங்கள் விஷயத்தில் வளர்ச்சிப்பெற்றவர்களாகவும், பயிற்றுவிக்கப்பட்டவர்களாகவும், பரீட்சிக்கப்பட்டவர்களாகவும், தேவனுக்கு நேர்மையானவர்களென நிரூபிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுவார்கள். அந்தப் பரிபூரணமான நிலைமையில் அவர்கள் மாதிரிகளாகக் காணப்படுவார்கள், அதாவது மேசியாவின் ஆளுகையின்போது கீழ்ப்படிதல் வாயிலாக மனுக்குலம் அடையப்போகும் அனைத்திற்கும், மாதிரிகளாகக் காணப்படுவார்கள்.

அவர்களுடைய உயிர்த்தெழுதல் முதற்கொண்டு, இந்தப் பரிபூரண மனிதர்கள், ஆதாமிற்கு இருந்ததுபோலவே, தேவனிடம் வருவதற்குரிய அதே உரிமையினைப் பெற்றவர்களாய்க் காணப்படுவார்கள்; மேலும் ஆதாம் போலவே, தேவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப்படுவதற்கு முழு உரிமையினை அளிக்கப்பெற்றவர்களாய்க் காணப்படுவார்கள்; ஆனால் ஒரே ஒரு விதிவிலக்கு காணப்படும். அதென்னவெனில், முற்பிதாக்களும், மீதமுள்ள மனுக்குலமும் மேசியாவின் ஆயிர வருஷ இராஜ்யத்தின்போது புதிய உடன்படிக்கையினுடைய மத்தியஸ்தரின் கரங்களில் காணப்படுவார்கள். வேதவாக்கியங்களின்படி அந்தக் காலப்பகுதியின் முடிவிலேயே, அவர் இராஜ்யத்தைப் பிதாவினிடத்தில் ஒப்படைப்பார்.

ஆகையால் கிறிஸ்துவினுடைய ஆளுகையின் இறுதி காலத்திற்கு முன்புவரை, அதாவது பிதாவே, "சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கும்," அனைத்தும் நேரடியாக அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பதற்கும் வேண்டி, அனைத்தையும் கிறிஸ்து பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கும் இறுதிகாலத்திற்கு முன்புவரை, பிதாவுடன் குமாரர்களென இந்த முற்பிதாக்கள் நேரடியான கையாளுதலைப் பெற்றிருப்பதில்லை. எனினும் ஆயிர வருஷங்களின்போது, கிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஏற்பாடுகளின்கீழ், பூரணராக்கப்பட்ட முற்பிதாக்களும், மற்றவர்களும், தாங்கள் அடைந்துள்ள பூரண அளவிற்கேற்ப சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பார்கள்; ஏனெனில் அவர்கள் அனைவரும் இனிமேலும் பாவம், மரணம் மற்றும் "இவ்வுலகத்தின் அதிபதியாகிய" சாத்தானுடைய ஆளுகையின்கீழ்க் காணப்படாமல், மாறாக ஜீவாதிபதியின்கீழும், ஜீவனுக்கு ஏதுவான நீதியான அவரது ஆளுகையின்கீழும் காணப்படுவார்கள்.

**26. (Q446:1)** ஆதாம் ஜீவ-உரிமைகள் எதையேனும் பெற்றிருக்கின்றாரா?

கேள்வி (1912)-1- தற்போது ஆதாமிடம் ஏதேனும் ஜீவ-உரிமைகள் இருக்கின்றனவா?

பதில் - இல்லை. தற்போது ஆதாமிடம் எந்த ஜீவ-உரிமைகளும் இல்லை; உண்மையாகவே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளவர்களாகிய சொற்பமானவர்கள் தவிர, மற்றபடி ஆதாமுடைய பிள்ளைகள் யாரிடமும் இல்லை. "குமாரனை உடையவன் ஜீவனை உடையவனாய் இருக்கின்றான்." கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவரது நிபந்தனைகளின்கீழ் வந்தவர்கள் தவிர, மற்றப்படி வேறு யாரிடமும் ஜீவ-உரிமைகள் இல்லை. முற்பிதாக்களுக்குக்கூட இன்னமும் ஜீவ-உரிமைகள் இல்லை; மேலும் ஏற்றவேளை வருகையில் அவர்களே (பூமிக்குரிய தளத்தில்) முதலாவது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, தேவனுடன் இணக்கத்தில் வருவார்கள்; மேலும் ஆயிர வருஷங்கள் முடிவதற்கு முன்னதாக, இவர்கள் ஜீவ-உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில்லை. அனைவருமே தங்களுக்குரிய ஜீவ-உரிமைகளை, அந்த ஆயிர வருஷங்களின் முடிவில் பெற்றுக்கொள்வார்கள். நம்மை ஆயத்தம் பண்ணுவதில் கர்த்தராகிய இயேசு தமது பங்கை ஆற்றினார்; ஆனால் நியாயாதிபதியாகிய தேவனே நித்திய ஜீவனைக் கொடுப்பவர் ஆவார். அவருடைய பிள்ளைகளாக இருக்கப்போகும் யாவருக்கும் அவரே தகப்பனாவார். ஆகையால் தற்காலத்தில் ஆதாமிற்கு அல்லது அவரது பிள்ளைகளுக்கு ஜீவ-உரிமைகள் இல்லை. ஏற்பாடுகள் மாத்திரமே செய்யப்பட்டுள்ளது; மேலும் மாபெரும் திட்டமானது நிச்சயமாகவே வெளியாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது மற்றும் அது நிறைவடையும். "வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே" என்ற வார்த்தைகள் சொல்லப்படுவதற்குரிய காலம் வரும்; அப்போது இசைவிற்குள்ளாக வருபவர்கள், தங்களுக்குரிய ஜீவ-உரிமைகளைப் பெற்றுக்கொள்வார்கள். மீண்டும் சொல்லுகின்றேன் . . . ஆதாமிடம் தற்காலத்தில் ஜீவ-உரிமைகள் இல்லை; ஆனால் அவருக்கும், அவரது பிள்ளைகளுக்குமான நேரம் நெருங்கி வந்துக்கொண்டிருக்கின்றது.

**27. (Q584:3)** திரள்கூட்டத்தார் மற்றும் முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் வரிசை.

கேள்வி (1910)-3- முற்பிதாக்களுக்கு முன்னதாக திரள்கூட்டத்தார் விழித்தெழுப்பப்படுவார்கள் என்பதற்குக் கொஞ்சம் ஆதாரங்களை எங்களுக்குத் தாருங்கள்.

பதில் - எது ஆதாரமாகக் கருதப்படலாம் எனும் காரியமானது, மனதைச் சார்ந்துள்ளது. என்னுடைய யோசனைப் பின்வருமாறு: திரள்கூட்டத்தார் இந்தத் தற்காலத்தின் சுவிசேஷ யுக வேலையில் சபையுடன்

சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள்; மேலும் இவர்கள் சபையுடன் சம்பந்தப்பட்டவர்களாக அநேகம் விதங்களில் சித்தரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளனர்; உதாரணத்திற்குப் பாவநிவாரணநாள் மற்றும் பலிகள் தொடர்புடைய வேலையில் ஆசாரியர்களும், லேவியர்களும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். சிறுமந்தைக்கும், அவளைப் பின்செல்லும் தோழிகளுக்குமான இரண்டாம் உருவகமாகிய மணவாட்டி எனும் உருவகத்தில் தோழிகளும், சபையுடன் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. ரெபெக்காள் பற்றின காட்சியையும் நான் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். ஆபிரகாம் ஈசாக்கிற்கு மணவாட்டியாகும்படிக்கு ரெபெக்காளை அழைத்தனுப்பினபோது, மணவாட்டியின் பணிப்பெண்கள் யாரையும் வரும்படிக்கு அவர் அழைக்கவில்லை, ஆனாலும் சிலர் அவளோடு வந்தார்கள் என்பதை ஒருநாள் நான் கவனித்தேன். இவர்கள் திரள்கூட்டம் வகுப்பார் ஆவார்கள்; இவர்கள் மணவாட்டி வகுப்பாரின் பணிவிடைக்காரர்கள் ஆவார்கள். ஈசாக்கு மணவாட்டியினை ஏற்றுக்கொண்டபோது, மணவாட்டியின் பணிப்பெண்களையும் ஏற்றுக்கொண்டார் எனவும், இவர்கள் மணவாட்டியோடுகூடக் கடந்துசென்று, மணவாட்டியுடன் காணப்பட்டார்கள் எனவும் கருதுவது சரி என்று எனக்குத் தோன்றுகின்றது. இப்படியே கிறிஸ்து, சிறுமந்தை மற்றும் திரள்கூட்டத்தாரின் விஷயத்திலாகும் - இவர்கள் அனைவரும் ஒருசேர கடந்துசெல்வார்கள் என்று நான் புரிந்திருக்கின்றேன். இதுவுமல்லாமல், தன்னைப் பலியாக ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொருவருக்கும், கிறிஸ்துவினுடைய புண்ணியத்தில் ஒரு குறிப்பிட்ட அளவானது சாற்றப்பட்டுள்ளது என்பதையும் நினைவில்கொள்ளுங்கள். நேற்றைய இரவில் ஞானஸ்நானம் பற்றிப் பார்த்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கும்; அதாவது நீங்கள் உங்களது பலியை முன்வைக்கையில், நமது கர்த்தராம் இயேசு, நமக்குப் பரிந்துபேசுபவரென, நமது பிரதான ஆசாரியரெனத் தோன்றி, பலியைத் தம்முடையதென ஏற்றுக்கொண்டு, அதைத் தெய்வீக அங்கீகரிப்பிற்கு ஏற்றதாக மாற்றத்தக்கதாக, தம்முடைய சொந்த புண்ணியத்தில் கொஞ்சத்தைத் தரிப்பிக்கின்றார் என்று பார்த்தோம். ஆகையால் சிறுமந்தையினர்போலவே, திரள்கூட்டம் வகுப்பாரும் தங்களை அர்ப்பணித்து, கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் இந்தச் சாற்றப்படுதலைப் பெற்றுக்கொள்கின்றார்கள் - அனைவருமே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு முன்னதாக இந்தச் சாற்றப்படுதலைப் பெற்றுக்கொள்கின்றார்கள். இப்பொழுதும் என்னுடைய கருத்து என்னவெனில்: புது உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதங்கள் எதையேனும், உலகத்திலுள்ள யார் ஒருவரும் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக, மேற்கூறப்பட்டுள்ள இவைகள் அனைத்தும் முடிவிற்கு வரும் - அதாவது இந்தச் சுவிசேஷ யுகத்தின்போதுள்ள விசுவாச வீட்டார் அனைவருக்கும் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியமானது சாற்றப்படும் காரியம் அனைத்தும் முடிவிற்கு வரும்; மேலும் கிறிஸ்துவின் புண்ணியம் அனைத்தும், நீதியின் கரத்தினிடத்திற்குத் திரும்பும்; இன்னுமாக முற்பிதாக்கள் என்பவர்கள், இந்தத் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் பூமிக்குரிய வகுப்பாரில் அடங்குவார்கள்; மேலும் சிறுமந்தையும், திரள்கூட்டத்தாரும், தங்கள் மூடுதலுக்காக இயேசுவின் புண்ணியத்தினால் சாற்றப்படும் காரியம் முற்றுப்பெறாதது வரையிலும், முற்பிதாக்கள் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களிலுள்ள தங்களது பங்கினை அடைவதில்லை. சிறுமந்தையின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் பரிந்துபேசுபவராகக் காணப்படுபவர், திரள்கூட்டத்தின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும்கூடப் பரிந்துபேசுபவர் ஆவார். நாம் பிதாவினிடத்திற்கு

வந்தபோது, நம் ஒவ்வொருவருக்காகவும் பொறுப்பாளியாக அவர் ஆனார். அவர் நம்முடைய பலிகளை ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவைகளாக்கினார்; நம் ஒவ்வொருவருக்கும், ஆம்! நம் ஒவ்வொருவருக்கும் அவர் முடிவுபரியந்தம் பரிந்துபேசுபவராகக் காணப்படுவது அவசியமாகும். அப்போஸ்தலன் கூறுவதுபோன்று: "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவான் 2:1). ஆகையால் திரள்கூட்ட வகுப்பார் திரையைக் கடந்துபோவது வரையிலும், இவர்கள் இயேசுவைத் தங்களுக்குப் பரிந்துபேசுபவராகப் பெற்றிருக்க வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, இயேசுவானவர் தேவனுக்கும் உலகத்துக்கும் இடையில் மத்தியஸ்தராகிடுவதற்கு முன்னதாக, சபைக்குப் பரிந்துபேசுபவராக இருப்பதை அவர் முற்றிலுமாக நிறுத்த வேண்டும்.

**28. (Q587:1) உயிர்த்தெழுதல்.**

கேள்வி (1910 - Z4666)- 1- இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள திரள்கூட்டத்தாருக்கு முன்னதாக முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் இடம்பெறுமா?

பதில் - சமீபத்தில் நாம் வாட்ச் டவர் பத்திரிக்கையில் கலந்தாய்வுப் பண்ணிக்கொண்டிருப்பவைகளின் வெளிச்சத்தில் பார்க்கையில், கிறிஸ்துவினுடைய புண்ணியமானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் சபையின் சார்பாக - சபையாகுவதற்கு முயலும் அனைவரின் சார்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பது நிச்சயமே; பலிசெலுத்துபவர்களாகிட வேண்டும் என்று வாஞ்சிப்பவர்களுக்கும், மேலும் தேவனுக்குப் பிரியமான பலியைச் செலுத்துவதற்காகத் தங்களை அர்ப்பணம்பண்ணுகிறவர்களுக்கும், இப்படியாக ஆவிக்குரிய வகுப்பாரில் அங்கத்தினர்களாகிடவும், கிறிஸ்துவோடு உடன்சுதந்தரர்களாகிடவும் நாடுபவர்களுக்கும் - அப்புண்ணியமானது தரிப்பிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இது "திரள் கூட்டத்தாருக்கும்," "சிறுமந்தைக்கும்" சேர்ந்தே பொருந்தும். இது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் பொருந்தும்; ஏனெனில் கிறிஸ்துவினுடைய புண்ணியமானது இவர்களது பூமிக்குரிய பலியின் மீது சாற்றப்பட்டால் தவிர, மற்றபடி இவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட முடியாது.

ஆகையால் கிறிஸ்துவினுடைய மரணத்தின் புண்ணியமானது இஸ்ரயேல் மற்றும் உலகத்திற்குரிய புது உடன்படிக்கையின் ஏற்பாடுகளின்கீழ், முற்பிதாக்கள் அல்லது இஸ்ரயேலர்கள் சார்பாகச் செயல்படுத்தப்படுவதற்கு முன்னதாக, ஆவிக்குரிய நிலையினை அடையும் வாய்ப்பினைக் கொடுக்கும் நோக்கத்திற்காக அப்புண்ணியமானது இப்பொழுது யார் மீதெல்லாம் சாற்றப்பட்டுள்ளதோ/ தரிப்பிக்கப்பட்டுள்ளதோ, அவர்கள் தொடர்புடைய விஷயத்தில் அது விடுவிக்கப்பட வேண்டும். இது முற்பிதாக்கள் உயிர்த்தெழுவதற்கு முன்னதாக, "திரள் கூட்டம்" வகுப்பார் உயிர்த்தெழுப்பப்பட வேண்டும் எனும் கருத்தினை நிரூபிக்கின்றது.

## OVERLAND MONTHLY

**OV 45** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

நமது கர்த்தருடைய முதலாம் வருகைக்கு முன்னதாக வாழ்ந்த ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள் மற்றும் இவர்களைப்போன்று விசுவாசத்தையும், குணலட்சணத்தையும் வளர்த்துள்ளவர்களாகிய மற்றவர்களும், பரலோக இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய பாகமாய் இருப்பார்கள் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இதைக்குறித்துப் பரிசுத்த பவுல் அடிகளார் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்கள் பூமிக்குரிய சுதந்தரம், ஆளுகையாகிய - "வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் . . . விசுவாசத்தோடே மரித்தார்கள்" என்றும், "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக்கப்படுவதில்லை" என்றும் கூறியுள்ளார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், முற்பிதாக்கள் பரலோக இராஜ்யத்தின் மற்றும் அதன் சட்டத்திட்டங்களின் பூமிக்குரிய பிரதிநிதிகளாகக் காணப்படத்தக்கதாக, முழுமையான மனுஷீக பரிபூரணத்திற்கு மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்படுவதற்கு முன்னதாக, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய சபையானவள், கர்த்தருடன் பரலோக ஆளுகைக்கு உயர்த்தப்பட வேண்டும். இன்னுமாக இந்த முற்பிதாக்கள் ஒவ்வொருவரும், பரிபூரண மனுஷத்துவத்திற்குரிய ஒரு மாதிரியை அல்லது எடுத்துக்காட்டைத் தங்களிடத்தில் பெற்றிருப்பார்கள்; அதாவது இராஜ்யத்தினுடைய பிரமாணங்களுக்கும், அதன் சீர்ப்படுத்தும் தாக்கங்களுக்கும் கீழ்ப்படிவதன் மூலம், மனுக்குலம் அடையப்போகும் பரிபூரண மனுஷத்துவத்திற்கான மாதிரிகளாக முற்பிதாக்கள் காணப்படுவார்கள். முற்பிதாக்கள் கல்லறையினின்று, உடனடியான பூரணத்திற்குக் கொண்டுவரப்படும் காரியமானது அப்போஸ்தலன் விவரிப்பதுபோன்று, இவர்கள் விசுவாசத்திற்கான பரீட்சைகளிலும், சோதனைகளிலும் நிலைநின்றதாலேயே ஆகும்; இவர்கள் விசுவாசத்திற்கான பரீட்சைகளிலும், சோதனைகளிலும் நிலைநின்ற விஷயமானது, இவர்கள் மேசியாவின் மாபெரும் வேலையில் - அதாவது பூமியின் குடிகளை ஆசீர்வதித்திடும் மற்றும் தூக்கிவிடும் வேலையில், இவர்கள் ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியெனப் பயன்படுத்தப்படுவதற்குப் பாத்திரவான்களாய் இருக்கின்றார்கள் என்ற தெய்வீக அங்கீகரிப்பை இவர்களுக்குக் கொண்டுவந்தது.

---

## CONVENTION REPORT SERMONS

**CRS 104** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

சீனாய் மலையில், மோசேயின் மத்தியஸ்தம் மூலமாக தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது, ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் என்று யூத ஜனங்கள் அனுமானிப்பது இயல்பான ஒரு விஷயமேயாகும். எனினும் அவர்கள் தவறாகப் புரிந்திருக்கின்றனர்.

இஸ்ரயேலின் மத்தியஸ்தரும், பலிசெலுத்தும் ஆசாரியர்களும், அவர்கள் ஏறெடுத்த பலிகளும், அவர்களது ஆசரிப்புக்கூடாரமும், அதன் பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும், ஆலயமும், நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய அனைத்து அம்சங்களும் - வரப்போகின்ற "விசேஷித்த

பலிகளுக்கும்," மேலான ஆசாரியத்துவத்திற்கும், மேலான மத்தியஸ்தருக்கும், நித்திய மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதல் எனும் மகிமையான ஆசீர்வாதங்களுக்கும் நிழல்களாக அல்லது முன்னடையாளங்களாகக் காணப்படுகின்றன. எனினும் இஸ்ரயேலின் நிழல்களுக்குரிய காலப்பகுதியானது வீணடிக்கப்படவில்லை. அக்காலப்பகுதியில் நிழல்கள் மாத்திரம் கொடுக்கப்படாமல், அதேவேளையில் ஒரு விசேஷித்த பிரதிநிதிகளின் வகுப்பாரும் தெரிந்தெடுக்கப்பட்டனர்; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள் அனைவரும் மற்றும் அந்த யுகத்தில் (தேவனுக்கேற்ற) பாத்திரவான்களாகவும், பரிசுத்தர்களாகவும், தேவனுக்கு அர்ப்பணித்தவர்களாகவும் காணப்பட்ட அனைவரும், இராஜ்யத்தின் நிபந்தனைகளின்படி தகுதியுள்ள பிரதிநிதிகளென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களைக்குறித்து வேதவாக்கியங்களானது, "நித்திரையடைந்தார்கள்" என்று தெரிவிக்கின்றது. இவர்கள் இன்னமும் பூமியின் தூளிலே நித்திரைப்பண்ணி, மகிமையான உயிர்த்தெழுதலின் காலை வேளைக்கும், அப்போது நிறைவேற்றப்படும் வேலையில், மேசியாவுடன் பிரம்மாண்டமான ஒரு பங்கினை அடைவதற்கும் வேண்டி காத்திருக்கின்றார்கள். இவர்களது வாழ்நாட்களின்போது, இவர்கள் பிதாக்கள் என்று அழைக்கப்பட்டனர்; ஏனெனில் மேசியா ஆபிரகாமின் சந்ததியில் வருவார் என்றும், அவர் "தாவீதின் குமாரனாக" இருப்பார் என்றும் முன்னுரைக்கப்பட்டிருந்தது.

மேலும் வேறு வேதவாக்கியங்களானது மேலேகூறப்பட்டுள்ள காரியங்களுக்கு முரண்படாத வகையில், கர்த்தர் "*தாவீதின் குமாரனும்,*" "*ஆபிரகாமின் வித்துமானவர்*" ஆவார் என்றும், இந்தக் கர்த்தர் தாவீது மற்றும் ஆபிரகாமுக்குப் பிதா என்றும் நமக்குத் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிக்கின்றது. ஆகையாலே "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்" என்று நாம் வாசிக்கின்றோம் (சங்கீதம் 45:16). தாவீதின் குமாரனாகிய மேசியா, தாவீதை மரணத்திலிருந்து விழித்தெழுப்பும்போது, அவர் தாவீதின் பிதாவாக அல்லது ஜீவன் அளிப்பவராக இருப்பார். இதுபோலவே அவர் முற்பிதாக்கள் அனைவருக்கும் பிதாவாக இருப்பார்; மேலும் அவர் தாவீதின் ஆண்டவராக, "கர்த்தாதி கர்த்தராக" இருந்து, இஸ்ரயேலையும், பூமியின் ஜாதிகள் அனைவரையும் ஆளுவதற்கென்றும், ஆசீர்வதிப்பதற்கென்றும் ஸ்தாபிக்கவிருக்கும் மாபெரும் மேசியாவின் இராஜ்யத்தில் - ஆபிரகாமிற்கும், ஈசாக்கிற்கும், யாக்கோபிற்கும், அனைத்து முற்பிதாக்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், உண்மையுள்ளவர்களுக்கும், தம்மோடு ஒரு மகிமையான பங்கைக்கொடுப்பது, அவரது சித்தமாக இருக்கும். இது ஆபிரகாமிற்கும், அவரது சந்ததிக்கும் எவ்வளவு பிரம்மாண்டமான கனமாயிருக்கும்! உண்மையில்லாதவர்களைச் சர்வவல்லமையுள்ளவர் இப்படிக் கனப்படுத்துவார் என்றும், இத்தகைய உயர் ஸ்தானத்திற்குப் பயன்படுத்துவார் என்றும் நாம் எதிர்பார்க்க முடியுமா? நிச்சயமாக இல்லை! மேசியா இந்த முற்பிதாக்களைப் "பூமியெங்கும் பிரபுக்களாக," தம்முடைய கண்களுக்குப் புலப்படாத இராஜ்யத்தின் (பூமிக்குரிய) பிரதிநிதிகளாக நியமிக்கும்போது, இது முதலாவதாக யூதர்களுக்குக் கனமாகவும், மேன்மையாகவும் காணப்படுமல்லவா?

**<u>CRS 472</u>** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

வரிசையில் அடுத்ததாக இடம்பெறுபவர்கள் முற்பிதாக்களாவார்கள்; அவர்கள் பூமிக்குரிய நிலைக்குக் கொண்டுவரப்படுவார்கள். தங்களைச் சுற்றியுள்ள அபூரண மனிதர்களிடமிருந்து வேறுபட்ட நிலைமையில், அவர்கள் பரிபூரண மனிதர்களாகக் காணப்படுவதைச் சற்று யோசித்துப் பாருங்கள். அவர்கள் எத்தகைய பிரம்மாண்டமான பாத்திரங்களாய்க் காணப்படுவார்கள். அவர்கள் மற்ற மனிதர்களைவிட உயரமாய் இருப்பார்களா என்று என்னால் சொல்ல முடியாது. அவர்கள் ஆறு அடி உயரத்தில் காணப்படுவார்கள் என்று நான் அனுமானிக்க மாத்திரமே செய்கின்றேன். எனக்கு

உறுதியாய்த் தெரியாது. "அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தினார்கள் என்ற சாட்சியைப் பெற்றார்கள்" என்று அவர்களைக்குறித்து அப்போஸ்தலன் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் பேசுகின்றார்; இது அவர்களுக்கு நல்லது. அவர்கள் அவரைப் பிரியப்படுத்தியிருப்பார்களானால், அவர்கள் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் சபையைக்காட்டிலும் வேகமாய் உயிர்த்தெழுந்துவரமாட்டார்களா? இல்லை! "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக்கப்படுவதில்லை" என்று எபிரெயர் 11:38-40-வரையிலான வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. நாம் பூரணராகும் வரையிலும், அவர்கள் பூரணராக முடியாது. பின்னர் அவர்கள் பூரணராக்கப்படுவார்கள். இது மனுக்குலத்தைப் பரிபூரணத்திற்குக் கொண்டுவருவதில், கிறிஸ்துவினுடைய முதல் மாபெரும் வேலையாகக் காணப்படும். அவர்கள் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருந்திருப்பார்களானால், அவர்கள் பரிபூரண மனித சரீரங்களை உடையவர்களாகவே எழுந்துவருவார்கள்; ஆவிக்குரிய சரீரங்களை உடையவர்களாக இராமல், மாறாக பரிபூரணமான மனிதர்களாக வருவார்கள். எதற்காக வருவார்கள்? தீர்க்கத்தரிசி உரைத்துள்ளதுபோன்று, அவர்கள் பூமியெங்கும் பிரபுக்களாகக் காணப்படுவார்கள். பிரபு என்கிறபோது பிரதானமானவர், அதிகாரி என்பதாகும். அவர்கள் அதிகாரிகளாக இருக்கப்போகின்றார்கள். அவர்கள் இராஜ்யத்தை அருமையாய்ச் சித்தரிக்கின்றார்களல்லவா? ஆம்! நிச்சயமாக.

மனிதர்களால் தேவனையோ, இயேசுவையோ, சபையையோ பார்க்க முடியாது, ஏனெனில் இவர்கள் ஆவிக்குரிய ஜீவிகளாவார்கள்; ஆனால் கிறிஸ்து மற்றும் சபைக்கு முற்பிதாக்கள் சிறந்த பிரதிநிதிகளாய் இருப்பார்கள். ஏன்? என்று கேட்கப்படலாம். ஏனெனில் ஒரு பரிபூரணமான மனுஷன், மாம்சத்தில் தேவனுடைய சாயலில் காணப்படுகின்றான்; மேலும் அவனாலும் தேவனைப் பார்க்க இயலாது. எந்த மனுஷனும் தேவனை ஒருக்காலும் கண்டதில்லை; பிதாவினால் ஜெநிப்பிக்கப்பட்டவர் (இயேசு) மாத்திரமே அவரை வெளிப்படுத்தியிருக்கின்றார். இயேசு பிதாவின் பிரதிநிதியாகக் காணப்பட்டதுபோன்று, முற்பிதாக்களும் மாம்சத்தில் பூரணப்பட்டுக் காணப்படும்போது, தேவனுக்கும், இயேசுவுக்கும் மற்றும் சபைக்கும் முற்றிலும் பூரணமான பிரதிநிதிகளாகக் காணப்படுவார்கள். முற்பிதாக்களில் காண்பதைப்போன்று வேறு எதிலும், மனுஷர்களால் தேவ சாயலைக் காணமுடியாது. அது பிரமாண்டமாய் இருக்குமல்லவா? அவர்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகளென உலகை ஆளுகை செய்வார்கள். சாத்தானும் இப்பொழுது ஓர் ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்படுகின்றார்; மேலும், அவரோடுகூடச் சில தூதர்களும் காணப்படுகின்றார்கள். இவர்கள் அனைவரும் இவ்வுலகத்தின் அதிபதிகள் மற்றும் அதிகாரிகள் என்று அழைக்கப்படுகின்றனர்; இவர்கள் தங்கள் வல்லமையை மனித பிரதிநிதிகள் வாயிலாகச் செயல்படுத்துகின்றார்கள். சிலசமயம் மோசமான ஜனங்கள் மூலமாகவும், சிலசமயம் நல்ல ஜனங்கள் மூலமாகவும் செயல்படுத்துகின்றார்கள். அக்காலத்தில் சபை அதிகாரப்பூர்வமான உண்மை அதிகாரிகளாகக் காணப்படுவார்கள்; மேலும் இவர்களது விருப்பங்களானது, இவர்களுடைய பூமிக்குரிய பிரதிநிதிகள் மூலம் செயல்முறைப்படுத்தப்படும்.

---

## HARVEST GLEANINGS

**<u>2HG 520</u>** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

பரிசுத்த பவுல் அடிகளார் குறிப்பிடும் முற்பிதாக்களின் பட்டியலை முதலாவதாக நினைவுகூருங்கள். அவர் ஆபேலுடன் துவங்கி, கிறிஸ்துவின் நாள் பரியந்தம், தாங்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்திற்கேற்ப தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்ட மிக முக்கியமானவர்களைக்

குறிப்பிடுகின்றார். சிலர் தங்களுடைய விசுவாசத்திற்கு ஒரு விதத்தில் சான்று பகர்ந்தவர்களாகவும், சிலர் வேறு விதங்களில் சான்று பகர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்; சிலர் தங்களுடைய உண்மையின் நிமித்தம் துன்புறுத்தப்பட்டார்கள் என்றும், சிலர் தங்கள் வீட்டைவிட்டுத் தப்பி ஓடி, குகைகளிலும், பூமியின் வெடிப்புகளிலும் சஞ்சரித்தார்கள் என்றும், சிலர் கல்லெறியப்பட்டார்கள் என்றும், சிலர் வாளால் அறுக்கப்பட்டார்கள் என்றும் கூறுகின்றார். இவர்களை உண்மையுள்ள வீரர்கள் என்று தெரிவித்து, இவர்கள் தேவனுக்குப் பிரியமாய் இருந்தார்கள் என்ற இந்தச் சாட்சியினைப் பெற்றிருந்தார்கள் என்று நம்மிடம் கூறின பிற்பாடு, நம்முடைய பாடத்தின் ஆதார வசன வார்த்தைகளைப் பேசுகின்றார்; அதாவது இவர்களுக்குத் தேவன் அருளியுள்ளதைக்காட்டிலும் இன்னும் பெரியதொரு ஆசீர்வாதத்தினை தேவன் இந்தச் சுவிசேஷ யுக சபையாகிய நமக்கு வைத்து வைத்திருக்கின்றார் என்றும், நாம் நமக்கான வெகுமதியை முதலாவது அடையாதது வரையிலும், இவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை இவர்களால் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறுகின்றார்; ஏனெனில் "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகுவதில்லை" - கிறிஸ்துவாகிய தங்களுடைய தலையின்கீழ், இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய சபைக்கு மாபெரும் ஆசீர்வாதமானது கொடுக்கப்படும்; மேலும் பிற்பாடு இவர்கள் மூலமாக தெய்வீக ஆசீர்வாதமானது, முற்பிதாக்களுக்குக் கடந்துவரும்; பிற்பாடு இவர்கள் இருவர் மூலமாய்த் தேவனுடைய ஆசீர்வாதங்களானது தொடர்ந்து கடந்துவரும்; விசேஷமாக மாம்சீக இஸ்ரயேலிடம் கடந்துவந்து, அவர்களை அவர்களது குருட்டுத்தனத்திலிருந்து குணமடையப்பண்ணி, அவர்களிடமிருந்து கல்லான இருதயத்தை எடுத்துப்போடும்; மேலும் அவர்கள் அனைவரின் மூலமாக இறுதியில் ஆசீர்வாதங்கள் பூமியின் குடிகள் அனைவரிடமும் கடந்துவரும். இப்படியாக இறுதியில் ஆபிரகாமுக்குத் தேவன் பண்ணின வாக்குத்தத்தமானது, அதன் நிறைவேறுதலை அடையும். "உன் சந்ததிக்குள் பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்."

அப்போஸ்தலன் சுட்டிக்காண்பிப்பது போன்று, பிரதான "வித்து" கிறிஸ்துவே; பின்னர் இரண்டாவதாக கிறிஸ்துவின் அங்கத்தினர்கள் அல்லது சபை அல்லது அவரது சரீரம், அவரது மணவாட்டி என்று அழைக்கப்படுபவர்கள் ஆவார்கள். இவர்கள் தங்கள் கர்த்தரோடு, தலையோடு, மணவாளனோடுகூட ஆவிக்குரிய சந்ததியில் உள்ளடங்குகின்றார்கள். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலன் கூறுகையில், இவர்களையே குறிப்பிடுகின்றார் (கலாத்தியர் 3:29). இந்த ஆவிக்குரிய சந்ததி வளர்ச்சியடைந்து, முதலாம் உயிர்த்தெழுதலில் மகிமையடைந்த பிற்பாடு, கர்த்தருடைய ஆசீர்வாதமானது, பூமிக்குரிய சந்ததியாரிடத்திற்குக் கடந்துவரும். பூமிக்குரிய வகுப்பாரில் முதலில் இடம்பெறுபவர்கள் முற்பிதாக்களாவார்கள்; இவர்கள் தங்கள் விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்தவர்களாய்க் காணப்படுகின்றனர்; இவர்கள் தேவனுக்கும், நீதிக்குமான தங்களுடைய நேர்மையினை வெளிப்படுத்தி, தெய்வீக அங்கீகரிப்பைப் பெற்றுக்கொண்டவர்களானார்கள். இவர்கள் பரிபூரண மனிதர்களாக உயிர்த்தெழுந்து வருவார்கள் - சபையைப்போன்று ஆவிக்குரிய ஜீவிகளாக உயிர்த்தெழுவதில்லை, ஏனெனில் இவர்கள் ஒருபோதும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதில்லை, ஆகையால் ஆவிக்குரியவர்களாக உயிர்த்தெழும்பி வர முடியாது. ஆனால் ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னதாகக் காணப்பட்ட பரிபூரண நிலையில், பரிபூரண மனிதர்களாகக் காணப்படப்போகும் முற்பிதாக்களானவர்கள், தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் காணப்பட்டு, தேவதூதர்களிலும் சற்று சிறியவர்களாக மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டிருப்பார்கள். "உலகத்தோற்றமுதல்

தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கின்மூலம்" உரைத்தவைகளும், நமது கர்த்தருடைய இரண்டாம் வந்திருத்தலில் நிறைவேறத் துவங்கும் என்றும் அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்குத் தெரிவித்தவைகளுமான திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை, முற்பிதாக்களே முதலாவதாக அனுபவிப்பார்கள் (அப்போஸ்தலர் 3:19-21). இவர்கள் எத்துணை பிரம்மாண்டமான, சிறப்பான மாமனிதர்களாக இருக்க வேண்டும்! இவர்களுக்குரிய வெகுமதி எத்துணை மகத்துவமாய் இருக்கின்றது! அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, இவர்களில் சிலர், "மேன்மையான உயிர்த்தெழுதலை" அடையத்தக்கதாக, தங்களுக்கு வந்த கடுமையான அனுபவங்களைச் சகித்தார்கள்; இவர்கள் இந்த உயிர்த்தெழுதலை அடைந்து, மாம்சத்தில் பரிபூரணர்களாக எழுந்திருப்பார்கள்; மீதமுள்ள மனுக்குலமோ அவர்கள் மரித்தபோது மனதிலும், குணத்திலும் பெற்றிருந்த பெலவீனங்களோடும், அபூரணங்களோடும் உயிர்த்தெழுந்து வந்து, நியாயத்தீர்ப்பின் மூலமும், பயிற்சியளிக்கப்படுவதன் மூலமும் திரும்பப்பெறுதலின் அனுபவத்திற்குள் வருவார்கள்; ஆயிர வருஷ யுகத்தின்போது பெரும்பாதையான வழியில் நடப்பதற்குச் சிலாக்கியம் பெற்றிருக்கும் விருப்பமும், கீழ்ப்படிதலும் உள்ளவர்கள், படிப்படியாக திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள்.

தங்களுக்கான பரிபூரணமான உயிர்த்தெழுதலில் இந்த முற்பிதாக்கள் பிரம்மாண்டமானவர் களாகவும், இராஜாக்கள் போலவும் இருப்பினும், நம்முடைய நாட்களின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் இதரக் காரியங்களை வேகமாய்க் கிரகிக்கும் மன ஆற்றலை உடையவர்களாக இருப்பினும், இவர்கள் வெகுவாய்த் தகுதியானவர்களாக இருப்பினும், இவர்கள் மனுஷர்கள் மத்தியில் தேவனுடைய பிரதிநிதிகளாய் செயல்பட வேண்டும்; இன்னுமாக முழு மனுக்குலமும் ஆயிர வருஷ யுகத்தின்போது அடைய வேண்டியவைகளுக்கு மாதிரிகளாகவும் இவர்கள் காணப்பட வேண்டும்; எனினும் இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தின் மணவாட்டி வகுப்பாருக்குச் சமமானவர்களல்ல. இந்த முற்பிதாக்களைக் காட்டிலும் வேறு யாராவது பெரியவர்களாக அல்லது அதிகம் மகிமையுடையவர்களாக இருக்க முடியுமா என்று யாராவது கேட்கின்றீர்களா? அவ்வாறாகவே இந்தச் சுவிசேஷ யுகத்தின் உண்மையுள்ள சிறுமந்தையினருக்கு - கிறிஸ்துவின் சரீரத்திற்கு, கிறிஸ்துவின் மணவாட்டிக்குத் தேவனுடைய வாக்குத்தத்தமானது காணப்படுகின்றது என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். அவர்களுக்கு இன்னும் உயர்வான - ஆவிக்குரிய, பரலோக வெகுமதி வாக்களிக்கப்பட்டுள்ளது; அவர்கள் தேவதூதர்களைக் காட்டிலும் இன்னும் அதிக உயர்வாய் உயர்த்தப்படுவார்கள் - "தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக," அவர்கள் கர்த்தரைப்போன்று உயர்த்தப்படுவார்கள். (எபேசியர் 1:20)

---

**3HG 94** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

மனுக்குலம் யாவருக்கும் ஆயிர வருஷத்தின் தயவுகள் கடந்துவருகின்ற புதிய யுகத்தின் காலப்பகுதியில், உலகில் இருப்பவர்கள் மத்தியில் பிரதானமானவர்களாகக் காணப்படுபவர்கள், "முற்பிதாக்கள்" என்ற வகுப்பார் ஆவார்கள். சுவிசேஷ யுகத்திற்கு முன்புள்ள யுகத்தில் வாழ்ந்தவர்களாகிய இவர்கள் தேவனை அடையாளங்கண்டுகொண்டனர்; மேலும் அவருடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் வைத்தார்கள்; தங்கள் வழிகளில் எல்லாம் அவரைப் பிரியப்படுத்த நாடினார்கள். இவர்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தானியேல், எரேமியா, ஏசாயா, தாவீது, சாமுயேல்

முதலானவர்கள் ஆவார்கள். இவர்கள் சபைக்கான பரம அழைப்பினால் அழைக்கப்படவில்லை என்பது எபிரெயர் 11:39-40-ஆம் வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுலினால் தெரிவிக்கப்பட்டுள்ளது; அந்தப் பரம அழைப்பானது கிறிஸ்துவினாலேயே பிரகடனப்படுத்தப்படத் துவங்கினது. கிறிஸ்துவே சபைக்குத் தலையாகவும், முன்னோடியாகவும், வழிநடத்துபவராகவும் காணப்படுவதால், வேறு யாரும் இந்த ஓட்டத்தில் அவருக்கு முன்பாகப் போயிருக்க முடியாது. எனினும் கடுமையான சோதனைகளிலும், பிரச்சனைகளிலும் வெளிப்பட்ட முற்பிதாக்களின் உண்மைக்குப் பலனளிக்கப்படாமல் விடப்படுவதில்லை; ஏனெனில் இவ்வகுப்பாரைக்குறித்து எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் குறிப்பிடுகையில், அவர்கள் "வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைப் பெற்றுக்கொள்ளாமலே" மரித்துவிட்டார்கள் என்றாலும், சபை ஆசீர்வதிக்கப்பட்ட பிற்பாடு, அவர்கள் ஆசீர்வதிக்கப்படவிருக்கின்றார்கள் என்று தெரிவித்துள்ளார். இந்த வகுப்பாருக்குப் பூமிக்குரிய தயவுகளே வாக்களிக்கப்பட்டன; உதாரணத்திற்கு ஆபிரகாமின் விஷயத்தில் "இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போது: உனக்கும் உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணினார்" (அப்போஸ்தலர் 7:5) என்று நாம் பார்க்கின்றோம்.

தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில், இந்தப் பூமிக்குரிய கிருபைகளானது முற்பிதாக்களுக்கு அருளப்படும்; மேலும் இந்த உண்மையுள்ளவர்கள், ஏற்றகாலத்தில் பிற்பாடு முழுப்பூமியையும் நிரப்பப்போகும் பரிபூரண மனுக்குலத்திற்கான துவக்கமாய் இருப்பார்கள்; அதாவது இந்த உண்மையுள்ளவர்கள் கல்லறையினின்று முழுமையாய்ப் பூரணராக்கப்பட்ட மனிதர்களெனக் கொண்டுவரப்படுவார்கள்; மேலும் இவர்கள் உலகில் பெரும் குழப்பத்திலிருந்து ஒழுங்கைக் கொண்டுவருவதில், தேவனுடைய மனித பிரதிநிதிகளாகப் பயன்படுத்தப்படுவார்கள்; இன்னுமாகப் பூமியில் தேவனுடைய இராஜ்யத்தின் பிரமாணங்களைச் செயல்முறைப்படுத்துவதில் உதவுபவர்களாய்க் காணப்படுவார்கள்.

"உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்." (சங்கீதம் 45:16)

---

**3HG 100** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

இந்த முற்பிதாக்களின் காரியமென்ன? ஒருவேளை அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்படும் போது, அவர்கள் நேர்மையற்று போவதற்கும், ஊழல் பண்ணுவதற்கும் வாய்ப்பில்லையா? என்ற கேள்வி எழும்பலாம். இல்லை! என்று பதிலளிக்கின்றோம்; ஏனெனில் அவர்களும் பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்ட வகுப்பார் ஆவார்கள். அவர்கள் அனைவரும் எப்படிப் பாத்திரவான்களாகக் கண்டுகொள்ளப்பட்டார்கள் என்பதைக் குறித்து அப்போஸ்தலன் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் தெரிவித்துள்ளதைக் கவனியுங்கள். அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தி இருப்பார்களானால், அதுவே போதுமான சாட்சியமாகும்; "தேவனைப் பிரியப்படுத்தினார்களென்றுள்ள இந்தச் சாட்சியினை அவர்கள் பெற்றிருந்தார்கள்" என்று

அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். அப்படியானால் அவர்கள் உங்களுக்கும், எனக்கும்கூடத் திருப்பதிகரமாகவே காணப்படுவார்கள்! அவர்கள் தேவனுக்குத் திருப்திகரமானவர்களாக இருந்தார்களானால், அவர்கள் தேவனுடனும், நீதியுடனும் இசைவாய் உள்ள அனைவருக்கும்கூட, அதாவது "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" என்று சொல்லப்படுகிற அவருடையவர்கள் அனைவருக்கும்கூடத் திருப்திகரமானவர்களாகக் காணப்படுவார்கள். இராஜ்யம் தொடர்புடைய விஷயத்தில் கர்த்தர் இத்தகைய ஏற்பாடுகளைப் பண்ணியிருப்பாரானால், மேலும் ஆவிக்குரிய இராஜ்யத்தின்கீழ் உலகத்தை ஆளுகைசெய்வதில் அவர் இத்தகைய அதிகாரிகளை அல்லது பூமிக்குரிய அதிகாரிகளைக் கொடுப்பாரானால், விளைவுகளில் - அதாவது அந்த மகிமையான இராஜ்யத்தின்கீழ்ப் பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற விளைவுகளில் நாம் முழுமையான நம்பிக்கைக் கொள்ளலாமல்லவா?

சிலருடைய மனதில் பின்வரும் கேள்வி எழும்பலாம்: இந்த முற்பிதாக்கள் மனம் மாறிடமாட்டார்கள் என்று நாம் நிச்சயம் கொள்ளலாமா? இதற்கு எங்களுடைய பதில்: இல்லை! மாறமாட்டார்கள், ஏனெனில் அவர்கள் ஏற்கெனவே தங்களுக்குரிய பரீட்சையில் ஜெயங்கொண்டுள்ளார்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளவும் பட்டுள்ளனர்; மேலும் அவர்களுடைய உயிர்த்தெழுதலில் வேதவாக்கிய வார்த்தைப்படி, அவர்கள் பரிபூரணமான மனிதர்களாக எழுப்பப்படுவார்கள்; முழுமையாகப் பரிபூரணமான மனிதர்களாகக் காணப்படுவார்கள்; ஆதாம் ஆரம்பத்தில் பரிபூரணமாக, தேவனுடைய சாயலில் காணப்பட்டதுபோன்று காணப்படுவார்கள்; ஆகையால் பரிபூரண மனிதனுக்கே உரிய தகுதிகள் அனைத்துடனும், மகிமையடைந்த பரிசுத்தவான்கள் மற்றும் மகா பரிசுத்தவானாகிய நமது கர்த்தர் இயேசுவுடைய வழிகாட்டுதல் மற்றும் அறிவுரையின்கீழ், இந்த முற்பிதாக்களுக்கு கொடுக்கப்படும் வேலைகளுக்கு, அவர்கள் முற்றிலும் போதுமானவர்களாகவே காணப்படுவார்கள்.

**ஆமென்!!**

**பிரதிகள் தேவைப்படுவோர்**
**தொடர்புக்கு:**
**8428737474; 9442221874**

# எபிரெயர் 11

